திருக்குறள் களஞ்சியம்

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

வாலறிவன்

குறள்நெறிக் கழகம் வழங்கும்

திருக்குறள் களஞ்சியம்

படைப்பாசிரியர்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழகனார்**

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006.

நூற்குறிப்பு

நூற்பெயர்	**திருக்குறள் களஞ்சியம்**
ஆசிரியர்	இரா. இளங்குமரன்
மொழி	தமிழ்
பொருள்	திருக்குறள் ஆய்வு
முதற் பதிப்பு	பிப்பிரவரி 2018
பக்கம்	(iv) + 464 = 468
எழுத்து	13 புள்ளி
தாள்	18.6 வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	500
விலை	உருபா : 300/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு	வாலறிவன் குறள் நெறிக் கழகம் நெய்வேலி.
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சி - 23

நூல் கிடைக்குமிடம்:

- திரு. மேத்தா வாணர், 95004 24633
  வாலறிவன் திருக்குறள் மன்றம், நெய்வேலி
- நூலாசிரியர் 94427 60616
- பதிப்பாசிரியர் : 99407 04702

❖❖❖

களஞ்சியம் வருமுறை

நெய்வேலி, வாலறிவன் குறள்நெறிக் கழகம், கடந்த எட்டாம் ஆண்டு விழாவில் **பேரறிவாளன்** என்னும் விருது வழங்கியதுடன், ஓரிலக்க உருவா பொற்கிழியும் நல்கியது.

தமிழால் வந்தது தமிழுக்கே என்னும் என் நோன்பின்படி, **'ஒரு புல்'** என்னும் என் தன்வரலாற்றின் இரண்டாம் பாகம் எழுதி நெய்வேலி வாலறிவன் குறள் நெறிக் கழகச் சார்பிலே வெளியிடப்பட்டது.

அவ்வெளியீட்டின் வழியாக வரும் தொகை கொண்டோ மிகைப்பட்டோ, **ஒன்பதாம் ஆண்டு விழாவின் போது** வாலறிவன் குறள் நெறிக் கழக வெளியீடாகத் **'திருக்குறள் களஞ்சியம்'** செய்வதென முடிவு செய்து அவ்வாறே முடித்து அச்சிடப்பட்டது இக்களஞ்சியமாம்.

கற்கும் இளையோர் முதல் முதியோர் வரை வாழ்வாங்கு வாழும் வகையில் **முச்சீர் மணிகள், நாற்சீர் மணிகள், உரையாடல்கள், பாடல்கள், கதைகள், ஆய்வுகள், வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத்தீர்வுகளும், உலகளாவிய வள்ளுவச் சான்றுகள், திருக்குறள் புகழ்நிலை, பரப்புதல்** என்பவற்றையெல்லாம் ஒருங்கே கொண்ட குறுந்தொகுப்பாக வருவது இதுவாகும். இதன் கொடை வளம், வாலறிவன் குறள்நெறிக் கழக விருதுக் கொடை வழியது.

களஞ்சியப் படைப்பு, என் பொறுப்பினது. இதனை, எழிலுறப் பதிப்பது, பதிப்பில் ஆழங்கால் பட்ட பெருந்தகை முனைவர் **பி.தமிழகனார்** வழியது!

அச்சீடு, வழக்கம் போல், திருச்சிராப்பள்ளி அச்சுக்குழும்பு வழிப்பட்டது! பயன் கொள்ளல், ஆர்வலர் அனைவர்க்கும் பொதுமையது!

துணை நின்ற – நிற்கின்ற – அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியன்.

திருவள்ளுவர் நிலையம்
7, இராமன் தெரு,
திருநகர், மதுரை – 6.
29.09.2017

இன்ப அன்புடன்,
இரா. இளங்குமரன்
13 புரட்டாசி 2048

உள்ளுறை

		பக்கம்
1.	முன்வைப்பு – 2 பாடல்	1
2.	திருக்குறள் போற்றி	3
3.	போற்றி விளக்கம் சில	7
4.	போற்றி ஏன் இயற்றினேன்?	15
5.	பெருநாவலரும் பேரர்களும்	18
6.	திருக்குறள் அறிமுகம்	67
7.	திருக்குறள் முச்சீர் மணிகள்	98
8.	திருக்குறள் நாற்சீர் மணிகள்	105
9.	திருக்குறள் பதிப்பு – பரப்புநர்	109
10.	திருக்குறள் கவனகம்	116
11.	நினைக்கும் நெஞ்சம்	121
12.	நினைவாற்றல் வழிகாட்டி	140
13.	தொல்காப்பியர் வழியில் திருவள்ளுவர்	151
14.	வள்ளுவ வளம்	155
15.	திருக்குறளைக் கீழ்க்கணக்கில் வைத்தது ஏன்?	159
16.	திருக்குறள் சீர்மை 1–8	159
17.	திருக்குறள் விடுதூது	177
18.	தமிழ்மறை காட்டும் பகுத்தறிவுச் சிந்தனைகள்	180
19.	வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும் ...	203
20.	வையகம் தழுவிய வாழ்வியல் – நூல்	291
21.	வளர் புகழ் வள்ளுவம்	399
22.	புகழ் நூல்	427
23.	தொண்டின் துலக்கம்	458

❖❖❖

திருக்குறள் களஞ்சியம்

1. தம்பி தங்கையர்க்கு

அன்பு மிக்க தம்பியே
அருமை மிக்க தங்கையே
என்ன சொன்னார் வள்ளுவர்
எளிதில் அறிந்து கொள்ளுவீர் (அன்புமிக்க)

இறை வாழ்த்து.

1. அகரம் எழுத்தின் முதலாகும்
பகவன் உலகின் முதலாவான்

2. அறிவன் வழியில் நடப்பதுதான்
அறிவைப் பெற்ற பயனாமே

3. மலரின் தன்மை அடைவீரேல்
மண்மேல் நெடுநாள் வாழ்வீரே

4. விருப்பும் வெறுப்பும் இலையானால்
இருப்பீர் என்றும் இடரற்றே

5. இன்பும் துன்பும் இல்லானின்
அன்பால் உமக்கும் அவையில்லை

6. அடக்கம் உடையான் வழியினிலே
நடப்பின் நெடிய வாழ்வுவரும்

7. ஒப்பில் லானின் வழிநின்றால்
கப்பும் கவலை இல்லையே

8. அறவன் அருளன் வழிபற்றின்
பிறவாம் அல்லல் கடந்தீரே

9. இயக்கும் இறைவன் நெறிபற்றார்
இயக்கம் இல்லாப் பொறியொப்பார்

10. இறைவன் வழியில் நடந்தவரே
பிறவித் துயரம் கடந்தவரே.

– அன்பு மிக்க தம்பியே

2. வெல்லக்கட்டி

குட்டிப் பாப்பா ஓடிவா!
குறட்பா இனிக்கப் பாடிவா!
தட்டித் தட்டி ஆடிவா!
தாவித் தாவிக் கூடிவா!

அருமைத் தாத்தா வள்ளுவர்
அறத்தைச் சொன்ன அண்ணலார்
பெரிய வாழ்வு கொள்ளவே
பேணிப் படிப்பாய் நாளுமே.

சின்னச் சின்னப் பாடலால்
சிறந்த பெரிய கருத்துகள்
சொன்ன பெரியர் வள்ளுவர்
சொல்லைக் கேட்டால் வெல்லுவாய் !.

எந்தத் துணையும் ஒப்பிலா
இனிய துணையாம் வள்ளுவம்
அந்தத் துணையைச் சிக்கென
அமைத்துக் கொண்டால் வெற்றியே.

வெல்லக் கட்டி நீயேதான்
வெடிப்பாய்ப் பேசும் குட்டிநீ
வெல்லக் கட்டித் திருக்குறளால்
வெற்றி கொள்வாய் என்றுமே.

❖❖❖

2. திருக்குறள் போற்றி

1. அகர முதலாம் ஆதியே போற்றி
2. மலர்மிசை ஏகும் மாணடி போற்றி
3. தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி
4. எண்குணத் திலங்கும் இறையே போற்றி
5. அமிழ்த மழையாம் அருளே போற்றி
6. ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி
7. நிறைமொழி அருளும் நிறைவே போற்றி
8. குணமெனும் குன்றே குறியே போற்றி
9. மனத்தில் மாசிலா மணியே போற்றி
10. வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி
11. மங்கல மனையற மாட்சியே போற்றி
12. அறிவறி பண்புப் பேறே போற்றி
13. அன்போடு இயைந்த வழக்கே போற்றி
14. வருவிருந்து ஓம்பும் வளமே போற்றி
15. இன்சொல் வழங்கும் இயல்பே, போற்றி
16. செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி
17. காலத் துதவும் கனிவே போற்றி
18. நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி
19. நிலையில் திரியா மலையே போற்றி
20. ஒழுக்கம் குறையா உரமே போற்றி
21. பொறுக்கும் அழியாப் புகழே போற்றி
22. அழுக்கா றில்லா அறனே போற்றி
23. அறனறிந்து வெஃகா அறிவே போற்றி
24. புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி
25. பயனில பகராப் பண்பே போற்றி

26. பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி

27. ஒத்தது அறியும் உயர்வே போற்றி

28. ஊருணி நீராம் உடைமையே போற்றி

29. பயன்மரம் ஆகும் பரிவே போற்றி

30. மருந்து நலமாம் மாண்பே போற்றி

31. வறியார்க் குதவும் வாழ்வே போற்றி

32. பசித்துயர் மாற்றும் பரமே போற்றி

33. வசையிலாப் புகழே வானே போற்றி

34. தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி

35. அல்லல் அறியா அருளே போற்றி

36. உயிரழித் துண்ணா ஒளியே போற்றி

37. தன்னுயிர் தானறு தவமே போற்றி

38. கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி

39. அளவறி நெஞ்சத் துறமே போற்றி

40. உள்ளத்தூற் பொய்யா ஒழுக்கமே போற்றி

41. வெகுளியை மறக்கும் விரிவே போற்றி

42. இன்னாமை எண்ணா இனிமையே போற்றி

43. பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி

44. நிலைபேறுணரும் நிலையே போற்றி

45. பற்றது பற்றாப் பற்றே போற்றி

46. மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி

47. ஐயம் அணுகாத் தெளிவே போற்றி

48. சிறப்பெனும் செம்பொருட் செறிவே போற்றி

49. பேரா இயற்கைப் பெற்றியே போற்றி

50. அசையா உறுதி ஆக்கமே போற்றி

51. முறைசெய் தருளும் இறையே போற்றி

52. உலகோ டுவப்புறும் உறவே போற்றி

53. நுண்மாண் நுழைபுல நோன்பே போற்றி

54. ஆவ தறியும் அறிவே போற்றி

55. எதிரதாக் காக்கும் இயல்பே போற்றி

56. வருமுன் காக்கும் வாழ்வே போற்றி

57. அறனறி மூத்த அறிவே போற்றி

58. பெரியரிற் பெரிய பேறே போற்றி

59. மன்னுயிர் தூங்கும் மனநலம் போற்றி

60. தக்கதே செய்யும் தகையே போற்றி

61. அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி

62. செயற்கரிய செய்யும் செழுநலம் போற்றி

63. அஞ்சாத் துணிவே துணையே போற்றி

64. திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி

65. வாரி வழங்கும் வகையே போற்றி

66. அளவ ளாவும் அமிழ்தே போற்றி

67. சுற்றம் சுற்றும் சுடரே போற்றி

68. புகழ்ந்தவை புரியும் புகழே போற்றி

69. கோலது கோடாக் கொற்றமே போற்றி

70. குடிபுறங் காக்கும் குணமே போற்றி

71. ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி

72. கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி

73. உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி

74. நீரள வுயரும் மலருளம் போற்றி

75. குடியெனும் குன்றா விளக்கே போற்றி

76. அறிவறிந் தாற்றும் ஆள்வினை போற்றி

77. அடுக்கும் இடுக்கணை அழிப்பாய் போற்றி

78. இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி

79. மதிநுட்பம் நூலோ டுடையாய் போற்றி

80. உலகத் தியற்கை உ[illegible]ர்வோய் போற்றி

81. நிரந்தினிது சொல்லும் நீர்மையே போற்றி

82. வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி

83. நடுக்கறு காட்சி நயனே போற்றி

84. சொல்லிய செய்யும் சுடரே போற்றி

85. வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி

86. நூலருள் நூல்வல நுண்மையே போற்றி

87. தூய்மை துணைமை துணிவே போற்றி

88. போற்றற் கரியவை போற்றியே போற்றி

89. குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி

90. ஒளியார் முன்னுறும் ஒளியே போற்றி

91. கற்றவை செலச் சொல் கலையே போற்றி

92. நாடா வளத்ததாம் நாடே போற்றி

93. அன்பின் குழவியாம் அருளே போற்றி

94. அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி

95. நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி

96. உள்ளம் பெருகுவ உள்ளுநகை போற்றி

97. கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி

98. இகலென்னும் எவ்வம் இன்மையே போற்றி

99. பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி

100. அளவறிந் துண்ணும் அறிவே போற்றி

101. செப்பமும் நாணும் சேர்வே போற்றி

102. பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி

103. உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி

104. கொல்லா நலத்ததாம் நோன்மையே போற்றி

105. நயனொடு நலம்புரி பயனே போற்றி

106. சீருடைச் செல்வ மாரியே போற்றி

107. கருமத்தால் நாணும் நாணே போற்றி

108. உழுதுண்டு வாழும் வாழ்வே போற்றி

– அகர முதலாம் ஆதியே போற்றி! போற்றி!

❖❖❖

3. போற்றி விளக்கம் - சில

1. அழுதன் மாம்பழம்

ஐதராபாத்தில் இருந்து மாமா வந்தார். ஒரு கூடை நிறைய மாம்பழம் கொண்டு வந்தார்!

"என்ன மாமா, இத்தனை மாம்பழம்! விலை மிகுதியாக இருக்குமே" என்றேன்.

"விலையே கொடுக்கவில்லை. நம் வீட்டு மரத்தில் காய்த்தது" என்றார். மாம்பழம் பச்சையாக இருந்தது. இன்னும் சில நாள் கழித்துத்தான் தின்ன முடியும் என எண்ணினேன்! ஆனால் அத்தனையும் பழுத்தபழம்! பச்சை மாம்பழம் அதுவாம்.

மாம்பழம் சுவையோ சுவை! எல்லாரும் விரும்பி உண்டோம்! "நான் ஐதராபாத்தில் வீடு வாங்கினேன். இல்லையா! அந்த வீட்டின் பின்புறம் விரிவான இடம் இருந்தது. இதில் மாமரம் நடலாம் என நினைத்து நட்டேன். ஐந்தாண்டுகள் தான். பூத்துக் காய்க்கத் தொடங்கிவிட்டது. ஐம்பது நூறு என்று காய்த்தது இப்போது ஐந்நூறு ஆயிரம் எனக் காய்க்கிறது" என்றார். "மாமா, நம் வீட்டிலும் பின்னால் மிகுந்த இடம் உள்ளது. இந்த மாம்பழக் கொட்டையைப் போட்டால் முளைக்குமா" என்றேன். "சேதப்படாமல் மாங்கொட்டையை எடுத்து வெயிலில் காயவிட்டு பனியில் நனைய விட்டு ஒன்று இரண்டு மாதங்கள் கழித்து நன்றாகக் குழிதோண்டி உரம் போட்டு இவ்விதையைப் போட்டால் முளைக்கும். நல்ல பயனும் தரும்" என்றார்.

குழி தோண்டல் உரம் போடல் நீர் பாய்ச்சுதல் எல்லாம் விளக்கமாகச் சொன்னார். "நீ ஐந்தாம் படி படிக்கிறாய்! பத்தாம் படி படிக்கும் போது கொத்துக் கொத்தாகக் காய்க்கும்" என்றார்.

அப்படியே நான் செய்தேன். பள்ளிக்கு வரும் போதும் பார்த்து வருவேன். பள்ளி முடிந்து வீட்டுக்குப் போனதும் பார்ப்பேன்.

வாட்டமில்லாமல் தண்ணீர்விடுவேன். மக்கிய குப்பை – ஆட்டுப்பிழுக்கை – முதலியவையும் அவ்வப்போது போடுவேன்!

இப்பொழுது பத்தாம் வகுப்புக்கு வந்து விட்டேன். அதுவும் பூ எடுத்து விட்டது! நம் விடுமுறை தான் அது காய்க்கும் காலம். ஆதலால் ஜதராபாத்து மாம்பழம் நெய்வேலி மாம்பழமாகிப் பலர்க்கும் பயன்படும் என மகிழ்கிறேன்.

பச்சை மாம்பழம் என்று நான் சொன்னால், அப்பா, அம்மா, தங்கை ஆகியோர் 'அமுதன்' மாம்பழம் என்கின்றனர்! உள்ளுக்குள் நான் நகைத்துக் கொண்டே, 'அ முதன் மாம்பழம் என்று எனக்குள் சொல்லிக் கொள்வேன்!'

'அகர முதலாம் ஆதியே போற்றி' என்பேன். பள்ளியில் ஓதிய திருக்குறள் மந்திர மொழியை.

2. மலர் மிசை ஏகினான்

மலர் மெல்லியது.

அதன்மேல் வல்லியது நடக்க இருக்க முடியுமா?

மலர் மிசை ஏகினான் என்கிறாரே திருவள்ளுவர்.

மலர்மிசை, கண் ஏகுமல்லவா! மூக்கு ஏகுமல்லவா!

வண்டு – ஈ ஏகுமல்லவா! அதன் இசை – காதில் ஏகுமல்லவா?

தேனீ எடுத்த தேன் நாவில் ஏகும் அல்லவா!

தேனீயின் சிறகில் ஒட்டிய பூம் பொடி, மற்றொரு பூவின் மேல் ஏகுமல்லவா!

அதன் இனம் பெருகுமல்லவா!

தேனீ தேனை எடுத்த நன்றிக்கு, அப்பூவின் இனத்தையே பெருக்குகிறதே!

தேன் விருந்தும் மருந்தும் ஆகிறதல்லவா!

நம்மை நோக்கி வருகிறார் ஒருவர். மலர் முகத்தோடும் இனிய சொல்லோடும் வருகிறார். நாம் கடுப்பாகப் பார்க்கிறோம்.

அவர் வராமல் பார்த்த பார்வையால் திரும்பிப்போய் விடுகிறார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்கிறார் திருவள்ளுவர்.

விடியற்காலம் ! பனிபெய்கிறது ! மலரில் விழுகிறது. இறைவனுக்குப் பூவாய் மாலையாய் வழிபடலாம் என நினைக்கிறார் தாயுமானவர். கையை நீட்டுகிறார் பூவைப்பறிக்க! உடனே கையைப் பூமேல் படாமல் எடுத்து விடுகிறார்.

பூவும் நீ! இதழும் நீ! பூம் பொடியும் நீ! தேனும் நீ ! இறைவா எங்கும் உள்ள நீ, இங்கும் உள்ளாய்! உன்னையே பறித்து, உன்னை வழிபடல் தகுமா? தகாது. ஆதலால்,

"பண்ணேன் உனக்கான பூசை ஒருவடிவிலே
பாவித்திறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி"

என்கிறார். இது மலர் மிசை ஏகினானுக்குச் சான்று இல்லையா!

பூவைப் பறிப்பது, கள்ளம் கறை இலாக் குழந்தையின் கழுத்தைத் திருகி எடுப்பது போன்றது. ஆதலால் பூ செடியிலோ கொடியிலோ இருக்கட்டும். பலரும் பார்த்து மகிழலாம்! பூக்குவளையில் வைக்கப் பறியாதே என்றார் பெர்னாட்சா!

தாயுமானார் நெஞ்சம் – பெர்னாட்சாவுக்கும் உள்ளதே! நாமே மலர்த்தொகுதி! நம் உடம்பு ஆலயம்! இறையின் இருப்பிடம்! இதற்குப் பூசை, செயற்கரிய பொதுநலத் தொண்டே! தொண்டே!

மலர்மிசை ஏகும் மாணடிபோற்றி !

3. தனக்கு உவமை இல்லாதது

தனக்கு ஒப்பு இல்லாத உயர்வுடையது உண்டோ?

உண்டு!

இரவில் தோன்றும் விண்மீன்களை எண்ண முடியுமா?

திங்கள் முதலாம் கோள்கள் பல உண்டே! அவையும் இரவில் தோற்றம் தருமே ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள் பகலில் கதிரோன் தோன்றியபின் அவை தோன்றாமை ஏன்?

இருளில் தோன்றிய அவை, கதிர் ஒளிமுன் மறைந்து விட்டமையால் கதிருக்கு இணையானவை இல்லையே!

கதிரும் ஒருசிறிய – நம் பக்கத்துள்ள விண்மீன் தான் என அறிவியல் உலகம் சொல்வது உண்மையானாலும் நம் கண்காணக் கதிர் தோன்றியபின் அவை தோன்றவில்லையே! ஆதலால், தனக்கு ஒப்பு வேறு இல்லாதது தனக்கு ஒப்பு – தானே ஆனது கதிராகிய சுடரேயாம்.

மாந்தன் தோற்ற முற்றது மறைந்த குமரிக் கண்டத்திலேயாம்!

அவன் கருத்துப் பரிமாற்றம் செய்யப்பேசிய மொழி தமிழேயாம்.

ஆதலால், உலக முதல்மாந்தன் தமிழன்!

உலக முதல் மொழி தமிழே!

அத்தமிழ் மக்களும், அவர் பேசிய மொழியும் உலகமெல்லாம் பரவியது. வெவ்வேறு இனத்தராகவும், வெவ்வேறு மொழியராகவும், வெவ்வேறு பண்பும் நாகரிகமும் உடையவர் ஆகினர். இதனால், தமிழனால் பேசப்பட்ட தமிழ் மொழியே உலக முதன் மொழி, அதற்கு ஒப்பு வேறு இல்லாதது, அதற்கு அதுவே ஒப்பானது.

உலக அறிஞர்கள் ஆய்ந்து – ஒப்பிட்டு ஒப்பிட்டு – இந்த முடிபிற்கு வருகின்றனர். ஆதலால் தமிழ் தன்நேர் இல்லாத பெருமையது. இதனை,

“ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
வீங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழிச் செங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்”

என்றோர் ஒப்பிலா விளக்கப் பாடல் கிளர்ந்தது. (தண்டியலங்காரம்)

கதிரும் தமிழுமாம் ஒப்பிலாப் பொருள்களையும் பிறவற்றையும் இயக்கும் இயக்காற்றல் ஒன்றுண்டு! அவ்வாற்றலாலேயே உலகம் இனிது இயங்குகின்றது! அவ்வியக்காற்றல் இல்லையேல் உலகம் நொடிப் பொழுதும் இயங்காது. அவ்வாற்றல் எங்கும் தங்கியுள்ளது. ஆதலால் அவ்வாற்றலே முழுமுதல், தன்னேரில்லாதது என அறியலாம். அதனால், அதனை இயவுள் என்றனர். வள்ளுவர் வழியில் நாம், **“தனக்கு உவமை இல்லாத் தகையடி போற்றி”** என்கிறோம். **இது நம் மந்திரமொழி!**

4. என்றுணத்து இலங்கும் இறை

இந்த உலகம் எதனால் வாழ்கிறது?

இந்த உலகம் பண்புடையவர்கள் வாழ்வதால் வாழ்கிறது.

பண்புடையர் என்பவர் எத்தகையர்?

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர் பண்புடையவர்;

அவர்கள் இல்லையானால் உலகியல் என்ன ஆகும்?

பண்புடையவர் இல்லையானால் உலகத்து உயிர்களின் வாழ்க்கை மண்ணோடு மண்ணாகிப் போகும்!

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

பண்பின் வித்து எது?

பண்பின் வித்து அன்பு!

அன்புடையார் எவ்வாறு வாழ்வர்?

தந்நலம் அற்று வாழ்வர்! தம் உடலையும் உயிரையும் தமக்காக அன்றிப், பிற உயிர்களுக்காகக் கொண்டவர் அவர்!

அன்பின் முளையாம் அருளாகத் திகழ வளர்பவரும் அவர்!

முல்லைக்குத் தேர் ஈவர்!

மயிலுக்குப் போர்வை ஈவர்!

வாடிய பயிரைக் கண்டு வாடுவர்!

வறியரைக் கண்டு வதங்கி உதவுவர்!

அவர்கள் செல்வம் ஊருணி நீர் போல்வது.

அவர்கள் செல்வம் ஏரிநீர் நிறைந்தனையது

அவர்கள் செல்வம் அவலம் தீர்க்கும் அருமருந்தாவது.

அவர்கள் செல்வம் அருட்கண் ஆக்கும் கலைவளம் ஆவது

ஈட்டுவதெல்லாம் ஈவதற்கே என்பது அவர்கள் செல்வம்

கற்பதெல்லாம் கடைப்பிடித்தற்கும் கற்பித்தற்குமே என்பது

அவர்கள் கல்வி.

வீடுபேறு வேண்டா, பிறவிவேண்டும்! மீண்டும் மீண்டும்

பிறவி வேண்டும் தொண்டு செய்தற்கே

என்பவர் அவர்.

வாழும்போதே வீடுபேறு பெற்ற இறை நிலையர் அவர்!

எண்ணிக் கணக்குப் போட முடியா உயர் குணங்களை உடையவர் அவர்! ஆதலால், எண்ணருங் குணத்தினர் அவர்! அவரைப் போற்றல் வாழுமுயிர்களின் கடமை!

"எண் குணத் திலங்கும் இறையே போற்றி"

என்பது திருக்குறள் மந்திரமொழி.

5. அமிழ்த மழை

அம்மா என்று பெற்றவருக்குப் பெயர் வைத்தவர் யார்?

பெயர் வைத்தவர் அவர் பெற்றோரோ, உற்றார் உறவினரோ, மதிக்கும் பெரியவரோ அல்லர்!

அம்மா பெற்ற பிள்ளையே அம்மா என்று அம்மாவுக்குப் பெயர் சூட்டியது!

பிறந்த பச்சைக் குழந்தையா, பெற்றவருக்குப் பெயர் சூட்டும்? நம்ப முடியவில்லையா?

தாய் தம் மகவுக்குப் பாலூட்டுகிறார்! 'அம் அம்' என்று ஒலியெழப் பால் குடிக்கிறது! குடித்து முடித்து வாயைத்திறக்கவும் 'மா' என்னும் ஒலி உண்டாகிறது. 'அம்-மா' வந்துவிட்டது; பெயரும் வந்து விட்டது.

பால் ஊட்டல் அம்மம் ஊட்டல்; பால், அமிழ்து, அமிர்து, அமுது என விரிகிறது! அவிழ்தும் ஆகிறது!

அம்மாவும், ஓரறிவுயிரியாம் புல் முதல் ஆறறிவுயிரியாம் மாந்தர்வரை வாழ அமிழ்தம் வேண்டுமே!

நீரமிழ்தும் சோற்றமிழ்தும் சாற்றமிழ்தும் வேண்டுமே!

அவ்வமிழ்துகளைத் தருவது எது? மழை!

வான் மழை அமிழ்து, தேன் மழை அமிழ்தாகிறது!

வான்மழை இல்லையானால் புல்லும் முளையாது! என்றால் மற்றைச் செடி கொடி மரமாம் ஓரறிவுயிர் உண்டா?

ஈரறிவு மூவறிவு நாலறிவு, ஐயறிவு, ஆறறிவு உயிரிகள் உண்டா? அவற்றின் வாழ்வுண்டா? பயன்உண்டா?

வான் ஒழுக்கு இல்லையானால், மண்ணில் ஒழுக்கம் என்பது இருக்குமா? அதனால் தான்,

தானே உணவும் ஆவது அது! உணவைத் தருவதும் அது!

உணவைத் தருதலால் உயிரைத் தருவதும் அது.

உணவால் உணர்வைத் தருவதும் அது.

உணர்வு வழியே ஒழுக்கத்தைத் தருவதும் அது.

"வானின் றுலகம் வழங்கிவருதலால் தான் அமிழ்தம் என்றுணர்தற் பாற்று"

என்றது வள்ளுவம்!

"அமிழ்த மழையாம் அருளே போற்றி"

என்றது திருக்குறள் மந்திரம்.

6. ஐம்பொறி அடக்கல்

மெய் வாய் கண் மூக்கு செவி என்பவை **ஐம்பொறிகள்.**

இவற்றைக் கொண்டு வெளிப்படுவன தொடுதல், சுவை, பார்வை, முகர்தல், கேட்டல் என்னும் **ஐம்புலன்கள்!**

இவற்றை முறைப்படி இயங்கச் செய்தல் **ஐம்பொறி அடக்கலாகும்.** உலகம் ஐம்பூதங்களால் அமைந்தது.

ஐம்பூதம் என்பவை வெளி, வளி, ஒளி, நீர், நிலம் என்பவை. வெளிமுதலியவை ஒன்றில் இருந்து ஒன்று விரிந்தவை.

வெளி – (காற்றும் இல்லாத பாழிடம்) ஒலி மட்டும் உண்டு.

வளி – (காற்று) ஒலியும் தொடுதல் உணர்வும் உண்டு

ஒளி – (சுடர்) ஒலி, உணர்வு, ஒளி உண்டு

நீர் – ஒலி, உணர்வு, ஒளி, சுவை உண்டு

நிலம் – ஒலி, உணர்வு, ஒளி, சுவை, மணம் உண்டு

இப்பூத அமைப்புப் படியே நம் உடலும் அமைந்துள்ளது.

கால் பகுதி நிலம்

வயிற்றுப் பகுதி நீர்

மார்புப் பகுதி தீ

கழுத்துப்பகுதி காற்று

தலைப்பகுதி வெளி அல்லது விண்

இப்பூதங்களின் வழி உண்டாம் பொறி புலன்களை அடக்குவது, மன அறிவு ஆகிய ஆறாம் அறிவாம். அதனை.

"சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்றார் திருவள்ளுவர்.

யானையைப் பாகன் வளைந்த தோட்டியால் அடக்குவது போல் ஐம்பொறிகளையும் அறிவு என்னும் தோட்டியால் அடக்க வேண்டும். அப்படி அடக்கல் அருமை! ஆனால்,

வளையக் காட்சியில் (சர்க்கசு) ஒருமொட்டானின் மேல் (மொட்டான் – Stool) யானையை உட்கார வைக்கிறானே! அத்தகைய காட்சியைக் கண்டால் வியப்படைகிறோம்.

நாமும் நம் பொறிகளை அடக்கினால் வியக்கத்தக்க மேன்மைகளை அடையலாம்.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி"

என்பது திருக்குறள்.

"ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி"

என்பது திருக்குறள் மந்திரமொழி.

குறிப்பு : இவ்வாறே பிற மந்திர மொழிகளுக்கும் சிந்தித்து விளக்கம் கண்டு கொள்க.

❖❖❖

4.திருக்குறள் போற்றி இயற்றியது ஏன்?

தொல்பழந்தமிழர் காலத்திலேயே முழுமுதல் இறைமைக் கோட்பாடு தோன்றி விட்டது.

உலகையும் பேருலகையும் இயக்கும் ஆற்றல் ஒன்று உண்டு என்னும் அறிவியல் விளக்கமும் தோன்றிவிட்டது.

உலகம் உருண்டை வடிவினது என்றும் அதுவலமாகச் சுழல்வது என்றும் வானில் தன் ஈர்ப்பாற்றலால் ஒன்றனுக்கு ஒன்று நின்று தன்னாற்றலால் இயங்குவது என்றும் விளக்கம் பெற்றுவிட்டது.

மண், விண், தீ, நீர், காற்று என்னும் பூதங்களின் கலப்பால் அமைந்தது உலகம் என்றும் தெளிவாக விளங்கி விட்டது.

அவ்வியல்பு கொண்டே உயிர், மெய், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், குறில், நெடில், ஆய்தம் முதலாம் எழுத்துப் பகுப்பும், ஒலி வரி வடிவுகளும் தோன்றிவிட்டன.

உலகத்து இயற்கை மாறாதது என்றும், ஒப்புரவானது என்றும், இருவேறு தன்மைகளைக் கொண்டது என்றும், முடிவு செய்ய முடிந்தது, முழு முதல் இறைமை, இயவுள், கடவுள், பகவு, முதல், இறை என்னும் பெயர்களால் வழங்கத் தக்க இயல்பினது என்னும் தேர்ச்சியும் உண்டாயிற்று. மொழிவிளக்கமும் பொருள்விளக்கமும் உருவும் நிழலுமாய் ஒன்றுவன என்னும் வரையறையும் ஏற்பட்டு விட்டது.

ஆன்மா அறிவும் உணர்வும் உடையது என்றும், உயிரிகள் பிறக்கும் போதே பசி என்னும் பிணியொடு பிறந்து முடிவு வரை கொண்டது என்றும், அப்பசியே உலக நடைமுறை மூலமாய் நலமும் பொலமும் செய்வது என்னும் ஆய்வும் சிறந்து நின்றது.

அறிவியல் சார் இந்நெறிமைகளோடு, உலகியல் சார் நெறியாய்ப் பண்பாடுகளும் உண்டாயின. ஆன்ம நேயமே முழுதுறு இறைமை வழியது என்றும், அவ்வான்ம நேயத்தொண்டே இறைமை வழிபாடு என்றும் ஒருபாலாக, அகவாழ்வும் புறவாழ்வும் நெறிமையுற்று உருவ வழிபாடும் உருவாயிற்று ஒருபால். இவையெல்லாம் நமக்குக் கிடைத்துள்ள தொல்பழ நூலாம் தொல்காப்பியத் தொகை நூல் வழியே

அறியப்படுவன எனின், எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்படவே அவர்க்கு முன்னே வழி வழியாக வந்தமையாம்.

இந்நிலையில் நாவலந்தீவின் வடபால் பகுதிவழியே வேதியம், வேள்வி, வேள்வி மந்திரம் என்பவை வந்தன. தென்னகம் வந்த வேதியம் மூவேந்தரையும் வயப்படுத்தித் தமிழ் நெறியை மாற்றித் தம்மொழியே கோயில் மொழியாய், சடங்கு மொழியாய் ஆக்கத் தொடங்கியதோடு தம்மைத் தெய்வப் பிறவியர் என்றும் தம்மொழி தெய்வமொழி என்றும் தெய்வ மொழியால் தெய்வப்பிறவியர் ஓதினால் தான் தெய்வம் செவி சாய்க்கும் என்றும் புனைந்தும், வருணப் பிரிப்பும் மோட்சம் நரகப் பரப்பும் செய்தன.

அவற்றின் பொய்ப்புனைவைப் போக்கச் சமணமும் பௌத்தமும் வடக்கே தோன்றின. அவை தெற்கே வந்து பரப்புங்கால் வேந்தர்களின் துணையால் அவற்றின் வேரை ஊன்றவிடாமல் வேதியச் சடங்கும் புனைவும் எளிதாகச் செய்தன. பழந்தமிழ் நெறித் தடுமாற்றமும் அறிவு நெறி அழிவும் கண்ட திருவள்ளுவர் தமிழ நெறி இஃதெனக் காட்டுதல் கடனெனக் கொண்டு பொய்யாமொழியாம் திருக்குறளை இயற்றினார்.

அவ்வாறு செய்த நூல், அரசவை ஏறாமல் பார்த்துக் கொண்டதுடன், அதற்கு உரையென வகுத்தார் வேத நெறி வழியே உரை கண்டு, அவ்வகையாலும் திருக்குறளின் மெய்ப்பொருள் வெளிப்படாமல் செய்தனர். தமிழ் நெறியுணர்ந்து உரைகண்டாரும் முன்னவர் உரைமயக்கில் மயங்கி உரைகண்டனர். நம்பா மதத்தர் தத்தம் பார்வைக்கு ஏற்ப வள்ளுவர் நெஞ்சம் அறியா உரை வகுத்தனர்.

இந்நிலையில் திருவள்ளுவர் நூல் முழுதுறு தமிழ் நெறியதே என்றும், தேர்ந்த அறிவரும் வாழ வேண்டும் முறைப்படி வாழ்பவரும் தெய்வநிலையை அடையலாம் என்றும் இயற்கை இறைமையும் தெய்வநிலையும் வேறுவேறானவை என்றும், அவாவறுத்தலே வீடுபேற்று நிலை என்றும் தம்மெய்யுணர்வால் இயற்றினார். அதனால் அவரை அறிவர் 'உலகம்' 'தெய்வப்புலவர்' எனக் கொண்டது. அவர் மொழி மந்திர மொழி என ஏற்றுப் போற்றியது. அத்தெளிவின் உந்துதலால் 'திருக்குறள் போற்றி' இயற்றப் பெற்றதாம்.

திருக்குறள் போற்றி இயற்றி அச்சிட்ட அளவில் அமைந்தால் உலகப்பரவுதல் ஆமா? அந்நிலையில் அமெரிக்கக் கலிபோர்னியா

வாழ்வினரும் தமிழ்நாட்டுக் கானாடுகாத்தான் மண்ணின் மைந்தருமான திருத்தகு இராம் மோகன் அவர்கள் தவச்சாலை எய்தினர். குறள் வாழ்வியல் நூலோடு, திருக்குறள் போற்றியும் வழங்கினேன். அவர் மிக மிக மகிழ்ந்தார்.

இவை 'திருக்குறள் மந்திர மொழிகள்' எனப் பாராட்டி எடுத்துச் சென்று இசைக்குறுவட்டு ஆக்கினார்.

தமிழர் வாழ்வியல் வழிகாட்டி என்னும் பெயரில் பெரியதோர் தொகை நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழில்பட விவிலியத்தாளில் அச்சிட்டுத் திருக்குறள் மந்திர மொழிகளையும் அதில் இணைத்தார். அன்றியும் மந்திரமொழிகளைக் குறுவட்டாக்கி அவ்விரண்டையும் சென்னை – காமராசர் அரங்கில் – மேதகை அப்துல்கலாம் அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தார். ஆயிரக் கணக்கில் திருக்குறள் ஆர்வலர்கள். அமைப்புச் சார்ந்தவர் கூடிய மாநாட்டில் வெளியிடப்பட்டதால் நாடளாவிய பெருமையதாயிற்று. அது உலகத்தமிழர் அனைவரும் ஏற்றுப் போற்றும் சால்பியப் போற்றி ஆதலால் பெருக்கமான பரப்புதலும் வரவேற்பும் எய்திற்று.

தமிழார்வலர் எடுக்கும் விழாக்களில் போற்றப் படுவதாயிற்று. வாழ்வியல் வழிகாட்டி, எடப்பாடி ஆய் ஆலயம் எனப்படும் நல்குகை மேல் நிலைப்பள்ளியில் பயில்வார் 4000 பேர்கள் மனப்பொருள் ஆகியமை வியப்பாக இருந்தது. அமெரிக்கா வாழ் தமிழர் நல்குகையால் நடைபெற்றுவரும் கல்வி நிறுவனம் அது. அங்கு 2016 ஆம் ஆண்டு என்னால் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

தமிழர் ஒன்றுபட்டு நின்றால் இழப்புகளை எடுத்து மீட்டுவிடக் கூடும் என்பதை உலகுக்கு அறிவிக்கும் பறைமுரசு, ஆய் திருக்கோயில் என்பது தகும்.

அவர் செய்வார், இவர் செய்வார் என்னல் இல்லாமல் அவ்வவர் தம்மால் இயல்வதைச் செய்தலும், செய்வாரோடு கடனாற்றலும் கொள்ளும் தகவை, உலகவரை அறிந்தேனும் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

❖ ❖ ❖

5. பெருநாவலரும் பேர்களரும்

பெருநாவலர் திருவள்ளுவர்; பேரர்கள் தமிழ்ச் செல்வியும் தமிழ்ச் செல்வனும்; அவர்கள் தம் வீட்டுச் சூழலிலும், வெளிப்புறச் சூழலிலும் உரையாடு கின்றனர்; உலாவப் போகும் பொழுதில் ஆங்காங்குக் காணும் காட்சிகளை உணர்வோடு கண்டு உரையாடுகின்றனர். அவ்வுரையாடல்கள் அறிவுக்கு விருந்தாக அமைகின்றன. இவ்வகையில் எழுந்த கற்பனை உரையாடல்களே பெருநாவலரும் பேரர்களும் என்னும் இத்தொடர்!

உரையாடல் - 1

பொழுது : காலை

(செங்கதிர் எழும்புமுன்னரே தமிழ்ச்செல்வியும் தமிழ்ச்செல்வனும் படுக்கையில் இருந்து எழுந்து விட்டனர். பெருநாவலர் திருவள்ளுவர் தம் வீட்டு முற்றத்தே உலாவிக் கொண்டு இருக்கிறார்.)

செல்வனும் செல்வியும் : தாத்தா, வணக்கம்.

பெரு செல்வர்களே வாழ்க! என்ன! இவ்வளவு விரைவிலேயே எழுந்து விட்டீர்களா?

செல்வி : ஆம் தாத்தா! காக்கைகள் கரைந்து எழுப்பி விட்டன.

பெரு பார்த்தீர்களா! காக்கைகள் மிகக் காலையில் எழும்புவது மட்டுமின்றி நம்மையும் எழுப்பி விடுகின்றன. அவற்றின் தொடக்க வேலையே தொண்டாக இருக்கிறது அல்லவா!

செல் : ஆம் தாத்தா!

பெரு : செல்வி காக்கை எப்படிக் கரைகின்றது?

செல்வி : 'கா கா' என்று கரைகின்றது தாத்தா,

பெரு : சேர்த்துச் சொல் பார்க்கலாம்.

செல்வி : 'காக்கா'

பெரு செல்வா! கேட்டாயா! உங்களைப் போன்ற சிறுவர்கள் காக்கை கரைவதைக் கேட்டார்கள். "காக்கா" என்று அதனைக் கூப்பிட்டார்கள். பின்பு அதுவே பெயராக ஆயிற்று.

பெரியவர்களும் "காக்கா" என்னும் பெயரையே வைத்துக் கொண்டார்கள்.

செல்வி : நன்றாக இருக்கிறது தாத்தா. எங்களைப் போன்ற குழங்தைகள் தந்த சொற்களும் நம் மொழியில் இருப்பது பெருமை இல்லையா தாத்தா!

பெரு : அதற்கென்ன ஐயம்; மிகப் பெருமை தான்!

செல்வி : 'காக்கா' என்ற பெயர்தான் 'காக்கை' என்று மாறியதா தாத்தா?

பெரு : ஆம்! 'காக்கா' 'காக்கை' ஆகியது. பின்பு 'காகம்' என்றும் ஆகியது. காகத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் செல்வா?

செல் : அம்மா 'கா...கா' என்று கூவிக் கொண்டு சோறு போடுகிறார். காகத்திற்கு எப்படித்தான் கேட்குமோ! உடனே கூட்டமாக ஓடிவரும்.

செல்வி : அம்மா கூப்பிடுவது ஒரு காக்கைக்கு மட்டும் கேட்டு, அது வந்தால் கூட அது, தானே சோற்றைத் தின்பதில்லை. 'கா....கா' என்று கத்தி மற்றைக் காக்கைகளையும் கூட்டி விடும்.

செல் : ஒரு நாய் மற்றொரு நாயைத் தன் கண்ணில் காண விடுவதே இல்லை. அது தன் உணவை மற்றொரு நாயைத் தின்ன விடுமா? நாய்க்கு நேர்மாறானதும் இனப்பற்றுள்ளதும் ஆகிய இனம் காக்கை இனம் இல்லையா தாத்தா!

பெரு : தெளிவாகக் கூறினீர்கள். காக்கை தனக்குக் கிடைத்த உணவைத் தானே தின்ன வேண்டும் என்று மறைத்துக் கொள்ளாது. மற்றைக் காக்கைகளையும் கூவியழைத்துக் கூடியுண்ணும். இதனைச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

"காக்கை கரவா கரைந்துண்ணும்"

செல்வி : "காக்கை கரவா கரைந்துண்ணும்!"

செல் : மக்களிடம் கூட இத்தன்மையைக் காண முடியவில்லையே தாத்தா.

செல்வி : கூவி அழைக்க வேண்டாம்; தேடி வந்த உறவினரையே பேணாமல் தெருவோடு போகச் செய்பவர்கள் இல்லையா தாத்தா?

பெரு : ஆம்! உண்மைதான். தம் சுற்றத்தார்களை அன்புடன் வரவேற்று, முடிந்த அளவும் உதவி செய்யாதவர்களுக்குப் பெருமையும் இல்லை! நன்மையும் இல்லை. சுற்றத்தாரை மதிக்காதவரைச் சுற்றத்தார் மதிப்பாரா?

செல் : மதிக்கவா? துணிந்து கெடுதி கூடச் செய்வர்.

செல்வி : "காக்கை கரவா கரைந்துண்ணும்" என்பதனுடன் இக்கருத்தையும் சேர்த்துக் கூறுங்கள் தாத்தா.

பெரு : நல்லது. சொல்கிறேன். மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ராார்க்கே உள."

'அன்ன நீராார்க்கே உள' என்றால் காகத்தைச் சொன்னோமே அத்தகைய தன்மை உடையவர்க்கே ஆக்கமும் உள. ஆக்கம் என்பது நன்மை செல்வம், செல்வாக்கு முதலியவை. எங்கே பாட்டைச் சொல்லுங்கள்.

இரு : "காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ராார்க்கே உள"

(செல்வியும் செல்வனும் செவியோடு செவியாகப் பேசுகின்றனர்)

பெரு : விலக்கிவிட்டு நீங்களாக ஏதோ பேசுகிறீர்களே! இந்த முதுவன் அறியக் கூடாதா?

செல் : அறியலாம்! அறியலாம்! ஆனால் பெருநாவலராகிய நீங்கள், இளையவர்களாகிய எங்கள் அறியாச் செயலை இகழக் கூடாது!

பெரு : இகழவா? உங்களையா? ஏன்?

செல்வி : நாங்கள் உங்கள் கருத்தை வாங்கிக் கொண்டு சிறுபிள்ளைத் தனமாகப் புதுப்பாட்டு அமைத்திருக்கிறோம்!

பெரு : புதுப்பாட்டா! விருந்து அல்லவா அது! எங்கே சொல்லுங்கள்!

செல்வி : காக்கை கரைதல் கேட்டிடுவீர்!

கலந்தே உண்ணல் பார்த்திடுவீர்!

செல் : ஆக்கம் உடையார் கடமையினை

அந்தக் காக்கை உரைத்திடுமே!

பெரு : அருமை! அருமை! இப்படியே நீங்கள் இரட்டையரும் கூடிப் பா ட் டு இயற்றினால் எனக்கு வேலையே இல்லை!

செல்வி : போங்கள் தாத்தா இது எங்கள் பாட்டா? நீ ங் க ள் வழங்கிய கொடையை இங்கும் அங்கும் மாற்றிப் போட்டால் எங்கள் பாட்டாகி விடுமா?

செல் : தாத்தா, மாடியில் இருந்து குழாய் வழி மழைத் தண்ணீர் வந்தால், அத குழாய் தந்ததாகிவிடுமா? மழை தந்தது இல்லையா?

பெரு : ஓ! நீங்கள் பெரிய ஆள்கள்தாம்!

இரு : பெரிய ஆள் யாரென்பதை நாடே அறியும்! –

இருவரும் கைகொட்டி நகைக்கின்றனர். பெருநாவலர் பேரர்களைத் தழுவிக் கொள்கின்றார்)

உரையாடல்-2

(பொழுது–மாலை; இருண்டு வரும்பொழுது)

செல்வி : தாத்தா காக்கையைப் பகலில் பார்க்கிறோம். ஆனால் இரவில் பார்க்க முடியவில்லையே!

பெரு : ஆம். காகம் இரவில் கூட்டைவிட்டு வெளியே வருவதில்லை. அதுபோல் கூகை பகலில் வெளிப்படுவது இல்லை.

செல்வி : கூகை என்பது கோட்டான் தானே தாத்தா!

பெரு : ஆம்.

செல்வி : கூகை பகலில் வெளியே வரவே செய்யாதா தாத்தா.

பெரு : ஆம். பகல் பொழுதில் காக்கைக்கு ஆட்சி: இரவுப் பொழுதில் கூகைக்கு ஆட்சி. பகலில் கூகைக்குப் பார்வை குறைந்து விடும். இரவில் காக்கைக்குப் பார்வை குறைந்து விடும், அதுவே அவற்றின் வெற்றி தோல்விகளுக்கு அடிப்படை.

செல்வி : காக்கை, கூகை ஆகிய இரண்டில் எது வலிமையானது தாத்தா?

பெரு : பொதுவாகப் பார்த்தால் காக்கையினும் கூகைதான் வலிமையானது. இருந்தாலும் பகற் பொழுதில் கூகை வெளியே வந்தால் காக்கை அதனை வெருட்டியடிக்கும். காக்கையை எதிர்த்து நிற்கமாட்டாமல் கூகை தோற்றுப் போய் ஓடிவிடும்!

செல் : வலிமை குறைந்த காகத்திற்குக் காலம் உதவியாக அமைவதால் வெற்றி கொள்கிறதா தாத்தா?

பெரு : உண்மைதான். இரவிலே எலி வேட்டையாடும் பூனை, பகலிலே எப்படி முடங்கிக் கிடக்கிறது. காகம் பூனை போன்றவற்றுக்குத்தான் காலம் துணையாக இருக்கிறது என்பது இல்லை. மக்களுக்கும் காலம் துணை செய்யும், காலம் கருதிக் கடமை செய்வதுதான் பயன்தரும்.

செல்வி : எப்படி தாத்தா?

பெரு : ஒரு நாடு, மற்றொரு நாட்டின் மேல் படையெடுத்துச் செல்கிறது. வெற்றி கொள்ள வேண்டுமானால் படை வலிமை மட்டும் போதாது. காலமும் துணை செய்ய வேண்டும்.

செல் : காலத்தில் நல்லதும் கெட்டதும் உண்டா தாத்தா?

பெரு : காலத்தில் நல்லதும் கெட்டதும் இல்லை. ஒருவர்க்கு ஆகும் பொழுதாக இருப்பது மற்றொருவர்க்கு ஆகாப் பொழுதாக இருக்கக் கூடும். அஃது அவரவரைப் பொறுத்தது.

செல்வி : எப்படி தாத்தா?

பெரு : வெப்பமான நாட்டிலே வாழ்ந்தவர், குளிர் நாட்டுக்குப் போய்ப் போரிட்டால் வெற்றி பெற முடியுமா? அங்கே வெப்பம் மிக்க கோடைக் காலத்தில் போய்ப் போரிட்டால் அவர்களுக்குத் தீமையாகவும், இவர்களுக்கு நன்மையாகவும் இருக்கும் அல்லவா?

செல் : ஆம் தாத்தா. பனிக்காலத்தில் எல்லாக் கதவுகளையும் மூடுவது போதாமல் நம்மையும் மூடிக்கொண்டு படுக்கிறோம்.

அப்படியும் குளிர் வாட்டுகிறது. வெயில் காலத்தில் கதவுகளை யெல்லாம் திறந்து போடுவதுடன் மூடாமலும் படுக்கிறோம். அப்படியும் வியர்த்துக் கொட்டுகிறது. இது காலத்தின் இயல்புதானே!

செல்வி : கால இயல்பை அறிந்து கடமை செய்ய வேண்டும் எனக் காகமும் கூகையும் நமக்குக் கற்பிக்கின்றன இல்லையா தாத்தா.

பெரு : ஆம்! உயிர்ப் பொருள்களும் உயிரில்லாப் பொருள்களும் எத்தனையோ வகைசளில் நமக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. அவற்றைப் பார்த்து நாம் நிரம்பக் கற்றுக் கொள்ள வேண்டும்.

செல் : தாத்தா நீங்கள் சொல்லியதில் இருந்து காக்கை கூகையைப் பகலில் வெல்லும் என்னும் செய்தி தெளிவாகின்றது.

பெரு : சரிதான்! சொற்களை மட்டும் கொஞ்சம் மாற்றிக் கொண்டால் போதும்.

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை"

செல்வி : அடுத்த செய்தி தாத்தா?

பெரு : நான் சொன்ன செய்தியையே சேர்த்து விடுகிறேன்.

"இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது". போரில் வெற்றி கொள்ள விரும்பும் ஆட்சியாளர்க்குத் தகுதியான பொழுது வேண்டும்.

செல் : "பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

சரிதானே தாத்தா!

பெரு : அழகாக உரைத்தாய்!

செல்வி : தாத்தா, எனக்கு இப்பொழுது ஒரு நினைவு உண்டாகின்றது. "கா. கா" என்பதால் காக்கை ஆனது போலக் "கூ.கூ" என்று ஒலிப்பதால்தான் கூகை ஆனதா தாத்தா!

பெரு : அருமையாக உரைத்தாய்; அப்படித் தான்!

செல் : அப்படியானால் 'கூக்கூ' என்று இருந்து 'கூக்கை' ஆகிக் 'கூகை' என வந்திருக்குமோ?

பெரு : பொருத்தமாகத்தான் இருக்கிறது. 'குழந்தைகள் முட்டாளையும் அறிவாளியாக்கி விடுவர்' என்பதில் எவ்வளவு உண்மை இருக்கிறது.

செல்வி : போங்கள் தாத்தா இப்படி எல்லாம் சொல்லக்கூடாது, சொன்னால் 'காய்' போட்டு விடுவேன்.

பெரு : வேண்டாம் கண்ணே! இந்தக் கிழவனுக்குக் 'காய்' பிடிக்காது. 'பழம்' தான் பிடிக்கும். (பெருநாவலர் தமக்குள் மகிழ்கிறார்).

இரு : "பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

பெரு நீங்களும் பாட்டையா, பாட்டம்மா ஆக வேண்டாமா? பாடுங்களேன்.

செல் : பகலில் வெற்றி காக்கைக்காம்!
இரவில் வெற்றி கூகைக்காம்!

செல்வி : இகலில் வெல்ல விழைந்திடுவோர்
ஏற்ற காலம் அறிந்திடுவார்!

பெரு அருமை! அருமை! இப்போது நம் பேரவையைக் கலைப்போமா?

இரு : தாத்தா! நன்றி.

(பேரர்களைத் தழுவி அன்போடு அனுப்புகிறார் பெருநாவலர். பேரர்கள் அவை கலைகிறது. இல்லத்துள் அவர்கள் செல்வதை இமைகொட்டாது பார்த்து இன்புறுகிறார்.)

உரையாடல்-3

காலைப் பொழுது

செல்வி : தாத்தா எழுதியது போதும். உலாவச் செல்லும் பொழுதாயிற்று. ஏட்டை எடுத்து வைக்கப் போகிறேன் (ஏட்டை எடுக்கிறாள்.)

பெரு : உங்கள் ஆணைப்படி நடக்கத் தவறுவேனா!

(மணைப்பலகையில் இருந்து பெருநாவலர் எழுகிறார்.)

செல் : தாத்தா! மேல்துண்டு; விழுத்தண்டு. இந்தாருங்கள்.

பெரு : செல்வா! அதற்குள்ளே எடுத்துக் கொண்டு வந்துவிட்டாயா?

செல்வி : இதோ, 'செருப்புகள்' தாத்தா;

பெரு : நல்ல பிள்ளைகள்; உலாவப் போவதிலேதான் உவகை

செல்வி : இல்லை! உங்களோடு உலாவப் போவதிலேதான் உவகை.

பெரு : எங்கே போவோம்!

செல் : இன்று தென்கால் குளத்திற்குச் செல்லலாம் தாத்தா.

பெரு : அப்படியே செல்வோம்

(மூவரும் தெருவைக் கடந்து தென்கால் குளத்தை நோக்கிச் செல்கின்றனர். குளக்கரையில் ஆலமரங்கள் இருக்கின்றன. மெல்லிய காற்றும் விசிறுகிறது. செல்வனும் செல்வியும் ஒருவரை முந்தி ஒருவர் ஓடுகின்றனர், பெருநாவலர் நடைபோட்டுத் தொடர்கின்றார்.)

பெரு : குழந்தைகளே! இந்தக் கிழவனால் உங்களைத் தொடர்ந்து ஓட முடிய வில்லை!

செல்வி : இல்லை தாத்தா எங்கள் ஓட்டத்தால் உங்கள் நடையைத் தொடுக்க முடியாதே.

செல் : விழுத்தண்டு வைத்திருந்தால் மட்டும் கிழவராகி விடுவீர்களா தாத்தா! அதை என்றைக்கும் நீங்கள் ஊன்றி நடப்பதே, இல்லையே!

செல்வி : தாத்தா! அதோ பாருங்கள். கொக்கு!

செல் : நீரை ஒட்டி எவ்வளவு அடக்க ஒடுக்கமாக நிற்கிறது.

பெரு : (மிக மெல்லிய குரலில்) அப்படியே நின்று கொக்கைப் பாருங்கள். ஒலி கேட்டால் பறந்து போய்விடும்.

செல் : அங்கும் இங்கும் திரும்பாமல் ஒரே பார்வையாக நீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறதே ஏன் தாத்தா.

பெரு : மீன்கள் பார்த்து விட்டால் ஓடிப் போகுமே! இரை கிடைக்காதே; அதனால் அடக்க ஒடுக்கமாக நிற்கிறது!

செல்வி : நல்ல சூழ்ச்சி தாத்தா! கொக்குக்கு எவ்வளவு திறமை தாத்தா, கொக்கு அரவமில்லாமல் நிற்பதைப் பார்க்கும் போது எனக்கு ஒரு நினைவு வருகிறது தாத்தா. கூடி விளையாடும் போது

குறும்பு செய்யும் பிள்ளைகள், சில வேளைகளில் பொறுமையே வடிவாக இருப்பார்கள். நல்லபிள்ளைகள் என்று பாராட்டும் வாங்கிக் கொள்வார்கள். அப்படியல்லவா இருக்கிறது இக்கொக்கு.

பெரு : பார்த்தாயா? நாம் வேறொரு செய்திக்குப் போய் விட்டோம். கொக்கைப் பார்க்க வில்லை. இப்படிக் கொக்கு இருந்தால் அதற்கு மீன் கிடைக்குமா?

செல் : தாத்தா! தாத்தா! கொக்கைப் பாருங்கள்! மீனைக் குத்தித் தூக்கி விட்டது!

செல்வி : என்ன விரைவு! என்ன விரைவு!

பெரு : விரைவு மட்டுமில்லை! எவ்வளவு சரியாகக் குறி வைத்துக் குத்தி எடுத்தது பார்த்தீர்களா?

செல்வி : இந்த வெள்ளைக் கொக்கு என்னென்ன வேலையெல்லாம் செய்கின்றது?

செல் : தாத்தா! எவ்வளவு பெரிய மீன்! நன்றாகத் தெரிகிறது பார்த்தீர்களா?

செல்வி : என்ன இருந்தாலும் காக்கையைப் போல் கொக்குக்கு நல்ல தன்மை இல்லை தாத்தா.

பெரு : அப்படியில்லை. காக்கைக்கும் கொக்குக்கும் நம்மைப் போன்ற அறிவு இல்லை; கல்வி இல்லை; மொழி இல்லை. இயற்கையான உணர்ச்சிகளால் அவை சில செயல்களைச் செய்கின்றன. நல்லது கெட்டது என்பதை அறியமாட்டா. ஆறறிவு உடைய மாந்தனே நல்லது கெட்டதை அறிய முடியாதவனாக இருக்கும் போது இந்த எளிய உயிர்களை நாம் கெட்டது என்று சொல்லலாமா?

செல் : அப்படியானால் கொக்கினிடம் இருந்தும் நாம் அறிந்து கொள்ளும் செய்தி உண்டா தாத்தா?

பெரு : ஏன் இல்லை! நாம் கண்ணாரக் கண்டோமே! மீன் வராதபோது அதை எதிர்பார்த்து அடக்க ஒடுக்கமாக அரவம் இல்லாமல் நின்றது! மீனைக் கண்டதும் குறிவைத்துத்

தப்பாமல் ஒரே குத்தாக் குத்தி எடுத்தது. இது தான் கொக்கு நமக்குத் தரும் செய்தி.

செல் : நன்றாகச் சொன்னீர்கள் தாத்தா! நாமும் கொக்கைப் போல் நின்று மீனைக் குத்தி எடுக்கவா?

பெரு : இல்லை! இல்லை! கேள். நாம் ஒரு செயலை எவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்பதை இக்கொக்கின் செயல் நன்றாகக் காட்டுகின்றது. ஒரு செயலைச் செயற்குரிய காலம் வரும் வரை, கொக்கு மீனைப் பார்த்துக் காத்திருந்தது போல் இருக்க வேண்டும். காலம் வந்த போது கொக்கு மீனைக்கண்ட அளவில் தவறாமல் பற்றிக் கொண்டது போல் செயலை முடித்தல் வேண்டும். இதுதான் கொக்கு நமக்குக் கற்பிக்கும் பாடம்.

செல்வி : மீனைப் பிடித்த செய்தி கொக்குடன் போகட்டும்; கடமையைப் பற்றிய செய்தி நம்முடன் வரட்டும் அப்படித் தானே தாத்தா.

பெரு : சரிதான்! அங்கேபார். மீனைப் பிடித்த செய்தியைக் கொக்கோடு விட மாட்டேன்; நானும் பிடிப்பேன் என்று வருகிறானே ஒருவன்!

செல்வி : தாத்தா தாத்தா! அவன் வரட்டும். அதற்கு முன் இந்தக் கொக்கைப் பற்றி ஒரு பாட்டுக் கூறுங்கள் தாத்தா.

பெரு ஆமாம்! அதைச் சொல்லுகிறேன்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து"

செல் : கூம்பும் பருவத்து என்றால்?

பெரு : "செயலில் ஈடுபடாது இருக்கும் பொழுது" என்பது பொருள். செயலில் ஈடுபடுமுன் கொக்கைப் போல் அமைதி யாக இருக்க வேண்டும்.

செல் : பிறகு?

பெரு : "மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து".

செய்யத்தக்க காலம் வாய்த்தல் சீர்த்த இடம் ஆகும். அக்காலம் வாய்த்தால் அக்கொக்கின் குத்துப் போல்

விரைந்து, எடுத்த செயலை முடிக்க வேண்டும். பாடலை முழுமையாகச் சொல்கிறேன்.

"கொக்கொக்க கூட்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

செல்வி : நாங்களும் உழற வேண்டும் என்பீர்களே தாத்தா?

பெரு : உழறுதலா? தேன்! தேன்! செந்தேன் மழலைத்தேன்!

செல் : போதும் தாத்தா! போதும் பாடுகிறோம்.

செல்வி : **"செய்ய வாயாப் பொழுதினிலே**
சிறந்த கொக்காய் அமைந்திருக்க!

செல் : **"செய்ய வாய்க்கும் பொழுதினிலே**
கொக்கின் குத்தாய் விரைந்திடுக!

பெரு : நன்று! நன்று! நாம் இப்பொழுது விரைந்திடுவோமா?

உரையாடல்-4

செல்வி : தாத்தா இன்னும் சிறிது பொழுது உலாவலாம். அந்த ஆள் வருகிறாரே; அவர் என்ன செய்யப் போகிறார் எனப் பார்க்கலாம்.

வந்த மாந்தன் தோளிலே ஒரு தூண்டிலும், கையிலே ஒரு தெல்லியும் (கூடை) இருக்கின்றன. அவன், குளத்து மேட்டில் கிடந்த கல்லின் மேல் உட்கார்ந்து ஆழமான நீரில் தூண்டில் போடுகிறான். அவனையே செல்வனும் செல்வியும் வியப்போடு பார்க்கின்றனர்.

பெரு : குழந்தைகளே, அவன் தோளில் வைத்திருந்தானே ஒரு நெடுங் கம்பு அது தூண்டில்; அதன் நுனியில் உறுதியான நூல்; நூலின் கடைசியில் ஒரு வளைவான இரும்பு முள். நூலின் ஊடே ஒரு பழுப்பு. இவை தூண்டிலில் இருப்பவை: அவன் மடியிலே புழு வைத்திருப்பான். அப் புழுவைத் தூண்டிலில் இரும்பு முள் இருக்கிறதே அது தெரியாதவாறு குத்தி, நீருக்குள் தூண்டிலைப் போட்டுள்ளான். புழுவைத் தின்ன விரும்பிய மீன், தூண்டில் புழுவைக் கவ்வும்.

செல்வி : ஐயோ! அதனுள் இரும்புமுள் இருக்கிறதல்லவா?

பெரு : ஆம் அப்புழுவை மீன் தின்னு முன்னரே முள்ளில் மாட்டிக் கொள்ளும்!

செல் : தப்பிச் செல்ல முடியாதா தாத்தா!

பெரு : முடியாது; முள் இருப்பது தெரியாமல் நன்றாகக் கவ்விவிடுமே மீன். முள்ளில் அதன் வாய் மாட்டிக் கொண்டபின் தப்பமுடியுமா?

செல் : மீன் தூண்டிலில் பட்டது தூண்டில்காரனுக்கு எப்படித் தெரியும் தாத்தா?

பெரு : நூலில் பழுப்பு இருக்கிறது அல்லவா! மீன் மாட்டிக் கொண்டதும் தப்பி ஓடுவதற்காக இழுக்கும். அப்பொழுது மேலே மிதந்த பழுப்பு (மிதப்புத் தக்கை) தண்ணிருள் செல்லும். அதனைக் கண்டதும் அவன் தூண்டிலை மேலே தூக்கி விடுவான்.

செல்வி : எளிய புழுவுக்கு ஆவற்பட்டு இனிய உயிரை இழந்து போகிறதே மீன்!

செல் : இது கொடுமையானதுதான் தாத்தா!

பெரு : மீனாவது அறிவில்லாதது. புழுவை நம்பி வஞ்சகத்தில் மாட்டிக் கொண்டு சாகின்றது. மாந்தன் அறிவிருந்தும், தனக்கு வரும் அழிவைத் திட்டமாகத் தெரிந்திருந்தும் இம்மீனைப் போல வலியப் போய் மாட்டி, வாழ்வைத் தொலைத்துக் கொள்கிறான். இப்படிப் பலர் இருக்கிறார்களே.

செல்வி : அவர்கள் யார் தாத்தா?

பெரு : அவர்களே, சூதாடிகள்.

செல் : எப்படித் தாத்தா?

பெரு : நம் ஊரிலேயே வீட்டுத் திண்ணையிலும் மரத்தடியிலும் சிலர் சூதாடு கிறார்களே.

செல் : ஆம் தாத்தா நாங்கள் அங்கே போனதும் இல்லை; எப்படி ஆடுகிறார்கள் என்பதைப் பார்த்ததும் இல்லை.

பெரு : நன்று! நன்று! அதைக் கண்ணால் காண்பதும் தீது. நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

செல்வி : அதைப்பற்றிச் சொல்லுங்கள் தாத்தா.

பெரு : சூதாடுவதற்கு அரங்குப்பலகையுண்டு. அதில் கோடுகள் போடப் பெற்றிருக்கும். சூதுக்குரிய காய்களை நகர்த்தி வைத்து விளையாடுவர். உருட்டி விளையாடும் சூதும் உண்டு. சிறுவர்கள் கூட நெல்லிக்காய் வேப்ப முத்து, புளியமுத்து, கல் ஆகியவற்றைச் சூதுக் காயாக வைத்து விளையாடுகின்றனர்! பெரியவர்கள் விளையாட்டைப் பார்த்த கேடு இது.

செல் : தாத்தா! விளையாடினால் என்ன? ஒரு பொழுதுபோக்கு என்று வைத்துக் கொள்ளக் கூடாதா?

பெரு : பொழுதுபோக்கு – விளையாட்டு – என்று நினைத்தும் கூடச் சூது ஆடக் கூடாது. வெறும் ஆட்டம் மட்டும் இல்லை. ஈடுவைத்துத்தான் சூது ஆடுவார்கள். இத்தனை வெள்ளி ஈடு; இத்தனை பொன் ஈடு என்று ஈடு வைப்பர். நிலபுலங்களையும் கூட ஈடு வைத்துச் சூதாடுவார்கள்! பின்பு அவற்றை இழந்து வருந்துவார்கள்.

செல்வி : ஐயோ! மிகக் கொடுமை தாத்தா! நிலபுலங்களையுமா ஈடு வைத்து ஆடுவார்கள்?

பெரு அந்த ஆட்டத்திற்குப் போய்விட்டால் இன்னது தான் என்பது இல்லை. கேளுங்கள். ஒரு சிறுபொருள் ஓராட்டத்தில் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை நினைத்து, அடுத்த ஆட்டத்தில் இன்னும் கிடைக்கும்; அதற்கு அடுத்த ஆட்டத்தில் மேலும் கிடைக்கும் என்று ஆர்வம் உண்டாகி ஆடி ஆடி உள்ளதை எல்லாம் இழந்து வருந்துவார்கள்.

செல் : அடுத்தவன் சூதாடிக் கெட்டதைப் பார்த்தாவது மாந்தனுக்கு அறிவு வரக்கூடாதா?

பெரு அந்த இடத்திற்குப் போனால் கல்வி, அறிவு மானம் எல்லாமும் தொலைந்து போகும். பேரவா ஒன்றுதான் மிஞ்சி இருக்கும்.

செல்வி : புழுவைக் கண்ணால் கண்டபிறகு தன்னைப் பறிகொடுக்கிறது மீன். சூதாடி, பயனைக் கண்ணால் பார்க்காமலேயே உள்ளதை எல்லாம் இழந்து விடுவானோ?

பெரு : உண்மைதான்.

செல் : சூதாட்டத்தை நாட் டை விட்டே ஒழிக்கக் கூடாதா தாத்தா?

பெரு : கண்டிப்பாக ஒழித்துத்தான் தீரவேண்டும். யார் ஒழிப்பது. நாடாள்பவர் வழிகாட்ட வேண்டும். அவர்களே சூதாடிகளாக இருந்தால்? நான் சூதாடிக் கொண்டு திரிந்தால் நீங்கள் சூதாட்டத்தைப் பார்க்கவும் கூடாது என்று சொல்ல முடியுமா? சொன்னாலும் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

செல்வி : நடப்பதாக இருந்தால் அல்லவா நினைக்கவேண்டும் தாத்தா!

பெரு : நீ சொல்வாய் என்பது தெரியும்!

செல்வி : எல்லாம் தங்கள் கொடைதான் தாத்தா!

பெரு : போதும் குளிர்கிறது!

செல் : குளிரத்தான் செய்யும். பொழுதும் போகிவிட்டது அல்லவா!

செல்வி : சூதாடி மீனைப்பற்றி என்ன பாட்டு தாத்தா.

பெரு : சொல்கிறேன்.

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதுஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

செல் : எடுத்தவுடனே 'சூதினை, வேண்டா' என்றது அழகு தாத்தா.

செல் : "வெற்றியே பெற்றாலும் வேண்டா" என்றது மேலும் அழகு தாத்தா.

பெரு : நீங்கள் இரண்டு பேரும் பாடல் அழகைச் சொல்வது எவ்வளவு அழகு தெரியுமா?

செல்வி : தெரியுமே! எல்லாம் உங்கள் அழகு தான் !

பெரு : குறும்புக்காரி நீ!

செல் : அடுத்த செய்தியைச் சொல்லுங்கள் தாத்தா

பெரு : "சூதில் ஒருவேளை வெற்றியே கொண்டாலும்; அவ்வெற்றி தூண்டிலில் கட்டிய இரும்பை மீன் விழுங்கியது போன்றதே ஆகும் என்பது அடுத்த செய்தி.

செல்வி : இன்னொரு முறை பாட்டைச் சொல்லுங்கள் தாத்தா.

"வேண்டற்க வென்றிடினும் குதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று".

(இருவரும் பாடலைத் திருப்பிச் சொன்கின்றனர்.)

பெரு உங்கள் பாட்டைச் சொல்லுங்கள்.

செல்வன் : வேண்டா சூது ; வென்றாலும்
வெற்றி மீண்டும் இழப்பாக்கும்;

செல்வி : தூண்டில் புழுவால் உயிரிழக்கத்
துள்ளிச் செல்லும் மீன்போலாம்!

பெரு அருமை! அருமை!
இனி, வீட்டுக்கு நடப்போம்!

உரையாடல் - 5

(செல்வன் விரைவாக நடந்தான்)

செல்வி : தாத்தா வரவில்லை! அவர் நம் வீட்டுக் கிணற்றுப்பக்கம் போகிறாரே!

செல்வன் : ஆம். நாமும் அங்கே போவோம்!

பெரு செல்வங்களே! உள்ளே பாருங்கள்! கிணற்றுள் ஆமை உலாவுகிறது அல்லவா!

செல்வி : ஆம்! தாத்தா, நீளத்தலை ; குட்டைக் கால்கள்

செல்வன் : கிணத்துள் கிடக்கும் இதற்கு உணவு வேண்டுமே தாத்தா!

பெரு ஆம். உயிர்கள் எல்லாவற்றுக்கும் உணவு இல்லாமல் முடியாதே! கிணற்றுள் புழு பூச்சிகள் உண்டாகும் அவற்றைத் தேடிப் பிடித்துத் தின்பதற்குத்தான் உலாவுகிறது.

செல்வி : ஒவ்வொரு நாளும் புழு பூச்சி கிடைக்குமா தாத்தா?

பெரு இயற்கை எல்லாவற்றும் வேண்டும் உணவை உண்டாக்கித் தரவே செய்யும். அதனால் ஆமைக்குக் கிணற்றின் உள்ளேயே உணவு கிடைக்கும்.

இதோ, பாருங்கள் என்று வாளியைக் கிணற்றுள் விடுகிறார். ஆமை தலையையும், கால்களையும் உள்ளே இழுத்துத் தன் மேல் ஓட்டுக்குள் ஒடுக்கிக் கொண்டது. வாளியுள் சிக்கிவிட்டது. என்ன தாத்தா? தலை கால்கள் எல்லாமும் தெரியாமல் மூடிக் கொண்டனவே!

செல் : ஆமை நினைத்தால் கால்களையும் தலையையும் நீட்டிக் கொள்ளவும், சுருக்கிக் கொள்ளவும் முடியுமா தாத்தா?

பெரு ஆம்! ஆமை தன் உறுப்புகளை வெளியே நீட்டவும் சுருக்கவும் தக்க உடலமைப்பைப் பெற்றிருக்கிறது. அதனால், அதற்கு ஏதேனும் அச்சம் தோன்றுமானால் உடனே சுருக்கிக் கொள்ளும். வேண்டும்போது நீட்டிக் கொள்ளும்.

செல்வி : கல் போன்ற ஓட்டுக்குள் தலையை மடக்கிக் கொண்டால் மூச்சு விட முடியுமா தாத்தா?

பெரு ஆம்! அப்பொழுதும் மூச்சுத் திணறாமல் இருக்க முடியும். அதற்குத் தக்க அமைப்புடையது ஆமை.

செல் அச்சம் உண்டானால் ஏன் ஒட்டுக்குள் தலையையும் கால்களையும் சுருக்கிக் கொள்ள வேண்டும்?

பெரு செல்வா! உனக்கு எப்பொழுதாவது அச்சமுண்டாகுமானால் நீ நடுக்கம் கொள்வது இல்லையா! அம்மாவைக் கட்டிப் பிடித்துத் தழுவி உன் முகத்தை மூடிக்கொள்வது இல்லையா? அதுபோல் ஆமை மறைந்து கொள்வதற்கு இயற்கை, வலிமையான ஓர் ஓடு தந்துள்ளது. அதற்குள் ஆமை தன் உறுப்புகளை மறைத்துக் கொள்கின்றது.

செல்வி : ஆமை ஒரு வியப்பான அமைப்பு உடையது இல்லையா தாத்தா.

செல்வி : ஆம்! ஆமை வியப்பான அமைப்பு உடையதுதான். நத்தையைப் பார்த்திருப்பீர்களே. ஒரு கூட்டைச் சுமந்து கொண்டு போகுமே. ஏதாவது அதற்கு இடையூறு நேரும்போல் தெரிந்தால் அக்கூட்டுக்குள்ளே தன் உடலை ஒடுக்கி வைத்துக் கொள்ளும்! அதுவும் வியப்பான

உடலமைப்பு உடையதுதான். இப்படியே விந்தையான உடலமைப்புடைய உயிர்கள் எத்தனையோ இருக்கின்றன.

செல் இந்த ஆமையினிடம் இருந்து நாம் அறிய வேண்டிய செய்தி என்ன தாத்தா?

பெரு ஆமையினிடம் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் பல இருக்கின்றன. அவற்றுள் முதன்மையான ஒன்று அடக்கமாகும்.

செல்வி : தலையையும் காலையும் அடக்கிக் கொள்வதால் அடக்கத்திற்கு ஆமையைச் சொல்கிறீர்களா தாத்தா?

பெரு ஆம் செல்வி! அதனால்தான் சொன்னேன். ஆனால் எண்ணிப் பார்க்கும் போதுதான் அதன் அருமை மேலும் புலப்படும்.

செல் எப்படித் தாத்தா?

பெரு ஆமைக்குக் கால்கள் எத்தனை?

செல் நான்கு.

பெரு தலை எத்தனை?

செல் ஒன்று.

செல்வி : மொத்தம் ஐந்து உறுப்புகள் தாத்தா

பெரு ஆமாம் ஆமைக்கும் ஐந்து உறுப்புகள். நமக்கும் ஐந்து உறுப்புகள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

செல்வி : ஆமை ஐந்து உறுப்புகளையும் தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக் கொள்வதுபோல நாம் நம் ஐந்து உறுப்புகளையும் அடக்கிக் கொள்ள வேண்டுமா தாத்தா?

பெரு மிகச் செவ்வையாக உரைத்தாய்.

செல் எப்படித் தாத்தா அடக்குவது? நமக்கு ஓடு எதுவும் இல்லையே!

பெரு ஆமைக்கு இருப்பதுபோல் ஓடோ நந்தைக்கு இருப்பது போல் கூடோ நமக்கு இல்லையானாலும் அறிவு என்னும் ஓர் அரண் (காவல்) இருக்கிறது. அவ்வரணுக்குள் நம் மெய், வாய், கண் மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கிக் கொள்ள வேண்டும்.

செல்வி : ஐம்பொறிகளை எப்படி அடக்குவது தாத்தா?

பெரு பார்க்கத் தகாதவற்றைப் பாராமை கண்ணடக்கம்; பேசத் தகாதவற்றைப் பேசாமை வாயடக்கம் ; கேட்கத் தகாதவற்றைக் கேளாமை காதடக்கம்; இவ்வாறே தொடத் தகாதவற்றைத் தொடாமை மெய்யடக்கம். முகரத் தகாதவற்றை முகராமை மூக்கடக்கம்.

செல் தக்கது, தகாதது என்பதை எப்படித் தெரிய முடியும் தாத்தா?

பெரு பிறருக்கும் தமக்கும் தீமை தராதது எதுவோ அது தக்கது. தீமை தருவது எதுவோ அது தகாதது.

செல்வி : என்ன தாத்தா இது? ஆமை தனக்குத் தீமை வருமானால் அடங்கிக் கொள்கிறது. நாம் நமக்கும் பிறருக்கும் தீமை வருமானால் அடங்கிக் கொள்ள வேண்டுமா? நேர்மாறாக அல்லவா இருக்கிறது?

பெரு உண்மைதான் செல்வி மிக நுணுக்கமாகக் கூறினை. ஆமை, எளிய உயிர். அதற்கு நம்மைப்போல் அறிவு வளர்ச்சி இல்லை. அறிவை வளர்க்கும் மொழித்திறம் இல்லை. அதனால் அதற்கு வரும் இன்பத்தைக் கருதியே வாழும். அதற்கு வரும் துன்பத்தைக் கண்டே அஞ்சும். ஆனால் மக்கள் பகுத்தறிவுடையவர். உயர்ந்த எண்ணங்களைக் கொள்ள வேண்டியவர். அவர் ஆமையைப் போல் தம் இன்பமே குறியாக வாழ்ந்தால் ஆமைக்கும் அவருக்கும் என்ன வேற்றுமை?

செல் : உண்மைதான் தாத்தா! “பிறருக்கு வரும் துயரத்தைத் தம் துயராகக் கருதாதவர் மக்கள் ஆகார்” என்று சொல்லியிருக்கிறீர்கள் தாத்தா.

பெரு நன்றாக நினைவு வைத்திருக்கிறாயே! தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்று எண்ணுபவரே மாந்தர். அவர்கள் அடக்கம் இல்லாமல் தீமை செய்யலாமா? கூடாது என்பதைத் தான் இந்த ஆமை காட்டுகிறது.

செல்வி : தாத்தா! தாத்தா! ஆமை தலையை வெளியே நீட்டுகிறது! கால்களையும் நீட்டுகிறது தாத்தா.

பெரு அதன் அச்சம் போய்விட்டது. வெளியே உலாவலாம் என நினைக்கிறது! நாம் இந்த வாளியுடன் கிணற்றுக்குள் ஆமையை விட்டு விடுவோம்.

(பெருநாவலர் வாளியைக் கிணற்றுள் விடுகிறார்; வாளி நீருக்குள் மூழ்கியதும் ஆமை நகர்ந்து மறைந்து விடுகின்றது. செல்வனும் செல்வியும் வியப்புடன் பார்த்து மகிழ்கின்றனர்.)

செல் : அடக்கத்தைக் கற்பிக்கும் ஆமைக்கு நீங்கள் பாட்டுச் சொல்லவில்லையே தாத்தா.

பெரு சொல்கிறேன்! சொல்கிறேன்! மறக்கவில்லை!

செல்வி : எங்கே மறந்து போனீர்களோ என நினைத்தேன்.

பெரு நான் மறப்பேனா? மறந்து போக நீங்கள் தாம் விட்டுவிடுவீர்களா? கேளுங்கள்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

செல் இதற்குப் பொருள் என்ன தாத்தா?

பெரு ஆமையைப் போல் ஒருங்கே ஐந்து உறுப்புகளையும் அடக்கும் வலிமையை ஒருவன் பெற்றால் அவ்வடக்கம் அவனுக்கு மேலே வரும் எல்லாக் காலங்களிலும் காவலாக அமையும்.

செல்வி : காவல் நன்றாக இருந்தால் களவு போகாது. அடக்கம் செம்மையாக இருந்தால் அழிவு வராது! அப்படித் தானே தாத்தா.

பெரு : எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை செல்வி!

செல்வி : வேண்டவே வேண்டாம்! நான் சொன்னது சரிதான் என்றால் போதும். பாராட்ட வேண்டுமா?

செல் ஆம்! பாராட்ட வேண்டியதுதான். தாத்தாவுக்கு நாளைத்தானே பெரு மங்கல நாள் விழா. அதற்கு இன்றே

நம் பாராட்டுதல் வாழ்க தாத்தா! வாழ்க வண்டமிழ்! வாழ்க திருக்குறள்!

(இருவரும் கையொலி செய்கின்றனர். பெருநாவலர் புன்முறுவல் செய்கிறார்)

இரு இதோ எங்கள் பாட்டு.

ஒருமை ஓட்டுள் ஆமைபோல்
ஒடுக்கிக் கொள்க ஐந்துறுப்பும்.
அருமைக் காவல் அஃதாகும்
ஆகும் பிறவிக் கெல்லாமும்,

பெரு அழகாக உள்ளது. நாம் போகலாம்.

உரையாடல்-6

(பொழுது-நண்பகல்)

(வெயில் கடுமையாக அடிக்கிறது. சாலையில் ஒரு குப்பை வண்டி போகிறது. அதில் இருந்து உதிரும் குப்பையுடன் ஒரு புழுவும் கீழே விழுகின்றது. சாலையின் வெப்பம் தாங்க மாட்டாமல் புழு துடிக்கின்றது. அதனைக் கண்ட செல்வன் மிக வருந்தி ஒரு குச்சியால் எடுத்து நிழலில் போடுகிறான். அதனைப் பெருநாவலரும், செல்வியும் கண்டு உருகுகின்றனர்.)

பெரு செல்வா! உனக்கு எங்கள் உள்ளார்ந்த அன்புப் பாராட்டுதல், நீ வாழ்க உன் தொண்டும் வாழ்க.

செல்வி : தம்பி! நீ செய்தது சிறிய செயல். ஆயினும் அது மிக அரிய செயல் ஆகும்.

செல் நேற்று நான் தாத்தாவைப் பாராட்டியதற்கு மறு பாராட்டுதலா?

பெரு இல்லை செல்வா! நல்லதைப் பாராட்டுவதுதான் நன்று. அது நாட்டில் நல்லது நடக்க வழி செய்யும். அது போல் தீயதைக் கண்டிக்காமல் விடுவதும் தீது. அது தீமை வளரவே உதவும்.

செல்வி : புழு, துடித்தால் நமக்கென்ன? செத்தால்தான் நமக்கென்ன என்று இருக்கும் மனம், மரத்துப் போன மனம். பின்னர் அம்மனம் மாந்தர் துடிப்பதனைக் கண்டும் கூட இரக்கம் காட்டாத மனமாகப் போய்விடும்.

பெரு : உண்மைதான். நல்ல தன்மையும் படிப்படியே வளர்ந்து முழுமை பெறும். தீய தன்மையும் அவ்வாறு படிப்படியே வளர்ந்து முழுத் தீமையாகப் போகும்.

செல்வி : புழு நிலத்தில் ஊர்ந்து போவதால் தானே தாத்தா வெயிலைத் தாங்க மாட்டாமல் துள்ளித் துடிக்கிறது.

பெரு புழு நிலத்தில் ஊர்ந்து செல்வதால் தான் துன்பப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் ஓந்தி, பாம்பு, அணில், எலி முதலியவையும் நிலத்தில் தானே ஊர்ந்து செல்கின்றன? அவை வெயிலால் இப்படித் துன்பப்படுவது இல்லையே.

செல்வி : தாத்தா! ஓந்தி முதலியவை விரைவாக ஓடிவிடுகின்றன. புழு நெளிந்து நெளிந்து மெதுவாக அசைந்து போகின்றது. அதனால் அதனை வெயில் வாட்டுகின்றது.

பெரு வெயில் வாட்டட்டும் என்று விரும்பியா புழு அசைந்து செல்கின்றது? இல்லை! அதன் உடல் அமைப்பே அப்படி உள்ளது?

செல் : எப்படித் தாத்தா?

பெரு : அதற்கு எலும்பு இல்லை.

செல் புழுவிற்கு எலும்பே இல்லையா தாத்தா.

பெரு : ஆம்! எலும்பு அதற்கு இருந்தால் நிலத்தில் இவ்வளவு மெல்லென அசைந்து செல்லாது. விரைந்து ஓடும். அணிலைப் போல் தாவிச் சென்று வெயிலை வெற்றி கொண்டுவிடும். குருவியைப் போல் மேலே பறந்து நிழலை அடைந்து விடும். எலும்பு இல்லாமையால் விரைந்து ஓடவும் முடியவில்லை; பறக்கவும் முடிய வில்லை.

செல்வி : தாத்தா ஈக்களுக்கு எலும்பு இல்லை . இருந்தாலும் பறக்கவில்லையா?

பெரு உண்மைதான். அவற்றுக்குச் சிறகுகள் உள்ளன. அதனால் மேலே பறந்து வெயிலை அவை வெற்றி கொண்டு விடுகின்றன.

செல் : சில வேளைகளில் தலை சுடுவதைப் பார்க்கிலும் கால் சுடுகிறதே தாத்தா.

பெரு ஆம். அப்பொழுது தாக்கும் வெயில் மட்டும்தான் தலையில் படுகின்றது. ஆனால் நிலத்தில் நெடும்பொழுதாகத் தாக்கிய வெப்பமெல்லாம் படிந்து கிடக்கிறது. அதில் காலை வைத்ததும் அங்கேயுள்ள வெப்பமும் வெயில் வெப்பமும் சேர்ந்து காலைத் தாக்குகின்றன. ஆதலால் தாங்க மாட்டாத வெப்பமாக உள்ளது. காலும் சூடேறிப் புண்ணாகிப் போகின்றது.

செல்வி : அப்படியானால் நிலத்தில் ஊர்ந்து போவதால் மட்டும் புழுவை வெயில் வாட்டுவது இல்லை. அதற்கு எலும்பு இல்லாமையால் தான்-ஏன் சிறகும் இல்லாமையால்தான் - வெயிலில் அகப்பட்டுக் கொண்டு புழு துன்பப்படுகின்றது.

பெரு துன்பப்பட்ட அளவில்கூட நிற்காது. சில நொடிகளில் புழு செத்துப் போவதும் உண்டு.

செல் ஆமாம் தாத்தா செத்துப் போன புழுக்களின் கூடுகளைப் பார்த்திருக்கிறேன். அவை மெல்லிய காற்றிலும் கூட அடித்துச் செல்லும். கூட்டின் உள்ளே எதுவும் இருக்காது.

பெரு புழுவில் இருந்த தசைப்பகுதியும் நீரும் ஒன்றும் இல்லாமல் காய்ந்து போகும். அதனால் வெற்றுக் கூடாகவே இருக்கும். அப்படி வெற்றுக் கூடான மனிதர்களும் உள்ளனர். அவர்களுக்கு அன்பு என்னும் தன்மை இருப்பது இல்லை.

செல்வி : புழுவிற்கு 'என்பு' இல்லை; இவர்களுக்கு 'அன்பு' இல்லை, அப்படித் தானே தாத்தா,

பெரு ஆம்.

செல் என்பு இல்லாத புழுவை வெயில் வாட்டுகிறது. அன்பு இல்லாதவர்களை எது வாட்டும் தாத்தா?

பெரு நல்ல வினாவை எழுப்பினை செல்வா! என்பு இல்லாத புழுவை வெயில் வாட்டுவது போல, அன்பு இல்லாதவர்களை அறம் வாட்டும்.

செல்வி : அறம் மிக உயர்ந்த தன்மையானதே தாத்தா! அதுவும் வாட்டுமா?

பெரு : நல்லதைக் காக்க வேண்டுமானால், அல்லதை அகற்ற வேண்டுமா, வேண்டாமா? களையைப் பறிக்காமல் விடும் உழவன் விளைவைப் பெற முடியுமா? களையைப் பறிப்பது தவறு என்று கூறமாட்டோம் அல்லவா? அது போன்றதே, அன்பு இல்லாதவர்களை அறம் வாடச் செய்வதுமாகும். ஆனால், அறம் வாட்டுதலுக்கும் வெயில் வாட்டுதலுக்கும் ஒரு வேறுபாடு.

செல் : என்ன வேறுபாடு தாத்தா?

பெரு : வெயில் எளிய உயிர்களைத் தன் வெப்பத்தால் வெளிப்புறத்தே இருந்து வாட்டும். அது வாட்டுவது உடலையேயாகும். ஆனால் அறம், அன்பு இல்லாதவன் உள்ளத்தின் உள்ளே புகுந்து வாட்டும். அவனே வெதும்பி வெதும்பித் துன்பப்பட வாட்டும். இதுதான் வேறுபாடு.

செல்வி : அறத்தின் வாட்டுதலால் அன்பராகவும் வாய்ப்பு ஏற்படும் இல்லையா தாத்தா!

பெரு ஆம்! அதற்காகத் தானே அறம் அவன் உள்ளே புகுந்து அலைக்கழிக்கிறது. அவன் வருந்தி நோவவேண்டும் என்பது அறத்தின் நோக்கம் இல்லை. அவன் திருந்தி வாழ வேண்டும் என்பதே அறத்தின் நோக்கமாகும்.

செல் அருமையான நோக்கம் தாத்தா!

செல்வி : புழுவில் இருந்து தொடங்கி அறத்தில் போய் நிற்கிறோம் தாத்தா.

பெரு ஆம்! அதனை முழுமையாகச் சொல்கிறேன் கேளுங்கள்.

“என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம்”

செல்வி : எளிமையாக இருக்கிறது தாத்தா.

பெரு நல்லது.

செல்வி : எளிமையாகச் சொல் இருந்தாலும் அருமையாகப் பொருள் அமைந்துள்ளது தாத்தா.

பெரு : மிக நல்லது ; நீங்கள், பாட்டைச் சொல்லுங்கள்.

(இருவரும் பாட்டைச் சொல்கின்றனர். சொல்லி முடித்துப் புதுப்பாட்டைப் பாடுகின்றனர்.)

செல்வி : என்பில் லாத புழுவகையை
எரியும் கதிரோன் வெயில்வாட்டும்
செல் அன்பில் லாத மாந்தர்களை
அறமே வாட்டும் அருளோடே!

பெரு நன்று வெயில் கடுமையாக உள்ளது. நாம் அந்தத் தோப்பு நிழலுக்குப் போகலாம்.

உரையாடல் - 7

(தோப்பு நிழலில் பெருநாவலர் அமர்கின்றார்.
செல்வனும் செல்வியும் இப்பாலும் அப்பாலும் அமர்கின்றனர்)

செல் : தாத்தா, என்பு இல்லாத புழுக்கூட்டைச் சொல்லும்போது, அன்பு இல்லாத மனிதர்களை, வெறுங்கூடு என்கிறீர்களே, தாத்தா!

பெரு ஆம்!

செல்வி : குருவியிருப்பதைக் கூடு என்கிறோம். கூடி இருப்பதால் கூடு ஆயிற்றா தாத்தா,

பெரு ஆம் செல்வி! கூடி இருப்பதற்கு அமைந்ததே கூடு ஆயிற்று. நம் உடல், உயிர் கூடி இருப்பதற்கு இடமாக இருப்பதால்தான் கூடு எனப்படுகிறது. உயிரில்லாத உடம்பு கூடு அன்று. அது வெறுங் கூடு என்று சொல்லப்படும்.

செல் அன்பில்லாத கூட்டைச் சிறிது விளக்க வேண்டும் தாத்தா!

பெரு நல்லது விளக்கிச் சொல்கிறேன். கேளுங்கள். தோட்டங்களிலும், புன்செய்களிலும் மாந்தர் போலப் பொம்மைகள் (பொய்ம்மைகள்) இருக்கப் பார்த்திருப்பீர்களே! அதோ அந்தக் கீரைத் தோட்டத்தைப் பாருங்கள். பொம்மை இருக்கிறது அல்லவா?

செல்வி : ஆம் தாத்தா! கம்புகளையும் குச்சிகளையும் கொண்டு உருவம் செய்து துணியைச் சுற்றி ஆளைப் போலவே நிறுத்தி

வைத்திருப்பார்கள். இரவில் பார்த்தால் காவலுக்கு ஆள் இருப்பதாகத் தோன்றித் திருட வந்தவனையும் அஞ்ச வைக்கும். அதைத்தானே சொல்கிறீர்கள் தாத்தா.

பெரு : ஆம்! ஆம்! அந்த ஆளுருவத்திற்கு உயிர் இல்லை அல்லவா! அதுபோல் சிலருக்கு மாந்தர் போன்ற தோற்றம் மட்டுமே உண்டு.

செல்வி : யாருக்கு தாத்தா?

பெரு : அன்பு இல்லாதவர்களுக்கு. அவர்களுக்கு எலும்பும் தோலும் போர்த்த உடம்பு உண்டே அல்லாமல், உயிர் போன்ற அன்பு இல்லை.

செல்வி : ஆம்! இந்தப் பொய்யுருவுக்குக் குச்சியும் துணியும் உண்டு. அந்த நடமாடும் மாந்தர்க்கு எலும்பும் தோலும் உண்டு. இதற்கு உயிர் இல்லை, அந்த மனிதர்க்கு உயிர் போன்றதாகிய அன்பு இல்லை. நல்ல பொருத்தம் தாத்தா.

பெரு : நான் சொல்ல வேண்டியதை எல்லாம் செல்வியே சொல்லி விட்டாள். செல்வா! உனக்குச் செல்வி அக்காள் மட்டும் அல்லள் ஆசிரியரும் கூட.

செல்வி : தாத்தா! போதும், 'எங்களுக்கு விளக்கம் தருவது தங்களுக்கு அல்லலாக இருந்தால் என்னிடம் கேளாதீர்கள் என்று சொல்லி விடலாமே. அதற்காக இந்தப் பேச்சு வேண்டுமா?

பெரு : செல்வி! உன் சினமே தனி அழகு!

செல்வி : போதுமே! என் அழகை விட்டுவிட்டு, அந்த எலும்புக் கூட்டைப் பற்றிய பாட்டைச் சொல்லுங்கள் தாத்தா.

பெரு : **"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு"**

செல் : "அன்பின் வழியது உயிர்நிலை" என்றால் என்ன தாத்தா?

பெரு : அன்பு வழியில் நடப்பவர் உடம்பே உயிர் நிற்கும் உடம்பு- உயிர் வாழும் உடம்பு என்பது அதன் பொருள்.

செல் : அஃதிலார் என்பது அன்பு இல்லாதவரா தாத்தா?

பெரு : ஆம் செல்வா!

செல்வி : அன்பு வழியில் நடப்பவர் உடம்பே உயிருள்ள உடம்பு. அவ்வன்பு இல்லாதவர் உடம்பு எலும்பும் தோலும் போர்த்த உடம்பே அன்றி உயிருள்ள உடம்பு ஆகாது.

செல் : "அன்பின் வழியது உயிர்நிலை அதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

பெரு : உரையும் பாட்டும் ஒருவாறு முடிந்தன. இன்றைக்கு நம் மாநாட்டைக் கலைக்கலாமா?

செல்வி : தாத்தாவின் முடிபு ஒருமனமாக ஏற்கப் பெற்றது.

பெரு : உங்கள் பாடலைப் பாடவில்லையே!

இரு பாடுகிறோம்.

செல் : அன்பு வாழும் உடலதுவே
அரிய உயிர்வாழ் உடலதுவாம்

செல்வி : அன்பு பேணா உடலதுவோ
என்பும் தோலும் போர்த்துடலாம்.

பெரு மணியான பிள்ளைகள் நீங்கள்.

இரு : வணக்கம் தாத்தா!

பெரு : கண்மணிகளே வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!

உரையாடல் - 8

(பொழுது சாய்ந்த நேரம், பெருநாவலரும் பேரரும் உலாவச் சென்று திரும்புகின்றனர். பறவைகளும் அவ்வேளையில் தங்கள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு கூடு திரும்புகின்றன. அவற்றைப் பார்ப்பதிலும், அவற்றின் ஒலிகளைக் கேட்பதிலும் செல்வியும் செல்வனும் மகிழ்கின்றனர். செல்வன் பார்வை ஒரு குருவிக் கூட்டின் மேல் சென்றது.)

செல் : தாத்தா! நாம் உலாவச் சென்று வீட்டுக்குத் திரும்புகிறோம். அது போல் இப்பறவைகளும் உலாவச் சென்று கூட்டுக்குத் திரும்புகின்றன தாத்தா.

பெரு : ஆம் செல்வா? அவற்றுக்கும் நம்மைப் போல் குடும்பம் உண்டு அல்லவா. பகலில் எங்கே போய்த் திரிந்தாலும் பொழுது சாயும் நேரத்தில் தம் கூட்டுக்கு வந்து சேர்கின்றன.

செல் : சரிதான் தாத்தா. இந்தக் கூட்டில் மட்டும் பறவை ஒன்றையும் காண வில்லையே தாத்தா.

செல்வி : தம்பியின் பார்வை, மிகக் கூர்மையான பார்வை தாத்தா. பாருங்கள், நமக்குக் கூடத் தெரியவில்லையே இந்தக் கூட்டில் பறவை இல்லை என்று.

பெரு : ஆமாம்! தம்பி கூர்மையானவன். அவன் கூர்மையானவன் என்பதை நினைத்துப் பூரிப்பதிலே உனக்கு எவ்வளவு ஆர்வம்! இல்லையா செல்வி.

செல்வி : ஏன் தாத்தா? உங்களுக்கு மட்டும் பூரிப்பு ஏற்படவில்லையா தாத்தா?

பெரு : எனக்கு உண்டாகும் பூரிப்பா! அதனை என்ன சொல்வேன். சொல்லில் அடங்கக் கூடியதா? அறிவறிந்த மழலைச் செல்வங்களுடன் உரையாடும் இன்பந்தானே உவமை இல்லாப் பேரின்பம்.

செல் : தாத்தா! நாம் எங்கேயோ போய் விட்டோம். கூட்டை விட்டுக் குருவி போனது போல; நாமும் எடுத்துக் கொண்ட செய்தியை விட்டு எங்கேயோ போய்விட்டோம்.

பெரு ஓ! ஓ! உன் புகழ் கேட்க உனக்கு நாணம் உண்டாகின்றது. அப்படித் தானே செல்வா.

செல் : தாத்தா, இன்னும் கூட இந்தக் கூட்டுக்குக் குருவி வரவில்லையே.

பெரு : செல்வா ! இந்தக் கூட்டை இன்னுங் கொஞ்சங் கூர்ந்து பார். உனக்கு உண்மை புலப்படும்.

செல்வி : ஆம் தாத்தா. இந்தக்கூட்டில் மற்றைக் கூடுகளைப் போ ன் ற பொலிவு இல்லை தாத்தா.

செல் : கூட்டில் உள்ள பஞ்சு, குச்சி முதலியவை கிளம்பி வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது தாத்தா,

பெரு ஆம். இந்தக் கூடு பழுதுபட்டு விட்டது. இதில் இருந்த குருவி வேறெங்கோ ஒரு கூடு கட்டிக் கொண்டு குடியிருக்கப் போ ய் விட்டது. இனி இக்கூட்டுக்கு வாராது.

செல்வி : அப்படியா தாத்தா, ஏன் இந்தக் கூட்டையே செம்மைப்படுத்தி இருக்க முடியாதா தாத்தா?

பெரு முடிந்தால் ஏன் இக்கூட்டை ஒழித்து வேறு கூட்டுக்குச் செல்கிறது குருவி. சிதைந்த கூரையை அழித்துவிட்டுப் புதுக்கூரை வேய்வதுபோலச் சிதைந்த கூட்டை விடுத்துப் புதுக்கூட்டைக் கட்டிக் கொண்டது குருவி. இக்கூட்டைக் கட்டாயம் ஒழித்தே ஆக வேண்டிய நிலைமை ஏற்பட்ட பின்பு குருவி இங்கேயே குடியிருக்க முடியுமா? குடியிருப்பைக் குருவி மாற்றிக் கொள்ளும் நிலைமை உண்டாகிவிட்டால், குருவி கூட்டை விட்டுப் பறக்கத்தானே வேண்டும்.

செல் மற்றைக் குருவிகள் எல்லாம் அவற்றின் கூட்டில் இருக்கின்றனவே தாத்தா.

பெரு ஆமாம். ஆனால் அவற்றுக்கும் தம் கூட்டை ஒழித்துவிட்டுச் செல்லும் ஒரு நாள் வரும். அப்பொழுது இக்குருவியைப் போலவே அவையும் செல்லும்.

செல்வி : என்ன தாத்தா? இவ்வளவு கூர்மையாகப் பார்த்த பின்புதானே குருவி இல்லாத கூடு என்பதைக் கண்டு பிடிக்க நம்மால் முடிந்தது.

பெரு செல்வங்களே, அம்மனை (பாட்டி) இறந்தாரே. அவர் முகத்தைப் பார்த்தவர்கள் என்ன சொன்னார்கள்? உங்களுக்கு நினைவு இருக்கிறதா?

செல்வி : தாத்தா! எனக்கு நினைவு இருக்கிறது. "இறந்தவர் போலவா தோன்றுகிறார்? உறங்குபவரைப் போல உயிர்க்களையுடன் தோன்றுகிறார்" என்று பேசிக்கொண்டார்கள்.

செல் ஆம் தாத்தா. இப்பொழுது எனக்கும் அது நினைவுக்கு வருகிறது.

பெரு நல்லது. இருவருமே நன்றாக நினைவு வைத்துள்ளீர்கள்.

செல்வி : இப்பொழுது எதற்காக அம்மனை இறப்பைப் பற்றிக் கூறினீர்கள் என்பது விளங்குகிறது தாத்தா?

பெரு என்ன அது?

செல்வி : கூட்டை ஒழித்துப் பறவை வெளியேறிய பின்னரும் பறவை உள்ள கூடு போலவே இது விளங்குகிறது. இதுபோலவே அம்மனையின் உயிர் உடலை விட்டு நீங்கிய பின்னரும் உயிருடன் இருப்பவர் போலவே தோன்றினார் எள்பதுதானே தாத்தா.

பெரு ஆம்! ஆம்! அப்படித்தான்.

செல் : உயிர் நீங்கிய உடம்பு பறவை நீங்கிய கூடு போன்றதா தாத்தா?

பெரு : நான் சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லாமலே நீங்களே அறிந்து கொண்டீர்கள். இதுதான் நல்லறிவின் பயன்.

செல் : உயிர் பிரிந்து போன உடலுக்கு, பறவை ஒழித்துப் போன கூடு செவ்வையான உவமை தாத்தா.

செல்வி : கூட்டை நீங்கிப் பறந்து போகும் பறவைக்கு உடலை நீங்கிப் போகும் உயிர் ஒப்பானது என்றாலும், கூட்டை அறவே ஒழித்து விட்டுப் போன பறவைக்கு உயிரை உவமைப்படுத்து வதுதான் மிகச் செம்மையானது இல்லையா தாத்தா.

பெரு ஆம். போன உயிர் அதே கூட்டுக்குத் திரும்புவது இல்லை. ஆதலால் பிரிந்து போன பறவை மீண்டு வந்து தங்காத கூட்டுக்கு உவமையாவதே தக்கதாகும்.

செல் இக்கருத்தைப் பாடலாக்கிக் கூறுங்கள் தாத்தா, அதுதான் நினைவில் வைத்துக் கொள்ள எளிதாக உள்ளது.

பெரு : நல்லது. கேளுங்கள்.

“குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு”

செல்வி : குடம்பை என்பது கூடுதானே தாத்தா.

பெரு ஆம். கூடுதான். குடம்பை தனியாவது மட்டும் அல்லாமல் ஒழிந்தும் போகின்றது. அப்பொழுது புள் பறக்கிறது. அதுபோல் உடலும் உயிரைத் தாங்க மாட்டாத நிலைமைக்கு ஆட்படும்போது அதனை ஒழித்து உயிர் வேறோர் உடலை நாடிச் செல்கின்றது.

செல்வி : கூடு என்பது பொருத்தமான சொல் தாத்தா.

பெரு : என்ன பொருத்தமான சொல்.

செல் பறவை உறைவதும் கூடு; உயிர் உறைவதும் கூடு; கூட்டுக்குக் கூடு உவமையாக வந்தது பொருத்தம் அல்லவா!

பெரு : மிகப் பொருத்தம். பொருத்தத்தைப் புரிந்து கொள்ளும் திறமை இருக்கிறதே அது மேலும் பொருத்தம். பாட்டைச் சொல்லுங்கள் கேட்கலாம்.

இரு : **குடம்பை தனித்தொழியப் புட்பறங் தற்றே**
உடம்போ டுயிரிடை நட்பு.

பெரு உங்கள் பாடலைப் பாடச் சொன்னேன்.

செல்வி : **கூடு தனியே ஒழிந்துவிடக்**
குடிபோம் பறவை அதுபோலக்

செல் **கூடு தனியே ஒழிந்துவிடக்**
குடிபோம் உடலோ டுயிர்நட்பே,

பெரு சரி, புறப்படுவோமா?

இரு போகலாம் தாத்தா.

உரையாடல் - 9

(வரும் வழி–தோப்பின் ஒரு பக்கம்)

செல் தாத்தா! இங்கே பாருங்கள்.

செல்வி : ஒருவன் மறைந்திருக்கிறான் தாத்தா.

பெரு ஆம். அவன் வேட்டைக்கு வந்தவன். பறவைகளைப் பிடிப்பதற்காகச் செடி கொடிகளுக்குள் மறைந்து கொண்டு இருக்கிறான்.

செல்வி : பறவை அவனைப் பார்த்து விட்டால் தப்பிப் போய்விடும் என்பதால் மறைந்திருக்கிறான்.

பெரு செல்வா! புதருக்கு அப்பால் உள்ள திறந்த வெளியைப் பார்த்தாயா? செல்வி, நீயும் அதைப் பார்க்க வில்லையே!

செல் ஆம் தாத்தா, அங்கே ஒரு வலை விரிக்கப்பட்டிருக்கிறது.

செல்வி : வலையின் உள்ளே பறவைக்குத் தீனியும் போடப்பட்டுள்ளதா தாத்தா?

செல் புழுவுக்கு ஆர்வப்பட்டுத் தூண்டில் முள்ளில் அகப்பட்டு அழியும் மீனைப் போல, நெல், கம்பு முதலிய தீனிக்கு ஆர்வப்பட்டுப் பறவை சீரழியும் இல்லையா தாத்தா!

பெரு ஆம் நீங்கள் சற்றே விலகி வந்து விடுங்கள். இல்லையானால் வேட்டைக் காரன் நம்மேல் சினங்கொள்வான்.

செல்வி : தாத்தா! மிகக் கொடுமையான செயல் தாத்தா இது.

பெரு அவனிடம் சொல்லிப் பார்! நாம் சொல்வதுதான் கொடுமையானது என்பான். தின்பதற்காகவே பறவைகள் உள்ளன என்று அவன் அறம் கூறுவான்.

செல் அறம் என்பது அவரவர் நெஞ்சைப் பொறுத்தது அன்று; பிறர் நலம் கருதியது என்று அம்மை ஒரு முறை சொன்னார் தாத்தா!

பெரு எவர் சொன்ன நல்ல செய்தியையும் நீ மறக்க மாட்டாய்! நல்ல பிள்ளை நீ.

செல்வி : தாத்தா! நெல் முதலிய கூலங்களைப் பறவை தின்ன வரும்போது வேடன் எப்படித் தாத்தா பிடித்துக் கொள்வான்

பெரு பறவைகள் கூலங்களைத் தின்னுதற்கு விரும்பிச் செல்லும். அந்த ஆர்வத்தில் கீழே பரப்பிக் கிடக்கும் வலையைப் பார்ப்பது இல்லை. கூலங்களைத் தின்னும்போது மெல்லென வலையைச் சுருக்குவான் வேடன். அதற்குள் அவை மாட்டிக் கொள்ளும். வேடன் பற்றிக் கொள்வான்.

செல் பெரிய வஞ்சம் இல்லையா தாத்தா?

பெரு ஆம்; பெரிய வஞ்சம்தான். ஆனால் இதனினும் பெரிய வஞ்சமும் உண்டு.

செல் அது என்ன தாத்தா?

செல்வி : பறவையின் கண்ணில் படாமல் மறைந்து கொண்டு, தான் விரித்த கண்ணியில் பறவை படுமாறு சூழ்ச்சி செய்வது போன்ற கொடுமை வேறொன்றும் உண்டா தாத்தா?

பெரு ஆம்! இவ்வேடன் கூட வயிற்றுப் பிழைப்புக்காக இவ்வஞ்சச் செயலில் ஈடுபடுகின்றான். கல்வியறிவோ, அருள் உணர்வோ இல்லாதவன் இவன். ஆனால் நான் சொல்லப் போகின்றவன் பற்றற்ற துறவியாகவும், அருளாளனாகவும் பலருக்கும் தோன்றுபவன்-மதித்துப் போற்றுமாறு இருப்பவன்.

செல் அத்தகையவனுக்கு வஞ்சம் எதற்கு தாத்தா?

பெரு : உண்மையில் அவன் பற்று அற்றவனோ அருளாளனோ அல்லன். பற்று அற்றவருக்கும் அருளாளருக்கும் உலகம் மதிப்புத் தருவதை அறிந்து அவர்களைப் போல் பொய் வேடம் புனைந்து கொண்டவன்.

செல்வி : 'வேடன்' என்றே இருவரையும் குறிக்கலாம் தாத்தா. வேட்டை ஆடுபவனும் வேடன். வேடம் புனைந்து கொண்டவனும் வேடன்.

பெரு ஆனால் பறவை பிடிக்கும் வேடனை விட, ஊரை ஏமாற்றும் துறவியே. பொல்லாத வேடன்.

செல் எதனால் தாத்தா?

பெரு துறவாடை உடுத்துகிறான்; தவக் கோலம் கொள்கிறான்; தன்னை. மேலோனாகக் காட்டிக் கொள்கிறான்; கீழான செயல்களைச் செய்கிறான்; ஊரை ஏமாற்றுகிறான். சாந்து இருக்கிறது என்று நினைத்து ஒரு செப்பினைத் திறந்தபோது அதனுள் பாம்பு இருக்கக் கண்டால் எப்படி அதிர்ச்சி தரும். அதுபோன்ற செயலாகும் அவன் செயல்.

செல்வி : இவ்வேடன் புதருள் மறைந்து புன் கொலை புரிகின்றான். அவ்வேடனோ, தவத்துள் மறைந்து மக்களை ஏமாற்றிக் கேடு செய்கின்றான்.

பெரு ஆம்! அவன் கூடா ஒழுக்கம் கொண்டவன். கொலை செய்பவனினும் கொடியவன். அவனைப் பற்றிய குறளைக் கேளுங்கள்:

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

செல்வி : இன்னொரு முறை சொல்லுங்கள் தாத்தா.

பெரு : தவமறைந்து.....

செல்வி : 'சிமிழ்த்தற்று' என்பதற்குப் பிடிப்பது போன்றது என்பது பொருளா தாத்தா.

பெரு ஆமாம்! ஆமாம்! கண்ணி வைத்துப் பிடித்தல், வலைவீசிப் பிடித்தல், பறவை போல் கத்திப் பிடித்தல் பழக்கிய பறவையைக் கொண்டு பிடித்தல், அம்பு ஏவித் தாக்கிப் பிடித்தல், யாழ் முதலிய இசைக் கருவியை மீட்டி மயக்கிப் பிடித்தல் முதலாய எவ்வகையில் பிடிப்பதும் சிமிழ்ப்பதுதான்.

செல் : தாத்தா. பொழுது போய்விட்டது. நாம் போவோமா?

பெரு நல்லது போகலாம், உங்கள் பாட்டு?

செல்வி : **துறவு வேடம் கொண்டிருந்து**
தூய்மை யில்லாச் செயல் செய்வோன்

செல் **பறவை வேட்டை யாடுகிற**
பாவி வேடன் போல்வானாம்.

உரையாடல் - 10

(பொழுது – மாலை)

(பெருநாவலரின் இருகைகளையும் செல்வனும் செல்வியும் பற்றிக் கொண்டு செல்கின்றனர். செல்லும் வழியில் சுமை ஏற்றிக் கொண்டு ஒரு வண்டி வருகின்றது. ஒரு சிற்றாறு குறுக்கிடுகிறது. வண்டி ஆற்றில் இறங்குவதை மூவரும் பார்த்துக் கொண்டு நிற்கின்றனர்.)

செல் இந்த வண்டி மாடுகள் இரண்டும் ஒன்று போலவே இல்லையா தாத்தா.

செல்வி : தாத்தா! மாடுகள் இரண்டும் எவ்வளவு அழகாக இருக்கின்றன! நன்றாகத் தேர்ந்து இணை சேர்த்திருக்கிறார்கள்.

செல் : கொம்பு, திமில், கால், வால், முகம் எல்லாமும் இரட்டைப் பிறவி போலவே இருக்கின்றன தாத்தா.

பெரு நீங்கள் இரண்டு பேரும் மாட்டின் இலக்கணம் கூட வகுத்து விடுவீர்கள் போல் இருக்கிறதே! இப்படித்தான் எந்த ஒன்றையும் கூர்ந்து பார்த்து ஆராய்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

செல்வி : தாத்தா, வண்டியில் தாங்க முடியாச் சுமை போடப்பட்டிருக்கிறது தாத்தா

பெரு : ஆம் செல்வா. ஆனால், அந்த மாடுகள் அச்சுமையைப் பொருட்டாக எண்ணுகின்றனவா.

பெரு : இவ்வளவு பாரம் சுமக்கவா என்னும் எண்ணம் வந்தாலே நடை ஓடாதே தாத்தா.

செல்வி : சில மாடுகள் நல்ல பெருவழியிலேயே, சுமை சிறிதுகூட இல்லாமலிருக்கும் போது கூட கடக்க மாட்டாமல் படுத்துக் கொள்கின்றனவே தாத்தா?

பெரு என்ன பாடுபட்டு எழுப்பினாலும் எழும்பாமலே காலை நீட்டிப் படுத்துக் கொள்ளும் மாடுகளும் உண்டு. நுகக் கோலைக் கழற்றினால்தான் தலையைத் தூக்கி அவை எழும்பும்.

செல் ஒரு நாள் நானும் அக்கையும் ஒரு மாட்டைப் பார்த்தோம் தாத்தா. அந்த மாட்டைப் பார்த்தவர் யாரும் அதன் வலிமையைக் குறைத்து மதிப்பிட முடியாதபடி தோற்றமும் உடற்கட்டும் உடையதாக இருந்தது. இருந்தாலும் வண்டியில் பூட்டியவுடன் அது படுத்துவிட்டது.

செல்வி : தாத்தா! வண்டிக்காரர் அம்மாட்டை எழுப்ப எவ்வளவோ முயன்றார். முடியவில்லை. முளைக்கோலை எடுத்துக் கொண்டும் அறைந்தார்.

பெரு ஏன் தார்க்கோல் இல்லையா?

செல்வி : தார்க்கோலில் இருந்த சாட்டை அறுந்து போயிற்று. கோல் ஒடிந்து போயிற்று அவ்வளவு அடித்தும் எழும்பாமையால் தான் முளைக்கோலை எடுத்தார்.

செல் என்ன பாடுபட்டும் மாடு எழும்பவில்லை தாத்தா. இப்பக்கமும் அப்பக்கமும் புரட்டிப் பார்த்தும் எழும்பவில்லை. சிறிது

தொலைவில் புல்லைக் கொண்டு வந்து போட்டார். சிறிது நேரம் கழித்து எழுந்து புல்லைத் தின்னப் போனது தாத்தா.

செல்வி : வண்டியில் கட்டினால் மீண்டும் படுத்துவிடும் என நினைத்து வீட்டுக்கு ஒட்டிச் சென்றார் வண்டிக்காரர்.

பெரு மாட்டுக்கு உடல் இருக்கிறது. ஆனால் வேலை செய்ய உள்ளம் இல்லை. "தின்னுமாம் ஒரு படைப்பு; திரும்பாதாம் ஒரு மடக்கு" என்பது பழமொழி வண்டியை இழுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாதபோது எது இருந்தாலும் பயனில்லைதான். மெலிந்து காணப்படும் சில மாடுகள் கூட வலிய சுமை வண்டியைத் தாங்கி இழுப்பது இல்லையா? எல்லாம் ஊக்கத்தைப் பொறுத்தது.

செல்வி : மாந்தர்களிலும் ஊக்கமுடையவர்கள் செய்யும் செயலை மற்றவர்கள் செய்ய முடிவதில்லை அல்லவா தாத்தா?

பெரு ஆம்! மாந்தர்களிலும் ஊக்கம் உடையவர், அஃதில்லாதவர் என இரு வகையினர் இருக்கத்தான் செய்கின்றனர்.

செல் தாத்தா, வண்டி ஆற்றுள் இறங்குகின்றது.

செல்வி : என்ன தாத்தா. வண்டி உருளையே மணலுள் புதைந்து விடும் போல் இருக்கின்றதே.

செல் தாத்தா! தெப்பக்கட்டை, குடம் தாமே தெரிகின்றன. உருளையில் செம்பாதி மணலுள் முழுகிவிட்டது தாத்தா,

பெரு மேலே மணலாக இருக்கிறது. கீழே அளறு இருக்கும் போலும். அதனால் தான் அவ்வளவு பதிகின்றது.

செல் மாடுகளின் கால்களும் எவ்வளவு பதிகின்றன.

செல்வி : இவ்வளவு பதிந்தாலும் மாடுகள் இளைக்காமல் ஊன்றி இழுப்பது அருமைதான் தாத்தா,

செல் ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்க அவை படும்பாடு கடுமையானதுதான் தாத்தா. இருந்தாலும் சற்றும் அயரவே இல்லையே.

செல்வி : வண்டியோட்டி கூ ட மாட்டின் முதுகிலே கை வைத்துத் தட்டிக் கொடுத்து ஒலி எழுப்பி ஏவுவது அல்லாமல் வேறொன்றும் செய்ய வில்லையே தாத்தா.

பெரு : ஊக்கமான மாடுகள்! இத்தகைய மாடுகளே உழவனின் செல்வம்.

செல் ; மாடு என்பதற்குச் செல்வம் என ஒரு பொருள் உண்டு அல்லவா தாத்தா? நீங்கள், அதை முன்னே சொல்லியிருக்கிறீர்கள்.

செல்வி : ஆம், தாத்தா! எனக்கு நினைவுக்கு வருகிறது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே. இதில் மாடு என்பது செல்வம் என்ற பொருளில்தானே வருகின்றது.

பெரு ஆம் ஆம்! மாடு என்பது செல்வத்தைக் குறிக்கும். இன்னும் வேறு சில பொருளும் அதற்கு உண்டு. அவற்றுள் பொன் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி : பொதுவாகச் செல்வம் என்பதுடன், சிறப்பாகப் பொன் என்பது மாட்டுக்கு மிகத் தகுதியானது தாத்தா.

செல் ஆ! இம்மாடுகள் ஆற்றை அரும்பாடு பட்டுக் கடந்து விட்டன தாத்தா,

பெரு : ஆம் ஆனால் இனி எதிரில் மேடு இருக்கிறதே. இம் மாடுகள் என்ன செய்யும்?

செல்வி : சுமையும் மிகுதியாக உள்ளது. கரையின் மேடும் உயர்ந்து உள்ளது. இந்த மேட்டையும், கடந்து வெற்றி கொள்ளத்தக்க உள்ள வலிமை மாடுகளுக்கு இருப்பதால் இவை வெற்றி பெறும்.

செல் : முன்னங்கால்களை நிலத்தில் ஊன்றிக் கொண்டு இழுக்கின்றன தாத்தா.

செல்வி : தலையை நிமிர்த்தி மூக்கு நிலத்தில்பட கழுத்தை நீட்டி என்ன வலுவாக இழுக்கின்றன பாருங்கள்.

செல் : தாத்தா, நுகக்கோல் கழுத்தில் இருந்து திமிலை ஒட்டிக் கொண்டு வந்து விட்டது. தும்பு கூட அறுந்து விடுமோ?

செல்வி : நுகக்கோல் பூட்டு விட்டாலும், முரிந்தாலும், கூட வியப்பு இல்லை தாத்தா.

பெரு ஆனாலும் மாடுகள் ஊக்கத்துடன் "விட்டேனா பார்" என்று இழுக்கின்றன அல்லவா!

செல் நல்ல மாடுகள் தாத்தா. இவை எவ்வளவு சுமையைத் தாங்கிக் கொண்டு ஒரே மூச்சாகப் பெரு மேட்டைக் கடந்துவிட்டனவே.

செல் கரையேறிய பின்னர் இளைக்கின்றனவா? களைக்கின்றனவா? எதுவும் இல்லையே தாத்தா

பெரு மாடுகளுக்கு இருக்கும் இத்தகைய ஊக்கமும் விடாமுயற்சியும் மாந்தர்க்கும் இன்றியமையாது வேண்டும்.

செல் எப்படித் தாத்தா?

பெரு மாந்தர் வாழ்வில் எத்தனையோ தடைகளும் இடர்ப்பாடுகளும் உண்டாகும். அவற்றைக் கண்டு சோர்ந்து விடுதல் கூடாது. துணிவோடு கடமை புரிய வேண்டும். அந்தத் துணிவு ஒருவருக்கு வந்து விட்டதானால் அவரை எதிர்ப்பதற்கு யாராலும் இயலாது. எந்த ஓர் இடையூறும் அவர்களைத் தடை செய்யவும் முடியாது.

செல்வி : முயற்சியாளனுடைய துணிவைக்கண்டதும், இடையூற்றின் துணிவு ஒழிந்து போகுமா தாத்தா!

பெரு ஆமாம்! உண்மைதான்; துணிந்து நின்று, துன்புறுத்த வருவனவற்றைக் கண்டு ஒருவன் புன்முறுவல் பூப்பான் ஆனால், அது புன்முறுவல் அன்று துன்பத்தையே துன்பப்படுத்தும் வேல் ஆகும்.

செல் ஆம் தாத்தா. சிறிய இடையூறு வருமுன்னே பெரிதாக அதனை எண்ணித் தளர்ந்து விட்டால் நிமிர்ந்துகூட நிற்க முடியாதே.

பெரு உனக்காகத் தோன்றவில்லை யானாலும் என்னைக் கண்டேனும் துணிந்து முயற்சி செய் என்கிறது காளைமாடு.

அதனை நேரில் கண்டும் நெஞ்சில் கொள்ளாதவர் அறிவுடைய மாந்தர்தாமா?

செல்வி : மாந்தர்க்கு ஊக்கமும் தளரா முயற்சியும் கட்டாயம் வேண்டும் இல்லையா தாத்தா?

பெரு : ஆம், அறிவு மட்டும் ஒருவனுக்குப் போதுமானது இல்லை. மன வலிமையும் கட்டாயம் வேண்டும் என்று நம் முன்னோர் முடிவு செய்தனர். அதனால் 'உரன்' என்னும் ஒரு சொல்லைப் படைத்தனர். உரன் என்பதற்கு அறிவு என்பது ஒரு பொருள்; வலிமை என்பது இன்னொரு பொருள். அறிவும் ஆற்றலும் கூடியதே வாழ்வு என்பது அவர்களின் முடிந்த முடிபு.

செல்வி : மிக நல்ல கருத்து தாத்தா. சொல்லிலேயே வாழ்வு நெறியையும் வகுத்துள்ள நம் முன்னோர் திறமை மிக மிகப் போற்றத்தக்கது இல்லையா, தாத்தா?

பெரு : ஐயமே இல்லை செல்வங்களே! முன்னோர் கண்ட நல்லவற்றைக் கடைப் பிடியாகக் கொள்ள வேண்டும்; அதுவே அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

செல் : நல்லது தாத்தா. காளையை முயற்சியாளனுக்கு ஒப்பாகச் சொன்னீர்கள், அதற்குரிய பாட்டு என்ன தாத்தா?

பெரு **மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற**
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

(பகடு-காளை, பகடு அன்னான்-காளை போன்றவன்.)

தடைப்பட்ட இடத்தில் எல்லாம் வண்டியை இழுத்துச் செல்லும் காளையைப் போன்ற முயற்சி யாளனை அடைந்த துன்பமே துன்பப் பட்டுப் போகும் என்பது இதன் பொருள்.

செல்வி : 'மடுத்தவாய்' என்பதற்குத் தடைப்பட்ட இடம் என்பது தானே பொருள் தாத்தா.

பெரு ஆம் செல்வி! அதே பொருள்தான்: தடைப்படுத்தியதை வெல்லுதல் காளைக்கும், முயற்சியாளனுக்கும் பொதுவான தன்மை என்பது விளங்குகின்றதா?

செல்வி : விளங்குகின்றது தாத்தா,

பெரு பாட்டு நினைவில் உள்ளதா செல்வா.

செல் : சொல்லுகிறேன் தாத்தா.

மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

பெரு : நன்று! நன்று! நாம் இல்லத்திற்குப் போகலாமா?

இரு : போகலாம் தாத்தா.

செல் **காளை போன்ற உரத்தோனைக்**
கண்ட துன்பும் துன்புறுமே!

செல் **ஆளைக் கண்டு மயங்காமல்**
ஆற்றல் கண்டே தெளிவோமே!

உரையாடல் - 11

ஒருநாள் காலையில் பெருநாவலரும் பேரன் பேத்தியரும் வயல் வெளியில் உலாவச் செல்கின்றனர். வயலில் பயிர் இல்லை. வயலில் ஆட்டுக்கிடை போடப்பட்டு உள்ளது. அதன் தொடர்பாக உரையாடல் தொடங்குகின்றது.)

பெரு செல்வங்களே! இந்த வயலைப் பன் முறை ஆழமாக உழுதார்கள். இப்பொழுது நிலத்தில் உரம் சேர்ப்பதற்காகக் கிடை போட்டிருக்கிறார்கள்.

செல் ஆடு மாடுகளை வயலில் அடைத்து வைக்கிறார்கள். ஊர்மாடுகள் சேர்ந்து அடையும் இடம் மன்று, மந்தை என்று வழங்கப்படுகின்றது. இதற்கு மட்டும் கிடை என்று பெயரிட்டது ஏன் தாத்தா.

பெரு கண்மணிகளே, ஆடுகளை இங்கே மேய்வதற்காகக் கொண்டு வரவில்லை பாதுகாப்பாக அடைத்து வைப்பதற்காகவும் கொண்டு வரவில்லை. நிலத்தில் கிடப்பதற்காகவே–படுத்து எழுந்து சாணமும் நீரும் இடுவதற்காகவே–கொண்டுவருகின்றனர். அதனால் கிடை என்பர்.

செல் : படுத்தே கிடப்பவனை ஒரே கிடையாகக் கிடக்கிறான் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன் தாத்தா.

பெரு : ஆம்; அப்படிக் கூறுவது உண்டு. சிறிது நேரம் படுக்கவிட்டு ஆடுகளை எழுப்புவார்கள். ஆடுகள் எழுந்ததும் எரு விடும்; நீர் விடும். பெயர்த்து வேறோர் இடத்தில் கிடை போடுவார்கள். நீயும் தம்பியும் கிடையைப் பற்றி நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறீர்கள், மிக மகிழ்ச்சி.

செல்வி : செம்மறியாடுகள் பெரும்பாலும் முட்டிக் கொள்வது இல்லை. அமைதியும் அச்சமும் உடையனவாக இருக்கின்றன.

செல் : ஆம் தாத்தா. ஆனால், செம்மறியாட்டுக் கடாவினிடம் அந்த அமைதியைக் காண முடியவில்லை.

பெரு : கடாக்களும் அமைதியில்லாதவை இல்லை. ஆடு, குட்டி ஆகியவற்றைத் தாக்க அது விரும்புவதில்லை. ஒரு கடா மற்றொரு கடா தாக்க வரும் போதுதான் வன்மையாகத் தாக்குகிறது.

செல்வி : சில வேளைகளில் ஒரு கடா தாக்கும் போது அதை எதிர்க்கும் கடா ஒதுங்கி ஓடினால் அதைத் தாக்குவது இல்லை தாத்தா.

பெரு : கடாவிற்குள்ள இயல்பான ஆண்மை என்ன? தனக்கு அஞ்சும் கடாவைத் தாக்குவது இல்லை.

செல் : கடாக்கள் மோதிக் கொள்ளும்போது கொம்பு முரிந்து குருதி கொட்டினால் கூட விடாமல் தாக்கும் என்கிறார்களே தாத்தா.

பெரு : ஆம்! ஒரு போர் வீரனுக்குரிய தன்மை வலிய கடாக்களுக்குப் பல வகையில் அமைந்திருக்கக் காணலாம்.

செல்வி : அப்படி என்ன வகை தாத்தா?

பெரு : ஒத்த வீரனைத் தாக்குதல் உண்மை வீரன் தன்மை! 'பொரு' என்பதற்கு ஒப்பு என்பது பொருள். ஒப்பானவனைத் தாக்குவதே 'போர்' என்பது ஆகும். 'பொரு' என்பதும் போர் என்பதும் ஒன்றே. இக்கடா அத்தன்மையைக் கொண்டிருக்கிறது அல்லவா,

செல்வி : உயிருக்கு அஞ்சாமல் மானம் கருதியே போரிடுவான் வீரன். அதுபோல் மண்டை உடைந்ததாயினும் விடாது சண்டையிடும் கடாவின் தன்மையும் போர்வீரனுக்கு உரியது தானே தாத்தா.

பெரு : ஆம் செல்வி.

செல் : தாத்தா! தாத்தா! அந்தக் கடாக்களைப் பாருங்கள். இரண்டும் தாக்கத் தொடங்கிவிட்டன.

செல்வி : எவ்வளவு வலிமையான தாக்குதல்!

செல் முட்டும் ஒலியே அதன் வன்மையைக் காட்டுகிறதே தாத்தா.

பெரு ஒரு தாக்குத் தாக்கியதும் பின்வாங்கி வருவதைப் பார்த்தீர்களா.

செல் ஆம் தாத்தா இரண்டுமே பின்னே போகின்றன.

பெரு முகத்தைத் திருப்பிப் போகின்றனவா? பார்வையை மாற்றிப் போகின்றனவா?

செல்வி : இல்லையே தாத்தா! ஒரே பார்வை யாகப் பார்த்துக் கொண்டு அல்லவா இரண்டும் பின்னே அடியெடுத்து வைக்கின்றன.

செல் முன்னே பார்வை இருக்க, பின்னே இப்படி நடப்பது கடாவுக்கே அமைந்த பெருமிதம் அல்லவா!

பெரு கண்மணிகளே, பின்வாங்கிய கடாக்கள் எவ்வளவு விரைந்து முன்னேறுகின்றன பார்த்தீர்களா?

செல்வி : பின்னே நடந்த நடை என்ன; தாத்தா, முன்னே பாய்ச்சலாக மாறிவிட்டதே!

செல் அப்பப்பா! பெரிய தாக்குதல் தாத்தா. நம் செவியையே செவிடுபடச் செய்து விடும் போலத் தாக்குகின்றன.

செல்வி : அவ்வாறு வன்மையாகத் தாக்குவதற்காகத்தான் பின்வாங்கின போலும்,

பெரு : நின்ற நிலையில் தாண்டுபவனைப் பார்க்கிலும், ஓடிவந்து தாண்டுபவன் உயரமாகவும், நீளமாகவும் தாண்டுகிறான். அதனை நாம் காண்கிறோம். அந்த அறிவு கடாவுக்கு இயல்பாக அமைந்திருப்பது வியப்பேயாகும். ஓடிவந்து மோதித் தோளாலேயே, சுவரையோ மரத்தையோ வீழ்த்தி

விடுபவர்களும் உண்டு அல்லவா! அந்த வகையைப் பயன்படுத்துகின்றன கடாக்கள்.

செல்வி : தாத்தா இந்தத் தேர்ச்சியை ஆட்டுக் கடாக்களிடமிருந்து தான் மாந்தர் படித்திருக்க வேண்டும். மாந்தர்களிடமிருந்து கடாக்கள் படித்திருக்க மாட்டா. அந்தத் திறமை அவற்றுக்கு இல்லை. சரிதானே தாத்தா.

பெரு : ஆம்! ஆம்! மற்ற உயிர்களின் தன்மைகளையும் செயல்களையும் கண்டு மனிதன் கற்றுக்கொள்ள முடியுமே ஒழிய, மனிதனிடமிருந்து கற்றுக் கொள்ளா.

செல் : அப்படியானால் போர் வீரர்களுக்குக் கடாக்கள் கற்பித்த கலை உண்டு என்று எண்ணத் தோன்றுகின்றது தாத்தா.

செல்வி : கடாக்களைப் போலப் பின்வாங்குதல் வீரர்க்கு அழகாகுமா தாத்தா.

பெரு : அஞ்சிப் பின்வாங்கினால் அழகு ஆகாதுதான். ஆனால் ஆண்மையால் பின்வாங்குவதை அழகில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

செல் : சரி, எதற்காக ஆண்மையாளன் அடங்கிப் போகிறான் தாத்தா?

பெரு : ஆண்மையாளன் அச்சத்தால் அடங்கிப் போவது இல்லை. தகுதியான பொழுதை எதிர்பார்த்தே அமைதி உடையவன் போலக் காணப்படுகின்றான். அவ்வளவே. கடா, மேலும் வன்மையாகத் தாக்குவதற்குப் பின் வாங்குவதுபோல, வீரனும் முழு மூச்சாகத் தாக்குவதற்காக ஒடுங்கியிருக்கிறான்.

“ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.”

செல்வி : ‘தகர்’ என்பது ஆட்டுக் கடா தானே தாத்தா.

பெரு : ஆம்! ஆட்டுக்கடா தான். பொருதகர் என்பது போரிடும், கடா. ‘சண்டைக் கடா’ ‘முட்டுக்கடா’ என்றும் சொல்லப்படும். ஆடு மேய்ப்பவர்கள் சில ஆட்டுக் கடாக்களைத் தேர்ந்தெடுத்து முட்டுதற்குப் பயிற்சி தருவார்கள். அவை முட்டிக்

கொள்வதைப் பார்த்து மகிழ்வார்கள். அதனைப் பொழுது போக்காகவும் கொள்வார்கள். அக்கடாக்களே 'பொருதகர்' ஆகும்.

செல்வி : வீரர்கள் வீரத்தை வளர்த்துக் கொள்வதற்கு வீர விளையாட்டுகளை விலங்குகளிடத்தும் – பறவைகளிடத்தும் கூட–உண்டாக்கி வளர்ப்பது வழக்கமாயிற்றுப் போலும்.

பெரு : என்ன செல்வி, தம்பி உரையாடலிலே கலந்து கொள்ளாமல் பொரு தகரையே பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குத் தகர்ப் போரைப் பார்க்க மிகப் பிடிக்கிறது இல்லையா!

செல்வி : இல்லை தாத்தா! முட்டுக் கடாக்களின் மண்டையில் இருந்து குருதி ஒழுகுவதைப் பார்க்க மனம் தாங்கவில்லை. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் போல் உள்ளது. ஆடு மேய்க்கும் சிறுவர்களில் யாருக்கும் கடாப் போரை நிறுத்தும் எண்ணம் உண்டாக வில்லையே தாத்தா

பெரு : கடா போரிடாது ஓடினால் கூட விடாமல் பிடித்துக் கொண்டுவந்து இரண்டையும் ஒருமுறை மோதச் செய்து விடுவார்கள். மீண்டும் கடாக்கள் புத்துணர்ச்சியோடு போரிடும். அப்பொழுது அவர்கள் ஆரவாரம் செய்து அகம் மகிழ்வார்கள். ஆதலால் அவர்களிடம் கடாப் போரை நிறுத்தும் இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

செல்வி : அவர்கள் பழகிப் போன விளையாட்டு அது. ஆதலால் மோதுதல் கொடுமை அவர்களை மோதுவது இல்லை. பகைநாட்டைத் தாக்கப் போகின்றவர்களும்: இப்படித்தானே இருப்பார்கள் தாத்தா.

பெரு ஆம்! அவர்கள் நாட்டுக்காக உயிரைத் தந்தும் போரிடுவார்களே அல்லாமல், மானம் கெட வாழமாட்டார்கள். பணிந்தவர்க்கு இரக்கம் காட்டுவரே அல்லாமல், பகைவர்க்குச் சிறிதும் இரங்க மாட்டார்கள்.

செல் : உலகம் வாழ்வதற்குப் போரும் வேண்டுமா தாத்தா?

பெரு அமைதி உலகத்தைப் பார்க்க அருளாளர்கள் விரும்புகின்றனர். ஆனால், ஏதாவது ஒருவகையில் போர்

இருந்தே தீரும். போரில்லா உலகைக் காணற்கு இயலாது என்றே கூறலாம்.

செல்வி : போரில்லா உலகைக் காணமுடியாமல் போகலாம். போர், உலக நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வேண்டியதாகவே இருக்கலாம். ஆனால் அழிவுப் போர் உலகைவிட்டு ஒழிந்தே தொலையவேண்டும். ஆக்கப் போர் உலகைவிட்டு ஒழியவேண்டும் என எவராவது நினைப்பார்களா?

பெரு : அறவோர்களும் அருளாளர்களும் அழிவுப் போரை வெறுத்து ஆக்கப் போரையே விரும்புகின்றனர். அதற்காகவே போர் தொடுக்கின்றனர் எல்லா நாடும் எம் நாடு; எல்லா ஊரும் எம் ஊர்; எல்லாரும் எம் உறவினர்; எல்லா உயிரும் இன்புற்று வாழ்தலே எம் நோக்கம் எனப் பெரிதும் முயன்று பாடுபடுகின்றனர். அவர்கள் முயற்சி கைகூடி விட்டால் இவ்வுலகம்தான் தெய்வ உலகம்!

செல் : தாத்தா, மண்ணுலகை விண்ணுலகம் ஆக்கும் வாய்ப்பு மாந்தரிடமே இருக்கிறது. அவர்கள் உணர்ந்து உழைக்க வேண்டும். உழைத்தால் வெற்றிதான்.

செல்வி : நினைப்பது நல்லதாகவே இருக்கட்டும்! நிகழ்வதும் அதுவாகவே இருக்கட்டும்.

பெரு : செல்வியார் மங்கல வாழ்த்துக் கூறியிருக்கிறார். நாமும் அவர் வாழ்த்தை ஏற்று வாழ்த்துவோம்.

செல் : தாத்தா! நீங்கள் தாம் முன்னமே சொல்லியிருக்கிறீர்களே, "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்று.

செல்வி : நினைவாற்றலில் தம்பிக்கு இணை தம்பியேதான் தாத்தா. வடசேரிக்கிழார் தம் குடும்பத்தில் அடுக்கி வந்த துயரைக் கூறிச் சோர்ந்த பொழுதில், எண்ணுவதெல்லாம் உயர்ந்ததையே எண்ணுங்கள் எனத் தேற்றி, "உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்" என்றீர்கள். அதை நினைவு வைத்திருக்கின்றான் தம்பி செல்வன்.

செல் : வடசேரிக்கிழாரைக்கூட நான் மறந்து போனேன். ஆனால் அக்கை மறக்கவில்லை. அவ்வாறானால் யார் நல்ல நினைவாளி தாத்தா?

பெரு : என்னை ஒரு பக்கம் சாய்க்கப் பார்க்கிறீர்கள். உங்கள் விளையாட்டு அழகு தான். விளையாட்டிலே செய்யும் குறும்பும் அழகுதான். உங்களில் ஒருவரைக் காட்டிலும் ஒருவருக்கு நினைவாற்றல் மிகுதியாக உள்ளது. சரிதானே! எனக்கு எதற்கு உங்கள் பொல்லாப்பு.

செல்வி : பெருநாவலர் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு உண்டா?

(செல்வனும் செல்வியும் கைகொட்டி நகைத்து மகிழ்கின்றனர். பெருநாவலர் புன்முறுவல் பூக்கிறார்)

செல் பாடுகிறோம் தாத்தா.

செல் நல்லது.

செல்வி : **ஊக்கம் உடையான் ஒடுங்குவதோ**
ஒடுக்கம் அன்றாம் போரிட்டுத்
செல் **தாக்கப் பின்னே பெயர்கின்ற**
தகரைப் போன்ற தகவாமே!

(தகர்–ஆட்டுக்கடா)

உரையாடல் - 12

(பெருநாவலரும் பேரர்களும் ஒருநாள் மாலையில் காய்கறித் தோட்டம் உள்ள ஒரு பகுதிக்குச் செல்கின்றனர்.)

செல்வி : தாத்தா நாம் வந்துள்ள இடம் தோட்டம்தானே தாத்தா?

பெரு ஆம், தோட்டம்தான்.

செல்வி : இதனைத் 'தோட்டம் துரவு' என்று சொல்கிறார்களே தாத்தா! துரவு என்பது என்ன?

பெரு செல்வி, செல்வா! நீங்கள் ஒவ்வொரு தோட்டத்தையும் கூர்ந்து பாருங்கள் ஒவ்வொரு தோட்டத்திலும் கிணறு இருக்கிறது அல்லவா. சின்ன சின்ன தோட்டம் ஆனாலும் அவற்றிலும் தனித் தனிக் கிணறு அல்லது கேணி இருக்கும். அதனால் 'தோட்டம் துரவு' என்று இணைத்துச் சொல்கின்றனர்.

செல் தோட்டப் பயிர்க்கு அடிக்கடி தண்ணீர் விட வேண்டுமா தாத்தா?

பெரு ஆம்! அதனால்தான் ஒவ்வொரு தோட்டத்திற்கும் ஒவ்வொரு துரவு இருக்கிறது.

செல்வி : துரவு என எதனால் பெயர் வந்தது தாத்தா?

பெரு : துரவு என்றால் துளைத்தல் என்பது பொருள். மண்ணையோ பாறையையோ துளைத்து நீரைப் பெறுவதால் துரவு எனப்பட்டது.

செல் : தாத்தா, இந்த முதியவரைப் பாருங்கள். இவர் தோட்டத்தில் முளைத்துள்ள முட்செடியைப் பிடுங்குகிறார். இது பெரிய மரம் ஆகுமே. நன்றாக வளர்ந்தால் பயன்படுமே.

பெரு : ஆம்! செல்வா, இந்த முட்செடியை விட்டு விட்டால் என்ன ஆகும்?

செல்வி : பெரியது ஆகும்; பக்கமெல்லாம் படரும்; தோட்டம் முழுவதும் விரிந்து தோட்டமே இல்லாமல் செய்துவிடும்.

பெரு : ஆம் ஆம்! அதனால்தான் தோட்டத்துக்குரியவர் அதனை இளையதாக இருக்கும் போதே பிடுங்கி விடுகிறார்.

செல் : முட்செடியைக் கையால் பிடுங்கினால் அதிலுள்ள முள்கள் குத்தி விடுமே தாத்தா.

பெரு : முட்செடி முளைத்து வரும்போதே பிடுங்கிவிட்டால் அதில் முள் இருந்தாலும் அது குத்தாது. அது கிள்ளி விடும்படியான மென்மையாகவே இருக்கும். நாள் செல்லச் செல்லத் தான் வலிமையாகிப் புண்ணாக்கும். தன்மையைப் பெற்று விடுகிறது.

செல்வி : முள்ளுக்கு, இளமையிலே குத்தும் வலிமை இல்லையா தாத்தா?

பெரு : ஆம் தளிர்போலவே முள்கூட வளைந்து கொடுக்கும். குத்தும் வலிமை இல்லாமல் இருக்கும்.

செல் : விளைநிலத்தில் முள் மரம் முளைத்தால் முளையிலேயே கிள்ளி விடுவதுதான் நல்லதா தாத்தா?

பெரு ஆம். அதனால்தான் தோட்டக்காரர் முட்செடியை இளமையிலேயே பறித்துப் போடுகிறார். அதனால் பயிருக்கும் நன்மை; அவருக்கும் நன்மை.

செல் பயிருக்கு என்ன நன்மை தாத்தா?

பெரு முட்செடி பயிருக்கு விடும் தண்ணிரை உறிஞ்சிவிடும். பயிருக்குப் போடும் உரத்தையும் உறிஞ்சிவிடும்; வளர்ந்து பரவி தோட்டத்தை நிழலாக்கிப் பயிர் வளரவிடாமலும் பயன் தரவிடாமலும் கெடுத்துவிடும்.

செல்வி : தோட்டக்காரருக்கு என்ன நன்மை தாத்தா?

பெரு பயிர் தரும் பயனைக் கொண்டுதானே அவர் வாழ்வே நடக்கிறது. அது பயன் தராவிட்டால், அவர் பிழைப்புக்கு வழி என்ன? முட்செடியை வளர விட்டு விட்டால் பயன் இல்லாமை மட்டுமன்று. வளர்ந்து மரமான பின்னர் அதனை வெட்டியழிப்பதும் பெரும் பாடாகிவிடும்.

செல் என்ன பாடு தாத்தா?

பெரு கையால் பறித்தாரே இப்பொழுது; இப்படிப் பறிக்க முடியுமா முள் மரத்தை? வெட்டரிவாள், கோடரி, கடப்பாறை, வாள் இவையெல்லாம் வேண்டும். ஆளும் பலர் வேண்டும். முள்ளையும் அப்பால்படுத்தவேண்டும்; அல்லது எரிக்க வேண்டும்; அந்த நிலத்தை மீண்டும் தோட்டத்திற்குப் பண்படுத்தவும் பெரும்பாடு பட வேண்டும்.

செல்வி : காலத்தில் செய்யாமல் கடமை தவறி விட்டால் இப்படி எவ்வளவு தொல்லைகள்!

செல் இந்த முள்மரம் நமக்கு என்ன சொல்கிறது தாத்தா?

பெரு அருமையாகக் கேட்டாய்! சொல்லா மரமும் சொல்கிறது! பேசா மரமும் பேசுகிறது! அதற்கென அமைந்த அமைதி மொழியாலேயே நமக்குப் பலப்பல சொல்கிறது. எண்ணிப்பார்ப்பவர்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் ஏவுகின்றது.

செல்வி : அது சொல்வதும் ஏவுவதும் எங்களுக்கு என்ன தெரியும்? உங்கள் கூர்மையான காதுகளுக்குத்தானே அதன் பேச்சுக் கேட்கின்றது. அதைச் சொல்லுங்கள்.

பெரு குழந்தைகள் காதுகள் தாம் கூர்ங் காதுகள்; அவர்களுக்குத்தான் பேசாதனவெல்லாம் பேசும்; கேளாதன வெல்லாம்கேட்கும்; என்னைப்போன்ற முதியவர்களும் உங்களைப் போன்ற இளையவர் காதுகளைப் பெற்றால் தான் அவற்றை அடைய முடியும்.

செல் அது இருக்கட்டும் தாத்தா. முள்மரம் நமக்குச் சொல்வதைச் சொல்லுங்கள்.

பெரு இளமையாக இருக்கும்போதே முள் மரத்தை அழித்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் வளர விட்டு விட்டால் பின்னர் முதிர்ச்சியடைந்து தன்னை வெட்டுபவன் கையை அது வருத்தும் என்னும் செய்தியை அறிந்து கொள்ளச் சொல்கின்றது.

செல் இதற்குரிய பாட்டு என்ன தாத்தா?

பெரு **“இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
கைகொல்லும் காழ்த்த இடத்து”

பெரு ‘காழ்த்த இடத்து’ என்றால் என்ன தாத்தா?

பெரு காழ்த்தல் என்றால் முற்றுதல், வயிரம் ஏறுதல் என்று பொருள். காழ்த்த இடத்து என்றால் முதிர்ந்துவிட்ட பொழுது என்பது பொருளாகும்.

செல் மரத்துக்கு மட்டும்தானா இச்செய்தி? மாந்தருக்கு இல்லையா?

பெரு மாந்தருக்கு இதனால் பெரிய செய்தி உண்டு. மாந்தருக்குத் தம் உள்ளத் துள்ளேயே முள்மரங்கள் போன்ற தீய தன்மைகள் உண்டாகி விடுகின்றன. அவற்றைத் தோன்றுதல் இல்லாமல் விழிப்பாக இருந்து கொள்ளுதல் வேண்டும். ஒருவேளை தீயவர் கூட்டுறவாலும் சூழ்நிலையாலும் உண்டானாலும் அதனை வளர விடாமல் உடனே அழித்துவிட வேண்டும். இல்லையானால் அந்தத் தீய முள்மரங்கள் பெரிதாகித் தன்னை வளர்த்தவனை அழிக்கும். குடும்பத் தையும் அழிக்கும்; தொடர்பினர்களையும் அழிக்கும்; மக்கள் கூட்டத்திற்கே பெரிய கேடாக அமைந்துவிடும்.

செல்வி : மிக நல்ல செய்தி தாத்தா. தீய காற்று பட்டால் மூக்கை அடைப்பது போல், தீய செயல்களைக் கண்டால் நெஞ்சை அடைத்துக் கொள்ள வேண்டும்.

செல் தூசி தும்பு காற்றில் பறந்து வரும் போது கண்ணை மூடிக்கொள்வது இல்லையா? அதுபோல் தீயவற்றைக் காணும்போது நெஞ்சத்தை மூடிக் கொள்ள வேண்டும்.

பெரு மிக நன்றாகச் சொன்னீர்கள் மகிழ்ச்சி.

செல்வி : உங்கள் பாராட்டுக்கு மகிழ்ச்சி தாத்தா.

பெரு உங்கள் பாட்டைச் சொல்லவில்லையே!

செல்வி : **முளைக்கும் போதே முட்செடியை**
முயன்று வெட்டி அழிப்பதுபோல்

செல் **கிளைக்கும் போதே தீமைகளைக்**
கிள்ளி எறிதல் முறையாமே!

பெரு இரட்டையர்களே இனிது வாழி!

இருவரும் :பெரு மூதாளரே பெருக வாழி!

❖ ❖ ❖

6. திருக்குறள் அறிமுகம்

✦ திருக்குறள் என்பதன் பொருளை விளக்குக,

குறள் யாப்பால் அமைந்த நூல் **'குறள்'** என்றே வழங்கப்பட்டது. அதன் அருமையும் பெருமையும் கருதிய பின்னவர்கள் **'திரு'** என்றும் அடைமொழியைச் சேர்த்துத் **திருக்குறள்** என்றனர்.

✦ திருக்குறளுக்குள்ள ஒப்பிலாத் தன்மையைக் கூறுக.

திருக்குறள் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூல். அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் இயற்றப்பட்ட நூல். ஆயினும், மொழி, இனம், சமயம், நிறம், குலம் என எதுவும் சார்பாகக் கொள்ளாமல், உலகவர் அனைவர்க்கும் பொதுவாம் நூலாக இயற்றப்பட்டதே தனிப் பெருஞ்சிறப்பாகும். அதனால், மக்களாகப் பிறந்த அனைவருக்கும் பொதுவாம் உலக நூலாகத் திகழ்கிறது.

✦ திருக்குறளை அறநூல் என்று வழங்குவது ஏன்? விளக்குக!

திருக்குறளின் முதல்பால் அறத்துப்பால்; பொருளிலும் காமத்திலும் அறமே மொழிகின்றார். அன்றியும் புறநானூற்றில் ஆலத்தூர் கிழார் என்னும் சான்றோர், "செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென அறம் பாடிற்றே" (34) என்று திருக்குறளை அறம் என்றே குறிப்பிடுகிறார். அவர் எடுத்தாளும் குறள்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பதாம் (110)

மேலும் அறத்தின் அடி மூலத்தை ஆய்ந்து அதன் இலக்கணத்தை,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்"

என்று கூறுகிறார். அவ்வதிகாரப் பெயரே அறன் **வலியுறுத்தல்** என்பதாம்.

✦ திருக்குறளுக்கு முப்பால் என்று பெயர் ஏற்பட்டது ஏன்? அது தமிழ் நெறி வழியதா?

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களாக (பகுதிகளாக) நூல் அமைந்தமையால் முப்பால் எனப்பட்டது.

ஆசிரியர் தொல்காப்பியர், "அறம் முதலாகிய **மும்முதற் பொருள்**" என்றும் "இன்பமும் பொருளும் அறமும்" என்றும் முப்பால் முறையைக் கூறியுள்ளார்.

புறநானூற்றிலும்,

"அறமும் பொருளும் இன்பமும்" என முதுகண்ணன் சாத்தனாரும் (28)

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉவும் தோற்றம் போல" எனக் கோவூர் கிழாரும் (31)

கூறியவற்றால் முப்பால் நெறியே **தமிழ் நெறியாதல்** விளங்கும். அதனால் திருவள்ளுவர் தமிழ் நெறியில் முப்பால் வகுத்தார் என்க.

✦அறம் பொருள் இன்பம் எனப் பிறர் கூறினாலும் திருவள்ளுவர் அறம் பொருள் காமம் என்று முப்பால் பெயர் சூட்டியது ஏன்?

அறம் பொருள் இன்பம் என முறைவகுத்த தொல்காப்பியர்,

"இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் பொதுவானது" என்றார்.

ஆனால் திருவள்ளுவர், ஆறறிவுடைய மாந்தர்க்கே நூல் செய்தலால், மற்றைய, உயிர்கள் கொள்ளும் இன்பம் போல் இல்லாமல், என்றும் வளர்வதாய் நிலை பெறுவதாய் முறைமையுடையதாய் அமைந்த **நிறை இன்பத்தைக் காமம்** என்றார். ஏனெனில், தொல்காப்பியரே **"கமம் நிறைந்தியலும்"** என்றார் ஆதலால், கமம் – காமம் ஆயிற்று.

✦ திருவள்ளுவர்க்கு முதற்பாவலர் என்னும் பெயர் ஏற்பட்டது ஏன்?

திருவள்ளுவர் முதன்முதலாக இருந்த பாவலர் அல்லர். அவர்க்கு முன்னால் பல்லாயிரம் பாவலர்கள் இருந்துளர். ஆனால்,

அவர் பாடிய **வெண்பா** பிற்காலத்தவரால் **முதற்பா** எனப்பட்டது. வெண்பாவில் முதற்பா, ஈரடி வெண்பாவாம் குறட்பா ஆகும். அப் பாப் பாடுதலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் விளங்கியவர் திருவள்ளுவர். ஆதலால் 'முதற்பாவலர்' என வழங்கினர்.

✦ 'கடவுள் வாழ்த்து' என்னும் இரண்டு சொற்களும் திருக்குறளிலேயே இல்லை. ஆதலால் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரப் பெயர் தகுமா?

தகும். திருவள்ளுவர் தொல்காப்பிய வழியில் அறநூல் பாடியவர். அத் தொல்காப்பியத்தில்,

கொடிநிலை கந்தழி வள்ளி என்னும்
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே"

என வருவதால் தகும். மேலும், **கொடிநிலை** என்பது வான் சிறப்பு (மின்னல் கொடி), கந்தழி (பற்றற்ற ஒன்று, கந்து அழி) என்பது நீத்தார் பெருமை, **வள்ளி** என்பது அறன் வலியுறுத்தல்.

இவற்றின் முற்படக் கடவுள் வாழ்த்து வரும் என்று கூறியபடி முதல் நான்கு அதிகாரங்களை அமைத்தார். அவற்றைப் பாயிரம் என வழங்கினர். இந்நான்கு அதிகாரங்களும் இல்லாமல் எவ்வேடும் கிடைத்தில.

✦ கடவுள் வாழ்த்தில் எக் கடவுள் பெயரும் இல்லையே ஏன்?

வள்ளுவர் காலத்திலேயே கடவுள் பெயர்கள் பல இருந்தன. **வேதியர், சமணர், புத்தர்** ஆகிய சமயத்தார் மோதிக் கொண்டனர். ஒருவரை ஒருவர் வாதிடவும் அழிக்கவும் ஆயினர். அதனால், எக்கடவுள் பெயரும் இல்லாமல் உயர்ந்த பண்புகளையே கடவுள் தன்மையாகக் கொண்டு பாடினார்.

முதல்வன், பகவன், இறைவன் என்பனவும் பொதுமைப் பெயர்களே. சமயம்-கடவுள் பெயரால் உலகம் துன்புறவோ அழியவோ கூடா என்னும் சால்பினால், கடவுள் பெயர் எதனையும் திருவள்ளுவர் குறிப்பிடவில்லை.

✦ ஒழுக்க நூல் அல்லது அறநூலுக்கு வான் சிறப்புக் கூறல் வேண்டுமா?

'வேண்டும்' என்பதால் தான் வள்ளுவர் கூறினார். வான் மழையாகிய ஒழுக்கு இல்லையானால் மக்களுக்கு ஒழுக்கு (ஒழுக்கம்) ஏற்படாது என்பதை,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையாது ஒழுக்கு"

என்று அவரே கூறினார். (20)

✦ பாயிரத்தை முடித்து, இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு என்பவற்றை வள்ளுவர் வரிசைப்படுத்தியது ஏன்?

இல்வாழ்வான் என்பதன் அடையாளம் இல்லாளுமிருந்தால் தான் கூடும். இருவர் இல்வாழ்வும் வழிவழியாக உலகம் சிறக்கத்தக்க மக்களைத் தருதற்கு என்பதற்கே இவ்வாறு வரிசைப்படுத்தினாராம்.

✦ வாழ்க்கைத் துணை என்பது பெண்ணுக்குப் பெருமை தருமா?

வாழ்க்கைத் துணை என்பதால் பெண்ணுக்கோ ஆணுக்கோ பெருமை சிறுமை இல்லை. 'கடவுள் துணை' என்றால் சிறுமையாகுமா?

இல்வாழ்க்கை முதல் இரண்டு குறள்களிலும் கணவனே இல்வாழ்க்கைத் துணை என்பதை "இல்வாழ்வான் என்பான் துணை" என்கிறாரே. 1234ஆம் குறளில் தலைவி, தலைவனைத் "துணை" என்கிறாரே? அப்படியானால் அவனுக்கு இழிவா அது "ஒருவருக்கு ஒருவர் துணை" என்பதே ஆக்கமான இல்லறம்!

✦ மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கருதுகிறார்?

மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை முத்தமிழ் போல மூவகையாகக் கூறுகிறார்.

– மக்கள் என்பார் அறிய வேண்டியவற்றை யெல்லாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

– பண்பு நலங்கள் எல்லாமும் அமைந்தவராய் பழிப்புக்கு இடமில்லாதவராய் இருக்க வேண்டும்.

– உலகத்து வாழும் மக்களுக்கும் மற்றை உயிர்களுக்கும் நலம் செய்யும் மாந்த நேய – ஆன்ம நேயப் பிறப்பாகச் சிறக்க வேண்டும். என்பவையே அவை,

✦ **தாய் தந்தையர் தம் மக்களிடமிருந்து எதிர்பார்ப்பவை எவை?**

"சான்றோர்கள் பாராட்டும் மகவாகத் தம் மகவு விளங்க வேண்டும், அதனைச் செவியாரக் கேட்டு மகிழ வேண்டும்" எனத் தாய் எதிர்பார்ப்பார்,

"இவ்வளவு சிறந்த மகவைப் பெறுதற்கு இவர் தந்தை என்ன தவம் செய்தாரோ" என்று உலகவர் பாராட்டும் பேற்றைப் பெறவேண்டும் எனத் தந்தை எதிர்பார்ப்பார்.

✦ **பாராட்டத்தக்க பிள்ளையாக இருந்தால் மட்டும் போதுமா? பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் உதவிகளையும் செய்ய வேண்டுவதில்லையா?**

சான்றோரும் உலகோரும் பாராட்டும் பிள்ளை, பெற்றோர்க்கு வேண்டும் எல்லாமும் செய்து அவர்களும் பாராட்டவே விளங்குவார் என்பதையும் வள்ளுவரும் அறிவார்; நாமும் அறிவோம்!

தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்னும் குறளிலேயே திருவள்ளுவரும் வெளிப்படக் கூறிவிட்டார்.

✦ **இல்லறத்தைக் கூற வரும் வள்ளுவர் அன்புடைமையில் தொடங்குவது ஏன் ?**

அன்பு என்பது தனக்கென மட்டும் வாழாமல், பிறர்க்கென வாழ்தலே வாழ்வுச் சிறப்பு என்பதன் பயிற்சிக் களமாகும்.

ஒருவன் தான் உண்டு, தன்வேலை உண்டு என்று இருந்தவன். அவனுக்குத் திருமணமாகிறது. அப்பொழுது தன்னோடு அவளையும் இணைத்துக் கொண்டு **தன்** வாழ்வைத் தம் வாழ்வாக விரிவு செய்கிறான்.

அவளும் அவ்வாறே **தான்** என வாழாமல் **தாம்** என வாழும் வாழ்வாக விரிவாகின்றாள். பின்னர் இருவர் அன்பும் இணைய ஒரு மகவைப் பெறுகின்றனர். தாய் தந்தையாகிய இருவரும் தம்மினும் தம்மகவின் நலத்தில் அக்கறைப் பட்டுக் கடமைகளை விரும்பி விரும்பிச் செய்கின்றனர்.

பின்னர்ப் பெற்றோர், உற்றோர், விருந்து எனச் சின்ன அலைவட்டம் பெரிய அலைவட்டமாக விரிவதுபோல் விரிகின்றனர். இதற்கு மூலமாகிய பண்பு **அன்பு!** ஆதலால், "அன்பின் வழியது உயிர்நிலை" என்றும், "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றும், அன்புடைமையில் விளக்கினார் திருவள்ளுவர்.

✦ அன்பு விரிவாகும் வகையை எவ்வாறு காட்டுகிறார் திருவள்ளுவர்?

அன்பு விரிவாகும் வகையை விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறை (பொறுமை) உடைமை, ஒப்புரவறிதல், ஈகை என்பவற்றால் விரித்துரைக்கிறார்.

✦ அன்பு வாழ்வு சிறக்கவும் விரியவும் தடையாவன எவை எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்?

ஒழுக்கம் கெடுதல், பொறாமைப்படுதல், பிறர் பொருளை விரும்புதல், புறங்கூறுதல், பயனில்லாவற்றைப் பேசுதல், தீய செயல்களைச் செய்ய அஞ்சாமை, என்பவை எல்லாம் அன்பு வாழ்வைக் கெடுத்து ஒழிப்பவை என எடுத்துக் கூறி அவற்றைவிலக்கி அன்பைப் பெருக்க வழிகாட்டுகிறார்.

✦ அழியும் உலகில் அழியாமல் இருக்க வள்ளுவர் காட்டும் வழி என்ன?

ஒவ்வொருவருக்கும் உடல்கள் இரண்டு உண்டு. உடல் எனினும் உடம்பு எனினும் ஒன்றே. அழியும் உடல் ஒன்று: அழியா உடல் மற்றொன்று. அழியும் உடலைக் கொண்டே அழியா உடலைப் பெறவேண்டும். அழியா உடல் என்பது புகழ் உடல். கண்காணத்

தோன்றிக் கண் காண மறையும் உடல், பூத உடல் எனப்படும். இதனைப் புகழ் அதிகாரத்தில்,

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்”

என்கிறார் (233).

✦ அறத்துப்பாலில் இல்லறத்தைக் கூறி அதனை அடுத்தே துறவறத்தைக் கூற வள்ளுவர் எடுத்துக் கொண்டது ஏன்?

தமிழர் வாழ்வியல் நெறி, இல்வாழ்வு சிறக்க நடத்தியவர், மக்களுக்கும் சுற்றத்தார்க்கும் வழிகாட்டியாக விளங்கும் **இல்லறத் துறவினராகத் திகழ வேண்டும்** என்பதாம். அதனைத் தொல்காப்பியர் கூறினார் என்பதைத் **தொல்காப்பியர் நூலில்** அறியலாம். அவர் வழியில் நூலியற்றும் திருவள்ளுவர், இல்லறத்தொடு இணைத்துத் துறவறத்தைக் கூறி இரண்டையும் சேர்த்து, **அறத்துப்பால்** என்றார்.

✦ துறவறவியலைத் தொடங்கும் திருவள்ளுவர் அருளுடைமை என்னும் அதிகாரத்தை முன்வைப்பது ஏன்?

அன்பு என்பதே உலக நேயமாகும் உயர்பொருள். அதனினும் உயர்பொருள் அருள் ஆகும். இப்பொருள்கள் நுண்பொருள்களாம் பண்புப் பொருள்கள்.

அன்பைத் தாயாகக் கூறும் திருவள்ளுவர், அத்தாய் பெற்றபிள்ளையாக அருளைக் கூறுகிறார். அது,

“அருளென்னும் அன்புஈன் குழவி” (குழந்தை) என்பது. அன்பு, தனக்குத் தொடர்புடையவர்களுக்கு உருகிநின்று உவந்து உதவும்.

அருளோ, அத் தொடர்பு இலாதவர்க்கும் மற்றை ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள எவ்வுயிருக்கும் நலம் செய்யும் பெருந்தகைமையாகித் தெய்வ நிலையாக விளங்கும். ஆதலால், பற்றற்ற துறவியரைக் கூறவரும் வள்ளுவர், எல்லா உயிரும் இன்புற்று வாழத் தம்மையும் வழங்கும் அருளுடைமையை முன்வைத்துத் தொடங்கினார்.

"பொருளொடு புணர்ந்த பக்கம்' எனவும்
அருளொடு புணர்ந்த அகற்சி எனவும்

தொல்காப்பியர் இணைத்துக் கூறியமை எண்ணத் தக்கதாம்

✦அருளுடைமை சிறக்கும் வகையைக் கூறுக.

தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்தல், அவாவை அறவே அகற்றுதல் என்பவை அருள் சிறந்தோங்கச் செய்வனவாம்.

✦அருளுடைமைக்குத் தடையாம் குணங்களாக அறிவன எவை?

அருளுடைமைக்குத் தடையாக அமைந்தவை புலால் உண்ணல், போலித் துறவியாக வாழ்தல், மதுமயக்கில் இருத்தல், களவு செய்தல், வெகுளி கொள்ளல், பிறஉயிர்க்குக் கொடுமை செய்தல், கொலை புரிதல், நிலைபெறா வாழ்வை நிலைபெற்ற வாழ்வாக நினைத்தல் என்பவை அவை. அருளுடைமைக்குத் தடையாக அமைவனவாதல் அன்றி நீங்காப் பழி சேர்ப்பனவுமாம்.

✦தவம், வாய்மை என்பவற்றின் பொருள்கள் எவை? விளக்குக,

தவம் என்பது, அவரவர்க்குரிய கடமைகளைச் செவ்வையாகச் செய்தலும், தம் துயர் தாங்கிக் கொண்டு, பிறஉயிர்களுக்குத் துயர் செய்யாமையுமாம்.

வாய்மை என்பது, எவர்க்கும் எத் தீமையும் வாராத சொல்லைச் சொல்லுதல் ஆம். பிறர்க்கு நன்மை பயக்குமாயின் அப்பொழுது சொல்லும் பொய்யும் கூட வாய்மைச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்படும்; என்றாலும், பொய், மெய்யாகிவிடாது. பொய், பொய்யேயாம்.

✦அவாவறுத்தலை விளக்கி அதன் பயனைக் கூறுக.

அவா என்பது ஆசை. ஆசையை அறவே அகற்றுதல் அவாவறுத்தலாம். தனக்கு வேண்டியவற்றையும் ஒன்றொன்றாக வேண்டா என்று ஒதுக்கி எதுவும் வேண்டியதில்லை என அகற்றிய நிலை பேராப் பெருநிலை எனப்படும் வீடுபேறு ஆகும். ஒடுங்கி என்பதும் அது. அவர்கள் வழிபடப்பட்ட இடம் ஒடுக்கம் எனப்பட்டது. இதுபிற்கால வழக்கமாகும்.

✦ ஊழ் பற்றிய வள்ளுவர் கருத்தென்ன? விளக்குக.

ஊழ் என்பது உலகத்து இயற்கை என்பது வள்ளுவப் பொருள். உலகத்து இயற்கையாம் மழை, வெயில், காற்று, தீ, வெளி முதலியவை எல்லார்க்கும் பொதுவானவை. ஆக்கமும் கேடும் செய்பவை, ஆழிப்பேரலை, எரிமலை, கக்கல், சுழல்காற்று, நிலநடுக்கம் என்பனவெல்லாம் ஊழ் என்பதே. இல்லறத்தார், துறவறத்தார், பொதுமக்கள், ஆள்வோர் என எவரும் அறிந்து கொண்டு வெல்ல வேண்டியவை என்பதும், வெல்ல முடியா வகையில் ஊழ் வெல்லவும் செய்யும் என்பதும் வள்ளுவர் கூறுவனவாம்.

✦ பொருட்பால் தொடக்கமாக இறைமாட்சி என்பதை வள்ளுவர் வைத்தது ஏன்?

வீடு சிறப்பாக இருக்க வேண்டும் என்ற வள்ளுவர், வீட்டின் தொகுப்பாம் ஊரும் நகரும் நாடும் நன்றாக இருக்க வேண்டும் என்றால் நாட்டை ஆளும் அரசு செவ்வையுடையதாக அமைந்திருக்க வேண்டியது கட்டாயமாகும் எனக் கருதி அறிவுறுத்தும் வகையில் பொருட்பால் முதல் அதிகாரமாக இறைமாட்சியை வைத்தார்.

✦இறைமாட்சியை அடுத்து வள்ளுவர் கல்வியைக் கூறியது ஏன்?

ஒரு நாடு மதிப்புப் பெறுவதும் நலம் பெறுவதும், ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர் ஊர்தோறும் இருப்பதால்தான் ஏற்படும். அதற்குக் கல்வி கட்டாயம் தேவை. கல்லாமையை இல்லாமை ஆக்கி அறிவுடைமையைப் பெருக்கி ஆக வேண்டும். அதுவே நாட்டின் நல்லிலக்கணம் என்பார் போல் **கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை** என்பவற்றைத் தொடுத்து வைத்தார்.

பொருட்பாலில் அறிவுடைமையை அடுத்துக் **'குற்றங்கடிதல்'** என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்தது ஏன்?

அறிவுடையவரும் ஆள்பவரும் குற்றமற்றவராக இருக்க வேண்டும். குற்றமற்றவர்களாக அவர்கள் இருந்தால்தான் மக்கள் செய்யும் குற்றத்தைக் கண்டு கண்டிக்கவும், தண்டிக்கவும் தகுதியுடையவர் ஆவர். அறிவுடையவர் குற்றமற்றவராக இருந்தால் அல்லாமல் ஆள்வோர் செய்யும் குற்றங்களைக் கண்டித்துக் கூறித் திருத்த முடியாது

அல்லவோ ஆதலால், நாட்டுநல அடிப்படை குற்றமற்றதாக இருக்க நெறி முறைகாட்டிய அருமையது இதுவாம்.

இதனாலேயே பெரியாரைத் துணைக் கோடல், சிற்றினம் சேராமை என்பவற்றையும் அடுத்து வைத்தார் என்க.

✦ திருக்குறள் 'செயல்நூல்' என்பதை விளக்குக.

திருக்குறள் கற்பது, தம் மனமாசு அறுதற்குக் கற்று, அதன்படி நிற்க (வாழ) வேண்டும் என்பதற்கே ஆம். ஒப்பிக்கவோ மேற்கோள் காட்டவோ மட்டும் வந்த நூல் அன்று. வாழும் நெறி காட்ட வந்த நூல். அதனால், தெரிந்து செயல் வகை, வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்பவற்றை வரிசைப்படுத்தி உரைத்தார்.

மேலும் **ஆள்வினையுடைமை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை** என்பவற்றையும் வைத்தார்.

தெரிந்து செயல்வகை (47) :

நாம் தெளிவாகத் தெரிந்து விட்டோம்; இனித் தெரிய வேண்டியதில்லை என்று எண்ணாமல், எதைச் செய்யப் போகிறோமோ அதை நம்மிலும் தெளிவாகத் தெரிந்து செய்கின்றவர்களை அணுகி அவர்கள் சொல்லும் கருத்தையும் உள்வாங்கிக் கொண்டு செய்வதானால் செய்தற்கு அரியதும் மிக எளிதாகச் செய்து முடிக்கப்படும் (462).

வலியறிதல் (48) :

ஒருவன் தான் செய்யக் கருதிய செயலின் வலிமையையும் அதனைச் செய்தற்குரிய தன் வலிமையையும், அச்செயலைச் செய்யத் தடையாக நிற்பார் வலிமையையும், தனக்கும் அவர்க்கும் துணையாக வருவார் வலிமையையும் நன்றாக ஆராய்ந்து செய்தால் செய்தற்கு அரியதையும் எளிதாகச் செய்து முடித்துவிடலாம் (47).

காலம் அறிதல் (49) :

ஒரு செயலைச் செய்து முடித்தற்குத்தக்க கருவியும் காலமும் வாய்த்து விட்டால் செய்தற்கு அரிய செயல் என்பது எதுவும் இல்லை(483.

கிடைத்தற்கு அரிய வாய்ப்புக்கிட்டிய போதில் அதனைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொண்டு பிறர் செய்தற்கு அரிய செயல்களைத் தான்செய்து முடித்தல் செயல்திறமாகும்.

இடன் அறிதல் (50) :

குறைவில்லாமல் எண்ண வேண்டும் வகைகளில் எல்லாம் எண்ணித் தெளிவான முடிவு கொள்ள வேண்டும்; செய்து முடித்தற்குத் தக்க இடம் தேர்ந்தறிய வேண்டும் முடித்தற்குத் தக்க துணை இயல்பாக வாய்த்தால் கொள்ளல் நலம்.

ஆனால் இவ்வெல்லாவற்றிற்கும் மேலாக அஞ்சாத துணிவு தனக்கு வேண்டும். வேறு துணை வாய்க்காமல் போனாலும் உறுதியாக வெற்றி கொள்ளலாம்(497).

தெரிந்து தெளிதல் (51)

ஒரு செயலைக் குறைவின்றி நிறைவேற்றுதற்குத் தக்க துணையை அறிந்து கொள்ள வேண்டும். அறியாமல் தேர்ந்து துணையாக்கி, தனக்குத்தானே தொல்லையை ஆக்கி கொள்ளல் ஆகாது. துணைக்குத் தக்காரைத் தெரிவதற்கு அவர் அறவழியில் தவறாதவர்தாமா, பொருட்பற்றுக் காரணமாகப் புறவழிகளை நாடக் கூடியவரா, இன்ப வழிகளில் எளிமையாக ஈடுபடக் கூடியவரா, தம் உயிர்க்கு வரும் இடையூறு துன்பம் இறப்பு என்பவற்றை எண்ணி அஞ்சுபவராய் உரிய நேரத்தில் கைவிட்டுச் செல்லாதவரா என்பற்றையெல்லாம் தெரிந்து துணையாகக் கொண்டால் எடுத்த செயல் மாறா வெற்றி தருவதாகும்(50).

தெரிந்துவினையாடல் (52) :

எடுத்துக் கொண்ட செயலைக் குறைவறச் செய்து முடிக்கத்தக்கவனா என்பதை ஆராய வேண்டும். செய்யத் தக்கவன் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவனால், அச்செயல் செய்து முடிக்கத் தக்கது தானா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தக்கவனாகவும் அமைந்து, முடிக்கத்தக்க செயலாக இருந்தாலும், காலத்தொடு பொருந்தி முடியத் தக்கதுதானா என்பதையும் எண்ணிச் செய்தல் வேண்டும் (516).

ஆள்வினையுடைமை (52) :

இச்செயல் என்னால் செய்ய முடியுமா? செய்ய முடியாது! என்று ஐயப்படுதலோ, முடிந்த முடிவோ கொள்பவர் ஆள்வினையுடையவர் ஆகார். எம்மால் செய்து முடிக்க முடியும்; எம்மினும் வலிமை குறைந்தவரும் செய்து வெற்றி பெற்றுள்ளனர்; எம்மால் முடியாது என்றால் எவராலும் முடியாது என்னும் துணிவுடையவராய் இருந்தால் எடுத்த செயல் நிறைவாக முடிந்தே தீரும் துணிந்தவர் முயற்சி, வெற்றி தராமல் போகவே போகாது (518).

வினைத்தூய்மை (55) :

பெற்றதாயைப் பேணிக் காக்க வேண்டியது மக்களின் பிறவிக்கடமை எனினும் தம்மைப் பெற்றஅவ்வயிறு வறுமையால் பசித்துக்கிடக்கும் நிலைமையைத் தாம் கண் நேரில் கண்டால் கூட அதனைத் தீர்ப்பதற்காக அத்தாய்க்குப் பெருமை சேராத சிறுமை வழியில் பொருள் தேடி அவள் பசியைத் தீர்க்க நினையா திருப்பதே நன்மக்கள் நயத்தக்க கடமையாம். ஏனெனில் சான்றோர் மதிக்கும் பிள்ளையாகத் தன்பிள்ளை இருக்க வேண்டும் என்று விரும்பியவள் அவள் (656).

வினைத்திட்பம் (67) :

ஒரு செயலைச் செய்யுங்காலும், நிறைவுறச் செய்து முடிக்கும் காலும் எவர் இதனைக் கண்டு கொள்வார். எப்படிப் பாராட்டிப் போற்றுவார் என்று எண்ணாமல் சிறப்புறச் செய்து முடிக்க அச்செயல் வீறு, தானே தக்கோரையும் ஆள்வோரையும் தன்பால் ஈர்த்துப் பெறற்கரிய பேறெல்லாம் பெறச் செய்தல் உறுதியாம் (665).

வினைசெயல்வகை (68) :

ஒரு செயலைச் செம்மையாகச் செய்து முடிக்கத் துணிந்தவன் அச்செயல் சீர்மையுறமுடியத் தக்கவகையையும், அதனைச் செய்யுங்கால் வந்து முட்டும் தடை இடையூறு ஆகியவற்றையும் அவற்றை நீக்க வல்ல வகையையும், அச்செயலை அரைகுறை இல்லாமல் முடித்தால் அம்முடிவில் அடையப் போகும் நன்மைகளையும் தீர எண்ணிச் செய்தல் வேண்டும் (676).

இவை முற்கூறிய பத்து அதிகாரங்களில் இருந்தும் தேர்ந்து தொகுத்த ஒரு சிறு தொகுப்பாகும் இத் தொகுப்பே முழுதுறும் அதிகாரப் பொருளாகிவிடாது என்பது வெளிப்படை

✦ **பொருட்பால் முதற்பாடலில் கூறிய ஆறு உறுப்புகள் எவை? அவற்றின் கட்டாயத்தைச் சுருங்கக் கூறுக.**

இறைமாட்சிக்கு - அல்லது இறையாண்மைக்கு "**படை, குடி, கூழ்(பொருள்), அமைச்சு, நம்பு, அரண்** என்னும் ஆறும்" சிறப்பாக அமைய வேண்டும் என்றார் (381) திருவள்ளுவர்.

நாடு காவல் என்பது தலைப்பட்டது. அஃது ஆள்வோரை மட்டும் சார்ந்தது இல்லை; அந்நாட்டு வாழ்மக்கள் அனைவரையும் சார்ந்ததாம். அதனால் படை, குடி என்றார். **படை குடி** என்பதை முன்பின் மாற்றின், **'குடிபடை'** என்றாகும்.

படைகளே குடிகளாகவும், குடிகளே படைகளாகவும் இருந்த காலநிலை அது. ஒவ்வொருவரும் படைப்பயிற்சி பெற்றிருத்தலும் போர் வந்த போது வீட்டுக்கு ஓராள் போருக்குப் போதலும் வழக்கமாக இருந்தது. **'கூழ்'** என்பது உணவுப் பொருள் என்பதை மட்டும் குறியாமல் பல்வகைப் பொருளையும் குறித்ததாம். ஆள்வோர் கண்ணென விளங்கியவர் **அமைச்சர்.** அதனால் அவரை அடுத்து வைத்தார். தீய அமைச்சன் - உட்பகை கொண்ட அமைச்சன் - ஒருவன் இருப்பது, எழுபது கோடி பகைவர்க்கு ஒப்பு என்று எச்சரிக்கை செய்தார். அமைச்சே **ஒற்றும் தூதும்** ஆகிய கடமைகளையும் கவனித்ததால் அதிகாரம் 'தூது' எனவும் 'ஒற்று' எனவும் வைத்தாலும், உறுப்பாகத் தனியே எண்ணினார் அல்லர்.

ஆள்பவர் சொல்லியதைச் சொல்லியவாறு சொல்லி ஆக்கப் படுத்துதல் அல்லாமல் மாறுபாடு ஆக்கிவிடக்கூடாது என்பதால் 'தூது' என்னும் பெயரும், வழிமொழிவான் என்னும் விளக்கமும் தந்தார்.

ஒற்றனாவான் துறவிவேடங் கொண்டு அறிதலையும் சுட்டினார். துறவியரை மக்கள் மதித்தலும் அவர்மேல் ஐயுறவு கொள்ளாமையும் கருதியது அதுவாம். ஆள்வோர் குடும்பம் சுற்றம் என்பாரையும் ஒற்றர் ஆராயத் தவறக் கூடாது; தீராத் தீமை அரசுக்கு அவர்களால்தான் உண்டாகும் என்னும் பட்டறிவால் சுட்டியது அதுவாம்.

நட்பு என்பது போர்க்காலங்களில் உதவியாம் நாடு எது பகையாம் நாடு எது என்பது அறிதல் கருதியதாம்.

அரணாவது கோட்டை, அகழ், காவல்காடு முதலியவையாம்.

இவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுவதே பொருட்பாலின் பெரும்பகுதியாம்.

✦ பொருட்பாலில் கூறியவை, அறத்துப்பாலில் கூறப்பட்ட இல்வாழ்வர், துறவர் முதலோர்க்கு இல்லையா? விளக்குக.

எப்பாலில் எவ்வதிகாரத்தில் கூறியனவும் மக்களாகப் பிறந்த அனைவர்க்குமே ஆம். ஆயினும், அவர் அவர்க்குக் கட்டாயமாகவும், மற்றவர்களுக்குப் பொதுவாகவும் கூறியதாம் அதிகாரங்கள் அவை.

கல்வி, கேள்வி, அறிவுடைமை என்பவற்றைப் பொருட்பாலில் வைத்தலால், இல்லற துறவறவாழ்வர்க்கு வேண்டா என்று ஆகிவிடுமா?

கண் பெற்றஎல்லார்க்கும் கல்வி வேண்டும் என்பதால் தானே, எண்ணையும் எழுத்தையும் கண் என்றார். இன்று மாற்றுத் திறனாளியரும் கல்வி கற்க வேண்டும் என்பதால் தானே, அவர்களுக்கென எழுத்தும் நூலும் உருவாக்கப்பட்டுள்ளன.

'நட்பு' தொடர்பான அதிகாரங்களைப் பொருட்பாலில் வைத்ததால் அறத்துப் பாலர்க்கு வேண்டாவா? வாய்மை துறவர்க்கு மட்டும் தானா?

சான்றாண்மை, பண்புடைமை, பெருமை, புகழ் என்பவையும் **ஒப்புரவு, ஈகை** என்பவையும் மாந்தர் அனைவர்க்கும் பொதுவானவை அல்லவா!

உலகங் காக்கும் **உழவைப்** பொருட்பாலில் வைத்தலால், இல்லறத்தார்க்கு இல்லாததாகிவிடுமா?

'கயமை' எங்கே இல்லை! பொதுமைப் பட்டதல்லவா எவ்வெவர்க்கும்? அறிவியல் பெருகப் பெருக ஆக்கம் அல்லவோ பெருக வேண்டும். பகுத்தறிவும் தன்மானமும் பேசப்பேச அவை வளர்ந்திருக்க அல்லவோ வேண்டும். தமிழைப் பேசி முழங்கி ஆட்சிக் கட்டில் ஏறியவர்களால், எங்கும் தமிழ் எல்லாம் தமிழ் என்றவர்கள் ஆட்சியில் எங்கும் தமிழில்லை எதிலும் தமிழில்லை என்றால் என்ன பொருள்? எல்லாம் கய்மைச் சான்றுகள் தாமே!

✦கண்ணோட்டம் என்பது என்ன? விளக்குக.

கண்ணோட்டத்திற்கு முன்னை அதிகாரம், வெருவந்த செய்யாமை. அஃதாவது அஞ்சி அடங்கி ஒடுங்கிப்போகத் தக்க செயல்களைச் செய்யாதிருத்தல். அதனை மேலும் விளங்கக் கூறுவதே கண்ணோட்டம் ஆகும்.

தண்டிக்கப்பட வேண்டிய தவறு செய்தார் தம்மையும், பொறுக்கும் அளவால் பொறுத்து அவர் உணர்ந்து திருந்தும் வகையில் ஈவு இரக்கமாக நடந்து கொள்ளுதல் கண்ணோட்டமாகும். இக்கண்ணோட்டம் உடைய கண்ணே கண்; இல்லையேல் புண் கண்ணோட்டம் கொள்வதுதான் பிறப்புக்கு வாய்த்த பேரழகு. உலக நலமே கண்ணோட்டத்தில் தான் உள்ளது; பாடற்குப் பண் சிறப்பாவது போலக் கண்ணுக்குக் கண்ணோட்டமே சிறப்பானது என்று திருவள்ளுவர் கண்ணோட்டத்தில் கூறும் பொருளாலே கண்ணோட்டப் பொருளும் அதன் சிறப்பும் இனிது விளங்கும்.

✦ உடையவர் என்று திருவள்ளுவர் எவரைச் சொல்கிறார்? விளக்குக.

உடையவர் என்று திருவள்ளுவர் ஊக்கம் உடையவரையே சொல்கிறார்.

"உள்ளம் உடைமை உடைமை"

"உடையர் எனப்படுவது ஊக்கம்"

என்பவை சான்று.

'உள்ளச் சிறப்பாக வள்ளுவர் கூறுவன எவை?

உள்ளத் தூய்மையே அறம் என்றும், அறத்திற் கெல்லாம் மூலமாம் அறம் என்றும் அறன் வலியுறுத்தலில் கூறியது அறிந்தோம்.

நீரின் உயர்வுக்குத் தக மலர் மேலே மேலே உயர்வது போல, உள்ளத்தின் உயர்வுக்குத் தகவே அறம், ஆற்றல், பொருள், புகழ் எல்லாம் உயரும் என உவமையால் ஊக்கமுடைமையில் கூறினார்.

உள்ளமே உயர்ந்த சொத்தும் அணிகலமும் ஆம் என்றும், உள்ளமாகிய ஊக்கம் இல்லாதவர் கொடையாளர் என்னும் பெருமையை அடையார் என்றும், ஊக்கமுடையவர் ஆக்கம் இழந்து அல்லல் படமாட்டார் என்றெல்லாம் விரித்துக் கூறினார்.

பொதுமக்களோ 'மனம் போல வாழ்வு' எனச் சுருக்கமாகக் கூறி விடுகின்றனர்!

✦ மடி இன்மை, ஆன்வினை உடைமை, இடுக்கண் அழியாமை ஆகியவற்றை வள்ளுவம் வரிசைப்படுத்தியது ஏன்?

மடி இன்மை என்பது சோம்பல் இல்லாமை.

சோம்பல் குடியை – குடும்பத்தைக் – கெடுக்கும் தன்மையாகும். மடி, காலம் தாழ்க்கச் செய்யும், மறந்து போகச் செய்யும், சோம்பிக் கிடக்க வைக்கும், எப்பொழுதும் உறங்கிக் கிடக்க ஆக்கும். மடி ஒருவனுக்கு உண்டானால், எத்தனை பேர் எத்தனை வகையால் உதவினாலும் அவன் உயர்வடையமாட்டான்.

மனிதப்பிறப்பு என்பதற்கு அடையாளமாக இருப்பது **ஆள்வினை உடைமையே.** பிறர்க்கு உதவி செய்தல் என்பது ஆள்வினை எனப்படும். தளரா முயற்சியாளர்க்கே கைகூடும். உறுப்புகளில் குறைகள் பிறவி முதலே அமைந்தாரும் கூட முயற்சி உடையவரானால் உயர்ச்சி அடைவது உறுதி.

இயற்கைத் தடை செயற்கைத் தடை என எத்தனை தடைகள் வந்தாலும் ஆள்வினையுடையவர்கள் அவற்றைவென்று தாம் எண்ணியதை எண்ணியவாறு முடிப்பர் என்கிறார்.

ஆள்வினை உடைமை உடையவர்க்கு நேரே மோதும் மோதலாம் இடுக்கண் வரவும் கூடும். அந்த இடுக்கணுக்கும் இடுக்கண் உண்டாக்குவதே அல்லாமல் தளர்ச்சியோ சோர்வோ அடையார். அவர்கள் இன்பத்தை விரும்பாதவர்கள் மட்டுமல்லர். துன்பத்தையும் இன்பமாகக் கொள்ளப் பழகிவிட்டவர்.

வண்டியை இழுக்கும் காளையோ எருதோ பள்ளம் மேடு சேறு அளறு எனப் பாராமல் வைத்த பாரத்தோடு காலை ஊன்றித் தலையை நிமிர்த்து இழுத்து மேடேறும் இயல்பை இடுக்கண் அழியாமைக்குச் சான்றாகக் காட்டும் ஒன்றேஅதன் தன்மையை உணர்த்தப் போதுமானாது. ஏறுபோல் பீடுநடை என்பதும் எண்ணத்தக்கதே.

✦ குறிப்பறிதல் என்னும் அதிகாரம் இரண்டும், குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரம் ஒன்றும் வகுத்த வகையென்ன?

பொதுவாழ்வு, குடும்ப வாழ்வு என இருவகை வாழ்வு ஒவ்வொருவருக்கும் உண்டு. இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஆதலால், பொதுவாழ்வுக் குறிப்பறிதலைப் பொருட்பாலிலும், குடும்பவாழ்வுக் குறிப்பறிதலைக் காமத்துப் பாலிலும் கூறினார்.

தன் குறிப்பைத் தன் காதலி மட்டும் அறியவும், காதலி குறிப்பைக் காதலன் மட்டும் உணருமாறும் குறிப்பாக உணர்த்துவது குடும்ப வாழ்வுக் குறிப்பறிதலாகும்.

சில இடங்களில் காதலன் காதலியர் தாம் முன்பின் அறியாதவர் போலப் பொதுப் பார்வை பார்த்துத் தம் காதலை வெளிப்படாமல் காத்துக் கொள்ளவும் வேண்டும் என்பது மிக நாகரிகம் உடையதாகும். குறிப்பறிவுறுத்தல் என்பது காதலன் காதலியர் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தும் நயமான வகையாகும்.

✦நட்பு என்பது என்ன? அதனைப் பல அதிகாரங்களில் விரித்துக் கூறுவது ஏன்?

நள் + பு = நட்பு. நள்–செறிவு; நள்ளிரவு – இருள் செறிந்தது. நள் – நண்–நண்பகல். ஒளிச் செறிவு அமைந்தது. காற்றும் இடைப்புகாச் செறிவமைந்த உள்ளமே காதல்! பால் பருவம் அற்றது நட்பு

நட்பாலேயே ஆக்கமும் அழிவும் மேன்மையும் கீழ்மையும் உண்டாதல் பேரியல்பு. ஆதலால், அந்நட்பினை நட்பு (79), நட்பாராய்தல் (80), பழைமை (81), தீ நட்பு (82), கூடா நட்பு (83) என்றும், பெரியாரைத் துணைக்கோடல் (45), சிற்றினம் சேராமை (46) என்றும் பல அதிகாரங்களாக வகுத்து விரித்துக் கூறினார்.

நட்பு :

“நல்ல நட்பு வளர்பிறைபோல வளரும்” என்றும்,
‘பழகப் பழக நூல் நயம் போல் சிறக்கும்” என்றும்,
உடை இழந்தவன் கை ஓடிக் காப்பது போல் உதவுவான்”

என்றும்

“மகிழ்வதற்கு மட்டுமின்றி இடித்துக் கூறித் திருத்துவதற்கும் நட்பு துணிவாக நிற்கும்” என்றும் நட்பினைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

நட்பாராய்தல் : நட்புக் கொள்வதற்குத் தக்கவர் தாமா என்பதை ஆராய்ந்தே நட்புக் கொள்ள வேண்டும். இல்லையானால் தீராத் துயரங்கள் உண்டாம் என்பது நட்பாராய்தல் என்பதன் பொருளாம்.

குணம், குடும்பம், நண்பரின் தோழர், பழி செய்தற்கு நாணும் நிலைமை, என்னும் ஒரு நிலையாம் உறுதிப்பாடு, மாசிலா மாண்பு ஆகியவற்றை ஆராய்ந்து தகுதி உடையரையே நண்பராகக் கொள்ள வேண்டும். அறிவற்றவராகவும், சிறு செயல் செய்பவராகவும் பணப்பறிப்புப் பார்வை உடையவராகவும் இருப்பாரை நண்பராகக் கொள்ளல் கூடாது என்றும் கூறுகிறார்.

பழமை:

பழமை (அ) பழைமை என்பது பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் நட்பாகும்.

பழமையாம் தொடர்பினர் வழிவழி உரிமை உறவைக் கெடுக்கும் செயலைச் செய்யமாட்டார்.

ஒரு கால் பழந் தொடர்பினர் கேடு செய்தாலும் அக்கேடு உரிமையால் செய்ததெனப் பொறுத்துக் கொள்வர்.

தம் நட்புடையாரைப் பற்றிப் பிறர் குறைகூறினும் அக்குறையைக் கேட்டால் தாமும் தம் நட்புக்குத் தக்கதில்லை என்று எண்ணும் தகையராக இருப்பர்.

தீநட்பு:

அறிவிலான் நட்பு, பொருளையே நோக்குவான் நட்பு, பாதுகாப்புக்கு உதவாத நட்பு, செய்யும் செயலைக் கெடுக்கும் நட்பு இன்னவை தீ நட்பாகும்.

போர்க்களத்தில் போர் செய்ய வேண்டிய நேரத்தில் களத்தைவிட்டுத் தாவும் குதிரை போல்வார் அவர்.

தனிமையில் புகழ்ந்து பலரிடையே பழிப்பார் நட்பு நெருங்கத் தகாதது.

சொல்வேறு செயல்வேறு என்று இரட்டை வேடம் போடுபவரைக் கனவில் காணல் கூட மிகக் கொடுமையானது.

கூடா நட்பு :

எவ்வகையாலும் உறவாகக் கொள்ளக் கூடாதவரை நட்புச் செய்தல் கூடா நட்பாகும். அழிப்பதற்கு இடம் பார்த்து நட்புக் கொள்பவர், நொடிக்கு நொடி மனம் மாறுபவர், முகத்தால் நண்பராய் அகத்தால் பகைவராய் இருப்பவர் முதலோர் கூடா நட்பினர். வளையும் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போன்றவர். அவர் கும்பிட்ட கைக்குள்ளும் கொல்லும் கருவி கொண்டவர். அவரை முகத்தால் நட்புக் கொண்டு அகத்தால் ஒதுக்கி விடுதல் வேண்டும்.

பெரியாரைத் துணைக்கோடல் :

தகுதி வாய்ந்த பெரியவரை நட்பாகக் கொள்ளுதல். அவர் அறம் அறிந்தவர்; முதியவர்; அறிவர்; வருமுன் காப்பவர்; கண்ணன்னவர்; தக்கவர்; தவறுங்கால் தட்டிக் கேட்டுச் சீர் செய்பவர்; நல்ல துணையாய் அமைந்தவர். அத்தகைய பெரியவரைத் தேடிக் கண்டு நட்பாகக் கொள்ள வேண்டும். அவர் பகையைத் தேடிக் கொள்ளல் கூடவே கூடாது.

சிற்றினம் சேராமை:

பெரியர்க்குக் கூறப்பட்ட உயர் குணங்கள் எவையும் இல்லாத சிறிய தன்மையர் சிற்றினத்தர். அவர்கள் தொடர்பு உண்டானால் பெருங்கேடாம். நிலத்தின் மேலே விழும் நீர் நிலத்தின் தன்மையைப் பெற்று விடுவது போல் எத்தகைய பெரியரையும் தன்வயப்படுத்திக் கெடுத்துவிடுவர்.

மனம் தூய்மை இனம் தூய்மை செயல் தூய்மை என்னும் மூன்று தூய்மைகளும் வேண்டும். இம் மூன்றும் இல்லாத சிற்றினத்தைச் சேர்தல் தீராக் கெடுதலாம்.

நட்பைப் பற்றி இவ்வளவு விரிவாகக் சொல்லியுள்ளார் திருவள்ளுவர். அதனால் உண்டாகும் நன்மை தீமைகளைக் கருதியது இஃதாம்.

✦உடைமை என்பது என்ன? விளக்குக

உடைமை என்பது சிறிதும் விலகாமல் கட்டொழுங்காகக் கொள்ளத்தக்க தன்மையாம். உடையை எப்படி மானம் கருதி நெகிழவிடாமல் இறுக்கிக் கட்டுகிறோமோ அப்படிக் கட்டிக் காக்க

வேண்டியது உடைமையாம். உடையாம் தன்மை, உடையனாம் தன்மையாம்.

✦ வள்ளுவர் எத்தனை உடைமைகளைக் கூறுகிறார்? அவை எவை?

வள்ளுவர் பத்து உடைமைகளைக் கூறுகிறார். அவை அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை இவை ஐந்தும் அறத்துப்பாலில் உள்ளவை.

அறிவுடைமை. ஊக்கமுடைமை, ஆள்வினை உடைமை, பண்புடைமை, நாணுடைமை – இவை ஐந்தும் பொருட்பாலில் உள்ளவை.

✦ பொருளொடு புணர்ந்த பக்கம் இல்லறம் என்று தொல்காப்பியம் கூறியும் பொருட்பால் என ஒருபால் 70 அதிகாரமாகக் கூறியும் பொருளுடைமை என ஓர் அதிகாரம் திருவள்ளுவர் வைக்காதது ஏன்?

வினாவோ விரிந்தது. விடையோ சுருங்கியது! பொருளை விடாமல் இறுக்கிப் பிடித்தல் கூடாது. அது ஓரிடத்தில் தங்கிவிடாமல் குருதி ஓட்டம் போல் எங்கும் பரவ வேண்டும்: அதுதான் பொருளுக்கும் பொருளுடையானுக்கும் பயனும் புகழும் ஆம். ஆதலால், உயிர்க்கு ஊதியம் ஈதல் இசைபட வாழ்தல் என்றார் திருவள்ளுவர்.

✦ பொருளின் சிறப்பு அறியாதவரா திருவள்ளுவர்?

பொருளின் சிறப்பு அறியாதவராக இருந்தால், பொருட்பால், என ஒன்றைவைத்திருக்க மாட்டாரே! மற்றும்,

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

என்று கூறியிருப்பாரா? பொருளொடு புணர்ந்த பக்கம் என்பதுதானே இல்வாழ்வு

குன்றின் மேல் இருந்து கீழே யானைகள் போரிடுவதைப் பார்ப்பது போன்றது பொருளுடையான் செயல் வெற்றி என்றும்,

பொருள் என்பது பொய்யா விளக்கம்; அது எண்ணிய இடமெல்லாம் சென்று இருளை அகற்றும் என்றும் கூறுபவர் பொருள் செயல்வகை என ஓரதிகாரம் வகுத்தவரும் அவர்

செய்க பொருளை என ஏவியவரும் அவர்

ஆனால் பொருள் முயற்சியால் கடிய உழைப்பால் வருவதே அல்லாமல் நல்வினை செய்தலால் பொருள் சேரும் பாவத்தால் வறுமை வரும் என்று கூறினார் அல்லர்!

'அற்பனிடத்தும் பொருள் உண்டு' என்று இகழ்ந்தவர் அவர் பொது நலமாம் பொருள் ஓரிடத்துத் தேங்கி விடாமல் ஒப்புரவாக ஈகையாக புகழ் வளர்ப்பதாக அமைய வேண்டும் என்று அவாவியவர் அவர். ஆதலால், அறத்தால் பொருள் தேடி, அப்பொருளால் இன்புறுதல் என்னும் வாழ்வியல் தெளிவு உடையவர் என்க.

✦ வள்ளுவர் சொல்லும் ஆமைகள் எனச் சொல்கின்றனரே சிலவற்றை? அவை ஆமைகளா?

கள்ளாமை, கொல்லாமை, நிலையாமை முதலியவற்றில் 'ஆமை' என வருவது கொண்டு சுவையாகச் சொல்வதாகத் **தாம் கருதிக் கொண்டு** சொல்கின்றனர். அவை, ஆமைகள் அல்ல.

'ஆ' எதிர்மறைஅல்லது மறுப்பது.

மை சொல்ஈறு அல்லது சொல்லிறுதி

இவ்விரண்டும் சேரும்போது ஆமை என ஒலிக்கிறதே அன்றி ஆமைகள் அல்ல. களவு செய்யாமை, கொலை செய்யாமை, நிலையில்லாமை என்பன போலப் பொருள் தருவனவாம். அடக்கமுடைமை அதிகாரத்தில் ஆமை என்னும் உயிரி பற்றிக் கூறியுள்ளார். அது,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது.

மேலே உள்ள ஓர் ஓட்டுள் நான்கு கால்களையும் தலையையும் இழுத்துக் கொள்ளும் ஆமைபோல் ஐந்து பொறிகளையும் அடக்க

வேண்டிய பொழுதில் அடக்கிக் கொள்ள வேண்டும் என்று உயர்ந்த உவமையாக ஆமையை எடுத்தாள்கிறார் வள்ளுவர்.

அப்படி இளமையிலேயே காத்தால் வரும் நாளெல்லாம் அக்காவல் மேலும் மேலும் சிறந்தோங்கும். அடக்கம், அழியா நிலையாம் அமர நிலையையும் தரும் என்கிறார். அவற்றை ஆமை என்பது அறியாமைப் பாற்பட்டதாம்.

வள்ளுவர் கூறும் பத்து உடைமைகளையும் சுருக்கமாகக் கூறுக.

1. **அன்புடைமை :** தனக்கென வாழாப் பெருந்தன்மை.
2. **அடக்கமுடைமை :** பொறி புலன்களை அடக்கி வாழ வேண்டும் முறையால் வாழுதல்.
3. **ஒழுக்கமுடைமை :** அருவிநீர் ஒழுக்குப்போல் தூயராக வாழ்தல்.
4. **பொறையுடைமை :** தோண்டுவாரையும் தாங்கும் நிலம்போல் பொறுமை உடையவராக வாழ்தல்.
5. **அருளுடைமை :** எல்லா உயிர்களும் இன்புற்று வாழ எண்ணும் அரிய பெரிய தன்மை.
5. **அறிவுடைமை :** அறிய வேண்டுவனவற்றை எல்லாம் அறிந்து வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. **ஊக்கமுடைமை :** எந்நிலையிலும் தளரா உள்ளத்தராக இருத்தல்,
8. **ஆள்வினை உடைமை :** குன்றா முயற்சியுடையவராக வாழ்தல்.
9. **பண்புடைமை :** பிறர் இயல்பை அறிந்து அவர் குறைகளைந்து நிறைவாகச் செய்து வாழ்தல்.
10. **நாணுடைமை :** செய்யக் கூடாதன செய்யுங்கால் தமக்குத்தாமே உண்டாகும் குறுகுதல் அல்லது வெட்கப்படுதல்.

இவை மாந்தரை விட்டுச் சிறிதும் விலகக் கூடாத நலப்பாடுகளாம்.

✦ **குடி படை என்றிருந்த நிலையிலும் தனிப்படையும் இருந்தது என்பதற்குச் சான்று என்ன?**

தனிப்படையும் இருந்தது என்பதற்குச் சான்று படைமாட்சி என்னும் அதிகாரம் ஆம்.

ஆள்பவன் வளங்களுள் எல்லாம் சிறந்தது, பலவகைப் பட்டதும், உயிருக்கு அஞ்சாததும் ஆகிய படையே என்றும்,

படையெல்லாம் பதைத்தாலும்
உயிர்க்கு அஞ்சார் வழிவழிப்
படைஞராவார் என்றும்,
கூற்றுவனே எதிரிட்டு வந்தாலும் குலையாமல் போரிட்டு
வெல்லும் திறத்தது படை என்றும்,
படைத்தலைவன் வீறு, படையின் வீறாகச் சிறக்கும்
என்றும்
கூறுவதால் தனிப்படையும் இருந்தமை விளங்கும்.

✦ **படைச் செருக்கு வேண்டுமா? விளக்குக.**

படைச்செருக்கு என்பது வாய்ச்சொல் வீரம் அன்று. நாட்டுக்கே எம் நல்லுயிர் என்னும் குறிக்கோளுடைய படை அது. போரில்லையே என ஏங்கும் படை அது. போர்ப்புண் படாத நாளெல்லாம் வீண் நாள் என்றும், ஆள்பவர் தடுப்பினும் நாட்டு நலம் கருதிப் போரை விரும்புபவர் என்றும் கூறுவதால் படைச்செருக்கு வேண்டுவதே என்பது விளங்கும்.

✦ **இகல், உட்பகை என்பவற்றின் வேறுபாடு என்ன?**

இகல் என்பது ஒட்டியவரை எல்லாம் பிரிக்கும். அது பண்பற்றநோய் என்றும், எவ்வ நோய் என்றும், துன்பத்துள் துன்பம் என்றும் தீமைக்கு இடமாவதெல்லாம் இகலே என்றும் திருக்குறள் கூறுவதால் இகலின் கேடு புலப்படும்.

உட்பகை என்பது உடனிருந்தே கரவாக அழிப்பது ஆகும். அழித்ததும் அழிபட்டதும் வெளியே தெரியாது. தெரிந்து உதவப் போனாலும் அவரையும் அழிப்பது உட்பகை ஆதலால், உட்பகையைக் காலை வைத்ததும் உள்வாங்கும் மண்ணாகிய மட்பகைக்கு உவமை காட்டினார் வள்ளுவர். யானையையும் உள் வாங்கும் மட்பகை என்றும் விளக்குவார். எள்ளளவு எனினும் உட்பகை கேடே என்பார்.

✦ குடியைக் கெடுப்பவை என்பவை எவை என்கிறார் வள்ளுவர்? குறிப்பிடுக.

பெரியவர்களைப் பகைப்பது, கெடுப்பதை நோக்கமாகக் கொண்ட பெண்ணின் சொற்படி நடப்பது, கட்டுக்குள் நில்லாத பெண்ணின் கட்டுக்குள் வாழ்வது, மதுக்குடி, சூதாட்டு என்பவற்றில் ஈடுபட்டு நலக்கேடு பொருட்கேடு குடும்ப மானஇழப்பு என்பவற்றைக் கொள்வது ஆகியவை குடும்பத்துக்குக் கூடாதவையாம்.

பெரியாரின் பகை பெருங்கேடு என்பதை எரியால் சுடப்பட்டாலும் தப்பலாம்; பெரியார் பகையைத் தேடுவார் தப்பார் என்பார் வள்ளுவர். குடிகேடு செய்யும் மகளிர் மனையாள் அல்லர். ஆண்களில் ஒழுக்கம் கெட்டார் போலப் பெண்களில் ஒழுக்கம் கெட்டார் அவர். மதுவும் சூதும் கெடுப்பதற்கு இந்நாள் குடியரையும் பழநாள் தருமன் நளன் முதலானவரையும் எண்ணினாலும் போதும்.!

✦மருந்து அதிகாரத்தில் மருந்தென வேண்டா? என்று வள்ளுவர் கூறுவது ஏன்?

இயற்கையாகவும் செயற்கையாகவும் வருவன நோய்கள். மரபு வழி நோய்கள் இயற்கை வழிப்பட்டவை. செயற்கையாக வரும் நோய்களில் பெரும்பாலானவை உணவால் ஏற்படுபவை.

பொருந்தா உணவு, மாறுபட்ட உணவு, அளவுக்கு மிஞ்சிய உணவு, செரிக்கு முன் உண்ணும் உணவு ஆகியவற்றாலேயே நோய்கள் உண்டாவதால் ஊண் கட்டுப்பாடு இருப்பவர்க்கு மருந்து வேண்டுவது இல்லை என்று தொடங்கி ஏழு குறள்களில் உணவைப் பற்றியே கூறுகிறார்.

அற்றால் (செரித்தால்) உண்க; அளவறிந்து உண்க
மாறு பாடில்லாதது உண்க; செரியாமல் உண்ணற்க;
அளவறியாமல் உண்ணற்க; தேவைக்குமேல் உண்ணற்க.
வாதம் பித்தம் கோழை என்பவை மிகவோ குறையவோ
இல்லாமல் அறிந்து உண்க என்றே கூறுகிறார்

மருத்துவர்க்கு நோய் ஆய்ந்து, நோய் மூலம் ஆய்ந்து, அந்நோய் தீர்க்கும் வகை ஆய்ந்து, தீர்க்கத் தக்க வகையில் தெளிந்து மருத்துவம் புரிக என்கிறார்.

நோயன், மருத்துவன், உடனிருப்பான், மருந்து என்னும் நான்கு பகுதியதே மருத்துவம் என்கிறார்.

✦குடிமக்களின் நலம் பற்றி வள்ளுவர் கூறுவதென்ன? விளக்குக.

நல்ல குடிமக்களின் உயர்ந்த பண்புகளைப் பற்றிக் 'குடிமை' என்றோர் அதிகாரமும் குடிமேம்பாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் குறித்துக் குடிசெயல்வகை என்றோர் அதிகாரமும் இயற்றினார்(96, 103).

நற்குடிப் பிறந்தார்க்கு நேர்மை, நாணம், ஒழுக்கம், வாய்மை, முகமலர்ச்சி இனியவை கூறல், பழி கூறாமை, கொடை, குறைகூறத்தக்கவை செய்யாமை, பணிவுடைமை என்பவை இயல்பாக அமைந்திருக்கும் பண்புகளாம்.

மற்றொருவர் உதவியை எதிர்பாரா முயற்சி, விரிவான அறிவு, குடும்பப் பெருமை காத்தல், குடும்பப் பாரத்தை உறுதியாகத் தாங்குதல், காலத்தில் செய்வன செய்தல், சோம்பல் இல்லாமை, குடும்பத்துள் மானம் பாராமை, வழிவழியாகக் குடிமையைச் சிறக்கச் செய்யும் நன்மகப்பேறு சுற்றம் ஆகியவை பெறுதல் குடி செயல் வகைச் செய்திகளாம்.

✦ உழவு என ஒரு தொழிலை மட்டும் பாடியவர், பிற தொழில்களைக் கூறவில்லையே ஏன்?

உழவுத் தொழில் உயிர்க்கு உணவு வழங்கும் தொழில். தொழில்களில் எல்லாம் தலையாய தொழில் மற்றைத் தொழில்களுக்கு மூலத் தொழில். அதனால் அதனைக் கூறுதல் வழியாக மற்றைத் தொழில்களை யெல்லாம் உள்ளடக்கிக் கூறினார் என்பதை, **"கரவாது கைசெய்தூண் மாலை யவர்"** என்னும் தொடரால் அறியலாம் (1035).

பரிய பரிய ஆலைகள் இயங்கும் காலம் இது. ஏதோ சிற்றூர்களில் ஒரு சிறிய அளவில் தச்சு, கொல்லு, குயம், நெசவு முதலாம் தொழில்கள் இயல்கின்றன.

உழவிலும் ஏற்றம் இறைத்தல், வண்டியோட்டல், உழவு, நடவு, களையெடுப்பு, உரம் போடல், அறுவடை, களத்தில் கதிரடிப்பு முதலாம் துணைத் தொழில்கள் நடைபெறுகின்றன. இவற்றின் மூலத் தொழில் உழவே. பழநாளில் பதினெண் குடிகள் எனப்பட்டவர். உழவுத் தொழிலாம் வேளாண் தொழில் சார்ந்து பணி செய்தவர்களே!

ஆதலால் உழவு அதிகாரம் பொதுவில் 'தொழில்' என்னும் அதிகாரமேயாம்! முன்னரே தொழில்களைக் குறித்த

விளக்கங்களை **'வினை'** என்பதில் கண்டுள்ளோம்.

✦ **உழவு பற்றிய வள்ளுவர் கருத்தென்ன? விளக்குக.**

உலகம் சுழல்வது; அச்சுழற்சியால் மட்டும் உலகத்தில் உயிர்கள் வாழ்ந்துவிட முடியாது. உழவன் ஏரால் நிலத்தைச் சுற்றி உழுது பயிரிட்டால்தான் உலகத் துயிர்கள் வாழும். உலகைக் காக்கும் உழவரே **உலகத்தேர்க்கு அச்சாணியாவர்.** உலகில் உலகநலனுக்கு வாழ்வாருள் தலைப்பட்ட உழவர் தொழுத்தக்கவர். அவர் ஏர் நிழலிலே தான் மற்றையோர் குளுமை எய்துவர்.

உலகில் இரந்து வாழாதவர் எவரெனின், அவர் உழவரே.
இரப்பவர்க்கு ஈந்து புரப்பவரும் அவரே.
அவர் செயலற்றால் துறவரும் வாழார்.

நிலத்தை நன்கு உழுது மண் புழுதிபட்டு உலரக் காய்தலிலேதான் விளைவு நலம் உள்ளது.

உழுதல், எருவிடல், களையெடுத்தல், நீர்விடல், காவல் புரிதல் என்பவை ஒன்றன் மேல் ஒன்றாம் உயர்வின. உழவன் தன்னை உழுது பயன் கொள்ளச் சோம்பன் எனின், யான் உன் உழைப்புக்குத் தகத்தர இருந்தும் உழுது எடுத்துக் கொள்ளாத கோழையன் – ஏழையன் – என நிலம் ஆகிய கொடையாட்டி அவனை நோக்கி நகை புரிவாள் என்கிறார்.

✦ **இரந்து வாழும் வாழ்வு வள்ளுவர்க்கு உடன்பாடா? ஆய்ந்து எழுதுக.**

இரந்து வாழ்தல் வள்ளுவர்க்கு உடன்பாடு அற்றது. இரப்பவர்களை நோக்கி 'இரவாதீர்' என உங்களை இரந்து மன்றாடுகிறேன் என்றவர் அவர். மேலும் இரந்துதான் வாழ வேண்டுமென்னும் நிலையில் ஓர் அரசு விதிகளை உண்டாக்கி இருக்குமானால் அவ்வரசு அழிந்து தொலையட்டும் என்று சாவித்தவர் அவர். அது,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்பது இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு என்றதை எண்ணுக.

✦ இரவாமல் வாழ வள்ளுவர் காட்டும் வழி என்ன?

பசித்தோர் முகம் பார்த்து ஊண் வழங்கி அவர்கள் பசியை ஆற்றுவது நல்லதே தான். ஆயினும், அதனினும் உயர்ந்த தொன்று உண்டு. அது, அவர்கள் தம் முயற்சி உழைப்பு ஆகிய வகையால் தம் பசியைத் தாமே தீர்த்துக் கொள்ளும் வகையில் தொழிலுக்கு வாய்ப்புச் செய்வதுதான், அவர் உடலுக்கும், அவரைச் சார்ந்த குடும்பத்துக்கும் நாட்டுக்கும் நன்மையாம் வழிஅதுவேயாம் என்கிறார் அதனை,

> "ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் **அப்பசியை**
> **மாற்றுவார் ஆற்றலின் பின்"**
>
> என்கிறார்!

உழவனுக்கும் உழவுசார் தொழில் புரிவார்க்கும் அவர் நிலமே கொடைவள்ளலாக விளங்கும். ஆனால் உழையாதவர் விளைவு கொள்ள முடியுமா? ளங்களுக்கு உண்ண வகையில்லை என்று உழவன் சோம்பிக் கிடந்தால் நிலம் எனப்படும் நன்மகளே நகைப்பாள் என்று கூறுவதும் இவண் எண்ணத் தக்கதாம் இரவச்சம் என்பது இரத்தல் ஆகாது என்பதேயாம். "கஞ்சி உணவு எனினும் உன் உழைப்பால் வந்ததை உண்பதே உணவாகும்" என்று உழைப்பின் பெருமையை உரைக்கிறார் வள்ளுவர்(1066).

✦ பொருட்பால் இறுதியில் 'கயமை'யை வைத்தது ஏன்?

இழிந்த தன்மையே கயமையாம். முன்னே கூறிய அறவழி, பொருள் வழிகளின் படி நடந்து வாழ்வாங்கு வாழும் தெய்வ நிலையை அடையாதவர் கயவர். ஆதலால், இறுதியில் வைத்தார்.

சொல்லப் பயன்படாதவர் அவர். கரும்பை ஆட்டுவது போல் அலைகுலை செய்தால்தான் பயன்படுவர்; கருமிகளில் எல்லாம் கருமியர், அச்சமே வாழ்வானவர்; முரசறைவது போல அரட்டையும் கும்மாளமும் போடுபவர்; பிறர் நலமாக இருப்பதைப் பார்க்கப் பொறாதவர்; தம்மை விலைபேசி அடிமையாகக் கிடக்கவும் ஒப்புவர் எனக் கயவரின் இயல்புகளாகக் கூறுவார் வள்ளுவர்.

✦காமத்துப்பாலை மூன்றாம் பாலாக வைத்தது ஏன்?

அறம், பொருள், இன்பம் என்னும் முன்னோர் வைப்பு முறையில் இன்பம் என்பதைத் தொல்காப்பியர் வழியில் காமம் என்று ஆக்கியதை முன்னரே அறிந்தோம்.

அவ்வகையில் காமம் எனப்படும் அகப்பொருளின் மூன்று பொருள்களில் **உரிப் பொருள்** என்று மூன்றாம் பொருள் வைத்தார். . அவ்வகையே நூல் முறையாக இருந்தமையால், அவ்வகையைப் போற்றி இயற்றினார் திருவள்ளுவர்.

உரிப் பொருள் **புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்** என்பவை. இவை ஒவ்வொன்றற்கும் ஐந்து ஐந்து அதிகாரங்களாக இருபத்து ஐந்து அதிகாரங்கள் பாடினார் திருவள்ளுவர். அவை தொல்காப்பிய வழியில் திருவள்ளுவர் எனினும் பகுதியில் (13) இடம் பெற்றுள

✦காமத்துப் பாலின் பெருமை என்ன?

“காமத்துப்பாலை இவ்வளவு தூய்மையாகவும் நயமாகவும் கூறிய நூல் உலகிலேயே இல்லை” என்பதும்,

“தொல்காப்பியர் வகுத்த உரிப்பொருள் ஐந்தையும் முறைமாறாமல் போற்றி நூல் எழுதியவர் வள்ளுவரே” என்பதும்

“எது நோயை ஆக்குமோ, அதுவே நோயைத் தீர்க்கும் மருந்தும் ஆகும் என்பது ஒல்லியல் மருத்துவ (ஓமியோ மருத்துவ) அடிப்படை என்பதும் காமத்துப்பால் பெருமையாம்.

✦திருக்குறள் பெருமையாக அறிவன சில கூறுக.

- திருக்குறள் உலகப் பொது நூல் என்னும் தனிப் பெருஞ் சிறப்பினது.
- பல சமயத்தார்களால் தத்தம் சமய நூல் எனக் கொள்ளப்படுகிறது.
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பிறவி வேறுபாடு கருதாப் பெருமையது.
- அறம் வாய்மை தவம் முதலியவற்றுக்கு ஒப்பிலா இலக்கணம் உடையது.

- வாழப் பிறந்தவர் அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டி, உயர்ந்த நிலையை அடையலாம் என உறுதி மொழிவது.
- ஊரின் பொருளும் ஒப்புரவுச் சிறப்பும் உலகம் உய்ய வழிகாட்டியவை.
- பெண்ணின் பெருமையை வெளிப்படுத்துவது. – வள்ளுவருக்குப் பின்வந்த புலமையாளர் அனைவரையும் கவர்ந்து தத்தம் நூல்களில் மேற்கொள்ள வழிகாட்டியாக இருந்தது.
- திருக்குறளை மேல் வைப்பாகக் கொண்டு பல நூல்கள் கிளர்ந்தன.
- திருவள்ளுவமாலை என்னும் ஒரு பின் நூலைப் புனையத் தூண்டியது.
- வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட தங்க ஆப்பிள் பழம் போன்றது எனப் பாராட்ட அமைந்தது.
- தாசுமாலில் ஒரு கல்லைப் பெயர்த்து, அப்பெயர்ப்புத் தெரியாமல் மற்றொரு கல்லை வைத்தாலும் வைக்கலாம்: திருக்குறளில் ஒரு சொல்லைப் பெயர்த்து வேறு சொல்லை வைத்துவிட முடியாது எனப் பாராட்டப்பட்டது.
- போரும் அமைதியும் என்னும் நூலை எழுத உருசியப் பேரறிஞர் தால்சு தாய்க்குத் தூண்டுதலாக இருந்தது.
- திருக்குறளை அதன் மூல மொழியில் கற்க வேண்டும் என்பதற்காகக் காந்தியடிகளுக்குத் தமிழ் மொழி கற்கும் விருப்பத்தை ஆக்கியது.
- உருசியப் பாதுகாப்புச் சுரங்கத்துள் இடம் பெற்ற நூலாகியது.
- விவிலியத்தை அடுத்து விக்தோரியாப் பேரரசியார் போற்றியது.
- இங்கர்சால் என்னும் பேரறிவராலும், ஆல்பிரெட் சுவைட்சராலும் மிகச் சிறப்பித்துக் கூறப்பட்டமை.
- தமிழ் நூல் எதுவும் வெளியிடக் கூடாது என்னும் அச்சுச் சட்டம் இருந்த நாளில் முதல் முதலாக கி.பி. 1812இல் வெளிவந்த நூல்.

- அதே ஆண்டில் எல்லீசு பெருமகனாரால் ஆங்கிலத்தில் பெயர்த்து அச்சிடப்பட்ட அருமையது. அவரால் வள்ளுவர் தங்கக் காசும் வெளியிடப்பட்டது.

- உலக நூலாக ஒன்று வேண்டும் என்று அறிவர்களால் எண்ணப்படும் நாள்வரின் தலைப்பட்டு நிற்கக் கூடிய ஒரோ ஒரு நூல் திருக்குறளேயாம்.

- **வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
  வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
  எனப் பாடு புகழ் பெற்றது.

இணைப்பு

திருவள்ளுவரின் தனிப்பெருஞ் சிறப்புகள் (அ) திருக்குறளின் தனிப்பெருஞ் சிறப்புகள் :

- தமிழ் என்றும் பெயரைச் சொல்லாமலே, தமிழுக்குத் தனிப்பெருஞ் சிறப்புத் தந்தவர் திருவள்ளுவர்.
- தமிழினம் என்னும் பெயரைச் சொல்லாமலே, தமிழினத்திற்குத் தனிப்பெரும் சிறப்பு வழங்கியவர் திருவள்ளுவர்.
- தமிழ்நாடு என்னும்பெயரைச் சொல்லாமலே, தமிழ்நாட்டுக்கு உலகில் ஒப்பிலாப் புகழ் நல்கியவர் திருவள்ளுவர்.
- தம்மை அறநெறியாளர் – இறைவழிஞர் – என்று சொல்லாமலே தமிழர் நெறி வழங்கிய தாதாவாக விளங்கிக் கொண்டு இருப்பவர் திருவள்ளுவர்.
- தமிழர் சமயம் என ஒன்றைப் படைப்பதாகச் சொல்லாமலே தமிழர்க் கமைந்த மெய்யியல் வழங்கிய மேதகைத் தோன்றல் திருவள்ளுவர்.
- ஓதாக் கல்வி என்றும், சாகாக் கலை என்றும், பொது நெறியாம் சன்மார்க்கம் என்றும், ஆன்ம நேயம் என்றும் தவநெறி என்றும், நுண்மாண் நுழைபுலத் தேர்ச்சியர் சொல்வனவற்றையெல்லாம்,

எண்மையாய் உள்ளங்கை நெல்லிக் கனியென உலகவர் உணரச் செய்த உயரிய படைப்பாளர் திருவள்ளுவர்.

- ஊழ் என்னும் மயக்கப் பொருளின் அடிவேர் முதல் முடி வித்து வரை கண்டு, மூழ்கி எடுத்த முத்துப்போல உலகத்து இயற்கை என ஒரு முறைக்கு மும்முறை பலாச்சுளையாகப் பளிச்சிடத் தந்த கொடையாளர் வள்ளுவர்! அதன் இருவேறு தன்மையும் இயம்பியவர்.

- பிறர் பிறர் போல நூற்பால் கூறாமல், தமிழர் நெறி முப்பாலே எனப் பண்டையோர் நெறியைக் கண்டு பகுத்துவைத்து, முப்பால் என்று பின்னவர் பெயரீடு செய்யப் பெருவளம் அருளிய பெருந்தக்கார் திருவள்ளுவரே!

திருவள்ளுவர் சிறப்புகள் என்பவை திருக்குறளின் சிறப்புகளே. படைப்பாளர் தாமே படைப்பின் மூலவர்.

❖❖❖

7. திருக்குறள் முச்சீர் மணிகள்

	நெறி நின்றார் நீடுவாழ் வார்	6
	நீரின்று அமையாது உலகு	20
	வானின்று அமையாது ஒழுக்கு	20
	செயற்கு அரியசெய்வார் பெரியர்	26
	அந்தணர் என்போர் அறவோர்	30
	அறத்தான் வருவதே இன்பம்	39
	செயற்பால தோரும் அறனே	40
	அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை	49
	இல்லதென் இல்லவள் மாண்பானால்	53
10	மங்கலம் என்ப மனைமாட்சி	60
	தம் பொருள் என்பதம் மக்கள்	63
	மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்	65
	அன்பின் வழியது உயிர் நிலை	80
	மறவற்க மாசற்றார் கேண்மை	106
	நன்றி மறப்பது நன்றன்று	108
	அடக்கம் அமரருள் உய்க்கும்	121
	காக்க பொருளா அடக்கத்தை	122
	எல்லார்க்கும் நன்றாம் பணிதல்	125
	யாகாவார் ஆயினும் நாகாக்க	127
20	ஒழுக்கம் உடைமை குடிமை	135
	ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை	136
	நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்	138
	பொறுத்தல் இறப்பினை என்றும்	152
	ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்	156

	அழுக்கற் றகன்றாரும் இல்லை	170
	வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்	177
	சொல்லுக சொல்லில் பயனுடைய	200
	மறந்தும் பிறன்கேடு சூழற்க	204
	இலன்என்று தீயவை செய்யற்க	205
30	ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்	214
	வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை	221
	நல்லா றெனினும் கொளல் தீது	222
	ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்	225
	ஈதல் இசைபட வாழ்தல்	231
	தோன்றின் புகழொடு தோன்றுக	236
	வசையொழிய வாழ்வாரே வாழ்வார்	240
	அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்	241
	அல்லல் அருளாள்வார்க்கு இல்லை	245
	அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை	247
40	உண்ணாமை வேண்டும் புலாஅல்	257
	தவமும் தவமுடையார்க்கு ஆகும்	262
	தவம் செய்வார் தம்கருமம் செய்வார்	266
	கள்வார்க்குத் தள்ளும் உயிர் நிலை	290
	தன் நெஞ்சு அறிவது பொய்யற்க	293
	பொய்யாமை அன்ன புகழில்லை	296
	புறம் தூய்மை நீரான் அமையும்	298
	செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்	301
	மறத்தல் வெகுளியை யார் மாட்டும்	303
	தன்னைத் தான் காக்கின் சினம் காக்க	305
50	நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்	320
	அறவினை யாதெனில் கொல்லாமை	321

	ஒன்றாக நல்லது கொல்லாமை	323
	அற்கா இயல்பிற்றுச் செல்வம்	333
	உறங்குவது போலும் சாக்காடு	339
	வேண்டின் உண்டாகத் துறக்க	342
	அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை	343
	தலைப்பட்டார் தீரத் துறந்தார்	348
	பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்	349
	பற்றுக பற்றற்றான் பற்றினை	350
60	மெய்ப் பொருள் காண்பது அறிவு	355
	தூஉய்மை என்பது அவாவின்மை	364
	அற்றவர் என்பார் அவாவற்றார்	365
	அஞ்சுவ தோரும் அறனே	366
	அவா இல்லார்க்கில்லாகும் துன்பம்	368
	ஆகுழால் தோன்றும் அசைவின்மை	371
	உண்மை அறிவே மிகும்	373
	பரியினும் ஆகாவாம் பாலல்ல	374
	ஊழிற் பெருவலி யாவுள?	380
	கற்க கசடறக் கற்பவை	391
70	கண்ணுடையர் என்போர் கற்றோர்	393
	கற்றனைத் தூறும் அறிவு	396
	கேடில் விழுச் செல்வம் கல்வி	400
	செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்	411
	கற்றிலன் ஆயினும் கேட்க	414
	எனைத்தானும் நல்லவை கேட்க	416
	அறிவு அற்றம் காக்கும் கருவி	421
	நன்றின் பால் உய்ப்பது அறிவு	422
	மெய்ப்பொருள் காண்பது அறிவு	423
	நுண்பொருள் காண்பது அறிவு	424

80	அறிவுடையார் ஆவது அறிவார்	427
	அறிவுடையார் எல்லாம் உடையார்	430
	குற்றமே காக்க பொருளா	434
	வியவற்க எஞ்ஞான்றும் தன்னை	439
	முதலிலார்க்கு ஊதியம் இல்லை	449
	சார்பிலார்க்கு இல்லை நிலை	449
	மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்	457
	இனநலம் ஏமாப்பு உடைத்து	458
	நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை	460
	செய்தக்க அல்ல செயக் கெடும்	466
90	எண்ணித் துணிக கருமம்	467
	நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு	469
	எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்	470
	ஆற்றின் அளவறிந்து ஈக	477
	பருவத்தோடு ஒட்ட ஒழுகல்	482
	கொக்கொக்க கூம்பும் பருவத்து	490
	அஞ்சாமை அல்லால் துணைவேண்டா	497
	நாள்தோறும் நாடுக மன்னன்	520
	கோல்நோக்கி வாழும் குடி	542
	நாள்தொறும் நாடி முறை செய்க	553
100	மன்னற்கு மன்னுதல் செங்கோன்மை	556
	கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்	570
	கண்ணோட்டத் துள்ளது உலகியல்	572
	கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்	575
	ஒற்றொற்று உணராமை ஆள்க	589
	சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க	590
	உடையார் எனப்படுவது ஊக்கம்	591

	உள்ளம் உடைமை உடைமை	592
	உள்ளத் தனையது உயர்வு	595
	உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்	596
110	உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை	600
	மடியை மடியா ஒழுகல்	602
	வினைக்கண் வினைகெடல் ஓம்பல்	612
	முயற்சி திருவினை ஆக்கும்	616
	ஊழையும் உப்பக்கம் காண்பர்	620
	இடுக்கண் வருங்கால் நடுக	621
	திறனறிந்தான் தேர்ச்சித் துணை	635
	திறனறிந்து சொல்லுக சொல்லை	644
	துணைநலம் ஆக்கம் தரூஉம்	651
	எற்றென்று இரங்குவ செய்யற்க	655
120	அழக்கொண்ட எல்லாம் அழப்போம்	659
	கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை	663
	சொல்லுவதல் யார்க்கும் எளிய	664
	தூங்குக தூங்கிச் செயற்பால	672
	நன்றி பயப்பதாம் தூது	685
	உறுதி பயப்பதாம் தூது	690
	போற்றின் அரியவை போற்றல்	693
	அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக	711
	ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல்	714
	ஆற்றின் அளவறிந்து கற்க	725
130	நாடென்ப நாடா வளத்தன	739
	பேராண்மை என்ப தறுகண்	773
	நிறைநீர நீரவர் கேண்மை	782
	நகுதற் பொருட்டன்று நட்டல்	784

	புணர்ச்சி பழகுதல் வேண்டா	785
	இடுக்கண் கழைவதாம் நட்பு	788
	நாடாது நட்டலில் கேடில்லை	791
	உள்ளற்க உள்ளம் சிறுகுவ	798
	மருவுக மாசற்றார் கேண்மை	799
	கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை	808
140	சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க	827
	அறிவின்மை இன்மையுள் இன்மை	841
	காணாதாற் காட்டுவான் தான் காணான்	849
	இகலானாம் இன்னாத எல்லாம்	860
	நோவற்க நொந்த தறியார்க்கு	877
	உட்பகை அஞ்சித் தற் காக்க	883
	உட்பகை உள்ளதாம் கேடு	889
	ஆற்றுவார் ஆற்றல் இகழாமை	891
	கெடல் வேண்டின் கேளாது செய்க	893
	வேண்டற்க வென்றிடினும் சூதினை	931
150	இழத்தொறும் காதலிக்கும் சூது	940
	அற்றால் அளவறிந்து உண்க	943
	நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்	960
	பெருக்கத்து வேண்டும் பணிதல்	963
	ஒளி ஒருவதற்கு உள்ள வெறுக்கை	971
	பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்	972
	மேலிருந்தும் மேல்லார் மேலல்லார்	973
	பணியுமாம் என்றும் பெருமை	978
	பெருமை பெருமிதம் இன்மை	979
	அற்றம் மறைக்கும் பெருமை	980

160 கொல்லா நலத்தது நோன்மை 984
ஆற்றுவார் ஆற்றல் பணிதல் 988
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் 996
மருளானாம் மாணாப் பிறப்பு 1002
கருமத்தால் நாணுதல் நாணு 1011
குலம்சுடும் கொள்கை பிழைப்பின் 1019
குடி செய்வார்க்கு இல்லை பருவம் 1028
சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் 1031
உழுவார் உலகத்தார்க்கு ஆணி 1032
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் 1033
170 இரக்க இரத்தக்கார்க் காணின் 1051
இரப்பான் வெகுளாமை வேண்டும் 1060
இரவாமை கோடி யுறும் 1061
இரவுள்ள உள்ளம் உருகும் 1069
மக்களே போல்வர் கயவர் 1071
அச்சமே கீழ்களது ஆசாரம் 1075
அறைபறை அன்னர் கயவர் 1076
ஈர்ங்கை விதிரார் கயவர் 1077
108 சொல்லப் பயன்படுவர் சான்றோர் 1078

❖❖❖

8. திருக்குறள் நாற்சீர் மணிகள்

	ஆதி பகவன் முதற்றே உலகு	1
	அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு	32
	மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்	34
	மகளிர் நிறை காக்கும் காப்பே தலை	57
	அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு	72
	முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து	90
	அகத்தானாம் இன்சொ லினதே அறம்	93
	துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு	106
	நன்றல்லது அன்றே மறப்பது நன்று	108
10	உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு	110
	நெஞ்சத்தில் கோடாமை சான்றோர்க்கு அணி	115
	ஆறாதே நாவினால் சுட்ட வடு	129
	ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்	131
	பிறன்வரையான் பெண்மை நயவாமை நன்று	150
	தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை	151
	பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்	156
	வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்	178
	விறலீனும் வேண்டாமை என்னும் செருக்கு	180
	ஒருவன் புறங்கூறான் என்றல் இனிது	181
20	சான்றோர் பயனில சொல்லாமை நன்று	197
	சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்	200
	தீயவை தீயினும் அஞ்சப் படும்	202
	வினைப்பகை வீயாது பின்சென்று அடும்	207
	எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப் பால்	209

	மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று	222
	புகழல்லால் பொன்றாது நிற்பதொன் றில்	223
	அருளற்றார் அற்றார்; மற்றாதல் அரிது	248
	ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று	259
	பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்	282
30	பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்	247
	அகம் தூய்மை வாய்மையால் காணப்படும்	298
	சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு	299
	சினத்தில் பகையும் உளவோ பிற	304
	சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை	310
	நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்	320
	உறங்கி விழிப்பது போலும் பிறப்பு	339
	பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை	345
	சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு	358
	வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை	363
40	கைப்பொருள் போகூழால் தோன்றும் மடி	371
	உய்த்துச் சொரியினும் போகா தம	376
	கற்றபின் நிற்க அதற்குத் தக	391
	பயவாக் களர் அனையர் கல்லா தவர்	406
	உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு	425
	அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்	428
	குற்றமே அற்றம் தரூஉம் பகை	434
	மாந்தர்க்கு இனத் தியல்பது ஆகும் அறிவு	452
	செய்தக்க செய்யாமை யானும் கெடும்	466
	தன்னை வியந்தான் விரைந்து கெடும்	474
50	தத்தம் கருமமே கட்டளைக் கல்	505
	யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை	541

	கண்ணென்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்	573
	அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி	618
	உலகத் தியற்கை அறிந்து செயல்	637
	உறுதி உழையிருந்தான் கூறல் கடன்	638
	கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்	641
	வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்	651
	செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை	656
	வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்	661
60	வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு	670
	அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சு	707
	நூலோடென் நுண்ணவை அஞ்சுபவர்க்கு	726
	வினைமாட்சி இல்லார்கண் இல்ல தரண்	750
	செல்வரை எல்லாமும் செய்வர் சிறப்பு	752
	தானை படைத்தகையால் பாடு பெறும்	768
	தானை தலைமக்கள் இல்வழி இல்	770
	அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு	787
	ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும்	820
	காணாதான் கண்டானாம் தான் கண்டவாறு	849
70	இகல்கருதி இன்னாசெய் யாமை தலை	852
	கொள்ளற்க சொல்லோர் உழுவர் பகை	872
	தமர்நீரும் இன்னாவாம் இன்னா செயின்	881
	அஞ்சுக கேள்போல பகைவர் தொடர் பு	882
	உய்யார் பெரியார்ப் பிழைத்தொழுகு வார்	896
	எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண் பவர்	926
	குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்	954
	பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று	955
	கீழிருந்தும் கீழல்லார் கீழல் லவர்	973

	சிறுமை அணியுமாம் தன்னை வியந்து	978
80	பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு	984
	பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு	995
	மரம் போல்வர் மக்கட்பண் பில்லா தவர்	997
	நாண்என்னும் நன்மை குறித்தது சால்பு	1013
	நலம் சுடும் நாணின்மை நின்றக் கடை	1019
	தமரகத்தும் ஆற்றுவார் மேற்றே பொறை	1027
	இன்மையின் இன்மையே இன்னா தது	1041
	நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும்	1046
	தாள் தந்தது உண்ணலின் ஊங்கினியது இல்	1065
	நாவிற்கு இரவின் கிழிவந்த தில்	1066
90	கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்	1078

❖❖❖

9. திருக்குறள் பதிப்பு - பரப்புநர்

திருக்குறள் - நாலடியார் - மூலம்

கி.பி - 1812

திருக்குறள் மூல பாடம், நாலடியார் மூலபாடம் என்னும் இரண்டு நூல்களும் ஒன்றாக 1812-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. திருக்குறள். நாலடியார் ஆகிய இரண்டன் முதற்பதிப்பு இந்நூலேயாகும்.

மரஎழுத்தால் அச்சிடப் பெற்ற நூல் இது முற்றுப்புள்ளி. கீற்று (-) ஆகிய குறிகள் மட்டும் உள்ளன.

மெய் எழுத்துகளுக்குப் புள்ளியிடப் பெறவில்லை. ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடுகள் இல்லை. ஏறக்குறைய ஏட்டுப்படி எழுத்தெனவே அமைந்துள்ளது.

இதன் முதற்பக்கம் வருமாறு :

(நாம் எழுதும் முறையில் இங்கு எழுதப்பட்டுள்ளது)

திருக்குறள் மூல பாடம்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்தது

இது பொத்தகம்

(ஒன்றனுள் ஒன்று அடங்கிய இரு வட்டங்களின் இடையே அமைந்துள்ளது)

இலக்கண விலக்கிய வாராய்ச்சியுடையவர்களால் லிகிதப் பிழையற வாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது.

தொண்டை மண்டலம்

சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம்

மலையப்ப பிள்ளை குமாரன்

ஞானப் பிரகாசனால்

அச்சிற்பதிக்கப்பட்டது.

மாசத் தினச் சரிதையின் அச்சுக் கூடம்

இ. ஆண்டு க அ க உ

1812

இந்நூலின் இரண்டாம் மூன்றாம் பக்கங்களில் நூல்வரலாறு ஆராய்ந்த முறை, ஆராய்ந்தவர் ஒப்புக் கொண்டவர் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இதனை ஆராய்ந்து பதிப்பித்தவர் திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்.

இம் மூலநூலில் திருவள்ளுவ மாலையும் உண்டு. மூலம் மட்டுமே !

எல்லீசு ஆங்கில மொழிபெயர்ப்பு

திருக்குறள் - 1812

TIRUKKURAL

ON VIRTUE

F.W. ELLIS' COMMENTARY

FIRST EDITION

1812

இது தலைப்புப் பக்கம் இதன் முதற்பக்கச் செய்தி வருமாறு தமிழ் எழுத்து அதிலுள்ளவாறே அமைக்கப்பட்டுள்ளது.

அறப்பால்

ON VIRTUE

CHAR 1

கடவுள் வாழ்த்து The Prase of God

The literal meaning ot the title of this chapter is preserved in the translation Aecoding to established rule all Tamil Composilions ought and with few exceptions all do commence by an invocation of the brity, vanying oeeording to the seat of the writen Tiruvalluvan bas devoted he whole of this chapten to his subject.

அகா முதல வெழுததெலலா மாதி

பகவன முதறறே யுலகு (க)

As ranked in every alphabet the firstthe self - same vowel stands, so in all words.

The elerral God is Chief

முதற்குறளுக்கு மூன்று பக்க அளவில் உரை விளக்கம். ஆங்கிலம் தமிழ் மேற்கோள்கள் ஆகியனவற்றைத் தந்துள்ளார்.

பிறவிப் பெருங்கடல் என்னும் குறளுக்கு 8 பக்கங்களில் உரைவிளக்கம் வரைந்துள்ளார். திருவாய்மொழி திருவாசகம்

சிவவாக்கியர் பாடல்கள் தேம்பாவணி முதலியவற்றில் இருந்து 26 செய்யுள்களை மேற்கோள் காட்டி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

எந்தத் தமிழ் நூலும் வெளியிடக் கூடாதென அச்சுச் சட்டம் ஒன்று 1835 வரை இருந்தது.

ஆங்கிலேயர் மக்களொடு தொடர்பு கொள்வதற்குக் கல்விச் சங்கம் என ஒன்று உண்டாயிற்று. அதில் நீதி நூல் பாடத்திற்காகத் திருக்குறளைத் தேர்ந்ததால் அச்சுச் சட்டத்தைப் புறந்தள்ளி வெளிப்பட்டது. திருக்குறள், கிறித்தவத் தமிழ் நூல்கள் பதிப்பிக்க அச் சட்டம் தடை செய்யாமையால் அந்நூல்கள் அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே வெளியிடப்பட்டன. கல்விச் சங்கம் நிறுவியவர்கள் கர்னல் மெக்கன்சி என்பாரும், எல்லீசும் ஆவர்.

திருக்குறள் மூலமும் உரையும்

'தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளினுரை' என்பது இதன் தலைப்புப் பெயர்.

இவ்வுரை திருத் தணிகைச் சரவணப் பெருமாள் ஐயரால் பரிமேல் அழகர் உரையைச் சுருக்கி வெளிப்படையாக்கிப் பதவுரையும் தாற் பரிய வுரையுமாகச் செய்யப்பட்டது. இதனோடு திருவள்ளுவ மாலைக்கும் உரை செய்து சேர்த்திருக்கின்றது.

சரவணப் பெருமாள் ஐயர் உரைவரைந்தாராயினும் விசாகப் பெருமாள் ஐயரும் இணைந்தே பதிப்பித்தார் என்பது நூலின் இறுதிப் பகுதியால் வெளிப்படுகின்றது. அன்றியும் அவர்கள் முந்தையோரைப் பற்றிய அரிய குறிப்புகளும் ஆங்கு விளங்குகின்றன.

திருத்தணிகைச் சீர்கருணீகர் மடாலயத்துற்கு அதிபர் விருபாட்சையர் – இவர் குமாரர் கந்தப்ப ஐயர் – இவர் குமாரர்களாகிய விசாகப் பெருமாள் ஐயரும் சரவணப் பெருமாள் ஐயரும் அச்சிற் பதிப்பித்த திருவள்ளுவர் உரையும், திருவள்ளுவ மாலை உரையும் முற்றுப் பெற்றன.

இப்பதிப்பே திருக்குறளின் மூலமும் உரையும் கூடிய முதற்பதிப்பு எனலாம். சுவடிக்கலை 173

பின்னர்க்காலம் தோறும் மூலப்பதிப்பும் உரைப் பதிப்பும் பலப்பலர் உரைகளும் வெளிவந்துள்ளன. எல்லாப் பதிப்புகளையும், திருக்குறள்

பற்றி வெளிவந்த நூல்களையும், உரைகளையும் பட்டியல் இட்டால் ஆயிரக் கணக்கில் விரிவதாம். அப்படிப் பட்டியல் படுத்தினும் அவற்றிலும் விடுபாடு ஏற்படல் உறுதி.

எடுத்துக்காட்டு : யான் திருக்குறள் பற்றி எழுதிய நூல்கள் பற்றி முனைவர் பி.தமிழகனார் 89 என்பதைப் பட்டியல் இட்டுள்ளார். உயரிய திருக்குறள் தொண்டர் ஒருவர் 4 என்கிறார். யான் பட்டியல் இட்டால் என் பார்வைக்கு வராதவை இவ்வாறு தானே விடுபடும்?

ஒரு புல் – 2 ஆம் பகுதி

திருக்குறள் களஞ்சியம் என்பார் கடந்த நூற்றாண்டிலே வாழ்ந்தார். அவர் தாம் முதன் முதலாகத் திருக்குறளைக் கவனமாகக் கொண்டு எண் கவனம் செய்தார். அவர் பெயர் தி.ப சுப்பிரமணிய தாசு. அவர் மகனார் இராமதாசர் தம் பன்னிரண்டாம் அகவையிலேயே கவனகம் பயின்று தம் தந்தையாரோடு உடனாகிக் கவனகம் செய்தார். அதன் பின் பெருந்தகை இராமையனார் பதின் கவனகம் செய்தார். உயரிய அளவில் நாடெல்லாம் பரப்பியவர் அவரே. அவர்மகனார் கனக சுப்புரத்தினம் 16 கவனகம் செய்ததுடன் வெளிநாடுகளிலும் பரப்புகிறார்.

கவனகத்திறம் வாய்ந்தாருள் சுட்டத்தக்க ஒருவர் நூறு கவனகத்தை எட்ட இருப்பவர் முனைவர் கலை. செழியனார். கவனகம் ஆங்கிலத்திலும் செய்வதால் வெளி நாடுகளிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பரப்புதல் சிறப்பச் செய்கிறார்.

கவனகம் வல்ல ஒருவர் பெருமுனைவர் திருமழபாடி அ.ஆறுமுகனார் அவர்கள். அவர்கள் கவனகம் செய்தற்கு முன்னதாம் மனப்பாடம் செய்யும் முறையைத்தாம் பெற்ற பேறு பிறரும் பெறும் வகையில் நூலாக்கமும் புரிந்துள்ளார். அரிய வழி காட்டி நூலாக அமைந்துள்ளது. இக் களஞ்சியத்திலும் தக்க அளவில் பயன் கொள்ளப்பட்டுள்ளது.

முழுவதாகத் திருக்குறளை வரப்படுத்திக் கொண்ட முதியவர்களும் இளையவர்களும் மிகப்பலர். யான் பட்டியலிட்டு எழுதியவர்கள் குறளியத்தில் சுருக்க வரலாற்றொடு வெளிப்பட்டனர்.

அவருள் ஒருவர் தென்னிலை இராம.கோவிந்தனார். மற்றொருவர் வைரி செட்டிப்பாளையம் உழவர் இராமலிங்கனார். காலிடறிக்

கிணற்றுள் வீழ்ந்து கால் முரிந்த பொழுதும் திருக்குறளை ஓதிக் கொண்டே இருந்து பின்னே தேடிவந்தோர் கண்டு மருத்துவம் செய்து மேலும் சிறப்ப வாழ்ந்தவர் அவர். திருச்சிராப்பள்ளி திரு.இராதா அவர்கள் கவனகத் திறத்துடன், காண்பார்க்கெல்லாம் திருக்குறள் பதிவட்டை வழங்கிய பெருமையர்.

மிகமிக இளமையிலே கவனகத் திறம் பெற்ற பெருமையர் குடந்தையில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த பூவாளூர் திருவாளர் தியாகராசர் பேரர் வழிஞராம் திருமூலநாதன். அவர் நாடு சிறப்ப நன்கனம் பரப்பினார். அவரால் அறக் கட்டளை அமைக்கப் பெற்று அவர் பெற்றோர் இலக்கக் கணக்கில் திருக்குறள் ஒப்பிப்பார்க்கு ஆண்டுதோறும் வழங்கி வருகின்றனர்.

இன்னோர் இளைஞர் காரைக்குடி திரு. முத்தையா அவர்களின் மகள் வழிப் பெயரர் மீனாட்சி சுந்தரம் மூன்று வயதிலே தொடங்கி ஐந்து வயதிலே முற்றாக ஓதி, ஆங்கிலத்தில் சொல்லவும் நாலடியாரும் சிவஞான போதமும் சொல்லவும் திறம் பெற்றவர்.

உலகத் திருக்குறள் மையம் என்னும் ஓருயர் மையம் ஏற்படுத்தித் திருக்குறள் முனைவர் முதலாகப் பல்வேறு பட்டங்கள் பாராட்டுகள் வழங்கியும் ஊர்களைத் தத்தாக எடுத்துக் கொண்டு தொண்டு செய்பவரும் வள்ளுவர் கோட்டத்தில் கிழமைதோறும் திருக்குறள் பொழிவாற்றுபவரும் வல்லார்க்கு விருது வழங்குபவரும் தொய்வு இல்லாமல் வாழ்வியல் வள்ளுவம் என்னும் மாதிகை நடத்துபவரும் முனைவர் திருமிகு மோகனராசர்.

முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்திய பெருமையர் வள்ளலார் பெருமான்.

மன்னர் அரங்கில் மாக்குறள் ஒலிக்கச் செய்த பெருமையர் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் உண்டாக்கிய பெருந்தகை பாண்டித் துரையாரின் தந்தையார் மேதகு பொன்னுசாமியார். உலகத் திருக்குறள் பேரவை அமைத்துப் பட்டி தொட்டிகளிலெல்லாம் கிளைக் கழகங்களை உருவாக்கி, திருக்குறளை உயரிய பட்டி மன்றப் பொருளுமாக்கிய அமரர் மேனாள் குன்றக்குடி அடிகளார்.

திருக்குறள் வாழ்வியல் நூல் அது; தமிழர்கள் மறை நூல்; குடும்பச் சடங்குகள் அனைத்தும் திருக்குறள் வழியே நிகழ்த்தப் பெற வேண்டும்

என்பதற்குக் குறளாயம் என்னும் அமைப்பும், குறளியம் என்னும் திருக்குறள் பரப்பிய மாதிகையும், குறளாய முழுநிலவுக் கூட்டமும் நிகழ்த்திய அமரர் வேலா.அரசமாணிக்கனார்.

திருக்குறளுக்கு உயரிய கோட்டமும், 133 அடி உயரத்தில் ஏறிட்டுப் பார்க்க வைக்கும் சிலையும் பேருந்துகளில் திருக்குறள் பொறிப்பும், பொங்கலுக்கு மறுநாள் வள்ளுவர் நாளாகச் செய்தவரும் குறளேவியம் தீட்டியவரும் கலைஞர் கருணாநிதி அவர்கள்

அதன் முன்னரே மிகப் பேரறிஞர்களைக் கூட்டி ஆய்ந்து திருவள்ளுவர் ஆண்டு கிறித்தவ ஆண்டுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தீர்மானித்து, கிறித்தவ ஆண்டொடு 31 ஆண்டுகள் சேர்த்தால் அது திருவள்ளுவர் ஆண்டு என்று தீர்மானித்த பெருமை நிறைமலையாம் மறைமலையடிகளாரைச் சேர்ந்ததாம்.

மதுராந்தகத்தில் திருக்குறள் பீடமமைத்து இதுகாறும் சிறப்ப நிகழ வழிவகுத்த பெருமையர், மறைமலையடிகள் மாணவர் பாலசுந்தரமாக வந்து, இளவழகனார் ஆகி அழகரடிகளாக நிலை பெற்றவராவர்.

திருவள்ளுவர்க்கெனத் தவச் சாலை அமைத்தும் அவர்க்கென முப்பால் வழிபாட்டிடமாக மண்டபம் அமைத்து, அம்மண்டபக் கருவறையில் 380 வெண்கல்மலை, 700 சிவப்புக்கல் மலை, 250 நீலக்கல்மலை, அறம், பொருள், இன்ப விளக்கம் ஊடுமலையின் ஊடு அமைந்த குடைவில் வள்ளுவர் சிலை ! என்றும் திருவள்ளுவர் தவச்சாலை தவச்சாலையாகவே இருக்கும் என்ற மருத்துவப் பேர்த்தி மு.தமிழ்ச்செல்வி மதிவாணர் (அருள் மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி) பொறுப்பில் விட்டு என் முதுமையாலும், தனித்து இயங்க இயலாமையாலும் முன்னேயான் வாழ்ந்த மதுரை – திருநகர்க்கு வந்து – மூத்தமகனாரொடு யான் முன்னரே அமைத்திருந்த நூலக வாய்ப்புடைய இராமன் தெரு. 7 ஆம் எண், திருவள்ளுவர் நிலையத்தில் உறைந்து என் தொண்டைத் தொடர்ந்து செய்து வருகிறேன்.

இனி, திருக்குறள் களஞ்கியம் தி.ப.சுப்பிரமணியதாசு அவர்கள் கவனகக் கலையோடு திருக்குறள் பரப்பும் அவையங்களாக 31 ஏற்படுத்தினார். அவற்றுள் முதற்கண் ஏற்படுத்திய தென்காசித் திருவள்ளுவர் கழகம் தொண்ணூறு ஆண்டுகளைத் தாண்டிச் செயற்கரிய பணிகளைச் செய்து வருகிறது. அவ்வாறே அவர் மதுரையில்

தோற்றுவித்த கழகமும் தொய்வில்லாமல் தொடர்ந்து செய்து சிறப்புறுகின்றது.

தென்காசித் திருவள்ளுவர் கழகத் தோற்றம் 1927 மாசி 8, மதுரைத் திருவள்ளுவர் கழகத் தோற்றம் 21.05.1941 இரண்டு அமைப்புகளும் திருக்கோயில் சார்ந்தவை. ஆதலால் திருக்குறள் பணியொடு சமயப்பணியும் செய்து வருகின்றன. திருவள்ளுவர் ஆண்டுத் தீர்மானிப்பு அறிந்துள்ளோம். அதற்கு முன்னோடியாக இருந்தது திருவள்ளுவர் திருநாட்கழகம் என்பது. அதன் தலைவராக இருந்தவர் தாமரைத் திரு.வ.சுப்பையா அவர்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர். செயலாளர் பெருமைமிகு. காழி. சிவ.கண்ணுசாமி அவர்கள் அது மூவாண்டுகள் நடைபெற்று திருவள்ளுவர் ஆண்டுத் தீர்மானிப்புடன் அமைந்தது.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழா நாடெல்லாம் சிறப்ப நிகழ்ந்தது. அப்பொழுது சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்ட மலர் அருமை மிக்கது.

கோவை தென்மொழி ஞானபண்டிதன் அவர்கள் வெளியிட்ட திருக்குறள் சிறப்பியல் களஞ்சியம் சுட்டத்தக்க பெருமையதாம்.

குமரி முனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் போது வெளியிடப்பட்ட கோட்டம் முதல் குமரி வரை என்னும் பாரிய மலரும் சிறப்புக்கு உரியதாம்,

முன்னே கூறியவாறு எல்லாப் பதிப்புகளும். எல்லா உரைகளும், எல்லா அமைப்புகளும் எல்லா மலர்களும், எல்லாச் சிலைகளும் இதில் இடம் பெறவில்லை. இடப்படுத்தவும் இயலாது. ஏனெனில் வள்ளுவம் நொடி நொடியும் வளர்வுடையது ஆதலால்,

❖ ❖ ❖

10. திருக்குறள் கவனகம்

வீட்டுக்குள்ளேயே எண்கவனகர் விருது!

ஒருநாள் மாலைநேரம்.

அக்பர் அவர்தம் மணிமண்டபத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தபோது பல திக்குகளில் இருந்தும் அவர்தம் ஒற்றர்கள் பத்துப்பேர் அம்மணிமண்டபத்தை அடைந்தனர். அந்தப் பத்து ஒற்றர்களுக்கும் அடையாளமாக எண்கள் கொடுக்கப்பட்டிருந்தன. பதின்மரும் ஆளுக்கொரு செய்தியைக் கொண்டு வந்திருந்தனர் அச்செய்திகள் அக்பரிடம் பின்வரும் வரிசையில் கூறினர்.

முதலில் '2' ஆம் எண்கொண்ட ஒற்றன்

செய்தியைக் கூறினான்.

பிறகு '8' ஆம் எண் கொண்ட ஒற்றன்

செய்தியைத் தெரியப்படுத்தினான்.

அடுத்து '3 ஆம் எண் கொண்ட ஒற்றன்

தன் செய்தியைச் சொன்னான்'

அப்புறம் '10' எண் கொண்ட ஒற்றன்

தன் செய்தியை இயம்பினான்.

இவ்வாறு 5, 1, 4, 6, 9, 7 என்னும் முறையில் ஒற்றர்கள் செய்திகளைக் கூறினார்கள்.

பிறகு அக்பர், அவ்வொற்றர்களைப்பார்த்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 எனும் வரிசையில் ஒற்றர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் வந்த வரிசை, கொணர்ந்த செய்தி என்று அத்துணைத் தகவல்களையும் மிகச் சரியாகச் சொல்லி முடித்தார்.

இதன் பின்னர் ஒற்றர்களும் சென்று விட்டனர் என்று உதவித் தலைமையாசிரியை **செல்வி கல்யாணி** அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அப்போது எப்படி அக்பர் அவற்றை மிகச் சரியாகச் சொன்னார் எனும் வினா என்மனத்தில் எழுந்தது. அன்று முழுவதும் அதே

சிந்தனையாக இருந்தேன். என் தந்தையாரிடமும் தாயிடமும் கூறிக் கூறிவியந்தேன். அந்த நேரத்தில் என் தந்தை "அது மாதிரி உன்னால் கூடமுடியும்" என்று சொன்னார்.

அந்தச் சொற்கோவை தான் **சிப்பிக்குள் விழுந்த சிறு மழைத்துளியாக என் மனத்தில்** விழுந்தது. அன்றிருந்து முத்து உருவாகத் தொடங்கியது.

02.11.1996 அன்று அந்த முத்து வெளிவந்தது. அன்று மாலை தமிழ்ச் சான்றோர் பேரவையில் திரு. கனக சுப்புரத்தினம் அவர்களின் 18 கவனக நிகழ்ச்சி நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சிக்கு நானும் என் தந்தையும் சோழன் அண்ணனும் சென்றிருந்தோம். அவர்தம் நிகழ்ச்சியைப்பார்த்துக் கொண்டிருக்கும் போதே என்தந்தையிடம், "அப்பா இதுபோல் நானும் செய்வேன்; நானும் செய்வேன்" எனக் கூறிக் கவனக நிகழ்ச்சியை அப்போதே செய்யும் நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்தேன்.

என் தந்தை என்னை அங்கு அமைதி காக்கும்படி கூறினார். நிகழ்ச்சி முடிந்து வீட்டுக்குச் சென்றபின் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நிகழ்ச்சியை முழுமையாகக் கவனி என்றார்.

அதன் படியே,

வீட்டுக்கு வந்தவுடன் என் தந்தையை வினாக்கள் விடுக்கச் சொன்னேன். அவர் வினாக்களை விடுக்க நான் அவற்றுக்கெல்லாம் மிகச் சரியாக விடையளித்தேன்.

மாலை 18 கவனக நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு வந்தநான் அன்றிரவே 8 கவனங்களைச் செய்யத் தொடங்கினேன்.

1. எண் கவனகம்
2. எழுத்துக் கவனகம்
3. வண்ணக் கவனகம்
4. பெயர்க் கவனகம்
5. கூட்டல்
6. பெருக்கல்

7. தொடுதல்

8. ஈற்றடிக்கு வெண்பா இயற்றல்

முதலிய எட்டுக் கவனகங்களைச் செய்து வெற்றிபெற்றேன். அப்பொழுதே என் தந்தையிடமிருந்து 'எண் கவனகர்' என்னும் பட்டம் பெற்றேன்.

இத்தூண்டலும் துலங்கலும் எழுபதின் கவனகர் முனைவர் கலை. செழியனார் இயற்றிய

நினைவாற்றலில் மனப்புரட்சி

என்னும் நூலின் 24-26 ஆம் பக்கச் செய்திகளாம். இந்நூல் இவர்தம் 16 ஆம் அகவையில் எழுதியது.

"தமிழ்வேதாவதானம்"

என்னும் **திருக்குறள் அட்டாவதானம்**

கோவை கர்னாடிக் தியேட்டரில் 17.10.1943 கடைசி ஞாயிறு காலை 9.30 மணிமுதல்

மதுரை திருக்குறள் அட்டாவதானியார் திரு. சுப்ரமணிய தாசு அவர்கள்.

திருக்குறள் அட்டாவதானம் என்னும் ஓர் நவீன மனோதத்துவ அற்புத ஆராய்ச்சியைச் செய்து காண்பித்து யாவர்களையும் மகிழச் செய்வார்கள்.

இம்மாதிரி புதியமனோ சக்தியையுடைய வேதாவதானம் வல்லார் உலகிலேயே 2 பேர்கள் தாம் இருக்கின்றனர். ஒருவர் அமெரிக்கா தேசத்து நிபுணரான **ரிச்சர்டு எட்ரிக்** என்பவர். மற்றவர் இந்நகரின்கண் விசயம் செய்திருக்கும் திருக்குறள் அட்டாவதானியார் திரு.தி.ப.சுப்பிரமணியதாசு என்ற தமிழ்நாட்டினர்.

திருக்குறள் அட்டாவதானக் கேள்விக் குறிப்பு

1. திருக்குறளிலேயுள்ள 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரை மாத்திரம் சொல்லி அப்பெயர் கொண்ட அதிகாரத்தின் எண்யாது என்று இம்மாதிரி 133 அதிகாரங்களின் பெயராலும் கேட்பது.

2. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணை மாத்திரம் சொல்லி அவ்வதிகாரத்தின் பெயர் யாது என்று இம்மாதிரி 133 அதிகார எண்களைக் கேட்பது.

3. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி இப்பெயருள்ள அதிகாரத்தின் 5-ஆவது குறள்யாது? 9-ஆவது குறள்யாது? என்று இம்மாதிரி 133 அதிகாரப் பெயர்களால் 1330 பாக்களிலும் அவரவர் பிரியம் போல் கேட்பது.

4. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணைச் சொல்லி அதாவது 85-ஆவது அதிகாரத்தில் 10 ஆவது குறள் யாது? 133 - ஆவது அதிகாரத்தில் 8-ஆவது குறள் யாது? என்று இம்மாதிரி 133 அதிகார எண்களால் 1330 பாக்களிலும் பிரியம் போல் கேட்பது.

5. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் எண்ணைச் சொல்லி அடியில் வருமாறு கேட்பது : அதாவது 63-ஆவது அதிகாரத்தில் தலைகீழாய் மூன்று கூறுக. 27-ஆவது அதிகாரத்தில் 3 குறள் தலை கீழாக் கூறுக என்று இம்மாதிரி 133 அதிகாரங்களிலும் தலைகீழாகக் கேட்பது.

6. யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி அதாவது கல்வி என்ற அதிகாரத்தின் 5 குறள் பாக்களைத் தலைகீழாய்ச் சொல்லுக என்று 133 அதிகாரப் பெயர்களால் தலைகீழாய்க் கேட்பது.

7. திருக்குறளிலேயுள்ள 1330 எண்களில் யாதாம் ஓர் எண்ணைக் கூறி 1213 ஆவது குறள்யாது? 937 ஆவது குறள்யாது ? 683 ஆவது குறள்யாது என்று இது மாதிரி 1330 எண்களிலும் அவரவர் பிரியம் போல் கேட்பது.

8. 133 அதிகாரங்களில் யாதாம் ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி அதன் முதற்பாட்டும் கடைசிப் பாட்டும் சொல்லுக என்று இம் மாதிரி 133 அதிகாரங்களிலும் அவரவர் பிரியம் போல் கேட்பது. இக் கேள்விகளுக்கெல்லாம் உடனுக்குடன் உரையுடன் பதில் அளிக்கப்படும்.

நூல் : கவனக்கலை 90-91

இது தொடக்க நாள் கார்த்திகை விளக்கு எனப்படும் கிழியஞ்சட்டி போல்வது எனினும் அவ்விளக்கும், அவர் தோற்றுவித்த திருக்குறள் அமைப்புகளுமே இந்நாள் திருக்குறள் கலங்கரை விளக்காக விளங்க ஏற்றப்பட்ட மூல ஊற்றுக் கண்ணம்.

இந்நாளில் மேற் சுட்டிய எண்கவனகம் செய்வார் ஆயிரக்கணக்கில் உளர். இற்றைப் பேரொளி விளக்கங்களை எண்ணி அதற்கு மூலமாக கிழியஞ்சட்டி விளக்கைத் தள்ளிவிடக் கூடாது என்பதால் தானே, கார்த்திகைத் திருவிழா விளக்குகளும். விளக்கணி நாள் (தீபாவளி) விளக்குகளும் கிழியஞ்சட்டி விளக்குகளாக வைப்பது என்பதை எண்ணுக கவின் கலையைப் பயன்கலை ஆக்கிய முன்னவர் தி.ப.சு. என்க.

❖❖❖

11. நினைக்கும் நெஞ்சம் !

செயலுக்கு முதற்படி நினைத்தல் – ஆர்வத்தொடு நினைத்தல் திருக்குறளை வாழ்வியலாக்க ஆர்வமுடையார்க்குத் தூண்டலாம் வழிகள் இவை :

1. ஆலமரம்

ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைகளுடையதோர் ஆலமரம்.

அந்த மரத்தில் சில கிளைகளில் ஏற முடியாதெனச் சிலர் திகைப்படைந்தால் அந்தக் கிளைகளில் மட்டும் ஏறாமல் அவர் இருந்துவிட்டுப் போகட்டுமே!

அவரே ஒருநாள், அந்தக் கிளைகளிலும் ஏறமுடியும் என்று துணிவு கொண்டால் அப்பொழுது அவற்றில் ஏறட்டுமே!

அக்கிளைகளிலும் ஒன்று ஒன்றாகத்தான் முயன்று ஏறமுடியும் என்றால், அதனை அவர் நிலைக்குத் தக்கவாறு அவரே முடிவெடுத்து ஏறட்டுமே!

அந்த ஐந்தாறு கிளைகளிலும் அவர் கட்டாயமாய் ஏறியாகவேண்டுமென வற்புறுத்தி, அதனால் அந்த ஆலமரத்திற்கு உரிமை இல்லாதவராக-அப்பாற்பட்ட வராக-ஆக்குவானேன்?

அச்செயல் ஒருவரை மட்டுமன்றி ஒரு கூட்டத்தையே-பெருங்கூட்டத்தையே-ஆலமரத்திற்கு அப்பாற் பட்டவராகவே ஒதுக்கிவைத்த குற்றம் ஆகிவிடாதா?

ஆம் திருக்குறள் ஆலமரத்தைத்தான் சொல்கிறேன்.

2. ஊன்றுகோல்

நூற்றுக்கு நூறும் ஏற்றுப் போற்றத்தக்கது-ஏற்றுப் போற்ற வேண்டும்-என்று எந்தச் சமய நூலாவது கட்டுப்பாடு விதித்தால், அச்சமயத்தைச் சார்ந்து எத்தனை பேர் இருப்பர்?

வழுக்கு நிலத்தில் நடப்பவன் சறுக்காமல் நடக்கவேண்டும் என்பதற்குத் தானே ஊன்று கோலைப் பிடிக்கிறான்.

அந்த ஊன்று கோல் உள்ளபோதும் சறுக்கி விடுவதில்லையா?

அப்பொழுது, அருளமைந்த உள்ளத்தான் என்ன சொல்வான்?

அப்பா ஊன்றுகோலை இன்னும் வலுவாகப் பிடி, காலை இடம் பார்த்து வை; விரைவு படுதல் இல்லாமல் அடுத்த அடியை எடுத்து வை; நம்மால் சறுக்கல் இல்லாமல் நடக்க முடியுமென எண்ணி உன் நாடி நரம்புகளில் வலுவேற்று; சறுக்கிச் சறுக்கி உறுதிவாய்த்த பின்னர்த்தான் சறுக்காமை உண்டாகும் என்று சொல்லித் தேற்றுவான் அல்லனோ?

அவன் சறுக்குகிறான் என்பதற்காகக் கோலையே பறித்துக் கொண்டால் முறைமையாகுமா?

அது நடக்கவைக்க விரும்பும் நல்லோன் செயலாகுமா?

திருக்குறள் ஊன்று கோல் பயன்பாட்டுக்கும் இவ்வெண்ணம் வேண்டாவா?

3. நடைப்பயிற்சி

பேரனையோ, பேர்த்தியையோ இருவரையுமோ கையில் பிடித்துக் கொண்டு நடந்து செல்லும் தாத்தா எப்படி நடக்கிறார்?

அந்தக் குழந்தைகள் நடைக்கும் குறுகுறு நடையாய் நடக்கிறாரே! தமக்கு முன்னர் அவர்கள் நடக்க ஓடவிட்டு உவப்பாகச் செல்கிறாரே!

ஆனால் அக்குழந்தைகளின் காலெட்டுக்கு மேலே அவர் நாலெட்டு வைத்தால்!

அடுத்தநாள் நடைக்கு அழைக்கும்போது வராமலே எட்டெட்டுத் தள்ளிப் போய்விடுவார்களே!

நடை தெரிந்த தாத்தா, தம் நடையைக் குறைத்துக் காட்டிக் குழந்தைகள் நடையைப் பெருக்கிக் காட்டுவார்.

தாத்தாவை முந்தும் மகிழ்ச்சியிலே அவர்கள் நடக்கப் புறப்பட்டால் அவர்க்கு முந்திப் புறப்பட்டு அவர் கையைப்பற்றிச் செல்வர்.

இம்முறை, அறிவறிந்த தாத்தா நடைமுறை !

ஓட்டம் வேண்டும்; விரைவு வேண்டும்; முந்த வேண்டும்; பரிசு வேண்டும்; பாராட்டு வேண்டும் என்பவற்றையெல்லாம் மறந்தவரா தாத்தா?

இல்லை! நினைந்ததால் தான் இப்படி நடைபயிற்றுகிறார். உலகநடைப் பயிற்சி–உலக ஓட்டப் பயிற்சி–வேண்டும் என்பதற்காக

அதுவும் ஒரு காலத்தில் ஒரு சிலர்க்கு வேண்டும் என்பதற்காக- தவழ்பவர் - குறுநடையர் - மென்னடையர் - மெதுஓட்டமுடையவர் ஆகியவரையெல்லாம் ஒதுக்கிவிடத் தாத்தா நினைத்தல் இல்லை. அனைவரையும் அரவணைத்து உயர்த்துவதே அவர் நோக்கம்.

திருவள்ளுவர் நடைபயிற்றும் தாத்தா போன்றவர்.

உலகம் ஏற்றுப் போற்றவேண்டும்!

உலகம் ஏற்றுப் போற்றத், தாமே ஏற்றுப் போற்றும் பரப்புநர் வேண்டும்!

அதற்குத் தூண்டுதல் திருக்குறள் 'நம் மறை' என்னும் குறிக்கோள்!

4. சமைத்தல்

தாய் சோறாக்குகிறார்;

சோறாக்கும்போது அவர்க்குள்ள எண்ணங்கள் தாம் எத்தனை? குடும்பநிலையை எண்ணுகிறார்!

பொங்கிப் பொரித்தலாலேயே குடும்பத்தை வறுமைக்கு ஆளாக்கி விடக்கூடாது. சிக்கனம் வேண்டும்:

சிக்கனம் கருமித்தனமாகியும் விடக்கூடாது!

வருவாய்க்குத் தக்க வகையில் உணவுச் செலவு முதலியவை இருத்தல் வேண்டும்.

இவற்றையெல்லாம் எண்ணுகிறார்.

செலவைக் கருதும் வேளையில் குடும்பத்தவர் உடலையும் கருதுகிறார்.

குழந்தை, வளரும் பிள்ளை, உழைப்பவர், முதியர், நோயர்- இவர்களுக்குத் தக்க உணவு வேண்டுமே!

அந்தச் சிக்கனத்தோடு இந்தச் சீர்மையும் அல்லவோ அவரைச் சுற்றிச் சுழல்கின்றது.

இவ்வளவுடன் அமைகிறதா தாயுள்ளம்?

கீரைக்கறியாக இருந்தாலும் எத்தனை சுவையாக ஆக்குகின்றது.

அத்தனைபேர் நாக்கும், அத்தனைபேர் உடல் நலமும், அத்தனைபேர் தேவையும் தாமே உணர்ந்து உணர்ந்து, நினைந்து நினைந்து, பழகிப் பழகிப் போன கைத்திறத்தில் சமைத்து வைக்கின்றாரே!

விருந்துக்கு விருந்தாய் மருந்துக்கு மருந்தாய்

உணவாக்கும் அவர், உணவை மட்டுமா ஆக்குகிறார்!

உணர்வையும் சேர்த்தன்றோ ஆக்குகிறார்.

தாயுள்ளத்தில் நின்றன்றோ அறநூலை ஆக்கியுள்ளார் திருவள்ளுவர். அதன் பயன்பாடு கருதித்தானே ஆக்கினார்!

5. படைத்தல்

தாய், தாம் ஆக்கிய உணவையும் தான், எப்படி எப்படி எல்லாம் ஊட்டுகிறார்; படைக்கிறார்;

ஆக்குமுன் எண்ணிய எண்ணம்; ஆக்கும் போது இருந்த உணர்வு; படைக்கும்போது உள்ள கருத்து;

இவற்றை எண்ண எண்ண அத்தாய்ப் பிறப்பின் அருமையும் பெருமையும் எப்படிப் பளிச்சிடுகின்றன.

வள்ளுவர் உள்ளம் எளிய உள்ளமா?

அவர் உணர்வும் எளிய உணர்வா?

அவர்க்கு எவ்வளவு பெரிய உள்ளம். எவ்வளவு மேலோங்கிய உணர்வு!

குடும்ப அளவில் நிற்கும், தாயுள்ளமா வள்ளுவர் உள்ளம்? உலகாக விரியும் பேருள்ளமன்றோ அது! அதுதானே தெய்வ உள்ளம்!

உடல் வளர்க்கும் சமையலா ஆக்கினார் வள்ளுவர்?

உயிர் வளர்க்கும் சமையல் அன்றோ செய்தார்!

காலமெல்லாம் உலகோர் நலம் கருதிய கருத்தே கருவாகக் கொண்டு அன்றோ திருக்குறள் சமையலைச் செய்தார்!

உயிர் வளர்க்கும் அச்சமையலையும் எவ்வளவு சுவையாய் எவ்வளவு சிக்கனமாய்–எவ்வளவு தகவாய்அமைத்தார்!

எவ்வளவு அருமையாக எடுத்தும், அணைத்தும், படைத்தும், உவப்பித்தும், ஆட்டியும், காட்டியும் ஊட்டினார்.

அன்று மட்டுமா ஊட்டினார்;

இன்றும் ஊட்டுகிறாரே!

என்றும் ஊட்டுவாரே!

அவ்வூட்டம் கொண்டு ஊற்றம்பெற வேண்டாவா!

பிறர் ஊற்றம்பெற நாம் எடுத்தெடுத்து ஊட்ட வேண்டாவா!

நேற்றைக் கறியும் குழம்பும் பழங்கறி பழங்குழம்பு!

அப்படிப்பட்ட பழையதா வள்ளுவம்!

என்றேனும் ஆறிப்போவதா? அலந்து போவதா? கைத்துப்போவதா? கசந்துபோவதா?

'என்றும் புதியது' என்றானே ஒருவன் வள்ளுவ மாலையில்! அத்தகைய புத்தம் புதிதன்றோ அது!

பரிவோடு ஆக்கிவைத்த அப்புதுவிருந்தை, ஆக்கியவர் உணர்வறிந்து படைக்கும் பரிமாறிகள் வேண்டும்!

அப்பரிமாறிகள் 'வள்ளுவக் குடியிருப்புகள் ' என்னும் உணர்வு வருமாறு வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டும்!

எவ்வளவு சிறந்த விருந்தாயினும் என்ன? படைக்கும் முறையில் அன்றோ, அந்த ஆக்கியின் அருமையும் தேக்கிக்கிடக்கின்றது.

இன்று வேண்டுபவர், வள்ளுவ விருந்தை வகையாகப் பரிமாறவல்ல பரிமாறிகள்!

வள்ளுவச் சுடராய் வந்துவழங்கும் பரிமாறிகள் உண்டானால்- பெருக்கமானால்-வையகச் சமயமாவது வள்ளுவச் சமயமே என்பது உறுதியாகிவிடும்.

6. அறிவுப் பூங்கா

விந்தைமிகு பூங்கா திருக்குறள்

அனைத்தும் அனைத்தும் வாடாச் செடிகொடி மலர்களால் அமைந்த பூங்கா!

எங்கும் புகுவாய் (வாயில்) எங்கும் கட்டில்லா உரிமை!

காலம் நேரம் காவல்- எதுவும் இல்லாத தனிப்பெரும் பூங்கா!

பொதுப்பூங்கா! நறுமணப் பூங்கா!

ஆர்வக் கட்டணம் ஒன்றன்றி,

அயற்கட்டணம் இல்லாத அறிவுப் பூங்கா!

அதனுள் போகக் கூடாதா? போற்றி நலம் பெறக்கூடாதா?

7. உலக வைப்பகம்

திருக்குறள் உலக வைப்பகம்!

அதுமுதலும் தரும் வட்டியும் தரும்!

வட்டிக்கு வட்டியும் வாரி வாரி வழங்கும்!

உள்ளூர்த் தேவையா, உண்ணாட்டுத் தேவையா!

உலகத் தேவையா, – உடனுக்குடன் உதவும்!

ளங்கும் உடனிருந்தும்–ளங்கும் உடன்வந்தும் –

ஒன்றி உறைந்தும்–வேண்டும் போதெல்லாம்

வேண்டுமளவுக்கு–நேயத்தால் வழங்கும், நிகரிலா வைப்பகம் அது.

ஆளர் இன்றி ஆளாளுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆரார்க்கும் வழங்கவும்

வள்ளுவ வள்ளல் வழங்கிய ஒப்பற்ற வைப்பகம் அது. வாரிக் கொண்டும் வழங்கியும் வாழ்வோமா?

8. துறைவாரி அங்காடி

நகர் தோறும் துறைவாரி அங்காடிகள் (Departmental Stores) உண்டு

தொகுப்பங்காடிகள் (Complex) உண்டு

திருக்குறள் ஒப்பற்ற துறைவாரி அங்காடி! தொகுப்பங்காடி!

அவரவர் துறைக்கும் தேவைக்கும். தகத் தேர்ந்து தேர்ந்து அதில் எடுத்துக் கொள்ளலாம்; போற்றிப் பயன் கொள்ளலாம்.

பலப் பல இடங்களுக்கும் அலையும் காலக்கழிவும் செலவும் இல்லாமல் கைப் பொருளெனக் கருதிக் கருதி எடுத்துக் கொள்ளலாம்!

தேவைக்குத் தக எடுத்துத் தேவைக்குத் தகப் பயன்படுத்திக் கொள்ளலாம்! இருப்புச் சரக்காகவும் வைத்துக் கொள்ளலாம். இவற்றைச் செய்வோமா?

9. பாகு

சொல்லத் தெரிந்தவர்க்குக் கருத்து இருப்பது இல்லை;

கருத்து இருப்பவர்க்குச் சொல்லத் தெரிவது இல்லை;

சுருக்கமாகச் சொல்லத் தெரிந்தவர்க்குப்

பெருக்கமாகச் சொல்லத் தெரிவதில்லை;

பெருக்கமாகச் சொல்லத் தெரிந்தவர்க்குச்

சுருக்கமாகச் சொல்ல வருவதில்லை;

இலக்கணம் தெரிந்தவர்க்கு இலக்கியப் படைப்பு அருமை;

இலக்கியப் படைப்பாளிக்கு இலக்கணத் தெளிவு இடர்;

பொருள் தெளிவுக்குக், கட்டுப்பாடான யாப்புத் தடை

யாப்புக் கட்டுப்பாட்டுக்குச் சொல்லும் சுவையும் முட்டடி:

– இவ்வெல்லா இடர்களும் இல்லாமல், எவரும் போற்ற வெளிப்பட்ட பாகு நூல் திருக்குறள்!

பாகு எனினும் பயன்படுத்தினால் தானே பாகு?

10. உருவுகதிர்

உடலை ஊடுருவி உள்ளுறுப்பை ஒளிப்படமாக்கிக் காட்டும் உருவுகதிர் (XRAY) அறிவியற் கொடை!

ஆனால், உள்ளத்தின் உள்பொருளாம் உணர்வைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்ட வல்ல உருவுகதிர் உண்டோ?

உண்டு அது தான் திருக்குறள்!

திருக்குறளாம் உருவுகதிர்ப் படங்கள் ஒருவர் ஒளிப்படங்களா? இருவர் ஒளிப்படங்களா?

உலகோர் ஒட்டுமொத்தப் படங்கள் அல்லவோ அவை!

தமிழகம் உணர்ந்துளதா அதனை?

தமிழுலகு உணர்ந்து போற்றினால் அல்லவோ முழுதுலகும் உணர்ந்து போற்ற ஒரு வாய்ப்பாம்!

11. உயிர் தளிர்த்தல்

பழகுந் தோறும் பண்புடையாளர் நட்பு

பளிச்சிட்டு வளரும்.

முழுகுந் தோறும் மீள மீள முழுகவேண்டும்

என்னும் ஆர்வத்தை அருவி பெருக்கும்.

தழுவுந் தோறும் தகவார்ந்த இன்பத்தைக்

காதல் மனைவாழ்வு ஊட்டும். கேட்குந்தோறும்

கிளர்ச்சியுண்டாக்கிக்

கிறு கிறுக்க வைக்கும் மழலைமொழி.

இவற்றையெல்லாம் வென்று,

உடலும் உள்ளமும் உணர்வும் ஒருங்கே மகிழச் செய்து உயிர்தளிர்க்க வைக்கும் ஒப்பற்ற இன்ப அமிழ்து திருக்குறள்! உயிர் தளிர்க்க வாய்த்த அவ்வமிழ்தை அருந்துவோமா நாம்?

12. உயிர் மருந்து

காய்ச்சலிலே எத்தனை வகை?

கடுப்புகளிலே எத்தனை வகை?

தடுமனிலே எத்தனை வகை?

தவிப்புகளிலே எத்தனை வகை?

– இத்தனை வகைக்கும் மருந்து தேடி வைத்த இலவயக்கடை ஒன்று உண்டோ?

உண்டாயினும், அக்கடையினும் உயர்கடை – உயிர் மருந்துக்கடை திருக்குறள் கடை!

மாந்தர் மனத்துக்கண் உண்டாம் அத்தனை நோய்களுக்கும் மருந்து அங்கு உண்டு.

அம்மட்டோ; அந்நோய்கள் வாராதிருக்கத் தடுப்பு மருந்தும் உண்டு.!

ஒவ்வொருவர் நிலைக்கும் – நோய் நிலைக்கும் – தகத்தக உரிய மருந்துகளைச்–சுவை விருந்தென வழங்க உயிரிரக்க மருத்துவர் வள்ளுவப் பெருந்தகையும் உண்டு!

இம், மருத்துவ உலகப் புதுமை, உலகப் பொருள் ஆக வேண்டுமே ஆக்கப்படவேண்டுமே!

13. அமுதசுரபி

அருளாளியாம் ஆபுத்திரன்கை அமுதசுரபி இன்று இல்லையோ?

அணிமேகலையாம் மணிமேகலை யார் கை அமுதசுரபி இன்று இல்லையோ?

உண்டு! உண்டு! இன்றும் உண்டு! என்றும் உண்டு!

உலகம் உள்ள அளவும் உண்டு! அள்ள அள்ளக் குறையா அருமையும் உண்டு!

அது திருக்குறளாம் அமுத சுரபியாம்.

வானின்றுலகம் வழங்கிவரும் அமுத மழை போல மண்ணின் மதிநலச் சுரப்பெல்லாம் ஒன்று திரட்டிப் பொழியும் அமுதசுரபி அது!

ஆராச்சுவையை எடுத்தெடுத்தூட்டி, உள்ளு தோறும் உள்ளுதோறும் உள்ளத்தே இன்ப ஊற்றெடுக்க உவப்புறுத்தும் அமுதசுரபி! எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்புறத் தமிழ் மண்ணிலே வாய்த்த அமுதசுரபி திருக்குறள்! அதனைத் தருவாரும் வேண்டும் பெறுவாரும் வேண்டும்!

14. மணிப்பேழை

முத்துக் குளித்தென்ன?

மணியைக் கழுவியென்ன?

வயிரத்தைப் பிளந்தென்ன?

பொன்னை எடுத்தென்ன?

இவையெல்லாம் புறக் கோலப் பொருளுக்கே புனைவுக்கே பயன்படும்!

ஆனால், அகக் கோலத்திற்கன்று–அகவாழ்வுக்கே அருங்குவைப் பொருளாக– அரிதின் அரிதாகக் குளித்தும், கழுவியும், பிளந்தும், பட்டை தீற்றி எடுத்தும் வள்ளுவரால் வழங்கப்பட்ட மணிகளைக் கொண்ட பேழை திருக்குறள்! அதனைக் கொள்வார் செல்வர்; கொடுப்பாரோ பெருஞ் செல்வர்

15. என்ன இல்லை?

ஒன்றிருந்தால் ஒன்றில்லை என்பர்.

சுவை இருந்தால் கருத்து இல்லை!

கருத்து இருந்தால் சுவை இல்லை!

செறிவு இருந்தால் புரிவு இல்லை;

புரிவு இருந்தால் செறிவு இல்லை!

தெளிவு இருந்தால் திருத்தம் இல்லை!

திருத்தம் இருந்தால் தெளிவு இல்லை!

வாழ்வு இருந்தால் வனப்பு இல்லை;

வனப்பு இருந்தால் வாழ்வு இல்லை!

கற்பனை இருந்தால் அடிப்படை இல்லை;

அடிப்படை இருந்தால் கற்பனை இல்லை;

பழமை இருந்தால் புதுமை இல்லை;

புதுமை இருந்தால் பழமை இல்லை!

பண்பாடு இருந்தால் பயன்பாடு இல்லை!

பயன்பாடு இருந்தால் பண்பாடு இல்லை!

– இப்படி ஒன்றிருந்தால் ஒன்றில்லை என்பது

பிற நூல்களுக்கு, திருக்குறளுக்கு அன்று!

வேண்டும் வனப்பெல்லாம் ஈண்டியமைந்தது இன்பத் திருக்குறள். எவருக்கு? வனப்பை விரும்பும் வளமையர்க்கு!

16. பிறந்தமண்

பாட்டனாரின் பழங்கண்ணாடியையும்,

பாட்டியின் பழம் பட்டுத்துணியையும் பாராட்டும்

உலகம், –

தந்தையும் தாயும் வைத்துச் சென்ற

கையகல வீட்டையும் உரிமை கொண்டாடி

உவக்கும் உலகம்,

அன்பரும் நண்பரும் ஆர்வத்தால் தந்த

சிறுபொருளையும் பெரும்பரிசாகப் போற்றிக் காக்கும் நன்மனம்.

உலகெல்லாம் கூட்டுண்டு

ஒழுக்கத்தின் தலைமணியாகக்

கொள்ளத்தக்க ஒருநூலை – திருக்குறளைப் போற்றிக் கொள்கின்றதா?

அது தோன்றிய மண்ணிலே தோன்றிய பேற்றை எண்ணித் திளைக்கின்றதா?

போற்றி மகிழ்ந்து திளைக்கும் நாள் எந்நாள்? அந்நாள் நன்னாள்!

17. பழஞ்சோறு

நேற்றைச் சோறு, பழஞ்சோறு !

ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளாம் நம்மறை

இன்றும் புதிது!

நாளையும் புதிது!

என்றும் புதிது!

சோறு – உடலை வளர்க்கும்!

உடலிலாது உணர்வுண்டோ? என்பர். ஆனால்,

உணர்வில்லா உடலால் ஆவது என்ன?

நடமாடுதலால் மட்டும் மாந்தராகிவிடமுடியுமா?

எத்தனை உயிர்கள் நடமாடுகின்றன–ஊர்கின்றன – பறக்கின்றன! உணர்விலா மாந்தரை! 'மக்களே போல்வர்' என்பதன்றோ திருக்குறள். உணர்ந்து போற்றுவோமா?

18. நயத்தகு நூல்

படிக்கப் படிக்கப் – படித்ததைப் பிறர்க்கு எடுத்துரைக்க உரைக்க– நூலின் நயம் சிறந்து விளங்கும்.

இது ''நவில் தொறும் நூல் நயம்' எனத் திருக்குறளில் சொல்லப்படும்.

இத்தகைய நூல் நயத்திற்கு–நயத்தகு நூலுக்கு – எதைத் தேடுவது?

"என்னைப்பார்! நானே சான்று" என்று நமக்குத் தன்னைக் காட்டி நிற்கின்றதே திருக்குறள்!

ஈராயிர ஆண்டுகளின் அறிவு வளர்ச்சி–குமுகாய வளர்ச்சி– எத்தனை விரிந்தது! அது விரிய விரியத் தானும் விரிந்து தன்னைப் பெருக்கிக் காட்டுகிறதே திருக்குறள்!

"நீ வளர்கிறாயா? வளரும் அளவு எவ்வளவோ அவ்வளவு நானும் வளர்கின்றேன்என ஒவ்வொருவர்க்கும் தக வளர்ந்து செல்கின்றதே திருக்குறள்!

நவில்தொறும் நூல் நயம் போலும் என்பதனைக்

கூறிய திருக்குறளே அதற்குச்சான்றில்லையா? சான்றின் பயன் என்ன? ஏன்று கொள்வது தானே!

19. அறிதோறும் அறியாமை

அறிய அறியத்தான் அதுவரை அறியாதது எது என்பதை அறிந்து கொள்ள முடியும்!

பல்லாயிரம் நூல்களைப் படித்த பின்னர்த் தான், தாம் இதுவரை படியாதிருந்தவற்றைப் பற்றிய அறியாமை தோன்றும்!

எண்ணி எண்ணித் தேர்ந்த முடிவில் தான் எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்; அது "எனக்கு ஒன்றும் தெரியாது என்பது" எனச் சொல்ல முடியும்.

திருவள்ளுவரோ " அறிதோறும் அறியாமை கண்டற்று " என்கிறார்!

அறிதோறும் அறியாமை காட்டுவதற்கு வாய்த்த நூல் திருக்குறள் போல ஒன்று உண்டோ?

அதனுரைக்கு அதுவே சான்றாகத் திகழ்தல் எத்தகு பெருமையது நாமும் அறிந்து அறிந்து நம் அறியாமை காண்போமா ?

20. அவை அவை

விரும்பிய போதில் எல்லாம் விரும்பிய இன்பச் சுரப்பாகத் திகழ்பவள் இனிய இல்வாழ்க்கைத் துணைவி அதனால்,

"வேட்ட பொழுதில் அவை அவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்"

என்கிறது திருக்குறள்!

விரும்பிய விரும்பிய வாழ்வு நலங்களை – நயங்களைத் தரும் குறளுக்கு இணை எது?

அக்குறளே என்பது அறிந்தோர் ஆய்ந்தோர் தெளிவு

ஆதலால், தன் இலக்கணத்திற்குத் தானே இலக்கியமாம் பெருமையது திருக்குறள் அப்பெருமை நம் பெருமை ஆக வேண்டுமே.

21. அமிழ்து

இன்பத்தில் அமிழ்த்துவது அமிழ்து.

அவ்வமிழ்தத்தை எட்டாப் பொருளாக விண்ணவர்க்கு உரிய பொருளாகக் கண்டது தொன்ம உலகு.

ஆனால், கண்கண்ட பொருளாக, கருதும் இன்பமெல்லாம் வழங்கும் களிப்புப் பொருளாகக் காட்டுவது திருக்குறள்.

விண்ணமுது அல்லது வானமுது எது?

அது மழையே என்கிறது திருக்குறள்.

“வானின் றுலகம் வழங்கி வருதலால்”

தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று

என்பது அது!

இன்பப் பொருளாக விளங்கும் துணைவியை அமிழ்தத்தால் செய்யப்பட்டது என வள்ளுவக் காதலன் இயம்புகின்றான்.

மனைவி அமிழ்தம் ஆவது எதனால்? அவள் தலைவனின் உயிர் தளிர்ப்பச் செய்பவள் ஆதலால், அமிழ்தம் ஆகின்றாள்!

அவள் மட்டுமா அமிழ்தம்?

அவள் தரும் பால் அமிழ்து!

அவள் ஊட்டும் சோறும் அமிழ்து!

அவள் பெற்று வழங்கிய அருமைக் குழந்தையும் அமிழ்து!

அதன் மழலை மொழியும் அமிழ்து!

அவ்வமிழ்தக் குழந்தையின் கையால் பிசையப்பட்ட சோறும் அமிழ்து!

இத்தனை அமிழ்தங்களைக் கண் முன்னே வைத்துக் கொண்டு ‘இல்லாத ஊருக்கு வழி கேட்டுப் போவது போல்’ அமிழ்தக் கதை சொல்லித் திரிவானேன்?

ஒவ்வொருவர் குடும்பமும் அமிழ்த நிலையமாக அமைந்திருக்கவும் அதனை உணராமல் அங்கும் இங்கும் அலைவானேன்?

அமிழ்தக் கொள்கலமாகத் திகழ்வது திருக்குறள்!

உயிர் தளிர்க்கச் செய்வது திருக்குறள்!

ஒவ்வொரு சொல்லும், பொதி பொருள் சுமந்து குதிநடை கொண்டு திகழும் அவ்வமிழ்தம் கொண்டு நம் வாழ்வை அமிழ்தமாக்குவோமா?

22. பிறவிப்பேறு

திருக்குறள் பிறந்தது தமிழ்மண்; திருக்குறள் எழுதப்பட்ட மொழி தமிழ்மொழி; அதனை எழுதிய வள்ளுவர் தமிழ்த்தோன்றல்; ஆதலால் என்னவர் என் மண்ணில் என் மொழியில் இயற்றிய உலகநூல் திருக்குறள். அதனால் தமிழனாக, தமிழ்மொழி பேசுபவனாக, தமிழ் மண்ணில் வாழ்பவனாக இருக்கும் பேறு – பிறவிப்பேறு – பெரும் பேறாம். எவர்க்கு இது தோன்றும்?

உணர்வுடையவர்க்கே தோன்றும்! தோன்றவும் வேண்டும்!

" திருக்குறள் பிறந்த மண்ணில் பிறக்கவும், திருக்குறள் பிறந்த மொழியில் அதனைப் பயிலவும் மீள் பிறப்பு வரவேண்டும்" என்று விரும்பிய பெருமக்கள் உரையைக் கேட்டாவது உணர்வு வாராதா? தமிழ்ப் பிறவிப்பேறு தலைப்பட்டு நில்லாதா?

23. மெய்ம்மறை

போர்வீரர்கள், பகைவர் ஏவும் படைக்கலம் தம்மைத் தாக்கி இடையூறு விளைவிக்காமல் இருக்க மெய்ம்மறை (உடற்காப்பு), அணிவதுண்டு. அம்மெய்ம் மறைக்கும் மெய்ம்மறையாய் அமைந்தது நம்மறையாம் திருக்குறளாகும்.

அம்மெய்ம்மறை உடல் காத்தலால் உயிர்காக்கும்; நம்மறையாம் திருக்குறள் உடலும் காக்கும்; உயிரும் காக்கும்; குடிமையும் சுற்றமும் இனமும் ஒருங்கே காக்கும்.

மனக்காவல் காத்தலால் ஐம்பொறிக்காவலும், ஐம்புலக் காவலும் ஒருங்கே ஆக்கும்.

மெய்ம்மறை அணிந்தார்க்கு அணிந்தபோதில் காவல், நம்மறையோ நம்மோடு என்றும் உள்ளும் புறமுமாய் நின்று தானேகாக்கும் தனிக்காப்பாக அமையும்.

24. சேணறிவி

எவ்வளவோ தொலைவில் வருவதையும், மறைந்து கரவாக வருவதையும் கண்முன் காட்டிக் கடனாற்ற வைப்பது சேணறிவி (இரேடார்) ஆனால் அச்சேணறிவி காட்சிப் பொருளைக் காட்டுமேயன்றிக் கருத்துப் பொருளைக் காட்ட வல்லதோ ?

திருக்குறள் காலம் கடந்தும் இடம் கடந்தும் கருதுவார் கருத்துப் பொருள்களையெல்லாம் காட்டிக் காட்டி விழிப்புறுத்தும் அளவில் நில்லாமல் விழுப்பம் சேர்க்கவும் வல்லதாம்.

அழிவைப் படம் பிடித்துக் காட்டுவதுடன்,

ஆக்கக்குறிப்பையும் அப்பொழுது அப்பொழுதே

அறிவிக்க வல்ல அரியதில் அரிய சேணறிவியாம்.

சேணறிவி வாய்த்தும் கண்ணை மூடிக்கொண்டால் என்ன பயனாம்?

25. விளக்கு

கதிரோன் ஆகட்டும்; கைவிளக்கு ஆகட்டும்.

கதிர்விளக்குப் பகலில் மட்டுமே பயனாம். இரவுப் பயனுக்கு வேறு விளக்கு வேண்டும்.

கைவிளக்குக்கு எண்ணெய் திரிவேண்டும்; மின்வேண்டும்; பிறபிற வேண்டும்.

ஆனால், அவ்விளக்குகள் எவ்விருள் நீக்கும்?

புறஇருள் மட்டுமே நீக்கும்! அகஇருள் நீக்குமா அவை?

அக இருள் நீங்க அகத்தே ஒளிசெய்யும் ஒரு விளக்கு வேண்டும். அது திருக்குறள்,

“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு”

என்பது பொய்யா மொழி விளக்கு. அவ்விளக்குப் பெற்றார் அகவிளக்குப் பெற்றார்.

26. பொய்யா விளக்கு

குத்து விளக்கைக் கண்ட ஒருவர்
குறள் விளக்கையும் நினைத்தார்
நினைத்ததை இணைத்தார்
அதனை ஒருபாவாக நெய்தார்

அறத்துப்பால் அகலாம்; பொருட்பால் திரியாம்:

இன்பத்துப்பால் நெய்யாம்; சிறந்தசொல்லே தீயாம்;

விளக்கின் தண்டு குறட்பா வாம். இவ்விளக்கை,
வள்ளுவனார் ஏற்றினாராம். ஏன் ஏற்றினாராம்?
உலகோர் உள்ளிருள் நீக்குவதற்காக ஏற்றினாராம்.
"அறம் தகழி; ஆன்ற பொருள்திரி; இன்பு
சிறந்தநெய்; செஞ்சொல் தீ; தண்டு–குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு?
என்பது அது.

27. மாசுக்கட்டுப்பாடு

தீமைக்கு மூலம் எது?
அழிவுக்கு மூலம் எது?
பகைக்கு மூலம் எது?
பழிப்புக்கு மூலம் எது?
பாழுக்கு மூலம் எது?

எல்லாம் எல்லாம் மனத்தில் உண்டாகும் மாசே – கறையே–மூலம்.

மனமாசு நீங்கினால் செயலில் மாசுசேராது!

சொல்லில் மாசு சேராது!

கற்கும் கல்வியில், ஆளும் ஆட்சியில், செய்யும் தொழிலில், உருவாக்கும் பொருளில் மாசு சேராது.

மாசுகளுக்கு மூலம் மனமாசே! மனமாசு இல்லாமையே அறம், அன்பு, அருள், ஆக்கம் எல்லாம் எல்லாம்!

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்பது வாய்மொழி. மாசுக்கட்டுப்பாட்டிலும் மாசுக்கட்டுப்பாடு, மனமாசில்லாக் கட்டுப்பாடாம்.

அதனை அருள்வது திருக்குறளாம்.

28. சேமக்கலம்

வெப்ப நாளில் தட்பமாக்கித் தரவும்,
தட்ப நாளில் வெப்பமாக்கித் தரவும்,

வெப்பமும் தட்பமும் இல்லாமல் வைத்தது வைத்தபடி பாதுகாப்பாக வைத்திருந்து தரவும், சங்க காலத்திலே ஒருகலம் (பாத்திரம்) வைத்திருந்தனர். அதற்குச் சேமக்கலம் என்றும் சேமச் செப்பு என்றும் பெயர். வண்டியின் அச்சு ஒடிந்தால் மாற்று அச்சும், கலம் கவிழ்ந்தால் மாற்று மிதப்பும் முன்னரே கொண்டிருந்தனர். அவற்றுக்குச் சேம அச்சு, சேமக்கலம் அல்லது ஏமப்புணை எனப் பெயரிட்டிருந்தனர். இவற்றைப் போல் பண்புக்காப்பும் தற்காப்பும் வேண்டுவோர்தம் வாழ்வுக்கு முற்காப்பாகவும் முதற்காப்பாகவும் கொள்ளவேண்டும் சேமக்காப்பு முப்பாலேயாம்.

29. சுரங்கம்

பல்லாயிரம் அடிகளுக்குக் கீழே தங்கப்பாளம் தென் வடலாகப் படிந்து கிடக்கும் இடம் உண்டு. அவற்றுள் கோலார் நம் நாட்டது. நன்னூல் இயற்றிய பவணந்தியார்க்குப் புரவலனாக இருந்த 'குவளாலபுரம்' சீயகங்கன் ஆட்சிபுரிந்த பகுதி. பொன் எடுக்கும் அரிய முயற்சி பெரிது! பவழப்பாறையைக் கண்டு எடுத்து வருதலா, முத்துக்குளித்தலா, மணிவகைகளைக் கொண்டு வருதலா , வயிரச் சுரங்கத்தை அகழ்ந்து எடுத்தலா எல்லாம் அரிய முயற்சியால் அமைவன. ஆனால் அவற்றினும் சிறந்த பொன்னாய், பவழமாய், முத்தாய், மணியாய், வயிரமாய், ஏன் ஒளியமாய், ஒள்ளியமாய் (இரேடியமாய், பிளாட்டினமாய்) ஓரிடத்துக் கொள்ள இருக்கும் சுரங்கமாக–புதையலாக – கருவூலமாகத் திருக்குறள் இருக்கிறதே. அதனைக் கருத்துள்ளோர் கண்டு கொள்ளக் கூடாதா? அக்கறையுள்ளோர் அள்ளி அள்ளி வழங்கக்கூடாதா?

30. நூல் ஏணி

மலை ஏறுவதற்கும் மதில் ஏறுவதற்கும் ஆழ் கிணற்றில் இறங்குவதற்கும் 'நூல் ஏணி' பயன்படும். நூலே ஏணியாக – ஏறும்படியாக இருந்து தன்கண் ஏறுவாரையெல்லாம் ஏற்றிவிடல் வாழ்வியல் காட்சி.

நூல் கற்பிக்கும் ஆசிரியரை 'ஏணி' என்றது பிற்கால உலகம். ஆனால் பழந்தமிழுலகம் நூலையே (கற்கும் நூலையே) ஏணியாகக் கண்டது. அதிலும் அருமை வாய்ந்ததாம் ஒரு நூலைப் பற்றிக் கொண்டு நுனியேற மாட்டாதார் மயக்கம் மிக்கோராகக் கூறப்பட்டனர்.

நூல் ஏணி ஒன்று வேண்டும் என்றால், எங்கெங்கோ எவ்வெவையோ தேடித் திரிவானேன்?

திருக்குறள்போல ஒரு நூலேணி உலகில் உண்டோ? மாந்தரைப் பிரித்தும் பிளந்தும் பிணக்கியும் காட்டாத சால்பு நூல் திருக்குறளை அன்றி உலகில் ஒன்று உண்டோ? இல்லை எனின் அந்நூல் ஏணியில் ஏறினோமா? பிறரை ஏற்றினோமா?

31. சிக்குவாரி

நான்கு முடி ஒன்றாகிவிட்டால் அதற்குச் சிக்கு என்று பெயர். சிக்கை அகற்றுவதற்குச் 'சிக்குவாரி' உண்டு. சிக்கு உண்டாகிய நிலையில் அதனை எடுப்பார், அமைந்து மெல்லென ஒவ்வொன்றாக முடியைப் பிரித்து எடுத்தல் வேண்டும். விரைந்து பட்டென வெட்டினால் முடி கொட்டிப் போகும். சிக்குவாரியின் பல் ஒடிந்தும் போகும். நூல்கண்டில் சிக்கல் ஏற்பட்டாலும் அமைந்து பிரித்தல் வேண்டும்

சிக்கு நீக்கம் போன்றதே, சிக்கல் நீக்கம், அமைந்து எண்ணிப் பொறுமையாய் முயன்றால் தீராச்சிக்கல் எதுவும் இல்லை. சிக்கல் தோன்றும் போதே சிக்கல் தீர்வும் தோன்றிவிடவே செய்கின்றது. ஆனால், உணர்வு வயப்பட்டோர் உடனே மனம்போலச் செயல்பட்டு மாறாத் துயர் ஆக்கிக் கொள்கின்றனர். சிக்கல் இல்லாத ஒருவர் உண்டா? அவர்க்குச் சிக்கல் தீர்வு நாட்டம் இருந்தால் திருக்குறளை ஒதிச் சிக்கல் தீர்ப்பாராக, வாழ்வியலுக்கு வாய்த்த சிக்குவாரி திருக்குறளாம்.

32. சுவைப்பால்

பழமும் பருப்பும் இட்டு, கண்டும் ஏலமும் கூட்டிச், சுண்டக் காய்ச்சிய ஆவின்பால் சுவைமிக்கதே. ஆனால், நாளும் பொழுதும் அதனையே பருகுவாக்கு,

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்'

என்பது போல் வெறுப்பே ஆகும்.

கரும்புப்பால் என்ன, தேங்காய்ப் பால் என்ன எப்பால் ஆயினும் என்ன, அந்நிலையேயாம்.

ஆனால், எந்நாளும் புத்தம் புதுச் சுவையாய், அதன்முன் என்றும் என்றும் அறியாச் சுவையாய் அமைந்தது முப்பால் ஆகும் திருக்குறளாம். மாறும் சுவையா, மறக்கும் சுவையா அது; மாறாச் சுவை மறவாச் சுவை;

மனந்தளிர்க்கும் உயிர்தளிர்க்கும் மாண் சுவையினது முப்பால். அப்பால் இருக்க எப்பால் வேண்டும்?

33. பனிநீருள் பனை

தவசங்களுள் மிகச் சிறியது தினை

சிற்றளவுக்கு எடுத்துக்காட்டு தினை

அதற்கு எதிராம் பேரளவுக்கு எடுத்துக்காட்டு பனை.

தினையும் பனையும் திருக்குறளில் பல இடங்களில் இடம் பெறும்.

அதனை ஒருவர் உள்ளம் அசை போட்டிருக்கிறது.

அதற்கும் சிறிதாக ஒன்றை அவர் கண்டுகொண்டார்.

அது பனித்துளி; புல்லின் நுனியில் நின்றது.

அத்துளி முன் ஒருபனை! அப்பனை முழுதுறப் பனிநீரில் படமாகத் திகழ்ந்தது. அவர் வியப்புற்றார். மேலும் வியப்புற்றார்.

பனித்துளியில் பனை முழுதாகத் தெரிவது போல், குறள் வெண்பாவில் மலைமலையாம் பொருள்கள் காணரிய காட்சியாய்த் திகழ்கின்றன என்றார்.

கண்டு காட்டினால் நாம் காணக்கூடாதா?

34. ஆல வித்து

வித்து என்பது விதை; சிறியதில் சிறிய விதை ஆலவிதை, சிறிய மீனின் சிறிய முட்டைக்கும் சிறிதாம் ஆலவித்து. ஆனால், ஆலவித்தில் இருந்து விரிந்த ஆலமரம், எவ்வளவு பெரிது! ஊரே அடங்கும் மரம் அல்லவோ அது.

திருக்குறள், சின்னஞ்சிறு வெண்பாவால் தோன்றியது. அதன் பொருள் விரிவுதான் என்ன? உரைகாண்போர் அறிவு விரிவு எவ்வளவோ அவ்வளவு கொண்டல்லவோ விரிவடைகின்றது.

ஆலின் விரிவைக் காண அவாவா?

அடையாற்று ஆலமரம் காணலாமே!

“ ஆலமர் வித்தின் அருங்குறள்”

என்பது கம்பர் இரட்டுறல் (சிலேடை) அவ்வித்தினை உளம் கொண்டால், வானளாவிய ஆலினைக் கண்டு தெய்வநிலை எய்தலாமே!

ஆலில் தோன்றி ஆலில் நிறைவது, ஆலாய்ப் பறக்கும் இந்நினைக்கும் நெஞ்சம்!

❖❖❖

12. திருக்குறள்

நினைவாற்றல் வழிகாட்டி

பன்மாண் முனைவர் அ. ஆறுமுகனார்

திருமழபாடி.

முதற் படி :

திருக்குறள் முழுவதையுங் கற்று நினைவில் இருத்த வேண்டுமென்ற ஆர்வம் இருக்க வேண்டும் இவ்வார்வத்துடன் திருக்குறள் நூல் ஒன்றைச் சொந்தமாக வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். முதலிலிருந்து முடிவுவரைப் பன்முறை படியுங்கள். மேலும் படிக்க வேண்டுமென்ற உணர்வு உண்டாகும். எண்ணியர் திண்ணியராயின் எண்ணிய எண்ணியாங்கெய்தலாம் என்பது வள்ளுவர் வழி, எனவே முயன்றால் வெற்றி பெறலாம் என்ற முழு ஆர்வத்துடன் தொடங்குங்கள். முதலில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரத் தலைப்புகளையும் மனனம் செய்யுங்கள். 40 ஆவது அதிகாரம் 'கல்வி ' 73ஆவது அதிகாரம் அவையஞ்சாமை என எண்ணுடன் அதிகாரத் தலைப்பினை நினைவில் நிறுத்துங்கள். உங்களை நீங்களே கேள்வி கேட்டு விடை கூறி சோதித்துக் கொள்ளுங்கள். முடிந்தால் உங்கள் நண்பர் ஒருவருக்கும் இவ்வார்வத்தைத் தூண்டி இருவரும் போட்டியிட்டுக் கொண்டு படித்தால் ஒருவரை ஒருவர் சோதித்து ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

இரண்டாம் படி :

அதிகாரத் தலைப்புகள் முழுதும் மனனம் செய்தவுடன் முதல் அதிகாரத்திலிருந்து முறையாகக் குறட்பாக்களை மனனம் செய்யத் தெரடங்குங்கள். ஒருநாளைக்கு ஒரு அதிகாரம் மனனம் செய்யலாம். தங்களது ஆற்றலுக்கேற்ப அளவை வரையறை செய்து கொள்ள வேண்டும். இம்முறையிலிருந்து தளரமாட்டேன் என்ற உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். காலையில் மனனம் செய்த பகுதியை இரவு வரை ஒய்வு கிடைக்கும் போதெல்லாம் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நானூறு பக்க அளவுள்ள ஒரு ஏட்டினை வாங்குங்கள். முதற்படியாக மனனம் செய்த திருக்குறள் அதிகாரத் தலைப்புகளை வரிசையாக எண்ணுடன் நினைவுபடுத்தி எழுதுங்கள், சரிபார்த்துக் கொள்ளுங்கள். மனனம் செய்த குறட்பாக்களை ஒவ்வொரு அதிகாரமாகத் தலைப்பிட்டு ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒவ்வொரு அதிகாரமாக மனனம் செய்த அன்றே எழுதுங்கள். குறள் வரிசை எண். முதல் சீர், இறுதிச் சீர் இவற்றை எழுதினாலே போதும். ஏனெனில் முதல் சீரைப் பார்த்தவுடன் குறள் முழுதும் இயல்பாகவே உங்களுக்கு நினைவில் வந்துவிடுமல்லவா? இவ்வாறு எழுதும் ஏட்டுப்படி மீண்டும் திருப்பிப் பார்த்து ஆற்றலை வளர்த்துக்கொள்ள உறுதுணையாகும்.

மூன்றாம் படி :

ஒவ்வொரு அதிகாரமாக மனனம் செய்யும் போது இரண்டாம் அதிகாரம் மனனம் செய்தவுடன் முதல் அதிகாரத்தையும் சேர்த்துச் சொல்லி நினைவு படுத்தி கொள்ளுங்கள். இம்முறையில் நூற்று முப்பத்து மூன்றாவது அதிகாரம் மனனம் செய்யும்போது திருக்குறள் முழுவதையும் சொல்லிப் பார்க்க வேண்டிய நிலை வந்துவிடும். இதற்கு ஆகும் நேரம் ஒரு மணி அளவில் தான் இருக்கும் என்பதை நீங்களே பின்னர் அறிவீர்கள். இவ்வாறு பயில்வதால் ஏற்படும் பயன் யாது? எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்தக் குறளைக் கேட்டாலும் சொல்லக் கூடியவலிவான நினைவாற்றல் உங்களிடம் வளர்ந்து விடும். போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களிடம் இப்பயிற்சியில்லாததால் தான் வெற்றிபெற இயலவில்லை. இம்முறையில் திருத்குறள் முழுவதையும் மனப்பாடஞ் செய்யுங்கள்.

நான்காம் படி :

தற்போது திருக்குறளின் அதிகாரத் தலைப்புகளை எண்ணுடன் தெரியும். திருக்குறள் முழுவதும் தெரியும். எண் சொன்னால் குறள் சொல்வதற்குரிய படியை இப்போது பார்ப்போம். இதற்கு மீண்டும் அதிகாரத்தலைப்புகளை எண்ணுடன் நினைவு படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு அதிகாரத்திலும் முதற்குறள், கடைசிக்குறள் இவற்றை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் முதல் அதிகாரத்திலிருந்து நூற்று முப்பத்து மூன்றாவது அதிகாரம் வரை முதற்குறளையும் கடைசிக்குறளையும் சொல்லிப்பாருங்கள். போதுமான பயிற்சி

யெடுத்துக்கொள்ளுங்கள், 411 ஆவது குறள் என்று சொன்னால் 42ஆவது அதிகாரமாகிய கேள்வி' யில் முதற் குறள் எனக் கொள்ளவேண்டும். 740 ஆவது குறள் என்று சொன்னால் 74 ஆவது 'நாடு' என்ற அதிகாரத்தின் கடைசிக்குறள் என நினைவு வரவேண்டும். இதற்கான பயிற்சியைத் தொடருங்கள். இவ்வாறு மீண்டும் மீண்டும் பயில்வதனால் நினைவாற்றலில் வலிவு ஏற்படுகிறது. அவ்வலிவை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் மேலும். மேலும் வளர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். இடையில் தொய்வு ஏற்பட்டாலும் மீண்டும் தொடர்ந்து தொய்வினைச் சரி செய்து கொள்ளவேண்டும்.

ஐந்தாம் படி :

இப்போது அதிகாரத்தலைப்புடன் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் தெரியும். ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் குறளும், கடைசிக்குறளும் தெரியும், அதாவது 1,0, இல்முடியும் எந்தக் குறளைக் கேட்டாலும் உடன் விடையளிக்க இயலும். இதர எண்களுக்குரிய குறட்பாக்களை எப்படி நினைவுக்குக் கொண்டுவருவது? இப்போது 637 எண்ணுள்ள குறள் எது எனக் கேட்டால் 637 ஆவது குறள் 64 ஆவது அதிகாரமாகிய 'அமைச்சில்' 7 ஆவது குறள். அது

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் 'என்ற குறட்பாவாகும்.

இத்தொடர் சிந்தனை வரவேண்டும். இதற்குரிய எளிய வழி ஒவ்வொரு அதிகாரத்தின் முதற்குறள், கடைசிக் குறள் இவற்றை விரைந்து சொல்லும் ஆற்றலைப் பெற்றபின் ஒவ்வொரு அதிகாரத்தின் ஐந்தாவது குறளையும் சேர்த்து நினைவில் வைத்துக்கொள்ளப் பயிலுங்கள். இப்பயிற்சியால் 1, 5, 0, இவற்றில் முடியும் குறட்பாக்கள் எப்பொழுதும் நினைவில் இருக்கும். இவற்றின் உதவியுடன் பிற எண்ணில் முடியும் குறட்பாக்களை எளிமையாக நினைவுக்குக் கொண்டு வந்துவிடலாம்.

ஆறாம் படி :

தற்போது ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் அதிகாரத் தலைப்பு எண்ணுடன் தெரியும், 1,5, 0, இல் முடியும் குறட்பாக்களைக் கேட்டவுடன் சொல்லத்தெரியும், எந்த எண் கூறினாலும் குறளைச் சொல்வதற்குரிய பயிற்சியை இப்போது பார்ப்போம்.

494 ஆவது குறள் என்று சொன்னால் 50 ஆவது 'இடனறிதல்' அதிகாரத்தில் நான்காவது குறள் 491 தொடங்கற்க என்பது உடன் நினைவுக்கு வரும். தொடர்ந்து 492, 493, சொல்லி வந்தால் 494 ஆவது

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்" என்று கூறிவிட

முடியும். 1038 ஆவது குறள் என்று சொன்னால் 104 ஆவது 'உழவு' அதிகாரத்தில் 8ஆவது குறள் 1035 இரவார் இரப்பார்க் கொன்றீவர் எனத்தொடங்கும் குறள் என்பது முன்னரே தெரியும். பிறகு தொடர்ந்து சொல்லிவந்தால் 1038 ஆவது

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு 'என்று கூற இயலும்,

இவ்வாறு எந்த எண்ணைக் கூறிக் குறளைக் கேட்டாலும் தற்போது கூற இயலும். இவ்வாறு முயற்சியால் பெற்ற
ஆற்றலை மறதி வெள்ளத்தில் இழந்து விடலாகாது.

கைப்பொருளை எவ்வளவு பாடுபட்டுக் காப்பாற்றுகிறோமோ அவ்வாறே இவ்வாற்றலைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு படுக்கப்போகும் வரை சிந்தனைக்கு ஒய்வு கிடைக்கும் போதெல்லாம் முதல் குறளிலிருந்து கடைசிக் குறள் வரை வரிசையாகச் சொல்லி முடித்திருக்க வேண்டும். இப்பயிற்சி தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஏழாம் படி :

தற்போது உங்களுடைய ஏட்டில் 133 அதிகாரத் தலைப்புகளும், 1330 குறட்பாக்களும் எண்களுடன் முதற்சீரும் இறுதிச் சீருமாக எழுதப் பெற்றிருக்கின்றன. தங்கள் கையில் திருக்குறள் புத்தகத்தைத் தவிர திருக்குறள் நினைவேடு ஒன்றும் உருவாகியிருக்கிறது, இந்நினைவேட்டினைக் கையில் வைத்துக் கொண்டு சில வரிசை எண்களைச் சொல்லி அவற்றிற்குரிய குறள்களையும் காணுங்கள். கையேட்டின் வழி சரிபார்த்துக் கொள்ளுங்கள். நண்பர்களைக் கேட்கச் செய்வது இன்னும் சிறந்த பயன் அளிக்கும். இதனால் எண் கூறக் குறள்

கூறும் ஆற்றல் இயல்பாகவே வளரும் கேட்க நண்பர்கள் அருகில் இல்லையா? கவலைப்படாதீர்கள், சாலையில் ஒடுகிற வண்டிகளில் காணப்படும் எண்கள், பிற பலகைகளில் காணப்படும். எண்கள் இவற்றைப் பார்த்தவுடன் அவ்வெண்களுக்குரிய குறட்பாக்களை நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் ஊருக்குரிய அஞ்சல் குறிப்பெண் 621851என வைத்துக் கொள்ளுங்கள். இவ்வொரு குறிப்பிலிருந்து 621, 851, 158, 126, 261, 581, 218, 516, 625, 628 போன்ற பல எண்களை நாமே உருவாக்கி அவ்வெண்ணுக்குரிய குறட்பா எது என்பதை நினைவு படுத்திக் கொள்ளலாம், நினைவாற்றல் வளர இதுவும் ஒரு வழி,

எட்டாம் படி :

உங்களுடைய திருக்குறள் கையேட்டில் திருக்குறள் முதற்சீரும் இறுதிச் சீரும் எழுதியுள்ளீர்கள். அவற்றிலிருந்து 'அ' முதல் ஒவ்வொரு எழுத்திலும் தொடங்கும் குறட்பாக்கள் எத்தனை எனத் தனித்தனியே கணக்கிடுங்கள். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் எத்தனை எழுத்தில் தொடங்குகின்றன என அறியலாம், அவ்வாறே முடியும் எழுத்தையும் கணக்கிடுங்கள். தொடங்கும் எழுத்தும் முடியும் எழுத்தும் ஒன்றாகவே உள்ள குறட்பாக்கள் எத்தனை எனக் கணக்கிடுங்கள். இவ்வாறு கணக்கிடும் போது 1330 குறட்பாக்களு ம் சரியாக இக் கணக்குகளில் இடம் பெற்றுள்ளனவா? என்பதைக் கூட்டிப் பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள். திருக்குறள் நூலில் கொடுக்கப்பட்டுள்ள அகரவரிசையைப்பார்க்காதீர்கள். நமது உழைப்பினால் பெறும் ஆற்றல் தான் எப்போதும் நிலைத்து நிற்கும். எழுத்தை வைத்துக் கணக்கிடுவது போல சொல்லை வைத்துக் கணக்கிடுவதும் நமது நினைவாற்றலை மிகுதிப்படுத்தும், சான்றாக உலகு என முடியும் குறட்பாக்கள், படும் என முடியும் குறட்பாக்கள் போன்று, முடிகின்ற சொற்களை வைத்துக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஒன்பதாம் படி :

இதுவரை திருக்குறள் முழுவதையும் பல்வேறு வகைகளில் வகுத்து நினைவில் வைத்துக் கொண்டீர்கள். திருக்குறள் வாழ்வியலுரையை அடிப்படையாகக் கொண்டு குறளுக்குரிய பொருளை அறியுங்கள். ஒரு முறை படித்தாலே பொருள் மனதில் பதிந்துவிடும். காரணம் குறள்

முன்னரே மனதில் பதிந்துள்ளதுதான். குறளைக் கூறியவுடன் பொருள் தானே நினைவுக்கு வருமளவு பயிற்சி செய்யுங்கள். இப்பயிற்சியினால் பொருள் கூறினால் குறளை க் கூறலாம். குறள் கூறினால் பொருளைக் கூறலாம்.

பத்தாம் படி :

தற்போது பொருளுடன் திருக்குறள் முழுமையும் அறிந்துள்ளீர்கள். திருக்குறளில் பயின்றுவரும் உவமைகள் அணிகள் இவற்றையும் தெரிந்து வைத்திருந்தால் இலக்கண அடிப்படையில் கேட்பவர்களுக்கும் விடையளிக்க இயலும். இதற்குத் 'திருக்குறள் அணி நலம்' என்ற சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு மிகவும் பயன்தரும். இன்றேல் தக்க ஆசிரியர் வழி அறிந்து அணி நலப்புலமையையும் பெறலாம். இவ்வாறு பல்லாற்றானும் ஓதி உணர்ந்த திருக்குறள்நெறியை வாழ்வியல் நெறியாக ஏற்றுப் பின்பற்றுங்கள். சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி 'யை வள்ளுவர் வழியில், நீக்கலாம். யாதொன்றும் தீமையிலாத வாய்மையைப் பின்பற்றலாம். இவ்வாறு ஏற்றவைகளைப் பின்பற்றுவேன் என்ற உறுதியுடன் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழுங்கள்.

காலமறிதல் :

இப்படியெல்லாம் பத்துப் படிகளிலும் ஏறி முன்வரக் காலமில்லையே என்று சிலர் கவலைப்படலாம். காலம் பொன் போன்றது. என்ற தொடர் தேர்வுக்கு மட்டுமன்று: நடைமுறைக்கும்தான். ஒவ்வொரு நாளும் காலை, மாலை அரைமணி நேரம் ஒதுக்கினாலே போதும் முறையான பயனைப் பெறலாம். பள்ளிக்குப்போகும்போதும், வரும்போதும் முன்னர் படித்தவற்றைச் சொல்லிப் பார்த்துப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளலாம். பேருந்தில் பயணம் செல்கிறோம்; வேடிக்கை பார்த்துக்கொண்டு செல்லும்போது மனம் மட்டும் திருக்குறளை முதலிலிருந்து இறுதிவரை நினைவுபடுத்திக்கொண்டு வருமாறு பயிற்சி தரலாம். எப்போது நேரம் கிடைத்தாலும் கிடைக்கும் நேரத்தை இப்பயிற்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்,

முயன்றால் முடியாததில்லை. முயற்சி நமக்குப் பெருமையைத் தரும். நம்மால் முடியும் என்ற வலிவான மனஉறுதியுடன் செயல்படல்

வேண்டும். முதலில் கொஞ்சம் தொல்லையாக இருந்தாலும் துவண்டு விடாமல், சோம்பலுக்கு இடந்தராமல் தொடர்ந்து முயன்று வெற்றியின் எல்லையை எட்டவேண்டும். நாம் வெற்றி முகட்டில் நிற்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி, முன்னர் ஏற்பட்ட தொல்லைகளையெல்லாம் மறக்கச் செய்து விடும். எனவே நமது வலிமையை நன்குணர்ந்து முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பயனறிதல் :

இவ்வாறெல்லாம் திருக்குறளில் நினைவாற்றல் பெறுவதனால் ஏற்படும் பயன் என்ன என்ற வினா எழலாம். திருக்குறள் நினைவாற்றலைப் பெற்றவர்கள் பெறற்கரிய பேறு பெற்றவர்கள். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களையெல்லாம் திருக்குறள் வழியில் தீர்த்துக்கொள்பவர்கள், மன உறுதியும் நல்லியல்புகளும் வளர இவ்வாற்றல் துணைபுரிகிறது. எத்தகைய கருத்துகளையும் நினைவில் இருத்தும் வலிமை வளர்கிறது. திருக்குறள் வழியே நடக்க வேண்டுமென்ற உறுதி ஏற்பட்டு அவ்வாறே செயல்படவும் தூண்டுகிறது. பிற இலக்கியங்களை எளிதில் புரிந்து கொள்ளவும் நினைவில் இருத்திக்கொள்ளவும் துணைபுரிகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழப் பயன்தரும் இவ்வாற்றலை வளர்த்துக்கொள்க.

பருவத்தே பயிர்செய் :

இத்தகைய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள இளமைப் பருவமே ஏற்ற பருவமாகும். எனவே மாணவப் பருவத்திலேயே இத்தகைய பயிற்சியைக் குழந்தைகள் பெற,பெற்றோர் தூண்ட வேண்டும். பெற்றோர் தூண்டலிலும், வழி காட்டலிலும் தான் குழந்தைகளின் அறிவு வளர்ச்சி, ஒழுக்கம், பண்பாடு அமைந்து உள்ளது. எனவே முறையான பயிற்சியைக் குழந்தைகளுக்குத் தந்து வழிகாட்ட வேண்டுவது பெற்றோர் தம் கடமையாகும். பின்பற்ற வேண்டுவது குழந்தைகளின் கடமையாகும்.

எண்ணித்துணிக

தற்போது திருக்குறள் முழுவதையும் நினைவில் வைத்து எப்படிக் கேட்டாலும் கூறும் ஆற்றலை வளர்த்துக் கொண்டுள்ளீர்கள். மகிழ்ச்சி. மேலும் திருக்குறளில் தொடங்கும் எழுத்துகள், முடியும் எழுத்துகள் பற்றிய செய்திகளை நினைவில் வைத்துக்கொண்டால் திருக்குறளில் மேலும் தெளிவு ஏற்படும்.

ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் 71 எழுத்துகளில் தொடங்குகின்றன; 47 எழுத்துகளில் முடிகின்றன.

தொடங்கும் எழுத்துகள் :

அ	-157	கோ	-2	தொ	-10	போ	-1
ஆ	-23	ச	-3	தோ	-1	ம	-59
இ	-113	சா	-5	ந	-54	மா	-4
ஈ	-8	சி	-18	நா	-16	மி	-4
உ	-81	சீ	-4	நி	-18	மு	-20
ஊ	-21	சு	-5	நீ	-4	மே	-2
எ	-45	சூ	-3	நு	-5	மை	-1
ஏ	-9	செ	-37	நூ	-1	மோ	-1
ஐ	-4	சொ	-7	நெ	-9	யா	-10
ஒ	-40	ஞா	-1	நே	-7	வ	-21
ஓ	-6	த	-35	ப	-62	வா	-12
க	-77	தா	-9	பா	-3	வி	-28
கா	-28	தி	-6	பி	-15	வீ	-6
கு	-28	தீ	-6	பீ	-1	வெ	-4
கூ	-8	து	-21	பு	-20	வே	-12
கெ	-7	தூ	-4	பெ	-19	வை	-2
கே	-7	தெ	-9	பே	-9	----------	
கை	-3	தே	-5	பொ	-26	1330	
கொ	-18					----------	

முடியும் எழுத்துகள் :

ச	-1	பு	-58	ழி	-10
கு	-97	ம	-1	ழை	-4
கை	-7	ம்	-181	ழ்	-6
சி	-1	ய்	-9	ள	-6
சு	-20	ரா	-2	ளி	-5

ஸை	-2	ரீ	-3	ளை	-2
ட	-1	ரு	-6	ள்	-24
டி	-6	ரை	-2	ற	-12
டு	-39	ர்	-127	றி	-3
டை	-27	ல	-5	று	-101
ணி	-3	லி	-1	றை	-11
ணை	-13	லை	-25	னி	-1
ண்	-29	ல்	-152	னை	-10
தி	-3	வா	-2	ன்	-115
தீ	-1	வி	-1	----------	
து	-160	வு	-31	1330	
		வை	-4	----------	

க, கு, கை, சி, சு, தி, தீ, து, பு, ம, வா, வி. யை ஆகிய பதின்மூன்று எழுத்துகளில் மட்டுமே தொடங்கும் குறட்பாக்களும் முடியும் குறட்பாக்களும் உண்டு.

ஞா, பீ, போ, மை, மோ இவ்வெழுத்தில் தொடங்கும் குறட்பா ஒவ்வொன்று மட்டுமே உண்டு.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் (484)

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (475)

போற்றின் அரியவை போற்றல் கடுத்துபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. (693)

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின் (838)

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து., (90)

முதலெழுத்தும், முடிவெழுத்தும் ஒன்றாய் அமைந்த குறட்பாக்கள் ஆறுஉண்டு. நான்கு பொருட்பாலிலும் இரண்டு காமத்துப் பாலிலும் இடம் பெற்றுள்ளன. அவை

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (391)

குடிதழீஇக் கோலலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (544)

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு (604)

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (1025)

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில்
அள்ளிக் கொள்வற்றே பசப்பு (1187)

துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து (1218)

கடைசிச் சீர் :

ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் 327 சீர்களில் முடிகின்றன.

உ லகு, எனின், வார், மாட்டு, அற்று, விடும், பிற, துணை, இல், உடைத்து, படும், கடை, பெறின், வரும், தவர், இனிது, தரும், சிறப்பு, அன்று, இன்று, பயன் உண்டு, நட்பு, கெடும், விடல், செயின், அறிந்து, கண், பவர், அவர், செருக்கு, அகத்து, எனல், உள, இடத்து, பவர்க்கு, நகும், பலர், சுடும், மிகும், ஆகிய 40 சீர்கள் கடைசிச் சீர்களாக மூன்று பால்களிலும் இடம் பெற்றுள்ளன.

ஏறு, அரசு, ஒளி, தக, செவி, அரண், இறைக்கு, நூல், நிலை, கயிறு, களிறு, தெளிவு, சோர்வு, நன்கு, வெளிறு, முறை, குடி, கோல், தொக்கு, நேர், வேந்து, பெயல், அரம், ஒற்று, மறை, மற்று, உழை, மேல், அமைச்சு, கடன், பணிந்து, பண்பு, தூது, முகம், செறிவு, இழுக்கு, நாடு, உறுப்பு, ஐந்து, சென்று, படைக்கு, எஃகு, எடுத்து, காப்பு கொளின், துப்பு, பகைக்கு,

செறின், தனக்கு, நணித்து, எளிது, சுளி, சூது, பசித்து, உயர்ந்து, பணிவு, வியந்து, தூண், சால்பு, வழக்கு, ஒப்பு , இருள், பிறர், நிரப்பு, கீழ், கலன், இலர் ஆகிய 67 சீர்கள் கடைசிச் சீர்களாக பொருட்பாலில் மட்டும் இடம் பெற்றுள்ளன.

கட்டு, துகில், பீடு, தந்து, நீர், குறிப்பு, பறை, மீன், மதி, பழம், இடம், குணம், ஊர், வலி, மடல், புணை, துயர். மருண்டு, இழந்து, புணர்வு, தவறு, வளை, பிரிவு, தீ, உளேன், இலேன், இரா, பசப்பு, கணி, அளி, வரல், நினைந்து, நொந்து, உரைத்து, நுதல், கண்டு, விரல், மார்பு, உப்பு, கதவு, ஆகிய 40 சீர்கள் கடைசிச் சீர்களாகக் காமத்துப் பாலில் மட்டும் இடம் பெற்றுள்ளன.

இல், ஈற்றுச் சீராக 44 இடங்களில் வருகிறது. 'படும்' 42 இடங்களிலும், 'தரும்' 37 இடங்களிலும் 'கெடும்' 28 இடங்களிலும் 'உலகு' 25 இடங்களிலும் 'செயல்' 22 இடங்களிலும், 'தலை' 21 இடங்களிலும், 'கொளல்' 20 இடங்களிலும் ஈற்றுச் சீராக வந்துள்ளன.

திருக்குறள் நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள விரும்புபவர்கட்கு இச்செய்திகள் வழிகாட்டியாக அமையும். அவரவர் ஆற்றலுக்கேற்ப வெவ்வேறு வழிகளில் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளவும் உதவும் திருக்குறளைப்பயிலும் போது பல சுவையான செய்திகள் கிடைக்கும். திருக்குறள் மீது பற்று வைத்திருப்பவர்கள் இயன்ற வரை திருக்குறளைக் கற்று, நினைவில் இருத்தி, சிந்தித்து அவ்வழி நடந்து வாழ்வில் பயன்பெற்று, பிறருக்கு எடுத்துக்காட்டாக இலங்குவார்களாக!

❖❖❖

13. தொல்காப்பிய வழிஞர் திருவள்ளுவர்

மக்கள் வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கு வகையாகக் கண்டு தொகையாக்கித் தொல் பழந்தேட்டாகத் தொல்காப்பியம் தந்த தோன்றல் அவர்,

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்று பனம் பாரனாரால் சுட்டப்பட்டவர். அவர் 'குறுவெண்பாட்டு' என்றார் (1375) அதுவே 'குறள்' எனப்பட்டது. வெண்பாவுள் முதற்பா அஃதாதலின். அதனால் நூல் செய்தவர் முதற்பாவலர் எனப் பெற்றார்.

"அறம் முதலாகிய மும்முதற் பொருள்"

என்றும்,

"இன்பமும் பொருளும் அறமும்"

என்றும் கூறிய முப்பொருள் பற்றுக் கூறியதால் திருக்குறள் முப்பால் எனப்பட்டது.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே"

என்பதால் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என முன்வைத்தார்.

(கொடி நிலை – மின்னுக் கொடியுடைய மழை. கந்து + அழி = கந்தழி ; கந்து என்பது பற்று. அழி – அற்றது; பற்றற்றது; அது நீத்தார் பெருமை. வள்ளியாவது வண்மையாம் அறநிலை.)

பொருளொடு புணர்ந்த பக்கம் என்பது இல்லறவியல் ஆயது. இல்லற ஏற்பின் முன் "வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதல்' என்னும் துறை உண்மையும், தம்பொருள் என்ப தம் மக்கள்

என்பதையும் கருதுக. அதனை அன்புடைமையில் தொடங்கியவர், அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை எனக் கொண்டு உலகவராக வாழ்ந்தார்.

இல்வாழ்வின் நிறைவு புகழ் அதன்பின், அருளொடு புணர்ந்த அகற்சி என்பதன்படி அருளுடைமை முதலாக அவாவறுத்தல் இறுதியாகப் பேரா இயற்கைப் பேறுற்றார். இதனைக்,

“காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”

என்றார். இவ்விடத்தில்

“அருள்என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு”

என்பதை எண்ணுக.

புறத்திணை இயலைத் தக்க வகையில் கொண்டு தம்பரந்து பட்ட அறிவால் பொருளதிகாரம்

“படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”

என்று தொடங்கி விரித்துரைத்தார் பொருட்பாலை.

தொல்காப்பியர் முப்பொருளில் இன்பம் என்பதை வள்ளுவர் அவர்வழியில்

‘கமம் நிறைந்தியலும்’

என்று கொண்டு காமத்துப்பால் என்றார்.

ஏனெனில் “இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் பொது” என்று தொல்காப்பியர் கூறுதலால் மாந்தர் இன்பச் சிறப்புக் கருதிக் காமம் என்றார்.

காமம் என்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஆள்கிறார். திருவள்ளுவர் 39 இடங்களில் காமம் என்னும் சொல்லையும் 2

இடங்களில் இன்பம் என்னும் சொல்லையும் ஆள்கிறார். அவ்விரண்டிடங்களிலும் காமம் என்பதையும் ஆள்கிறார். அது

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்னும் நிறைவுக் குறள் (1330).

தொல்காப்பியர் உரிப்பொருளை,

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தாகப் பகுத்தார். அவர் பகுத்த முறையே முறையாய்க் காமத்துப்பால் வகுத்து அவ்வுரிப்பொருளே பொருளாய்ப் பாடிய அறநூல் வள்ளல் **திருவள்ளுவர் ஒருவரே.**

அறத்தான் வருவதே இன்பம்என்றவர் அதனை நிறுவும் இடம் இக்காமத்துப்பாலாம்.

1) புணர்தல் – கூடுதல் **முதல் ஐந்து அதிகாரம்**

109. தகையணங் குறுத்தல்

110. குறிப்பறிதல்

111. **புணர்ச்சி மகிழ்தல்**

112. நலம் புனைந்துரைத்தல்

113. காதற் சிறப்புரைத்தல்

2) பிரிதல் : இரண்டாம் ஐந்து அதிகாரம்

114. நாணுத் துறவுரைத்தல்

115. அலர் அறிவுறுத்தல்

116. **பிரிவாற்றாமை**

117. படர் மெலிந்திரங்கல்

118. கண் விதுப்பழிதல்

3) இருத்தல் – எதிர்பார்த்து இருத்தல்

119. பசப்புறு பருவரல்

120. தனிப்படர் மிகுதி

121. நினைந்தவர் புலம்பல்

122. கனவு நிலை உரைத்தல்

123. பொழுது கண்டு இரங்கல்

4. இரங்கல் - பொரிது வருந்துதல்

124. உறுப்பு நலன் அழிதல்

125. நெஞ்சொடு கிளத்தல்

126. நிறையழிதல்

127. அவர்வயின் விதும்பல்

128. குறிப்பறிவுறுத்தல்

5. ஊடல் - கூடாதிருத்தல்

129. புணர்ச்சி விதும்பல்

130. நெஞ்சொடு புலத்தல்

131. புலவி

132. புலவி நுணுக்கம்

133. ஊடலுவகை

இவ்வகையால் முழுதுறு தமிழ்நெறியாய்த் தொல்காப்பியர் ஆக்கிய நூலில் போக்குவபோக்கி ஆக்குவவும் அவர் நெறிபிறழாது ஆக்கி முப்பால் படைத்த ஒப்பிலாத் தெய்வப் புலமையர் திருவள்ளுவர் என்க.

❖❖❖

14. வள்ளுவ வளம்

அறம்

ஆன்முலை அறுத்த அறனில் லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென...
நிலம்புடை பெயர்வ தாயினும்
ஒருவன் செய்திகொன்றோர்க் குய்திஇல்லென
அறம் பாடிற்றே. புறம். 34.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் **செய்ந்நன்றிக் குறளும்**, **அறம்** என்னும் நூற்பெயரும் வருதல் அப்புறப்பாடலுக்கு முன்னைநூல் திருக்குறள் என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கும்.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

என்னும் புறப்பாடல் (182)

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்னும் குறள் (996) விளக்கமாதல் புலப்படவில்லையா?

இவ்வளவும் இவற்றின்மேலும் முந்தைச் சான்றுகள் இருந்தும் திருக்குறளைக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு, எட்டாம் நூற்றாண்டு என்பார் இப்படித்தான் நான் சொல்வேன் என்று தாம் கொண்ட முடிபை அன்றி

வேறு சான்று உண்டா?

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்னும் குறள் (580) விளக்கம் போல் அமைகிறது,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்னும் நற்றிணைப் பாடல் இக்குறளின் விளக்கமாக வில்லையா?

சிலப்பதிகார வரந்தரு காதை,

"இக்கதை கேட்ட திருத்தகு நல்லீர்
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்;

சிலம் 130.187-201.

திருக்குறள் அதிகார அடைவுகள் அல்லவா இவை!

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" என்பதற்கு,
"தேரா மன்னா" என்று அழைத்தும்,
'தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி"

என்று கூறியது சான்று அல்லவா?

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றங்காண்"

என்றது அவன் செங்கோன்மை நினைவும்”

“என்முதல் பிழைத்தது”

என்று கூறி வீழ்ந்ததும் அவன் செங்கோன்மைச் சீர்மையும் தானே!

“தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்”

– மணிமே. 22.59-61

என்னும் **மணிமேகலைத்** தொடரால், திருக்குறளொடு, அதனை இயற்றிய ஆசிரியர் **பொய்யில் புலவர்** என்னும் பெயரும், அவ்வுரை **பொருளுரை** என்றும் வருதலால் ‘மணிமேகலைக் காலத்திற்கு முற்பட்டவர் திருவள்ளுவர் என்பது திட்ட வட்டமானதாம்.’

அதே குறளை,

“தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகை திண்ணிதால்”

என்று சிலம்பு (23-வெண்பா) சொல்வதும் நோக்கத் தக்கது.

“உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு”

என்னும் குறளை (339), மணிமேகலை,

“பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்”

என்பது குறள் மொழி வழியதே என்பது நாட்டும்.

இவை நூற்பெயர் ஆசிரியர் பெயர் குறட்பா ஆயவற்றை விளக்குதல் வள்ளுவர் காலம் சங்கத்தார் காலத்திற்கு முற்பட்டதை அன்றிப் பிற்பட்டதில்லை என்பதை விளக்கும்.

“முற்பகல் செய்தான் பிறன் கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்”

என்பது (சிலப். 21: 3-4)

“பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்”

என்னும் குறள் வழியது அல்லவா!

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்பது சிந்தாமணியில்,

"இடுக்கண்வந் துற்ற காலை
எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானு மின்றி
நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை எரியும் எஃகாம்
இருந்தழுது யாவர் உய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை
வருபவந் துறுங்கள் அன்றே"

என்று வருவது விளக்கம் அல்லவா (509)

"கொடுப்ப தறுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்னும் குறள்,

எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகோ தகவில் வெள்ளி
கொடுப்பது அழுக்கறுக்கும் கொடியோய் சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிக் கெடுகின்றாய்"

என்னும் கம்பர் பாட்டில் மேல்விளக்கம் பெறவில்லையா?

"ஊருணி நிறையவும் உதவு மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்ததாகவும்
கார்மழை பொழியவும் கழனிவாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின்றார்கள் யார்?"

என்னும் இவ்வொரு பாடலில் (கம்ப. அயோ. மந்திரப். 84)

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"
"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"
"கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு"

என்னும் குறள்கள் போற்றப்படவில்லையா?

இவ்வாறு பின்னூல்களில் போற்றப் பட்டவற்றையெல்லாம் தொகுப்பின் பல்லாயிரம் பக்கம் வருமே!

15. திருக்குறளைக் கீழ்க்கணக்கில் வைத்தது ஏன்?

மேற்கணக்கில் மேற்கோள் காட்டப்பட்ட திருக்குறளைக் கீழ்க்கணக்கில் வைத்தது ஏன்? என்று வினவுவார் உளர். அவர் வினவுதல் தெளிவில்லார் வினவலாம்.

மேற்கணக்கு நூல்கள் 18இல் 16 நூல்கள் (பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு , அகநானூறு) அகவற்பாவால் அமைந்தவை. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாவாலும் அமைந்தவை. வெண்பாவால் அமைந்த நூல் எதுவும் அவற்றில் இல்லை. கீழ்க் கணக்கு நூல்கள் பதினெட்டுள் முதுமொழிக் காஞ்சி நீங்கலாகப் பதினேழும் வெண்பாவால் ஆயவை. ஆதலால் வெண்பா வகையில் முதல் வகையாம் குறள் வெண்பாவால் அமைந்த திருக்குறளைப் பாவகையாலும் அடிச்சிறுமை வகையாலும் கீழ்க்கணக்கில் சேர்த்தனர். முதுமொழிக் காஞ்சியோ ஓரடியால் அமைந்தது. பதினெட்டு மேல் என்றால், அப்பதினெட்டு கீழ் வர எண்ணியதால் வந்தது இஃதாம். வினவுவார் இதனை அறியாரோ புரியாரோ அல்லர்! அறிந்தாரும் புரிந்தாருமேயாம்.

வாதத்துக்கே முற்றாக மருந்து காண்பார் உண்டா? இல்லை, ஒருவேளை கண்டாலும் பிடிவாதத்திற்கு எவரே மருந்து காண்பார்? 'கல்லார் மிக நல்லர்' என்பதைக் காட்டுவார் அவர்!

16. திருக்குறள் சீர்மை - 1

சின்னஞ் சிறிய குறள்கடுகுள்
செறியும் உலக வாழ்வெல்லாம்
துன்னச் செய்த வள்ளுவரைத்
தொடவும் ஒருவர் உண்டேயோ?
ஏழு சீரும் ஏழுலகம்
ஏழு சீரும் எழுநூல்கள்
ஆழ நீள அகலமெலாம்
அறிதல் எளிதோ அம்மம்மா

பொன்னும் மணியும் புகழ்முத்தும்
புகலும் வயிர ஒளிநீலம்
துன்னும் பவழம் பச்சையெனத்
துலங்கும் தொடையாம் திருக்குறளில்
மின்னும் ஒன்றை எடுத்துங்கே
மீண்டும் ஒன்றைப் பதித்ததனை
முன்னை நிலையில் காட்டற்கே
முடிதல் உண்டோ எவர்க்கேனும்?

முப்பால் - 2

அப்பாலே போவென்றீர்
ஆவின்பால் தரவந்தால்!
இப்பால்தான் வேண்டாவேல்
எப்பால்தான் வேண்டுவதோ?
அப்பாலை உரைப்பீரேல்
அகமகிழ்ந்து தருவனென
முப்பாலைக் காட்டுபவர்
ஒருபாலை விரும்புவரோ?

அப்பாலும் அப்பாலும்
அப்பாலுக்கு அப்பாலும்
எப்பாலும் போனாலும்
இணையற்ற முப்பாலுக்கு
ஒப்பான ஒருபாலை
உலகத்தில் கண்டதிலை
அப்பாலைத் தாவென்பார்
அயற்பாலைக் கொள்வாரோ?

கடிக்காமல் சுவைக்கின்ற
கற்கண்டுக் கரும்புப்பால்;
இடிக்காமல் பிழியாமல்
இனிக்கின்ற தேங்காய்ப்பால்!

பிடிக்காமல் மழைபோலப்
பெய்கின்ற ஆவின்பால்!
படிக்காமல் வாராத
பைந்தமிழ்ப்பால் முப்பாலே!

3. எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்

பழித்தானே எனையொருவன்
பாவிக்கும் பாவியவன்
பழித்தற்கு வாயெதுவும்
படுபாவிக் குண்டேயோ?

கொழித்தொதுக்கு வைக்கோலின்
குறைப்பதராம் அன்னானும்
பழிக்கின்றான் என்கின்றீர்
பார்த்திடுவீர் மிகஎண்ணி

பழித்ததுவோ நுமைஎண்ணி;
பாவியவன் தனையெண்ணிப்
பழித்தானோ? தனையெண்ணிப்
பார்ப்பவனும் பழிப்பானோ?

எள்ளாக இருப்பானும் பழிப்பானோ?
எள்ளுதற்கு வாய்ப்பாக
எள்ளாத எண்ணியன்றோ
எவ்வொன்றும் செயல் வேண்டும்?

எள்ளற்கோர் இடமில்லார்
இவரென்ன உமைக்கொண்டான்
எள்ளற்கு வாய்க்குமிடம்
எள்ளளவே என்றாலும்

எள்ளத்தான் செய்வனென
எண்ணுதலே அறிவாகும்
எள்ளாத எண்ணிநீர்
செயல்வேண்டும் தம்மோடு

கொள்ளாத கொள்ளாதாம்
உலகென்ற வள்ளுவனார்
தெள்ளுரை தேர்மின்
தெளிந்து. - திருக். 470

பிணிக்கு மருந்து - 4

காய்ச்சல் கொடுங்காய்ச்சல் கட்டிலை விட்டெழும்பி
வாய்ப்பாய் இருக்கவும் வாயாப் பெருங்காய்ச்சல்
உள்ளம் வெதும்பி உடல்வெதும்பி ஊக்கமெலாம்
பள்ளத்தில் பாய்கின்ற வெள்ளம்போல் தானோடக்
காட்டுக் குழலகத்துக் காற்றெழுப்ப ஓலமிடும்
கூட்டா இசைபோலக் கூட்டகத்து மூச்செழும்பிச்
செல்லாத் துயரம் செறிய அடுத்துள்ளோர்
அல்லல் மிகவெய்தி ஆற்றும் வகைநாடிக்
கைந்நாடி பார்த்துக் கருத்தாய் மருந்தீந்து
மெய்ந்நோய் அகற்றும் மருத்துவரைக் கூட்டிவர
உற்ற பிணிபோக்க ஓர்வழியும் காணாராய்ப்
பற்று துயரோடு பல்பொழுது போய்வந்தார்;
நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்வல்ல ஒள்ளியர்தாம்
என்றாலும் என்நோய் முதலறிய ஏலாமல்
என்னவோ செய்திருந்தார் என்செய்வார்? காய்ச்சல்தான்
நாளொரு வண்ணமாய் ஏறிவர நற்றாயும்
வேளருளை வேண்டி விடிபொழுதிற் கோயிற்குச்
சென்றிருந்தார் ; சென்ற மருத்துவரும் மீளவிலை;
பொன்னஞ் சிலம்பு புடையரற்றப் பூமுகத்து
மென்முறுவல் நீங்க அகமொடுங்கித் தென்றல்
நடைகற்று வந்ததென வந்து நனியென்
புடையமர்ந்து 'அத்தான் பொரிகிறதே நெற்றி'யென்
றன்பு பெருக அகங்குழைய நீவித்தன்
இன்பு தவழ்கையால் தூக்கி யுவந்தணைத்து
ஆங்கிருந்த பாலை அருத்தினாள் அப்போதே

ஓங்கு நிலைக் காய்ச்சல் உடனிறங்கக் கண்டறிந்து
“யார்தந்த மாத்திரைக்கும் போகாத எந்நோயும்
நீவந்த மாத்திரையே போவதனைக் காண்கின்றேன்
தாக்கும் விழியுடையாய் தாங்காப் பெருநோயைப்
போக்கும் மருந்தும் உடையாயோ” என்றந்த
நன்மருந்தின் கன்னம் தடவினேன் நாணமுடன்
பன்முறையும் பின்பார்த்துப் பாழுலகுக் கஞ்சினளாய்ச்
சென்றாள்; செழுங்கன்னம் நெற்றியினை என்கையால்
துன்ற வருடி வருடி இனிதிருந்தேன்;
அன்னை அருத்திய ஆரமுதின் எண்ணத்தால்
பிஞ்சு விரலைச் சுவைத்திருக்கும் பிள்ளைபோல்!
போனவரும் மீண்டார்; பொரிகாய்ச்சல் போயிற்று
“யானளித்த மாத்திரையின் ஆற்றலே ஆற்றல் தான்”
என்றார் மருத்துவர்; என்னன்னை செவ்வேளை
இன்றுயான் வேண்டிய வேண்டுதலே என்றார்; யான்,
வள்ளுவனார் வாய்மைக் குறளை நினைத்தேன்;

“பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து” – தேனருவி

புணர்ச்சியும் உணர்ச்சியும் - 5

நாளும் வளர்கின்ற நம்மன்பு போலவே
நீளும் பிறையன்பன் நேர்ந்தோங்கி வார்க்கின்ற
கள்ளின் பெருக்கைக் கவின்பாலைக் கண்ணமுதை
அள்ளிப் பருகி அயர்வு சிறிதின்றி
வெண்ணெய்த் திரளாக வெற்றிடையில் காண்கின்ற
கண்ணைப் பறிக்கும் கதிர்மணல் குன்றத்தில்
ஓடி விளையாடி உள்ளக் களிப்புந்தப்
பாடிப் பருகிப் பலகாலும் பைந்தொடீ!
கூடிக் குலவிக் கொழிபுவியின் இன்பெல்லாம்
தேடி நமையெய்தத் தேரும் நினைவினராய்
யார்பொழுதும் இல்லையிவ் வோர்பொழுதும் எம்பொழுதே
சீர்பொழுதே! செல்வமே! செந்தண்மை சேர்பொழுதே!

எந்தம் உடைமையெலாம் ஏற்றளிக்க நேர்ந்தாலும்
நுன்றன் அருளுக் கிணையில்லை, நொய்யதாம்
என்றோம் இறைஞ்சினோம் இன்பக் கதைபேசித்
துன்று மணாங்கூட்டு வெற்றிலை மென்று
வளமையுறு தம்பலம் வாய்த்தளித் தின்பால்
உளத்தில் வெறியேற 'அன்பே' எனமுத்த
'அத்தான்' எனச் சொல்லி முத்தினை ஆரன்பே
நின்மடியில் நானாக என்மடியில் நீயாக
இன்பமதுச் செவ்விதழ்க் கிண்ணத்தால் கூட்டுண்டோம்!
ஆரா மதுபொழியும் அந்தண் மலர்புக்குப்
பேராக் களிவண்டாய் ஆர்ந்தோம் அதுபோழ்தில்
பாஅல் எனக் கூவிப் பட்ட சுவையனைத்தும்
பாழாக்கி விட்டானோர் பாழ்விற்போன்; மெல்லிய
பஞ்சணைப்பேர் கொண்டு நஞ்சாக வாய்த்திருந்த
வஞ்சப் படுக்கையில் வாளா கிடந்திருந்தேன்;
என்னே உரைப்பன் எழிலணங்கே வையத்தில்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளவன்னும் உண்மையை
மெய்யாக்க வாராய் எனப்பன்ன மேதக்காள்
கல்லால் அடியாமல் சொல்லால் அறைந்தாள்
"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்." – தேனருவி.

தமிழுச்சாதி . 6

மேலையூரில் தமிழாசிரியர் **கண்ணனார்** தங்கியிருந்தார்; வாடகை வீடு அது. **கீழையூரில்** அவர்க்கு வேலை. ஒரு கல் தொலைவு நடந்து செல்ல வேண்டும் பள்ளிக்கு.

வாடகை வீடு என்றாலும் வளமான வீடு; தென் வடலாக அறுபதடி நீளம் நாற்பதடி அகல முடைய வீட்டில், சரிபாதியான கீழைவீட்டில் குடியிருந்தார். உடன் பிறந்தார் இருவருள், மூத்தவர் மேலை வீட்டிலும், இளையவர் கீழை வீட்டிலும் இருந்தனர். இளையவர் வீட்டிலே கண்ணனார் குடியிருந்தார். முன்னே தாழ்வாரம், அடுத்து வரவேற்பு

அறை, படுக்கை அறை, பொருளறை, சமையல் அறை, கழிப்பறை என அமைந்தது முன்னிருபகுதிகளும் இரும்புக் கம்பித்தடுப்பாக அமைந்தவை!

கண்ணனார் வீட்டுக்கு மாணவர்கள் பள்ளிக்குப் போகுமுன் ஒருவர் இருவராய், பலர் வந்து விடுவர். தாழ்வாரத்தில் இருப்பர்; பலகை ஊஞ்சல் ஆயவற்றிலும் இருப்பர். கண்ணனார் துணைவியார் பள்ளிப் பிள்ளைகளைத் தம் பிள்ளைகள் போல் எண்ணிய பெருமனத்தர். அதனால் தடையின்றி மாணவர் வீட்டுக்கு வருவர்; படிப்பர்; கண்ணனார் பள்ளிக்குப் போகும் போது உடன் போவர்; வரும்போதும் உடன் வந்து தம் வீடு போவர்.

ஒரு நாள் வழக்கம் போல் வந்த மாணவர், தாழ்வாரத்திலும் பலகையிலும் ஊஞ்சல் கட்டிலிலும் இருந்தனர். கண்ணனார் குளித்துக் கொண்டிருந்தார்!

ஓங்கி ஒலித்த ஒருகுரல் கேட்டார்; "டேய்! நீ என்ன சாதி, ஊஞ்சலில் ஏறி ஆட்டம் போடுகிறாய்" என்பது அது.

குளித்தவர்க்குத் தீயாய் எரிந்த இச்சொல்லைக் கேட்டு, நிற்க முடியாமல் குளிப்புத் துண்டுடன், நீர்வழிய முன்னே வந்தார். மேலை வீட்டுக்காரர் சினத்துடன் நின்றார்; மூக்கையா அழுது கொண்டிருந்தான். மேலை வீட்டார் கண்ணனாரைக் கண்டதும், "இவன் இன்ன சாதியான் இங்கே ஊஞ்சலேறி ஆட்டம் போடுகிறான்" என்றார்.

ஏறிய கொதிப்புடன் கண்ணனார், "ஐயா, நீங்கள் எனக்கு மூத்தவர்; அதனால் ஐயா என்கிறேன்; இவன் இளையவன் தம்பி என்கிறேன்; எனக்குச் சாதி இல்லை! **நானும் அவனும் நீங்களும் ஒரே சாதி தமிழச்சாதி!** இவனைப் பாருங்கள்! இவன் அழும் அழுகையை உங்களால் ஆற்ற முடியுமா? பிஞ்சு மனத்தைச் சுக்கல் சுக்கலாக உடைத்து விட்டீர்களே! வேண்டுமானால் உங்கள் தம்பியரிடம் சொல்லி, என்னை வீட்டைக் காலிசெய்ய வையுங்கள்! இந்தக் கொடுமை செய்யாதீர்கள்" என்று சொல்லிவிட்டுக் குளிப்பறைக்குப் புறப்பட்டார். "எல்லாரைப் போலவும் எண்ணி இப்படிச் சொல்லி விட்டேன்; உங்கள் இயல்பை அறியவில்லை; பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியதைக் கேட்டும் கேளாமலும் கண்ணனார் விரைந்து குளிக்கப் போனார்.

கண்ணனாரும் மூக்கையா முதலிய மாணவர்களும் பள்ளிக்குப் புறப்பட்டனர். மூக்கையா வாட்டம் தீரவில்லை. கண்ணனார் முக்கையாவைப் பார்த்து,

"சாதி எதுவென்றால் பாப்பா – அவரைக்
காறி உமிழ்ந்திடுவாய் பாப்பா!
வேதம் உரைத்ததென்றால் பாப்பா – அதை
வேக வைப்பாய் தீயினிலே பாப்பா"

என்பது, நான் பாடிய பாட்டு! காறி உமிழ வேண்டிய நீ, கண்ணீர் வடிக்கிறாய்! அவர் சொல்லியதைச், சட்டைமேல் பட்ட தூசியாய்த் தட்டி விட்டு நிமிர்ந்து நட" என்றார்.

சில நாள்கள் சென்றன; "மூக்கையா, இந்தப் படிவத்தில் கையெழுத்துப் போடு! இனி நீ மூக்கையா இல்லை; பூங்குன்றன்; உன் பெயர் மாற்றப் படிவம் இது; அரசிதழில் உன் பெயர் மாற்றம் வரும்; உனக்கும் அதன் படிவரும்" என்றார்.

மூக்கையா படிப்பில் மிகத்தேர்ந்தவன்; பண்பிலும் உயர்ந்தவன்; அவன் தேர்ச்சி நிலை அவனை மேலே மேலே படிக்க, அரசின் ஊக்கத் தொகையாக வாய்த்தது. உயர்நிலை, மேல்நிலை எனப்படித்தான், கல்லூரியிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றான். கண்ணனார் வேற்றூர் மாற்றிச் சென்றாலும் மூக்கையாவை மறவாமல் வழிகாட்டியாக இருந்தார். தமிழ்வழியே இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுத ஊக்கினார். வேண்டும் நூல்களையும் வழங்கினார். பூங்குன்றன் அயரா முயற்சி அத்தேர்விலும் இந்திய அளவில் பத்து எண்களுக்குள் அவன் தேர்ச்சி அமைந்தது. பயிற்சி நிலை முடித்து ஆட்சிப் பணியும் ஏற்றான். ஆளுநரின் தனித் துணை அலுவலராக அமர்த்தம் பெற்றான்.

திருச்சிராப்பள்ளி **பாரதிதாசன்** பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு அதன் வேந்தராம் ஆளுநர் வந்தார்; அவர் தனித்துணையராய்ப் பூங்குன்றன் இருந்தான் மேலையூர்ச் செல்வர், தம்மகனார் பட்டம் பெறுதலால் அவனுடன் வந்தார்!

அவர் ஆளுநருடன் வந்த பூங்குன்றனைக் கண்டு ஏதோ ஒருசிற்றெறும்பு ஊர்வது போல் தோன்றிப், பட மெடுத்து ஆடும் பாம்புமுன் நிற்பதாக உணர்ந்தார்!

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை! எழுந்திருந்து செல்லவும் முடியவில்லை. பூங்குன்றனும் கூட்டத்தின் இடையே மேலையூரார்

இருப்பதைப் பார்த்தார். விழா முடிந்தது. பூங்குன்றன் காவலர் வழியாக மேலையூராரை அழைத்தார்! வணக்கமிட்டார் ; காலில் விழப் போனார் மேலையூரார்! தடுத்து நிறுத்தி, **"நீங்கள் விழக்கூடாது; நிமிர்ந்து நிற்க வேண்டும்!".**

"நீங்களும் தமிழர்; நானும் தமிழர்;" நாம் மேல் கீழ், உயர்வு தாழ்வு, தீண்டாமை அண்டாமை பார்த்து ஒன்று சேராமையால் அயலாரே நம்மை ஆள, மீளா அடிமையராய் – இழக்க வேண்டியது எதுவும் இனி இல்லை என்னும் அளவில் எல்லாம் இழந்து – கிடக்கிறோம். நாம் அனைவரும் **தமிழச்சாதி என்பதை உணர்ந்து ஒன்றுபட்டால் போதும்; அயலார் துணிமேல் பட்ட தூசியாய்ப் போய்விடுவார்! இதனை நான் சொல்லவில்லை பாரதி தாசனார்,**

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே"

என்று சங்கம் முழங்கினார்! அதனைச் சிக்கென இன்று முதலாவது பற்றிக் கொண்டால் போதும்! உலகத்து மூத்த இனமும், மூத்த மொழியினரும் ஆகிய நாம், உலகுக்கொரு செங்கதிர் போலச் சிறந்து விளங்குவோம்" என்றான்! பெரியவர் தேங்கிக் கிடந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பூங்குன்றன் கையைப் பற்றினார்!

"இன்று புதிதாகப் பிறந்தேன்; இனி என்சாதி தமிழச் சாதி யே!" என்றார் மேலையூரார்! அவர் மேனியைத் தழுவினார் பூங்குன்றன்! தமிழாசிரியர் கண்ணனார் இட்ட வித்து முளைத்து வளர்ந்து கையில் கனியாகத் தவழ்ந்தது! பூங்குன்றனும் மேலையூராரும் இணைந்தது போல் வீடும் நாடும் இணைந்தால் கண்ணனார் வெற்றிவாழ்வர் ஆவார்!

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால். 972

7. அசையாக் கால் அசைகிறது

கூத்தாண்டார் கட்டிலிலே கிடந்தார். படுத்திருந்தார் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், அப்படிச் சொல்ல முடியவில்லை. அவர்மனம் புரண்டு புரண்டு அலைக்கழிந்ததை அன்றி உடல் புரளுதற்கும் முடியாமல் தான் கிடந்தது. கூத்தாண்டார் உண்மைப் பெயரை எவரும் அறியார். அவர் ஆட்டத்தால் சுவைஞர்கள் சூட்டிய பெயர்தான் கூத்தாண்டார் என்பது.

அவர்க்கு வயது ஒன்றும் அப்படி ஆகி விடவில்லை. அறுபதைக் கடந்த ஆண்டு தான் தாண்டியது. ஐந்து வயதிலே நாடகத் துறையில் புகுந்தார். முப்பது வயதுவரை ஓஹ எனக் கொட்டிகட்டிப் பறந்தார். அதற்குப்பின் சறுக்கிச் சறுக்கி விழுந்து எழுந்திருக்கவும் முடியாமல் கட்டிலோடு கட்டிலாகி விட்டார்.

அவருக்கே அவரை நம்ப முடியவில்லை. இப்படியும் தம் வாழ்வில் நடக்குமா என்று!

ஆட்டமென்ன அதன் அடக்கமென்ன?
ஓட்டமென்ன அதன் ஒடுக்க மென்ன?
புகழ்ச்சி என்ன அதன் புறக்கணிப்பு என்ன?
இதுதான் உலகம்! இது தான் வாழ்வு!
சலித்துப் போய்விட்டார், நாடகக் காட்சி போலவே
தம்வாழ்வையும் அசை போட்டார்!

பாலமுருகன், பாலமுரளி, மார்க்கண்டன், துருவன், பிரகலாதன், குமர குருபரன், ஞானசம்பந்தன் இப்படி எத்தனை 'பால' நடிகராக நடித்தார். ஆண்டாளாக நடித்த நடிப்பு அத்தனைபேர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டதே!

கொஞ்சம் வயது ஏறவும் பயிற்சி பெருகவும் அவர்க்கு நாட்டியம் ஆடுதலில் ஏற்பட்ட ஈடுபாடு, பரம்பரை நாட்டியக் காரிகளையும் 'வந்துபார்' என்று வலிய அழைக்கும் நிலைக்கு உயர்ந்ததே!

எந்த நாடகத்தில் நடவரசர் வந்தாலும் கூத்தாண்டாரே வருவார் என்பது மக்களுக்குத் தெளிவாகிவிட்டது. அவர் ஆட்டத்தைக் காண்பதற்காகவே கூட்டம் மொய்க்கும். அவர் தோற்றப் பொலிவும் ஆட்டத்திற்குத்தக உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாங்கும் அப்படியே கூட்டத்தை வயப்படுத்தித் தன்னை மறக்கச் செய்துவிடும். நாடகப் பகுதியில் எங்கேயாவது சலிப்புத் தட்டினால் மூலைக்கு மூலை 'கூத்தாண்டார் ! கூத்தாண்டார்! கூத்தாண்டார்' என்று கூச்சல் கிளம்பும். கதைப்போக்குக்கு ஒத்துவருகிறதோ வரவில்லையோ அதைப் பற்றி எவரும் கவலைப் படுவது இல்லை! கூத்தாண்டார் ஆடல் வரவேண்டும்!

கூத்தாண்டார் ஆடிமுடித்தாரோ இல்லையோ அவர் கழுத்தில் பெருஞ்சுமை ஏறிவிடும்! வேட்டி, துண்டு, மாலை, பணத்தாள் மாலை என்பன அவை, பூரித்துப் போவார் கூத்தாண்டார்! இப்பொழுது அவற்றை நினைக்கிறார் அவரை அறியாமல் புன்னகை தவழ்கிறது.

அந்த ஆட்டத்தில் மயங்கும் அழகிகள் தாம் எத்தனையோ? என்னதான் அவர் தம் ஆட்டத்தில் மயக்குப் பொடி போடுவாரோ! மகுடி இசைக்கு ஆடும் பாம்பு போல அவரைச் சூழ நெளிவர்! அவரைப் புகழ்க்கண்ணோடு பார்த்தவர் மட்டுமா? பொறாமைக் கண்ணோடு பார்த்தவர் எத்தனைபேர்! நடிகர் கூட்டத்துள்ளும் அப்பொறாமை இல்லாமை இல்லை! கலைப் பொறாமை தலைப் பொறாமை அல்லவா!

இப்பொழுது மாலை போடுவாரைக் காணோம்! மதிப்பாரையும். மொய்ப்பாரையும் காணோம்! ஏன் பொறாமைப்படுவாரையும் காணவில்லை. இவற்றை நினைக்கும் போது கண்ணீர் வழிந்து கன்னத்தில் கோடுபோடுகிறது! அதனைத் துடைக்கவும் முடியாமல் கிடக்கிறார்!

'தக்கயாகம்' என்னும் நாடகம். கூத்தாண்டார் மேடை ஏறினார்! மேடை அலறியது! அவர் கால்களின் எடுப்பும் வளைப்பும் சுழற்சியும் துள்ளலும் தூக்கலும் கொள்ளை வனப்பாயின! உமையம்மையாக நடித்தவள் ஓடிவந்து காலிலே விழுந்து பொறுத்துக் கொள்ள வேண்டிய போதும் சினம் ஆறாமல் அவர் ஆடிய ஆட்டம்! அவையே ஆடிப்போனது! நாடகம் பார்ப்பவருள் முன்வரிசையில் இருந்து பார்ப்பவர் அலறி அடித்துச் சிதறி ஓடினர். அப்படியே கூட்டத்தில் குதித்துச் சூலத்தால் குத்திக் கிழித்து விடுவாரோ எனக் குலைநடுங்கிப் போயினர்!

மார்க்கண்டன் நாடகம்! அதில் மார்க்கண்டன் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருக்கிறான். காலன் அவன் கழுத்தில் கயிற்றைப் போட்டு இழுக்கிறான். மார்க்கண்டன் விடாப்பிடியாகப் பற்றியிருக்கிறான், சிவலிங்கத்தை! காலனும் விட்ட பாடில்லை! இலிங்கத்தில் இருந்து கிளம்புகிறார் நடவரசர்! அப்பப்பா! கூத்தாண்டவர் சீற்றம் காலனாக நடித்த நடிகரை நன்றாகக் காலால் கதிகலங்க உதைத்த உதையில் காலே ஒடிந்து போனது. காலன் கால் சரியாக மூன்று மாதம் ஆயது! மூன்று கால் உடையவனாகவே ஆகவும் நேரிட்டது. இதனைக் கூத்தாண்டார் நினைக்கும் போது ஒரு பெருமிதம்! அடுத்தே பெருங்கவலை!

காரைக்கால் அம்மையார் முன் அவர் ஆடிய தாண்டவக் காட்சியை இப்பொழுது நினைத்தாலும் ஒரு குலுங்கு குலுங்குவார். பேய் என்று ஒன்று இருந்து ஆடினால் இப்படித்தான் ஆடுமோ என்று நினைக்குமாறு வெறிகொண்டு ஆடினார். கண்ணில் கனல் பறக்க, மேடை தூள் பறக்க, தமருகம் முழங்க, 'கிடு கிடு' 'மட மட' 'மொடு மொடு'

என உலகமே உருள்வது போல அவர் ஆடிய ஆட்டம் ஆட்டம்தானா? காரைக்கால் அம்மையார் கூத்தப் பெருமானை, "அடக்கியே ஆடும்" என்றதை மெய்ப்பிப்பதாகவே கூத்தாண்டார் ஆட்டம் இருந்தது.

காளியுடன் நடனமாடி நிலத்தில் கிடந்த காதணியைக் காலாலே எடுத்துக் காதுக்குக் கொண்டு சென்று ஒட்டி அந்த ஒற்றைக்காலால் ஆடும் அந்த ஆட்டத்தை நினைத்துக் கொண்டே, அந்தக் காலை இங்கும் அங்கும் அசைக்க முடியாமல் கிடக்கும் நிலையைப் பார்க்க வெறுப்பின் உச்சக் கட்டத்திற்குப் போய்விடுகிறார் கூத்தாண்டார்.

நாற்பதிலே தொடங்கி ஐம்பதிலே முதிர்ந்து அறுபதிலே அசைக்கவும் முடியாமல் கிடத்திய வாத நோயை நினைத்து நினைத்து ஏங்கினார். என்ன ஆடியும் என்ன? என்ன பாடியும் என்ன? எல்லாம் ஒரு கால நிலை! அவ்வளவுதான், மனிதனுக்கு வாய்த்தது என்று ஏங்குவார்! உலகைக் கலக்கிய மாவீரர் மார்சல் 'டிட்டோ' வின் காலையே எடுக்க நேர்ந்த கொடுநோயை எண்ணிக் குமுறிய அவர், தம் அசையாக் காலை நோக்கிக் கொண்டார்! அந்த ஏக்க நினைவின் ஊடே அவரை அறியாமல் மனிதன் நிலை இதுவே ஆனாலும் மேலே மேலே பறக்கக்கூடிய மெய்யுணர்வும் மிக்கவன் தான். இல்லையானால் நடவரசனை படைத்திருக்க முடியுமா என வியப்புறுவார்!

நான் சற்றே நேரம் நாட்டியம் ஆடினேன்; கால் வலிக்கிறது; நடவரசரே நீர் ஓயாமல் ஆடுகிறீர்; கால்மிகவலிக்கும்; காலை மாற்றி ஆடும் என்று தாயுள்ளம் கொண்ட பாண்டியன் ஒருவன் வேண்ட, கால் மாறி ஆடினான் நடவரசன் என்பதைச் சிற்பி சிலையாக வடித்தானே! என்ன கலை! என்ன உணர்வு!

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும்"

கண்குளிரக் காணக் கலைவடிவு தந்தானே! கல்லைக் கவின்கலை ஆக்கிக் காட்டினானே! அந்தக்கால் என்றும் ஆடிக் கொண்டும் ஆட்டிக் கொண்டும் இருக்கிறதே! என்று நினைத்துக் கொண்டார் போலும் கூத்தாண்டார்! அசையாக் காலும் அசைவது அந்த நாள் நினைவு போலும்!

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று". 332

உடைந்த கண்ணாடி - 8

சின்னான் தாளை நீட்டினான். அவன் மனைவி செந்தாமரை மிக அமைதியாகக் கைஎழுத்துப் போட்டுத் தந்தாள். அவள் எதிர் பார்த்தது தான் அது.

சின்னானுக்குத் தன் எண்ணம் இவ்வளவு எளிதாக நிறைவேறும் என்று நம்ப முடியவில்லை ! வியப்படைந்தான்! அவனுக்குள் ஓர் அமைதி ! ஆனால், செந்தாமரை தீ கக்காத எரிமலையாக இருந்தது அறியான் !

சின்னானும் செந்தாமரையும் பள்ளித் தோழமையர், காதல் திருமணம் செய்து கொண்டவர், அடுத்த அடுத்த வீட்டில் குடியிருந்தவர்கள் செந்தாமரையின் தாயை மாமி மாமி எனப் பொங்கிப் பொங்கி அழைத்து அவள் அன்பையும் பெற்றவன். தந்தை இல்லாத வீடு! மாமியும் மறுக்க மாட்டாள் என்ற துணிவில் காதல் வளர்ந்தது. திருமணமும் கூடியது. மணம் செய்து பத்தாண்டுகள் ஓடிவிட்டன. நாட்டு நடப்புப் போல் இரண்டு மூன்று பிள்ளைகள் பிறந்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை பிள்ளைக்குரிய அடையாளமே தோன்றவில்லை !

சின்னான் பிள்ளைக்காக ஒரு திருமணம் செய்ய விரும்பினான் செந்தாமரைக்கு இது புரிந்த செய்தியாயிற்று. வரப்போகின்றவள் எவள் என்பதும் அவள் அறிந்தே இருந்தாள் !

இனி என்ன, அவன் விரும்பியபடியே நடக்கட்டும் என்ற முடிவில் தான் கையெழுத்திட்டாள். காதலாவது கத்தரிக்காயாவது வாழ்வே ஏமாற்றும் வஞ்சமும் ஆனபிறகு – கலப்படமும் கொள்ளை வணிகமும் ஆன பிறகு – காதல் என்ன காதல் ! அது கடைச்சரக்கிலேயும் கடைச்சரக்கு என்று செந்தாமரை உள்ளம் உள்ளே அழத்தான் செய்தது.

ஓரே ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு செந்தாமரை வீட்டை விட்டுப் புறப்பட்டாள். சின்னான் குறுக்கிட்டான். எங்கே போகிறாய் ! போகாதே ! எனத்தடுத்தான் 'மனத்துக்குப் பிடித்தவர் என்று உங்கள் கையைப் பிடித்தேன். உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ற பிறகு, உங்களுக்குப் பிடித்தவளோடு நீங்கள் வாழ்வதற்காக எனக்குப் பிடித்த வழியில் நான் புறப்படுகிறேன்' என்றாள்.

உன்னை வீட்டை விட்டு யார் போகச் சொன்னார்கள்? நீயே நான் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்துத் தானே கையெழுத்துப் போட்டாய்

உனக்குப் பிடிக்கவில்லை என்றால் மறுத்திருக்கலாமே ! உன்னை யார் கட்டாயப்படுத்தினார்கள் என்றான் சின்னான் "கடனைத் தீர்க்கத்தான் கட்டாயம் உண்டு. காதலைத் தீர்க்கக் கட்டாயம் வேண்டியதே இல்லை. அது கட்டாயத்தை எதிர்பார்ப்பதும் இல்லை. வாழ்க்கை என்பது ஒருவரோடு ஒருவர் கூடி ஒன்றாகிய மனத்தின் நிறைவிலே அமைவது. போட்டி பொறாமை போராட்டம் புழுக்கம் இவற்றுக்கு எட்டாத் தொலைவில் இருப்பது ! நெஞ்சில் இருந்து எப்பொழுது விலக்கினீர்களோ அப்பொழுதே நிலைப்படியில் இருந்தும் இறக்கிவிட்டீர்கள். இன்னும் என்ன, சுக்கல் சுக்கலாக உடைந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்து அருவறுப்பாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. அதனால் போகிறேன். ஆனால் ஒன்று வருகிறவளையாவது என்னைப் போன்ற நிலைமைக்கு ஆளாக்கி விடாதீர்கள். எல்லாரும் செந்தாமரையாக இருந்து விட மாட்டார்கள் இப்பொழுது ஒரு குறை சொல்லி நீங்களே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறீர்களே, இந்தக்குறை என் உடலில் உள்ள குறையா? உங்கள் உடலில் உள்ள குறையா? இதைத் தெரிந்து கொண்ட பின்னராவது இன்னொருத்தி வாழ்வில் விளையாடுங்கள்! இது என் காதல் கணவன் என்பதற்காகச் சொல்வது மட்டுமன்று, உங்களுக்கு வர இருப்பவளின் நன்மையைக் கருதியும் சொல்வதாகும்

செந்தாமரை திரும்பிப் பாராமல் நடந்து விட்டாள். அவள் உருவம் கண்ணில் தெரியும் வரைக்கும் பார்த்து நின்றான் சின்னான். சொந்தாமரையினிடம் என்ன அமைதி ! என்ன உறுதி ! என்ன தெளிவு ! ஒரு சிறு படபடப்போ வெறுப்போ வெளிப்பட்டதா? அவளைத் தொடர வேண்டும் போல் இருந்தது சின்னானுக்கு ! ஆனால், துணிவு வரவில்லை அவன் மனமே சுட்டது.

சின்னான், செந்தாமரையை சென்னை மெரீனா கடற்கரையில் சந்திப்பான் என்று நினைக்கவே இல்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் பார்த்தது போலவே இருந்தாள். இன்னும் சொன்னால் அவள் அமைதியான மனத்தின் சான்றாக முழுமதி போலவே அவள் முகம் விளங்கியது. ஒரு சுருக்கம். ஒரு முதுமை, ஓர் ஏமாற்றம். ஒரு சலிப்பு முகத்தில் வெளிப்படவில்லை. அகத்தின் சாயல் முகத்தில் படியும் என்பது எவ்வளவு உண்மை ! ஆனால் சின்னான் கிழடு தட்டிப் போயிருந்தான். அவனுக்கு அப்படி என்ன முதுமை வந்து விட்டது? ஒரு நிலைப்படாத அவன் மனமே அவனுக்கு அதை வழங்கியிருக்க வேண்டும். அவன் பழைய பொலிவு எங்கே ? இன்றைய நிலை எங்கே ?

சின்னான் தான் செந்தாமரையை அடையாளம் கண்டு கொண்டான். அவன் திகைத்துப் போய் அவள் தான் ! அவள் தான் ! என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே அடுத்துச் சென்று செந்தாமரை என்றான்.

வியப்பும் திகைப்பும் ஏற்படச் செந்தாமரை சின்னானைப் பார்த்தாள். பக்குவப்பட்டுப்போன அமைந்த பார்வையால் அன்போடு பாாத்தாள.

என்ன இப்படி இளைத்துப் போனீர்கள் ஏன் உடலுக்கு முடியவில்லையா? நீங்கள் மட்டும் தான் வந்தீர்களா? உங்களவள் நன்றாக இருக்கிறாள் அல்லவா ! என்றாள்.

சின்னான் தொண்டை அடைத்துக் கொண்டது. அழுகை வந்துவிடாமல் அடக்கி அடக்கிக் காத்தான். அவன் திக்கு முக்காடுதல் செந்தாமரைக்கு அறியக் கூடியதாகவே இருந்தது.

செந்தாமரை ! நான் பாவி ! நம்பிக்கைக் கேடன். உன்னோடு இருந்த காலத்தொடு என் வாழ்வு சரி. நான் இப்பொழுது நடை பிணமாகத் திரிகிறேன். நீ பிரிந்து வந்த சில நாள்களிலேயே திருமணம் முடித்தேன். அவள் நல்லவள் தான். அவளைப் பற்றி ஒரு குறையும் சொல்லமாட்டேன். ஆனால். அவள் உன்னைப் போல் துன்பத்தைத் தாங்கிக் கொள்பவள் இல்லை. அவளுக்குப் பிள்ளை இல்லை என்ற ஏக்கம் பிய்த்துத் தின்றது. அது என்று நினைத்தேன். ஆனால் அவள் கவலை எலும்புருக்கி நோயாக வளர்ந்து விட்டது என்பதைக் காலம் கடந்தே அறிந்தேன். நாள்தோறும் அவள் வாழ்வு போராட்டம் தான். என் நிலைமையும் அதுதான்.

செந்தாமரை, சின்னான் நிலையை நினைத்து உருகினாள். “வாழ்வில் குழந்தை இல்லாக் குறைபோல ஒரு குறையும் இல்லை தான். வயிற்று வலியும், தலை வலியும் வந்தவர்களுக்குத்தான் தெரியும் என்பார்கள். பிள்ளை இல்லாக் குறையும் அக்குறைக்கு ஆட்பட்டவர்களுக்குத் தான் தெரியும். மற்றவர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்ளவே முடியாது.

ஒருபிள்ளை இல்லை என்றால் ஒன்பது பிள்ளைகள் மேலாவது அன்பு செலுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். ஒரு நூறு

பிள்ளைகளுக்காவது உதவுவதற்கு முன்வர வேண்டும். அப்பொழுது ஆறுதல் கிடைக்கும். அதைப் புரிந்து கொள்ளாதவர்கள் இப்படி ஏதாவது ஒருவகையில் மாட்டி நைந்து நலிந்து போக வேண்டியது தான்! பாவம், கவலை சின்னானை எவ்வளவு விரைவில் கிழவராக்கி விட்டது ! ”

“ ஆம்! நினைக்கிறேன் ! அவள் சந்திரா தானே ! வேறு யாருமா?”

ஒரு தவறு எத்தனை தவறுகளை நினைக்கத் தூண்டுகிறது என்று தனக்குள் எண்ணிக் கொண்டு தலையைத் தாழப் போட்டுக் கொண்டு நடந்தான் சின்னான். இப்படிக் கேட்டிருக்கக் கூடாது என எண்ணிய செந்தாமரை அவனைத் தொடர்ந்தாள். ஆள்கள் மிகுதியும் இல்லாத இடத்தில் போய் அமர்ந்தனர். சின்னான், செந்தாமரை கழுத்தில் கிடந்த தாலியைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டான். ‘ எனக்குப் பிடித்த வழியில் செல்கிறேன் என்றாள் ’ பிடித்த ஒருவன் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்; இவளாவது நன்றாக இருக்கட்டும் என்று நினைத்தான்; கேட்பதற்கு ‘ நா ’ எழவில்லை !

செந்தாமரை சொன்னாள் : என்குடும்பம் பெரிது. ஏராளம் பிள்ளை குட்டிகள் அவர்களைப் பார்த்துக் கொள்வதற்கே முடியாமல் திணறிப் போகிறேன். ஆனால், பொழுதெல்லாம் பூஞ்சோலைக்குள் உலாவும் பூரிப்பு ! ஆமாம் ! நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள் ? என்றாள்.

திருவல்லிக்கேணியில் ஒரு விடுதியில் தங்கியிருப்பதாகக் கூறினான். தன் முகவரியைத தந்து விட்டுச் செந்தாமரை புறப்பட்டாள்.

செந்தாமரை கொடுத்துச் சென்ற முகவரியைத் தேடிக்கொண்டு சின்னான் மறுநாள் காலையில் புறப்பட்டான். அவளுக்கு வாய்த்த கணவன் எப்படிப்பட்டவனோ? மாமன் மாமியர் எப்படிப் பட்டவர்களோ? நீயார் என்று கேட்டால் என்ன சொல்வது? பலப்பல திகைப்புகளுடன் சென்ற சின்னான் புதியதோர் திகைப்புக்கு ஆட்பட்டான்.

“ சின்னான் மழலையர் பள்ளி “ என்றும் பெயர்ப் பலகை கண்டான் உள்ளே தயக்கத்துடன் சென்றான். செந்தாமரை அம்மாளைப் பார்க்க வேண்டும் என்றான். ஆங்கிருந்த ஒருத்தி ‘அம்மாவையா பார்க்க வேண்டும் ’ என்று சொல்லி அழைத்துச் சென்றாள். முதல்வர் என்று பெயர்ப்பலகை இருக்கக் கண்டான் தயக்கத்துடன் உள்ளே சென்றான்

சின்னானைக் கண்டதும் எழுந்து வரவேற்று அமரச்செய்தாள் செந்தாமரை அவள் இருந்த இடத்தில் தலைக்கு மேலே சுவரில் ஒரு

குழந்தையின் படம் இருப்பதைக் கூர்ந்து பார்த்தான். அதைப்பார்த்தான். அதைப்பார்த்த செந்தாமரை உங்கள் பெயர் என்றாள். சின்னான் திகைத்தான். உங்கள் பெயர்தான் இப்பையன் பெயர் என்று கூறினாள். சின்னான் மேலும் திகைத்தான்.

உங்களை விட்டு வெளியேறினேன்; உறையூர் வாழ்க்கை உறைய விடாமல் தள்ளியது. நேரே திருச்சிராப்பள்ளிச் சந்திப்புக்குச் சென்று தொடரியில் ஏறினேன். விழுப்புரத்தை வண்டி அடையும் போது ஒருத்தி விரைவாக வந்து இந்தக் குடிந்தையை வைத்துக் கொள்ளுங்கள் கீழே உள்ள பொருள்களை எடுத்துக் கொண்டு நொடியில் வருகிறேன் என்ற சொல்லிக் குழந்தையை என் மடியில் வைத்தாள்.

வண்டி விழுப்புரத்தில் இருந்து புறப்படும் வரை அவள் வரவில்லை. வேறு பெட்டியில் ஏறியிருந்து வரக்கூடும் என நின்ற நிலையங்களில் எல்லாம் பார்த்தேன். அவளும் வரவில்லை! குடிந்தையைக் கேட்டு வேறு எவரும் வரவில்லை. எழுமூர் நிலையத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் காவல்நிலையம் சென்று பதிந்தேன் நீங்களே குழுந்தையை வைத்திருங்கள்; பேர் முகவரி பதியுங்கள்; யாரும் வந்து கேட்டால் அவர்களிடம் ஒப்படைக்கலாம் நாங்கள் இவ்விரவுப் பொழுதில் வேறு செய்ய இயலாது என்றனர்.

நான் என்ன முகவரியைத் தருவேன் ! எங்கே போகிறேன் ; என்ன செய்யப் போகிறேன் என்பதொன்றும் அறியாத யான் என்ன செய்வேன் முன்னாளில் உடன்படித்த ஒரு தோழி நினைவுக்கு வர அவள் முகவரியைத் தந்து குடிந்தையோடு நிலையத்தை விட்டு வெளியேறினேன்.

குழந்தை என்னோடு நன்றாக ஒட்டிக் கொண்டது. இப்பொழுது நான் தனியாள் இல்லை. இக்குழந்தைக்காக வாழ்ந்தாக வேண்டும். அதற்கு நாம் காதல் பாடம் கற்ற போது கற்ற கல்வி உதவி செய்தது. இக்குழந்தைக்கும் செய்யும் கடமை ஊர்ப்பிள்ளைகளுக்கும் உதவட்டுமே! அவ்வுதவியால் எங்கள் வாழ்வுக்கும் வழிபிறக்குமே என என் காதில் கழுத்தில் இருந்தவற்றைப் போட்டு இவ்விடத்தை வாடகைக்குப் பிடித்து மழலையர் பள்ளி தொடங்கினேன். இப்பிள்ளைக்கு உங்கள் பெயரைச் சூட்டினேன். எப்படியும் என் பழங்காதலரை மறந்து

விடமுடியாதே ! குழந்தை சின்னான் பெயரால் மழலையர் பள்ளியைத் தொடங்கினேன்.

இப்பொழுது சின்னான் குழந்தையாய் இல்லை ! அரும்பி விட்டான் ! பார்க்கிறீர்களா ? என்று சொல்லி அவனை அழைத்துவரச் செய்து காட்டினாள் "சின்னான்" இவர் உன் தாத்தா ! இவர் பெயரைத்தான் உனக்கு வைத்தேன் வணக்கம் சொல்லு "என்றாள்" அவன் வணங்கினான் ! சின்னான் விக்கிப் போனான் ! தாத்தா பாட்டி பெயர்களை வைப்பதால் தானே 'பேரன்' 'பேத்தி' எனப்படுகின்றனர் என்றாள் செந்தாமரை !

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு
என்றும் மாமணிக்குறள் நெஞ்சில் நின்றது.

செந்தாமரை உன் உள்ளத்தின் அடித்தளத்தில் காதலைப் போட்டுப்புதைத்துப் பூக்காடாகப் பூன்முறுவல் செய்கிறாய் ! பசிபிக்குப் பெருங்கடலின் ஆழம்தான் அளத்தற்கு அரிது என்பர். உன் உள்ளத்தில் ஆழம் அதற்கும் ஆழமாக அல்லவோ உள்ளது. செந்தாமரை என்னைப் பொறுத்துக் கொள் ! நீ எங்களோடு சேர்ந்திருக்க வேண்டும். அல்லது எங்களை உன்னோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டு செந்தாமரை முகத்தை நோக்கினான் சின்னான்.

குழந்தையோடு குழந்தையாக நான் வாழ்வதற்காகக் குழந்தைக் கண்ணனும் குழந்தை வேலனும் குழந்தை இயேசுவும் குழந்தைமரியும், குழந்தை ஆண்டாளும் குழந்தை திரேசாவுமாக இந்தச் சின்னான் வழிகாட்டினான் ! நான் ஏற்றுப் பழக்கப்பட்டுப்போன இனிய வாழ்வைப் பழைய காதலைக் காட்டிப் பறித்துவிட வேண்டா ! மீண்டும் ஓர் அசைவுக்கு இடம் தராமல் இருந்து விடுங்கள்! **உடைந்த கண்ணாடியில்** உருவத்தைப் பார்க்க வேண்டா என வணங்கினாள் செந்தாமரை ! அவன் உருவம் தெரியும் வரை பார்த்துக் கொண்ட நின்ற செந்தாமரையின் கண்களில் முத்துக் கோத்து நின்றது !

❖❖❖

17. திருக்குறள் விடுதூது

1. விளியியல்

தேனே ! திருமறையே ! தெய்வத் திருக்குறளே !
வானே ! வளமே ! வரப்பேறே ! வண்டமிழே ! 1

முந்தைத் தமிழ்ச்சான்றோர் முன்னு கருத்தெல்லாம்
'இந்தா' எனவழங்கும் ஈடில்லாச் செம்பொருளே ! 2

பல்லாண்டு பல்லாண்டு பன்னூலும் பார்த்துழன்று
நல்லாண்டு வாழ்வு நயங்கண் டறியாரும் 3

தொட்டஇடத் தெல்லாம் தூய வளங்கண்டு
கட்டிக் கமழ்பாகாய்க் கைம்மேல் பெறுதற்கு 4

வாய்த்த வனப்பே ! வருங்கால வைப்பகமே !
காய்த்த கனிமரமே ! கண்கண்ட பொன்னேடே ! 5

தண்டமிழர் செய்த தவப்பயனே ஈதென்னக்
கொண்டெழுந்து ஞாலத்துக் கோலோச்சும் நல்லரசே ! 6

எண்ணில் எழுசீரே என்பார்கள் மெய்யாக
எண்ணில் எழுசீரே என்பதனை ஓர்வார்கள் 7

எண்ணப் பெருகியெழும் எண்ணத்தை யாராலும்
எண்ணற் கியையுமோ எண்ணரியாய் எண்ணறியாய் ! 8

கண்ணுட் குறும்பாவை காணும் கடலென்ன
எண்ணுட் படுதற்கும் எட்டாப் பெருந்தக்காய் ! 9

நேரசையோ அன்றி நிரையசையோ உன்னிடத்தாம்
ஓரசையும் ஓருலகாய் ஓங்க ஒளிர்மாண்பே ! 10

வேட்ட பொழுதில் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் என்னும் இன்புரைக்குக் 11

காட்டாய் இலங்கும் கவின் பொருளே காலமெலாம்
தோட்டாய்க் கொளத்தக்க தேர்ச்சித் திருத்துணையே ! 12

ஆர்வத்தாற் கற்பார் ' அறிதோ றியாமை '
நேர்வரென நேர்ந்தசீர் நின்னுரைக்கு நேர்சான்றே ! 13

நாடி நவில்தொறும் நூல்நயம் நண்ணற்குக்
கூடிச் செறிந்த குறையாத பேரேடே ! 14

மூத்த தமிழ்க்குடியின் மூவா வளச்சுடரே !
யாத்த அறவாழ்வே ! யாண்டைக்கும் ஆம் சுரப்பே ! 15

வற்றாப் பெருக்காறே ! வாடாக் களஞ்சியமே !
கற்றார்க் கமைந்த கருவூலக் காப்பகமே ! 16

பாட்டுள் பயின்று பலகாலும் நின்றுபின்
கூட்டுள் அமுதாகிக் கொஞ்சும் கொடை வாழ்வே ! 17

வாட்டும் அனற்கோடை வாழ்வை இளந்தென்றல்
ஊட்டும் நிலாமுன்றில் ஆக்கும் ஒளிப்பேறே ! 18

கற்பார் தமையெல்லாம் காதல் மகவாக்கி
நற்பால் நயமூட்டும் நாடறியாத் தாய்வடிவே 19

" வையத்துள் வாழ்வாங்கு வாடி " வழிகாட்டித்
தெய்வத்துள் வைக்கத் திறம்சொல்லும் தெய்வமே 20

உன்னைப் பணிந்தேத்தி ஓராயிரம் பேசி
ஒன்றை உரைக்கின்றேன் உள்ளன்பால் கேட்டருள்வாய் 21

பேரால் இளங்குமரன் பேச்சென்ன கேட்கவென
ஆராய்ந் தொதுக்காமல் அன்பாலே ஏற்றருள்வாய் 22

தம்மக்கள் சொல்லும் தவமழலைச் சொற்சிறப்பைச்
செம்மையுறச் செப்பும் நீ கேட்பையெனச் செப்புகிறேன் 23

நேயப் பொருளாக நேர்ந்திலங்கும் நின்றன்னைக்
கூயப் பணியுரைக்கக் கூசினேன் என்றாலும் 24

நன்னன்றி சொல்லி நயக்கும் பணிக்கனுப்ப
உன்னன்றி இல்லா உரிமையால் சொல்கின்றேன் 25

– இத் தூது 149 கண்ணிகளைக் கொண்டது.

அதில் முதல் 25 இஃதாம். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு.வ.சுப்பையா அவர்கள் மேல் விடப்பட்ட திருக்குறள் தூதின் முதலியல் !

❖ ❖ ❖

18. தமிழ்மறை காட்டும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

தமிழ்மறையாவது, தமிழியக் காவல் நூலாகிய திருக்குறள் அதில், **பகுத்தறிவுச்** சிந்தனைகளாக உள்ளவற்றை ஆய்வதே இக்கட்டுரையாம்.

பகுத்தறிவு என்னும் சொல்லாட்சி திருக்குறளில் இல்லை. அச்சொல் தோற்றமும் வளர்ச்சியும், தந்தை பெரியார் வழிப்பட்டதாகவே தமிழ் உலகம் அறியும். ஆனால், பகுத்தறிவு என்னும் சொல்லின் முன்னொட்டாகிய 'பகுத்து' என்பது இல்லாமல், 'அறிவு' என்பதே, பகுத்தறிவைக் குறிக்கும் என்று அறிதல் வேண்டும்.

பகுத்தறியா ஒன்று, **'அறிவு'** ஆகாது. ஆதலால், பழநாளில் 'அறிவு' என்பதே 'பகுத்தறிவை'யே சுட்டியது. பின்னே, அவ்வறிவில் பொய்மைப் புனைவு, கண்மூடித்தனம், வெறுஞ்சடங்கு என்பவை புக, அவற்றை விலக்கிய அறிவைப் 'பகுத்தறிவு' என நேரிட்டதாம்.

அறிவை ஆறு எனப்பகுத்ததும், ஒழுக்கம் இழுக்கம் எனப்பகுத்ததும், அகம் புறம் எனப் பகுத்ததும், எழுத்து சொல் பொருள் எனப் பகுத்ததும் இன்னவை பிறவும் பகுத்தறிவின் பாற்பட்டனவேயாம்.

பகுத்தல் என்பதன் மூலம் **பக்கு** அது திருக்குறளில் உண்டு. அதன் வழித்தோன்றிய **பகல், பகவு, பகுப்பு, பகை, பாத்து, பாத்தி, பாகம்** முதலியனவும் உண்டு.

'அறிவு என்பதே, 'பகுத்தறிவே' என்பதை,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" (423)

என்பதும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (355)

என்பதும் விளக்கும்.

பகுத்தாயும் ஆய்வே அடியாகிய அறிவியலின் இலக்கணத்தை, "அறிதோறும் அறியாமை" என்று அருமையாய் விளக்கிக் காட்டுவதும் திருக்குறளேயாம். அறிவை, "அற்றம் காக்கும் கருவி" என்றதும், "அறிவுடையார் ஆவது அறிவார்" என்றதும், "சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்றதும் அரிய பகுத்தறிவு இலக்கணங்களேயாம்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை" (315)

என்பதோ பகுத்தறிவின் மேனிலை விளக்கமாம்.

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்" (203)

என்பதோ, வள்ளுவராலேயே தலைமை சுட்டப்பட்ட பெருமையுடையதாம். நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை கடை என்பது வள்ளுவச் சிந்தனை வளமாம்.

தொல்காப்பியர் காலத்திலேயே வடமொழிச் சொற்கள் தமிழில் புகத் தொடங்கின. வடவர் சடங்குகளும், புனைவுகளும் தமிழகத்துப் பரவலாயின. தமிழியலுக்கு மாறானதும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமாம் அவற்றைச் சுட்டிக் காட்டித் தமிழியம் காக்க வள்ளுவர் கிளர்ந்தமை அவர் இயற்றிய திருக்குறளில் அறியக் கிடக்கின்றது. பலப் பலவாக மெய்மை காட்டி, மேலெடுக்க விழைந்த அவர்தம் விழைவு அஃதாம்.

1. அமிழ்து

அமிழ்து என்பது அழியா வாழ்வு தருவது என்றும், அது பாற்கடலில் கடைந்து எடுக்கப்பட்டது என்றும், அதனை உண்டவர் அமர வாழ்வினர் என்றும் அயலார், பொருந்தாப் புனைவுகளைப் பரப்பினர். தமிழ்ப் புலமையுடையாரையும் தலையசைக்க வைத்த அதனை அகற்றி மெய்மை காட்டும் வகையால் அமிழ்து எது என்பதை வான்சிறப்பில் காட்டினார்.

'மாசிலா மழைநீரே அமிழ்து' என்பதை,

"வானின்றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று" (11)

என்றது அது. மேலும்

தானே உணவாவதும், மற்றை உணவுகளை ஆக்கித் தருவதும் அம் மழை நீரே என்பதை அடுத்த குறளிலேயே,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (12)

என்றார். துய்ப்பு என்பது துப்பு: அஃது உணவு.

அமிழ்தின் அரிய தன்மை, உயிர் தளிர்க்கச் செய்தல்.

ஓரறிவாம் பயிர் தளிர்க்க வைக்கும் அது, ஆறறிவாம் மக்கள் உயிர் தளிர்க்க வைக்கவும் செய்யும் என்பதை, இன்பத்துப் பாலில் இசைத்தார்.

உள்ளொத்த உயிரொத்த காதலர் தம் பொருந்திய வாழ்வு, உயிர் தளிர்க்கச் செய்யும் என்பதை,

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்"

என்றார். (1106)

மக்கள் மழலைச் சொல் கேட்டல் செவிக்கு இன்பம், அவர் தம்மைத் தொட்டுத் தழுவுதல் உடற்கின்பம் என்று கூறிய அவர் (65,66), தம்மக்கள் தமக்குப் பிசைந்து ஊட்டும் உணவு, அமிழ்தினும் மிகமிக இனிதாம் என்றார். அது,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்பது (64), ஆற்ற = மிக, கூழ் = உணவு.

இனிய அமிழ்தங்கள் இவ்வாறு வாழ்வில் பொருந்திக் கிடக்கவும் பொய்ப் புனைவை நம்பித் தலையாட்டுவது பகுத்தறிவா என்று வினாவினார் வள்ளுவர் என்க.

2. கற்பகம்

விண்ணுலகில் உள்ள மரங்களுள் ஒன்று கற்பகம்; அது வேண்டுவார் வேண்டுவவெல்லாம் தரும். நினைப்பார் நினைப்பவை எல்லாம் தரும் எனப் பொய்க்கதை புனைந்து பரப்பினர். கற்பகக்கா, கற்பக நாடு என்பனவெல்லாம் உண்டு என்றனர். அறிவொடும்

ஆராய்ந்து சொல்லும் செய்தியா இது? மெய்ப்பிக்க வாய்த்ததா இது? எதைக் கேட்டாலும் அப்படியே ஒப்பும் மக்களைக் கண்முன் கண்ட வள்ளுவர், அவர்கள் தெளிவு பெற இவ்வாழ்வில், "தக்க தலைவிக்குத் தக்க தலைவன் அமைந்து விட்டால் அவர்கள், இன்ப உலகினர் எனப்படுவார் எவரோ அவராலும் பாராட்டப்படுவார்" என்றார். அது,

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

என்பது (58). மேலும், மாண்பமைந்த **மனைவி என்பவளே கற்பகம்:** கற்பை அகத்தே உடையவள் எவளோ அவளே கற்பகம். அவள் இருக்கும் இல்லம் கற்பகம். அவ் இல்லத்தில் இனியவை, தேவையானவை, நல்லவை என்பவை எல்லாமும் இல்லாமல் இருப்பதில்லை. கற்பக மரம் போலப் பொய்ப் புனைவானவை இல்லை. கண் காணும் மெய்ப்பொருள் ஆகிய மேன்மையவை என்றார். அதனை,

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

என உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருவகையாலும் உரைத்தார். வள்ளுவப் பகுத்தறிவுச் சிந்தனைப் பார்வை இது.

3. தாமரைக் கண்ணான் உலகு

தாமரைக் கண்ணான் என்பான் திருமால். அவன் உறையும் வைகுந்த உலகமே இன்ப உலகம் மற்றை உலக மெதுவும் இன்ப உலகமாகா என்று புனைந்து கூறுவது வள்ளுவர் செவியில் பட்டது.

அதனைக் கண்டவர் எவர்? காட்டுவார் எவர்? பொய்க் கதை, மெய்யெனப் படுமா?

பாற்கடல், அறிதுயில், அரவணை என்பவை எல்லாம் உயரிய இல்வாழ்வில் காணும் இன்பமேயாம். இதனை அறிய வெளிப்படுத்துதல் எம் கடன் எனத் தெளிந்த வள்ளுவர்,

"தாம்வீழ்வார் மென்தோள்துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு?"

என வினாவினார் (1103)

தாமரைக் கண்ணான் உலகில் கிட்டுமெனப்படும் இன்பத்தினும் மேலாம் இன்பத்தை, அவரவர் இல்லத்திலேயே பெறக் கூடுமே என மெய்ம்மை காட்டியது வள்ளுவர் தம் பகுத்தறிவுச் சிந்தனையாலேயே ஆம்

4. அடியளந்தான் தாவியது

திருமால் குள்ள வடிவில் (வாமனன்) வந்து மாவலியினிடம், மூவடிமண் கேட்டு, ஈரடியால் மூவுலகும் அளந்தான் என்பதொரு புனைவு பரப்பப் பட்டது. நீர் செல நிமிர்ந்தமால் என்பது முல்லைப் பாட்டு (5).

உலகம் சுற்றி வருவார் தமக்கெல்லாம், ஆயிரம் ஈராயிரம் அடிகளா? ஈரடிகள் தாமே! சோம்புதல் இல்லா வேந்தன் ஒருவன், உலக முழுவதையும் என் குடைநிழற்கீழ்க் கொண்டு வருவேன் என முயன்றால் முடியக் கூடியது தானே. இது இதற்கு, என்ன கட்டுக் கதை வேண்டும்! மாலை இழுத்து, மாவலியோடு ஏன் முடித்துப் போட வேண்டும் என்று எண்ணியவராய் மெய்ம்மையுணர்த்த விரும்பி,

“மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான்
தாஅயதெல்லாம் ஒருங்கு”

என்றார் (610) ஊக்கமுடைமை உரைத்து, அதன்மேல் வரும் **மடியின்மை** அதிகார நிறைவுப் பா இஃதாம். பெருவலிமையும் கொடைப்பேறும் வாய்ந்தானை ஒழிப்பது **இறைமைக்குத் தகுதியாவதோ** எனப்பகுத்தறிந்துரைத்த பார்வை இதுவாம்.

எம் குடிமையை உயர்த்துவேன் என ஊக்கத்துடன் கிளர்வான் எனின், “உனக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்” என வரிந்து கட்டிக் கொண்டு, முன்வந்து நிற்கும் தெய்வம்! அதுவா வண்மையனை – வலிமையனை – அழிக்கும்? என்று வினாவுவது போல் கூறுவார்.

“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்”

என்பது அது (1023). இதனை எண்ணினால் குடிமைக் காப்பில் வள்ளுவர் எவ்வளவு ஊன்றியிருந்தார் என்பது புலப்படும் “தெய்வம் முயற்சியாளனைத் தடுக்கும்” என்பதை ஒப்புவாரா?

5. இந்திரன்

ஐம்பொறிகளையும் பக்குவப் படுத்தி ஐம்புலன்களையும் சென்ற இடத்தால் செலவிடாமல் ஆளும் பெருமையன் இந்திரன் என்பதை,

“ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி”

என்று கூறினார்.

ஐம்புலனை அடக்கியவன் பெயர் ஐந்திரன் “புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரமாம்” என்பது நம்நெறி. ஐந்திரன் செய்த நூல், ஐந்திரம். ஐந்திரம் கற்றுச் சிறந்தவன் அருகன் என்பது சிலம்பு. அது “ விண்ணவர் கோமான் விழுநூல்” எனப்படும். ஐந்திரன் என்பான், இந்திரன் எனவும் வழங்கப் பட்டான்.

ஐந்தவித்த அவ்விந்திரனை அடக்கமுடைமைக்கு எடுத்துக் காட்டாக வள்ளுவர் கூற, பின்வந்த உரையாசிரியர்கள் செய்யாதன வெல்லாம் செய்து சீரழிந்து கோயில் தோறும் கழுவாய் தேடிய தொன்ம (புராண)க் கழிசடை இந்திரனை அடக்க மறுதலைக்குக் காட்டினர்.

வள்ளுவர் கொண்ட பகுத்தறிவுச் சிந்தனை உரைகண்டார்க்கும் வாயாமையும், அவர்கள் கொண்ட வைதிக வழக்கும் இம் மறுதலைச் சான்றாய் அமைந்த தாம்,

இந்திரன் பழிதீர்த்த படலம் இல்லாப் புராணம் தேடித்தானே பார்க்க வேண்டும்.

6. வேள்வி

வேதநெறியர் வேள்வி முறையை (யாகம் என்பதைக்) கொண்டு வந்தனர். வேந்தர்களை யெல்லாம் மயக்கி, “வேள்வியால் பெற வேண்டும் எல்லாம் பெறலாம்” என ஒப்ப வைத்தனர். மங்கலம், உத்தம தானம், கோதானம், பூதானம், இரணிய கருப்பம் எனப்பறித்தனர். பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதி, இராச சூய யாகம் வேட்ட பெருநற் கிள்ளி என்பார் பெயர்களைக் கேட்ட அளவாலே, அவர்கள் கெட்ட வகை புலப்படுமல்லவோ! கண்ணகிக்குச் சிலையெடுக்கப் பனிமலை சென்று வென்ற சேரன் செங்குட்டுவன், என்ன செய்தான்! **வேள்வியில் தானே வீழ்ந்துபட்டான்.** வள்ளுவ வழியை ஒப்பினான் இல்லையே!

வேள்வியாம் தீவினைகள் வள்ளுவர் நெஞ்சத்தைச் சுட்டு வாட்டின **உழைத்து உழைத்து ஓய்வார், தம் பசி எரியை மாற்றத் தவிக்கும் காட்சி அவர்க்குப் புலப்பட்டது.** "நேற்றுக்கொன்று விட்டுச் சென்ற வறுமை இன்றும் வருமோ?" என ஏங்கிக் கிடப்பாரை எண்ணியது. "நெருப்பினுள் உறங்கினாலும் உறங்கக் கூடும்! இவ்வறுமைப் பசியில் உறங்க இயலவில்லையே!" எனத் தவிப்பாரை நோக்கித் தவித்தது. பசுவென்றும் குதிரை என்றும் கொல்லும் வேதப் புலை வேள்வியில், பட்டென்ன, மணியென்ன, பால் என்ன, நெய்யென்னப் பயன் பொருள்கள் பலவும் பாழாக்கப்படுவதை நோக்கினார். அதனால்,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்றார். வேள்வியைக் கண்டித்த அதே பொழுதில், "அல்லது அகன்று நல்லது அமையும் வகை"யாக,

விருந்தென்னும் வேள்வி செய்யுமாறு ஒரு முறைக்கு இருமுறை முழக்கமிட்டார்

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்"

என்பவை அவை. அன்றியும்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றே விருந்தோம்பலைத் தொடங்கியதும் எண்ணத் தக்கதாம். இவற்றின் மேலாகவும், ஒப்புரவு அறமாக சிந்தனை வழிப்பட்ட **ஆன்ம நேயமாம்! அதுவே வள்ளலார் வாழ்வியலாகிச் சிறக்கின்றதாம்.**

7. பசியை மாற்றல்

உழைப்பார்க்கு உழைப்புத்தராமல் உணவு தந்து அதுவே வழக்கமாகிப் போனால், வீட்டுக்கும் நாட்டுக்கும் தீராக்கேடாம் என்பதை 'எதிரதாக் காக்கும்' திறத்தோடும் எண்ணிக் கூறுகிறார் திருவள்ளுவர்.

ஒருவர் பசியை ஆற்றும்போதே, அவர் தம் பசிக்குப் பிறரை எதிர்பார்க்காத நிலைமையையும் உண்டாக்க வேண்டும். அவர் பசியை அவரே ஆற்றிக் கொள்ளும் வகையில் தக்க முயற்சி வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்னும் மேதக்க பார்வை பார்க்கிறார். அப்பார்வை,

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்பதாம்.

"மீனைப் பிடித்துத் தராதே மீனைப்பிடிக்கும் வழி வகைகளைக் கற்றுத் தா" என்னும் சீனப் பழமொழியை எண்ணின் வள்ளுவச் சிந்தனை விளக்கமாம்.

8. திங்களைப் பாம்பு கொள்ளல்

ஐயம் அகன்று தெளிந்த அறிவினர்க்கு வையத்தைக் காட்டிலும் வானக்காட்சி தெளிவாகப் புலப்படும் என்பது வள்ளுவம். அக் காலத்திலேயே நாள்கள் இவை எனவும் கோள்கள் இவை எனவும் தெளிந்தவர்கள் இருந்துளர். செஞ்ஞாயிற்றுச் செலவு, அஞ்ஞாயிற்று வட்டம், காற்றின் இயக்கம், காற்றும் இயங்கா விண் என்பவை எல்லாம் அங்கே அங்கே சென்று அறிந்தவர் போல அளவிட்டுச் சொல்வார் இருந்துளர். அந் நிலையில் நிலவைக் கரும்பாம்பு (இராகு) செம்பாம்பு (சேது > கேது) என்பவை விழுங்கி உமிழ்வதாகப் பொய்க் கதையை வேத நெறியர் பரப்பினர். அப்பொழுதில் அதன் தீமை நம்மைப் பற்றாதிருக்க இன்ன இன்ன சடங்குகள் செய்ய வேண்டும் என்றும் கூறினர். இப் பொய்ப் புனைவை அறிந்த வள்ளுவர் உள் நகைத்தார். அதனை நம்பும் தமிழ் மக்கள் அறியுமாறு ஊர் நகைப்பு ஒன்றைக் குறித்தார்.

"யான் என் தலைவனை ஒரே ஒரு நாள் இயல்பாகக் கண்டேன்; அதன் பின் கண்டதே இல்லை. எனினும் என்னையும் அவனையும் இணைத்துப் பொய்யாக ஊரவர் பழிக்கின்றனர். இப்பழிப்பு எத்தகையது தெரியுமா? நிலவைப் பாம்பு விழுங்கிவிட்டுப் பின்னர் உமிழ்கிறது எனப் பொய்க் கதை கட்டிவிடுகிறார்களே அதுபோல உள்ளது" என்று ஒரு தலைவி கூறுவதாகக் கூறுகிறார். அது,

"கண்டது மன்னும் ஒருநாள் அதுமன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று" (1146)

என்பது **யானை**யுண்ட விளாம்பழம், தேரை யுண்ட இளநீர் என்பவை போல, வெறும் புனைவென வெளிப்படுத்திய பகுத்தறிவுச் சிந்தனை ஈதாம். யானை தேரை என்பவை நோயின் பெயர்கள்

9. ஊழ்

ஊழ் என்பதோர் அதிகாரப்பெயர் இயலின் பெயர் என்பதும் உண்டு.

அறத்துப் பால் பொருட்பால் இரண்டற்கும் ஊடாக அமைந்து, அரிமா நோக்கு நோக்கும் அதிகாரம் அது.

ஊழ் என்பது இல்வாழ்வர், துறவர், ஆட்சியர் ஆகிய எப்பாலவரும் அறிந்து தெளிந்து கொள்ள வேண்டிய ஒன்று என்பதை விளக்கும் முறை வைப்பு இஃதாம்.

இவ்வுலகியல் இருவேறு தன்மைத்து; அவை ஆகூழ் போகூழ் என்பன. இதன் விளக்கம் போல் அமைந்தது

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்பதாம். இவ்வூழ் என்பதன் பொருள் என்னை? என வினவின், வள்ளுவர் தரும் மறுமொழி, **'உலகத்து இயற்கை'** என்பதாம்.

உலகத்து இயற்கையாவது என்னை? எனின், கெடுப்பதும் மழை, எடுப்பதும் மழை என எடுத்துக் காட்டினாரே அஃதொரு சான்றாம்.

நிலநடுக்கம், எரிமலை கக்கல், ஆழிப்பேரலை, மூடுபனி, புயல் உருவாக்கம் இன்னவெல்லாம் உலகத்து இயற்கையாம். நீர் பள்ளம் நோக்கி ஓடல், **தீ** மேல் நோக்கி எழுதல், **காற்று** சுழன்றடித்தல் இன்ன வெல்லாம் உலகத்து இயற்கையாம்.

பூ அரும்புதல், முகிழ்த்தல், போதாதல், மலர்தல், அலர்தல் போன்ற இயற்கை மாற்றங்களெல்லாம் ஊழ் என்பதாம். வழிவழியாக மாறாத் தன்மையதாக-முறை முறையாக - வருவது ஊழ். அம்முறைமைக்கு எதிரிடையானது அல்லது முறைகேடானது **ஊழல்** (ஊழ்+அல்)

இவ்வூழுக்கும் தலைவிதிக் கொள்கைக்கும் எத்தகைய ஒட்டும் உறவும் தமிழ் நெறியில் இல்லை. பாட்டு (10) தொகை (8), தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இருபது நூல்களில் 96 இடங்களில் ஊழ் என்னும் சொல் இடம் பெற்றும், ஓரிடத்துத் தானும் **'ஊழ்வினை'** என்பது இடம் பெறவில்லை. முதன் முதலாக இடம் பெற்றது சிலப்பதிகாரத்திலேயே ஆகும்.

திருவள்ளுவர், ஆகூழ் போகூழ் என்று கூறுபவற்றை எண்ணுக (371) உலகத்தியற்கை என்பதைக் கருதுக (374)

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்...

என **அமைச்சுக்குக்** கூறியதை அறிக (637)

இவற்றை மக்களும் அரசும் தக்கவகையில் முன்னறிந்து செயல்பட்டால், **"ஊழையும் உப்பக்கம் காணலாம்"** என ஊக்கினார். அம் முயற்சியும் முனைப்பும் இல்லையேல் **"ஊழிற் பெருவலி யாவுள?"** என்னும் கையறு நிலையையே அடைய நேரும் என மேம்பட்ட பகுத்தறிவுச் சிந்தனையில் எடுத்துரைத்தார். இதனைத் தலைவிதிக் கொள்கை தகர்த்தெறிந்து கொண்டிருப்பது கண்கூடு

10. வினை

வினை என்றதும் நல்வினை, தீவினை, முன்வினை, இருப்பு வினை எனப்பலப்பல வினைகளைச் சமய உலகம் கூறும். மொழி உலகோ நேர்வினை, எதிர் வினை, செய்வினை, செயப்பாட்டு வினை, தன்வினை, பிறவினை என எண்ணும். வள்ளுவமோ அவரவர் செய்ய வேண்டுவதும் செய்யக் கூடாததுமாம் கடப்பாடுகளையே குறிக்கும்.

ஆள்வினையுடைமை (62), தீவினையச்சம்(27), வினை செயல் வகை(68), வினைத் திட்பம் (67), வினைத் தூய்மை (66) என வினையொட்டுடைய ஐந்ததிகாரங்களுள் எங்காவது தலைவிதிக் கொள்கை உண்டா?

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது கடமை அல்லது செயல்தானே.

கருமத்தால் நாணுதல் நாணு என்பதும் (101)

கருமம் சிதையாமல் (578), கருமம் செய (1027) என்பனவும் விதிவழிப்பட்டனவா?

அவரவர் ஆக்கம் கேடு ஆகிய செயல்களின் விளைவுகளை அடுத்த நாளுக்கும் தள்ளாமல், அன்றே நிகழ்வதாகக் கூறும் வள்ளுவம், வினைப்பயனை அடுத்த பிறவிக்குக் கொண்டு செல்லுமா?

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (319)

என்பதையும்,

"எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்" (207)

என்பதையும் எண்ணுக.

11. கழுவாய்

பண்ணிய பாவம் பழிகளைக் கழுவாயால் கழிக்கலாம் என்னும் கருத்தும் தமிழ்மண்ணில் பரப்பப்பட்டது. வள்ளுவர் எண்ணினார். கழுவத்தக்க மாசுக்கள் இரண்டு எனக் கண்டார். அவை, உடல்மாசு உளமாசு என்பன. அல்லது புறமாசு அகமாசு என்பன. மாசு அகற்றுவது தூய்மைப்படுத்துதலால்தான் கூடுவது. ஆதலால்,

"புறந்தூய்மை நீரான் அமையும், அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்றார்.

உலகில் உண்டாம் மாசுகளுக்கெல்லாம் மூல மாசாக இருப்பது மனமாசே எனத் தெளிந்து தேர்ந்தார். காற்றிலே மாசு, உணவிலே மாசு, பயன் பொருள்களிலே மாசு. இன்னவை எல்லாம் மனமாசால் ஏற்படு வனவே எனக் கண்டார். அதனால், "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்றார். மனமாசுகளாக இருப்பவற்றை எண்ணியும் எடுத்துரைத்தார். அவை,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

உலகில் உண்டாம் மாசுகளுக்கெல்லாம் மூல மாசாக இருப்பது

என்பது. இந்நான்கும் இவற்றின் வழியாக வருவனவும் தன்னலத்தால் வருவன. இவற்றை இல்லார் 'பிறர்க்கென வாழும் பெருந்தகைமை' யர் அவர் தம்மைப் போல் பிறரையும் மதித்து வாழ்பவர். 'தம்குற்றம் நீக்கிப் பிறர்குற்றமும் விலக்கி உலக நலம் செய்ய முயலும் ஒப்புரவாளர். அவர் சடங்குக் கழுவாய்களைக் கொள்ளார். மனச்சான்றே கழுவாயாகக் கொள்வார். அத்தகையர், தாமே தம் செயலுக்கு வருந்துமாறான செயலைச் செய்யார் ஒருகால் தம்மை அறியாமல் செய்ய நேர்ந்துவிடினும், அதனை எண்ணி வருந்துவர். செய்த தவற்றை மீட்டொருபோதும் செய்யார். இதுவே அவர் கொள்ளும் கழுவாயாம் என்பதை,

"எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்,
மற்றன்ன செய்யாமை நன்று"

என்றார். **செய்து இரங்கா வினைச் சேட்சென்னி** என்று பாராட்டும், **சென்னி**யைக் கருதலாம்.

"வழுவாய் மருங்கில் கழுவாயும் உள என
அறம்பா டிற்றே"

என்றும் புறநானூறு கூறும், **'உய்தி'** என்பதைக், கழுவாயாகக் கொண்டு கூறியதாம். அது,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பதை நோக்கியதாம் **உய்தியாவது பழிபாவங்கள் நீங்கி வாழும் வகை** என்க.

வழு நீங்கி வாழும் வாழ்வே, வழுவாய்க்குக் கழுவாய் எனப், **'பரிகாரம்'** என்பதை விலக்கிய பகுத்தறிவுச் சிந்தனை வழியது வள்ளுவமாதல் தெளிக.

12. பிறப்பு

பிறப்புப் பற்றிய வள்ளுவச் சிந்தனை மிகப் பெரும் பாராட்டுக்கு உரியதாம். அது, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெரு நெறியது.

பிறப்பில் உயர்வு தாழ்வு, மேல் கீழ் என்னும் கெடு நிலை மிகவாகப் பரப்பப்பட்ட நிலையிலும், சிலர் தம்மைத் தெய்வப்பிறப்பினர் என்று பறை சாற்றிக் கொண்ட நிலையிலும், மெய்ந்நிலை காட்டவேண்டிய கட்டாயத்தால் வள்ளுவர், 'பிறப்பொக்கும்' எனப் பேசினார்.

குடிமை, குடிசெயல்வகை இவையென வகுத்துக் கூறிய அவர், **"ஒழுக்க முடைமை குடிமை"** என்றார்.

உயர்வாவது உயர்திணை ஒழுக்கம். அவ் வொழுக்கம் இல்லாப் பிறவி அஃறிணை. அதனால், ஒழுக்க முடைமை குடிமை என்ற அவர் "இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்றார்.

பிறப்பு ஒப்புக் கூறிய அவர், இழிந்த பிறப்பு என்று கூறிய உண்மை உணராமல், இழிந்த சாதிமை எனக் கொண்டனர். சாதி என்பதே விலங்கின்சாதி, பறவைச் சாதி, மீனின் சாதி என அஃறிணை உயிரிகளின் இனப் பகுப்புக் குறிப்பதே அன்றி, மக்கட் பிரிவு சுட்டாதாம். தொல்காப்பியம் கற்றார் இதனைத் தெளிவாக அறிவர். ஆதலால், இழிந்த பிறப்பு என்பது **ஆறறிவுப் பிறப்பின் இழிந்த ஐயறிவு, நாலறிவு முதலாம் பிறப்பு ஆகிவிடும் என்பதாம்.**

கற்றார்க்கும் கல்லார்க்கும் உள்ள வேற்றுமை மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமை என்றதும், மக்கட் பண்பு இல்லாதவர் அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் என்றதும் எண்ணினால் இவ்வுண்மை புலனாம்.

எழுமையும் ஏமாப்புடைத்து, எழுபிறப்பும் உள்ளுவர் எனவரும் இடங்களை நோக்கி வள்ளுவர், **பிறப்பு, மறுபிறப்பு, எழுபிறப்பு, ஏழெழு பிறப்பு** என்றெல்லாம் கருத்து உடையவர் என்பர்.

எழுபிறப்பும் **உள்ளுவர் என்றால், உயிரோடும் உடலோடும் இருப்பவரால் தாமே கூடுவது?**

எழுமையும், 'ஏமாப்பு' என்றால் **பாதுகாப்பாக இருத்தல் காண்பார்க்குப் புலப்பட வேண்டும்** அல்லவோ! மாறிப் பிறக்கும் பிறவியை அவரவரே உணரா நிலையில், பிறரோ உணரக் கூடும்.

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு வெளியுலகம் தெரியாவாறு போல, இவ்வுலகில் இருக்கும் வரை அப்பாற்பட்ட உலகோ, அப்பாற்பட்ட பிறப்போ இருத்தல் மெய்ப்பிக்கப் பெறாச் செயல்களாம்!

விண்ணூர்தியும் செயற்கைக் கோள்களும், இயற்கைக் கோள் ஆய்வுகளும் கொள்வார் தாமும் இது, **இன்ப உலகம்** (சுவர்க்கம்) **இது நிரயம்** (நரகம்) என்று கண்டுவந்தது உண்டா? கூறியது உண்டா? ஆதலால், எழுபிறப்பு என்பது **ஏழு தலைமுறை** என்பதேயாம். **மரபுவழி ஆய்ந்து மகவைத் தீர்மானிக்கும் அறிவியலை அறிக.** ஒருவர் ஒரு குடும்பத்திற்குச் செய்த உதவியை அவர்தம் வழிமுறையர் பலரும் பாராட்டல் காண்க.

13. தொழில்

பிறப்புப் போலவே தொழிலும் ஒக்கும் என்பதே வள்ளுவம் ஆகும். உயர் தொழில், தாழ் தொழில் என்பது இல்லை! தொழிலைச் செய்யும் சீர்மை, சீர்மைக்குறை, கெடுதி என்பவற்றைப் பொறுத்தே தொழிலின் மதிப்பீடு உள்ளது. இதனை, சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையால் என்கிறது தமிழ்மறை,

மருத்துவம் எனினும் பொறிவினை எனினும் ஆசிரியப்பணி எனினும் கடைநிலை ஊழியம் எனினும் தூய்மைப்படுத்துதல் எனினும், **தொழில் வகையால் ஒப்பனவே.** சொல்லப்பட்ட எல்லாத் தொழில் களையும் **குடும்ப அளவில் செய்யும் தாய் தந்தை முதலோர்** அவ்வத் தொழில் புரிதலால் உயர்வு தாழ்வு உடையவர் ஆவரா? 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' எனப்படும் உழவரும், மண்ணும் வெறுக்கத் தக்கவ ராதல் "நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்" எனப் **பழிக்கப்பட வில்லையா?**

வேந்தன் என்பவனை வேல் கொண்டு கொள்ளையடிக்கும் **கொடியனுக்கு** ஒப்பாக வள்ளுவம் கூறவில்லையா?

பழுதெண்ணும் அமைச்சனினும், **பகைவர் எழுபது கோடியர்** எனினும் கேடுபுரியார் என்பது வள்ளுவம் தானே!

களப்போர்க்குச் சென்று உடன் இருப்பாரைக் கால்வாரி விடுவாரைக், **கல்லாமா** அன்னார் என வள்ளுவம் பழிக்க வில்லையா?

ஆதலால், எச் செயலும் செய்யப்படும் வகையாலேயே சிறப்புறும் செயலில் அல்லது தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்னும் அரிய பார்வை பகுத்தறிவின் பார்வையாம்.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

என்பதை எண்ணுக.

செயல்வீறு உடையவர்க்கு ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை,இடுக்கண் அழியாமை என்பவை இன்றியமையா இயல்புகள் (அதி, 60-63)

வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, (66 - 68) தீவினை அச்சம் (21) என்பவை போற்றிக் கொள்ள வேண்டியவை.

இவ்வெட்டும் உடையார் எட்டா வெற்றி எதுவும் இல்லை என்பது வள்ளுவம் **தனி நூலாக்கம்** பெறத் தக்க இதனைச் சுட்டி அமைதல் சாலும்,

"வெள்ளத் தனைய இடும்பைவரினும், ஊக்க முடையான் உள்ளத்தின் உள்ளிய அளவில் ஒழிந்து போம்" என்பதனினும் தொழினூக்கி உண்டா?

14. பொருள்

பொருளியல் கொள்கையை விரிய விரிய ஆய்ந்தவர் வள்ளுவர். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை; பொருள் என்பது பொய்யா விளக்கம் ஆதலால், செய்க பொருளை ஒண் பொருள் காழ்ப்ப இயற்றுக செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு என்றெல்லாம் பொருளியல் சீரை உரைக்கிறார்.

செல்வத்திற்கெனத் தனிச்சிறப்பு ஒன்றும் இல்லை. செல்வம் உடையவன் இயல்பைப் பொறுத்ததே அதன் சிறப்பும் பழியும் என்பதை மாரி, ஊருணி, பயன்மரம், மருந்து மரம், நச்சு மரம் என்னும் உவமைகளால் அருமையாக விளக்குகிறார். இல்லாரும் இல்லை: இருப்பாரும் இல்லை என்னும் நிலை நாட்டில் – உலகில்– உண்டானால் அன்றி மக்கள் வாழ்வில் அமைதி இல்லை என்பதை எதிரதாக்காக்கும் நோக்கில் 'ஒப்புரவு' படைத்தவர் வள்ளுவர். அவர்கண்ட ஒப்புரவுக்கு; "ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எல்லாரும் ஒரு நிலையர் ஆதல் வேண்டும்" என விளக்கம் தந்தார் வள்ளலார்.

"செல்வம் முற்பிறப்பில் நல்வினை செய்தார்க்கே வரும்" என்னும் முயற்சியழிப்புக் கொள்கை வள்ளுவர் நாளிலேயே இங்குப் பரப்பப்பட்டமையால்,

"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள"

என்று கடிந்தார்.

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

என்று கண்டித்தார்.

ஒருவன் சுமக்க, ஒருவன் அவன்மேல் இருக்க நிகழும் அறக்கேட்டை, அறம் எனலாமா?

பொருள் உடையவன் சுமக்க ஆளை வைத்தான்; பொருள் இல்லான் சுமந்தான். பொருள் இல்லான் பொருள் உடையானாய், பொருளுடையான் பொருள் இல்லானாய் மாறும் நிலையானால், இருத்தலும் சுமத்தலும் மாறக் கூடுமே எனச் சிந்திக்க வைத்தார்.

ஆக்க வழிக்குப் பயன்படாச் செல்வம் அல்லது பயன்படுத்தாத கருமியின் செல்வம், வாழாவெட்டிச் செல்வம் என்றும் பழித்தார். பயனிலாச் சொல்லைச் சொல்லுவான் பதர் என்ற வள்ளுவர், பயன்படாப் பொருளைப் பழிக்கத் தவறுவாரா? அது,

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

என்பது வாழத் துடிப்பாளுக்கு வாழ்வளிக்க மாட்டாத குமுகாயக் குறைகண்டு குழைவாகி உரைத்தது இதுவாம்! மேலும், பொருளென உள்ளவெல்லாம் செலவிடவோ அள்ளிவழங்கிவிடவோ வள்ளுவர் கூறினாரா?

ஈதல் இசைபட வாழ்தல் வேண்டுவதே ஒன்றா உலகத்து உயர்ந்ததாம் புகழ் அடைய வேண்டுவதே! அதற்காக, அளவறிந்து வாழா வாழ்வு ஆகுமா?

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல,
இல்லாகித் தோன்றாக் கெடும்."

என எச்சரிப்பது வள்ளுவம்,

'வருவாய் எவ்வளவு குறைந்தது என்பதைப் பற்றிய கவலை வேண்டா. அவ்வருவாயினும் செலவு குறைவாக இருக்கும் வகையில் வாழ்வை அமைத்துக் கொள்க' அம்முறையே ஆக்கமுறை என்கிறார். அது,

"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை.
போகாறு அகலாக் கடை"

என்பது.

புகழ்ப்பேறு கருதியும் குடும்பம் வறுமைக்கு ஆட்பட்டு அல்லல்படுதல் ஆகாது என்னும் பரிவு, பகுத்தறிவுச் சிந்தனை வழிப்பட்டதே அல்லவோ!

15 குறைப்பிறவியர்

இயற்கை செயற்கைக் கேடுகளால் கூன், குருடு, செவிடு என எச்சப் பிறவி பிறத்தல் உண்டு. அப் பிறப்புப், பிறந்தவர் பழியோ, பெற்றவர் பழியோ ஆகாதது. ஆனால், அப்பிறவியைப் பாவப் பிறவி பழிப்பிறவி என்று பரப்பினர். பரிவு காட்டிப் பேண வேண்டிய பிறவியரைப் பழிப்பதைக் கண்ட– கேட்ட வள்ளுவர் உருகினார். உளம் நொந்தார். இப்பழி கூறப்படுவார். பழிக்கு உரியவர் அல்லர்; **பழித்துக் கூறுவாரே பழிக்கு முற்றினும் உரிமை உடையவர்.** கண்ணேரில் காணும் துயரரைக் கண்டு துடித்துத் துணை செய்யாப் பழிப் பிறவியர் இவர் என்னும் ஆழ்ந்த சிந்தனையால்,

**"பொறிஇன்மை யார்க்கும் பழியன்று:அறிவறிந்து,
ஆள்வினை இன்மை பழி"**

என்றார்.

உறுப்புகள் எல்லாமும் ஒழுங்குற அமைந்தும் முயற்சி என்பது அறவே இல்லாத பிறவியராக இருப்பதே பழி: உறுப்புகள் குறை யுடையவராகப் பிறந்தது பழி ஆகாது என்றார். இது, **புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டி ஆற்றும் அரிய மருத்துவம்** அன்னதாம்.

16. அரசியல்

பொருட்பால் என்பது பெரிதும் அரசியல் பற்றியதாம். இறைமாட்சியிலே தொடங்கும் அது, அடுத்தே செங்கோன்மையை

வைத்தல் வரிசையாகும். இன்றேல், படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் எனப் பொருட்பால் முதற்குறள் வரிசைப்பட வைத்திருத்தல் வேண்டும். ஆனால்,இறைமாட்சியை அடுத்து, கல்வியை வைக்கிறார் தமிழ்மறையார், ஏன்? அரசின் தலைக் கடனாக இருப்பது அனைவர்க்கும் கல்வி தருதல் என்பதேயாம். கண்ணுடையவர் எல்லாரும் (அகக் கண்ணாம்) கல்வியுடையராக இருந்தால்தான் கண்ணுடையவராக எண்ணப்படுவார். அதனைச் செய்ய வேண்டுவதே இறைமாட்சியாம் என்பதை அறிவிப்பதற்கே யாம்.

இனிப் 'படைகுடி' அத்துணைச் சிறப்பிலவோ எனின் பொருட்பால் முதலீரசைகளே அவை ஆதலின் அவை சிறப்பில எனப்படாவாம். அவ்வினை அசைகளின் நோக்கு, படைகளே குடியாகவும், குடிகளே படைகளாகவும் ஒத்து இயலும் நிலையே அமைதல் வேண்டும் என்பதாம்.

நாட்டுமக்கள் அனைவரும் படைப்பயிற்சி பெற்றே ஆகவேண்டும் என்று பல நாடுகள் தம் அரசியல் சட்டம் இக்கால நிலையில் கொண்டிருத்தல், முந்தை வள்ளுவர் நோக்கின் சிறப்பை விளக்குவதாம். உறுப்புகள் ஆறெனக் கூறி அவற்றை விளக்கிய அளவில் நில்லாமல் பெருமை, சான்றாண்மை, பண்புடைமை என்பவற்றை வைத்ததும் தக்க சான்றோரையுடையதாய், அவர்வழி நிற்பதாய் அமைவதே உயரிய அரசியல் என்பதை விளக்குவதற்காம்.

கை செய்தூண் மாலையவராம் உழவர் முதல் உழைப்பாளர் உழைப்புக்கொடையை மேலும் மேலும் சிறக்கும் வகையில் ஊக்கும் அரசு வேண்டும் என்பது உயரிய உலகியல் மேம்பாட்டுக் கருத்தாம். நிறைவில் கயமையை வைத்துக் கழிந்தமை, அரசு கயமைக்கு இடமாகி விடக் கூடாது, கயமைக்குத் துணை போவதாகவும் இருந்துவிடக் கூடாது; கயமையை ஒழித்தால் அன்றி, அரசு தன் கடன் செய்ததாகாது என்பதை நிலைப்படுத்தியதாம்.

கோனாட்சியில் குடியாட்சியையும் ஒப்புரவு ஆட்சியையும் காணமுடியும் என்பதைச் சுட்டுவதே **குடிமை, குடிசெயல் வகை** என்பனவயாம்.

வேந்தைப் போலவே, அமைச்சு, ஒற்று, தூது, படை, அரண் என்பவை எல்லாம் ஒன்றற்கு ஒன்று குன்றா தமைதலும் அவற்றின் தலைமை தகவாக அமைதலும் ஆகியவை யெல்லாம் ஒருங்கிணையும்

போதே, நாடா வளத்ததாம் நாடாகும் என்னும் வள்ளுவ உட்கிடை அறியின், பகுத்தறிவுச் சிந்தனை வளம் ஒவ்வொரு பகுதியிலும் காணலாம். **இறைகாக்கும் என்னின், அதனை முறைகாக்கும்** என்பது முடிந்த முடிபல்லவா!

17. அறிவியல்

இந்நாள் அறிவியலார் கூறும் அதன் இலக்கணத்தை அந்நாளே நம்மறை கூறியிருப்பதை எண்ணின் அந்நூலில் அறிவியல் ஆய்வுக் கூறு உண்டா என ஆயவேண்டுவது இல்லை.

உலகம் சுழலும் இயற்கையது என்பதைக் "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்பதால் கூறுகிறது வள்ளுவம்

'ஞாலம்' என்பதும் எத்தாங்குதலும் இல்லாமல் தொங்கும் இயல்பினது உலகம் என்பதைக் குறிப்பதே. அண்டம் பேரண்டம் என்பவற்றைக் குறிப்பனவே **வியன் ஞாலம், வியன் உலகம்** என்பன ஐயம் நீங்கிய அறிவர்க்கு வானம் வையத்தினும் நணியது என்னும் இன்னவை வானியல் அறிவாம். மண்ணின் வளம் உழுது புழுதியாக்குவதில் உள்ளது என்பதைக் குறிப்பது "தொடிப்புழுதி கஃசா உணக்கின்" என்பது. ஒருபலம் எடையுள்ள மண் கால்பலம் எடையாம் அளவு புழுதியாகக் காய வேண்டும் என்பது அது. உழவினும் எருவிடுதலும், எருவிடுதலிலும் களை வெட்டலும், களை வெட்டலிலும், நீர் விடுதலும், நீர் விடுதலிலும், காத்தலும் ஆகியவை ஒன்றில் ஒன்று சிறந்தவை என்று கூறுவது வேளாண் அறிவியல் ஆகும்.

உடலில் உண்டாம் நோய்க்குப் பெரிதும் மூலமாக இருப்பது உணவே என்பதை மருந்து அதிகாரத்தில் தெளிவாகக் கூறுகிறது வள்ளுவம். அளவறிந்து உண்க; அற்றதறிந்து உண்க; மாறல்லது உண்க; துவரப் பசித்து உண்க, உணவிலும் உண்டது அறல் இனிது என்றெல்லாம் கூறி, இவ்வாறு போற்றுவார்க்கு மருந்தென ஒன்று வேண்டா என்கிறது. மேலும் நாடிநிலை, நோய் தீர்ப்பு நிலை, துறைத் திறம் என்பன வெல்லாம் கூறுவது உயரிய மருத்துவ அறிவியல் ஆகும்.

தோண்டிய அளவு மண்ணில் நீர் சுரப்பது போலக் கற்கும் அளவு அறிவு பெருகும்; கற்றறிந்த கல்வி ஒருகால் மறந்து போயினும் மீட்டும் பெற்றுக் கொள்ளலாம்; கற்றதைப் பிறர்க்கு எடுத்துரைக்க

எடுத்துரைக்கத்தான் அக்கற்றதன் நயங்கள் நன்கணம் விளங்கும். கேடு தராத உயரிய செல்வம் கல்வியே. கற்க வாய்ப்பில்லாதவரும் கற்றவர் சொல்லைக் கேட்டலால் அக் கல்விப் பயனைப் பெறலாம். புலமை யாளரொடு கலந்து பேசும் இன்பம் இணையிலா இன்பம் என்பன வெல்லாம் கல்வித்துறை அறிவியலாம். இன்னவை பிறவும் வள்ளுவத்தில் உள.

18. கலைச் சொல்

இந்நாளில் மொழித் தேவையுள் ஒன்று கலைச் சொல். அதற்கு வள்ளுவம் செய்து வரும் கொடை, அன்றே அஃ தமைப்புற்ற **சிறப்பு வழி ஆய்வுச் சிந்தனைப் படைப்பால் ஏற்பட்ட தாகும்.**

அகராதி என்றும், 'அகரமுதலி' என்றும் சொற் பொருள்காண் நூற்பெயர்க்கு முன்னோடி என்ன?

'அகர முதல' என்பது, 'அகர முதலி' ஆயிற்று. அகர முதல எழுத்தெல்லாம் **ஆதி** என்பது 'அகராதி' ஆயிற்று.

முற்பகல், பிற்பகல் என்னும் வள்ளுவ ஆட்சி இயல்பான கலைச் சொற்கள் ஆகிவிட வில்லையா! கோயிலுக்கு அறங்காவலராகக் கொள்ளப்படும் **'தக்கார்'** வள்ளுவக் கொடைதானே. "தக்கார் இனத்தனாய்", "தக்கார் தகவிலர்" என்பவை காண்க

நாட்காட்டி, நாட்குறிப்பு என வழங்குவதன் அடி, 'நாள் என ஒன்று போல் **காட்டி**' என்பது அல்லவா! எழுதுகோல் எப்படி வாய்த்தது? எழுதுங்கால் கோல் என்னும் வள்ளுவ வளம் வழங்கியது அல்லவா! முன் மொழிவார் மொழிய வழிமொழிதல் வருதல் எப்படி? **"வழிமொழிவான்"** என்பதுதானே. **மனைமங்கலம், வாழ்க்கைத் துணை** என்பவை தமிழ் மறை வைப்பு அல்லவா. உள்ளவை எல்லாம் இழக்கும் 'திவாலா'வைச் சுட்டுவதன்றோ **'உள்வீழ்தல்'**; ஆழ்மனம் குறிப்பது தானே **'உள்ளுள்'**! ஆய்வார் ஆய்வுச் சுரப்பாகக் கலைச் சொற்கள் பெருகக் கிடப்பது வள்ளுவச் சிந்தனை அமைப்பு வழிப்பட்டவையே யாம்.

19. துறவு, மெய்யுணர்வு – இறைமை

பெரும்பாலும் வாழ்வின் முற்பகுதியில் **உடல் கொழுமை** திகழும்; பிற்பகுதியில் **அறிவுச் செழுமை** விளக்க முறும்.

அவ்வியற்கையைச் செவ்விதின் உணர்ந்த நம் முந்தையர், **துறவு** என்பதொரு மேல்நிலை கண்டனர். குடும்பக் கடமைகளைச் சீராக நிறை வேற்றி, தம் குடித் தோன்றல்களுக்குச் சிறந்தவை எவை எவையோ அவற்றையெல்லாம் பயிற்றி, தம் துணையொடும் துறவுகொள்ளல் என்பது அஃதாகும். ஆதலால், உறவு துறத்தல், வீடு துறத்தல், பொறுப்பு அகலுதல் என்பவை இன்றி, 'தாமரை இலைமேல் நீர்போல்' பற்றற நிற்றலும், சார்ந்தார்க்குத் தக்க வழிகாட்டலும் அத்துறவு ஆகும்.

ஓதி முடித்து மேல் ஆய்வு கொள்வதும், கட்டி முடித்த அடித்தள மனைமேல் மாடம் எழுப்புவதும் போன்றது இல்லறச் சிறப்பின் மேல் கொள்ளும் துறவாகும். இதனைச் **"சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"** எனச் சுருங்க உரைக்கும் தொல்காப்பியம் அதன் விளக்கமாக அமைந்தது வள்ளுவத் துறவற இயலாகும்.

அன்புடைமையில் தொடங்குவது இல்லறம்;

அருளுடைமையில் தொடங்குவது துறவு

முன்னது **'குடிநலம்'** என்றால், பின்னது **'உலக நல'** மாம்.

அருளுடைமைக்கு வெளிப்படை விளக்கமாம் புலால் மறுத்தல், தவம் என்பவற்றைப் போற்றுவர், துறவர்.

தவமாவது தம் துயர் தாங்கல், "பிற உயிர்களுக்குத் துயர் செய்யாமை" என்பவையாம். தம் கடமையைத் தவறாமல் செய்தல்; உள்ளத் துறுதி பேணல், விருப்பு வெறுப்பிலாமை கொள்ளல்; அஞ்சாமை என்பவையும் தவத்தவர் இயல்பாம்.

நெஞ்சத் துறவு இல்லாமல் **வஞ்சத் துறவு** கொள்ளல், புறக் கோலம் காட்டி ஏமாற்றல் என்பவை, துறவர்க்குக் கூடா ஒழுக்கங்கள். அதனால் உலகம் அவர் கோலம் கண்டு மயங்கிக் கெடுதல் ஆகாது எனவும் எச்சரிக்கிறது வள்ளுவம் (842)

களவு கருதாமை, சினம் கொள்ளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்பவை போற்றிய வாய்மை வாழ்வினர் துறவர். நிலையாமை, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்பவற்றைத் தெரிந்து தெளிந்த கடைப்பிடியர் அவர்.

"வேண்டாமை அன்ன விழுச் செல்வம்" இல்லை எனக் கொண்ட பற்றற்றார். பற்றற்றாரையே பற்றி நிற்பவர்!

"ஆரா இயற்கை அவா நீத்துப் பேராப் பெரு நிலைப் பெற்றிமையுற்றார் – என்பவை **மெய்யுணர்வு மீச்சிந்தனைகளாம்.**

இத் தன்மையுற்றார்க்குச் சமயச் சார்பு, சடங்கு என்பவை உண்டோ? **சமயச் சால்பர்** அவர். ஆதலால், உலகை உய்விக்கும் உயர் நலப் பண்புகளையே இறைமையாகக் கொண்டார். "பேரில்லா ஓரிறையே போரில்லா உலகம் காண உதவும்" என்னும் தேர்ந்த பகுத்தறிவுச் சிந்தனையே வள்ளுவ **இறைமைக் கொள்கையாம்.**

20. கட்டமைப்பு

திருக்குறளின் **கட்டமைப்பு** ஒப்பு உயர்வு அற்றதாம். அதன்முன் அத்தகு நூல் ஒன்று இருந்தமை அறியக் கூடவில்லை. அதற்குப் பின்னர், அத்தகு நூல் எதுவும் தோன்றிற்றில்லை என்பது கண் கூடு.

தொல்காப்பியம், **அகம், புறம்** எனப் பொருளை விரித்தாலும், **அறம், பொருள், இன்பம்** என்னும் முப் பொருட் கொள்கையையும் சுட்டியது. அந்நெறியில் தோன்றியது திருக்குறளாம். அம்முறையே முறையாய், முப்பால் வகுத்ததுடன் **'முப்பால்'** என்னும் பெயரீடும் பெற்றது அதுவாம்.

பாவகையுள் வெண்பா, **முதற்பா** எனப்படும். அதன் முதற்பா, **குறட்பா** ஆகும். அளவால் சுருங்கியும் பொருளால் விரிந்தும் செல்லும் பொருள் நூலுக்கு அவ் யாப்பு, வள்ளுவப் பயனாகி வான்சிறப்புற்றது.

பாலின் உட்பிரிவாம் **அதிகாரம்,** பப்பத்துக் குறளாகப் பதின்மப் பெருமையுற்றது.

ஒவ்வொரு சொல்லும் சொல்லின் தொடரும்,

வேறோ ராற்றான் சொல்லக் கூடாவண்ணம் பொலிவும் பொருளும் அவையும் கொண்டு இயல்வ தான பெருமை, அளவிறந்தது. அதனால் கடுகு, தினை, பனித்துளி, அணு என்றும் நுண்மைகளுக்கு உவமை யாகத் தோய்ந்த ஆய்வினரால் சொல்லப்பட்டது.

எடுத்துக் கொண்ட பொருள் சுருக்கம், விரிவு என்பவற்றுக்கு ஏற்ப, ஓரதிகாரம் முதலாக ஏழதிகாரம் ஈறாக வகுத்தும் பகுத்தும் கூறப்பட்டுள.

அணிநலம் சிறக்கவும் சுவைநலம் ஓங்கவும் அமைந்த நூன்மாண்பு, அதன் படைப்பாளியாம் வள்ளுவத் தோன்றலின் நுண்மாண் நுழைபுலச் சிறப்பையும் அஃகி அகன்ற ஆய்வுப் பரப்பையும் வெளிப்படுத்துவன.

அடிப்படை அலகாம் **குடும்பம்,** அனைத்துயிரும் அனைத்துலகும் ஆகும் **பெருநிலையை**த் தன்னுள் கொண்டு திகழும் சீர்மையும், ஒவ்வொருவரும் தம் உழைப்பு உறுதி முதலியவற்றால் தெய்வ நிலையர் ஆதல் கூடும் என்பதையும், கையில் கனியாய்க் காட்டும் பெற்றிமையும் உடையது குறள், இவற்றால் **உலகுக்கு ஒரு நூலாக ஓங்கி நிற்கும் தமிழ்மறையாம் திருக்குறள், ஓங்கிய பகுத்தறிவுச் சிந்தனை நூல் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாம்.**

❖❖❖

19. வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்

பொருளடக்கம்

1. தனிவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் (12.04.93)

2. குடும்ப வாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் (13.04.93)

3. பொதுவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் (14.04.93)

உலகத் திருக்குறள் மையத்தின்,

அன்னை தேசம்மாள் – குப்புசாமி

திருக்குறள் அறக்கட்டளை வழியே பொழியப்பட்டவை

வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்

“என் வாழ்வில் சிக்கல் இல்லவே இல்லை” என்பார் எவரும் உளரா? உளர் எனின், அவர் வாழாதவராகவே இருப்பார் அல்லது இன்னும் பிறவாதவராகவே இருப்பார். வாழ்வார் **எவர்க்கும் சிக்கல் என்பது பொது வரவு.**

“கூழுக்கு உப்பில்லை” என்பதும் சிக்கல்தான்; “பாலுக்கு இனிப்பு இல்லை” என்பதும் சிக்கல்தான்!

“பஞ்சாடை இல்லை கட்டுதற்கு” என்பதும் சிக்கல்தான்;

“பட்டாடை இல்லை” என்பதும் சிக்கல்தான்.

சிக்கல்களில் ஏற்றத் தாழ்வு இருக்கலாமே அல்லாமல், அவரவர் அளவில் அவை சிக்கல்களே!

“பிள்ளையே இல்லை” என்பது ஒரு சிக்கல் என்றா ல்,

“பெண்ணே பிறக்கிறது” என்பதும், பெண்ணே இல்லை என்பதும் சிக்கல்கள் இல்லையா?

“ஆணும் பெண்ணும் உண்டு” என்றாலும் ஆகாவளியாய் அலவதப்படுத்தும் பிள்ளைகளைக் கண்டு, “இவர்களைப் பெறாமலே இருந்திருந்தால்” என்று புலம்பும் பெற்றோர் இலரா?

"பிள்ளையென்றால் பிள்ளை" என்று மகிழ வளர்ந்த பிள்ளைக்கு உரிய வாழ்க்கைத் துணை வாயாமல் போக வாய்த்தும் கொடுமையாய்ப் போகக்-காலமெல்லாம் கண்ணீர் வடிக்கும் குடும்பம் இல்லையா?

பெற்றோர்க்குப் பாரமாக இருக்க மாட்டேன். அவர்களுக்கு என் உழைப்பால் தேடி உதவுவேன் எனச் சொல்லிக் கொள்ளாமல், ஊரை விட்டு ஓடும் வறுமைப் பிள்ளை உண்டு என்றால், உள்ளத்தால் ஒத்துவராமல் இடைவெளியுண்டாகி விட்ட கோடி வாழ்வன் மகன், வீடே ஒப்பாரி வைக்க நாட்டை விட்டே ஓடிப்போவதில்லையா!

சிக்கல் இல்லாத தனி வாழ்வில்லை; குடும்ப வாழ்வில்லை : பொது வாழ்வில்லை!

முட்காட்டில் நடந்தால் உடையிலும் உடலிலும் முள்படுதல் எப்படி இயல்போ அப்படி இயல்பானது சிக்கல்!

"நெடும் பாம்பு வழங்கும் தெரு" என்பது குறுந்தொகை

"இன்னா தினனில் ஊர் வாழ்தல்" என்பது குறள்.

நூல் நூற்றலிலும், கயிறு திரித்தலிலும், பாவு நெய்தலிலும், தலை கோதலிலும் எவ்வளவு கருத்தாக-பொறுமையாக-ஈடுபடுவார்க்கும் அவற்றில் சிக்கல் ஏற்படாமலா போகின்றது?

அச்சிக்கல்களை அவர்கள் விரைந்தோ சஞ்சலித்தோ சினந்தோ நீக்க நினைத்தால், விளைவு என்ன ஆகும்?

சிக்கல் பெருஞ்சிக்கலாய்-தீராச் சிக்கலாய்-அழிவுக்கும் இழப்புக்கும் இடமாகியே முடியும் அப்படியே வாழ்வியற் சிக்கலைத் தீர்ப்பதற்கும் பொறுமையாய்ச் சிந்தித்து, முனைப்பை அகற்றி, மும்முரமாக எண்ணி, ஆற அமர ஆய்ந்து திட்டமாகத் தெளிவாகத்-தீர்வு காணமுடியும்!

நாம் தாமா உலகின் முதற்பிறப்பு? நம் சிக்கல்தானா உலகின் முதற் சிக்கல்? உலகம் எத்தனை எத்தனை கோடிப் பேர்களைக் கண்டது! எத்தனை எத்தனை கோடிச் சிக்கல்களைக் கண்டது! அவர்களெல்லாம் சிக்கலுள் சிக்கிச் சீரழிந்தோ போய் விட்டனர்? சிக்கலை அவிழ்த்துச் சீர்மையாய் வெற்றி கண்டு அச்சிக்கல்களெல்லாம் மண்டியிட்டுக் கிடக்கப், பலப்பலர் சிக்கல்களையும் தாமே தீர்க்க வல்ல திருத்தோன்றல்களாக எத்தனை பேர் விளங்கியுள்ளனர்? அத்தகைய பெருமக்களுள்

உலகுக்கு ஒரு மாமணியாய் ஓங்கிய திருமாமணியாம் ஒருவர் திருவள்ளுவப் பெருந்தகை!

வாழ நூல் செய்த வள்ளுவர், வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாகவும் வள்ளுவம் செய்தார். வாழ்வாங்கு வாழ்வார்க்கு உண்டாகும் வாழ்வுச் சிக்கல்களையும் வளமாக எண்ணித் தீர்வுகளும் வழங்கியுள்ளார். அவற்றுள், தனிவாழ்வுச் சிக்கல் தீர்வு உண்டு; குடும்ப வாழ்வுச் சிக்கல் தீர்வு உண்டு; பொது வாழ்வுச் சிக்கல் தீர்வு உண்டு. பொருளியல், அரசியல் முதலாம் பிறவியல் தீர்வுகளும் உண்டு. இவற்றுள் முன்னவையாம் மூன்று சிக்கல்களையும் முறையே எடுத்துக் கொண்டு கூறும் மூன்று கட்டுரைப் பொழிவு இச்சுவடியாகும்.

1. தனிவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

வள்ளுவ மூல அலகு குடும்பமே. அக்குடும்ப விரியே ஊரும், உலகும். அக்குடும்ப உறுப்புகளுள் ஒன்றே தனி ஒருவர் வாழ்வு ஒவ்வோர் உறுப்பும் செவ்வைப்பட இயன்று செயல்படாக்கால் ஒரு பொறியோ ஊர்தியோ இயக்கமோ சீர்பட இயங்காமை போலவே, தனி வாழ்வு சீர்படாக்கால் மூல அலகாம் குடும்பமும் சீருறாது. அதன் விரியாம் ஊரும் உலகும் உயர் வெய்தா, ஆகலின், **தனிவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்** முதற் கண் காணல் இன்றியமையாததாம்.

தனி வாழ்வு என்பது பால்வேறுபாடு அற்றது; அகவை வேறுபாடு அற்றது; தொழில் துறை வேறுபாடு அற்றது. செல்வ நிலை அறிவு நிலை ஆகிய வேறுபாடுகளும் அற்றது. அதனதன் தனித் தன்மை குன்றாமல் குறையாமல் தக்காங்கு போற்றிக் கொண்டு குடும்பப் பொதுவுக்கு உறுப்பாகி ஊரும் உலகுமாக ஓங்குதலே குறியாகக் கொள்ளப் பெறுவதாம்.

ஒவ்வொரு தனிவாழ்வின் கூட்டமைப்பே குடும்ப வாழ்வும், பொது வாழ்வும் என்பது வெளிப்படை, அதனால், தனி வாழ்வின் தொகுதியே அவ்வாழ்வுகளாகவும், அவ்வாழ்வுகளின் பகுதியே தனிவாழ்வாகவும் கொடுத்தும் கொண்டும் விளங்கும் இணைவு கருதத் தக்கதாம்.

நீடுவாழ்தல்

ஒவ்வொரு தனிவாழ்வும் நெடிது வாழ வேண்டும் என்றும், நோய் நொடி இன்றி வாழ வேண்டும் என்றும், வறுமை வாட்டல் இன்றி

வாழவேண்டும் என்றும், புகழ் பெற வாழ வேண்டும் என்றும் எண்ணல் இயற்கை. அவற்றுக்கு ஐயமோ, தடையோ, எதிரிடையோ உண்டாயின் பழிப்பும் புலம்பலுமாக வாழ்வார் மிக்குளர். தாம் விரும்புவதற்கு மாறாகத் தம் வாழ்வியல் அமைதற்கு அடிப்படை என்ன, அச்சிக்கலுக்குத் தீர்வு என்ன என்று அமைந்து எண்ணி உறுதியாகச் செயல்பட்டால் எண்ணுவ எல்லாம் எண்ணியபடி எய்தி வெற்றி வாழ்வாக்க முடியும். அதற்கு அறிவறிந்து உடனாகி ஒன்றாகி வழிகாட்டும் ஆசிரியராகத் தெய்வப் புலவர் திகழ்ந்து வருகிறார்.

"வாழத் துடிக்கும் அன்பரே நீவிர் நெடிது வாழலாம்; அதற்குத் தடை எதுவும் இல்லை தடை என்று ஒன்றுண்டானால் அது வெளியே இருந்து வந்ததோ வருவதோ அன்று; உமக்குள்ளாக இருக்கும் இருந்து வரும் தடையேயாம். அதனைக் கண்டு கொண்டு நெறிப்படி வாழ்வீரேயானால் நீர் விரும்புவதற்கு மேலாகவும் நெடிய இனிய வாழ்வு கொள்ளலாம் என்கிறார். அதற்கு மூலவழி ஒன்றை முதற்கண் வைக்கிறார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

என்பது அது (6).

"மெய் வாய் கண் மூக்கு செவி" என்பவை ஐம்பொறிகள்; அவற்றின் வழியாகத் தொடுதல், சுவைத்தல், காணல், முகர்தல், கேட்டல் என்பவை உண்டாகின்றன. இவற்றைப் பக்குவப் படுத்தி வாழும் மெய்யுணர்வாளர் வழியில் நடப்பவர் நெடிய வாழ்வுறுவர்" என்பது இப்பாடற் பொருளாகும்.

அவித்தல் என்பது அழித்தல் அன்று; அவித்தல் 'பக்குவப் படுத்துதல்' என்னும் பொருளது. பச்சையாகத் தின்ன ஆகாத காய்கறி கீரை கிழங்கு ஆகியவற்றை அவித்துப் பக்குவப்படுத்திப் பயன் கொள்வது போன்றது இது இவ்வாறு பக்குவப் படுத்தும் மெய்யுணர்வாளரால்தான் உலக ஒழுக்கமே உள்ளது என்பதை,

"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகையறிவான் கட்டே உலகு" (27)

என்று வள்ளுவர் கூறுவார்.

ஐம்பொறிகளின் வழியாக ஐம்புலங்கள் உண்டாகின்றன. ஐம்புலங்களின் வழியாக உண்டாகும் அறிவுகள் ஐவகை அறிவுகள். இவ்வகை அறிவையும் மேலாண்மை செய்யும் மன அறிவாம் ஆறாம் அறிவு அல்லது பகுத்தறிவும் மாந்தருக்கு உள்ளது. அப்பகுத்தறிவு உடையவர் தம் பிறப்புச் சிறப்பை உணர்ந்து கொள்வார் என்றால் மாந்த நிலையில் இருந்து கீழிறங்க மாட்டார், "இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்பதற்கு இலக்கணமாகப் போட்டி போட்டுக் கொண்டு விலங்கு பறவை புழு பூச்சியென இழிந்த பிறவியாக நிற்க மாட்டார்.

உணவும் நோயும்

புலி புல்லைத் தின்பதில்லை; புல்வாய் எனப்படும் மான் புல்லை அன்றித் தின்பதில்லை. அவ்விலங்குகள் தாமும் தத்தமக்கு உரியவை எவை என்பதை வழிவழியாக வருமுறைப்படி உண்டே வாழ்கின்றன.

ஆடு மாடுகள் சிலவகை இலை தழை புல் பூண்டுகளைத் தின் பதில்லை. தின்னத் தக்கனவற்றின் ஊடே தின்னத் தகாதது ஒன்று இருப்பினும் அதனை விலக்கியே உண்கின்றன. ஒருவேளை ஆகாத ஒன்று வாய்க்கு மற்றவற்றோடு வந்து விட்ட தெனினும், அதனைத் துப்பி விடவே செய்கின்றன. இயல்பான அவற்றின் உணவு முறை மாந்தர் முறையினும் எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது! நோயுற்ற விலங்கு வாயசைவு போடுவதையும் தவிர்க்கிறதே! நீர்க் குடியையும் கூட விலக்கி விடுகிறதே! ஆனால் மாந்தர் இயல்பு எப்படியுள்ளது?

சுவைமிக்க உணவு வாய்த்துவிட்டால் என்ன, அந்த ஒரு வேளை உணவே வாழ்வுக்குப் போதுமானதாகி விடுமா? ஆண்டளவுக்கும் வேண்டா என்றாகி விடுமா? மறுவேளை உணவை ஒழிக்க வேனும் அந்த அறுசுவை உணவு உதவுமா? உதவாத அதனை, வயிறு கொள்ளாத அளவு உண்டு, வாராத் துயர்களை யெல்லாம் வருவித்துக் கொள்ள வேண்டுமா?

"உங்கள் உடலுக்கு இன்ன இன்ன உணவுகள் ஆகா!" என மருத்துவர் கட்டளையிடுகின்றார். நோயர் அனைவரும் ஏற்கின்றனரா? மருத்துவர் சொன்னபடியெல்லாம் கட்டுப்பாடாக இருப்பார் உறுதியானவர், உறுதிப் பற்றாளர். அதனால் **பற்றியம்,** என மருத்துவர் கட்டளைக்குப் பெயர் உண்டாயிற்று. பற்றியம், 'பத்திய' மாக இந்நாள் வழங்குகின்றது!

உண்ணா நோன்பு, உரையா நோன்பு என்பனவெல்லாம் நோன்பு எனப்படுவானேன்? **நோல், நோன், நோன்பு** என்பன வெல்லாம் உறுதிப்பாடு என்னும் பொருளன. தன் துயர் தாங்கு உறுதிப்பாட்டை "உற்ற நோய் நோன்றல்" என்று கூறும் வள்ளுவம் (261). "உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின்" (160) என்றும் கூறும்.

'உணவு' க்கும் 'உணர்வு'க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சொல்லமைதியிலே மட்டுமன்று; அதன் தன்மையிலேயும் தொடர்பு உண்டு; சுவைக் கட்டுப்பாடு உடையவர், பிற கட்டுப் பாடுகளின் மூலங்கண்டவர், முறைகண்டவர், முழுமை கொண்டவர். அதனால், பொறி புலன்களின் அடக்கம் விரும்புவார், சுவைக்கட்டுப்பாட்டாளராக நாக்கட்டுப்பாட்டாளராக இருக்க வேண்டும். "யாகாவா ராயினும் நாகாக்க" என்பதைச் சொல்லுக்கு மட்டுமல்லாமல் சுவைக்கும் கொள்ளுதல் வேண்டும் அல்லவோ!

நல்ல நாவண்மையர் அறிவுக் கூர்ப்பர்; அவர்க்கு இனிப்பு நோய்; உணவுக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியவர்; அவர் வாய் மைசூர்ப்பாகுவை மென்று கொண்டிருந்தது; அவர் கை ஊசி மருந்தைத் தொடையில் செலுத்திக் கொண்டிருந்தது. ஊசி எதற்காக? என்றேன். இனிப்பு நோய்க்காக! என்றார். திகைப்பும் வியப்பும் அடைந்த யான், நீங்கள் தின்பதற்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்றேன்.

பெருகச் சிரித்த அவர், சிரித்துக் கொண்டே, "இனிப் பொன்றைக் கண்டு விட்டால் தின்னாமல் இருக்க என்னால் இயலாது" என்றார். அவர் வளர்ந்தவர்தாமா–உள்ளத்தால்? வளராக் குழந்தைக்கும் கண்டதையெல்லாம் கைந்நீட்டி எடுத்துத் தின்னும் குழந்தைக்கும் அவர்க்கும் என்ன வேறு பாடு? அப்படிப்பட்டவர்கள், நோயைத் தாமே வருவித்துக் கொண்டு, வந்த பின்னரும் போகவிடாமல் பற்றிக் கொண்டு இருப்பவர்களும் அல்லரோ!

வள்ளுவத்தின் ஒன்பதாம் அதிகாரம் **விருந்தோம்பல்**, அதில், இத்தனை வகை விருந்து, இன்னவகை விருந்து, இன்னபண்டம், இன்னசுவை, விருந்தாக்கும் வகை என்பவற்றைச் சுட்டிக்காட்டவும் படவில்லை.

விருந்து செய்தற் சிறப்பு, செய்வான் இயல்பு, பெறுவான் தகைமை என்பனவே குறிக்கப்படுகின்றன. முகமலர்தலும், இனியவை கூறலும் படைக்கும் உணவினும் சிறந்தது என்பதைக் காட்டுகிறது அது (84, 90), கொலை வேள்வியை ஒழித்து மாந்தருள் தக்கார்க்குச் செய்யும் விருந்தே வேள்வி என்பதையும் கூறுகிறது அது (88).

தொண்ணூற்று ஐந்தாம் அதிகாரமாம் 'மருந்து' என்ன சொல்கின்றது? "மருந்தென வேண்டா, ஆம்" என்கிறது (942). மருந்ததிகாரத்திலே 'மருந்து வேண்டா' என்பது எத்தகைய சுவையான முரண்?

உடல்நிலை, செரிமான நிலை, எரிநிலை என்பவற்றைப் போற்றி உண்டால் மருந்து வேண்டியிராது; உண்ணும் உணவே ஊட்டமும் ஊற்றமும் மருந்துமாய் அமையும் என்கிறார். ஒவ்வாமை என்பதொன்றும் உடலுக்கு உண்டு. அதனையும் அறிந்து கொண்டால் ஊறுபாடு உண்டாகாது (945). உணவே குறியாக எவனொருவன் வாழ்வானோ அவன் கழிபேரிரையான், அவனுக்கு நோய் அகலவே அகலாது என்கிறார் (946), ஏழு பாடல்களிலே இவற்றைக் கூறுகிறார். இவற்றுள்ளும் ஐந்து பாடல்களில் அற்றது (செரிமானம்) அறிந்து உண்ணுதலையே வலியுறுத்துகிறார். ஏன்?

நோய்களுக்கெல்லாம் மூலம் மலச்சிக்கலே என்னும் இற்றை அறிவியல் அறிஞர் கூற்றை எண்ணுதல் வேண்டும். எல்லாக் குற்றங்களுக்கும் அடிப்படை பொய்யே எனக் கண்ட **காந்தியடிகளார்,** அதனை மலச்சிக்கலுக்கு ஒப்பிட்டுக் கூறியதையும் எண்ணுதல் வேண்டும். எண்ணின் வள்ளுவ வாழ்வியல் சிறப்பு வெளிப்படும்.

உடல் என்பது கூடுதான்; அஃது உயிரின் வீடுதான்; இவ்வுயிரின் வீட்டுக்கு, யாக்கை காயம் குரம்பை சதுரம் மெய் மேனி புற்கலம் முதலான பெயர்களும் உண்டுதான். இவற்றினும் மேலாக உயிர் நிலை என்றோர் பெயரை வள்ளுவர் வழங்குகிறாரே (80, 255, 290), உயிர்நிலை என்பதன் அருமையை உணராமல் உண்ணும் உணவாலேயே கேடு புரியலாமா?

பலருக்கும் பயன்பாடாக - உதவியாக-காப்பாக-இருக்கும் இவ்வுடலைப் போற்றிக் கொள்ளாமையால், பிறருக்குச் சுமையாக -

துயரமாக-எரிவாக-ஆக்கி விடலாமா? ஆதலால், நோயின்றி வாழ்வதற்குரிய நோன்புகள் (கடைப்பிடிகள்) எவ்வெவையோ அவற்றையெல்லாம் சிக்கெனப் பற்றிக் கொண்டு சீரான வாழ்வு வாழ்தல் தனக்கும், குடும்பத்துக்கும் உலகுக்கும் ஆக்கமாம்.

உடற்குறை

"நாங்களும் மாந்தப் பிறப்பாகத்தானே பிறந்தோம். உடற் குறையாகப் பிறக்க வேண்டும் என்பது எங்கள் பெற்றோர் விருப்பமோ, எங்கள் விருப்பமோ இல்லையே! நீங்கள் முந்தைப் பிறப்பில் செய்தவினையே இக்குறைப் பிறப்பியாக்கியிருக்கிறது" என்றும், "பெற்றவர் செய்த பாவம் இப்பிள்ளையாய்ப் பிறந்துளது" என்றும் ஏசுகின்றனரே 'என் செய்வேம்' என்று ஏங்குவார் உளர்! அருளற்றோரும் உணர்வற் றோரும் இவ்வாறு பழிப்பதைத் தாங்கமாட்டாத உடற்குறையர் நொந்து நொந்து போதல் கண்கூடு. தம் கண் ஒளி இழந்த போழ்தில் தம் குடும்பத்தவரே "போ குருடா" என்று பழித்ததை இறையிடம் மன்றாடிக் கேட்டல் **சுந்தரர் தேவாரம்** கண்டதெனின் பிறர் உடற்குறை உணர்வற்றோரால் எப்படிப் பழிக்கப்பட்டிருக்கும் என்பது வெளிப்படை

விழிப்புற்ற தொண்டர்களாலும் தொண்டு நிறுவனங்களாலும் உடற்குறை பழிப்புக்கு உரியதன்று என்று பரப்பப்படுகின்றது. உடற்குறையர்க்குக் களைகண் இல்லங்களும் உருவாக்கப்படுகின்றன. அவரவர்க்குத் தக்க கல்வியும் தொழிற் பயிற்சியும் வேலை வாய்ப்பும் வழங்கப்படுகின்றன. அவ்வுடற் குறையைப் பயன்படுத்திக் கொண்டு இரப்பைத் தொழிலாகவே உடையவரும் பெருக்கமாகவே இருக்கவும் செய்கின்றனர். உடற்குறை இல்லாதவரையும் வெற்றி கொள்ளத்தக்க விழுமிய முயற்சியாளரும் கண்கூடாகவே இருக்கின்றனர். அவர் களுக்கு, **ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குரல்கொடுத்து மெய்யுரைத்து மேன்மைப்படுத்தியவர் திருவள்ளுவர்.**

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" (618)

என்பது அது

உறுப்புக் குறை எவர்க்கும் பழியுடையது ஆகாது உறுப்புகள் செவ்வையாக அமைந்திருந்தாலும் அமையாதிருந்தாலும் அறிய வேண்டுவனவற்றையெல்லாம் அறிந்து செய்யத்தக்க முயற்சிகளெல்லாம்

செய்யாதிருக்கும் பிறப்பே பழிப்பிறப்பு. குறையிலாப் பிறப்பாவது நிறைமுயற்சிப் பிறப்பு என நம்பிக்கை ஊட்டுகிறார். எத்தனை எத்தனை ஆயிரவர் உள்ளங்களைக் கறையானாய்-அரிவாளாய் அரிக்கும் சிக்கலை எளிமையாய் அறுக்கிறாரே வள்ளுவர்!

இரட்டையரையோ, அந்தகக் கவிவீரரையோ, மாம்பழக் கவிச் சிங்கரையோ, ஓமரையோ, மில்தனாரையோ, கெலன் கெல்லரையோ, இராமையனாரையோ. ஐயூர் முடவனாரையோ, பண்டித மணியையோ, மயூரி சுதாசந்திரனையோ **இன்ன முயற்சியாளர் பிறரையோ எண்ணுவார் பொறியின்மை யார்க்கும் பழியன்று என்பதை உணர்வார்.**

மூன்றாண்டுகளில் உறுப்புக்குறையில்லார் பெறும் தொழிற் பயிற்சியை ஒன்றரை ஆண்டுகளில் மூங்கையர்க்கு(ஊமையர்க்கு)த் தந்து பேசுவார் பேச்சை ஒடுக்கினாரே தொழில்வல்ல தோன்றல் கோ. துரைசாமியார் (G.D. Naidu)

உடற் குறை பிறவிச்சிக்கல் அன்று வினைச்சிக்கலும் அன்று என்று விடுவிக்கிறாரே வள்ளுவப் பெருந்தகை! எத்தகைய பெரியர் அவர்!

புகழாசையர்

சிலருக்குப் புகழ் நாட்டம் இருக்கிறது. புகழைத் தேடித் தேடி அலைகின்றனர். தேடுவார்க்கு அரியது புகழ். தானே உரியாரைத் தேடி வரும் அது; அப்புகழ், தம்மைத் தேடி வரத்தக்க செயல்களைச் செய்தல் கடமையாகவும் அவற்றைச் செய்யாமல், அது கிட்டுமா எனத் தேடித் தேடித் திரிவார் பழிப்புக்கே இடமாகின்றனர். முன்னே புகழ்வது போல் புகழ்ந்தாலும் அடுத்த நொடியிலேயே பின்னே சென்று இகழப்படுபவராகவே உள்ளனர்! "அவருக்குப் புகழ் இருக்கிறதே இவருக்குப் பெருமை இருக்கிறதே, இன்னாருக்குச் சீரும் சிறப்பும் செய்கின்றனரே! என்னை எண்ணிப்பார்ப்பவர்-மதித்துப் போற்றுபவர்-இலரே" என்று வெதும்புபவர் அவ்வெதுப்பே மன நோயராக்கி விடப் புலம்பியும் திட்டியும் மேலும் மேலும் பழிக்கிடமே ஆகின்றனர்! நாளெல்லாம் அமைதியற்று, பிறப்புப் பேற்றை இழந்தே போகின்றனர்.

இத்தகையரையும் எண்ணிப் பார்க்கிறார் வள்ளுவர். 'என்னே! இவர் தம் இரங்கத் தக்க நிலை? என உருகுகின்றார். ஒரு சிறிதளவேனும்

செவி சாய்த்துக் கேளாரா இவர்? கேட்டு நன்னிலை எய்தாரா இவர் என இவர்க்காக, அவர் தவிக்கிறார். அதனால்,

"புகழ்பட வாழாதார் தம் நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்" (237)

என்கிறார்.

உலகத்தில் அழியாத ஒன்றே ஒன்று புகழ்; அதனை இயலாலும் செயலாலும் அறிவாலும் அடைதற்கு, அடைப்பாரில்லா வழியாய்க் கிடக்கவும், அதனைக் கருதாமல் வாளா புகழ் வருமென எண்ணிக்கிடக்கிறாரே இவர்; பழிச் செயல்களையே செய்து பண்பிலியாக வாழும் இவர், பாராட்டை எதிர்பார்த்துக் கிடக்கிறாரே! தம்மைப் பிறர் புறக்கணித்தற்கும் பழித்தற்கும் தம் இயல் செயல்களே காரணம் என்பதை அறியாராய் இகழ்வாரை நோகின்றாரே இவர்! இந்நிலையை மாற்றிப் **புகழ்ப்பேறு இல்லாமைக்குத் தாமே காரணம் என்பதை இப்பொழு தறிந்து கொண்டால் கூட எதிர்காலமேனும் புகழுக் குரியதாக இருக்குமே"** என்றெல்லாம் கரைகிறார். அவர் சிக்கலைத் தீர்த்தற்குரிய சீரிய வழியைச் செப்புப்பட்டயமாய்த் தீட்டியும் வைக்கிறார்! உப்புமலை மேல் இருந்து உண்டாலும், அள்ளிப் போட்டுக் கொண்டால்தான் அதன் சுவை வாய்க்கும்!

பழிபரப்பர்

இனிப் பிறன் பழி கூறுகின்றானே அவன் பெறுவதும்தான் என்ன? அவன் புகழா பெறுவான். அவன் செயல் என்ன, புகழுக் குரிய செயலா? சேற்றை வாரி இறைப்பவன் சேறுபடவே செய்வான். சந்தனக் குழம்பை வாரி இறைப்பவன் அச்சந்தன நறுமணத்தையே பெறுவான்!

**"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன் தெரிந்து கூறப்படும்"** (186)

என்கிறார்.

ஒருவனை எவன் பழிக்கத் தொடங்குகிறானோ, அவன் தன் பழியைப் பிறர் தேர்ந்து தேர்ந்து கூறுமாறு அப்பொழுதே தூண்டுகிறான் என்பது தெளிந்த செய்தியாம். பழிக்குப் பழி கூடுமா? குறையுமா? திறன் தெரிந்து கூறப்படும். என்கிறாரே பெரிய பெரிய பழிகளெல்லாம் தெரிந்து தெரிந்து கூறப்படும் என்று எச்சரிக்கிறாரே! இவ் வெச்சரிக்கை இருபால் சிக்கல் தீர்வே அல்லவோ!

சேர்ந்தாரைக் கொல்லி

'ஆறுவது சினம் என்றார் ஔவையார் சிறிதளவே உண்டாம் மன வெப்பே சினம் (சின் + அம்). அதுவும் ஆறுதல்-ஏறுமுகமாகாமல் இறங்கு முகமாதல்-வேண்டும் என்கிறார். ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்' என்னும் **அருணகிரியார்** வேண்டலுக்குத் **தலைகளை எண்ணினரே அன்றி, அமைந்த முகத்தை எண்ணிப் பார்த்தனர் அல்லர்** அது 'தணிகை' என்னும் இடப் பெயரும் இயல்புப் பெயரும் இணைந்த பெயர் என்பதையும் எண்ணினர் அல்லர்

சிலர் எதற்கும் எளிமையாகச் சினம் கொண்டு விடுகின்றனர். மிக எளிய ஒன்றையும் பெரிதாக எடுத்துக் கொண்டு வெடவெடத்தும் படபடத்தும் பேசுகின்றனர். கைந் நீட்டலும் கூடச் செய்து விடுகின்றனர். பின்னர் அதனை எண்ணிப் பார்த்து வருந்தவும் செய்கின்றனர். அச்சினத்தால் தாமும் வாரிக்கட்டிக் கொள்ளவும் செய்கின்றனர். சிலர் முன் சினத்தைத் தம் அறியாத் தனத்தால் பெருமையாகவும் கருதிக் கொள்வர் போலும். தம் தவற்றை அறிந்தும் மீளவும் மீளவும் அதனைச் செய்வர் எனின், அதில் பெருமை காண்கின்றனர் என்று தானே கருதவேண்டும்!

சிடு சிடுச் சினம் அடக்கமில்லாமைக்கும், வலிமை இல்லாமைக்கும் சான்று. நரம்புத் தளர்ச்சிக்கும் நாடித் துடிப்புக்கும் சான்று. என்ன சொல்கிறோம்; என்ன செய்கிறோம் என்று அறியாமல் செயல்படும் கொடுமையை ஒருவர் வைத்துக் கொண்டிருந்தால் அவர் எப்படிப் பாராட்டும் தன்மையர் ஆவர்? பாராட்டும் தன்மைகள் அவரிடத்து இருப்பினும் அவற்றையும் பாழாக்கி விடுமே இச்சிறு சினம்!

கருத்துப் பிழைகளைக் கண்ட போதெல்லாம் சினங் கொண்ட **சீத்தலைச் சாத்தனார்** தம் தலையில் எழுத்தாணியால் குத்திக் கொண்டார் என ஒரு கதை வழங்குகின்றதே! அது

"தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு"

என்னும் வள்ளுவமாலை கொண்டு புனைந்த புனைவு. சீத்தலை என்பதோர் ஊர். அவ்வூரினர் சாத்தனார். ஆகலின் சீத்தலைச் சாத்தனார் ஆனார். அவரைச் சீழ்த்தலையர் ஆக்கிச் சினத்தரும் ஆக்கிய புனைவு இது.

கெய்சர் என்பான் ஒருவேந்தன் அவனுக்குச் சினம் வந்தால் தன் காதைத் தானே திருகிக்கொள்வான் என்பது வரலாறு.

"என்னால் சினத்தை அடக்க முடியவில்லையே அடக்கத் தான் நான் நினைக்கிறேன் முடியவில்லை" என்பார் அச்சிக்கலைத் தீர்த்துக் கொள்ள வள்ளுவப் பேராசான் நல்வழி காட்டுகிறார்.

சினத்திற்கு ஒரு பட்டப் பெயர் குட்டுகிறார் வள்ளுவர். அது **'சேர்ந்தாரைக் கொல்லி'** என்பது.

சேர்ந்தாரைக் கொல்வது நஞ்சும் தீயுமாம். இவ்விரண்டும் கூட, சேர்ந்தாரை மட்டுமே கொல்லும், சினமாகிய சேர்ந்தாரைக் கொல்லியோ சேர்ந்தாரை மட்டுமின்றி, அவர்க்குப் பாதுகாப்பாக உள்ள இனத்தையும் கொல்லும் என்கிறார்.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்" (306)

என்பது அது.

வந்தழிக்கும் பகை உண்டு. ஆனால் தன்னோடு இருந்து கொண்டே தன் நகைப்பையும் உவப்பையும் அழிக்கும் பகை சினமென்னும் பகையாகும் என்றும் கூறுகிறார்.

"நகையும் உவகையும் கொல்லும் சினத்திற்
பகையும் உளவோ பிற" (304)

என்பது அது. மேலும்,

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்று மிக எச்சரிப்பூட்டவும் செய்கிறார். இவ்வளவையும் கடந்து சினம் என்னும் எரி குழியில் வீழ்ந்தே தீர்வேன் என்பாரை எவர்தான் காத்துவிடமுடியும்?

இது நீர்ச்சுழி; இது உள்வாங்கு அளறு; இது சறுக்குப்பாறை என எச்சரிக்கையும் தடுப்பும் இருப்பினும் 'வீழ்வேன்' என்பாரை எவரே காப்பார்?

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று" (307)

என நிலத்தில் அறைந்தும் கல்லில் அறைந்தும் கைதப்ப முடியுமா எனக் கன்னத்தில் அறைவார் போலக் கூறியதை உணர்ந்தால் சினச் சிக்கல் சிறிய சிக்கலாய்த் தீர்வுகாணற் குரியதாகவே அமையும்.

இன்னாசெயல் சினங்கொண்டார் சொல் இன்சொல்லாகவா இருக்கும்: கடுஞ்சொல்லும் அல்லவோ அவர் உதிர்ப்பவை. அத்தகைய நிலையிலும் அவரை அமைதியுறுத்த ஒருவழி காண்கிறார் வள்ளுவர்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலொ
வன்சொல் வழங்கு வது" (99)

எனகிறார்.

வன்சொல் கூற வாய் திறக்கும் அன்பனே, நீ இன்சொல் கேட்டது இல்லையா? வன்சொல்லும் கேட்டது இல்லையா? பிறர் சொல்லும் இன்சொல் உன்னை எப்படி இன்பத்தில் ஆழ்த்துகின்றது? பிறர் சொல்லும் வன்சொல் உன்னை எப்படித் துன்பத்தில் ஆழ்த்துகின்றது. இப்படித்தானே நீ சொல்லும் இன்சொல்லும் வன்சொல்லும் பிறர்க்கு இருக்கும். இதனை எண்ணிப் பார்த்தால் வன்சொல் கூற உனக்கு வாய் எழும்புமா? என்கிறார்.

இன்னாத சொல்லைச் சொல்லும் அளவில் நில்லாமல் இன்னாதவற்றைச் செய்தலுக்கும் முந்துவார் உளரே! அவரை நோக்கி, இதே வாய்பாட்டு முறையில்,

"இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்" (316)

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்" (318)

"வலியார்முன் தன்னை நினைக்க தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து" (250)

என அவன் தன் உள்ளுள் நோக்கி உணரும் வகையில் உரைக்கிறார்.

மெலியான் ஒருவனைப் பழிக்கவும் அடிக்கவும் ஓடுகின்றாயே நீ, வலியான் ஒருவன் உன்னைப் பழிக்கவும் அடிக்கவும் முந்து நிற்கும் நிலையில் உனக்கு எத்தகைய அச்சமும் நடுக்கமும் அரற்றலும் அல்லலும் தோன்றும். அந்நிலையை எண்ணிப் பார்த்தால் அதே அடாச் செயலில் நீ இறங்குவாயா என்கிறார்.

"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்"

என்று, "நீ எதைச் செய்கிறாயோ அது உனக்கும் வரவே செய்யும்" என்றும் கூறுகிறார்.

நீ ஒழுக்க முடையவன் தானா? அப்படி ஒழுக்க முடையவன் எனின் உன்னால் தீய சொற்களை மறந்தும் கூடச் சொல்ல இயலாதே; நீ சொல்வதை நோக்க ஒழுக்க மில்லாதவன் யான் என்று உன்வாயால் பறையறைவது போல் அல்லவோ உள்ளது. நீ ஆயிரம் சொற்களை நயமாகச் சொன்னாலும் தான் என்ன, ஒரோ ஒரு சொல் சொல்லக் கூடாச் சொல்லைச் சொன்னது, அத்தனை நற்சொற்களையும் பாழாக்கி விட்டதே. துளி நஞ்சும் துளி அருவறுப்பும் அனைத்தையும் நஞ்சும் அருவறுப்பும் ஆக்கி விடுவது இல்லையா? அப்படி அல்லவோ உள்ளது உன் சொல் என உளவியல் தேர்ந்த ஆசிரியப் பெருமகனாராக உரைக்கிறார் திருவள்ளுவர்.

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (139)

ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். (128)

என்பவை அவை,

வாய்மை

உள்ளதை உள்ளவாறு கூறலும், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு கூறலும் வாய்மை எனப்படுகின்றன. இவை வாய்மை தான். ஆனால், இவ்வாறு கூறலால் பிறர்க்குத் தீமை ஏற்படுமாயின் இவை வாய்மை இலக்கணத்தொடு பொருந்தாதன வாம்,

வாய்மை எனப்படுவது எது என்றால், எந்த ஒரு தீமையும் வாராத சொல்லைச் சொல்வதாம். அவ்விலக்கணத்திற்கு மாறானது வாய்மை ஆகாது.

சில வேளைகளில் பிறர் நன்மை குறித்துப் பொய்யுரைக்க வேண்டியும் நேரலாம். அப் பொய்மை தன்னலம் குறியாமல் பிறர் நலம் குறித்துக் கூறப்படுவதெனின் அது வாய்மை எனக் கூடாதது எனினும், வாய்மை இடத்தில் வைக்கத் தக்கதாக அமையும், பிறர் நலம் கருதிய

இவ்வாய்மையைப் போன்று நல்லதொன்றை யாம் கண்டதே இல்லை" என்கிறார் வள்ளுவர் .

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்." (291)

"பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
நன்மை பய்க்கும் எனின்." (292)

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்பவை அவை,

உண்மை உயர்ந்ததே எனினும், அதனாலும் பிறர்க்குத் தீமை ஏற்படல் கூடாது என்றும், பொய் தீயதே எனினும் அதனால் நன்மையுண்டாம் இடமும் உண்டு என்றும், இருபாலும் ஏற்படும் உலகியல் சிக்கல்களைத் தீர்க்க வள்ளுவ வாய்மையர் கண்ட வழி ஈதாம்,

கொலை வெறியனாக வருவான் ஒருவனுக்கு அவன் மகனோ, மனைவியோ மறைந்திருக்கும் இருப்பிடத்தை அறிந்தும் அறியேன் என்றும் அவ்வழிப் போனார் என்றும் வேறு போக்குக் காட்டி, வெறி ஓய்ந்த நிலையில் இடித்துரைத்து அமைதியுறுத்திச் சேர்ப்பித்தல் குடி நலம் கருதிய தாகலின் அப்பொய்மை பொய்மை ஆகாது; வாய்மை இடத்ததேயாம்.

எதிர்பாரா விளைவுக்கு ஆட்பட்டான் ஒருவனைப் பற்றிய செய்தியை நோய் வாய்ப்பட்ட அவன் முதியர்க்குத் தெரிவிக்காமல் மறைத்து வைத்தலும், முதுவராய் நோயராய் இயற்கையுற்றாரை எட்டாத் தொலைவில் கல்வியில் ஈடுபட்டிருப்பானுக்குச் சிறிது காலம் தெரியாமல் மறைத்து வைத்தலும் தன்னலங் கருதியது ஆகாமல் அவர் நலம் கருதிய தாகலின் வாய்மை இடத்ததேயாம்.

ஒரோ ஒரு மகனை இழந்தாள் ஒருத்தி, உண்ணாது பருகாது பன்னாள் கிடந்து, ஓராற்றான் தேறித் தேறிச் சற்றே உலவித் திரிந்து பின்னர் ஆறிய நிலையில் அவளைக் கண்ட உறவினள் ஒருத்தி, குழந்தையைச் சாகக் கொடுத்தும் குதிர் போல இருக்கிறாள் என்று ஒரு சொல் சொல்ல, அச் சொல்லே கூற்றாய் அவளைப் படுக்கையில் கிடத்தி பாடையிலும் கிடத்தியமை உண்டு. இது வாய்மை எனப்படுமோ?

வள்ளுவ வாய்மை, சிக்கல் தீர்வே அன்றிச் சிக்கல் ஆக்குவதன்றாம்.

அழுக்காறு

அழுக்காறு என்பது பொறாமை, அது பொறுமைக்கு எதிரிடைச் சொல் அன்று. பிறர் செய்யும் தீமையையும் தம்மை மீறிய செயல்களையும் பொறுத்துக் கொள்ளுதல் பொறுமை. ஆனால் இப்பொறாமையோ பிறர் நலங்கண்டு பொறுத்துக் கொள்ளமாட்டாமல் வெதும்பிக் கொண்டிருக்கும் நிலையாகும். **இங்கே பிறர் தாக்கம் வெதுப்ப வில்லை. பிறர் ஆக்கமே வெதுப்புகின்றதாம். அதனால் அக்கொடுந் தன்மையை** "அழுக்காறு என ஒரு பாவி" என்கிறார் வள்ளுவர்

பிறர் நலங்கண்டு புழுங்கும் அது, தன்னை வெதுப்பி வெதுப்பித் தன்னை அழிக்கும்; தன் ஆக்கத்தை அழிக்கும்; என்றும் நெருப்பிடையில் இருந்தால் போன்ற எரிவை உண்டாக்கிக் கொண்டே இருக்கும் என்கிறார்.

பொறாமை உடையவனைக் கெடுக்க வேறு பகை எதுவும் வேண்டியது இல்லை. அவன் கொண்டுள்ள பொறாமையே அவனை அழிக்கப் போதுமான தாகும் என்றும் கூறுகிறார்.

"அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்." (168)

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது." (165)

என்பவை அவை,

வள்ளுவரே நீவிர் சொல்வது போலப் பொறாமையாளன் கெட்டுப் போகாமல் செல்வச் செழிப்பனாய் விளங்குகிறானே நல்லோன் ஒருவன் வறியனாய்த் தொல்லையுறுகின்றானே! ஆங்காங்கு நாங்கள் காணத்தானே செய்கின்றோம் எனின் அவ்வள்ளுவப் பெருந்தகை குறுமுறுவல் காட்டி,

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (169)

என்கிறார்.

"பொறாமையாளன் வளமும், நல்லவன் வறுமையும் மெய்யாக வளமும் வறுமையும் தாமா? நீ நினைத்துப்பார்! உனக்கு உண்மை புலப்படும்" என்று தெரிவிக்கிறார்.

"பொறாமையாளன் தான் எவ்வளவு செல்வம் பெற்றிருப்பினும் தான் செல்வன் என நிறைவு கொள்கின்றானா? அவன், தன் செல்வம் போதாது போதாது என்று ஆசைப் பேயாய்த் திரியத்தானே செய்கின்றான்! நல்லவன் தான் கொண்ட வறுமையை வறுமை என்றா கருதுகின்றான்? அவன், தன்னினும் வாய்ப்புக் குறைந்தவர்களை எண்ணி, அவர்களினும் தான் எவ்வளவோ நலமாக இருப்பதாக அமைதி கொள்கின்றானே! இவற்றை எண்ணினால் பொறாமையாளன் செல்வம் செல்வமா? நல்லவன் வறுமை வறுமையா?" எனத் தெளிவு படுத்துகிறார்.

களவு

களவு என்பது காரறிவாண்மை என்கிறார் வள்ளுவர். அறிவுடையவரும் கூடக் களவில் ஈடுபடுதலைக் கண்டு அவர்அறிவு அறிவுதானா எனக் கருதியவராய் அவரறிவு காரறிவு என்கிறார். காரறிவு என்பது வெள்ளுவாவுக்கு எதிரிடையான காருவாப் போலும் அறிவு. பாழறிவு அது, அறிவின் இயல்பு பிறிதின் நோயைத் தன் நோய் போல் போற்றிக் கொள்ளல் ஆகும். ஆனால் இக்காரறிவோ பிறிதொன்றைத் தேடிப் போய் அது தேடி வைத்ததை எல்லாம் திருடிக் கொண்டு வந்து விடுகின்றது. பொருட்பறி மட்டுமன்றி, உறுப்புப் பறி, மானப்பறி, உயிர்ப்பறி ஆகிய எல்லாமும் கூடச் செய்கின்றது. **மருத்துவர் கத்தி, கொலையாளன் கைக்கத்தியாகி விட்டது போல் வாலறிவு காரறிவாகி விட்ட நிலை இது என்கிறார்.**

களவு என்னும் இக்காரறிவு எவர்க்கு உண்டு? அளவோடு வாழ்வு நடத்துவோம் என்பது இல்லாதவர்க்கு உண்டு!

"களவென்னும் காரறிறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார் கண் இல்." (287)

என்பது அது.

களவு வழியால் வரும் ஆக்கம் ஆக்கமா? ஆக்கம் கெடுப்பதை ஆக்கமெனக் கொள்வது அறிவா? அளவு கடந்து பெருகுவது போலத்

தோற்றந் தந்து இல்லாமல் ஒழிவது அல்லவோ திருட்டுப் பொருள் முறையாக வரும் பொருளே முறைகேடனிடத்து நில்லாது ஒழிய, முறையற்றவனுக்கு முறைகேடாக வந்த பொருள் தானா நின்று பயன் தரும்? தட்டிப் பறித்த பணம் கொட்டித் தொலைக்கும் வழிகளுக்கே போய், பழிமேல் பழியாய் குற்றத்தின் மேல் குற்றமாய்ப் பெருக்க அல்லவோ செய்யும்?

ஒரு நாள் ஓரிடத்துக் களவை மறைத்து விடலாம். களவு செய்த கை சும்மா இராதே களவு கொண்ட மனம் ஓயவிடாதே! அது களவாளன் கையிலும் காலிலும் விலங்கு பூட்டிக் கடுஞ் சிறைக்கும் கொடுந்தண்டத்துக்கும் ஆட்படுத்தாமல் விடாதே! ஆதலால்,

"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்" (283)

என்றும்

"களவின் கண் கன்றிய காதல் விளைவின் கண்
வீயா விழுமம் தரும்" (284)

என்றும் கூறினார்.

சிவப்பு விளக்குப் போட்டு நிறுத்தி, பச்சை விளக்குப் போட்டுப்போ என வழிப்படுத்தும் காவல் கடமையர் போல வள்ளுவத் தோன்றல் களவுக் கயமையைச் சுட்டிக் காட்டி ஒழுங்குபடுத்துதலை உணர்வார் பிறர் பொருளைக் கவர விரும்புவரா?

"சொல்லப் பயன்படுவர் சான்றோர்"

என்று கருதி உரைக்கும் உரையைக் கேளாமல்,

"கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்" (1078)

என ஆவேன் என்பாரை அழிவு ஆட்கொள்வதை அன்றி அறம் ஆட்கொள்ளுமா?

கொலை

இயற்கையாகத் தோன்றிய உயிர், இயற்கையாக உடலில் இருந்து விடுபடுதலே நேரியமுறை, தன்னைத் தானே அழிப்பதாயினும்,

பிறிதுயிரை அழிப்பதாயினும் முறையன்றாம். **ஆக்க முடியாத உயிரைப் போக்குதல் முறைமை என எவரும் கொள்வரா?**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுக்கும் அவ்வவரின் உயிரும் அவ்வவற்றின் உயிரும் இனியனவே அவ்வாறாகவும் அவ்வினிய உயிரைப் போக்குதல் கொடுஞ்செயல் அல்லவோ. அதனால், தன் உயிரை இழக்கின்ற ஒரு நெருக்கடியான நிலையில் கூட, பிறவுயிரைக் கொல்லும் செயலை மேற்கொள்ளல் ஆகாது! தன்னுயிரைக் காக்க வேண்டும் என்று பிறிதொன்றின் இனிய உயிரைக் கொல்லலாமா? என்கிறார்.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை (327)

பிறிதொருவர் தமக்குத் தீங்கு செய்தார் என்று கறுவிக் கொண்டு அவரைக் கொல்லத் திரிவானுக்குச் சொல்கிறார்.

“அப்பா, உனக்கு ஒருவர் கொடுமை செய்தார் என்றும், அவரைக் கொன்றொழித்தல் வேண்டும் என்றும் முனைப்பாக, உள்ளாயே! அவர் உனக்கு எந்த நாளிலேனும் எந்த அளவிலேனும் நன்மைசெய்தவர் இலரா? அவர் செய்த தீமையையே நினைக்கும் நீ அவர் செய்த நன்மை உண்டாயின் அதனை எண்ணிப் பார்த்தல் கடமை அல்லவா! அவர் செய்த பல தீமைகளுக்கு இடையேயும் அவர் ஒருகால் செய்த நன்மை காலத்தினால் செய்ததாகவும், பயன் கருதாமல் செய்ததாகவும் இருந்து உன்வாழ்வுக்கும் உயர்வுக்கும் அடிப்படையாகக் கூட இருந்திருக்கலாமே! அவற்றை ஒருநொடிப் பொழுதளவு எண்ணினால் கூட, உன் கொலை எண்ணம் பொடிப் பொடியாக உதிர்ந்து போகுமே!” என்கிறார்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும் (109)

வறுமை

இனிச் சிலர் தாம் பெற்ற வறுமையை நினைந்து நினைந்து நைகின்றனர். வறுமையை இன்மை, நல்குரவு, நிரப்பு, துப்புரவின்மை என்னும் நான்கு வகைகளில் ஆள்கிறார் (அதிகாரம். நல்குரவு)

வள்ளுவர். இவற்றுள் வறுமையும் இன்மையும் ஒருபொருளன. நல்குரவு என்பது கொடுக்கப்பட்ட வலிமை என்னும் பொருளது. நிரப்பு என்பது நிரம்பிய நலம் செய்வது என்னும் பொருளது. துப்புரவின்மை என்பது உண்ணுதற்கு வகையில்லா நிலை என்றும் வலிமை குன்று நிலை என்று பொருள் தருவன.

இவற்றை மேலோட்டமாகப் பார்த்த அளவில்கூட கொடிய வறுமையில் கூட நலப்பாடாம் பகுதியும் உண்டு என்பது விளங்கும்.

"நெருப்பினுள் உறங்கினாலும் கூட நிரப்பினுள் கண்ணை மூடுதற்கும் இயலாது" என்றும் (1049),

"நேற்றுக் கொன்று விட்டுச் சென்ற நிரப்பு இன்றும் வருமோ" என்றும் (1048),

"வறுமையிற் கொடியது எது என்னின் அவ்வறுமையிற் கொடியது அவ்வறுமையே" என்றும் (104),

வறுமைக் கொடுமையை உருகி உருகிக் கூறுகிறார் வள்ளுவர்.

வறியவர்க்குக் கொடுக்கும் கொடையே கொடை பிறர்க்குக் கொடுப்பது கைம்மாற்றுப் போல்வதும் கடன் போல்வதும் என்றும் கூறுகிறார் (221).

வறியவர் பசித்துயரை அழிபசி என்றும் (226), பசியென்னும் தீப்பிணி என்றும் (227) அவர்க்குத் தருவதே ஈத்துவக்கும் இன்பம் என்றும் (228) கூறுகிறார்.

பசிக்கொலையால் இறந்துபடாமல் காத்தலை,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

என மேம்பட்ட கடனாகக் குறிக்கிறார். இக்குறளுக்கு எனவே வாழ்ந்து காட்டிய இலக்கியப் பிறவி வள்ளலார் பெருமான் என்பது நாடறிந்த செய்தி.

வறுமைக் கொடுமையை ஒழித்து ஒப்புரவாக்க உரத்த ஒலி எழுப்பும் வள்ளுவர், அவ்வறுமையால் உண்டாம் நலங்களையும், அவ்வறுமையினும் வறுமையையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

வறுமையிலும் நன்மை ஒன்று உண்டு; அஃது யாது எனின், மெய்யான உறவினர் இவர் என்பதை அளவு செய்து கொள்வதற்கு அவ்வறுமைப் பொழுது உதவுகின்றது என்கிறார். அது

"கேட்டினும் உண்டோர் உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்" (796)

என்பது செல்வமும் வாய்ப்பும் பதவியும் இருக்கும்போது இருந்து, அவை ஓடும்போது தாமும் ஓடும் இயல்பினரை அப்பொழுதில் தானே கண்டு கொள்ள முடியும்? **அந்த வாய்ப்புப் பெறாத வறுமைப் பொழுதினைக் கருதலாமே!** என்கிறார்.

வறுமையிலும் வறுமை உண்டு அது. செல்வமுடைமையாம். அச் செல்வமுடைமை அறநெறி பேணா அரசின் கீழ் பெருந் துயர்க்கே இடஞ்செய்வதாய் இருக்கும். இதற்கு வறுமை எவ்வளவோ மேலானது அல்லவா என்கிறார்.

"இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்" (558)

இன்னும் நல்லவர்கள்பட்ட வறுமையினும் கொடுமையானது அல்லவர்கள் அடைந்த செல்வம் என்றும் கூறுகிறார்.

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு" (408)

இன்மையின் இன்மையே இன்னாதது என்றாலும், அதனினும் இன்னதாதும் உண்டு. அஃது என்னவென்றால் அறிவின்மை ஆகும். செல்வம் இல்லாமையை உலகம் இல்லாமையாகக் கொள்ளவும் செய்யாது வசை கூறவும் செய்யாது. ஆனால் அறிவில்லாமையையே உலகம் வசைகூறும்.

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை இன்மையா வையாது உலகு (841) அறிவின்மைதான் இன்மையே அன்றிப் பிறிதின்மை இன்மை ஆகாது என்ற திருவள்ளுவர்,

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (430)

என்கிறார்.

ஊக்கமுடைமை

அதனினும் ஒருபடி மேலே போய், பொருளுடைமை ஆகட்டும், அறிவுடைமை ஆகட்டும் பிறபிற உடைமைகள் ஆகட்டும்; அவையெல்லாம் ஊக்கமுடைமைபோல் ஆகுமா என்கிறார்.

"உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று" (591)

"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்" (592)

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார் (593)

என்றெல்லாம் ஊக்கம் என்னும் செல்வத்தை உரைக்கிறார்.

தேடிய செல்வம் எத்தனை எனினும் இழக்கலாம். தேடிக் கொள்ளவும் செய்யலாம். ஆனால் ஊக்கம் என்னும் செல்வம் ஒன்றனை மட்டும் இழந்துவிடுதல் ஆகாது என உரமூட்டுகிறார்.

யானை எவ்வளவு பெரிய விலங்கு?

அவ்வளவு பெரியதா புலி?

யானைக்கு இருக்கும் தந்தம் எவ்வளவு வலியது?

ஆனால் புலிக்கு அப்படித் தந்தம் உண்டா?

பரிய தேக்குத் தடிகளையும் இழுக்கும் வலிமையமைந்த

யானை, புலியைப் பார்த்த அளவிலே அஞ்சிப்

பின் வாங்குவது ஏன்?

ஊக்கத்தைத் தடுத்து நிறுத்த ஒரு தடை உண்டா? இல்லை! என்பதைக் காட்சியாகக் காட்டுகிறார் வள்ளுவர்.

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" (599)

என்பது அக்காட்சி.

இன்பத்தை விரும்பமாட்டான்; துன்பம் வருதல் இயற்கை என்று கொள்வான். இத்தகையனுக்குத் துன்பம் ஒன்றும் உண்டோ?

துன்பத்திற்கே துன்பம் ஊட்டவல்ல துணிவினர்க்கு துன்பம் என்பதொன்றும் உண்டோ?

அடுக்கடுக்காகத் துன்பம் வந்தால் என்ன,

வெள்ளப் பெருக்கே போலத் துன்பம் வந்தால் தான் என்ன, ஊக்கமுடையவனை அவை என்ன செய்ய முடியும்?

நீரின் ஆழம் எவ்வளவு, அவ்வளவு நீளம் உடையது நீர்ப் பூவின் தண்டு. நீரின் அளவுக்கு ஏறி ஏறி உயர்ந்தே நிற்கும் அது. அது போல் ஒருவன் உள்ளத்தின் அளவுக்கே அவன் உயர்வும் அமைந்திருக்கும் என்றெல்லாம் ஊக்கச் சிறப்பைக் கூறும் வள்ளுவர் காளை ஒன்றன் காட்சியைக் காட்டுகிறார்.

“மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து (624)

என்பது அது.

வண்டியில் பூட்டப் பட்ட வலிய காளைக்கு மேடென்ன பள்ளமென்ன? மலையடிக் கல்லாஞ்சரளை என்றால் என்ன? தன் காலிலும் வண்டிக் காலிலும் எற்றுண்டு துள்ளிச் செல்ல இழுத்துக்கொண்டு போவது இல்லையா?

மணலும் சேறும் நீரும் அமைந்த ஓடையிலும் ஆற்றிலும் வண்டிச் சக்கரம் அழுந்தித் தெப்பக் கட்டை அளவுக்கு ஆழ்ந்து சென்றாலும், முன்னங்கால்களை ஊன்றி மண்டியிட்டு.தலையை நிமிர்த்தி, கொம்பை உயர்த்தி, காதை விடைத்து நுகக் கோலை இழுத்து மேடேறும் மாட்டைக் காண்பார்க்கு வாழ்வில் ஏற்படும் தடை எதுவும் தடையாமோ? தடை உண்டு எனின் தடந்தோள் உண்டு என்று வீறு காட்டி வெற்றி கொள்வதன்றோ வாழ்வு?

“ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடைய நோன்பகடு”

என்றும்,

“அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய

வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகடு”

என்றும் வரும் புறநானூற்றுச் செய்திகள் (60,90) இவண் எண்ணத் தக்கன.

இவற்றால் **வறுமை முதலாம் தடங்கல்கள் முயற்சியும் ஊக்கமும் உடையவனுக்குத் தடங்கல்கள் ஆகமாட்டா என்றும், அவற்றையெல்லாம் மிதிபடியாகக் கொண்டு மேலே ஏறி மலை மேல் சுடரும் கதிரோனாக அவன் திகழ்வான் என்றும் நம்பிக்கை** யூட்டுகிறார் திருவள்ளுவர். சுடச்சுட ஒளி செய்கிறதே பொன். அச்சூடு அதன் மாசினைப் போக்கி மேலும் ஒளிவிடத்தானே செய்கின்றது. அவ்வாறே ஒருவனை வாட்டும் வறுமை முதலிய துன்பங்கள் எல்லாம் அவனை ஒளிவிடச் செய்வனவே யாம்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (267)

பெருமையும் சிறுமையும்

பொன்னைத் தேய்த்து மாற்றுக் காண்பதற்கு ஒருகல் உண்டே அது **கட்டளைக் கல்** என்பது, அக் கல் தன்னில் தேய்க்கப் பட்ட பொன்னின் மாற்றுகளை உயர்வு தாழ்வு இல்லாமல் உள்ளது உள்ளபடி காட்டும். அதுபோல் ஒருவன் பெருமையும் சிறுமையும் பிறர் சொல்லும் புகழ் பழிகளில் ஆவனவும் நிற்பனவும் அல்ல. அவன் செய்யும் செயல்களாலேயே அமைவன என்று **‘நீயே நின் மதிப்பீட்டாளன்’** என்கிறார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (505)

பழிப்புரை

தாழ்ந்தவரும், பண்பு குறைந்தவரும் கூட என்னைக் குறை கூறுகின்றனரே அவர்களுக்கு நான் எவ்வளவு உயர்வு என்று குறை சொல்பவரைக் குறைகண்டு வருந்துவார் உளர். அத்தகையவரை நோக்கி, நீ அவன் சொல்லிய குறையையும் அவன் குறையையும் பார்த்துத் தானே இப்படிச் சொல்கிறாய். உன் தகுதி என்ன, உன் செயல்

அதற்குத் தக்கது தானா என்று நீ எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவோ? உன் தகுதிக்கும் செயலுக்கும் உள்ள பொருந்தாமையைக் கண்டு, அவன் உன்னைக் குறை கூறினானே அல்லாமல் உனக்கும் அவன் மேம்பாட்டாளன் என்னும் செருக்கில் கூறினான் அல்லன் என்று கொள்ள வேண்டும் அல்லவோ என்கிறார்.

“எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு” (470)

கேடு

என்னை நன்றாக நோட்ட மிட்டிருக்கிறான்; என் விருப்பு வெறுப்பு சொல் செயல் என்பவற்றையெல்லாம் உள் வைத்து நோக்கியிருக்கிறான்; சரியான வேளை கண்டு என்னை வீழ்த்தி விட்டான் தலை நிமிரா வகையில் கெடுத்து விட்டான் என்று தன்னிலைக்கு இரங்குவாரைப் பார்த்து

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் (440)

என ஓர் ஒளி காட்டுகிறார்.

“ஒருவன் தான் விரும்பும் விருப்பத்தைப் பிறர் அறியாமல் துய்த்து நிறைவேற்றிக் கொள்ள வல்லவனாயின் அவனுக்குப் பகையாயவர் வகுக்கும் சூழ்ச்சி எதுவும் வெற்றி பெறாது” என்பது இது.

இல்லையா? உண்டே!

ஊணுக்கும் வழியில்லை உறவுக்கும் வகையில்லை என்று தமக்குள் தாமே நோவாரைக் கண்டு,

“துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு” (94)

என்று தேற்றுகிறார்.

எவரிடத்தும் இனிக்க இனிக்க உரையாடுங்கள் உறவாடுங்கள் இன்சொல் சொல்லவும் முகம் மலர்ந்து விளங்கவும் என்ன பஞ்சமா? அவற்றைச் செய்தால் உங்களைத் துன்புறுத்தும் பட்டுணி உங்களை அண்டவே அண்டாது என்று **வற்றா வளநெறி ஈதென வகுத்துக் காட்டுகிறார்.**

எமக்குத் தாங்குதலாய் இருப்பார் எவரும் இலரே ஆற்றுவார் தேற்றுவார் இலரே என்று தவிப்பாரை நோக்கி,

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு (106)

என ஒளி வழி காட்டுகிறார்.

குற்றமற்ற நல்லவர் நட்பை என்றும் மறவாதீர்; உங்கள் துன்பத்தில் துணையாக நின்றவர்களை என்றும் விட்டு விலகாதீர். இவற்றை நீங்கள் கடைப்பிடியாகக் கொண்டால் அவர்கள் உங்களைப் பார்த்துக் கொள்வார்கள். உங்கள் மறப்பும் துறப்புமே உங்கள் துயருக்குக் காரணமாக அமைந்தவை எனத் தெளிவுறுத்துகிறார்.

எவரும் ஏற்பர்

எவ்வளவோ சொன்னேன், எப்படி எப்படியெல்லாமோ சொன்னேன்; எவரும் கேட்பாரில்லை என்பவரைப் பார்த்துத் திருவள்ளுவர், தம்பட்டறிவும் பாசமும் கொண்டு கூறுகின்றார்:

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் (648)

"எவரும் கேட்கவில்லை என்கிறாயே! எவரும் என்ன, உலகமே உன் சொல் கேட்கும்; நீ சொல்லும் வகையில் சொல்ல வேண்டும். சொன்னால் கேட்கும்" என்றார்,

"சொல்லும் வகை எப்படி?" என்பதை அறிந்து கொள்ள விரும்பி ஏறிட்டுப் பார்த்தான் அவன்; வள்ளுவர் கூறினார்.

"சொல்பவன் வேறு கேட்பவன் வேறு என்று இல்லாமல் இருவரும் ஒத்த நிலையராகிய உரிமை கொண்டு விட வேண்டும்; அந்நிலையில் கேட்பதற்கும் இனிமையமைய, இதனைச் சொல்லும் முறை இதுவே எனக் கேட்டவர் வியக்கச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொன்னால் சொன்ன உடனே சொன்னதை நிறைவேற்றுவர்" என்றார்

மெய்ப்பொருள் காண்

"அவனை நம்பினேன்; அவன் சொன்னதையெல்லாம் கேட்டேன்; அதனால் கெட்டேன்" என்பான் ஒருவனை நோக்கி, போனது

போகட்டும் இப்பொழுதாவது புரிந்து கொண்டாயே; அதுபோதும்; அந்த அளவுக்கு நன்மையே" என்று தெளிவித்தார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (433)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (355)

என்பவற்றைப் போற்றிக் கொள். வருங்காலத்தேனும் வாயிழந்தும் கையிழந்தும் போக மாட்டாய் என்றார்.

நல்லதன் தீது

நான் காலமெல்லாம் நன்மையே செய்தேன்; எனினும் அதனைப் பொருட்டாக எண்ணாமல் போனது மட்டுமில்லை! எனக்குத் தீமை செய்யவும் என்னைக் குறை கூறவும் வருகின்றானே என்று நைகின்ற ஒருவனை நோக்கி,

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை (469)

என்றார். நன்மை செய்வதெல்லாம் நன்மையாகி விடாது அதனை நல்லதெனக் கொள்வார்க்கே நல்லதாம்; பிறர்க்கு அல்லதாம். நீ செய்யும் நன்மைக்கும் தாம் ஒரு கற்பிப்புச் செய்து கொண்டு அது இன்ன உள் நோக்கத்தால் செய்தது என்று இட்டுக் கட்டி இழிவாகப் பேசவும் இடருண்டாக்கவும் முனைவர். ஆதலால் செய்யப்பட்டவர் தன்மையைப் பொறுத்தே நல்லதும் அல்லதும் கொள்ளப்படும் எனத் தெளிந்து தேர்ந்து செய்; இப்புண்பாட்டை இன்னொருகால் அடைய மாட்டாய் என்கிறார்.

காலமும் பயனும்

எனக்குப் புரிவு தெரியா நாளில் என் காப்பாளராக அவர் இருந்தார்; எனக்குக் காப்பாளராக இருந்தது போலவே என் உடைமைக்கும் அவரே காப்பாளராக இருந்தார். அக்கால நிலையில் ஓரளவு படிக்கவும் வைத்தார். பின்னே என் கடிய உழைப்பாலும் முயற்சியாலும் வளர்ந்த நிலையில் என் உயர் வெல்லாம் அவராலேயே என்றும், அவர் காலத்தால் செய்த உதவியாலே ஆம் என்றும் கூறி,

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது (102)

என்னும் உம் குறளையே எடுத்துக் காட்டுகிறார். என் சிக்கலைத் தீர்க்க என்ன வழி? **காலமெல்லாம் அவர் காலத்தால் செய்த நன்றிக்குக் கடன் பட்டவனாகவே வாழ வேண்டுமா?** என்று வினாவினான் ஒருவன்.

வள்ளுவக் கிழவர் மெல்லென நகைத்து, "நன்றாக என்னை மடக்குகிறாய்; ஒரு குறளை அவர் எடுத்துக் காட்டினார் என்றால், அவர் காலத்தால் செய்தது உன் நலம் கருதியா? எதிர் காலத் தந்நலம் கருதியா என்று நீ எண்ணிப் பார்க்க வேண்டும் ஆல்லவோ!" என்றார் வள்ளுவர்.

"ஆம்! அது சரிதான்! ஆனால், உம் குறளைக் காட்டிக் குத்திக் கூறுவதற்கு என் வாக்கால் மறுமொழி சொல்வது என் தீர்வாக இருக்குமேயன்றி **நீவிர் தந்த தீர்வாக இராதே அவரும் ஏற்க நானும் ஒப்ப, பிறரும் கொள்ள உம் உரையாக இருக்க வேண்டுமே**" என்றதும், கலகல வெனச் சிரித்தார் வள்ளுவப் பெருமான்

அப்பா எட்டப் போகாதே! அடுத்த பக்கம் கூடப் போகாதே அடுத்த பாட்டிலேயே அச்சிக்கல் தீர்வு இருப்பதைக் காண்பாய் என்றார். ஆம்; அடுத்த குறள்,

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது" (103)

என்றிருந்தது.

தமக்கு உண்டாகும் பயனை எண்ணிப் பாராமல் காலத்தால் செய்த உதவியே சாலச் சிறந்தது என உணர்ந்து கொண்டால் சிக்கல் தீர்ந்து போகின்றதே!

பகை நட்பு

எனக்குப் பகையாக இருந்த ஒருவன், தன் பகையை மாற்றிக் கொண்டு என்னை நெருங்குகிறான். நான் என்ன செய்யவேண்டும் என்றான் ஒருவன்,

பூவைச் சுடும் தீயைப் போல உன் மனமலரைச் சுட்ட ஒருவனாக இருந்தால் கூட அவன் அதனை மறந்து மெய்யாகவே நல்லவனாகி

உன்னோடு மாசறக் கூடுவானானால் நீ அந்நிலையில் பழங்குற்றத்தை மறந்து போற்றிக் கொள்ளுதலே அவனைத் திருத்த வாய்த்த நெறியாகும். இல்லாக்கால் அவன் என்றும் தீயனாகவே இருந்து கேடனாகவே ஒழிவான் அதனால்,

"இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று" (308)

என்பதைக் கொண்டு நட என்றார். எனினும் தம் சொல்லால் அவன் கெட்டுப் போய்விடவும் கூடாதே என்ற அருள் நோக்கால்,

"அப்பா, அத்தகையவனையும் உடனே நம்பி உயிரன்பனாகக் கொண்டு விடாமல் கொஞ்ச நாள் ஆய்வு நிலையில் வைத்துப் பார்த்தல் நல்லது" என்றார். அவன் திகைத்தான். ஆம்! உன் திகைப்பு எனக்குத் தெரிகிறது. அறம் சொல்லும் கிழவர் இப்படியும் சொல்வாரா என்று திகைக்கிறாய்! என் சொல்லைக் கேளாதவனைக் கருதி, என் சொல்லைக் கேட்டு நடக்கும் உனக்கு என் சொல்லால் அழிவு நேர்ந்து விடக்கூடாது அல்லவா அதனால்,

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்" (830)

என்பதைப் போற்றிக் கொள்வாயாக என்றார்.

பருந்து பறந்து வந்து குஞ்சைத் தூக்க வரும் போது கோழி தன் சிறகுகளை அரணாக்கிக் காப்பது போல் காக்கும் வள்ளுவப் பெருமகனார் வாழ்வியல் பார்வையை மெச்சினான். உச்சி குளிர்ந்து உவகை ஊற்றெடுக்கப் பாராட்டினான்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (231)

என்பதைச் சிக்கெனக் கொண்டு உள்ளவற்றையெல்லாம் வாரி வழங்கி விட்டேன்; இப்பொழுது எனக்கே பொருட்சிக்கலாகி விட்டது என்றான் ஒருவனை நோக்கி. உன் நிலையறிந்து கொடாமல் உள்ளவையெல்லாம் கொடுக்க வேண்டும் என்று நீ கருதியதனால், இப்படி வருந்திக் கூறினை, நீ வருந்திக் கூறுவதை நோக்க நீ செய்தது

தவறு என எண்ணிக் கொண்டு சொல்வது புரிகின்றது! அந்த மேதகு நிலை அடைந்தவர்,

"சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" (330)

என்னும் நிலையை அடைந்தவர்கள். அவர்கள் ஈத்துவக்கும் இன்பமே இன்பமெனக் கொண்டவர்கள். **உன்னைப் போன்றவர்க்கு நான் சொல்ல வேண்டியதைச் சொல்லத் தவற வில்லை. வலியறிதல் என்பதை எடுத்துப்பார் ஒருமுறை மட்டுமா மும்முறை அடித்துச் சொல்லியுள்ளேன்.**

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி" (4.77)

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்" (479)

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்" (480)

என்பவற்றில் உள்ள "உளவரை" "அளவறிந்து" என்பவற்றைப் பார் என்றார்.

வழுவாய்க்குக் கழுவாய்

செய்யக் கூடாத ஒன்றைச் செய்து விட்டேன்; அது தவறென உணர்கின்றேன்; அதற்குக் **கழுவாய் என்ன** என்று ஒருவன் கேட்கிறான். சமயத்தர் கூறும் கழுவாய்களைக் கண்டும் கேட்டும் அவ்வழித் தீர்வை நாடினை என்பதை அறிகிறேன். அறிவறி அன்ப, அத்தவற்றை **மீண்டும் செய்யாதிருத்தலே அறமுறைக் கழுவாயாகும்.பிறமுறைக் கழுவாயைத் தேடித் திரியாதே** என்றார் அது,

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

என்பது.

இல்லையா? இல்லை!

அது இல்லை இது இல்லை என்பது எனக்குத் துயராக உள்ளது. அதனைத் தீர்த்துக் கொள்வது எப்படி என்று தவிக்கிறான் ஒருவன்.

வள்ளுவரோ அமைந்த முகத்துடன் தேவையைப் பெருக்கிக் கொண்டு அது இல்லை இது இல்லை என இல்லாமைக்கு வருந்துகிறாய். ஆனால் **எனக்கு இது கட்டாயம் வேண்டியது இல்லை; அது தேவையே இல்லை என்று ஒவ்வொன்றாக விலக்கிப்பார். அவற்றால் உனக்குத் துன்பம் உண்டாகாது;** வேண்டியவற்றுக்கும் வேண்டிய அளவு வாய்ப்புக் கிட்டும் என்கிறார். அது.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (341)

என்பது.

நிறைவு

இவ்வாறு தனி வாழ்வில் ஏற்படும் பலப்பல சிக்கல்களுக்கும் அருமருந்தனைய தீர்வுகளை வழங்கிச் செல்கிறார் வள்ளுவர். சுட்டிக் காட்டியவை சிலவே. காட்ட வேண்டியவையோ பல வாகலாம் நோக்குவார் நோக்குக்கெல்லாம் இடந்தந்து ஆக்கமாம் வகையில் உதவுவது வள்ளுவம் என்பது இக் குறிப்புகளால் புலப்படும்.

2. குடும்பவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

சிற்றூர்களில் **'தலைக் கட்டு வரி'** என்றும் குடும்பவரி என்றும் வழங்கும் வழக்குகள் இன்றும் உள்ளன. பொங்கல் விழா, கோயில் விழா, ஊர்ப் பொதுக் கடமை ஆகியவற்றுக்குத் தலைக் கட்டு வரி அல்லது குடும்ப வரி என்று அளவிட்டு வாங்குவர். அத்தலைக் கட்டு அல்லது குடும்ப அளவு, கணவன் மனைவி மக்கள் என்னும் முத்திறத்தர் அமைந்த அளவே ஆகும். மக்கள் இல்லை எனினும் கணவன் மனைவியர் கொண்ட குடும்பமும் ஒரு தலைக் கட்டேயாம். ஆதலால் ஒரு பெருங்கூட்டுக் குடும்பத்தில் மிகப் பலர் இருப்பினும் அவரெல்லாம் ஒரு குடும்பம் எனக் கொள்ளப் பட்டிலர். **குடும்பத் தொகுதியே அக் கூட்டுக் குடும்பமாகும்.**

கூட்டுக் குடும்பம்

கூட்டுக் குடும்பம் என்பது அண்மைக் காலம் வரை தமிழகத்தில் நடைமுறைப்பட்டதாகவே இருந்தது இந்நாளிலும் முற்றாக அவை ஒழிந்து விடவில்லை. இன்றும் முதியோர் தம் குடும்பம் பிரிந்து போதலை விரும்பாதவராக இருத்தலும் காணக் கூடிய செய்தியே.

நூற்றுக் கணக்கானோர் உள்ள ஒரு பெருங்குடும்பத்தை அறிவேன். அக்குடும்பத்தவர் சொத்துப் பிரிவினை செய்வது இல்லை. தனியே போக வேண்டும் எனக் கருதினால் போய் விடலாம்; ஆனால் சொத்தில் எப்பங்கும் கொண்டாட முடியாது. மீண்டும் பொதுக் குடும்பத்திற்கு வரவேண்டும் எனினும் தடையின்றி வந்து விடலாம்.

சமையல் பொதுவாக நடைபெறும். அவரவர்க்கு வேண்டு மளவு சோறு கறி வகைகளை எடுத்துக் கொண்டு போய் அவரவர்க்குள்ள தனி வீட்டில் வைத்து உண்ணலாம். அங்கேயே தங்கிக் கொள்ளலாம். எல்லா வேலைகளும் பொது; எல்லா வருமானங்களும் பொது: எல்லாச் செலவுகளும் பொது; குடும்பத்தில் மூத்தார் எவரோ அவர் தலைமையில் குடும்பம் நடைபெறும்.

இத்தகு குடும்பம் **'கடும்பு'** என வழங்கப்பட்டது எனச் சங்க இலக்கியங்களின் வழியே அறிய வாய்க்கின்றது. வள்ளுவர் **குடும்பம்,** குடி என்னும் சொற்களை வழங்கியுள்ளார், குடும்பம் என்பது ஒரோ ஓர் இடத்தே தான் ஆளப்பட்டுளது. அது,

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு"

என்பது.

"குடும்பத்திற்குக் குற்றம் வராமல் அகற்றுதற்கு முயல்பவன் உடல் துன்பம் என்னும் பொருளுக்கே கொள்கலமாக (இருப்பிடமாக) அமைவதோ? (இல்லை)" என்கிறது அது.

குடி என்பது குடும்பம் என்னும் பொருளில் பதினெட்டு இடங்களில் ஆளப்பட்டுள. அவ்விடங்களுள் **ஆன்ற குடி** (அகன்ற குடி) என்னும் ஆட்சி மூவிடங்களில் உண்டு. அவை கடும்பு என்பது போலும் கூட்டுக் குடும்பக் குறிப்பு ஆகலாம் (681, 992, 1022).

உட்பகை

குடும்ப நலங்காத்தலை அழுத்தமாகக் கூற விரும்பும் வள்ளுவர் 'உட்பகை' என்னும் அதிகாரத்தில் அதனை மிக வலியுறுத்துகிறார்.

நாடு நலம்பெற உட்பகை ஆகாமையே போல, வீடு விளங்கவும் உட்பகை ஆகாது என்பதைப் பல்கால் வற்புறுத்துகிறார்.

"உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும்" (885)

நெருங்கிய உறவு முறையினால் ஒருவனுக்கு உட்பகை தோன்றினால் அஃது அவனுக்கு இறக்கும் முறையால் துன்பம் பலவற்றைத் தரும்.

"ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது" (886)

நெருங்கியவர்களிடத்து நெருங்காத உட்பகை உண்டாயின் அழியாதிருத்தல் அமைதல் எப்பொழுதும் இல்லை.

"செப்பின் புணர்ச்சிபோல் சூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி" (887)

செப்புச் சிமிழும் மூடியும் கூடி ஒன்றே போல் பொருந்தியிருந்தாலும் ஒன்றாகாது! அது போல் உட்பகை கொண்ட குடியும் ஒன்று போல் பொருந்தியிருந்தாலும் ஒன்றாகாது.

"அரம் பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி" (888)

உட்பகை உண்டான குடி அரத்தினால் அராவப்பட்ட இரும்பு போல் வலிமை குறைக்கப்பட்டுத் தேய்ந்து போகும்.

"எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு" (889)

எள்ளின் பிளவினை ஒத்த சிறிதளவே பிளவு உடையது எனினும் உட்பகை (ஒரு குடியை) அழித்துவிடும் கேடு உடைய தாகும்.

"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று" (890)

உள்ளத்தால் ஒன்று படாதவர் ஓரிடத்துக் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு சிறு குடிசையில் பாம்புடன் கூடி வாழ்வது போன்றது.

முன்னைந்து பாடல்களின் கருத்தின் முடிந்த முதிர்நிலை போல இறுதிப் பாடல் இருத்தல் "உடம்பாடு இலாதவர் குடும்ப வாழ்வு இத்தகைத்து" எனக் குறித்துக் காட்டுவதாகும்.

உட்பகைத் தீர்வு

உறவு முறைக்குள்ளாக உட்பகை தோன்றின் முழுதழிவே என்றும் ஒரு குடிப்பிறந்து ஒன்றுபட நிற்கத்தக்கார் ஒன்று படாமல் இருப்பின் பேரழிவே என்றும். வெளிப்பார்வைக்கு ஒன்றே போலத் தெரியும் செப்பும் மூடியும் போலச் செறிவாகத் தோன்றினாலும் பிரிவு பிரிவே என்றும், வலிய இரும்பும் அரத்தால் சிறிது சிறிதாக அராவப்பட்டுத் தேய்ந்து இற்று ஒடிந்து போவது போல உட்பகை உள்ள குடியும் அழியும் என்றும். எள்ளின் பிளவே போலச் சிறிய பிளவு உண்டாயினும் குடி அழிந்துபடும் என்றும் உட்பகைக் கேட்டைப் பல்கால் வற்புறுத்திக் கூறிய குடிப்பாங்கு அறிந்தார், உடம்பாடு இலாத் தன்மை கொள்ளார். அப்படிக் கொண்டார் வாழ்வு, எப்பொழுது தீண்டுவார், நச்சைக் கக்குவார் என்பதைத் தெரியாமல் அஞ்சி அஞ்சி வாழும் வாழ்வினராகவே வாழ்வர். இவ்வாழ்வர் குடிக்கு நலம் தரும் செயலையோ தொழிலையோ முழுமையாக ஈடு பட்டுச் செய்வாரா? தற்காப்புக்கே காலம் எல்லாம் செலவிடும் வாழ்வர், பிறர் காப்புக்கும் பிறர் நலத்துக்கும் பொதுக் குடும்ப வளர்ச்சிக்கும் பாடுபடுவரா?

ஒருவர் நாடித் துடிப்புப் போல் மற்றொருவர் நாடித் துடிப்பும் உள்ளதா? அதிலே விரைவுத் துடிப்பும் மெல்லத் துடிப்பும் இல்லையா?

பொறியால் இயங்கும் கடிகாரம் ஒன்றைப் போல் ஒன்று, காலம் காட்டவோ செய்கின்றது? அதில் விரைவோட்டமும் மெது வோட்டமும் இல்லையா?

ஒவ்வொருவருக்கும் தாம் பிறந்த குடிப்பிறப்பு, சூழ்நிலை, கல்விநிலை, தொழில் நிலை ஆகியவற்றால் ஏற்ற மாற்றங்கள் அமையத்தானே செய்யும்?

ஒரு தோட்டத்துக் காய்கறிச் செடிகளோ, ஒரு தோப்புக் கனி மரங்களோ, ஒரு விளை நிலத்துப் பயிர்களோ ஒத்த வளர்ச்சியும் ஒத்த பயனும் தரவோ செய்கின்றன?

இவற்றைக் கண்ணேரில் காண்பார், "என் எண்ணம் போலவே அவரும் எண்ண வேண்டும்" என்றும், "என் செயல் போலவே அவரும் செய்ய வேண்டும்" என்றும் எண்ணிக் கொண்டு செயல்படலாமா?

ஒரு தாய் வயிற்றின் இரட்டைப் பிறப்பிகளுள் கூட இயல் செயல் உணர்வு அறிவுகளில் வேறுபாடு இல்லையா?

முதிர் பேரறிவு இரட்டையராக விளங்கிய ஆர்க்காடு இராமசாமி, இலக்குமணசாமி என்பார் ஒரு துறைப்பற்றுமையிலோ இயங்கினர்.

உலகின் வியப்பு இரட்டையராகிய சயாமிய இரட்டையர் உடல் ஒட்டியே பிறந்தனர்; அவ்வுடல் ஒட்டை அகற்றின், உயிர்க்குக் கேடாம் என அப்படியே வளர்ந்தனர் மணமும் கொண்டனர். ஆயினும் அவர்கள் உணர்வுகளிலே எத்தனையோ மாற்றங்கள் உண்டென்பதை வரலாற்றுலகம் சுட்டுகின்றதே. இவற்றையெல்லாம் எண்ணுவார் குடிநலம் கருதிப் **பிறர் உணர்வை மதித்துப் போற்றுதல் வேண்டும். வேற்றுமையுள் ஒற்றுமை கண்டு ஒத்துப் போகக் கற்றுக் கொள்ள வேண்டும்.**

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" (504)

என்பதனை ஆய்வுக்கும் நடுவு நிலை முறைமைக்கும் நட்புக்கும் கொள்ளல் தகும். குடிநலம் காக்க வேண்டுவார் குணம்நாடி அதனை ஊக்கி அவ்வழியைப் பற்றிக் கொள்ளலும், குற்றத்தை நாடி அதனைக் களைந்து பரிவோடு அணைத்துக் கொண்டு குண வழியில் சிறக்கப் படிப்படியே வழி செய்தலும் வேண்டும். இவ் வகையில் சோர்வோ வெறுப்போ கொள்ளல் ஆகாது; பிறரிடத்துப் பார்க்க வேண்டிய மானத்தைக் கூடக் குடிநலம் கருதுவோர் தம் குடியளவில் கருதுதலும் ஆகாது.

குடும்பத்து உண்டாகும் குறையை, உழவடை நிலத்தில் உண்டாகும் முட்செடியை உழவன் முளையிலேயே கிள்ளி எறிவது போலக் கிள்ளி எறிந்து விட வேண்டும். இல்லாக்கால் மண் வெட்டி, கம்பி, கோடரி, வாள் எனப் பலப்பல கருவிகளைக் கொண்டு கை நோவப் பணி செய்து அகற்ற வேண்டிவரும். அகற்றினும் அதன் படர்ந்து சென்ற வேரை அகழ்ந்து சென்று அகற்றுதலும் வேண்டும். வெட்டாமல் விட்டு வைப்பின் அதன் நிழற்பரப்பும் வேர்ப்பரப்பும் கூடிய நிலப்பரப்பும் பயன் தராத தாய்க் கெடும். இதனை,

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"

என்பார் திருவள்ளுவர். முள் மரம் கொல்லல் என்பது தீய பண்புகளை அழித்தல். தீமையை அழித்தல் என்பது, தீயவரை அழித்தல் ஆகாமை அடிப்படை அறம்.

மடியும் மானமும்

குடிநலம் பேணுவார் மடி என்னும் சோம்பலுக்கு அடிமை ஆதல் ஆகாது என்பது

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் (601)

என்பதால் விளங்கும்.

"குடியென்று சொல்லப்படும் அணையாத ஒளி விளக்கு சோம்பல் என்று சொல்லப்படும் திரிக் கருக்கு உண்டாகிப் பரவுதலால் அழிந்து விடும்" என்கிறார்.

"அழிவு செய்யும் சோம்பலைத் தன்னிடத்துக் கொண்டு செயலற்றுக் கிடக்கும் அறிவிலி பிறந்த குடி, அவன் அழியும் முன்னரே அழிந்து விடும்" என்றும் (603)

"சோம்பல் ஒருவன் குடும்பத்தில் நிலை பெறத் தங்கினால், அது அவன் குடும்பத்தோடு பகைவர்க்கு அடிமைப்படுமாறு செய்து விடும்"! என்றும் (608)

"குடியை ஆளுந்தன்மையில் உண்டாகிய குற்றம் அக்குடியில் பிறந்த ஒருவன் சோம்பலின்றி உழைத்தலால் நீங்கும்" என்றும் (609) எச்சரிக்கையும் நம்பிக்கையும் உரைக்கிறார்.

குடும்ப ஆக்கம் கருதுவார் அடுத்த வேளை அடுத்த நாள் என்று கூடத் தள்ளிப் போடாமலும் சோம்பல் இல்லாமலும் மானம் கருதாமலும் கூட ஈடுபட்டு வீறும் வெற்றியும் காட்ட வேண்டும் என்பதை,

"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்" (1028)

என்கிறார்.

குடும்ப நலத்திற்குச் சோம்பல் எப்படி ஆகாக் குணமோ, அப்படியே குடும்பத்துள் பார்க்கும் மானமும் ஆகாக் குணமாகும்,

பெற்றோர் உடன்பிறந்தோர் துணை மக்கள் என்பாருள் ஓரொருகால் பெருமைக்குக் குறைவாம் சொற்களோ செயல்களோ

உண்டாகி விடக் கூடும். அவற்றை மானக் கேடாகக் கருதி எதிரிட்டு நிற்றலாலும், செயல்படலாலும் குடும்ப அழிவை உண்டாக்கலும், குடும்ப மானம் போக்கலும் கூடாதனவாம். குடும்ப மானம் காத்தற்காகத் தன் மானம் பேணாது கடமை புரிதலும் வேண்டும் என்பது வள்ளுவம் இதனைக் கருதின் குடும்பநலச் சிக்கல்கள் பலவும் இல்லையாய் ஒழியும். இன்னும்,

"குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந் துறும்"

என்னும் வள்ளுவ வாய்மை பெரும் ஊக்குதல் உடையதாம்.

தளர்ந்துள்ள- தாழ்ந்தள்ள- வீழ்ந்துள்ள- என் குடி உயரும் வகையில் யான் கடமை புரிவேன் என்னும் துணிவுடன் ஒருவன் கிளர்ந்தால் அவன் முயற்சியைக் கண்டு மகிழும் ஆன்றோரும் சான்றோரும் பண்பரும் அறிவரும் பயன் செல்வரும் நயன் உணர்ந்தாரும் கை கொடுத்து உதவுவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு வரிசையில் நிற்பராம்.

மடிதற்று முந்துறும் என்பது தொங்கக் கட்டிய உடையை (தூரை) மடித்துக் கட்டிக் கொண்டு ஓடி வந்து முன் நிற்பர் என்பதுடன், மடியென்னும் சோம்பல் அற்று முன் வந்து நிற்பர் என்பதுமாம். குடும்பம் மடியாமல் காக்க மடியின்றி முயல்வானுக்கு உதவ மேலோர் தாமும் மடியின்றி முந்து நின்று காக்க வருவர் என்னும் நயமும் நயனும் எண்ணத்தக்கன.

அமரகமும் தமரகமும்

ஒரு கூட்டுக் குடும்பத்தில் பலதலைக் கட்டுகள் இருப்பினும் குடும்பப் பொறுப்பை அனைவரும் தாங்குவார் அல்லர்; கட்டற்ற இயல்பில் காலம் தள்ளுவாரும் அல்லர்; உணவிலும் உறைவிலும் உழைப்பிலும் அவரவர் நிலைக்குத் தகத் தனிநலம் போற்றப் படினும், பொதுக் குடும்ப நலம் ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டே ஆதல் வேண்டும். அத்தலைமைக்குக் கட்டுப்பட்டு அவர் வழியில் நிற்றல்தான் குடியோம்புவார் கடமை? இல்லாக்கால் என்னாம்?

படைவீரர் பலர்க்கு ஒரு தலைமை இருத்தல் போன்றது குடும்பத் தலைமையாக ஒருவர் இருப்பது, நிலைக்குத் தகவும் நெருக்கடிக்குத் தகவும் படைத் தலைமை எடுக்கும் நடவடிக்கையை ஏற்றுக் கொண்டு

படைவீரர் செயலாற்றுதல் அவர்தம் கட்டாயக் கடமை ஆதல் போல் குடும்பத் தலைமைக்கும் குடும்பம் கட்டுப்படுதல் வேண்டும்; அத்தலைமையும் குடும்ப நலம் பேணலில் படைத்தலைமை போல் உறுதியுடனும் எதிர்கால நோக்குடனும் ஈடுபடுதல் வேண்டும். இத்தனை பேர் இருக்கவும் எனக்கென்ன வந்தது என எண்ணும் படைத்தலைமை ஒன்று உண்டாயின் படைவீரர் உறுதியும் வலிமையும் சூழ்ச்சித் திறனும் கூடப் பயன்படுமோ? அதனால்,

"ஆமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை" (1027)

என்னும் குடி செயல் வகைக் குறளொடு,

"நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்" (770)

என்னும் **படை மாட்சிக்** குறளும் ஒப்பிட்டுக் காணத்தக்கனவாம்.

முன்னது, போர்க்களத்தில் போர்தாங்கும் பொறுப்பு வலியவன்மேல் அமைவது போல் குடும்பக் களத்திலும் அப்பொறுப்பைத் தாங்குவார் மேலேயே பொறுப்பு அமையும் என்னும் பொருளும்,

பின்னது போரில் நிலைபெற நிற்கும் பழமையான வீரர் பலரையுடையதாக இருப்பினும், தகுதிவாய்ந்த தலைமக்கள் இல்லாத படை தகுதியில்லாத படையேயாம் என்னும் பொருளும் உடையவையாம்.

'தமரகம்' என்பது தம்மவர் வாழும் அகம் அல்லது வீடு என்னும் பொருளதாதல் அறிந்து கொள்க, வீழும் குடியை வாழும் குடியாய் அமைக்கப் போர்க்கால நடவடிக்கை எடுப்பார் போல எடுத்தல் வேண்டும் என்பது இவற்றின் பிழிவாம்.

தனிக் குடும்பம்

இனி வள்ளுவர் காணும் தனிக் குடும்பம் கணவன் மனைவி மக்கள் என்பாரைக் கொண்டது. அவர்களைப் பற்றியவை இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட் பேறு என்னும் மூன்றதிகார வைப்பாக உள்ளவை. அக்குடும்ப மூலவராம் தாய் தந்தையர்க்கு, நின்ற துணையாக இருக்கும் இல்வாழ்க்கை அது. சிக்கலுக்கு ஆட்பட வேண்டுதல் இல்லாச் சிறு குடும்பம் அது.

இல் வாழ்க்கையின் முதற் குறளே இந் நாளில் முதியர்க்குள்ள சிக்கல் தீர்வாக அமைந்துள்ளது.

முதியவர்களுக்கும் வளரும் இளையவர்க்கும் ஒட்டுற வில்லாத இடைவெளி பெருகிக் கொண்டு வருகின்றது.

பெற்றவர்கள் தாம் எவ்வளவோ செய்திருந்தும் அச்செய்ந் நன்றியை உணராமல் மக்கள் தம்மைப் புறக்கணிப்பதாகப் புழுங்குகின்றனர்.

தாம் எவ்வளவோ முயன்று முயன்று பணிசெய்தும் உதவியும் கூடப் பெரியவர்கள் ஒத்துப் போக முடியாத பிடிவாதக்காரராக இருந்து பெரும்பாடு படுத்துகின்றனர் என மக்கள் ஏங்கு கின்றனர்

"முதியவர் இல்லத்திலோ ஏதிலியர் இல்லத்திலோ தாம் சேர்ந்து விடுவதே தக்க தீர்" வென முடிவெடுக்கின்றனர் முதுவர்.

"எங்களை விட்டு எங்கள் பெற்றோர் வேறிடம் போய் விட்டனர் என்றால் எங்கள் மானம் மதிப்பு என்ன ஆகும்? ஊர் உலகம் எங்களை எப்படியெல்லாம் பேசும்? என்று தாங்கவும் முடியாமல் தடுக்கவும் முடியாமல் தவிக்கின்றனர் மக்கள்.

இயல்புடைய மூவர்

இவற்றுக்கெல்லாம் தீர்வு வழங்குவது போல் இல்வாழ்க்கை முதற் குறளை அமைத்துளார் வள்ளுவர், அது.

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை'

எனபது.

இப்பாடலில் உள்ள இயல்புடைய மூவர் என்பவர் தாய் தந்தை மனைவி என்பார், அவர்க்கு நிலைபெற்ற துணையாக இருக்க வேண்டியவன் இல்வாழ்வான் ஆகிய கணவன், பொறுப்புடன் இருந்து போற்றிக் காத்த தன் பெற்றோர்களையும், தன்னோடு உடனாகிக் குடும்பத் தலைவியாய் வாய்த்த துணையையும் போற்றிக் காத்தல் கடனாகக் கொண்டால் மேற்கண்ட சிக்கல் எழும்புதற்கு வாய்ப்பே இல்லையே!

"தம்பொருள் என்ப தம்மக்கள்" எனத் தம்மைப் போற்றிவர்கள் தம் பெற்றோர்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறு கையளாவிய உணவு" என உவப்புற்றவர் அப் பெற்றோர்.

'குழலினும் யாழினும் இனியது தம்மக்கள் மழலைச் சொல்' என மகிழ்ந்தவர் அப்பெற்றோர்.

மக்கள் கையும் மெய்யும் பட்டுத் தழுவலில் கழிபேருவகை யுற்றவரும் அப் பெற்றோர்.

சான்றோர் அவையில் முந்தியிருக்கத் தக்க கல்வியும் சால்பும் தந்த பெருங் கொடையரும் அப்பெற்றோர்.

தம்மைப் பற்றிய நற்சொல் ஒன்று சொல்லப்படுமானால் தம்மினும் மேலாக மகிழ்ந்த பெருந்தக்காரும் அப்பெற்றோர்.

அவர் இல்லாக் கால், அவர் அரவணைப்பு அமையாக்கால் தாம் பெற்றிருக்கும் இற்றை நிலைகளையெல்லாம் எய்தியிருக்க இயலுமா? காலத்தால் அவர்கள் செய்த உதவிகள் ஞாலத்தின் மாணப் பெரியனவே அல்லவோ!

தினைத்துணையாம் நன்றியையும், பனைத்துணையாக் கொள்ளுதல் நன்றியுணர்ந்தோர் கடனாக இருக்கவும், பெற்றோர் செய்த மலைத் துணை நன்றியை மறத்தல் மாண்பிறப்பு என்பதன் சான்றாகுமா?

இவற்றையெல்லாம் நினைந்து பெற்றோரைப் பேணும் வாழ்வு பெற்றோர் உள்ளம் தளிர்க்கவே செய்யும். வளரும் மக்களுக்கும் பேரச் செல்வங்களுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகவும் காவல் தெய்வங்களாகவுமே பெற்றோர் இருக்கவும் இது செய்யும். இற்றை நாள் முதியர் இளையர் இடைவெளிச் சிக்கல் தீர இவ்வள்ளுவமே வாய்த்த தீர்வாகும்.

துணையொப்பு

இனிக் கணவனுக்கு மனைவி துணை என்றும், மனைவி கணவனுக்கு அடங்கிச் செல்லவேண்டியவள் என்றும் ஒத்த உரிமை பெண்ணுக்கு ஆணுலகம் தரவில்லை என்றும் சொல்லும் பழிகளுக்

கெல்லாம் வள்ளுவம் எவ்வகையானும் இடந்தருவது இல்லை. அதன் பார்வை பால் வேறுபாடு கருதாத ஒப்புரிமை உடையதாம். பிறப்பு ஒக்கும் எனக் கண்ட ஒரு நூல், பால் வேறுபாடு சுட்டுகிறது எனல், பார்வைக் குறையால் எழுந்ததே. கல்வி, கேள்வி, அறிவுடைமை, ஊக்கமுடைமை, வினை செயல் வகை இன்னன வெல்லாம் மாந்தப் பொது வெனக் கண்ட வள்ளுவம் பாலொப்புக் கண்ட பான்மைய தென்பது வெளிப்படை.

வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத் தலைப்பில் உள்ள துணை, துணைவனுக்கும் துணைவிக்கும் பொதுச்சொல். அத்துணைநலம் பெண்ணைப் பற்றிக் கூறுதலால் துணை என்பது துணைவிக்கே உரியது எனக் கொண்டு விட்டனர். அவர் வாழ்க்கைத் துணை நலத்திற்கு முற்பட்டதாம் இல்வாழ்க்கையில் **இல்வாழ்வான் என்பான் துணை** என முதலிரு பாடல்களிலும் சொல்லப் பட்டிருப்பதை எண்ணிப் பாராதது என்ன?

பின்னே,

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணை நீங்கித்
தொல்கவின் வாடிய தோள் (1234)

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை (1222)

என்பவற்றில் அவளே அவனைத் துணை என்று கூறியதை எண்ணிப் பாராததும் என்ன?

துணையும் இணையும் பிணையும் ஒப்புப் பொருளனவே. துணையடி, இணையடி என்பவற்றையும் பிணைப்பு என்பதையும் எண்ணிப் பார்ப்பவர் இவற்றில் உயர்வு தாழ்வு கருதார். துணைநலம் பெரியாரைத் துணைக்கோடல் என்பவற்றில் வரும் துணைக்குத் தாழ்வும் உண்டோ?

தலைவர், துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர். ஆட்சியர், துணை ஆட்சியர், விதி, துணை விதி–என இந்நாள் வழங்கும் வழக்குச் சொற்களைக் கொண்டு அந்நாள் ஒப்புரிமைச் சொல்லை ஏற்றி இறக்கிக் காணல் ஆய்வியல் ஆகாதாம்.

தலைவன் தலைவி, துணைவன் துணைவி, ஒருவன் ஒருத்தி என்பனவெல்லாம் ஒப்புடைமைச் சொற்களே எனக் கொள்ளும்

தெளிவினர் கணவன் உயர்வென்றும் மனைவி தாழ்வென்றும் கொள்ளார். வேண்டுமானால் "பெண்ணே பெருமையுடைத்து" என்று கொள்ளுதற்கும், "ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" என்று தூண்டுதற்கும் வள்ளுவம் உந்துமே அல்லாமல் தாழ்த்த இடந்தராது.

வரைவின் மகளிரை உரைத்தாரே என்று கருதுவார்,
பிறனில் விழையாமையை வைத்ததை எண்ணாதது ஏன்?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறு இருபாற் பொதுமையை உரைத்த ஒருவர் உலகில் எவரேனும் உளரா? அதனைக் கண்டு வாய் திறப்பாராக.

குடும்ப வாழ்வில் ஒருவர்க்கு ஒருவர் துணையாக-ஒப்பாக உதவியாக இருக்கும் நிலை உண்டாயின் ஆடவர் பெண்டிர், அடக்கல் அடங்கல், உயர்வு தாழ்வு, ஆண்டான் அடிமை என்பன உண்டோ?

அவன் பணிகின்றான் அவளை; அவள் பணிகின்றாள் அவனை; அப்பணிவும் இருபாற் பொதுமையே!

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (121)

என்பது அவள் பணிமொழியள் ஆதல்,

"பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை" (1258)

என்பது அவன் பணிமொழியன் ஆதல்.

இருவருக்கும் ஒத்த காதல் "வீழும் இருவர்" (1108; 119. -3.) என்பதாலும், இருவருக்கும் ஒத்த கற்பு "நிறை", "திண்மை" என இருவர்க்கும் சொல்லும் சொற்களாலும் இனிது விளங்கும் (57, 864, 988, 1254)

களவிலே அரும்பிக் கற்பிலே மலர்ந்த வாழ்வு வள்ளுவ வாழ்வு, ஆதலால் அவனை அவளும், அவளை அவனும் புரிந்து கொண்டு வாழ இயல்பாக வாய்ப்பு ஏற்படுகின்றது. அதில் வழுவுண்டாயினும் அதற்குத்தம் பெற்றோர்ப் பொறுப்பாகார். தாமே

அதற்குப் பொறுப்பினர் என்னும் தெளிவு அவர்களுக்கு ஏற்பட்டுத் தாமே சிந்திக்கவும் சீர் செய்யவும் வாய்க்கும். சாதிச் இக்கல், சமயச் சிக்கல் என்பனவும் இங்கே தலைகாட்ட இட மில்லை. ஆதலால் அவர் வாழ்வுக்கு அவரே பொறுப்பு என்னும் உறுதி உண்டாகிச் சிந்தித்துச் செயலாற்ற வாய்க்கின்றது.

பெற்றோர் மக்கள் இடைவெளிச் சிக்கல்

இந்நாளில் பெற்றோர்க்கும் மக்களுக்கும் உள்ள இடைவெளி பெருகுதல் கண்கூடு. ஒட்டி உறவாடி விட்டு நீங்கா நிலைமையில் இருந்தோர்க்கு இடைவெளியும் பிரிவும் விழுவானேன். அதிலும் திருமணத்திற்குப்பின் மிகுதியும் உண்டாவானேன்?

காலமாறுதல் கருத்து மாறுதல் ஆகியவற்றைப் பெற்றோர். உணராராய்த் தம் காலத்தையே எண்ணிக் கொண்டும், தாம் கொண்ட கருத்தையே எண்ணிக் கொண்டும் கெடுபிடியாக இருப்பது வளரும் பருவத்தர்க்கு ஒத்துச் செல்வதில்லை. அதனால் இடைவெளிபட்டுப் பிளவும் பிரிவும் நேர்ந்து விடுகின்றன.

தாம் விரும்பும் துணையைத் தேர்ந்து கொள்ள உரிமை இல்லாமை, தாம் கருதியபடி தம் வாழ்வை அமைத்துக் கொள்ளும் உரிமையும் வாய்ப்பும் இல்லாமை, தம் பெற்றோரொடு தான் ஒத்துப் போனாலும் தன் துணை ஒத்துப் போகாமை, தன்னைத் தன் பெற்றோர் ஒத்துப் போகும் அளவு தன் துணையொடும் ஒத்துப் போகாமை என்பனவெல்லாம் இவ்விடைவெளி உண்டாகவும் வளரவும், கூடியிருக்க இயலாமல் பிரிந்து செல்லவும் செய்து விடுகின்றன. இந்நிலை வள்ளுவம் கருதிக் கூறுவது போல்,

“தம் பொருள் என்பதம் மக்கள்”

என எண்ணும் பெற்றோராய்,

மக்களை, “அவையத்து முந்தியிருக்கச்” செய்யும் பெற்றோராய்,

மக்களைச் “சான்றோர்” எனப் பிறர் புகழக்கேட்குமாறுள்ள பெற்றோராய்,

பழிக்கு அஞ்சிப் பகுத்துண்ணும்வழிகாட்டிப் பெற்றோராய் அமைந்து விடின்,

"இவர் பெற்றோர். இவரைப் பெற என்ன பேறு பெற்றனரோ" எனப் போற்றும் அறிவறிந்த மக்களால் அன்பும் அறனும் விளங்கும் இல்வாழ்க்கை அமைந்து, இழுக்குறாத வாழ்வாய்ச் சிறக்கும்.

குழந்தையர் சூழ்நிலைச் சிக்கல்

குழந்தையின் மழலை மொழியில் மகிழ்ந்த பெற்றோர் அவையத்து முந்தியிருக்கச் செய்யும் கடனை மேற்கொள்ள வேண்டுவதேன்? அதுவே அவனை அல்லது அவளைச் சான்றாண்மையுடையராகச் செய்யும் செயல் என்பதைக் கொண்டே வலியுறுத்தினார் வள்ளுவர்.

"மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து"

என்னும் அருமைக் குறளை எண்ணுவார் தம் மக்கள் வளர்ந்து வாழவேண்டும் சூழலை எண்ணிச் செயல்படுவார். அச்செயற்பாடு இல்லாமையும் தளர்வும் ஏனோ தானோ போக்கும், இற்றை இளையோர் உலகைக் கெடுத்து வரும் கொடுமைக்கு எல்லை இல்லையாய்ச் செய்கின்றன. கல்லா இளையரினும் கற்கும் இளையரையும் கற்ற இளையரையும் கெடுக்கும் சூழல் கேடு இவ்வளவு அவ்வளவா?

மனநலம் நன்கமைந்த சான்றோர்க்கும் அம்மனநலச் சான்றோர் கூட்டுறவும் தொடர்பும் துணையும் இன்றியமையாதன என்னும் வள்ளுவப் பார்வை எங்கே? சேராத இடந் தனிலே சேர விட்டு, கூடாத வழிகளிலே கூட விட்டு, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடவிட்டு இறுதியில் அம்மோ என்று என்ன ஆகும்? ஐயோ என்று என்ன ஆகும்?

பெருக்கெடுக்கும் வெள்ளத்திற்கு அணையைக் கட்டி, காலை ஆக்கி, வாய்க்காலை ஆக்கி, ஏரி குளங்கள் மடை கலிங்கல் (மதகு) என்பவை அமைத்து வளம் காணுவது உழவப் பண்பாடு: ஆனால், அது பெருக்கெடுக்கும் இளமை உள்ளத்திற்கு அணையும் காலும் வாய்க்காலும் பிறவும் அமைக்காது வாளா விட்டு விடுதல் பெருங்கேடு என்பதை உணர வேண்டும் அல்லவோ?

பருவம் அறிந்து உழுது பொடியாக்கி பாத்திகட்டி விதைத்து நட்டு நீர்ப்பாய்ச்சி களைவெட்டி காவல் காத்து நோய் நொடி நீக்கி விளைவு

காணும் விழுமியது உழவப் பயிர்க் காவல் பாங்கு; ஆனால், அது வாழும் உயிர்க்காவல் பாங்கைப் பற்றிக் கவலைப் படாமல் விட்ட குறை காலமெல்லாம் கவலைப்பட ஆக்கியமை அல்லவோ கண்கூடு!

"பயிர்பாராமல் கெட்டது; கடன் கேளாமல் கெட்டது" என்னும் பழமொழியைப் பயில வழங்கும் மண், வளப் பயிராம் இளையரைப் பாராமலும் கேளாமலும் விட்ட குறை என்ன ஆயிற்று?

ஒத்த பருவத்தைத் தேடி ஓட வைத்தது; பொருந்தா இயல்புடைய ஒத்த பருவத்தை ஒட்டித், திருந்தா இயல்புக்கு இரையானது. கொஞ்சிக் குலவிய குழந்தை விட்டுப் பிரியாமல் கட்டிக் கிடந்த குழந்தை சிறிதே வளர்ந்த நிலையில் பெற்றோரை விட்டு வெளியே ஓடுவானேன்?

குழந்தைக்குத் தக்க குழந்தையாக மாறி இருந்த பெற்றோர் இளையருக்குத் தக்க இளையராக மாறி இருக்கவில்லை. அவர்கள் பெரியராக-மதிப்புப் பெறவும் ஆணை இடவும் உரியவராக, வளர்ந்த நிலையில் இருந்து கொண்டு இளையரை நோக்கினர். இடைவெளி விழுந்தது. "என் பையன் என்முன் தலைநிமிர்ந்து பேசவும் மாட்டான்; வீட்டில் நானிருப்பது தெரிந்தால் ஊமையாகி விடுவான் அடக்க ஒடுக்க மென்றால் அப்படி அடக்க ஒடுக்கம்" எனப் பாராட்டிக் கொண்டோம், அவன் இக்கட்டுப்பாடான இக்கட்டுக்கு ஈடு செய்ய, வெளியாட்டம் போட நேர்ந்து விட்டது. இந்நேர்ச்சிக்கு வித்தானவர் பெற்றோர்களே !

"பிள்ளைகளே" என அக்கறை மிக்க பெற்றோர் வழக்காடவும் கூடும். பொறுப்பு பிள்ளைகளைச் சேர்ந்ததா? பெற்றோர்களைச் சேர்ந்ததா? எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்; எண்ணி அலமருவார் பெற்றோரா பிள்ளைகளா என்பதைத் தெரியவே புரியுமே!

பள்ளிக்கும் கல்லூரிக்கும் ஒழுங்காகச் செல்லாமை, சென்றாலும் முறையாகக் கல்லாமை, கற்றாலும் ஒழுக்கத்தில் நில்லாமை என்பன வெல்லாம் தக்கார் இனத்தொடு சேராமையின் விளைவேயாம்.

எத்தகைய பண்பாடுடைய குடிப்பிறப்புப் பேறுடைய கல்விச் சீருடைய குடும்பத்து இளையரும், பொற் பொடி, மயக்கு ஊசி, குடியாட்டு களியாட்டு, தீய பாலுறவு என்பனவற்றில் தலைப்பட்டும் நிலைப்பட்டும் மீளா அடிமையராய் இருக்க அடிப்படை தக்கார் இனத்தொடு சேராக் குறையின் பயனே யாம்.

தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில் (446)

என்கிறார் வள்ளுவர்,

தக்கார் இனத்தொடு வாழ்ந்தானா? அவனை எத்தகு கேடனும் கெடுத்து விட முடியாது. ஏன்? தக்கார் என்னும் பாதுகாப்பு அரணை அவன் பெற்றிருக்கிறான் அல்லனோ என்கிறார் வள்ளுவர். அதன் எதிரிடை என்ன?

தக்கார் இனத்தொடு வாழானுக்குக் கேடு செய்வார் எவரும் வேண்டுமோ? கேடு செய்வார் இன்றியே அவன் சேர்ந்த தகாத இனச் சார்பிலேயே கெட்டொழிவான் என்பதை நினைவூட்டுகிறார்.

நேரிடை வாய்ப்பாகவும் எதிரிடை எச்சரிக்கையாகவும் இவற்றைக் கூறுவது தானே பெரியாரைத் துணைக் கோடலும் சிற்றினம் சேராமையும்!

சூழ்நிலைச் சிக்கல் தீர்வு

அறனறிந்து மூத்த அறிவுடையவர் உறவைக் கொள்க. (44)

உற்ற துயர் நீக்கி உறாமல் காக்க வல்லாரைச் சேர்க. (442)

இடித்துக் கூறும் பெரியவர் துணை இல்லான் கெடுப்பார் இன்றியும் தானே கெட்டுப் போவான். (448).

நல்லவர் தொடர்பு இல்லாமை, பல்லபலர் பகையினும் கேடு (450).

தம்மில் பெரியவர் துணை வன்மையுள் வன்மையாம் (444) என்றெல்லாம் **பெரியாரைத் துணைக் கோடலில்** வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

மனநலம் நன்கு அமைந்தவர்க்கும் இனநலம் வேண்டும் (458)

இனநலம் எல்லாப் புகழும் தரும் (457)

மனம் தூய்மையும் செயல்தூய்மையும் இனந்தூய்மை தருதலால் உண்டாகும் (455)

இத்தகையன் அவன் என்பதை அவன் சேர்ந்த இனமே காட்டும் (453)

நிலத்தின் தன்மைபோல் நீரும் மாறும்; அதுபோல் இனத்தின் தன்மை போல் இயல்பும் ஆகும் (452).

நல்லினத்தினைப் பார்க்கிலும் நன்மையாவதும் இல்லை; தீய இனத்தினைப் பார்க்கிலும் அல்லல் ஆக்குவதும் இல்லை (460)

என்றெல்லாம் சிற்றினம் சேராமையில் வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

சிற்றினம் சேர்ந்ததால் கெட்டுப் போகும் சிறார் உண்டு என்றால், அப்படிச் சேராமலேயே கெடுவாரும் இலரா எனவே வினவத் தோன்றும்.

பெற்றோரே குடியராக இருந்தால், வீட்டுப்பாடமும் அதுவே ஆகி விடாமல் என்ன செய்யும்?

பெற்றோரே பொய்யரும் புரட்டரும் வஞ்சரும் சூதருமாக இருப்பின் அவையெல்லாம் மக்களுக்குக் கற்காமல் கற்கும் குடும்பப் பாடம் ஆகிவிடுவதற்கு ஐயமுண்டா?

வெள்ளையில் எந்த வண்ணமும் தெளிவாகப் பதியும்,

பிள்ளையின் உள்ளத்திலும் எச்செயலும் எக்காட்சியும் எச்சொல்லும் பதியும், ஆதலால் வீட்டிலேயும் நல்ல சூழல் அமையப் பெற்றோர் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இதனை வள்ளுவர் குறிக்கிறாரா? ஆம்! தெள்ளத் தெளிவாகக் குறிக்கிறார்.

“எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்”

என்பதில் குறிக்கிறார் (62).

பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெற முடியுமா? பிறக்கப் போகும் மகவின் பண்பை முன்னரே தீர்மானிப்பது எப்படி?

பழி பிறங்காப் பெற்றோராக இருந்து பண்புடைப் பெற்றோராக இருந்து அவர் வழியே பிறக்கும் குழந்தையும் அப்பழி பிறங்காமலும் பண்பு கெடாமலும் இருக்க வேண்டின் என்ன வேண்டும்? அப்பெற்றோரின் இயலும் செயலும் எடுத்துக் காட்டாய்க் கண்முன் நடைமுறையில் விளங்க வேண்டும். அப்படி அமைந்தால்தான் அத்தன்மைகள் தலைமுறை தலை முறையாகத் தவறாமல் விளங்கும். “தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்” என்னும்

கொடைவளம் ஈதேயாம். மேலும் குடிநலம் கருதும் இவ்வியல்பே குடிமையாம். குடிமை சார்ந்தே மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை என்பன வைக்கப்பட்டிருத்தல் எண்ணத் தக்கதாம்.

நடுவு நிலைமையும் நாணமும் குடிப்பிறந்தார்க்கே உண்டு. (951).

ஒழுக்கமும் வாய்மையும் போற்றுவாரும் அவரே (952).

முகமலர்ச்சி கொடை இனியவை கூறல் இகழாமை என்பவை குடிப்பிறப்புச் சிறப்பு (953),

என்ன கிடைப்பினும் இழிந்தவை செய்யாமையும் (954),

என்ன இழப்பினும் பண்பில் குன்றாமையும் (955),

வஞ்சங் கொண்டு தகுதியற்றவை செய்யாமையும் (956)

ஆகியவை நற்குடிப் பிறப்பின் நயன்பாடுகள்.

இச்சூழல், வளரும் பருவத்தர்க்கு வாய்த்து வருமாயின், அவர் ஏன் சிற்றினம் சேர்ந்து சிறுமைக்கு இடமாகின்றார்?

இவற்றை எண்ணிச் செயலாற்றின் இளையோர் சிக்கல் எளிதில் தீர்ந்து விடும் என்க.

எளிமையும் அழகும்

'துணிமணி' என்பதோர் இணைச் சொல், 'ஆடை அணிகலம்' என்னும் பொருளது இச் சொல்.

பட்டிலும் பலவகை அணிகளிலும் நம்மவர் கொண்டுள்ள பற்றுமையும் பகட்டும் எல்லை யற்றவை.

"தலையில் களிமண் இருந்தாலும், கழுத்தில் தங்கம் இருந்தால் போதும்" என்னும் போலிமையும் பொதுப்பொருளாகி விட்டது.

விலையுயர்ந்த பொருள்களை விரும்புவதன் கேடு உறுப்புக் குறையும், உயிரழிவும் ஆதல் அறிந்தும் அவற்றை விட்டொழிக்கும் வீறு, கற்றுச் சிறந்த மகளிர்க்கும் உண்டாகவில்லை!

ஆடை அணிகலப் பகட்டில் இருந்து அடையும் விடுதலையே உண்மை விடுதலை என்பதை மாதர் நலமன்றங்கள் வெட்ட வெளிச்சமாய்ச் சுட்டிக் காட்டி வலியுறுத்த வேண்டும்.

வள்ளுவப் பெருமகனார் அன்றே குறிப்பாகவும் வெளிப் படவும் இக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார். அதனை மாதர் உலகம் கண்டு கொள்ளவில்லை; மற்றையோரும் தெரிந்து கொள்ளவில்லை அவர்,

"பணிவுடைமையும் இனியவை கூறலும் அணிகலங்கள்"

என்றார் (95).

"மங்கல மனையறத்திற்கு மக்களே நன்கலம் (நல்லணிகலம்)"

என்றார் (60)

"காலந்தாழ்த்தல் மறத்தல் சோம்பல் நெட்டுறக்கம் என்பவை
கெட்டுப்போகின்றவர் அணியும் அணிகலங்கள்"

என்றார் (605)

எவரும் அணிகலம் அணியாத உறுப்பாம் கண்ணுக்கு ஓர் அணிகலம் அணிதல் வேண்டும்; அது கண்ணோட்டம் (அருள்) என்னும் அணிகலம் என்றார். (575)

தலைவியின் அணிகலங்களைக் காணும் தலைவன், பெண் மானின் அழகிய மெல்லிய நோக்கும், நாணமும் இயற்கை அணி கலங்களாகக் கொண்ட இவளுக்கு, மற்றும் அயலான செயற்கை அணிகலங்களை அணிந்து விட்டது எதற்காகவோ? எனக் கேட்கும் முறையால் வள்ளுவர் அணிகலப் பகட்டைச் சுட்டுவதுடன் அதன் வேண்டாமையையும் குறிப்பிடுகிறார். அது,

"பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து"

என்பது (1089),

இனி, இயற்கை இயல் செயல்களே அணிகலங்கள் என்பதை யும் குறிக்கத் தவறினார் அல்லர்,

அவன் பார்க்கிறான்; அவளும் அன்பால் நோக்கி மெல்ல நகைக்கிறாள்; அதனைக் கண்ட அவன் "அசையும் கொடி போலும் இம்மெல்லியலாளின் உள்ளத்தில் ஓர் அழகிய குறிப்புளது" என அறிகின்றான்.

"அசையியற்கு உண்டு ஆண்டோர் ஏளர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்" (1098)

"அழகிய மணியின் ஊடே விளாங்கித் தோன்றும் நூலைப் போல, என் துணைவியின் அழகுக்குள்ளே விளங்குவதாகிய குறிப் பொன்றுளது" என நினைக்கிறான்.

"மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு" (1273)

திரண்டு மலர உள்ள மொக்கினுள்ளே இருக்கும் நறுமணத்தைப்போல் என் துணைவியின் புன்முறுவலுக்குள்ளே மறைந்து கிடக்கும் நல்ல குறிப்பொன்று உண்டு என்று நினைக்கிறான்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு" (1274)

இவ்வாறு நினைத்த தலைவன், "கண்ணில் நிரம்பித் தோன்றும் பேரழகு அமைந்த மூங்கில் போன்ற அழகிய தோள்களை உடையவளுக்குள்ள பெண்மைக் குணம் பெரிதேயாம்" எனப் பாராட்டுகிறான்.

"கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது" (1272)

இவ்வாறு கண்டும் பாராட்டியும் களித்த தலைவன் இவள் பெண்மைச் சீர்மை பகட்டாம் ஆடை அணிகளால் இல்லை; இயல்பாக அமைந்த பெண்மைத் தன்மையே பெருமைத் தன்மையாய் உடையது என்கிறான்.

"பெண்ணினால் பெண்மை உடைத்து" (1280)

என்பது அது.

வேறோர் அணிகலம் வேண்டா இயற்கை அழகே பெண்மை என்றும், அவ்வியற்கைப் பெண்மைப் பண்பே பெருந்தக்க பெண்மைப் பிறப்புச் சான்றாக இலங்குவது என்றும் அறிந்து கொள்வார். கொள்ளை அணிகலத்தில் கொள்ளைப் பற்றுக் கொள்ளார். கேடுகளுக்கும் போட்டி பொறாமைகளுக்கும் வறுமை வன்கண்மைகளுக்கும் ஆட்படார்.

விருந்தோம்பல்

"விருந்தோம்பல் உயர்பண்பாடு என்றும், அதனைச் செய்வதற்காகவே இல்லற வாழ்வு உண்டு என்றும் செல்வம் இருப்பினும் விருந்தோம்பாதார் செல்வம் வறுமைப்பட்டதே என்றும் அதனைச் செய்யாதவர் மடவர் என்றும், விருந்தோம்புவான் வாழ்வு எவ்வகையாலும் கேடுறாது என்றும் வள்ளுவர் கூறுகிறாரே! எம் வறிய நிலையில்-எம் வாழ்வையே நடாத்த இடராம் நிலையில் - எவரை விருந்தோம்ப இயலும்" என மறுப்பாரும், "அந்நாள் பண்டமாற்றுக் காலம் கையிருப்புப் பொருளைக் காசாக்க இயலாது அதனால் விருந்தோம்பல் சரி, மேலும் இந் நாளில் எங்கெங்கும் தங்கல் விடுதிகளும் உணவு விடுதிகளும் உள. அவ்வாறாகவும் விருந்தோம்பல் வேண்டும் என்பது பொருளியல் அறியாப் போக்காகும்" என்பாரும் உளர்.

விருந்து என்பது தொடர்பு இலராய்ப் புதியராக வந்தவர்க்குச் செய்யும் உதவியாகும். அவர் துறவோரோ, ஊணிலாரோ, அறிந்த அறிவரோ அல்லர், அவர் அயலூர் வழிப்போக்கர், செல்வாரும் வருவாரும் ஆவரே அன்றித் தங்குவார் அல்லர். அவருள் நாம் விரும்பித்தேடினும் அகப்படாத ஆன்றோரும் சான் றோரும் கூட இருப்பர். அத்தகையர் குடும்பத்துக்கு வருதலால் செலவு இல்லை; வரவேயாம்; அவர்தம் மேதக்க அறிவும் பண்பும் அருள் நெறியும் வாழ்வுக் கொடையாய் வாய்ப்பதாகும். அதனாலேயே கணவன் மனைவியர் பிணக்கங் கொண்டிருந்த போதிலும் விருந்தோம்புதல் மேற்கொண்டு தம் பிணக்குத் தீர்த்து இணக்கங் கொண்டனர். அதனைக் கொண்டே வாழ்வியல் இலக்கணம் வகுத்த முந்தையோர்.

"விருந்துகண் டொளித்த ஊடல்"

என்றனர்.

அவ்விருந்தினரும் வருந்தி அழைத்தால் அன்றி வாராதார் ஆவர். போட்டால் போதும் என்ற அளவில் கொள்ளாமல், மாறிப் பார்க்கும் பார்வை யெனக் குறிப்பால் அறியினும் கைந் நனையாத பான்மையர் குடும்ப நிலை அறியாமல் உண்பதே குறியாக இருப்பாரும் அல்லர். ஆதலால் அவ்விருந்தாளி எந்த எளிய குடும்பத்துக்கும் சுமையாக இரார்.

இனி, விருந்தோம்பல் என்பது பல்சுவைய பல்வகைய உணவு களைப் படைப்பது அன்று. அவற்றைப் படைப்பதினும், முக மலர்ந்து வரவேற்றலும் இனியவை கூறலும் பெருவிருந்தாவன என்பதை அடுத்து வரும் இனியவை கூறலில் தெளிவாக்கி வழி காட்டவும் செய்கிறார் வள்ளுவர். அது,

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்" (92)

என்பது அதனை மேலும் வலியுறுத்தி, அதுவே அறமென்றும் கூறுகிறார். அது,

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்"

என்பது ஆதலால் இடுக்கண் அழியாமையில்,

"அற்றேம் என்று அல்லல் படுபவோ பெற்றேமென்று
ஒம்புதல் தேற்றா தவர்"

என்றார்.

"பொருள்தேடி வைத்துள்ளோம். இதனைப்போக விடாமல் காத்துக் கொள்வோம் என்பதைப் பற்றிக் கவலைப் படாதவர் அப்பொருள் இல்லோம் என்று அல்லல்படுவரோ?" என்பது இதன் பொருள்.

பத்துவகைக் கறியொடு பாலமுதொடு படைப்பதுதான் விருந்தென எவர் கூறினார்? பொங்கிப் பொரித்துக் கெட்டுப் போகுமாறு எவர் கூறினார்? இன்ன உணவு, இத்தனை வகை உணவு என வள்ளுவர் கூறினாரா? அளவறியாமல் ஆராருக்கோ ஆக்கிப்படைத்து ஆக்கம் கெட வள்ளுவம் கூறவில்லை என்பதை உணர்வார் விருந்தைச் சிக்கலெனக் கொள்ளார்; விருந்தின் பெயரால் அவரே சிக்கலை ஆக்கிக் கொண்டு சிதையின் எவரே அவிழ்த்து விடுவார் அவரை?

இனிப் பொருள் நிலையில் 'எங்களால் மேடேற முடிய வில்லை; தாக்குப் பிடிக்கவும் கூட முடிய வில்லை. கடன் உடன் வாங்கவும் வட்டிவாசி கட்டவுமே பாடாய்ப் படுகிறோம்' என்று தம் பொருளியல் சிக்கலைக் கூறுவார் உளர். தனிவாழ்வுச் சிக்க லாகக் கூறப்பட்டவற்றுள், உள்ள அளவை ஆராய்ந்து பாராமல் உதவும் உதவியைப் பற்றி எச்சரித்த

எச்சரிப்பை எண்ணிக் கொள்ளல் வேண்டும். மேலும் எண்ண வேண்டுவனவும் உண்டு.

வேளாண்மை என்பது உழவுத் தொழிலைக் குறிக்கும். அத்தொழிலே உலக வாழ்வின் அடிப்படைத் தொழில் ஆதலால் அதற்கு உதவி என்னும் பொருளும் உண்டாயிற்று. அவ் வேளாண்மைத் தொழிலுக்குக் கால்வாய் வாய்க்கால் கண்வாய் என்பன கட்டாயத் தேவையானவை.

குறித்த முச்சொற்களிலும் வாய் உண்டு. வாய் என்பதற்கு இடம் என்னும் பொதுப்பொருளும், உறுப்புச் சிறப்புப்பொருளும் உள்ளமை எவரும் அறிந்தது. போக்கு வரவுக்கு உதவுவது வாய். உணவு நீர் முதலிய போக்கு வரவுக்கு உதவுவது உறுப்பு வாய்; புகுதல் வருதலுக்கு வழியாக இருப்பது இல்வாய் என்னும் வாயில், அது நிலத்துப் பாய்ச்சலுக்கு உதவும் கண் வாய்க்கு நீர் வரும் வாய் கால்வாய். கண் வாயிலிருந்து வயலுக்கு நீர் செல்லும் வாய், வாய்க்கால்,

நீர் வெளியேறுவதற்கு மடையில் புலிக்கண், யானைக் கண், மான் கண் எனக் கண்ணின் வடிவில் துளைகள் அமைத்தலால் அதனைக் கண்வாய் என்றனர். அக் கண்வாய்க்குக் கால்வாய் வழியே நீர் வரவு ஓரிரு நாள்கள் வரினும், அது வாய்க்கால் வழியே நாலைந்து திங்கள் அளவு சென்று ஒரு பயிர் விளைவு முழுதுறக் காண உதவும். இவ்வுழவடை அமைப்பை எடுத்துக் காட்டி வரவு செலவுத் திட்டம் இருக்க வேண்டும் வகையைத் தெளிவிக்கிறார். திருவள்ளுவர்,

“ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை” (478)

என்பது அது.

வலியறிதலில் வரும் இக்குறளும் இன்னும் மூன்று குறள் களும் (477-80) பொருள் அளவு வலிமையை அறிந்து கடமை புரிதல் பற்றியதேயாகும். இதில் ஆகாறு என்பது வரவு: போகாறு என்பது செலவு.

வரவு சிறிது எனினும் அதனால் குறைவு இல்லை; செலவு மட்டும் வரவுக்கு மேல் ஆகாமல் இருத்தல் வேண்டும் என்பதைச் சுட்டுகிறார். வீட்டுக்கு விளக்காகிய துணையின் செயற்பாட்டைக் கூறும் இடத்திலும்

"தற்கொண்டான் வளத்தக்காள்" என்றதும், "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்றதும் இவண் எண்ணத் தக்கனவாம். ஒருவர் தேடும் வாழ்வு எனினும் இருவர் தேடும் வாழ்வு எனினும் பலர் தேடும் வாழ்வு எனினும் முந்தையர் வைத்த தேட்டு வாழ்வு எனினும் வரவில் செலவு மிகாமை வேண்டும் என்பது பொது விதியேயாம், இவ்வாகாறுக்குக் கால்வாயையும், போகாறுக்கு வாய்க்காலையும் எடுத்துக் காட்டாகக் கொண்டால் குடும்ப வேளாண்மை இனிதின் இயலும் என்பது வெளிப்படையாம்.

உள்ள பொருளை இழந்து போதலை 'உள்வீழ்தல்' என அருமையாக வழங்குவார் வள்ளுவர். கடனுக்கு ஆற்றாமல் தலைமறைவாகி ஓடிப் போவதும், உள்ளவற்றை முறை மன்ற ஒப்படை வழியே இத்தனை விழுக்காட்டு மேனி எனப் பகுத்து வழங்குவதும் சிலச் சிலர் வாழ்வில் நிகழ்வனவே. அதனை 'மஞ்சள் கடிதம்' பெறல் என்பர். 'திவாலா' ஆதல், 'ஐ. பி. தரல்' எனப் பிற சொற்களாலும் வழங்குவர். இதற்கு உள் வீழ்தல் என்னும் கலைச் சொல்லை வழங்கும் வள்ளுவர், "உள் வீழும் நிலையில் இருப்பினும் பழமையான பண்பட்ட குடியினர் தம் இயல்பில் குறைய மாட்டார்" என்கிறார். அவர் பழகிப் பழகிப் போன பண்பியல் ஈதென்றாரேயன்றி, அவர் உள்ளவை வீழ்ந்து பாழாதல் பண்பாடு என்று பகர்ந்தார் அல்லர் என்பதை எண்ணின் தன்னிறைவுக் குடும்பமே வள்ளுவர் எண்ணமாதல் புலப்படும்.

குடும்ப அரசு

நாட்டரசின் மூல வித்து வீட்டரசு. வீட்டரசுச் செம்மையே நாட்டரசுச் செம்மை! வீட்டரசு பாழ்படின் நாட்டரசும் பாழ்படல் உறுதி. அரசு பொதுச்சிக்கல் ஆகலின் அப்பகுதியில் காண்டல் முறை எனினும் இவண் சுட்டல் வேண்டத்தக்கதாம். முடியாட்சிக் கால நிலையிலும் குடியாட்சிக் கால நிலை வீட்டரசொடு நாட்டரசு மிக்க நெருக்கமுடையதாகி விடுதல் கண்கூடு குடும்பத்தவர் தெரிவுதானே ஆளுரிமை வாக்காகி நிற்கின்றது!

இந்நாள் குடியரசில் குறைகள் பல நிகழ்வானேன்? குடிகள் தக்க குடிகளாக இல்லாக்கால் குடியரசும் சீர் பெறாதாம்! தனிவாழ்வும் குடும்பவாழ்வும் செம்மையுறப் போற்றப்படும் நிலையிலேயே பொது வாழ்வும் சிறக்கும் என்பது சொல்ல வேண்டுவதில்லையே!

மக்கள் என்று வாளா கூறாமல் "அறிவறிந்த மக்கள்" என்றும் (61) "பழிபிறங்காப் பண்புடை மக்கள்" என்றும் (62) மக்கட் பேற்றின் முதலிரு பாடல்களிலேயே குறித்தார் வள்ளுவர்.

அறிவறிந்த மக்களாகவும் பழிவழிச் செல்லாப் பண்புடைய மக்களாகவும் இருந்துவிடின் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளும் தகுதி பெற்றோர் தகவிலாச் செயல் செய்வரா? அப்படி ஒரொரு கால் செய்யினும் மக்கள் இடித்துரைத்து முறை காட்டாது இருப்பரா? இடித்துரைத்தல் என்பதுதானே ஆள்வோர் முறையாக நடந்து கொள்ள வாய்த்த அழிவிலாப் பாதுகாப்பு. அதனைக் கொள்ளா ஆட்சி கெடுப்பார் இன்றியும் கெட்டுப்போம் என்று வருமுன் காக்க வகுத்துரைக்கிறாரே வள்ளுவர். ஆதலால் குடிநலம் காக்கவல்ல மக்களே அரசு நலம் காக்கும் மக்களாம் என அடிப்படை காட்டி அமைவோம்.

இந்நாளில் பெரு நோயாய்– தொற்று நோயாய் – புற்று நோயாய்– கேடு செய்யும் மாப்பிள்ளைக் கொடையாம் வரதட்சணைச் சிக்கல் தீர்க்க வள்ளுவம் கூறும் வகை என்ன என வினவத் தோன்றலாம்.

இச்சிக்கல் எவரிடமிருந்து அரும்பி முகிழ்த்து மலர்ந்துள்ளது என எண்ணின் உண்மை புலப்படும்!

தம்மை மேல் குடியினராகவும் மேட்டுக் குடியினராகவும் எவர் கொண்டிருந்தாரோ அவர் வித்திய வித்தின் விளைவு இது! இந்த அறுவடையைத் தந்நலப் பெருக்குடைய கற்றோரும் வணிகரும் பிறர் பிறரும் பற்றிக் கொண்டனர். பற்றிக் கொண்ட அளவில் நில்லாமல், பற்றி ளரிந்து பெண்ணினம் மடியவும் வெறிச் செயல் ஆற்றத் துணிந்து விட்டனர்! தாம் விலை மாடாகிவிட்டமை உணராமல் விலை தந்த கொடையாளியையே கொம்பால் குத்திக் குலைக்கும் வெறிமாடும் ஆகிவிட்டனர்! இதற்குப் பெற்றோள் பெற்றோன் பிறந்தோன் என வேற்றுமை இல்லாமல் பங்கு பற்றிக் கொண்டு முளர். பண்பிலாத் தனத் திற்குப் பண்பாட்டுச் சாயம் வேறு பூசிப் பாதுகாக்கின்றனர். அறிவறிந்தோர் எண்ணின் இது அயல்நெறியாளர் தந்த அழிவு என்பது வெளிப்படப் புலப்படும். அதனைப் பேயாய்க் கட்டியழும் பேதையர் இழிமையும் புலப்படும் (தொல். களவு 1)

பெண்டிர்க்குக் கையுறை வழங்குதலும், பரிசம் வழங்குதலும் மணம் புரிந்து கொள்ளலுமே தமிழர் நெறி. அதற்கு அடிப்படையாக அமைந்தது அவர்களின் தொன்னெறியாகிய காதல்வழிக் கற்பு நெறியேயாம். அந்நெறிவிளக்கமே இன்பத்துப் பாலாம், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் உரிப் பொருள் ஐந்திற்கும் முறையே ஐந்தைந்தாக இருபத்து ஐந்து அதிகாரங்களைக் கொண்டது இன்பத்துப்பால். அந்நெறி போற்றாமல் அயல் நெறிபோற்றிய அவலமே மாப்பிள்ளைக் கொடையாய்ப் பெண்ணினத்தைச் சிதைப்பதோடு ஆணினத்துக்கும் அழியாக் கறையாக உள்ளதாம்.

குடும்பத்தளிர்ப்புக்கு இன்றியமையாதவை அன்பும் அறனும், அவையே, குடும்பவாழ்வின் பண்பு அன்பு என்றும், பயன் அறன் என்றும் வள்ளுவரால் வகுக்கப்பட்டன. அவ்வன்பில் தளிர்த்தல் இருபாலுக்கும் உரியவை. ஆதலால் சிறைகாக்கும் காவல் இருவர்க்கும் ஆகாது; நிறைகாக்கும் காவலே நேரிய காவலாம்.

“சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை”

என்று மகளிர்க்குத்தானே சொல்லியுளார் வள்ளுவர் என வள்ளுவத்தை முழுதுற ஓதினார் வினவார்.

மகளிர்க்கு ஓதிய நிறை காவல் ஆடவர்க்கும் வேண்டும் என்பதைப் பலகால் வலியுறுத்துகிறார் வள்ளுவர். அஃதிருபாற் பொது என்பது 154, 917, 138, 1251, 1254 ஆகிய குறள்களால் வெளிப்படும்.

“ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத் தான் கொண்டொழுகின் உண்டு”.

என்னும் குறளோ ஆடவர் நிறையை வெளிப்படக் காட்டி விடும்.

இருபாற்கட்டு இல்லாமை இக்கட்டுகளுக்கு எல்லாம் மூலமாம். அதன் விளைவே, பிறர்மனை நயப்பும், வரைவின் மகண்மையுமாம். பிறர்மனை நயப்பு: ஆண்மைக்குற்றம், வரைவின் மகண்மை பெண்மைக்குற்றம். இவ்விரண்டும் உண்மை, வாழ்வுச் சிக்கல், இச்சிக்கல் தீர்வுக்குவழி ஒத்த உயிர்நேயம் உடைமையாம்.

விரும்புதல் வீழ்தல் எனப்படும். ஒருவர் விரும்பி ஒருவர் விரும்பாமை பிரிவுக்கும் பிணக்குக்கும் இடமாகிப் பிளவுக்கும்

வழியாக்கிவிடும். ஆனால் விரும்புவார்க்குத் தக்க விரும்புவார் இணையின் மழைபெய் என்றவுடன் பெய்யும் மழையொப்ப நிறைநலம் பயக்கும் இதுவே,

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"

என்பதால் (192)

விருப்பமிக்க துணைவிக்கு விருப்பமிக்க துணைவன் செய்யும் அன்பு, உழவர்க்கு வேண்டும் பொழுதில் பெய்யும் மழையைப் போன்றது என்கிறார். மேலும்,

"வீழும் இருவர்க்கு இனிதே" (1108)

"வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு" (1193)

என இருவரும் ஒத்து இணைந்த இனிய வாழ்வே பெருமிதவாழ்வு என்பார். இத்தகைய வாழ்வே "பெய்யெனப் பெய்யும் மழை", யெனவும் பேசுவார்.

இத்தகைய வாழ்வு வாயாமை,

"வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்"

என வருந்தியுரைப்பார்.

உயிர்தளிர்க்கச் செய்யும் உரிமை வாழ்வை உதறிச் செல்லும் நிலையே, கூடா ஒழுக்க மூலமாகவும், சிவப்பு விளக்கு நிரயமாக வாழ்வுச் சிக்கலாகி விடுகின்றன.

கூடுதல் சிறக்க வேண்டும் எனின் ஊடுதல் வேண்டும், ஏனெனில் ஊடுதல் காமத்திற்கு இன்பமாம். அவ்வூடற்கு ஏதேனும் குறை சொல்ல வேண்டும். அக்குறைக்கு இடமில்லா நிறைவனாக வள்ளுவக் காதல் தலைவன் உள்ளான். ஊடுதல் இல்லாமல் உவகையை உப்புச் சப்பு இல்லாமல் செய்துவிட விரும்பாத தலைவி, தலைவனுக்கு இல்லாத குறைகளைப் புனைந்தும் இட்டுக்கட்டியும் கூறி விடுகிறாள். இதனைக் கூறும் வள்ளுவம்

"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு"

"தவறில ராயினும் தாம் வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து"

என்னும் (1321, 1325)

இரண்டறக் கலக்கும் கலப்பே இல்லறச் சிக்கலைத் தீர்க்கும் மா மருந்து என்பதை "நிலத்தொடு நீரியைந் தன்னார்" என்பார் வள்ளுவர்; விண்ணுலக இன்பினும் இவ்வின்பமே உயரியது என்றும் கூறுவார் (1323; 1303) இதனையே,

"உடம்பொ டுயிரிடை என்ன மற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"

என உடலுயிர் உறவாகக் கூறுவார்.

"கருமணியிற் பாவாய் நீ போதாய் யாம் வீழும் திருநுதற் கில்லை இடம் (1123) எனத் தன் கண்ணின் பாவையாய்க் கருதும் தலைவனும்,

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து" (1127)

எனத் தன் கண்ணுள் உறையுநராகக் கருதும் தலைவியும் ஒன்றிய வாழ்வில் ஒன்றாதது உண்டா?

ஊடுதலும் அளவுக்கு நீடுதல் ஆகாது. அதற்கும் ஓர் அளவுண்டு ஊடிய வரை உணர்ந்து கூடுதல் இன்றியமையாத் திறம். அதற்கு மாறாதல்,

"ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று"

என்பதாய் முடியும் (1304). இவ்வூடலியல்பே இவ்வாறு போற்றப்படத் தக்கதெனின் பிறவிடங்களில் கொள்ளும் சினம், சீற்றம் வெகுளி, பொறாமை, வஞ்சம், நஞ்சம், போர், பிணக்கு என்பன துணையோரிடம் கூடுமோ? இவையெல்லாம் ஈருடல் ஓருயிர் இணைந்த வாழ்வில் இணையக் கூடாதவையாம். இவை இல்லாவாழ்வே,

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார் (1289)

என்னும் வெற்றி வாழ்வாகும்.

இல்வாழ்வுப் பயன் அறம் என்பதை எண்ணின், அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை என்பது விளக்கமாகும் (49); அவ்வில் வாழ்வே, மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இன்பம் வழங்கும் நன்மகப்பேற்றை அருள்கின்றது. அதுவே, துறந்தார், துவ்வாதார், இறந்தார், தென் புலத்தார் தெய்வம் என்பார்க்கெல்லாம் காப்பிடமாக இருந்து உய்விக்கின்றது பயன் கருதா அக்கொடைத் திறமே மண்ணுலகிலேயே விண்ணுலப் பேற்றை அருள்கின்றது.

இரட்டைக் கிளவி போல் பிரியா வாழ்வினர் என்று இணையிலா உவமை சொல்லிய பாவேந்தர் படைத்த குடும்ப விளக்கின் முகப்புத் தொடர்,

"குறளோவியம் குடும்ப விளக்கு"

என்பதை உணரின் சிக்கலிருள் அகன்றோடும்.

3. பொதுவாழ்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

பொது என்பது தனிவாழ்வும், குடும்ப வாழ்வும் கடந்து விரிவுற்ற குமுகாய-நாட்டின- உலகின-உயிரின முழுதுறு வாழ்வாகும்.

"பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்"
"ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்"

எனத் தனிப்பார்வை கடந்ததாக வள்ளுவத்தில் பொது இடம் பெறும். -

இந்நாளில் வழங்கும் ஊர், நகர், நாடு, கட்சி, சாதி, சமயம் ஆகிய இன்னவெல்லாம் அடக்கியது இப்பொதுவாகும்.

பொதுக் கூட்டம், பொது நன்மை, பொதுமை என்பனவற்றில் இடம் பெறும் பொதுமை விரிவினது இது. ஊர் மன்றம் பொது என்றும்,பொதியில் என்றும் வழங்கிய வழக்கு அறியத் தக்கது.

கல்வி

எல்லார்க்கும் கட்டாயத் தேவையானது கல்வி. இக்கல்வி 'பொதுக் கல்வி' என்றே வழங்கப்படும்.

எழுத்தறிவின் இன்றியமையாமையே, இந்நாளில் கிளர்ந்துள்ள எழுத்தறிவு இயக்கமாகும். நாகரிக மிக்க காலமாகச் சொல்லப்படும் இக்காலத்திலும், கல்வியறிவில்லார் மிகப் பலர்; கற்றாருள்ளும் கையெழுத்துப் போடும் அளவில் அமைந்தாரும் உளர்; மக்களாட்சி இங்குத் தோன்றிய போது, தேர்தல் விண்ணப்பத்தில் ஒப்பமிடுவதற்காகவே கையெழுத்துப் போட மட்டும் அறிந்தாரும் உண்டு எனின், பிறர் கல்வி பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. கல்வி என்பது ஒரு சில மேட்டுக் குடியினர்க்கே உண்டு என்று இடைக்காலத்தில் ஏற்பட்ட தன்னலக் கொள்கையே அதன் மூலம் ஆகும்.

கலைமகள் வழிபாடு செய்து கொண்டு, கல்வியைக் கெடுத்த நாடு இது எனின், நாணத் தக்கதாம். சங்க இலக்கியத்தை மேலோட்டமாகப் பார்ப்பவருக்கும் எத்தொழிலரும் எந்நிலையரும் பால்வேறுபாடு இல்லாமல் கற்றிருந்தனர் என்பது நன்கு விளங்கும், அக்கால நிலையில்தான், எண்ணும் எழுத்துமாகிய இரண்டும் கண்கள் என்னும் கொள்கை உறுதியாக இருந்தது.

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

“கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்”

என்னும் குறள் மணிகளைக் காண்க.

அக்கல்வி பதவிக் கல்வி அன்று; வேலைக் கல்வி அன்று; அக்கல்வி மாசறு கல்வி; நிற்கக் கற்ற கல்வி; ஊரெல்லாம் உலகெல்லாம் உறவாகக்கொள்ளச் செய்யும் பண்பாட்டுக் கல்வி; அக்கல்வியும் குறித்த காலத்தளவில் கற்றொழியும் காலக் கல்வி அன்று; சாமளவும் கற்கும் சாவாக் கல்வி; கல்வி வெளியே இருந்து புகுத்தப்படுவது அன்று உள்ளிருக்கும் சுரப்பை வெளிக் கொண்டு வருவது இதுவே,

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”

என்பது,

உரையாடுதல் உறவாடுதல் ஒழுகுதல் என்பன கொண்டே, ‘இவர் கற்றவர்’ ‘இவர் கல்லார்’ என்பதற்கு எடுத்துக் காட்டாக இலங்கிய

கல்வி அது. தாம் அடையும் இன்பத்தை உலகமும் அடைய வேண்டும் என்னும் விருப்பத்தால் ஒவ்வொருவரும் பிறர்க்குக் கற்பித்தலை மேற்கொண்ட கல்வி அது. கற்றவன் எவனோ அவனே கற்பிப்பவனும் ஆகலானும், கற்றுக் கொண்டே கற்பிப்பவனும் ஆகலானும், மாணவன் என்னும் சொல்லாட்சியோ 'ஆசிரியன்' என்னும் சொல்லாட்சியோ குறளில் இல்லையாம்.

கல்விப் பயனை உணர்ந்தமையால், அக்கல்வியை ஒருமுகப் பட்டுக் கற்ற அருமை ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எனப்பட்டது. ஒருமுகப்பட்டுக் கற்கும் கல்வியே அக்கல்வி அதனையும் நீர் வேட்கையன் பருகு நீர்க்கு அவாவுவது போலவும், பசி மிக்கோன் உணவுக்கு அவாவுவது போலவும் ஏக்கமுற்றும் செருக்கு அற்றும் கற்ற சிறப்புக் கொண்டது.

செல்வம் இருக்கும் போது கல்வி எதற்கு என்னும் எண்ணம் இல்லாராய்க் கற்றனர் என்பது,

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்பதால் புலப்படும் மேற்குடிப் பிறப்பினும் கல்லாதான் கீழ்ப் குடிப்பிறப்பனே என்றும், கல்லார் விலங்கு என்றும் குறிக்கப் படுதல் கொண்டே ஆறறிவுப் பிறப்பியின் அடையாளம் கல்வியே என்பது விளக்கமாகும்.

கல்லான் விளைநில மல்லன் களர்நிலம்,
கல்லான் அழகு, உயிரிலாப் பொய்ம்மை அழகு.
கல்லான் செல்வம், பொல்லாக் கேடு தருவது.

என்றெல்லாம் வள்ளுவக் கல்லாமை சுட்டுதல், எத்தகு தெளிவுடையது.

அப்படியே, அடிப்படைக் கல்வியைப் பெற இயலாதாரும் அக்குறையை நீக்கிக் கொள்ளுதற்குக் கற்றோர் கூறும் நல்லுரையைக் கேட்டுப் பயன் கொள்ளல் வேண்டும் என்பாராய்க் 'கேள்வி' என்பதோர் அதிகாரம் வகுத்தமை பாராட்டுக் குரியதாம்.

"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை"

என்னும் குறளைக் காண்க. 'கல்வி' ஆற்றுப் பெருக்கு அன்னது என்றால் 'கேள்வி' ஊற்றுச் சுரப்பு அன்னது என்று அறிவுறுத்தும் சிறப்பினதாம்.

செவிக்கு உணவாம் கேள்விக்கு வாய்ப்பில்லாத போதுதான், வயிற்றுக்கு உணவைக் கருதுதல் வேண்டும் என்னும் வள்ளுவர், பெருந்தீனியர் எப்படி எங்கெங்கெல்லாம் எவ்வெவ்வுணவு சுவையாகக் கிட்டுமெனத் தேடித் திரிவரோ, அது போல் கேள்வித் திறங்களைப் பல்லபல இடங்களிலும் தேடிக் கொள்ளச் செவிச் செல்வர் அலைவர் என்றும் கூறுகிறார். இதனைக் குறிக்கும் குறளாகிய,

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

என்பதற்கு வேறு பொருள் கண்டு மயக்கி விட்டனர்.

நற்செய்தி கேட்பவரே பணிவினர் என்றும், அவரே கூர்ஞ் செவியர் என்றும், அவரே வாழத் தக்கார் என்றும் கூறும் வள்ளுவர்,

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

என்கிறார்.

வள்ளுவர் காட்டும் அறிவுடைமை நனி சிறப்புடைய தாகும். "மெய்ப் பொருள் காண்பதே அறிவு" என்று கூறும் அழுத்தம் எத்தனை அறிஞர் பெருமக்களுக்கு மூலவைப்பு. புத்தரும், சாக்கிரடீசரும், இங்கர்சாலரும், பெரியாரும் முழங்கியவை தாமே,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதுமாம்.

அறிவுடையார் எல்லாம் உடையார் என்றும், அறிவுடையார் ஆவதறிவார் என்றும், எதிரதாக் காக்கும் அறிவுடையார்க்கு அதிர வருவதோர் நோய் இல்லை என்றும், அறிவு அற்றம் காக்கும் கருவி

என்றும், சென்ற இடத்தால் செல்ல விடாது தீமையில் இருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவதே அறிவு என்றும் அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை இன்மையா வையாது உலகு என்றும், அறிவினால் ஆகுவதுண் டோ பிறிதின்நோய் தந்நோய்போல் போற்றாக் கடை என்றும் கூறும் அறிவிலக்கணம் இவ்வறிவியல் உலகமும் தலைமேல் கொள்ளத் தக்கவை அல்லவோ?

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதி காரத் தொடர்களையும் வள்ளுவம் எங்கே வைத்துளது?

பொருட்பாலைத் தொடங்கி இறைமாட்சியை இசைத்த இசைப்பினைத் தொடர்ந்தே வைக்கப்பட்ட வைப்புப் பொருள்கள் தாமே இவை!

இறைமாட்சிக்கு இன்றியமையாதது கல்வி அறிவு என்பது தானே இவற்றின் வைப்பு முறை விளக்கம். கல்வி அறிவில்லா வேந்து எப்படி அமையும்?

“கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனில் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுககில் லானே” (238)

“கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே” (317)

என்னும் திருமூலங்களைக் காணின் தெளிவாம்.

நாட்டில் வள்ளுவர் வகுத்த கல்வி, வாய்க்கவில்லை, “அடிமையாய் இருக்க வேண்டும்” என்றே அமைத்த கல்வி, விடுதலை நாட்டிலும் விலகாமல் நிலைபெற்றது. வாழும் கல்வியாக இல்லாமல் அழிவுக் கல்வியாகவும் நிலைபெறத் தங்கிவிட்டது. இதன் விளைவென்ன?

பயன்பாடு மிக்க விளை நலப் பயிராம் மாணவர்கள் களைச்செடியும், முட்புதரும், நச்சுமரமும் ஆகிப் போலித் தலை

முறையாயும், மதிமயக்கத் தலை முறையாயும், முடம் பட்டும் கிடம் பட்டும் போன தலைமுறையாயும் வளர்கின்றனர். இச்சிக்கலைத் தீர்க்க உடனடியாக வள்ளுவ வழிக் கல்வி கட்டாயம் வேண்டும். இதோ ஓர் ஒலியைக் கேளுங்கள்: 14-3-1948 இல் மயிலாப்பூரில் திருவள்ளுவர் கழகச் சார்பில் ஒலித்த ஒலி அது ஒலித்தவர் தந்தை பெரியார் :

"100 ரூபாய்க்கும் 200 ரூபாய்க்கும் டெக்சு புத்தகங்கள் வாங்கிப் படித்து மடையர்கள் ஆவதை விட 3 அணாவுக்குத் திருக்குறள் வாங்கிப் படித்து அறிவாளியாவது மேல் என்று தான் கூறுகிறேன்.

திருக்குறள் ஒன்றே போதும் உனக்கு அறிவு உண்டாக்க: ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுக்க ; உலக ஞானம் ஏற்பட ; அப்படிப் பட்ட குறளைத்தான் நாம் இது வரை அலட்சியப் படுத்தி வந்திருக்கிறோம். ஒரு தாசில்தார், ஒரு மாஜிஸ்ட்ரேட், ஒரு நீதிபதி, ஒரு சப்இன்ஸ்பெக்டர். இவர்களுக்குக் கூடத் திருக்குறள் ஒன்றேபோதும் தமது வேலையைச் சரியாகச் செய்ய, அவர்களை உத்தியோகத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பரீட்சை வைக்கும்போது கூடத் திருக்குறளிலிருந்து தான் கேள்வி கேட்கப் பட வேண்டும். திருக்குறளை நன்கு உணர்ந்திருந்தால் போதும் என்று அவர்களுக்கு உத்தியோகம் வழங்க வேண்டும்.

திருக்குறளும் பெரியாரும் 33-34

அரசியலுக்கும் ஆட்சிக்கும் திருக்குறள் கல்வி எவ்வளவு இன்றியமையாதது என்பதை இதனினும் மேலாக எப்படி விளக்க முடியும்.

ஆட்சி

ஆட்சி என்பது இறைமை; அதனைச் செய்பவன் 'இறை' எனப்பட்டான். அவன் நடுவு நிலையாளனாக அமைந்து குடி நலங்காக்கும் கடமையாளன் ஆதலால், அவனே இறையாகவும் கொள்ளப்பட்டான்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

என்பது வள்ளுவம்; இதனையே,

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய் வஃதே முறை"

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை,
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்றும் கூறுகின்றது. மேலும்,

"தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு"

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"

என்று இடித்தும் கூறுகின்றது.

காட்சிக்கு எளிமை, கடுஞ் சொல் இன்மை, செவிகைப்பச் சொற் பொறுத்தல், வெருவந்த செய்யாமை என்பவை எல்லாம் ஆட்சியாளனுக்கு வேண்டும் என வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

"கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்"

என்று கூறி, அவ்வாட்சியாளனே கொலையிற் கொடியன் எனின்,

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற் கொண்டல்லவை செய்தொழுகும் வேந்து எனப் பழிக்கிறார்."

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

என்னும் உழவுரிமையாளன் போல,

"நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

என்று கூறுகிறார். இவ்வாள்வோன் இலக்கணம் அனைத்தும் மக்களாட்சியில் முதல்வர்களுக்கும், தலைமையமைச்சர்க்கும் உரியனவே அல்லவோ? இவ் ஒவ்வொரு குறளையும் முன்வைத்து ஒவ்வொரு நாள் நாட்டுச் செய்தியையும் ஒப்பிட்டால் முதல்வர்கள் நிலை என்ன? தலைமை அமைச்சர் நிலையென்ன?

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்"

என்ற நிலைமை மாறிப், பழுதெண்ணும் மந்திரியராகவே சூழப் பெற்ற அரசுக்கு நாடே பகையாகி விடுவதல்லது என் செய்யும்?

"அல்லல்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்று மெல்லியர் கண்ணீர் வடிக்கவும். அதனால் அரசினை மாற்றியமைக்க இயலாச் சூழல் உண்டாகுமானால்,

"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்"

என்னும் வன்கண்மை நாட்டில் உருக்கொள்ளல் தீரா நிலையாய் ஆகிவிடும் அல்லவோ?

இற்றை நாட்டின் வன்முறைப் போக்குகளை யெல்லாம் தூண்டி விட்டுத் துலக்கிக் கொண்டிருப்பவர் பெரிதும் ஆட்சிக் கட்டிலரும் அவர் அரவணைப்பும் பாதுகாப்பும் உடையவருமே யாம் என்பதை உணர்வோர் இச்சிக்கலைத் தீர்க்க வள்ளுவத்தை மேற்கொண்டால் அன்றித் தீர்வு இல்லையாம்.

நாடு

நாட்டின் இலக்கணம் கூறவரும் வள்ளுவர்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்றார். அதே நாடு,

"பொறை யொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு"

என்றும் கூறினார்.

தன்னிலையில் சிறத்தலும் தாழ்வுற்று வருவாரைத் தாங்கலும் ஆகிய இறைமை மல்குவதே நாடு எனின், நாம் பட்டுவரும் உலகக் கடன்களை எண்ணிப் பார்க்கவே வள்ளுவர் வகுத்த நாட்டின் இலக்கணத்தொடு சிறிதும் ஒட்டாமல் செல்லுதல் விளக்கமாம். அதன் அடிப்படை என்ன?

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்பதை யுணர்ந்து திட்டமிட்டுக் கொள்ளாமையும்,

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்னும் ஈரறங்களையும் போற்றிக் கடைப்பிடியாகக் கொள்ளாமையுமேயாம்.

இன்றியமையாப் பொருள்களை ஏற்றுமதியாக்கிக் கெடுத்தலும் தேவையற்றதும் போலிக்கும் புன்மைக்கும் மயக்குக்கும் இடமாவதாம் பொருள்களை இறக்குமதியாக்கிக் கெடுத்தலும் ஆகிய இவற்றை விட்டாலே நாடு நாடாமே.

வறுமை

இல்லாமையை இல்லாமையாய்ச் செய்தல் வேண்டும் என எண்ணி எண்ணி இரங்கித் திட்டமிட்ட உள்ளம், வள்ளுவர் உள்ளம். இரவு உள்ள உள்ளம் உருகும் என்று உருகியது அவர் உள்ளம். அவ்விரவினை முற்றாய் ஒழிக்கத் திட்டமிடாத அரசை ஒழிந்து போகுமாறு வெம்பி உரைத்ததும் அந்த உள்ளம். அவ்விரப்பை ஒழிப்பதற்காக இல்லறத்தாரும் தம்பங்கைச் செலுத்துதல் வேண்டும் என்னும் கருத்தால், துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும், சுற்றத்தார்க்கும் உதவுதலை வலியுறுத்தியது அவ்வள்ளிய உள்ளம்.

துவ்வாதவர் என்பார், துய்ப்புக்கு வழிவகை அற்று ஒடுங்கிப் போய் இரத்தற்காக வெளிப்படாதவர். இறந்தார் என்பார், அத்துய்ப்புக்கு வழிவகை அற்ற நிலையில் வீட்டை விட்டு வெளியேறிவந்தவர். சுற்றத்தார் என்பார், உரிமைச் சுற்றமும், உறவுச் சுற்றமும், தொழிற் சுற்றமும், ஆகிய பலருமாம். இவர்களைப் பேணல் 'சுற்றந் தழாஅல்' என்றோர் அதிகாரப் பொருளாக அமைகின்றது.

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்.
பெற்றத்தாற் பெற்ற பயன்"

என்பது அதில் ஒன்று.

இனி, ஈகை என்பதோர் அதிகாரம்,

"வறியார்க் கொன் றிவதே ஈகை"

எனப் பொருளின்மையே, இன்மையாக் கொண்டு தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது அது.

'காணார் கேளார் கால்முட மாயோர்' முதலோர்க்கு உதவுதல் தவிர்த்து, வறுமையரே உதவுவதற்கு உரியர் என்பது அவர் கொள்கை.

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

என்பதே வள்ளுவம் ஆகலின், பொறியின்மை உதவி பெறுதற் குரியது ஆகாது என்பது தெளிவாகும்,

மேலும் பசியாற்றும் கடப்பாட்டிலும் அப்பசியை மாற்றும் கடப்பாடே நலமிக்கது என்பதை,

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

என வலியுறுத்துகிறார். உணவு உடை உறையுள் என உதவி புரிதலினும் அவற்றைத் தாமே தேடிக்கொள்வதற்காம் வழிவகைகளைச் செய்வதே நிலைத்தக்க தீர்வாம் எனத்தொழிலீகையைத் தோற்றுவிக்கிறார் வள்ளுவர். அதனாலேயே,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்"

என உழவிலே அவர்தம் பெருமித வாழ்வைப் பகர்கிறார்.

அற்றைப் போக்கிகளை நிறைவு செய்தாலே ஆட்சித் திறமும் வாக்குக் கொள்ளைப் பேற்றுக்கு வாய்ப்புமாம் என்று மானக்கேட்டை வாழ்வாக்கி மதிப்புறும் ஆட்சியர் சூழ்ச்சியை வள்ளுவப் பரப்பாளர்கள் பரப்பிப் பரப்பியே அகற்றுதல் வேண்டும். ஏனெனில், ஏந்தி வாழ்தல் இழிவன்று: எம்முரிமை ஒன்றும்; ஏந்துவார்க்கு ஈந்தாலே போதும் எம் ஆட்சி தட்டின்றி நடக்கும் – என்றும் ஆளப்படுவோரும் ஆள்வோரும் உறுதிப் பட்டு விட்ட நிலையில் இது தீராக் கடமையாகும்.

ஒப்புரவு

இனி ஒப்புரவு என்பதோ, உயர்ந்தாரும் ஒத்தாரும் தாழ்ந்தாரும் ஒரு நிலையராய் வாழ்தலைக் குறித்தது.

மழை எப்படிப் பொதுப் பொருளோ அப்படிச் செல்வமும் பொதுப் பொருளாதல் வேண்டும் என்ற தொடக்க முடையது ஒப்புரவு.

ஊருணி நீர் எப்படி ஊரவர்க்கெல்லாம் பொதுமைப் பட்டதோ அப்படிப் பொதுமைப் பட்டது பொருட் செல்வம் என்றும்,

ஊர் நடுவே பழுத்த பழமரப் பயன்பாடு எப்படி ஊரவர்க் கெல்லாம் பொதுவோ அப்படிப் பொதுவினது செல்வம் என்றும்,

மருந்துமரம் எப்படி நோயர்க்கெல்லாம் இன்றியமையாப் பொதுத் தேவையதோ அப்படிப் பொதுத் தேவையது பொருள் என்றும்,

ஊரறிந்த உவமைகளால் விளக்குவது ஒப்புரவு.

“ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்”

என்னும் குறள், ஒப்புரவின் மேல் வள்ளுவர்க்கிருந்த ஒப்பிலாப் பற்றுமையை வெளிப்படுத்தி விடும்,

ஒப்புரவு ஆக்குவது எப்படி?

உழவுத் தொழிலில் செய்யப்படும் ஒப்புரவுப் பணியை அறியின் அதன் செய்வகையும் பயனும் விளக்கமாகும்.

மேடும்பள்ளமும் ஆகிய நிலத்தில் அப்படியே பயிரிட்டால் என்ன ஆகும்? மேட்டுக்கு நீர் ஏறாமல் பயிர் காய்ந்து கெடும்; படும்.

பள்ளத்தில் நீர் கிடையாய்க் கிடந்து அழுகும்; அழியும்.

அம்மேடு பள்ளம் ஒரு சீராய்ச் சமன் படுத்தப்படின் நிலப்பரப்பெல்லாம் விளைநிலமாய்ச்சிறக்கும். இவ்வொப்புரவே செல்வக்குடி, வறுமைக்குடி என்பவற்றை அகற்றி ஒத்தகுடி என்று ஆக்கும்.

மண்ணை ஒருமைப் படுத்தல் முயற்சியால் கூடும். உணர்வும் தன்னலமும் அமைந்த உயிர்ப் பிறப்பிகளை ஒரு நிலைப்படுத்தல் எளிதோ–இயல்வதோ–என உறுதிப்பாட்டாளர் ஐயுறார்.

எந்த ஒரு புதுமையையும் உலகம் உடனே ஏற்றுக் கொண்டதா? கோயில் நுழைவைப் பொதுவாக்க உலகம் உடனே ஏற்றதா? பலியை நிறுத்த–உடன்கட்டை ஏற்றத்தைத்தடுக்க உலகம் ஒருப்பட்டதா? இது கால் இயல்பாகி விடவில்லையா?

உன் குடிப்பிறப்பு என்ன என்று வினவிக் கல்வி நிலையங்களின் உண்டுறை விடுதிகளிலும் பிரித்து வைத்தமை இல்லையா?

இவையெல்லாம் இன்று நாணற்குரிய செயல்களாகத் தோன்றவில்லையா?

நாம் இயலுமா என்று வினாவும் நடைத்திட்டத்தைக் காரல்மார்க்கசு கொள்கை வழி வந்த இலெனினார் உருசிய நாட்டில் உறுதிப்படுத்தி விடவில்லையா? அக் கொள்கையை ஏற்றுக் கொண்ட சீனம் முதலிய நாடுகள் உலகில் இல்லையா?

உருசிய நாடு அக்கொள்கையில் இருந்து வழுவிற்றே எனின், அது நடைப்படுத்துவார் தோல்வியே யன்றிக் கொள்கைத் தோல்வி ஆகாதாம். அவ்வாறு கணிப்பின், சமயங்கண்டோர் உரைகள் எல்லாம் சால்புடன் போற்றப்பட்டுக் கொண்டா உள்ளன? கூட்டமும் குரலும் இருந்தால் போதும், கொள்கை பற்றிக் கவலை இல்லை புறக்கோலம் மட்டும் போதும் என்ற நிலையைப் பார்ப்பின், கொள்கையை நடைமுறைப் படுத்துவர் தோல்வி, கொள்கைத் தோல்வி ஆகாது என்பது வெளிப்படும்.

சரியாகச் செயல்பட்டிருந்தால்–நில உச்ச வரம்பு, நிலக் கொடை இயக்கம் ஆகியவையும் அரசுடைமைத் திட்டங்களும் நன்கு செயல் பட்டிருந்தால்–ஒப்புரவுக்கு வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

நிலத்துக்கு உச்ச வரம்புப் பெயரிட்டு அதற்கு எதிரிடையான செயல்கள் விதிவிலக்குகள் எத்தனை நடந்தன?

பணப் பயிர்க்கு விதிவிலக்குத் தந்து பணக்காரர் பக்கம் சார்ந்து நின்ற பழி என்ன?

விளை நிலத்துக்கு உச்ச வரம்பு போலத் தொழிலக வருவாய் மாதச் சம்பள வருவாய் ஆகியவற்றுக்கு உச்ச வரம்பு ஏற்பட்டதா? அவற்றைச் செய்தால், ஒப்புரவு அமைப்பு உண்டாதல் அரிதன்றே அவ்வொப்புரவு செய்தலால் தன்னை இழப்பினும், தன் ஆட்சியை இழப்பினும் பேறே என எண்ணுவார் வேண்டும் என்றன்றோ வள்ளுவம் பேசுகின்றது! அதுதானே,

"ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து"

என்பது.

பொருள்

பொருட்பால் அளவே வள்ளுவப் பொருளியல் வளம் காட்ட வல்லது. எழுபது அதிகாரம் எழுநூறு பாடல். அறத்தின் அளவும் இன்பத்தின் அளவும் கொண்டு அதனினும் விஞ்சிய பெருக்க அளவு அது அவ்விரிவில் பொருள் செயல் வகை என்பதோர் அதிகாரமே அப்பெயரை நேராகத் தழுவியமைந்தது. ஆனால் பொருள் என்னும் சொல்லோ அறுபத்து இரண்டு இடங்களில் ஆளப்பட்டுள்ளது. அப்பொருள் சுட்டும் வேறு பல சொற்களும் இடம் பெற்றுள.

பொருள் தேடுக; பொருள் சேர்க்க; பொருள் குவிக்க என்று வள்ளுவம். கூறுவதில்லை, "செய்க பொருளை" என்று ஏவும் வள்ளுவம் "செய்க பொருளை" என்பதைக் கடைப்பிடியாகக் கொண்டு திகழும் நாடுகளில் தலையாய நாடு எது? சப்பான் நாடு என்பதை, அதனை அணுவால் அழித்த அமெரிக்க நாடும் அறியும். அப்பேரழிவுக்கு ஆட்பட்ட நாடு அவ்வணுவை ஏவிய நாடும் நிமிர்ந்து நோக்க வானுயர்ந்த தோற்றம் செய்வது எதனால்? செய்க பொருளை என்னும் வள்ளுவச் சீர்கள் இரண்டற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது தானே! நம் நாட்டுக்கு உய்யும் நெறி அது என்பதன்று; நானிலம் உய்யும் நெறியே செய்க பொருளை என்பதில் உள்ளது !

பொருள் புண்ணியத்தால் – முன் வினைப் பயனால் வந்தது என்பதன்று வள்ளுவம், உலையா முயற்சியால் ஊழையும் வெல்லும் ஆற்றலால் வருவது என்பது வள்ளுவம்,

பொருள் நல்லோர் அல்லோர் இருபாலாரிடத்தும் இருத்தல் உண்டு. பூரியர் கண்ணும் உள என்பார் பொருட் செல்வத்தை! "வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள் அஃதுண்ணான் செத்தான் செயக்கிடந்த தில் " என்றும், "அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகு நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்றும் பழிப்புக்கு இடனாதல் உண்டு; ஊருணியாய்ப்பழமரமாய் மருந்து மரமாய் மழை வளமாய் மாண்புறுவதும் உண்டு என்றும் கூறுவார்.

பொருள் செயல் வகையில்,

“பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

எனப் புகழ்வார்.

“இல்லாரை எல்லாரும் எள்ளுவர்”

என இரங்குவார்.

“பொருள் என்னும் பொய்யா விளக்கம்”

எனப் பூரிப்பார்.

“அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்”

என்றும்,

“அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்”

என்றும் பொருள்வரும் வழியும் தீமையற்றதாய் அருளும் அன்பும் உற்றதாய் இருக்க வேண்டும் என வலியுறுத்துவார்.

அருளேயும் பொருளாலேயே காக்கப்படும் என்றும் தெளிவிப்பார்.

பொருள் பகைவர் செருக்கு அறுக்கும் என்றும்,
அறமும் இன்பமும் வழங்கும் என்றும் கூறுவார்.

வாணிகத்தால் பொருள் தேடுவார், அப்பொருளாலேயே அறமும் தேடிக் கொள்ளலாம் என்பதை,

“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.”

என்பார்.

பொருள் செயல் வகையை அன்றி, நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்திலும் பொருளியல் விரிப்பார். அதில் பயன் படாப் பொருளுக்கு இழிவு என்பது பயன்படுத்தான் இழிவு என்பதைத் தெளிவிப்பார். நல்லோன் வறுமையில் செய்யும் நலப்பாட்டையும்,

அல்லோன் வளமையிலும் செய்யான் என்றும், அவன் வளம் நடுவூருள் நச்சுமரம் பழுத்தது ஒப்பது என்றும் கூறுவார்.

"அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்"

அப்பாழோன் செல்வத்திற்குப் பரிந்தும் இரங்குவார். அவ்வள்ளுவப் பொருளியல் நெறி பொருளியல் வல்லாரால் போற்றப்பட்டு ஆள்வோர் ஒப்புகையுடன் நடைமுறைப்படின் பெரும்பாலான சிக்கல்கள் ஒழியவே செய்யும்

தென் புலத்தார்

நாட்டின் தலையாய செல்வங்களுள் ஒன்று அறிவாளர் ஆகிய செல்வம், கூர்த்த அறிவாளரே உலகை இற்றை நிலைக்கு ஆக்கியவர் ஆவர். ஊண், உடை உறைவிட வளர்ச்சிகளா உழைப்புத் தொல்லையைக் குறைத்தலா, ஏந்துகளை ஆக்குதலா, கருவிகள் கண்டு பிடிப்பா, போக்கு வரவு ஆலை தொழிலகம் கண்ட ஆக்கங்களா, வீண் செலவா எல்லாம் எல்லாம் அறிவாளராம் செல்வம் வழங்கிய செல்வங்களே!

அச்செல்வங்களின் நிலை இந்நாட்டில் எவ்வாறுள்ளது? இந்நாட்டின் செல்வத்தால் வளர்ந்து வாழ்ந்து, இந்நாட்டு மூளைத் திறத்தால் பயின்று ஓங்கி உயர்ந்து, பிற நாட்டுக்குப் பாடுபடுபவராய், தம்மைத் தாங்கிய நாட்டுக்குத் தம் கடன் செய்யாதவராய் ஆக்குவது எது? மூளையர் பெரும்பாலரும் அயல் நாட்டுக்கு உரமும் ஊற்றமும் உயர்வுமாகி விடுகின்ற இந்நிலைமையை அறிவர் எண்ணுகின்றனரா? சான்றோர் உரைக்கின்றனரா? அரசு சிந்திக்கின்றதா?

'முடத் தெங்கு' என்பது வளைந்த தென்னை. நிற்கும் நிலத்தின் நீரும் உரமும் கொண்டு, பிறர் நிலத்துச் சென்று ஆங்குள்ளார்க்குப் பயன்படும் தென்னையே முடத்தெங்காகும். இந்நாட்டு மூளையரும் உழைப்பரும் முடத்தெங்காகி விடல் ஏன்? **அவர்க்கு வேண்டும் ஆய்வகம், தொழிலகம், வேலை வாய்ப்பு இன்னன செய்து தாரா அரசின் குற்றம் தானே!** இன்னின்ன செய்து தர நாங்கள் காத்திருந்தும் அவற்றை உதறிவிட்டு நீங்கள் முடத் தெங்காகி விடலாமா? என்று மூளையரையும் உழைப்பரையும் கேட்க இந்நாட்டுக்குத் துணிவு உண்டா? முறைமை உண்டா?

வள்ளுவர் அன்றே எண்ணினார். ஒவ்வொரு குடும்பத் தலைவனும் அறிவாளரைப் போற்றுதல் வேண்டும் என்னு முகத்தால் நாடாள்வோர்க்குத் தீராக் கடமையாவது அது என்பதைக் கூறினார். அது "தென்புலத்தார் ஓம்பல் தலை" என்பதாம்.

தென் புலத்தார் என்பதற்குத் தெளிந்து தேர்ந்த புலமையாளர் என்னும் பொருளை விடுத்து, இறந்தார்க்குச் செய்யும் கடமையாக்கி விட்ட கேட்டினும் கேடு, அறிவாளரையெல்லாம் அயல்நாடு தேட விடும் நிலைமை ஆகும்.

மூளைச் செல்வம் மூலப்பொருள் ஒன்றன் மதிப்பை மும் மடங்கு நான் மடங்கா? மூவாயிரம் நாலாயிரம் மடங்கு உயர்த்துவதை உருக்குக்கம்பி, ஒலிபெருக்கி ஆக்கப்படுவதால் உண்டாகும் விலைமானத்தாலேயே கண்டு கொள்ள முடியுமே!

பிறப்பொப்பு

இனி மக்கட் பிறப்பிலே என்ன வேற்றுமை? சமயம், சாதி, தொழில், நிறம், பணம், பதவி, கல்வி என்பவற்றால் உயர்வு, தாழ்வு கொள்ளல் என்ன முறை? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் வள்ளுவம் நடையிடின் வேறுபாடுகளைச் சுக்கல் சுக்கலாகத் தகர்க்கத்தானே வேண்டும்?

சிறுபான்மையினர் என்பதற்காகக் கட்டற்ற உரிமைகள் சலுகைகள் உண்டாம். தரவும் வேண்டுமாம். அரசும் முறை கடந்து வழங்குமாம். அவர்கள் என்ன மாந்தப் பிறப்பல்லாத் தனிப் பிறப்புகளா?

எச்சமயம் எனினும் மாந்தப் பொது நிலைக்கு உரியதே. அதற்கு நாட்டியல் ஒருமைக்குக் கேட்டியல் செய்யும் உரிமை இல்லை! அப்படிப்பட்ட தனி உரிமைகளை வாக்குகளை நோக்கியே வைத்துக் கொண்டிருக்கும் மக்களாட்சி மாக்களாட்சி யன்றி அறநெறி ஆட்சியாகுமா?

ஒரு நாட்டு மொழிகளுள் ஏற்றத் தாழ்வு காட்டல், மொழிக்கு மொழி வல்லாண்மை கொண்டு அடிமைப்படுத்தல்,

இவ்வெல்லாம் நாட்டியல் ஒருமைப்பாட்டை ஒழித்துக் கட்டுவன என்பது வெளிப்படை.

இவற்றுக்கெல்லாம் ஒத்த ஒரோ ஒரு தீர்வு,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்னும் பெருநெறி போற்றலாகும்.

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு"

என்பது வள்ளுவம், ஆனால் இவற்றைச் சமயத்தின் பேராலும் சாதியின் பேராலும் அரசியல் கட்சியின் பேராலும், தற்சார்பு என்பதன் பேராலும் ஆட்சிக் கட்டிலில் இருப்பாரும், அறிவாளர், சமயத் தோன்றல், துறவர், தலைவர் என்னும் போர்வைக்குள் அல்லவை உள் வைத்துப் புறத்தே நல்லவை காட்டி அமைவாரும், ஊட்டி வளர்த்து நாட்டை உருக்குலைத்து வருதல் கண்கூடு, இல்லாக்கால் நால் வருணம் தக்கதே என்றும், உடன் கட்டை ஏறல் தக்கதே என்றும், பெண்ணுக்கு ஒத்த உரிமை கூடாது என்றும், எத்தனை மகளையும் மணக்கலாம் என்றும், சமயச் சின்னமாகப் படைக்கலம் ஏந்தலாம் என்றும், சிறுபான்மைப் பெயரால், பெரும்பான்மையர்க்கு இல்லாப் பேறெல்லாம் பெறலாம் என்றும் நாட்டு நடைமுறை இருக்கமாட்டா.

ஏமாற்று, அடிமை, வஞ்சம் நஞ்சம், கொள்ளை கொலை என்பவை எவர் செய்தால் என்ன? அவர் கொண்ட சாதி சமயங்களாலோ, குடிப்பிறப்பாலோ தக்கவை என்று ஆகி விடுமா? மாந்தப் பொது நோக்கில் குற்றம் குற்றமே என்னும் நடுமை நெறியே போற்றப் பட்டால் அல்லாமல் நரித்தனம் மலியவே செய்யும். தின்பது, இறப்பதற்காகக் கண்ணீர் வடிக்கவே வடியாது. தலைவிதி என்று தப்பித்துக் கொள்வது. தகவு காணவே காணாது, இவ்வெல்லாத் தீர்வுகளுக்கும் ஒரே ஒரு செங்கோல்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்."

என்னும் ஒருமைப் பார்வையே யாம்,

சூது

பொருள் அழிவுக்கும் புகழ் அழிவுக்கும் ஒருங்கே இடமாக இருப்பது சூதாகும். அது முகடி எனப்படும். மூடிவிடுவது முகடி மூடி யாகும். அதன் செயலை,

"அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்."

என்னும் வள்ளுவம், அது,

"சிறுமை பல செய்து சீரழிக்கும் சூது"
"இழத்தொறூ உம் காதலிக்கும் சூது"
"ஒன்றெய்தி நூறிழக்கும் சூது"
"பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்" (சூது)
"பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது"

உடை செல்வம் ஊண ஒளி கல்வி (விலக்கும் குது)

என்றெல்லாம் சொல்லி வேண்டற்க வென்றிடினும் சூதினை என்று வேண்டிக் கொள்ளப்பட்டது. அச்சூதினைச் 'சூதர்' மட்டுமோ கொள்கின்றனர். அரசே சூது நிறுவனமாகி விட்டது,

பரிசச் சீட்டு சூது இல்லையா? எந்த மாநிலம் பரிசுக் சீட்டு நடத்தவில்லை. தனித்தனி ஆள் போட்டி போட்டு நடத்தும் சூதுகள் எத்தனை? குலுக்கல் சீட்டு, ஏலச்சீட்டு சலுகை விலை, மலிவு விலை என்பனவெல்லாம் சோரும் உள்ளுங்களை மயக்கிக் சொத்துச் சேர்க்கும் திட்டங்கள் தாமே. குதிரைப் பந்தயம் என்பது என்ன–சூதர் கழகம்தானே! இவற்றின் விளம்பரங்களாகத் தாமே தொலைக் காட்சியும், வானொலியும் திரைப்படங்களும் திகழ்கின்றன. எத்தனை கோடி குடிகளைக் குடிக்கக் கஞ்சிக்கு இல்லாமல் ஆக்கி ஓரிரு குடிகளை மேட்டுக் குடியாக்குவதுபோல் காட்டுகின்றன. அப்புதுமேட்டுக்குடி, அதற்குமுன் இழந்த இழப்புக் கணக்கை எண்ணியதுண்டா? பலரைத் தாய்ச் சீலையர் ஆக்கி ஒருவருக்குப் பட்டுக் கட்டுவதுபோல் காட்டும் சூழ்ச்சிப் பரிசுத் திட்டங்களை முனைப்பாக இருந்து ஒழித்துக்கட்ட வேண்டிய திருக்கவும், அதுவே முனைப்பாக இருந்து வளர்க்குமானால் அஃது ஆட்சித் தனமா? வேட்டைத்தனமா?

மது

இனிச் சூதுபோல் விலக்கத்தக்க ஒன்று. மது மதியை மயக்கி மக்களை மாக்களாக்கும் மதுவை வழங்குதல் அரசுக் கடமை யாகுமா?

குடி குடியைக் கெடுக்கும் என்று சொல்லிக்கொண்டே மது ஆலை உருவாக்கல்-மது விற்பனையகம் திறத்தல்-குடிக்க வாய்ப்புச் செய்து தருதல்-குடியரைத் திருத்தவும் மருத்துவம் செய்தல்-இவையெல்லாம் என்ன?

நச்சுயிரிகளைப் பரப்பித் தொற்று நோய்களைப் பெருக்கும் கொலைஞன் ஒருவனே, உயிரிரக்கம் உடையான் போல் தொற்று நோய் மருத்துவப் பொய்ம்முகம் காட்டும் போலித்தனம் தானே அது,

கேடு தருவன எவை எனினும் உருவாக்கம் இல்லாமலே தடுக்க வேண்டுமே! கரவிலே உருவாக்கம் செய்யப்பட்டிருப்பினும், ஊருக்குள் நடமாட்டம் கொண்ட அளவிலேயே கண்டு கையும் களவுமாகப் பற்றி உரிய தண்டனை வழங்கித் தடுத்திருக்கவேண்டுமே! அவற்றைச் செய்யத் திறமில்லாமல் குடி குடியைக் கெடுக்கும் எனப் படம் எடுத்தால் அதற்கும் பாம்பு படமெடுப்பதற்கும் என்ன வேற்றுமை?

“ஈன்றாள் முகத்தேயும் இன்னாது”
“நஞ்சுண்பார் கள்ளுண்பார்”
“உட்கப்படாஅர் ஒளி இழப்பர்”
“உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர்”

என்றெல்லாம் மதுத் தீமையை வள்ளுவம் எடுத்துக்காட்டுகிறதே! நீ மது உண்டபோது எப்படி இருப்பாய் என்பதை நீ அறிய வேண்டுமா? நீ தெளிவோடு இருக்கும்போது மதுவுண்டவன் மயங்கிக் கிடக்கும் நிலையையும், செய்யும் செயலையும் கண்டாலே புலப்படுமே என்று தெளிவு காட்டிக் கூறியும், அதனைத் தெளிவாக அறிந்து கொண்டவர்களும் குடிக்கும் உரிமை வழங்குவது குடிகெடுப்பதல்லாமல் என்ன ஆகும்? குடிகெடுக்கவோ இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

மதுக்குடி தனிவாழ்வுக் கேடு குடும்ப வாழ்வுக்கேடு; பொது வாழ்வுக் கேடு முக்கேடுகளைச் செய்வதன்றி எக்கேட்டுக்கும் தலைமை தாங்குவதும் அது.

“மகவைக் கொல்லுதல்; மாதை அழித்தல்; மதுவைக் குடித்தல் என்னும் முக்குற்றங்களுள் எக்குற்றமேனும் ஒன்றை நீ செய்யலாம் என்று ஒருவனிடம் கூறப்பட்டது. அவன், மகவைக் கொல்லுதல் கொடுமை; மாதைக் கெடுத்தல் கயமை; மதுவைக் குடித்தலால் என்னளவில் தானே

தீமை என அதனைக் குடித்தான். அக்குடி வெறி, மாதைக் கெடுத்தது; மகவைக் கொன்றது; முக்குற்றாங்களுக்கும் முழுக்குற்றம் மதுக் குற்றம் என்னும் நிலையைப் பெற்றது" என்பதொரு செய்தி. இது புனைவே எனினும் குடியர் செய்யும் செயல்களைக் காணின் இப்புனைவின் உள்ளியல் புலப்படவே செய்யும். வள்ளுவ வழியரசு கள்ளினை மதுவகைகளை நடமாட விடவே விடாது என்க.

மதுவிலக்கால் நாட்டு வருவாய் குன்றுமே. குடியை இல்லாமல் ஒழிக்க இயலவில்லையே! கள்ளச் சரக்குகளால் பெருந்தீமைகள் உண்டாகின்றனவே என்றெல்லாம் காரணம் கூறுதல் கடமையைத் தட்டிக்கழித்துக் கயமைக்கு உடன் போவதே யாம்! அவ்வப்போது ஆளும்கட்சி சார்ந்தவர்களே மிகுதியும் மதுவிற்பனை உரிமையாளராகத் திகழ்தலும், காவல் துறையும் மதுவிலக்குத் துறையும் கைகட்டி நின்றும், கைந்நீட்டி நின்றும் இருவகையாலும் ஏவல் பணியராக இயல்வதும் ஆட்சியாளர் தன்னலமே மதுவிக்கை விலக்கல் என்பதாம்.

திருட்டு, தீ வைப்பு, கொள்ளை, கொலை, கையூட்டு, வஞ்சம், நஞ்சம் என்பவற்றை எவ்வளவு முயன்றும் காலம் காலமாகக் கருதி முயன்றும் கட்டுப்படுத்த இயலவில்லை; ஆதலால் இவற்றைச் செய்ய உரிமை வழங்குவோம் என்று ஆள்வோர் சொல்லவும் துணிவரோ?

தனியாளால் செய்யமுடியாததைச் செய்வதற்காகத் தானே தனியாளர் வழங்கிய வாக்குகளைப் பெற்று ஆட்சிக் கட்டில் ஏறியது? அதனைச் செம்மையாகச் செய்ய முடியாமல் சோரம் போகும் அரசு, ஆட்சிக் கட்டிலில் இருக்கும் உரிமை உடையது ஆகுமா?

அஞ்சு நிலை

அஞ்சுதற்கு அஞ்சவேண்டும்; அஞ்ச வேண்டாதவற்றுக்கு அஞ்சுதல் ஆகாது என்பது வள்ளுவம்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
"அஞ்சல் அறிவார் தொழில்

என்பது அது.

"அஞ்சுவதோரும் அறனே"
"அஞ்சாமை ஈகை அறிவுக்கம்"

என்பவற்றைச் சுட்டும் வள்ளுவத்தால், அஞ்சுவது அஞ்சாமைக் குரியதும் வெளிப்படும்.

"அச்சமே கீழ்களது ஆசாரம்"

என்றும் வள்ளுவம் பேசும்.இற்றை நிலையில் எந்த நல்லவரேனும் அஞ்சா நிலையராக நாட்டில் நடமாட முடிகின்றதா? எத்தனை எத்தனை அச்சங்கள்?

"அச்சம் உடையார்க்கு அரணில்லை"

என்னும் இற்றை நிலைமைதானே அச்சத்தின் மூலம். அஞ்சி அஞ்சிச் சாக அவலம் சூழும் நிலைமை நாட்டை அலைக் கழிப்பதை நாள் தவறாமல் செய்தித்தாள்கள் படம்பிடித்துக் காட்டவில்லையா?

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

என்றாரே வள்ளுவர் வெருவந்து வேகாத நல்லோர் ஒருவர் இற்றை நிலையில் இருப்பரா? அமைதியர்க்கு அறவர்க்கு தொண்டர்க்கு அருளர்க்கு- பாதுகாப்பு உண்டா? வெளியே வந்தவர் வீட்டுக்குத் திரும்புவார் என்பதற்கு உறுதி ஏதாவது உண்டா? சட்டமன்றம் நாடாளுமன்றம் என்னும் அரணுக்குள் உள்ளாருக்குமே பாதுகாப்பு இல்லை என்றால் ஏனோ தானோ என வாழும் ஏழை எளியவர்க்குத் தாமா பாதுகாப்பு?

இனி, நாட்டில் வன்முறைகள் தலைதூக்கி விட்டன; அலை கொலைகள் பெருகி விட்டன; குண்டு நாகரிகம் உண்டாகி விட்டது என்பார் உளர் எனின், அவர் எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிறக்கும் போதே வன்முறையாளராய்- போராடி யராம் - தற்கொலைப் படைஞராய்ப் பிறந்து விட்டனரா? அவர்க்கு என்ன நெஞ்சம் என்பது இல்லவே இல்லையா? அவர்களுக்கும் பெற்றோர் மனைவி மக்கள் சுற்றம் என்பன இல்லவே இல்லையா? வாழவே விரும்பாமலா போய் விட்டனர். நல்வாழ்வு வாழவே- அனைவரும் ஒருமித்த நல்வாழ்வு வாழவே விரும்பியவர் அவர் என்னும் உண்மையை உணர வேண்டுமே! அவ்வாழ்வுக்குத் தடையும் இடைக்கேடும் தாங்காத் துயரும் உண்டாயதால்தானே வலிய பாறையாய் இறுகிப் போயினர்? வாழ்வா சாவா என்னும் நிலையிலேதானே

வாழ்வதற்காகச் சாவை மேற்கொள்ளலாயினர். அது தன்னலமா, பொதுநலம் போற்றிக் கொள்ள முடியாத இக்கட்டால் மேற்கொண்ட முடிவா? இவற்றைச் சுட்டிக் காட்டினால், வன்முறையாளர் போராடிகள் எனப்படுவார், ஆளும் கொடுமையாளர்களாலும் வஞ்சத் தலைமையர்களாலும் அதிகார வல்லூறுகளாலும் அந்நிலை தவிர வேறு வழியில்லை என்னும் கொடு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களேயாம்!

ஒரு பெண்மணி, பூலான்தேவி, கொள்ளைக்காரி–கொலை காரி என்பார், அவளை அந்நிலைக்கு ஆக்கியவரைக் கொள்ளைக்காரர் கொலைகாரர் கயவர் என்று குற்றம் சாட்டாமல் பணக்காரர் பதவியர் மேட்டுக்குடியர் என்பதால் சட்டப் பாதுகாப்பும் சால்புப் பாதுகாப்பும் தந்தமையால்தான் என்பதை நினைக்க வேண்டும் அல்லவோ?

“தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து”

என்னும் வெருவந்த செய்யாமைத் தலைக் குறளைத் தலைமேல் தாங்கிய அரசும் தலைமையும் அதிகாரமும் உண்டாயின் மெய்யாக நாட்டில் வன்முறை தலைதூக்கியிருக்கவே மாட்டா. ஆனால் இவ்வுண்மை மரத்துப்போன மனத்திற்குப் புகுமா? தோட்கப் படாச் செவிக்கு ஏறுமா?

ஒரு புலவுக் கடையிலே உள்ள கறித்துண்டு ஒன்றைத் தெரு நாய் ஒன்று கவ்விக் கொண்டு ஓடுகின்றது. இன்னொரு துண்டைப் பருந்து ஒன்று பற்றிக் கொண்டு பறக்கின்றது.

பறக்கின்ற பருந்தைக் கன்னந்தட்டிப் பார்த்து விட்டு, ஓடுகின்ற நாயைக் கட்டைத்தடி கொண்டு வெருட்டி வெருட்டியடிக்கிறான் புலவுக் கடைக்காரன்.

பருந்தும் நாயும் செய்தவை ஒரே பிழை.

ஆனால் தண்டனை ஒன்றற்கு; மற்றொன்றுக்கு மேனோக்கு பார்வை,

மேட்டுக் குடியினர்க்கும் பள்ளத்து வீழ்ந்து கிடப்பார்க்கும் கிடைக்கின்ற நடைமுறை வேறுபாடு இத்தகைத்து. இந்நிலையில் பள்ளத்து வீழ்ந்தார் மேட்டுக் குடியர் மேல் என்ன எண்ணம் கொள்வார்? அவர்க்கு அரணமாக–பாதுகாப்பாக இருப்பாரைப் பற்றி என்ன நினைப்பார்?

அதனால் அத்தகைய ஆட்சியையும் நிலையையும் ஒழித்தால் அல்லாமல் உலகத் துயர் தீராது என்பதால்,

"கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை" (870)

என்றார். அதற்கு ஒரு குறள் தாண்டி (872),

"கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை"

என்று தீர்வும் கூறினார்.

நாணுடைமை

இனி நாணுடைமை என்பதோர் அரிய பண்பு. அதனை மகளிர்க்கே உரிமையாக்கிக் கூறுவார் கூற, வள்ளுவரோ ஆடவர்க்கும் மகளிர்க்கும் அப்பண்பு பொதுமையது என்பதை உறுதியுறக் கூறினார்.

"கருமத்தால் நாணுதல் நாணு திருநுதல்
நல்லவர் நாணுப் பிற"

என்பது அது. அவ்வொரு குறளோ உரைத்தார்?

நாண்மிக்க நங்கை தன் நாண் துறப்பை இன்பத்துப் பாலிலே மொழியும் நம்மறைத் தோன்றல் வள்ளுவர், பொருட்பாலிலேயும் நாணுடைமை என்றோர் அதிகாரமே வைக்கிறார்,

"நாணுடைமை மாந்தர் சிறப்பு"

"நாண் என்னும் நன்மை குறித்தது சால்பு"

"நாண் அணி"

"நாண் வேலி"

"நாணுக்கு உறைபதி"

என்றெல்லாம் சிறப்பிக்கிறார்.

நாண் அகத்தில் இயக்கம் நாணால் (கயிற்றால்) இயங்கும் மரப்பாவை இயக்கம் என்கிறார்.

"பிறர்நாணத் தக்கதுதான் நாணான் ஆயின்
அறம் நாணத் தக்க துடைத்து"

என்று அறம் நாணிக் கவிழ்த்தலைச் சுட்டி நாணுக் கொள்கிறார். ஆனால் பொதுநிலை இற்றை நிலையில் எவ்வாறுள்ளது?

தீமையும், கொடுமையும், வஞ்சமும், நஞ்சமும், பொய்மையும், கரவும், கயமையும் செய்வார், நன்றி மறப்பார், அறம் துறப்பார், கையூட்டுப் பெற்றார் ஊரறிய நேர்ந்த போதும் நாணுதல் உண்டோ? உண்டோ?

நாளிதழ், கிழமை இதழ், திங்கள் இதழ் இன்னன படத்துடன் வெளியிடினும் நாணுதல் உண்டோ? உண்டோ?

"இது செய்தான்; இழிஞன் இவன்" என்றால்

'இது செய்யான் எவன்?' எனத் தலை நிமிர்ந்து வினாவுவான், அவனுக்குப் பாராட்டு எடுப்பான். அவன் காலில் வீழ்ந்து வணங்கித் தெய்வமாக்குவான் நாண் பிறவிதானா? நாண்வேலி அழிக்கப்பட்டபின் நல்விளைவு உண்டா? வள்ளுவ நாணுடைமை நாட்டுலாக் கொள்ளும்நாளே நல்லவை உலாக் கொள்ளும் நாள்.

நட்பு

நட்பு என்பது நெருக்கப் பொருளது நள் + பு=நட்பு. காதல் நெருக்க ஒப்பது நட்பு நெருக்கம், அக் காதல் நெருக்கத்திலும் சிக்கல்கள் பல உண்டு. தன்னை முற்றாக இழந்து கரைந்து போகும் காதலிலும் சிக்கல் உண்டெனின் நட்பைப் பற்றி நவில வேண்டுவதில்லை.

நட்புப் பற்றி வள்ளுவம் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு கூடாநட்பு என ஐந்ததிகாரங்களை ஒரே தொடராக வகுக்கும் (79-83). இவை அன்றியும் சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைக் கோடல் என்பனவும் இவ்வழிப் பட்டனவேயாம்.

நட்பை இத்துணை விரிவாகக் கூறுவானேன்? பொதுச் சிக்கல் பலவும் நட்புவகையால் தோன்றி அலைக்கழிப்பதாகவும், அச்சிக்கலை அகன்று ஒழிவதாகவும் இருப்பதாலேயே அத்தகைய விரிவும் விளக்கமும் வேண்டிய தாயிற்றாம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்"

"முகநக நட்பது நட்பன்று"

என்று நட்பியல் கூறும் வள்ளுவம்

"நிறைநீர நீரவர் கேண்மை"

"அகநக நட்பது நட்பு"

என்று மெய்ந்நட்புத் தன்மை கூறும்.

தகவில்லாத் தனத்தில் செல்லுங்கால் இடித்துக் கூறித் திருத்துவது நட்பிலக்கணம் என்றும் கூறும்

உண்மை நட்பு இது என்பதை அளந்து காட்டும் அளவுகோல் வறுமையும் துன்பமும் ஆகும் கெடு பொழுதே என்றும் கூறும். அத்தகைய வேளை கேட்டிலும் வாய்த்த நற்பொழுது என்றும் இயம்பும்.

நட்பிற் பிழை பொறுக்கும் பழைமை, கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமையது. எனப் பாராட்டுப் பெறும்,

வினைவேறு சொல்வேறுபட்டார் நட்பைக் கனவில் காணிலும் துன்பமேயாம் என்று விளக்கும்.

முகத்தால் இனியராய், அகத்தால் வஞ்சராய் இருப்பார் நட்பு அஞ்சப்படும் என்னும் வள்ளுவம்,

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்"

என வழிகாட்டும். மனம் மொழி செயல் ஆகிய மும்மையும் ஒருமையாகத் திகழவேண்டும் என வலியுறுத்தும் வள்ளுவமே, முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல் என்பது பெருந் தற்காப்பும், இருபாலும் நலம் சேர்ப்பதுமாம்.

இது,

"தொழுதகை யுள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து"

என்பதால் விளக்கமாம்.

சான்றாண்மை

குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை என்னும் தொடர் (96-100) சான்றாண்மைச் சார்பின. சால்பு -நிறைவு. சான்றாண்மை அறிவு, பண்பு ஆகியவற்றின் நிறைவு நலங்கள் ஆளும் தன்மையாகும்.

ஊராளும், நகராளும், நாடாளும், உலகாளும் திறவன் என்பான் சால்பாளும் திறவனாக இருப்பின் அவை அவை நலம் பெற்றோங்கும். குறைவிலா நிறைவுச் சான்றாண்மை எங்கெங் குண்டோ அங்கங் கெல்லாம் சிக்கல் தீரும்; குறை நீங்கும்: நிறைவு மல்கும்.

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்"

எனச் சான்றாண்மையாளர் உறுதிப்பாட்டை உரைப்பார் வள்ளுவர். இச்சான்றாண்மைப் பயன் என்ன? அப்பயன் செய்யாக்கால் விளையும் விளைவு என்ன? இவற்றைக்,

"கடனென்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை"

என்பார்.

சான்றவர் சான்றாண்மை குன்றிப் போனால் உலகம் உய்யாது என்கிறாரே இதேபோல்,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்றும் கூறுகிறாரே! இவற்றின் நோக்கம் என்ன?

சான்றோர் பண்புடையோர் என்பார் உலகக் காவலர் : நெறிமுறைக் காவலர் பண்பாட்டுக் காவலர்-என்பதேயாம்.

அவர் எவ்விடத்துக் கண்டிக்க வேண்டுமோ, திருத்த வேண்டுமோ, இடித்துரைக்க வேண்டுமோ, வழிகாட்ட வேண்டுமோ அவற்றை அவ்விடத்துச் செய்தல் வேண்டும்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமையவர்"

என்னும் வள்ளுவங்கள் சொல்லும் சான்றாண்மைக் கடமைகளைச் சான்றோர் விட்டனர். சான்றவர்தம் சான்றாண்மைப் பண்பைப் பறி கொடுத்தனர். பிறரைப் போலவே தந்நலத்தராய் அவ்வப்போது கிட்டும் சிறு நலங்களைச் சிந்தித்து வாழத் தொடங்கினர், நாடு அழிவுக்கு வழி கொண்டது தலைமைகள் செருக்குத் தலையாட்டம் கொண்டன! அவர் வழிஞர்கள் இழிஞர்களாகச் சூழ்ந்து நாடு வீழ்ந்து கெடும் வழிக்கு வித்தும் விளைவும் ஆயினர். வள்ளுவர் வழிச் சான்றோர் வையகக் காவல் பொறுப்பைக் கடனாகக் கொள்ளல் கட்டாயத் தேவையாகும்.

குடிபடை

பொருட்பாவின் முதற்பாடல் படை குடி என எண்ணும். இப் 'படைகுடி' என்பவை 'குடி படை' என்றும் பொருள் சிறந்து நிற்கும்.

"நாட்டுப் பணிக்கென வீட்டுக்கு ஓராள்" என்று முரசறைந்து கூட்டம் கூட்டிய காலநிலைச் சான்று குடிபடை என்பது.

"குடிகள் அனைவரும் படைகள்; படைகள் அனைவரும் குடிகள்" என்னும் விளக்கமே 'குடிபடை' என்பதாம்.

பல்வேறு நாடுகளில் இன்ன அகவையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் படைப் பயிற்சியும் படைக்கடமையும் உண்டு என்றிருத்தல் கண்கூடு.

குடிகள் தத்தம் கடமை புரிந்து கொண்டிருப்பர். நாட்டுத் தேவையுண்டாயின் அதற்கு முந்து நிற்பர். அந்நிலையைக் கருதி உருவாக்குதல் வேண்டும்.

படைக்குரிய போர்க்காலம் ஒழிந்த காலத்தில் ஆக்கப் பணிக்கு அப்படையைப் பயன்படுத்துதல் ஆக்கச் செயலாம். யானையைக் கட்டிப்போட்டுப் பயன் என்ன? மலைத் தேக்கை மலையாது இழுத்து வரும் அவ்வானையைத் தளையிட்டுக் கவளம் போட்டு வாளா வைத்திருப்பின் பயன் என்ன? அதற்கும் கேடு, பொது நலத்துக்கும் கேடு. ஆதலால் படை ஓர் கங்கை – காவிரித் திட்டம், அணைத்திட்டம் சாலை அமைப்புத்திட்டம் என்னும் ஆக்கத் திட்டங்களில் ஈடுபடுத்தப் படவேண்டும்.

'குடிபடை' 'படைகுடி' என்பவற்றின் பொருள் உணர்ந்து போற்றவே வீணடிப்புச் சிக்கல் நீங்கி விழுமிய நலத்திட்டங்கள் வெற்றியுற வாய்க்கும்.

இன்னும் எண்ணிலாச் சிக்கல் தீர்வு எண்ணிப் பார்ப்பார்க்கு வள்ளுவத்தில் இழையோடிக் கிடத்தல் அறியவரும் இவை எடுத்துக் காட்டாகக் கூறப்பட்ட சிலவேயாம்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

இறை நலம்

இறையுணர்வு நலம் பயக்கும் கருவி. ஆனால் அதன் சமயப் பிரிவுகள் இந்நாளில் நேருக்கு நேர் மோதலும் முட்டலுமாய்க் காட்சி தருகின்றன. இது பண்டும் உண்டு. எனினும் இந்நாளில் வாலுருவு புலியாய் வாயுருமிக் கிளர்ந்துள்ளன. இதன் கேடு அகல்தற்கு உலகம் தழுவிய அளவில் வாய்த்த ஒரோ ஓர் அமிழ்த மருந்து திருக்குறளேயாம். அது எச்சமய வாணர்க்கும் ஏற்புடைய பொது நூலாக விளங்குதல் கண்கூடு. அஃது ஏன்? சமயங் கடந்த பொது நூல் என்பதாலேயே யாம்.

திருக்குறள் கூறும் இறைமை, பகுத்தளிப்பு, தூய அறிவு, மலரினும் மென்மை,விருப்பு வெறுப்பு இன்மை,மயக்கம் இன்மை, பொறிவாயில் ஐந்தவித்தல், உவமை இன்மை, அறப்பெருக்கம், உயர் குணப்பேறு, ஈடேற்றம் என்பனவெல்லாம் எச்சமயத்திற்கு ஆகாதவை?

இப்பண்புகள் எங்கெங்கெல்லாம் திகழ்கின்றனவோ அங்கங்கெல்லாம் இறைமை உண்டெனின் முட்டலும் மோதலும் உண்டோ? பிணக்கும் பிளவும் உண்டோ? இல்லை. ஆதலால், விரிந்த உலகப் பொதுமை உயிர்ப்பொதுமை வழிப்பட்ட திருவள்ளுவ இறைமையே எந்நாளும் உலகை உய்விக்கும் என்பதை உலகம் உணர வேண்டும். குறள் கற்றார் உலகுக்கு உணர்த்தவும் வேண்டும்.

உலகம் உணர்ந்து திருக்குறள் இறைமை வழியில் திருக்குறள் அறநெறியில் இயலத் தொடங்குமெனில் சிறுமை நீங்கும், போர்மை விலகும்; அருண்மை சுரக்கும்; அமைதி ஊன்றும்;

திருக்குறள் பிறந்த மண்ணிலேயே அத்தன்மை ஊன்ற வில்லையே என்பார் உளர் எனின், திருக்குறள் இறைமை நூலாய்-சட்ட நூலாய்-வாழ்வு நூலாய் ஆக்கப்படாமல் புகழ் நூலாக மட்டுமே கொள்ளப்பட்டு வருவதால் அதன் தன்னேரில்லாக் கொடையைத்

தமிழகம் கொள்ளவில்லையாம். அதனைத் தேசிய நூல் என்று ஏற்கவும் முடியாத அரசாண்மையில் பயன்பாடு மதிக்கவோ படும்? உலகத் தமைப்பாகிய, உலக ஒன்றிய அமைப்பு தன் ஆட்சி நூலாகக் கொள்ளும் நாள், உலகப் பெருமக்களாலேயே உண்டாகும், அந்நாளில், குறுகிய சமயச் சார்பு ஒழிந்து, சமயங் கடந்த சால்பு நூலாகிய திருக்குறளாட்சி உலகாட்சியாகும் பேறு எய்தும். அப்பொழுது உலகம் போரும் பூசலும் பிணக்கும் பிளவுமற்று உய்யும்!

இணைப்பு

திருக்குறள் வழி ஒப்புரவமைந்த நாட்டின் பேறு

1) உழைப்பு இல்லாமல் பொருள் சேர்க்கும் வழிகளை அகற்றல் வேண்டும்.
2) உழைப்பவர்க்கு உணவு இல்லை என்னும் நிலை இருக்கவே கூடாது.
3) ஒருவன் தனி வாழ்வுக்காக இரத்தலும், அவனுக்கு ஈதலும் சட்டப்படியான குற்றமாக்கப் படவேண்டும்.
4) பொது நலப்பணிக்குப் பொருள் திரட்டலும், கொடுத்தலும் போற்றிப் பாராட்டப்பட வேண்டும்.
5) கண்மூடி வழக்கத்தைத் தூண்டும் காட்சியும் பொழிவும் கட்டாயம் தடுக்கப்படவேண்டும்.
6) மாந்தனை மாந்தன் தாழ்த்தி அடிமைப்படுத்தும் எவ் வழக்கத்தையும் அடியோடு அகற்ற வேண்டும்.
7) பிறப்பால் உயர்வு தாழ்வு எண்ணப்படாத நிலையும், செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு கருதப்படாத நிலையும் இருத்தல் வேண்டும்.
8) கல்வி என்பது பண்பாட்டுக்கும் தொழில் திறத்துக்கும் உதவும் கருவியாக இருக்கவேண்டுமேயன்றி, அலுவல் தேடும் கருவியாக இருத்தல் கூடாது.
9) தனிக் குடும்பம் எனினும் கூட்டுக் குடும்பம் எனினும் எல்லை இல்லாமல் நிலம்புலம் சொத்து வைப்பு எனப் பொருள் குவிப்பகமாக இல்லாமல் கட்டுப்படுத்தப்பட்ட அளவினதாக இருத்தல் வேண்டும்.
10) மயக்கும் குடிவகைகள், பொருள் பறிக்கும் களியாட்டங்கள், பரிசுச் சீட்டுகள் ஆகியவை முற்றாகத் தடுக்கப்படவேண்டும்.
11) படைத்துறை,காவல் கடனோடு, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் தொழிலியக்கமாகவும் விளங்குதல் வேண்டும்.
12) ஏற்றுக் கொண்ட திட்டத்தை முற்றாக நிறைவேற்றும் ஆளுமை அரசே அரசெனத் தொடரும் வகையில் மக்கள் விழிப்புடையவராக விளங்க வேண்டும்.

20. வையகம் தழுவிய வாழ்வியல்

1. பெண்ணிற் பெருந்தக்க யாவுள ?

பெல்சியத்தின் தலைநகர் புரூக்சேல்!

அது பகைவர் முற்றுகைக்கு ஆட்பட்டது.

வலிய முற்றுகை!

வன் கொடுமைத் தாக்குதல்!

நகரமே முழுமையாகக் கோட்டை கொத்தளங்களுடன் பற்றிக் கொள்ளப்பட்டது.

ஒருவரும் வெளியேறிச் செல்ல இயலா நிலை!

முற்றுகைப்பட்டு முற்றாக ஒழிந்து போகும் நிலை.

படைத்தலைவன் நினைத்தான்.

பரிவொடும் நினைத்தான்.

"போரழிவில் போரின் பொருளும் அறியா மழலையரும் இளையரும் இறந்துபடவேண்டுமா?

போரில் பங்கிலா மகளிர் தாமும் இறந்துபட வேண்டுமா? வேண்டா! வேண்டா!

என்று நினைத்தான்.

"குழந்தையர் இளையர் மகளிர் ஆகியோர் கோட்டையை விட்டு வெளியே செல்லலாம். வேண்டும் இடம் செல்லலாம்;

செல்லும்போது அவர்கள் விரும்பும் பொருளைத் தாமே எடுத்துச் செல்லும் அளவு எடுத்தும் செல்லலாம்." என்றான். மகளிர் கூடி எண்ணினர்!

மாநாடு கூட்டியா பேச முடியும் - உயிருக்கு மன்றாடும் போதில் ! மனத்தொடு மனமாய்ப் பேசினர்.

ஒவ்வொரு பெண்ணும் தலையிலோ முதுகிலோ ஒரு பொருளைச் சுமந்து கொண்டு சென்றாள்.

சுமைப் பொருள் கண்ட தலைவனும் திகைத்தான்.

காவல் வீரரும் திகைத்தனர்.

தந்த ஆணையைத் தடுத்து நிறுத்தல் அறமன்று என்று தன்னைத் தடுத்துக்கொண்டு தான் தந்த சொல்லைக் காத்தான் பகைவன் எனினும் பண்புசால் பெருமை வீரன்! என்ன கொண்டு சென்றனர் பெண்டிர்?

அவரவர் கணவன்மாரைச் சுமந்து சென்றனர்.

அவர்கள் விரும்பும் பொருள்கள் அவர்கள் கணவரினும் உயர் பொருள்களாக இல்லை என்பதை மெய்ப்பித்தனர். மகளிர் துணிவும் அறிவும் மட்டுமோ பாராட்டுக்கு உரியவை!

அவர்கள் தம் கணவன்மார்மேல் கொண்ட காதலை அளக்க அளவுகோல் உண்டோ?

கற்பித்துத் தந்த கற்பா இஃது?

கற்பித்துத் தந்தார்தாம் எவர்? அவரே கற்றுக் கொண்ட கற்பன்றோ ஈது! உலகக் கற்பெலாம் ஒருருவாகிய அப்பெல்சியப் பெண்டிர் பெருமையே பெருமை!

அப்பெருமை பகைவரும் பாராட்டிய பெற்றியதென்னின், அந்நாட்டவராலே எப்படிப் பாராட்டப் பெற்றிருக்கும்!

நாட்டவர் பாராட்டிய பாராட்டு, அந்நாள் தொட்டு நாளும் நாளும் தொடர்ந்து இன்றும் நாட்டப்பட்டே வருகின்றது. ஒவ்வோராண்டும் சனவரித் திங்கள் பத்தொன்பதாம் நாள் பெல்சிய நாட்டிற்குப் "பெண்டிர் விழா" எனப்படும் பெருவிழா ஆதல் உலகறி செய்தி!

இத்தகு பெண்டிரை வள்ளுவக்கிழவர் கண்டாரோ! என்னே பெருநிலை என்னே பெருநிலை என்று வியந்து நின்றாரோ? அதனால்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்".

என்றாரோ?

2. புகழ் புரிந்த இல்

அவர்கள் வழி வழி முடியுடைய மன்னர்கள்.

வேழமுடைத்து மலை நாடு என்னும் பாராட்டுக்குரியவர்.

வானவர் என்றும் வானவரம்பர் என்றும் புகழப்பட்டவர்.

முடிமன்னராகிய அவர்களுக்கு இல்லாதவை எவை?

இருந்தவை எவை என அறிய வேண்டுமா?

பதிற்றுப்பத்து ஒன்றைப் பார்த்தாலே போதும்,

பாடு புலவர்களுக்கு அவர்கள் வழங்கிய கொடைப்பட்டியல் உள்ளதே! அவர்களின் வளத்தையும் வாழ்வையும் உளத்தையும் உயர்வையும் ஒருங்கே காட்டும் !

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இரண்டாம்பத்தின் தலைவன். அவன் அவனைப்பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு "உம்பற்காட்டு ஐந்நூறூர் பிரமதாயம் கொடுத்து முப்பத்தெட்டு யாண்டு தன்னாட்டு வருவாயிற் பாகம் கொடுத்தானாம். நான்காம்பத்தின் தலைவன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். அவனைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்க்கு நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்தானாம். ஒன்பதாம் பத்தின் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை. அவன் தன்னைப் பாடிய பெருங்குன்றூர் கிழார்க்கு,

> "மருளில்லார்க்கு மருளக் கொடுக்க வென்று உவகையிள்
> முப்பத்தீராயிரம் காணம் கொடுத்து, அவர் அறியாமை
> ஊரும் மனையும் வளமிகப் படைத்து ஏரும் இன்பமும்
> இயல்வரப் பரப்பி எண்ணற் காகா அருங்கல வெறுக்கை
> யொடு பன்னீராயிரம் பாற்பட வகுத்துக் காப்புப்புறம்"

விட்டானாம்.

இவ்வேந்தர் வென்ற களங்கள் எத்தனை?

கொண்ட சிறப்புகள் எத்தனை?

ஆட்சித் திறங்கள் எத்தனை?

அறிவுக்கூர்ப்புகள் எத்தனை?

இவ்வள விருப்பினும் பாடு புலவர்கள் அவர்கள் பீடு விளங்கப் பேசிய பெருமை என்ன ?

"இன்னார் கணவ" என்பதில் இருந்த ஏற்றம் எதிலும் கண்டிலர் போலும் ; அதனால்,

"ஒடுங்கீர் ஓதிக் கொடுங்குழை கணவ"	(14 : 15)
"திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ"	(24 : 11)
"வாள் நுதல் கணவ"	(38 : 10)
"நல் நுதல் கணவ"	(42 : 7)
"ஆன்றோள் கணவ"	(55 : 1)
"நல்லோள் கணவ"	(61 : 4)
"சேணாறு நறுநுதற் சேயிழை கணவ"	(65: 10)
"புரையோள் கணவ"	(70 : 16)
"சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ"	(88:36)

என்றே பாடினர். இப்பதிற்றுப்பத்தின் வேந்தர் அனைவரும், தத்தம் மனைவியர் சீர்மையால் பாடு, சிறப்பொடும் விளங்குதல் பேற்றை வள்ளுவக் கிழவர் கண்டு கண்டு களித்தாரோ? இப்பேறே எப்பேற்றினும் பேறென வியந்து வியந்து நின்றாரோ?

அதனால்,

"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை." (59)

என்றாரோ ?

3. காலத்தினால் செய்த நன்றி

தட்டுத் தடுமாறி வந்தான்;

தள்ளாடிக் கீழே விழுந்தான்;

விழுந்த இடமோ சாலையோரச் சாய்க்கடை;

விழுந்ததைக் கண்ட ஒருவன் ஓடிப்போகித் தூக்கினான் :

நினைவே இல்லை!

ஆனால்,மூச்சு இருந்தது

அருகில் இருந்த கடையில் ஓடித் தண்ணீர் கொணர்ந்தான். முகத்தில் வீசி நன்றாய்த் தெளித்தான். மெல்லெனக் கண்ணைத் திறந்து பார்த்தான்.

தண்ணீர் தெளித்தவன் ஓடிப்போய்த் தேநீர் கொணர்ந்தான் ; தன்னிலையற்றவனின் தலையைத் தூக்கிப்பிடித்துக் குடிக்க வைத்தான்.

கண்ணைச் சுழற்றிப் பார்த்தான் மயங்கி விழித்தவன்.

உயர்ந்த கோபுரம் ஒன்று தெரிந்தது.

"என்ன அங்கே கூட்டம்?" என்றான்.

கோபுரத்தின் மேலே இருக்கும் கடிகையாரம் ஓடவில்லை. அதனைச் சீர்செய அத்தனை பேர்கள் !

ஆயினும் ஓடச்செய்ய முடியவில்லை" என்றான் தேநீர் தந்தவன்.

"எளிதாக நான் சீர் செய்வேன்" என்றான் மயங்கி விழித்தவன். பின்னரே உடையைப் பார்த்தான் ; வீழ்ந்த சாய்க்கடை அதனைப் பார்த்தான்!

அவனுக்கே கூட அருவறுப்பாக இருந்தது!

ஆயினும் என்ன? நடந்தான் ஓடாக் கடிகாரத்தை ஓட வைக்க!

உள்ளே விடுவரா?

"உடையும் ஆளும்! ஒதுங்கிப் போ" என்றனர்.

"யார் யாரோ பார்த்தும் ஒன்றும் ஆகவில்லை! நீ தானா செய்யப் போகிறாய்" என்று இகழ்ந்து பேசி வெளியே தள்ளினர்.

கோபுரத்தின் மேலே இருந்தவர் ஒருவர் ஒருவராய் இறங்கிப் போயினர்!

"இதனைச் சீர் செய்ய எங்களால் ஆகவில்லை" என்பதன் வெற்றி மிக்க தோல்வி நடை அது! ஒருவனைத் தாழ்ந்து வேண்டினான் ;

"என்னால் முடியும்; என்னைப் போகத் தடுக்கிறார்கள்; நீங்கள் உதவினால் என்னால் முடியும்" என்றான்.

ஏற இறங்கப் பார்த்தார்!

ஏதோ ஓர் இரக்கம் ; அழைத்துப் போனார்.

மேலே போனதும், "கையால் தொடக்கூடாது ; திறந்து காட்டுவோம் ; பார்த்துக்கூறலாம் ; உன் கைபட்டால் அந்த அழுக்கை என் செய்வது?" என்றனர்

ஒத்துக்கொண்டான்.

ஓரைந்து மணித்துளி!

எங்கே தடை என்பதைத் தெளிவாய்க் கண்டான்!

இவ்வாறு செய்க என்றான்!

என்ன வியப்பு!

'டக் டக்' தொடங்கியது!

அவன் நாடித் துடிப்பும் ஒத்துப்பாடியது!

பத்தாயிரம் தாலர் பரிசு பழுது நீக்குவார்க்கு:

கோபுரத்தின் மேலே இருந்து படியில் இறங்கியா வந்தான்? கொண்ட மகிழ்ச்சியில் கூடியிருந்தோர்,

தூக்கிக் கொண்டே வந்து விட்டனர்!

உடையின் அழுக்கு எங்கே போனது?

கையின் சேறு எங்கே சென்றது?

மூளைக் கூர்ப்பின் முன் மண்டியிட்டன!

தண்ணீர் தெளித்தவன் கண்ணீர் தெளித்தான் களிப்பு மீக் கூர்ந்து!

கட்டிப்பிடித்தான்!

"ஐயோ மயங்கி வீழ்ந்த வேளையில் நானும் இல்லாதிருந்தால்! எத்தகைய அறிஞன் – மேதை நீ" என்றான். 'போகலாம்' என்று புதிய நண்பனொடு புறப்பட்டான். "உன் வீடு? "என்றான் நண்பன். "உன் வீடு! என்றான் வந்தவன் !

பசியின் களைப்புப் போக உண்டனர்.

பல நாள் பட்டுணி !

போன உயிரைப் போகவிடாமல் காத்தவன் செய்கை எளிய செய்கையா?

பசியாமல் கிடக்கும் ஒருவனுக்குப் பத்துவகைக் கறியொடு சோறு படைத்தால் என்ன பயன்? தீமை வேண்டுமானால் உண்டு;

பெற்றோர் தந்து பிறப்பு முடிந்து போகும் நிலையில், பின்னொரு பிறப்புத் தந்து தாயும் தந்தையும் ஆனவன் தண்ணீர் தெளித்தவன்தானே! அவன் ஒரு குடும்பப் பொருளையோ காத்தான்!

உலகப்பொருளை அல்லவோ காத்தான்!

அந்த அறிஞன் – அறிஞரில் அறிஞன் எடிசன்!

அவன் உலகுக் களித்த கொடை ஒன்றா இரண்டா? உலகம் உள்ளவரை ஒழியுமா அவன் படைப்பின் பயன்பாடு! சாகக்கிடப்பானைப் பிழைக்க வைக்கும் காலத்தினும், சிறந்த காலம் உண்டா? எவ்வளவு அரியது ! தண்ணீர் தெளித்ததுதானே, அவனை விழிப்புறச் செய்த உதவி? எவ்வளவு பெரியது

விழிப்பின் விளைவு, உலகுக்கு உதவிய உதவுதல் – இவ்வளவு அவ்வளவா? உலகம் உள்ளளவும் ஒழியா நலப்பேறு ஆகிவிட்டது அல்லவோ அது !

இத்தகும் உதவி என்ன, எளிதாய் எண்ணப்படுமோ? நம் வள்ளுவக் கிழவர் இத்தகு காட்சி ஒன்றனைக் கண்டாரோ? உதவினோன் உதவியை வியந்து வியந்து நின்றாரோ?

அதனால்

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது." (102)

என்றாரோ?

"பயன் தூக்கார்செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலில் பெரிது" (103)

என்றாரோ?

"உதவி உதவி வரைத்தன்று உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து" (105)

என்றாரோ?

4. எழுமை எழு பிறப்பும்

ஒரு சிற்றூர்அதில்!

பெரிய வீடொன்று ஒருவர் கட்டினார்.

ஒருவருக்கொருவர் உதவும், சிற்றூர் வழக்கப்படி,

வண்டியுடையவர் வண்டி தந்தனர் ; மாடு இருப்பவர் மாடு தந்தனர் ;

கூலி வேலையர் ஆளாய் வந்தனர்.

மரமும் கல்லும் வண்டி வண்டியாய் வேண்டும்!

ஏழு கல் தொலைவுக்கு அப்பாலேதான் கல்லும் மரமும் கிடைக்கும்!

கல்லுக்கு மலை!

மரத்திற்குப் பேரூர் :

ஒருவர் வண்டி மாட்டொடும் உதவிக்கு வந்தார்.

பாரம் நல்ல பாரம்!

மாடுகள் இரண்டும் ஊக்கமிக்கவை!

ஊருக்கு அருகில் ஓர் ஓடை!

மேலே மணல்; கீழே சேறு!

பார வண்டி இறங்கிற்று இறங்கிற்று ; கீழே கீழே!

மண்டி போட்டு இழுத்தன மாடுகள்!

வண்டியின் சக்கரம் ஆழ்ந்து தெப்பக்கட்டை தட்டும் அளவு இறங்கினும் மாடுகள் தெம்பாய் இழுத்தன.

கரையை நெருங்கும் நிலைமை!

மண்டியிட்டுக் கொம்பை நிமிர்த்திக், காதை விடைத்து, மூக்கை ஊன்றி, இழுத்த இழுவையில் ஒரு மாட்டின் கழுத்துக் கயிறு

அறுந்தே போனது!

அறுந்த விரைவில் அப்படியே நிலத்தில் மோதி மூக்கு உடைபட மாடு இறந்தே போயிற்று

பாரத்தை இறக்கி வேறு மாட்டைப் பூட்டி வண்டியைக் கொண்டு சென்றனர்.

வண்டிப் பாரம் இறங்கியது!

வந்தவர்க்குப் பாரம், ஏறி அல்லவோ போயிற்று!

வீடு கட்டுபவர், உதவிக்கு வந்தவர் வீட்டைத் தேடிபோனார். ஐம்பது உருபா மடியில் வைத்து, மாடொன்று பிடித்துக் கொள்ள வேண்டினார்.

மறுப்பெதும் இன்றித் தொகையைக் கொண்டு தக்க மாட்டைப் பிடித்துக் கொண்டார்!

அந்நாள் விலையில் அத்தொகை மிகுதி (1938)

மூன்று திங்கள் கழிந்தன.

மாடு இறப்புக்குப் பணத்தைப் பெற்றவர் கொடுத்தவர் வீடுதேடி வந்தார்.

ஆம்! பணத்தைத் தந்தவர் புதிய வீட்டுக்கு!

மடியில் இருந்து உருபா ஐம்பத்தைந்து எடுத்தார்.

"உரிய போதில் உதவி செய்தீர்கள்!

பருத்தி நன்றாய் வெடித்தது!

இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார்!

"என்ன இது? உங்கள் மாட்டுக்கு, ஒரு மாடு வேண்டும் என்று தானே தந்தேன் ; தொகையை வாங்க மாட்டேன் என்று மறுத்தார் பணம் தந்தவர்.

"என் வேலைக்குப் போய் இப்படி இறந்து போனால் என்ன செய்வேன்?

உங்களிடம் கடன் பணம் வாங்கி மாடு பிடித்தால் தர வேண்டுமா இல்லையா? அன்று என்னிடம் பணம் இல்லை! அதனால் பணத்தை வாங்கி மாடு பிடித்தேன் ; பணம் இப்பொழுது தாராளமாக உள்ளது வேண்டுமானால் ஐந்து உருபா கூடுதல் வைத்துள்ளேன் ; அதனை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி ஐம்பது உருபாவைக் கட்டாயமாய்த் தந்தே போனார்!

பணத்தை வாங்கிய பெரியவர் இன்று இல்லை!

பணத்தைத் தந்த பெரியவர் தாமும் இன்று இல்லை !

மக்களின் மக்களின் மக்களும், அவர் தம் மக்களும் மக்களும் உள்ளனர்!

புரிவு தெரிந்தோர் அனைவருக்கும் இச்செய்தி புதுவது இல்லை! ஏனெனில் குடும்ப வரலாறு அதன் விளைவென்ன? இந்த நன்றி அந்த இருவர் குடும்பத்தும் இழையோடிக் கொண்டிருத்தல் எவரும் அறிந்தது! வழிவழியாக இவ்வாறு நினைந்து போற்றும் நன்றியின் சிறப்பு ஊரூர்க்கில்லையா?

நற்குடி என்னும் எக்குடிக் கிவ்வரலாறு இல்லை!

போன பிறப்பு எங்கே பிறந்தேன் ; எப்படிப் பிறந்தேன் ; எனக்கு எவரெவர் என்னென்ன செய்தார்? எனக்குத் தெரிவதே இல்லை!

உங்களுக்காவது எவருக்கேனும் தெரியுமா?

உண்மை வேண்டும்! உண்மை உணர்வு வேண்டும்! நெஞ்சே சான்றாய்க் கூறுதல் வேண்டும்! இளந்தைப் பருவ நிகழ்ச்சிகள் எத்தனை நினைவில் உள்ளன?

ஆறறிவாகிய பிறப்பை அடைந்தும் மூன்று அகவைக்குள்ளே நடந்தவை எத்தனை நமக்கு நினைவில் உள்ளன? வாழ்வியல் பார்வை விடுத்து வறண்ட பார்வை வேண்டா!

தீராத் துயரைத் தீர்த்தவர் எனினும். நீங்கா நலத்தைச் சேர்ந்தவர் எனினும், அவர் தம் உதவியைப் பெற்று ஊன்றி நின்ற குடியினர் வழிவழியாகப் போற்றுவர் என்றால் வாழ்வியல் பார்வை !

இந்தப் பார்வையால் வள்ளுவக் கிழவர் முந்துறச் சொன்ன காட்சியைக் கண்டாரோ?

என்னே நல்லுளம் என்னே நல்லுளம் என்று வியப்புற நின்றாரோ? அதனால்,

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு" (107)

என்றாரோ?

எந்தையார் படிக்காராமர் வீடு கட்டும் போது நிகழ்ந்தது இது ; உதவிக்கு வந்த பெரியவர் சக்கணர் என்பார் ;

ஊர் : வாழவந்தாள்புரம்,

5. ஏதிலார் குற்றம் போல்

மாந்தன் ஒருவன் ஓவியம்!

ஓடுபவனையும் நிற்க வைக்கும் ஓவியம்!

ஓவியத் தோற்றமும் வண்ணமும், ஒருப்படா உளத்தையும் ஒருப்படச் செய்து தன்னையே நோக்க வைத்துவிடும்! கூடிக்கூடிநின்றனர் கூறாநது கூறாநது பாராதனர்.

வனப்பு ஓவியத்திற்கு ஒவ்வாத பொருள்கள் இரண்டு.

அவை பழஞ் செருப்புகள்!

இரண்டு கைகளிலும் இரண்டு செருப்புகள்.

ஒன்று வலக்கையில்!

மற்றொன்று இடக்கையில்!

வலக்கையில் இருப்பது, ஒருவனை அடிக்க வைத்திருப்பதான அமைப்பு

இடக்கையில் இருப்பது இந்தா எடுத்துக்கொள் எனக் கொடுப்பது போன்ற அமைப்பு.

முன்னது துணிவின் துடிப்புத் தோற்றம்.

பின்னது பணிவின் படிப்புத் தோற்றம்.

முன்னதில் உள்ள எழுத்து :

“என்னைப் புறஞ்சொன்னால் அவனை நான் அடிக்க”

பின்னதில் உள்ள எழுத்து ;

“நான் பிறரைப் புறஞ்சொன்னால் அவர் என்னை அடிப்பதற்குக் கொடுக்க”

கண்டவர் கலைக்கு வியந்தனர்!

தத்தம் நிலைக்கு வெதும்பினர்!

அவனைப் பற்றியதா அந்தக்காட்சியும் எழுத்தும் !

உலகுக்குப் பொதுச் செய்தி அன்றோ அது !

அத்தகும் உணர்வில் வள்ளுவக் கிழவர் புறங்கூறாக் காட்சி ஒன்றனைக் கண்டாரோ?

இருபால் நிலையும் எண்ணி எண்ணி நின்றாரோ?

அதனால்,

"ஏதிலார் குற்றம்போல் தன் குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" (190)

என்றாரோ ?

6. தாளாற்றித் தந்த பொருளெல்லாம்

ஒரு நூலகர்.

"ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் அமைக்க வேண்டும்" என எண்ணினார்.

பள்ளிக்கெனக் கட்டடம், குடிநீர் வாய்ப்பு தளவாடம் முதலாய அடிப்படை வாய்ப்பும் இல்லாத பள்ளிகளில் நூலகம் அமைத்தல் இயலுமா ?

புதியதோர் திட்டம் அவர்க்கு உருவாகியது!

பள்ளிச் சீரமைப்புத்திட்டம் என்பது அது.

சீரமைப்புக்குத் தம் உதவி; பிறர் வழியே பெறும் உதவி என இருவகை உதவித் திட்டம் கொண்டார்.

தம் உதவியில் தம் உழைப்பு உதவியும் இருந்தது. அது பிறர் உழைப்பு உதவியையும் தானே தேடித்தந்தது. பத்தில் ஒரு பங்கே தம் ஊதியத்தில் தம் செலவுக்கெனக் கொண்டார்.

ஒன்பது பங்கும் பள்ளிச்சீரமைப்புக் கெனவே ஒதுக்கினார். பத்தில் ஒரு பங்கு கொண்டு வாழ முடியுமா? இவ்வளவுக்குள்ளேதான் வாழ்வு என உறுதிகொண்டால் இயலாதா?

எளிமை எளிமை – உடை – உணவு எல்லாம் எல்லாம் ; குடும்பம் பெருகினால் கொள்கை சுருங்குமே!

சுருங்காமல் என்றும் பெருகுவதற்காகக் குடும்ப வாழ்வை – திருமணத்தை – யே துறந்தார்.

இந்த எளிமையும் துறவும் என்ன ஆயின!

சீரமைப்புச் செழுமை ஆயின!

பள்ளிக்குக் குடிநீர் : மின்விளக்கு ; கரும்பலகை மேசை : நாற்காலி ; கழிகாரம் ; நூல்கள் ; நிலைப்பேழை விளையாட்டுப் பொருள்கள் படங்கள் – இப்படி இப்படி ஆயின. இந்தப் பணிகள் ஊரைக் கடந்து வட்டம் மாவட்டமாய் அவையும் கடந்து மாநிலப் பரப்பைத் தழுவவும் ஆயது.

ஒரு முறை கிடைத்த ஊதிய உயர்வின் நிலுவைத் தொகை 1,11.000 ஒரு மொத்தமாகக் சிடைத்ததாம் அத்தொகை முழுவதையும் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்திற்கே உதவினார்.குடும்பச் சொத்தில் இருந்து இவர் பங்குக்கு வந்த தொகை மூன்றரை இலக்கம், அதனையும் முழுதுறக் சீரமைப்புக்கே உதவினார்.

திக்கற்றோர்க்கென ஓரில்லம் நடாத்தி வருகின்றார். அதிலுள்ள குழந்தையர் 250 பேர்கள்!

குழந்தைப் பூங்கா ஒன்றை அமைக்கும் திட்டமும் கொண்டுளார். ஆசியத் துணைக் கண்டத்திலேயே பெரியதோர் குழந்தையர் நூலகம் அமைக்கவும் முனைந்துளார்.

அனைத்து நாட்டுக் குழந்தையர் நல்வாழ்வு நிறுவனம் இவர்தம் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் செய்கின்றன.

உள்ளமுடையார் உதவியைத் திரட்டி அவ்வவ்வூர்ப்பணிக்கே ஒப்படைத்து நிற்கும் இவர் தொண்டு ஊரூராய் விரிகின்றது! உவப்புவப்பாகத் திகழ்கின்றது.

இப்பெருந் தொண்டர் பா. கலியாணசுந்தரர். . இவர்தம் தொண்டின் சிறப்பிடம் திருவைகுண்டம். பரப்பிடம் நாடளாவியது.

பிறர் நலம் நாடும் இப்பெருந்தகை போலும் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ ?

என்னே இவர்தம் விரிநிலை! என்னே இவர் தொண்டென வியந்து வியந்து நின்றாரோ ?

அதனால்

> “தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு” (212)

என்றாரோ!

செய்தி, செந்தமிழ்ச் செல்வி ; ஆசிரியர் உரை மே, 1992

7. உண்ணாமை வேண்டும் புலா அல்

புலவு விற்பனையாளர் அவர்.

புலவு விற்பனை கொலை இன்றி நிகழுமா?

உயிரிகளைத் துள்ளத் துடிக்கக் கொல்வதும், துண்டு துண்டு ஆக்குவதும், தூக்கிலே போட்டுக் களிப்பதும், தூக்கி நிறுத்து விற்பதும், விற்ற காசு கொண்டு கொலைப் பொருள் வாங்கி, விலைப்பொருள் செய்தலும் வாடிக்கையாகிப் போய்விட்ட அவர் தம் நாள் வழிக் கடமை!

அதிலே அவர்க்கு வெறுப்பு உண்டானால், விருப்பொடும் ஈடுபடுவாரா?

ஆனால் அவர்தம் அன்பு மருமகள்!

இளமைப் பைங்கிளி!

கூர்த்த மூளைக் கொழுமையள்!

உள்ளத் துருக்க உருவம் ஆனவள்!

தெய்வப் புலவர் திருக்குறள் மேல் பற்றுமை கொண்டாள். திருக்குரான் இருக்கத் திருக்குறள் ஏன் என அப்புலவுக் கடையினர் புகன்றார் அல்லர்! அந்த அளவில் உள்ளம் அமைந்தது பேறு!

செல்வி படித்தாள்! குறளை முகந்து முகந்து தேனாகக் குடித்தாள்!

பாடம்! பாடம்! மனப்பாடம்.

"அதிகாரம் 26. "புலால் மறுத்தல்" அன்று தொட்டாள்!

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?" (251)

சிந்தித்தாள்! சிந்தித்தாள்! சிக்கல் பெரிதாயிற்று!

தன்னூன் பெருக்க – தான் பிறிதூன் உண்ண வா?

ஊனைப் பெருக்க – ஊனை உண்ண வா?

உயிரை வளர்க்க – உயிர்க் கொலையா?

திகைத்துத் திகைத்து மேலே சென்றாள். ஏழாம் குறள் :

"உண்ணாமை வேண்டும் புலா அல்; பிறிதொன்றன்
புண் அது உணர்வார்ப் பெறின்" (257)

ஒன்றன் புண்ணா புலால்! அந்தப் புண்ணைத் தின்னும் புழுவா நான்! புழுத்த உடலை, புண்ணாம் புலால் கொண்டு – உண்டு . வளர்க்கவா?

வேண்டேன்! வேண்டேன்!

வேண்டுவேன் என் தாயிடம்! வேண்டுவேன் தந்தையிடம்!

வேண்டுவேன் மாமனிடம்!

கொண்டாள் முடிவு! தீர்மானித்தே விட்டாள்!

பெற்றோர் முன்னே வழியும் கண்ணொடு நின்றாள் :

மொழியும் குழற விம்மினாள்!

அறிவு மணியாம் – பண்பு மணியாம் – அன்பு மணியாம் – தங்கள் கண்ணின் மணியாம் செல்வி,

கண்ணீர் வழிய நின்ற காட்சி பெற்றோரைக் கலங்க வைத்தது!

கதறக் கதறக் கொல்ல வல்ல புலவுக் கடை மாமனையும் கலக்கியது! என்னே என்னே என்றனர்!

கண்ணீர் துடைத்துக் காரணம் கேட்டனர்.

“இன்று தொட்டுப் புலாலைத் தொடேன்;
பொறுத்துக் கொள்ள வேண்டும்.

வெறுஞ்சோற்றைத் தின்றும் வாழ்வேன்; ஊற்றவும் தொடவும் ஒன்றும் வேண்டா!

குறளைப் படித்தேன் ; கொன்று தின்னல் குற்றம் உணர்ந்தேன்; உயிரைக் கொன்று தின்று வாழ்வதினும் உயிரை விடலும் நன்றெனக் கொண்டேன்” என்றாள்.

தந்தை உருகினார் ; தாயோ கண்ணீர் வடித்தார்.

“நீ சொல்லியதை மீறி எதையேனும் நாங்கள் செய்ததும் உண்டா?

உன் விருப்பம் எதுவோ அதுவே எங்கள் விருப்பும் அழாதே” என்று தேற்றினார் மாமனும்,

இத்தொழில் அன்றி எத்தொழிலும் யான் அறியேன். குடும்பப் பிழைப்பே இதனைக் கொண்டே நடக்கிறது. நீ அறியாததன்றே இது. வேறு தொழிலை உடனே கொள்ள அறியேன்; அறியின் இதனைத்

தொடரேன்; ஆனால் உன்னை ஊன் உண்ண வற்புறுத்த மாட்டோம் உன் விருப்பம் எதுவோ அதுவே செய்க. புலவு சமைக்கும் கலமும் உன்னை அண்டா. நீ விரும்பும் மரக்கறி உணவு எதுவோ அதுவே இனிச் சமைப்போம் என்றார் மாமன்!

"தாயோ, உன் உணவு வேறு; எம் உணவு வேறா? உன்னினும் பெரிதோ அந்த உணவு! இனி இந்த வீட்டில் இரண்டு உணவு இல்லை! இரண்டு கலங்களும் இல்லை. ஒரே உணவு ; மரக்கறி உணவு! தொழிலால் அது நடப்பினும் நடக்க; மாறினும் மாறுக, இனி உணவால் சைவம்" என்றார் அன்னையார்.

கட்டிப்பிடித்துக் காதற் பெருக்கெலாம் அத்தாயின் உரையாய்த் தழுவினாள் செல்வி! இதோ! திருக்குறளைத் தம்மறை என்னப் பிறந்த செல்வியின் உணர்வே உணர்வு!

ஒரு சிறு மலரின் நறுமணம் என்ன செய்தது?

ஒரு குடும்பத்தைக் குறள்நெறிக் குடும்பமாக்கிவிட்டது!

இச் செல்வி போலும் ஒரு செல்வியை அன்றே வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

அவள் உருக்கம் கண்டு என்னே என்னே என உருகி நின்றாரோ ?

அதனால்,

"உண்ணாமை வேண்டும் புலா அல்; பிறிதொன்றன்
புண் அது ; உணர்வார்ப் பெறின்" (257)

என்றாரோ ?

உணர்வாரைப் பெற்றால் தானே அது புண்!

இல்லையேல் புலால் அன்றோ!

சென்னை - முகப்பேரி மேற்கு - குறளாயத் தொடர் வகுப்பு மாணவி செல்வி. சா பாத்திமா; செய்கை இது. கற்பித்த ஆசிரியர்: இசை இறை சேரலாதத் துணையர். தாய் - தந்தையர் : சாகுல் அமீது - காதர் பீவி.

8. வஞ்ச மனத்தான்

ஓர் அருமையான ஓவியக் காட்சி.

அக்காட்சியில் எண்ணற்ற ஓவியங்கள்.

எழுச்சி மிகு எழுத்துகள்.

உணர்வூட்டி உண்மை தெரிவிக்கும் தூண்டல்கள்.

அவற்றுள் ஒரு தனிக்காட்சி.

கண்டவர்கள் அனைவரையும் உள்நோக்க வைத்தது அது.

அப்பகுதியில் கண்ணாடிப் பெட்டிகள் நான்கு.

மேலே மட்டும் திறப்பு; கண்ணாடி அமைப்பு

மற்ற பக்கங்கள் எல்லாம் மறைப்பு

முதல் பெட்டியில் ஒரு தேனீ ! பெரிதாகத் தீட்டப்பட்டிருந்தது.

“இதற்குத் தலையில் நஞ்சு”

என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த பெட்டியில் ஒரு தேளின் ஓவியம்!

“இதற்குக் கொடுக்கிலே நஞ்சு”

என்று எழுதப்பட்டிருந்தது.

மூன்றாம் பெட்டியில் படமெடுத்தாடும் ஒரு பாம்பின் படம்!

“இதற்குப் பல்லிலே நஞ்சு”

என்று எழுதப்பட்டிருந்தது.

இறுதிப் பெட்டிதான் அனைவரையும் திகைப்படையச் செய்தது!

அப்படம் ஒரு மாந்தனின் படம்.

அதன் கீழே எழுதியிருந்தது,

“இவனுக்கு உடல் முழுவதும் நஞ்சு ”,

நஞ்சினும் நஞ்சு உறுப்பு நஞ்சு அன்று!

அந்நஞ்சு தற்காப்புக்காக அவை கொண்டது!

ஆனால் மாந்தனின் நஞ்சு, நெஞ்ச நஞ்சு!

உடலெல்லாம் பரவியுள்ள நஞ்சு!.

தேடிப் போய்த் தீமை செய்யத் தேர்ந்த தீய நெஞ்சின் நஞ்சு தீராத நஞ்சு! தான் கொண்டது நஞ்சு என அவன் எண்ணுகிறானா?

நஞ்சுடையவை இவை இவை எனத் தெளிந்து கொண்டு ஓடித் தேடி அழிக்கும் மாந்தன் தன் முழு நஞ்சைத் தான் உணர்கின்றானா?

அவனை மற்றவர்கள் மட்டுமா நகைக்கின்றனர்? அவனுள் இருக்கும் மண், விண், தீ, நீர், காற்று என்னும் ஐம்பூதங்களும் நகைக்கின்றனவாம்!

இத்தகும் காட்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் உள்ளுள் கண்டாரோ?

என்னே கொடியன்! என்னே கொடியன்! என எண்ணி நின்றாரோ?

அதனால்,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (271)

என்றாரோ ?

9. பொய்ம்மையும் வாய்மை இடத்த

"உனக்கு இந்த வீடா, நீ பிறந்த வீடா என்பது இன்றைக்குத் தெரிந்துவிடும்'

"எனக்குக் குறை இருந்தால் தானே'

"ஆமாம் உனக்குக் குறை இருந்தால், அடுத்த முழுத்தத்திலேயே அவனுக்கு வேறொரு தாலி கட்டு தான்! பிள்ளை தவழாமல் இன்னும் காத்துக் கொண்டிருக்க என்னால் முடியாது" மாமியார் சூடு மருமகளை வாட்டியது.

கணவன் தளர்ந்த முகத்தோடு வந்தான்.

"என்னங்க; மருத்துவர் என்ன சொன்னார்."

"அம்மா எங்கே?"

"வெளியே போயுள்ளார்!

"நல்ல வேளை அப்பாவாகும் தகுதி எனக்கு நன்றாக இருக்கிறது! அம்மாவாகும் தகுதிதான் உனக்கு இல்லை "ஐயையோ! என் நிலை என்ன ஆவது ? அம்மாவுக்குத் தெரிந்தால் என்னை என் வீட்டுக்கு

முடுக்கி விடுவாரோ? "உன்னை விட்டுப் பிரிந்து என்னால் இருக்க முடியுமா? வேறு திருமணத்திற்கும் இடம் தருவேனா?

"அம்மாவைத் தடுத்துப் பேசுவீர்களாக்கும் நீங்கள் என்ன சொன்னாலும் தலையாட்டத்தானே செய்வீர்கள்." "உண்மை தான்! எதிர்த்துப் பேச முடியாது தான் ! அதற்கு ஒரு வழி வைத்திருக்கிறேன்.'

"வழியா? என்ன அது?"

அம்மாவினிடம் என்னிடம் தான் குறை ; அவளிடம் குறை இல்லை என்பேன்; என்னை முடுக்கவா முடியும்!

வாயை மூடிக்கொண்டிருப்பாள்"

எத்தகைய கணவர் இவர் எனப் பூரித்தாள்.

என் குறையை மறைத்துத் தம் குறையாகச் சொல்லும் அளவுக்கு இவர்க்கு எவ்வளவு பெரிய மனம் என நெகிழ்ந்தாள் தொலைபேசி ஒலித்தது.

அவள் மட்டுமே இருந்தாள்.

எடுத்தாள் அதனை! மருத்துவர் பேசுகிறேன்; உன் கணவரிடம் முடிவு சொல்லி அனுப்பினேனே! சொன்னாரா! ஆமாம்! அப்படி ஒருவர் எனக்குக் கணவராகக் கிடைக்க நான் பேறு பெற்றிருக்கவேண்டும்

என்ன சொன்னார்?

"குறை என்னிடம் தான் என்று தெரிந்தும் என்னைக் காப்பதற்காகத் தமக்குத் தான் குறையென்று அம்மாவினிடம் சொல்லி இருக்கிறார்"

அப்படியா சொன்னார்! அவரிடம்தான் குறையிருப்பதாக நான் சொன்னேன்; அப்படியே இசைத்தட்டைத் திருப்பிப் போட்டு விட்டாரா ?

"ஐயோ! அப்படியா?

"பரவாயில்லை! நான் எதிர்பார்த்தபடியேதான் எல்லாம் நடந்திருக்கிறது உண்மையிலேயே உன்னிடம் தான் குறை. அதைச் சொன்னால் உன்னைத் தள்ளிவிட்டு இன்னொரு திருமணம் செய்து கொள்வாரே அதனால் அவரிடம்தான் குறை என்று பொய் சொல்லி அனுப்பினேன் என்றார் மருத்துவர்.

இத்தகு நிகழ்ச்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே எனத் திகைப்புற நின்றாரோ?

இத்தகு பொய்யும் மெய்யோடும் எண்ணத் தக்கதே; இது செய்யும் நலத்தினால் என்பதால்,

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்." (292)

என்றாரோ ?

செய்தி: 'குறை'; கதைமலர்; தினமலர். (16-6 -92)

10. நில்லா தவற்றை

"உங்கள் உண்மை அழகைப் பாருங்கள்! பார்க்க விரும்பின் வாருங்கள்!"

என்னும் பலகை "வா வா" எனப் பலரையும் அழைத்தது; அறிவியல் கண்காட்சிச் சாலை அது.

பிறந்த குழந்தையும் பெற்ற தாயும்!

தாய் மடியில் கிடக்கும் சேய்!

தவழும் குழந்தை!

எட்டு வைக்கும் பிள்ளை!

ஓடி ஆடும் ஆட்டம்!

பாடம் படிக்கும் பருவம்!

வளர்ந்த காளை!

திருமணக் காட்சி!

மக்களொடு தோன்றும் மகிழ்வு ! பதவிப் பொறுப்பும் வீறும்!

மூத்த முதுமை!

கட்டிலில் கிடக்கும் நோய்மை!

– இவ்வளவு காட்சிகளும் வண்ண வண்ண ஓவியங்கள்; இறுதியில் ஒரு பெட்டி!

உங்கள் உண்மை அழகைப் பாருங்கள்" என்று எழுதப்பட்ட பெட்டி அது

மேல் பக்கம் மட்டும் கண்ணாடி ;

முப்பக்கமும் மூடு மறைப்பு.

மேலே இருந்து பார்த்தால்! பார்த்தால்!

– பார்ப்பவர் முகம் என்ன ஆகின்றது!

கண்கள் குத்திட்டு நிற்கின்றனவே!

ஏன் திகைக்கிறார்?

உள்ளே இருப்பது மண்டை ஓடு!

மண்டலம் எல்லாம் ஆட்டிப் படைத்தவனுக்கும் இறுதி நிலை இந்த மண்டை ஓடே!

எல்லாம் எரிந்தும் கரிந்தும் போக, எஞ்சி இருக்கும் மண்டை ஓடே!

எது மெய்? உன் வாழ்வு உரிய வகையில் வாழ்ந்து உயர்வுக்கு இடமானால், மீப் புகழாம் அது எச்சம்! புகழெச்சம்! இல்லையேல்? இது என்ன எச்சம் ? பழியெச்சம்! என்பதைச் சொல்லாமல் சொல்லும் மண்டை ஓடு. இத்தகு அறிவியல் காட்சியை வள்ளுவக் கிழவர் உன்னிப்பாகக் கண்டு கொண்டாரோ?

மாந்தன் மாந்தனாக வாழா நிலையை எண்ணி எண்ணி இரங்கி நின்றாரோ ?

அதனால்,

"நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" (331)

என்றாரோ ?

11. ஊழிற் பெருவலி யாவுள

சென்னையில் நேற்று காலையில் சரியாக 11.47 மணி இருக்கும். அப்போது வீடுகளில், பல மாடிக் கட்டடங்களில் இருப்பவர்கள் நில அதிர்வை உணர்ந்தனர். மேசை நாற்காலி -கள் அசைந்தன. அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் அச்சமுற்றனர். இது ஏதோ பெரிய அளவில் அழிவு தருமோ என்று பலரும் அஞ்சினர்.

பாரிமுனை கடற்கரைப் பகுதிகளில் உள்ள பல மாடிக் கட்டடங்களில் இருந்தவர்கள் நில அதிர்வைத் தெளிவாக உணர முடிந்தது. அண்ணாசாலை இராயப்பேட்டை முதலிய பகுதிகளிலும் பொதுவாக நில அதிர்ச்சியை உணர்ந்தனர். கிண்டி, மணலி முதலிய புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் இந்த அதிர்ச்சி புலப்பட்டது. வானிலை அலுவலகத்திற்குத் தொலைபேசியில் பேசிக் கேட்டனர்.

ஓரிரு தளம் உள்ள வீடுகளை விட பலமாடிக் கட்டடங்களில் இருந்தவர்களால் நில அதிர்வை எளிதில் உணர முடிந்தது. மேசையில் இருந்த கோப்புகள் சர் என்று சரிந்து அடுத்த நொடியில் அப்படியே நின்றதைப் பார்த்தனர். மாடிப்படிகளில் நின்றவர்கள் எளிதாகத் தடுக்கி விட்டது போல உணர்ந்தனர். பெரிய பொருள்கள் குலுங்கின. எழுதுகோல் (பேனா) கரிக்கோல் (பென்சில்) முதலிய சிறு பொருள்கள் நழுவி விழுந்ததைப் பார்த்துச் சிலர் அதிர்ந்தனர். மணலி பகுதியில் உள்ளவர்கள் தங்கள் வீட்டுப் பலகணி பட்டென அடித்துக் கொண்டதைக் கூறினர், சாலையில் போனவர்களுக்கு இந்த பட்டறிவு கிட்டவில்லை. விரைந்து போய்க்கொண்டிருந்ததால் இவர்களால் நில அதிர்வை உணர முடியவில்லை.

மாமல்லை வரை இந்த அதிர்வு காணப்பட்டது. மணலியைத் தாண்டிச் சில பகுதிகளில் அதிர்ச்சியால் மிகச்சிறிய விரிசல் கட்டடங்களில் ஏற்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

“இது மிக மெல்லிய நில அதிர்ச்சிதான் 5.2 ரிக்டர் அளவு கொண்டது. சென்னைக்குக் கிழக்கு வடகிழக்காக வங்கக் கடலில் 800 கி. மீ. தொலைவில் நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் விளைவுதான் சென்னையில் எதிரொலித்தது. சென்னையில் நில அதிர்வு ஏற்பட்டது கடந்த 20 ஆண்டுகளில் இதுவே முதல் முறை என வானிலை அறிக்கை கூறுகிறது. (தினமலர் 12-1-92)

சிறிய நில நடுக்கம் இது. 1981-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் நாள் சிலி நாட்டில் ஒரு நில நடுக்கம் உண்டாயிற்று. அதன் விளைவு கண்டும் கேட்டும் இராத கொடுமையாயிற்று.

சிலி நாட்டின் நடுமையத்தில் உள்ள ‘கன்செப்சன்’ என்னும் நகரமும் அதையடுத்த பகுதிகளும் கொடிய பூகம்பத்துக்கு உள்ளாயின. அப்போது

அங்குள்ள வீடுகள் கிடுகிடுத்து ஆடி விழுந்தன. பாலங்கள் உடைந்து தகர்ந்து போயின. பல இடங்களில் தீப்பற்றிக் கொண்டது. வானம் கீறியது போல் பெருவெள்ளமாக மழை பொழிந்தது ; அந்நகருக்கு 25 கல் தெற்காக உள்ள காரனல் என்னும் சுரங்கப்பட்டணத்தில் உள்ள வீடுகளில் பாதி தகர்ந்து விழுந்தன. இன்னும் பல வெடித்துப் போயின. அயலில் உள்ள 'கிலோ வேக்' தீவிலும் 'லாங்கிவே' 'காட்டிரோ' முதலிய இடங்களிலும் பூகம்பத்தால் மிகுந்த சேதம் உண்டாயிற்று.

"கன்செப்சன் நகரத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒருவரும் எதிர்பாரா நிலையில் திடீரென்று இந்தப் பேராபத்து அவர்களைத் தாக்கியது. அவர்களில் பலர் துரதிட்டம் வாய்ந்த அந்த நகரை விட்டு வெளியேறிக் காடுகளையும் வயல்களையும் அடைந்து அப்பாற் சென்று உயிர் தப்ப முயன்றார்கள்.

'வீடுகளும் கட்டடங்களும் நொறுங்கி விழுந் த போது அவற்றில் பலர் அகப்பட்டுக் கொண்டு மாண்டார்கள். உடைந்து விழும் பாலங்களில் இருந்து ஆற்றில் தள்ளப்பட்டுப் பலர் உயிர் இழந்தார்கள். அவர்கள் செல்லும் பாதைகள் பல கீறியும் வெடித்தும் வாய் பிளந்தும் வழி மறித்தன. பூகம்பத்தால் இடிந்து விழும் கட்டடங்களின் பேரோசையும் இங்கும் அங்கும் பற்றி வானை நோக்கி எழும் தீயின் செந்நாவும் அவர்களை அச்சுறுத்தி வெருட்டின. ஆகாயவிமானங்கள் வானில் ஏறிப் பறக்க முடியவில்லை. அதனாலும் தந்திக் கம்பிகள் டெலிபோன் கம்பிகள் முதலியன அறுந்து போனதாலும் அங்கு நிகழும் செய்திகளை வெளியிடங்களுக்கு உடனே அறிவித்துத் துணை தேட வழியில்லாமல் போய்விட்டது. சுமார் 70,000 சதுர மைல் பரப்புள்ள நிலப்பகுதி இவ்வாறு பெருஞ்சேதத்துக்கு உள்ளாயிற்று,

நிலம் கீற, வானம் பொழிய, தீ சூழ, நேர்ந்த சேதங்கள் போதா என்பது போல் கடலில் இருந்து ஆழிப்பேரலைகள் கிளம்பி, நிலத்தின் மீது படையெடுத்து வந்து அதை மோதிப் புடைத்து அழித்தன. கோரல் முதலிய சிற்சில இடங்களில் இந்த அலைகள் 30 அடி உயரம் வரை ஓங்கி உயர்ந்தன. லே பூ முதலிய வேறு இடங்களில் 10 அடி உயரமும் வேறு சில இடங்களில் சற்றே குறைந்தும் மிகுந்தும் காணப்பட்டன.

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சான்பிரான்சிசுகோ நகரிலும், மெக்சிகோவில் உள்ள சாண்டியாகோ

துறைமுகத்திலும் சுமார் 5000 மைலுக்கு அப்பால் உள்ள நியூசிலாந்திலும் இந்த ஆழிப் பேரலைகள் மோதின. அங்குள்ள படகுகளைத் தகர்த்தன. கடற்கரை ஓரத்தில் இருந்த கட்டடங்கள் பண்டகசாலைகள் முதலியவற்றுக்குப் பெருஞ்சேதம் விளைவித்தன.

சிலி நாட்டில் இருந்து பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தில் உள்ள ஜப்பான் தீவுகளின் கீழ்க்கரையிலும் இவை மோதிப் புடைத்தன. அங்குச் சிற்சில இடங்களில் இவற்றின் உயரம் சுமார் 20 அடியாக இருந்தது. இந்த அலைகள் வெறி பிடித்தவை போல் மீண்டும் மீண்டும் பின் வாங்கி முன் வந்து தாக்கிப் புடைத்தன. நூற்றுக்கணக்கான மீன்பிடி படகுகளும் பிற வகைப்படகுகளும் கட்டறுக்கப்பட்டுக் கடலில் இழுத்துச் செல்லப்பட்டும் கரையில் மோதப்பட்டும் சேதமுற்றன.

டோக்கியோ நகரத்துக்குச் சுமார் 200 மைல் வடகிழக்காக உள்ள சேந்தை என்னும் பட்டினத்தில் சுமார் இரண்டு லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆழிப்பேரலைகள் அந்த ஊரைத் தாக்கின, அவற்றின் தாக்குதலுக்குப் பின் கடல்நீரின் வெள்ளத்தையும் இடிந்த கட்டிடங்களையும் அவற்றில் மிதக்கும் பகுதிகளையும் தவிர வேறொன்றும் அங்கு உயரப் பறந்த விமானிகள் கண்ணுக்குத் தெரியவில்லை. அந்த ஆழிப்பேரலைகள் சுமர் 20 நிமிடத்துக்கு ஒரு முறையாகப் பலமுறை மோதியதால் சப்பான் நாட்டில் கரை ஓரத்தில் உள்ள ஊர்களில் பல, வெள்ள நீரில் மூழ்கிப் பெருஞ்சேதம் அடைந்தன.

பல்லாயிரக்கணக்கான குடிசைகளும், வீடுகளும் அழிந்து போயின. நியூசிலாந்து, ஆத்திரேலியா, பார்மோசா, காவாய் முதலிய தீவுகளின் கிழக்குக் கரைகளிலும் தென் கிழக்குப் பகுதிகளிலும் மிகுந்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாயின. சிலி நாட்டில் முதலில் தோன்றிய பூகம்பத்தைத் தொடர்ந்து சில நாள்கள் வரை பூமி சிறிதோ பெரிதோ ஆடி வந்தது. அங்கிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள பிலிப்பீன் தீவுகளில் ஒன்றாகிய மணிலாத் தீவும் தெற்கே உள்ள நியூசிலாந்து தீவின் சிற்சில பகுதிகளும் ஆடி அசைந்தன. சிலி நாட்டில் உள்ள எரிமலைகள் நெருப்பு, புகை, கரி முதலியவற்றைக் கக்கத் தொடங்கின. அவற்றுள் ஒன்றாகிய யூயேவே என்னும் எரிமலை அவற்றை 7000 மீட்டர் உயரம் வானத்தில் வீசிற்று.

அங்குள்ள எரிமலைகள் எல்லாமே விழித்தெழுந்தன, நெருப்பை உமிழ்ந்தன”

– இது அறிஞர் பெ. நா. அப்புசாமி அவர்கள் கலைக்கதிர் பொங்கல் மலரில் (1962) எழுதிய ஆழிப் பேரலைச் செய்தி.

அறிவியல் வளர்ந்த இந்நாளிலேயே இயற்கையில் சீற்றத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை ! ஓடிப்போய் உதவ முடியவில்லை! ஓடித்தப்ப முடியவில்லை! மேலே பறந்தும் பார்க்க முடியவில்லை. 70000 சதுரக்கல் பரப்பு நிலம் பாழாயிற்று! எண்ணத் தொலையா இழப்புகள் நாடு நாடாக அழிபாடுகள்

இவை,

“பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொண்ட”
(சிலம்பு)

கொடுமையை உலகறியக் காட்ட வல்லனவாம்!

இத்தகு இயற்கை எழுச்சியை வள்ளுவக் கிழவர் கண்டாரோ! “என்னே இயற்கை! என்னே இயற்கை; , ஆக்கமும் கேடும் ஆக்கும் இயற்கை” என்று நினைத்தாரோ?

அதனால்,

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந் துறும்” (380)

என்றாரோ ?

12. யாதானும் நாடாமால்

ஒரு புத்தக அங்காடியில் வேலை ; நூல் விற்பனையாளர் அவர் வேலைக்கும் ஒரு நாள் ஓய்வு வந்தது. அவருளம் நினைத்தது ;

“வேலை இல்லாப் பொழுது என்ன, வெட்டிப் பொழுது!”

“வாழும் விருப்பினர், வெட்டிப் பொழுதை விரும்பக் கூடுமோ?”

படித்த படிப்பைப் பட்டப் படிப்பு ஆக்க எண்ணினார்;

எண்ணியபடியே எழுச்சியாய்ப் படிப்பில் இறங்கினர்.

இளங்கலை உயர்நிலை (B.A.ஆனர்சு) படிக்க விரும்பி அஞ்சல் வழியில் தொடர்ந்தார்.

விரும்பிய பட்டம் விரும்பியவாறே பெற்றார்.

அப்பொழுது அவர்தம் அகவை 75.

அடுத்தும் படிக்கத் தொடுத்தார். அதே அஞ்சல் வழியே வழியாய் மெய்யியல் (எம். பில்) கற்றார்.

அந்தத் தேர்விலும் வென்றார்.

அப்பொழுது அவர்தம் அகவை 83.

பல்லும் போகி, சொல்லும் போகி, முதுகும் கூனி முட்டி தட்டும் பொழுதில், "இளமையில் கல்" என்பது போலவா படித்தார்? வேலை நோக்கியோ – வருவாய் கருதியோ – பயின்றார்?

பயின்ற பாட்டியின் பெயர் திருமதி ஆலிவு இரசல்,

இங்கிலாந்து நாட்டு காரோ என்னும் ஊரினர்.

கிளாசுக்கோ பல்கலைக் கழக மாணவியர் அவர்.

ஆயிரம் பிறை கண்டு கடந்த பின்னரும் கல்வியார்வம் குன்றா இவரைப் போலும் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ? என்னே கல்விக் காதல் என்னே கல்விக் காதல்

என்று வியந்து நின்றாரோ ?

அதனால்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (397)

என்றாரோ ? ஒருவன் என்றது ஒருத்தியையும் சுட்டுவதுதானே.

செய்தி : தினகரன் 20-4-92.

13. ஒருமைக்கண் தான் கற்ற கல்வி

நண்பர் ஒருவர் அவர் நண்பரைத் தேடி வந்தார். வரவேற்பறையில் அமர்ந்தார்.

அவரை முன்னரே அறிந்த வேலைக்காரர் உண்ண அழைத்தார். வீட்டுக்குரியவர் ஆய்விலே மூழ்கிக் கிடந்தார்.

அவரொடும் உண்பதற்காகக் காத்திருக்க இயலாது!

வீட்டு அறிஞர்க்காகப் படைத்து வைத்த உணவு மேசை மேல் வைத்து மூடப்பட்டிருந்தது.

வந்த நண்பர் அழைத்ததும் சென்றார்

இருந்த உணவு தமக்கென எண்ணி உண்ணத் தொடங்கினார். வீட்டவர்க்குரிய தட்டெனத் தடுக்க முடியா நிலையில் வேலையாள் திகைத்தார்.

வந்தவர் உண்டு முடித்து மீளவும் விருந்தினர் அறையில் இருந்தார்.

நல்ல பசியால் தூண்டப்பட்ட அறிஞர். ஆய்வகத்திலிருந்து உணவு மேசைக்கு வந்தார்.

நண்பரையும் அழைத்துக் கொண்டு வந்து அமர்ந்தார்.

தாம் உண்ணும் தட்டு மூடியிருக்கக் கண்டு வழக்கமாய் உள்ள தட்டெனத் திறந்தார். வந்தவர் உண்ட கலத்தை எடுத்து மாற்றாமல் வேலையாள் இருந்ததால் நேர்ந்தது இது.

அறிஞரோ உண்கலம் கண்டு பெருகச்சிரித்தார். என்ன என் நினைவு சாப்பிட்டு விட்டுச் சாப்பிடவில்லை என்று சாப்பிட வந்துள்ளேன் என்றார்.

இல்லை இல்லை நான் உண்டு வைத்தது அது ; நீங்கள் சாப்பிடவே இல்லை என்றார்.

எனக்குள்ள பசியைப் பார்த்தால் நீங்கள் சொல்வது சரியாய் இருக்கலாம் என்ன மறதி எனக்கு என்று மேலும் நகைத்தார். தம்மை மறந்து ஊணை மறந்து உறக்கம் மறந்து ஒருமுகப்பட்ட ஆய்வே ஒருமைக்கட் டான் செய்யும் ஆய்வாம். இந்த அறிஞர் ஐசக்கு நியூட்டனார் என்பார்.

ஒரு குத்து விளக்கு வெளிச்சம்!

ஒரு மாணவர் படித்துக் கொண்டிருக்கிறார்

அவர்க்குக் கற்பிக்கும் ஆசிரியர் உள்ளே போகிறார்; வெளியே போகிறார், திண்ணையில் நிற்கிறார் : திரும்பி வருகிறார்; விளக்கின் பக்கம் செல்கிறரர் வீடெல்லாம் பார்க்கிறார்; மூக்கைப் பொத்திக் கொண்டே இப்படித் திரிகிறார். கடைசியில் கண்டார்!

எண்ணெய்க் குடத்தில் எலி விழுந்து செத்திருக்கிறது அது அழன்று அழுகியும் போனது.

அக்குடத்து எண்ணெயை எடுத்து விளக்கு ஏற்றப்பட்டது.

அந்நாற்றமே சுற்றிச் சுற்றிச் சுழல்கின்றதெனக் கண்டார். ஆனால் மாணவர்க்குத் தெரியவில்லை ! அவர் படித்துக் கொண்டிருந்தார்.

இஃது ஒரு நாள் நிகழ்ச்சி:

இன்னொரு நாள் நிகழ்ச்சி:

ஆசிரியர் உண்டார்; "உறைப்பு இல்லை. உப்பு இல்லை" என்றார். அவர் துணைவியார் அந்த மாணவனைச் சுட்டி " இதுவும் சாப்பிடத் தானே செய்தது; உறைப்பு இல்லை; உப்பு இல்லை; என்று சொல்லவில்லையே" என்றார். அதற்கு ஆசிரியர், "அவனுக்கு என்ன வேண்டும்? நன்னூல் வேண்டும்; பிரபுலிங்கலீலை வேண்டும். வேறென்ன வேண்டும்? "என்றார். தம் தந்தையார் கற்ற கல்வி நிலையை இப்படிச் சுட்டி எழுதுகிறார்.

ஆசிரியர் அரசு (செந். செல். 181505 – 7)

"யான் படிக்கும் போது என்னை நான் அறியேன் " என்னும் வள்ளலாரின் ஓதாக்கல்வி என்பது ஈதேயாம்!

இத்தகு காட்சிகளை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

அருமை! அருமை! என வியந்து நின்றாரோ ?

அதனால்,

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." (398)

என்றாரோ ?

14. தினைத்துணையாம் குற்றம்

வெரியர் எல்வின் என்பார் கிறித்தவத் துறவர் பயிற்சியர்.

அவர் வட்டம் சமயங் கடந்ததாக விரிந்தது.

உலகப் பார்வை அவர் பார்வை யாயிற்று.

உயிர் நேயப் பார்வை அவர் பார்வை யாயிற்று. மாந்த இயல் கல்வியில் மாப் பேரறிஞராகவும் விளங்கினார். இங்கிலாந்து மண்ணவர் அவர்.

இந்திய மண்ணில் தம் பணியை ஊன்றினார்.

ஊன்றிய அவர்க்கு, உரிமை வேட்கையர் காந்தியடிகளின் தொண்டு உவகையாயிற்று.

அத்தொண்டிலேயும் ஆட்படுத்திக் கொண்டார்.

சமயச் சால்பு – தொண்டின் ஊற்றம் – எழுத்து ஆற்றல் – உலக நேயம் எல்லாம் கூடிய ஓர் உருவராக எல்வின் விளங்கினார்.

அவர்தம் கல்விக்கால இளந்தைப் பருவத்தில் தாம் அவ்வப்போது செய்த குற்றங்களைப் பங்குத் தந்தை முன்னே ஒளிவு மறைவு இன்றிக் கூறிப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்னும் மன்றாட்டு நிகழ்ச்சியின்போது, நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று:

· ஒவ்வொரு வாரமும் அவ்வாரப் பிழைகளைக் கூறிப் பொறுத்துதவ வேண்டும் வேண்டுகையில் ஒரு வாரத்தில் அன்று –பல வாரங்களில் எண்ணிப் பார்த்தார். பிழையென ஒன்று செய்ததாகத் தோன்றிற்றில்லை. ஒரு கிழமை மின்வெட்டென ஒரு குறை தோன்றிற்று. அது என்றோ தாம் இலண்டன் வீதியில் செய்த பெரும் பிழைச் செயல் என்னும் ஒன்றேயாம்.

அவ்வொரு பெரும் பிழையும்தான் என்னவாம்? தெரு வழியாக நடக்கும்போது அடக்க முடியாமல் எழுந்துவிட்ட மூக்கைத் தெருவில் சிந்தி விட்டதாகுமாம், இந்த மண்ணிலே எவருக்கேனும் தெருவில் மூக்கைச் சிந்திய இது செய்யத்தகாக் குற்றமெனத் தோற்றவும் தோற்றுமோ? தோற்றியதாமே எல்வினுக்கு! தோற்றியதால்தானே அதனைப் பொறுத்துதவத் திருத்தந்தை வழியே தெய்வத் தந்தைக்கு வேண்டுகை விடுத்தார்.

எல்வின் போலும் சால்பரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே சால்பு! என்னே சால்பு' என வியந்து நின்றாரோ?

அதனால்,

> "தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழிநாணு வார்" (433)

என்றாரோ ?

செய்தி : தமிழர் தடங்கல் க. ப. அறவாணன் பக். 18,

15. தேரான் தெளிவும்

நாடாளுமன்ற அவைத்தலைவர் உக்கும் சிங்.

அவர் பதவியேற்ற பின் பணம் சேர்த்து விட்டார் என்று நாளிதழ் ஒன்று குற்றம் சாற்றியது.

அது பற்றி வினா எழுந்தது நாடாளுமன்றத்தில்,

அவைத் தலைவர் என்ன சொன்னார்.

தட்டிக் கழித்தாரா? குறை கூறியது தவறு என்றாரா? இதழ் காட்டிய குற்றம் பற்றியோ அவையில் எடுத்துக் கூறியது பற்றியோ மனத்தாங்கல் கொண்டார் அல்லர்! மாறாக, குற்றத் தொடர்பான எல்லா விளக்கங்களையும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப் போவதாகவும் அவையின் உறுப்பினர்கள். தீர்ப்புக்கு விட்டு விடப் போவதாகவும் தெளிவாக உரைத்தார்.

"குறை மெய்யானது அன்று; அதனை நாங்கள் அறிவோம்" என உறுப்பினர்கள் பலர் அப்பொழுதேயே உரைத்தனர். "அவைத் தலைவரை மாசு கற்பிப்பது நாட்டுக்கே மாசு கற்பிப்பது மேற்கொண்டு ஆய்வு நடத்த வேண்டியது இல்லை" என்று தலைமையமைச்சர் இலால் பகதூர் சாத்திரியார் கூறினார். "அவைத் தலைவர் பதவி நாட்டின் தலைவர் பதவிக்கு இணையானது. பொய்க் குற்றச்சாற்றை உதறித் தள்ளுதலே முறை" என்றார் இலோகியா,

"இக்குற்றச் சாற்றுக்குச் சற்றேனும் மதிப்புத் தருதல் ஆகாது. தந்தால் இம்மாதிரிக் குற்றச் சாற்றுகளை வெளியிடவும் பரப்பவும் ஊக்கப்படுத்தியதாகிவிடும் என்றார் பகத்துசா,

இவற்றால் எல்லாம் உக்கும் சிங்கை அசைத்துவிட முடியவில்லை. கொள்கை வீரராக நின்றார்.

"குறை கூறியிருப்பவர் எவர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்; குறை கூறியிருப்பவர் தகவற்றவராக இருந்தால் அவர் கூறிய குறையைப் பொருட்படுத்தாமல் ஒதுக்கி விட வேண்டும். தகவுடையவராகக் குறை கூறியவர் இருப்பின் சீரிய ஆய்வு நடத்தியே தீர வேண்டும் ; இப்பொழுது கிளப்பி உள்ள குற்றச் சாற்று பொறுப்பற்ற ஓர் இதழினது. ஆதலால் இதனைத் தள்ளுபடி செய்தலே தக்கது என்று மீளவும் தலைமை அமைச்சர் வலியுறுத்தினார்.

இதற்கும் அசைந்தார் அல்லர் உக்கும் சிங்

தம்மிடம் அவை வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நன்றி. தெரிவித்தார். குறை கூறப்பட்ட செய்தி தொடர்பான எல்லா ஆவணங்களையும் அவையில் வைப்பது பற்றிய தம் கருத்தை மாற்றிக் கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார்.

சரி பின்னே என்ன ஆனது?

அவர் சொல்லிய ஆவணங்களோடு அவைக்கு வந்தார்.

ஆளும் கட்சியர் முன்னர் ஆவணங்களை வைப்பதினும் எதிர்க் கட்சியர் முன்னர் வைப்பதே சால்பு எனக் கொண்டு அவ்வாறே வைத்தார்!

எதிர்க்கட்சி உறுப்பினர் என்ன செய்தனர்?

என்னென்னவோ பேசினார்.

ஆவணங்களைத் தொட்டுப் பார்க்கவே இல்லை!

உக்கும் சிங்கின் மெய்ப்பாட்டின் மேம்பாட்டைப் பாராட்டுவதா? அம் மெய்ப்பாட்டில் ஆளுங்கட்சியொடு, எதிர்க்கட்சியினரும் ஒருங்கே கொண்டிருந்த நம்பிக்கையைப் பாராட்டுவதா?

இத்தகும் நிகழ்வுகள் ஒன்றோ பலவோ வள்ளுவக் கிழவர் கண்டாரே?

அவற்றை எண்ணி எண்ணி நின்றாரோ ?

அதனால்,

“தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்” (510)

என்றாரோ?

செய்திகள் : 22-9-64; 3-10-64

16. ஒற்றும் உரை சான்ற நூலும்

மனைவி மேல் கசப்பு

கொன்றே போட்டார்.

கொன்றதை மறைக்க வேண்டுமே! மரத்தைக் கூழாக்கும் பொறியிலே மரத்தொடு மரமாய்க் கூழாய் ஆக்கினார்.

கூழைப் பரந்த வெளியில் தெளித்தார்.

வேலை முடிந்ததாய் வீடு சென்றார்.

மனைவியாய் இருந்தவள் வான ஊர்தியில் பணிப்பெண்,

அவளுக்கொரு தோழி.

அவளிடம் சொல்லியிருந்தாள்! "என் கணவன் என்னைக் கொன்று போடுவான்"

வான ஊர்தித் தோழியைக் காணாத் தோழிக்குக், கணவனைப் பற்றி அவள் சொன்னது நினைவில் வந்தது.

துப்புத் துறைக்குச் செய்தி தந்தாள்.

ஆய்வு தொடர்ந்தது .

பனிப்புயல் நாளில் மரக்கூழ்ப் பொறியை ஒருவர் தள்ளிச் சென்றதைப் பனியை அகற்றும் ஒருவன் கண்டதாகக் கூறினான். ஏரியொன்றில் மரக் கூழ்ப் பொறி மூழ்கிக் கிடப்பதைக் கண்டுபிடித்தனர்.

விரலம் விரலமாக ஒரு நூறு பேர்கள் தேடினர்.

தசையொடு கலந்த மரத்துகள்கள் சிக்கின.

சிக்கிய துண்டுகள் 56.

ஒரு பல், கட்டை விரல் நுனி, சில எலும்புகள், தலைமுடி ஆகியவும் சிக்கின.

மரக் கூழ்க் கருவியில் ஒட்டிய தசையும், தெளிக்கப்பட்டு மண்ணில் கிடந்த தசையும் ஒன்றாய் இருந்தன.

விரல் நகப் பூச்சும் இறந்து போனவள் வீட்டில் இருந்த நகப் பூச்சும் ஒன்றாய் இருந்தன.

மண்ணில் கிடைத்த தலைமுடியும் வீட்டில் இருந்த சீப்பில் ஒட்டியிருந்த தலைமுடியும் ஒப்பாய் இருந்தன.

மரக் கூழ்ப் பொறியை வாங்கிய சீட்டில், இறந்தவள் கணவன் பெயர் இருந்தது!

கணவனே கொலைஞன் என்று மெய்ப்பிக்கப்பட்டது.

கொன்றவன் ரிச்சர்டு கிராப்ட்,

கொல்லப்பட்டவள் கெல்லி.

கொலையைக் கண்டுபிடித்தவர் லீ.

அமெரிக்கக் கனெக்டிகட்டு மாநிலத் தடயவியல் இயக்குநர்.

எத்தகைய திட்டமிட்ட கொலை.

எத்தகைய திட்டமிட்ட தடய அழிப்பு!

இவற்றையும் வெற்றியாகக் கண்டு மெய்ப்பித்தது ஒற்று!

இத்தகும் ஒற்றில்லை யானால், மரக் கூழ்ப் பொறியெலாம் மாந்தக்கூழ்ப் பொறியாகி விடுமே!

முறைமையைக் காக்க இத்தகைய முழுதுறும் ஒற்று இன்றி முடியுமா?

முற்ற முடிந்த மறைப்பையும் காணவல்ல

இத்தகும் ஒற்றரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ? இவர் திறம் என்னே என்னே என்று வியந்து நின்றாரோ? அதனால்,

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்." (581)

என்றாரோ?

செய்தி தினமணி 19-3-92.

17. பழுதெண்ணும் மந்திரி

சப்பானியத் தலைமையமைச்சர் மியாசவாவின்,

அவருக்கு நண்பர் முன்னாள் அமைச்சர் பியூமியோ அபி. அரசின் கமுக்கத் திட்டம் ஒன்று

புதிதாக உருவாக்க இருந்த விரைவு வழித்தடத் திட்டம்.

அதனைப் பியூமியோ இரும்புக் குழுமம் ஒன்றற்கு மறைமுகமாக வெளியிட்டுதவினார்.

இரும்புக் குழுமம் இதற்குத் தந்த கையூட்டோ ஆறு இலக்கத்து நாற்பது ஆயிரம் அமெரிக்கத் தாலர்.

இரும்புக் குழுமத்திற்குப் பலப்பல ஒப்பந்தங்களைக் குறுக்கு வழியில் தந்து விடவும் திட்டம்!

பியூமியோ திட்டம் ஊழல் ஆய்வுத் துறைக்குக் காற்றாய் அடித்தது. விளைவு?

பியூமியோ சிறைப்படுத்தப்பட்டார்.

நண்பரும் தலைமையமைச்சருமான மியாச வாவுக்கும் தொடர்பு உண்டோ? என்ற ஐயம் எழுமா இல்லையா? நன்றாய் எழுந்துவிட்டது. சான்றெதுவும் இல்லை எனினும் குற்றம் சார்ந்து கொள்ள நிற்கிறது.

அமைச்சு நண்பர் பழுதுத்திட்டம் தலைமைக்குத் தலைக்குனிவு மட்டுமா? தேர்தலில் வீழ்ச்சியும் தழுவ நேருமாம்!

இக்கட்டில் பட்டு இனைகிறார் தலைமையமைச்சர்!

இத்தகு காட்சியை வள்ளுவக்கிழவர் அந்நாள் நிலையில் கண்டாரோ?

என்னே இழிமை என்றே வருந்தி நின்றாரோ ?

அதனால்,

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்" (639)

என்றாரோ?

செய்தி : தினமணி 6-8-92.

18. விரைந்து தொழில் கேட்கும்

ஒரு பெரு விழா

அறிவியல் ஆய்வுக் கூடத் திறப்பு விழா!

பொதுமக்கள் பெருந்திரள் – மாணவர்கள், ஆசிரியர்கள் ஆயோரைச் சேர்த்தால் ஆயிரவர்க்கு மேல்!

மாலையில் நிகழ்ச்சிக்கு முன் விருந்து.

எவரோ – முந்தி வந்தவர் – தம் இலையை வாயிலின் முன்னே போட்டார்.

வழி வழி அப்படியே ஆயிற்று. ஆயிரவர் இலைகளும் வாயிலில் கிடந்தால்? ஓர் ஆசிரியர்க்குப் பளிச்சிட்டது ! அவ்வளவுதான் அவர் குனிந்தார் – கிடந்த இலைகளை எடுக்கத் தொடங்கினார்.

என்ன ஆனது ? ஐயா ! ஐயா நாங்கள் எடுக்கிறோம் – என மாணவக் கும்பல் வாரியது!

பொது மக்களும் குனிந்தனர்!

பின்னே வந்தவர்கள் இலைபோடும் ஒதுக்கிடத்தில் தாமே போட்டனர்.

தூய்மைக் கேடு எவ்வளவு எளிதில் நேரிட்டது?

தூய்மை ஆக்கம் எவ்வளவு எளிதில் ஆயிற்று!

உள்ளம் ஒன்றிய உண்மைத் தொண்டு,

ஊரை ஆளும்! உலகை ஆளும்.

இது இலை போட்ட ஒரு காட்சி!

இன்னொன்று இலை பறித்த காட்சி!

ஒரு மருத்துவமனை.

அதன் முற்றத்தில் அருமையாகக் கவிந்து நின்ற நிழல் மரம் கையெட்டும் அளவில் தாழ்ந்த கிளைகள்! தளிர் இலைகள்! வெயிலைத் தான் தாங்கிக் கொண்டு, தண்ணிழல் வழங்கும் வேம்பு.

காலமோ பங்குனி கடந்து சித்திரை பிறந்த மறுநாள்

ஒரு சிறுமி எக்கி நின்றாள். ஒரு கிளையைப் பற்றித் தழையை ஒடித்தாள்.

அவளோடு வண்டியில் வந்திறங்கிய குழந்தைகள் அறுவர் எழுவர். உடன் வந்த, பெரியவர்கள் எல்லாம் மருத்துவ மனைக்குள். இவர்கள் ஆட்டம் இங்கே!

ஒவ்வொரு குழந்தை கையிலும் வேப்பங்குழை!

இரண்டு இரண்டு கைகளிலும் வேப்பங்குழை!

ஒரு பெரியவர் கண்டார்.

முதற்கண் ஒடித்து வழிகாட்டிய சிறுமியை அழைத்தார்.

நீ ஒடித்தாய் பார் எத்தனை பேர்கள் எவ்வளவு கிளைகளை ஒடித்துளர்?

எவ்வளவு அருமையாக ஆடிக்கொண்டிருந்தது! வாடச் செய்து விட்டாயே நீ !

எத்தனை பேர்க்கு நிழல் தந்தது இது!

அறிவிலா அது தரும் நிழலை அறிவுப் பிறப்பு கெடுக்கலாமா?

என்றார்.

அறிவறிந்த செல்வி தலைநாணினாள்!

தவற்றை உணர்ந்த தகவு அது!

இது பெரும் குற்றம் இல்லை.

விளையாட்டாகச் செய்தாய் !

வினையாக முடிந்தது.

தப்புக்கு வழி காட்டாதே! தப்புக்கு வழி காட்டின் தொடர் தப்பைத் தோற்றுவித்த குற்றம் நம்மதே என்பதை உணர்ந்தால் போதும்!

தப்பு நடப்பதைக் காணும் போது இயன்ற அளவு தடுக்க முற்படுகிறாயா ? அது உலக நலத் தொண்டு என்றார். அடுத்த நாள் மருத்துவமனைக்கு வந்த அந்தச் சிறுமி, வேப்பங்கன்று ஒன்றைக் கொண்டு வந்து ஊன்றினாள்!

திருந்திய மனம் வருந்திய பரிசு இவ்வேம்பு!

எவ்வளவு இனிப்பான நிகழ்ச்சி!

இத்தகு நிகழ்ச்சிகள் போலும் நிகழ்ச்சிகள் நிகழக் கண்டு கண்டு களித்தாரோ வள்ளுவக் கிழவர்.

என்னே அருமை! என்னே அருமை! என்று வியந்து நின்றாரோ ?

அதனால்,

> “விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்” (648)

என்றாரோ ?

சொல்லலில் செய்தல் உயர்ந்தது தானே !

19. பேராண்மை என்ப தறுகண்

இத்தாலியருக்கும் அபிசீனியருக்கும் கடும் போர்!

களத்திலே தோல்வி அபிசீனியருக்கு

தப்பியோடும் நிலை அபிசீனியருக்கு

விடாமல் வெருட்டித் தாக்கும் வாய்ப்பு இத்தாலியருக்கு.

ஓட ஓட வெருட்டல்,

ஒதுங்க வாய்ப்பான இடம்!

அபிசீனியர் மறைதற்குச் சென்றனர்,

ஆனால் அங்கே ஒரு பெண் நின்றாள்.

அவள் கூறிவிட்டால்?

ஒருவன் சென்றான், "நீ எங்களைத் துரத்தி வரும் இத்தாலியருக்கு எங்களைக் காட்டித் தந்து விடாதே. காட்டித் தந்தால் நம் நாட்டுக்கே கேடு தான்" என்றான்

ஒதுங்கி மறைந்து கொண்டனர்.

அவளோர் அபிசீனியப் பெண் ; நாட்டுக்காகத் தன் பெற்றோர் உற்றோர் உறவெல்லாம் பறி கொடுத்து நின்றவள். வயது பதினெட்டு.

அவளை இத்தாலியப் படை கண்டது; வளைத்தது

"அபிசீனியப் படையைக் கண்டாயா?"

"இல்லவே இல்லை"

"உண்மையைக் கூறு; இல்லையேல் உயிரை இழப்பாய்"

"அபிசீனியப் படை வந்தால் அல்லவா சொல்வதற்கு?

வந்திருந்தால் என்ன வந்தது சொல்வதற்கு?"

"வாயால் கேட்டால் சொல்ல மாட்டாய்; கொடுப்பதைக் கொடுத்தால் கூறுவாய் ; உயிரோடு இருக்க எண்ணினால் உண்மையைக் கூறு.

"எவரையும் பார்க்கவில்லை"

அடித்து வருவிக்க ஏவினான் தலைவன்!

அடித்து அடித்துக் கேட்டனர்;

துடித்துப் போகவில்லை அவள்!

அடித்தவரே துடித்துப் போயினர்!

இடுப்பில் இருந்த கத்தியை நறுக்கென எடுத்தாள் அவள்!

தன் நாவை நீட்டிக், கத்தியால் நறுக்கென அறுத்துப் போட்டாள். ஏன் அறுத்தாள்?

"அடியைத் தாங்கா நிலையில் தன்னை மறந்து நாக்கு ஏதாவது உழறி விட்டால்? நாக்கே இல்லை என்றால் நானே நினைப்பினும் சொல்ல முடியாதே!"

எண்ணியவாறு செயல் பட்டாள் – சுற்றி நின்றவர் எண்ணம் ஒழியச் செயல்பட்டாள்.

பொறுப்பானா தலைவன்?

"நாவை அறுத்துக் கொண்டதே, இவள் படையைக் கண்டதை மெய்யாக்கி விட்டது! என்னிடம் செய்தியை வாங்கவா பார்க்கிறாய்? பார்" என்று செய்து விட்டாள்!

உயிரோடு விடாதீர்கள்" என்றான்! அவன் சொல்லை முடிக்கு முன் செய்து முடித்தனர் படைஞர்.

கோழைப்பயல்கள் வீரத்திற்குத் தலை வணங்க வேண்டிய இடத்திலே,

தன்னை அழித்துக் கொண்டும் தன்னாட்டு வீரரையும் நாட்டையும் காக்க வேண்டும் என்னும் நாட்டுப்பற்றைக் கண்ட அளவிலே,

அவள் துணிவைக் கண்டு அவளைப் பெருமைப்படுத்தியிருக்க வேண்டும்! அது வீரம்! ஆண்மையில் ஆண்மை!

களப்போரிலே வந்த கடும்பகை எனினும் அவன் தன்னால் தாக்குண்டு வீழ்ந்து விட்டால், அவன் மேல் காட்டும் இரக்கம் . அவன் வீரத்தின் மேல் கொண்ட மதிப்பு – மிகுந்து செல்ல வேண்டும்.

இயலா நிலைக்குப் போன பின்னரும், எதிரியை எதிரியாகக் கருதும் எவனும் வீரன் அல்லன் ; கோழை! கோழையிற் கோழை!

இத்தகு நிமிர்ந்த வீரச் செயலை மதியாக் கோழையன் ஒருவனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

"என்னே இவன் கோழைமை! என்னே இவன் கோழைமை! எனக் குமைந்து நின்றாரோ?

அதனால்,

"பேராண்மை என்ப தறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு" (773)

என்றாரோ ?

செ. செ. 18 : 331 – 3. ஒரு வீரப்பெண் : "அரசு"

20. தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்

மைதானத்துக்கு அருகே உள்ள புல் தரையில் அவர் நடந்து கொண்டிருந்தார். தினந்தோறும் மாலையில் நடக்கும் பிரார்த்தனைக்காகச் சுமார் ஐந்நூறு பேர்கள் கூடியிருந்தார்கள்.

"இன்று பத்து நிமிடம் தாமதித்து விட்டேன். இப்படித் தாமதிப்பது என்றாலே எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஐந்து மணி அடிக்கும் போது இங்கே நான் கணக்காய் வந்திருக்க வேண்டும், என்று தமக்குத் தாமே பேசுவது போல் காந்தி உரக்கச் சொன்னார்.

பிரார்த்தனை மேட்டுக்கு ஐந்து சிறுபடிகள் இருந்தன. அவற்றை அவர் வேகமாகக் கடந்தார். மர மேடைக்கு இன்னும் சில கச தூரம்தான் இருக்கும். பிரார்த்தனை நடக்கும்போது அந்த மர மேடை மேலேயே உட்கார்ந்திருப்பார். கூட்டத்தில் இருந்தவர்களில் பெரும்பாலோரும் எழுந்து நின்றார்கள். பலர் முன்னே நகர்ந்து வந்தார்கள். சிலர் அவருக்காகச் சந்தில் வழி விலக்கி விட்டுக் கொண்டிருந்தார்கள். அவருக்கு மிக அருகே இருந்தவர்கள் அவருடைய பாதத்தைத் தொட்டு வணங்கினார்கள் ஆபா மனு இருவருடைய தோள்களிலுமிருந்து கைகளை எடுத்துக் குவித்து இந்து முறையில் காந்தி எல்லாருக்கும் வணக்கம் செலுத்தினர்ர்.

அப்போது ஒரு மனிதன், முழங்கையால் இடித்துத் தள்ளிக் கொண்டு கூட்டத்திலிருந்து சந்துக்குள் வந்து சேர்ந்தான். வழக்கப்படி காந்தியின் பாதத்தில் விழுந்து வணங்க விரும்பிய ஒரு பக்தன் மாதரி அவன் தோன்றினான். ஆனால் தங்கள் நேரம் கடந்து விட்டதால் அவனை மனு தடுத்து நிறுத்த முயன்றாள். அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். ஆனால், அவனோ அவளை உதறி ஒருபுறம் தள்ளினான். அவள் உருட்டி அடித்துக் கொண்டு போய் விழுந்தாள். காந்திக்கு எதிரே இரண்டடி தூரத்தில் அந்த மனிதன் வந்து நின்று கொண்டான். சிறிய ஆட்டோமாட்டிக் பிசுடல் ஒன்றால் மூன்று முறை சுட்டான்.

முதல் குண்டு பாய்ந்தது : இயங்கிக் கொண்டிருந்த காந்தியின் கால் தரையில் பதிந்தது. ஆயினும் அவர் நின்று கொண்டேயிருந்தார். இரண்டாவது குண்டு பாய்ந்தது ; இரத்தம் பீரிட்டு காந்தியின்

வெண்மையான துணிகளைக் கறைப்படுத்தத் தொடங்கியது. அவருடைய முகம் சாம்பலென வெளிறிட்டது கூப்பிய கைகள் மெல்லத் தளர்ந்து தொங்கின. ஒரு புஜம் மட்டும் கண நேரம் ஆபாவின் கழுத்தில் பதிந்திருந்தது.

கேராமா என்று காந்தி முணுமுணுத்தார். மூன்றாவது குண்டு வெடித்து வெளி வந்தது. துவண்ட உடல் தரையிலே படிந்து விட்டது. அவருடைய மூக்குக் கண்ணாடி மண்ணிலே விழுந்தது. பாதரட்சைகள் பாதங்களை விட்டு நழுவிக் கழன்றன. ஆபா, மனு இரண்டு பேரும் காந்தியின் தலையைப் பிடித்து நிமிர்த்தினார்கள். அன்புக் கரங்கள் அவரைத் தரையில் இருந்து தூக்கி, பிர்லா மாளிகைக்குள் அவருடைய அறையில் கொண்டுபோய்ச் சேர்த்தன. காந்தியின் கண்கள் பாதி மூடியிருந்தன. அவருடைய உடம்பில் இன்னமும் உயிர் இருக்கும் குறிகள் தென்பட்டன.

சற்றுமுன்பே மகாத்மாவை விட்டுச் சென்ற சர்தார்படேல் மீண்டும் அவருக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தார். காந்தியின் நாடியைப் பிடித்துப்பார்த்தார். நாடி மிகவும் பலவீனமாகத் துடித்துக் கொண்டிருப்பதுபோல அவருக்குத் தோன்றியது மருந்துப் பெட்டியில் அட்ரினாலின் இருக்கிறதா என்று யாரோ ஒருவர் தேடிப் பார்த்தார். அதைச் சிறிதும் காணவில்லை.

கூட்டத்தில் ஒருவர் சரேல் என்று ஓடி டாக்டர் டி.பி. பார்க்கவாவை அழைத்து வந்தார். துப்பாக்கி சுட்ட பத்து நிமிடத்துக்கெல்லாம் அவர் வந்து சேர்ந்தார். "உலகத்தில் உள்ள எதுவும் இனி அவரைப் பிழைப்பூட்ட முடியாது. அவர் இறந்து பத்து நிமிஷம் ஆகிவிட்டது என்று டாக்டர் அறிவித்தார்.

இத்தகு கொடுமை ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே கயமை! என்னே கயமை என்று நைந்தாரோ?

அதனால்,

"தொழுதகை யுள்ளும் படை ஒடுங்கும்"

என்றாரோ?

செய்தி : மகாத்மா காந்தி வாழ்க்கை. பக், 2-3, லூயிஃபிசர் ;

தமிழ் : தீ. ச. ர

21. ஒன்னார் அழுத கண்ணீர்

ஒரு பெரிய தொழிற்சாலை,

செயற்கை இழை உருவாக்கும் தொழிற்சாலை,

உருபா 220 கோடித் திட்டம் என்றால் விளக்க வேண்டுமா ?

அடுத்த ஒரு திங்களில் ஆலை இயக்கமாம்

இயக்கத்தின் முன்னே அமைப்பின் சீர்மையை ஆய்ந்து மதிப்பிடும் பணி.

இந்திய மாநிலங்கள் அனைத்தில் இருந்தும் பொறியியல் வல்லார் தேர்ந்து வந்தனர்.

ஆலைக்குள்ளே பாடியமைத்துத் தங்கியிருந்தனர்

இரவுப் பொழுது,

சுவர் மேல் ஏறி உள்ளே குதித்தனர் நால்வர்.

'திருடன் திருடன்' என்று கூவினர்.

பாடியில் உறங்கிக் கிடந்தவர் ஒலியைக் கேட்டு ஓடி வந்தனர்.

கூச்சல் போட்டவர் கொடிய கருவிகளைக் கொண்டு இருந்தனர்,

கருவியைக் காட்டி வரிசையில் நிற்க வைத்தனர்.

அந்த மாநிலத்தாரை அப்பாற்படுத்தினர்.

அயல் நாட்டாரையும் அப்பாற்படுத்தினர்.

அயன் மாநிலத்தார் பதினைந்து பேர்கள்; அவர்களை

வரிசையாய் நிறுத்தித் தாறுமாறாகச் சுட்டுக் கொன்றனர்.

வந்த வேலை முடிந்ததும் தப்பிச் சென்றனர்.

கொலை செய்ய வந்தவர்.

கூச்சல் போட்டனர்.

கூச்சல் என்ன செய்தது

கூடிச் சேர வைத்தது!

வஞ்ச நெஞ்சம் வந்தவர் தம்மை

வன்கொலை செய்தது.

இத்தகு கொடுமையும் நிகழ்வுறும் என்று வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே! என்னே! என்று இரங்கி நின்றாரோ?

அதனால் முன்னே கண்ட தொழுத கையுள்ளும் படையொடுங்கும் என்பதனோடு,

"ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து" (828)

என்ன இணைத்தோர் குறளைத் தந்தாரோ ?

நிகழ்ந்த இடம் : பஞ்சாப் – கட்வன் கோட்டே ;

செய்தி : தினமணி ; 12-3-92.

22. ஒருமைச் செயலாற்றும்

அடுத்தும் அடுத்தும் இரண்டு வீடுகள்.

நாயைக் கொண்டும் பூனையைக் கொண்டும் நாயும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொள்வர்.

ஆண்கள் மட்டுமா? பெண்களும் கூடவே.

ஒருவர் வீட்டில் கிடந்த நாளிதழ் ஒன்று ஈரமாய் இருந்தது. ஈரம் என்றால் எத்தனையோ வழிகளால் ஏற்பட்டிருக்கக் கூடுமே!

எண்ணிப் பார்த்தார் அல்லர்.

அடுத்த வீட்டு நாய் தான் நீரைப் பெய்து ஈரமாக்கியதென்று முடிவு செய்தார்.

அவர்தம் மனைவி அந்தத் தாளை அடுத்த வீட்டார் மகிழ்வுந்துக் குள்ளே வீசி எறிந்தார்.

அதனை எடுத்து வீசி எறிந்தார் எறிந்தவர் மேலே! மீளவும் எடுத்து எறிந்தவர் மேலே, மேலும் எறிந்தார்.

மாறி மாறி இப்பணி முடித்து வீட்டுள் புகுந்தார் குற்றம் சாற்றப் பெற்ற நாயின் உரிமையர், மனைவியோடும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். குற்றம் சாற்றியவர் கையில் துமிக்கியோடு புகுந்தார். மனைவியோடு பேசிக் கொண்டிருந்தவர் மார்பை நோக்கிச் சுட்டார்.

அந்த நொடியிலேயே அவர் மாண்டார்!

சுட்டவர் மைக்கேல்.

சுடுபட்டு இறந்தவர் மார்ட்டின்!

காவல் துறையால் சிறைப்படுத்தப்பட்டார் மைக்கேல்.

அமெரிக்க நாட்டு சாண்டா கிளாரா என்னும் இடத்து நிகழ்ந்த நிகழ்ச்சியாம் இது. (தினமணி சூலை 22-1992)

இத்தகு அறிவிலா மூடம் ஒன்றைக்கூட வள்ளுவக் கிழவர் கண்டாரோ? மூடமே வடிவாம் மூடன் கேட்டுக்கு முடிவில்லை என்று நொந்துபோய் நின்றாரோ ?

அதனால்,

> "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
> தான்புக் கழுந்தும் அளறு"
> (835)

என்றாரோ?

(அறியாமையாகிய ஒன்றற்கே ஆட்பட்டுச் செயல்புரியும் அறிவிலி, பின்வரும் எக்காலமும் துன்பம் என்னும் புதை சேற்றுள் புகுந்து அழுந்துவான்.)

23. உண்ணற்க கள்ளை

பிரடரிக்கு நிக்காலசு சாரிங்டன் என்பார் ஓர் இளைஞர் ; தொண்டர் ; தொண்டர் சூழலர் , இங்கிலாந்து தேயத்தவர். ஏழை எளியவர் வாழ்பகுதியை அவர் உள்ளம் அடிக்கடி நாடும். அங்குள்ள தூய்மை இன்மையும் வறுமையும் அவரை வாட்டும்! தொண்டுள்ளம் கொண்டார்க்கு அவ்வாட்டுதல் ஒதுங்கச் செய்து விடுவதில்லை; மேலும் மேலும் அவ்விடத்து நாட்டத்தையே உண்டாக்கும் தானே!

சாரிங்டன் ஒரு நாள் சென்ற ஒதுக்குப்புற வறுமைப் பகுதி அடைசலான குடிசைகள்; சாய்க்கடை வழியும் தெரு;

அங்கொரு வாய்த் தகராறு,

கணவன் திட்டுகிறான் ; வைகின்றான்; அடித்தும் தள்ளுகிறான் ; யாரை?

அவன் கைப்பிடித்த மனைவியை!

கெஞ்சுகிறாள் ; மன்றாடுகிறாள் ; விழுகிறாள் ! அழுகிறாள்! தொழுகிறாள்!

அவள் உடையைப் பற்றிக் கொண்டு பிள்ளைகள் மூவர் நால்வர் கதறுகின்றனர் : தாயை விடுக்க முடியாமலும், தந்தையைத் தடுக்க முடியாமலும் விம்மியழுகின்றனர்; கதறுகின்றனர். குடித்து விட்டு இக்கொடுமை செய்கிறான் கணவன் என்றும் குடும்ப நிலைக்கு மன்றாடுகிறாள் மனைவி என்றும் உணர்ந்தார் - தடுத்து நின்றார் - சாரிங்டன்!

தடுக்கும் அவர் முனைப்பின் ஊடே, கண் ஆங்கிருந்த கடையின் பலகையால் இழுக்கப்பட்டது!

தலையைத் தொங்கப் போட்டார், நாணத்தால்! ஏனெனில் தம் தந்தையார் வைத்திருக்கும் மதுக்கடைகளுள் அக்கடையும் ஒன்று என்பதை அப்பலகை காட்டிற்று!

தாம் செய்யும் தொண்டுணர்வுக்கும், தம் தந்தையார் வாணிகத்திற்கும் உள்ள இடைவெளி பளிச்சிட்டது !

தந்தையாரின் வாணிகத்தில் ஈடுபடவோ, அவர் ஈட்டிய பொருளை வைத்துக் கொள்ளவோ, அவரோடு உடன் இருக்கவோ ஒப்பாராய் - ஒதுங்கினார்.

செல்வம் சிறிதா?

பதினெட்டுக் கோடி உருபா மதிப்பாம் அந்த நாளில்!

தந்தை மன்றாடினார்!

தம் முடிவு தக்க முடிவு என்றும், அதில் மாறப் போவது இல்லை என்றும் உறுதி கொண்டார் மைந்தர்.

மதுவிலக்கைப் பற்றியே தம் தொண்டை ஆக்கிக் கொண்டார்.

"பீரைக் குடித்து விட்டு அவன் தன் மனைவியை உதைத்துத் தள்ளியதே, என்னை என் தந்தையார் செல்வத்தில் இருந்தும், தொழிலில் இருந்தும் வீட்டில் இருந்தும் உதைத்துத் தள்ளிய தள்ளலாயிற்று" என்று எழுதினார்.

எளியோர் குடிசைப் பகுதியில், ஒரு குடிசையைத் தம் வாழ்விடமாக்கிக் கொண்டு மது விலக்குத் தொண்டில் அழுந்தினார்.

அகவை செல்லச் செல்லத் தந்தைக்கு, மகனின் செயல் மாண்பு புலப்பட்டது.

மகனுக்கு உதவவும் முன் வந்தார்.

"என் செயல் அழிபாட்டுச் செயல். நின்செயல் அழியாப் பெருஞ்செயல்; என ஒத்துக் கொண்டார்.

அவர் ஒத்துக் கொண்ட கால நிலை, உயிர்ப் போராட்டக் காலநிலை!

மைந்தர் போராட்டமோ அரசியல் சட்டத்தை மாற்றியமைக்கும் போராட்டமாகக் கிளர்ந்தது.

மதுவால் வெறியும் மயக்கும் செல்வமும் கொண்டவர்கள் எளிதில் விடுவரா?

சாரிங்டனைச் சொல்லால் தாக்கினர்; கல்லால் தாக்கினர்; கழியால் தாக்கி வீழ்த்தினர்; குருதி சொட்டச் சொட்ட வாட்டினர்! எனினும் உறுதி தளர்ந்தார் இலர்!

இதழ்கள் பழித்தன; அரசியலாளர் ஒழித்துக் கட்ட முனைந்தனர் குடியரும் வறியரும் தாமா கைகொடுத்து உதவ முன் வருவர்?

எடுத்த உறுதியை முடித்தே தீருவேன் என உறுதி கொண்ட சாரிங்டன், 'ஓசியா' என்னும் ஒரு தீவையே விலைக்கு வாங்கினார்! மதுவால் வந்த காசு மதுவிலக்குக்கு ஆயிற்று அதனை, மது விலக்குத் தீவு எனத் திட்டப்படுத்தினார். இங்கிலாந்து தேயத்திலே முழு மது விலக்குப் பகுதி அத்தீவே என்பதை உறுதி செய்தார்.

மதுவில் நீந்தியவர்களும் கூட, அதனை முற்றிலும் நீங்கி வாழும் பண்பாட்டு மையமாக ஓசியா விளங்குவதாயிற்று! தன் வயிற்றில் இருந்து பெற்றவளும், கணவனாகப் பெற்றவளும், தந்தை இவனெனப் பெற்றவர்களும் ஆகியவர்களாலும் வெறுக்கப்படும் மதுக்குடியைச் சால்பால் நிறைந்த சாரிங்டன் போல்வாரும் வெறாது இருப்பரோ? அவர் கொண்ட மது வெறுப்பே ஓசியாத் தீவாக – மதுவிலக்குக் கோட்டையாக உருக்கொண்டது!

இத்தகு சான்றோர் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே சால்பு! என்னே சால்பு! என வியந்து நின்றாரோ?

அதனால்,

"உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்" (922)

என்றாரோ ?

ஓம் சக்தி – தீபாவளி மலர் நவம், 1991, கட்டுரை : இராசாசி

24. ஈன்றாள் முகத்தேயும்

குத்துச்சண்டையில் புகழ் வாய்ந்தவர்.

பரிசு பாராட்டுப் பல பெற்றவர்.

உலக அளவில் போட்டியிட வல்லவர்.

ஆனால் போதைக்கு அடிமையர்.

வீர மகனைக் கண்டு விம்மித முறவில்லை

அவரைப் பெற்ற அன்னை!

"போதைப் பேய்க்கு அடிமைப்பட்டானே இப்பேதை! இதில் இருந்து அவனுக்கு விடுதலை உண்டா"? என்று வெதும்பினார்.

அன்னை உரையை – உணர்வை – மதியா அம்மகனுக்கு

ஒரு நாள் வந்தது.

போதை மருந்து வைத்திருந்தார் என்னும் குற்றச்சாட்டுக் கிளர்ந்தது! காவல் துறையினர் ஆய்ந்தனர். அஃது இருந்த தடமும் இல்லை! இடமும் இல்லை!

ஆனால் போதை மருந்து இருப்பதைத் திறமாய் மறைத்துளார் என்பது தெரிந்தது; மேலும் முயன்றனர். காலுறைக்குள்ளே போதைப் பொடியைத் தாளில் மடித்து வைத்திருந்ததைக் கண்டுபிடித்தனர்.

குற்றம் சாற்றிச் சிறையும் செய்தனர்.

26 வயதே ஆன அந்தக் குத்துச்சண்டை வீரர் பெர்ட்டு கூப்பர்

அமெரிக்க நாட்டினர்.

சிறைப்பட்ட மகனைக் கண்டு அன்னை வருந்தினார் அல்லர். சிறைப்படுத்திய காவலர்க்கு நன்றியுரைத்தார்.

காவலரைத் தூண்டிக் கண்டுபிடிக்க வைத்த இறைவனுக்கு நன்றி கூறினார்.

இச்சிறைப்பாடாவது மகன் திருந்துதற்குத் துணையாம் என நம்பினார்.

மைந்தன் சிறைப்படவும் வருந்தாத் தாயும் அந்நிலையை வாய்ப்பென வாழ்த்தும் தாயும் உள்ளமை வியப்பே அல்லவோ!

குடித்து விட்டு நாளும் வருவான்.

கும்மாளத்தோடு நில்லான் பெற்ற தாயெனவும் பாராமல் அடிப்பான் மிதிப்பான்.

மதியை மயக்கும் மதுவில் வீழ்ந்தவனுக்குத் தாய் என்ன? தாரம் என்ன?

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் பெற்றவள்.

ஒரு நாள் அப்பெற்ற மனமும் தாங்காத் தாக்குதல்!

முடிவு செய்தே ஆக வேண்டும் இனி முடியவே முடியாது எனத் தீர்மானித்தாள்.

வெருட்டி வெருட்டித் தாக்கிய மகனிடம் தப்ப வேண்டிக் கூரைப் பகுதிக் குடிசையுள் நுழைந்தாள்.

ஆங்கும் புகுந்தான் அடித்துத் துரத்தும் குடிமகன். குடிசைக்குள் வரவும் உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தி, மண்ணெண்ணெயைக் கூரை மேல் தெளித்துத் தீயும் மூட்டினாள்.

பற்றிய தீயைச் சுற்றிலும் இருந்தோர் கண்டு ஓடி வந்து அணைத்தனர்.

உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனையில் சேர்த்துளர்,

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் நடந்துள நிகழ்ச்சி இது.

பெற்ற தாயே, உயிரோடு மகனுக்குத் தீ மூட்ட நேர்ந்த கொடுமை!

தாயாரும் தாங்காப் போதைக்குடியை எவரே தாங்குவர்!

ஆன்றோர் சான்றோர் தாங்கவோ செய்வர்?

இத்தகு போதை வெறியர் காட்சியை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே கொடுமை என்னே கொடுமை என்று நைந்து

நின்றாரோ ?

அதனால்,

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி" (923)

என்றாரோ?

செய்திகள் இரண்டும் : தினமலர் -31-5-92.

25. அற்றார்க்கு ஒன்று

அவர்க்கு மக்கள் மூவர்.

அவர் நல்ல உழைப்பாளர்

ஆனால் குடியர் ஆகிவிட்டார்.

உழைத்த காசெல்லாம் குடிக்கே ஆயது.

குடும்பத் தீனுக்கு உதவியது தாயின் உழைப்பு வழியால் வந்த சிறிய தொகை.

குடிகாரர் படுத்தும் பாட்டையும் குடும்பச் சுமையையும் எதிர்காலங் கருதித் தாங்கிக் கொண்டார்

மக்கள் மூவருள் இருவர் ஆண்கள் ; இடையே பிறந்த தொன்றே பெண்.

மூத்தவன் ஓரளவு படித்தான்; குடும்ப நிலையறிந்து வேலைக்குச் சென்றான்.

அடுத்தவள் படித்தாள்; ஆசிரியப் பயிற்சி பெற்றாள்.

அந்த இருவரினும் இளையான் கூர்ப்பன்.

நன்றாகப் படித்தான். மேனிலை வகுப்பில் உயரிய மதிப்பெண் எய்தினான்.

மருத்துவப் படிப்புக்கு முயன்றான்.

தேர்வு எழுதினான் ; வெற்றியும் பெற்றான்.

கல்லூரியில் சேர ஆணையும் எய்திற்று.

ஈராயிரம்போல் கட்ட வேண்டும்!

வெறுங்கையன் என்ன செய்வான்?

அற்றை வேலையால் குடும்பம் ஓட்டும் அன்னைதான் என்ன

செய்வார்!

பத்து நூறா? ஈராயிரம் ஆயிற்றே! மேலும் திங்கள் தோறும் ஐந்தாண்டளவுக்குத் தொகை வேண்டுமே!

தொண்டில் பழுத்த தூயர் ஒருவரை நாடினார் தாயார்!

அவரோ ஓய்வு ஊதியத் தொகை முழுவதும் உதவிக்கே செலவளிக்கும் செம்மல்!

தொகையும் பற்றுமோ, இரு நூறு பெறும் ஓய்வு ஊதியர்க்கு!

தக்கார் ஒருவரை வழக்கமாக நாடுவார், தம் தகுதிக்கு மிஞ்சிய கொடையென்றால்!

அப்படி நாடினார்.

அவரோ சொன்னார்; இலக்கம் இலக்கமாகக் கையூட்டுத் தந்தும் கணக்கில் தந்தும் மருத்துவக் கல்விக்கு இடம் கிடையாமல் எத்தனை எத்தனை பேரோ, தவிக்க, தன் திறத்தாலே தானே பெற்ற இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் தவிப்பா?

படிக்க இடம் வாய்த்தும் அதனை ஒருவர் இழப்பாராயின் குடிக்குமட்டுமோ கேடு; நாட்டுக் கேடேயன்றோ! ஈராயிரமும் உடனே தருவேன்; கல்லூரியில் சேர்க; திங்கள் செலவுக்கு வங்கிக் கடனை ஏற்பாடு செய்யலாம்" என்றார்.

தாயோ கண்ணில் காணாத் தெய்வம் கண்ணேர் வந்து கையில் பிடியெனக் கருவூலம் வழங்கிய தென்னக் களித்தார்.

கூர்த்த மாணவன் காலத்து வாய்த்த கார் மழை போன்ற உதவியால் தளிர்த்தான்.

அந்தப் பெருந்தகை வள்ளுவர் மன்றத் தலைவர். வள்ளலார் இல்ல நிறுவனர், உழைப்புத் தோன்றல் திருவில்லிப்புத்தூர் வாழ் ம. பொன்னையா!

என்ன பேறெலாம் பெற்றேன் ; பெறுகிறேன்.

வறிய யானோ. வளமையனாக உள்ளேன்.

வறுமைப்பாட்டை அறிந்தவன் அதனைப் போக்கல் கடனெனக் கொண்டேன்.

வள்ளுவத்தை நான் பற்றினேன் அல்லேன்;

வள்ளுவம் என்னைப் பற்றிக் கொண்டது.

அதனை அறிமுகம் எனக்குச் செய்தவர் பெரும் புலவர் கூர்மாவதாரர்.

தொண்டில் திளைக்கத் தோன்றும் துணையாய் துலங்கும் பொருளாய்த் திகழ்பவர் முதுபெருந் தொண்டர் செல்வநாயகர். இவர்களை நினைக்கிறேன் : இவர்களே என்னுள் இருந்து ஊக்கி வருபவர் என்கிறார்.

அற்றார்க்குதவும் இத்தகைக் கொடைஞர் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே பெருந்தகை! என்னே பெருந்தகை!

என்று வியந்து நின்றாரோ?

அவ்வாறு உதவார் தம்மை

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று" (1007)

என்றாரோ ?

26. சொல்லப் பயன்படுவர்

சென்னை கிண்டியை அடுத்த மேலைச்சேரி,

ஆங்கொரு கிறித்தவப் பள்ளி.

அப்பள்ளியை அடுத்தொரு மகளிர் விடுதி.

பள்ளி ஆசிரியை பாக்கியம் என்பார்.

அவரே விடுதிப் பொறுப்பும் உடையார்.

விடுதியில் வறிய குழந்தையர் :

பெற்றோர் இருக்கும் பேறு அற்றவர் ; பெண்டிரும் வறியர்; முதியவர்; கைம்மையர்.

எளிய விடுதியில் என்ன இருக்கும்?

அரிதின் முயன்று அன்றன்று உணவுக்கு வேண்டும் அரிசியும் பருப்பும் காய் கறிகளும் போதும் போதாதென்னும் நிலையில் இருக்கும்.

இரக்கத் தொண்டால் எளிமையில் இயலும் இந்த விடுதிக்கும் ஓர் இடையூறு. ஊரின் உதவியாலும் உண்மை இரக்கத்தாலும் ஏதோ இயன்ற இந்த விடுதியின் பொருள்கள் திருடப்பட்டன.

ஒரு நாள் இரு நாள் இல்லை; பல நாள்!

அரை வயிறும் குறை வயிறும் உண்டவர்களுக்கும் பசியும், பட்டுணியும் ஆயின.

வலிய திருடரைத் தடுக்கும் வலிமை எவருக்கு உண்டு?

இளகிய இரக்கப் பிறப்பாம் ஆசிரியை பாக்கியத்திற்குக் கூடுமா?

பல நாள் பார்த்தார்! கண்ணுறங்காமல் திருடர் வரவை நோக்கியிருந்தார்.

வழக்கம் போலத் திருடர் வந்தனர்.

பண்டங்களை எடுத்து வெளியே வைத்தனர்,

அம்மையார் அவர்கள் காதில் விழும்படி கூறினார்;

"உடன் பிறந்தார்களே, உரைப்பதைக் கேளுங்கள் நானோ கிழவி; இங்கே ஆணென எவரும் இலர் ஏழைக் குழந்தைகளும் பெண்களுமே உளர். எங்களால் உங்களைத் தடுக்க முடியுமோ? நல்லுளம் உடையோர் நன்கொடையாலே நடப்பது இவ்விடுதி. உங்கள் செயலால் பலநாள் பட்டுணி கிடந்துளோம். உங்கள் வறுமையே இப்படிச் செய்யத் தூண்டி இருக்கலாம். எனினும் உங்கள் மேல் வருத்தமில்லை உங்கள் குழந்தையர் பெண்டிர் பசியைத் தாங்காமல் இப்படிச் செய்கின்றீர்கள். அவர்கள் பட்டுணி தாங்காமல் செய்யும் நீங்கள் இவர்கள் பட்டுணி தாங்காமல் கிடக்கும் நிலையை எண்ணுங்கள்! இவர்களும் உங்கள் குழந்தைகள் உடன் பிறப்புகள் இல்லையா? கடவுள் ஒருவர் எல்லார் செயலையும் பார்த்துக் கொண்டே உள்ளார். இனிமேலேனும் இவ்வேழையர் உணவை எடுத்துச் செல்லாமல் இருக்க மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

இளகிய சொற்கள் திருடர் நெஞ்சக் கல்லையும் கரைத்தன! "இனிமேல் திருட மாட்டோம் என்றொரு குரல் எழுந்தது. விடிந்து பார்த்தார் பாக்கியத் தம்மையார். எடுத்து வைத்த பொருள்கள் எல்லாம் அப்படி அப்படியே இருந்தன! அதற்குப் பின்னர் அத்திருடர்கள் அவ்விடுதியில் திருட வந்ததே இல்லை!

திருடர் ஆயினும் என்ன? திருந்தாப் பிறவியரா அவர்? திருத்தும் திறவோர் இருப்பின் திருந்தார் எவருமே இரார் ! எவ்வகையாலும் திருந்தார் உளரேல் அவரே கயமை உருவர்!

இத்தகு நிகழ்ச்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

திருந்துவோர் திருந்தார் தம்மை எண்ணி இருபாற்பட நின்றாரோ?

அதனால்,

"சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்" (1078)

என்றாரோ ?

செய்தி : 1939 (செந். செல் : 17:177 கள்ளனைத் திருத்திய கன்னி மறை, திருநாவுக்கரசு)

27. கண்டு கேட்டு

"பாட்டினிமை மிக நன்று.

ஆயினும், இவ்வினிமையின் பொருட்டு உணவு இறங்காமையும் இரவு கழியாமையும் நினைந்து நெட்டுயிர்ப்பு விடுதலும் ஆகிய இவை போல்வன நிகழ்வதில்லை.

அறுசுவை உணவு நன்று.

ஆயினும், அவ்வுணவின் மேல் வந்த விருப்பத்தால் ஒரு மகளுடைய வளைகள் கழலுமோ? அவளது மேனி பசக்குமோ? அவள் தன்னந்தனியளாய்த் தாய் தந்தையரை விட்டு வெய்ய சுரங்கடந்து வேற்றூர் செல்ல உடன்படுவளோ?

கண்ணிற்குக் குளிர்ந்த காட்சி ஒன்றை நாடி ஒரு மகன் நள்ளிரவிற் காடு மலையுங் கடந்து, கரடி புலிகளை எதிர்த்துத் தன் உயிரிற்குத் தீங்கிழைத்துக் கொள்ள முன் வருவானோ? இல்லை!

இவை ஒவ்வொரு புலனுக்கு நன்மை பயப்பன ஆதலால் அவற்றின் மேலுள்ள விருப்பம் எவ்வளவு வலியுடைத்தாயினும் பொதுவாக மக்களை மயக்கித் தம்மறிவு கெட்டுத் தடுமாறச் செய்வதில்லை,

புணர்ச்சியின் மேலுள்ள விருப்பமும் இத்தகைய ஒன்றானால் மக்களதை எளிதில் அடக்கிக் கொள்ளக்கூடும். அவ்வாறாயின் இயற்கையின் அமைப்பாகிய உயிர் வளர்ச்சி தடைபட்டு நின்றுவிடும்.

உயிரென்பது ஒன்றினின்றும் மற்றொன்றற்றிற்கு ஊட்டப் படுமேயன்றி ஆக்கப்படாது,

ஊட்டப்படுவதற்குக் கூட்டம் வேண்டும். ஆதலின் கூட்டத்தின் மேலுள்ள இவ்விழைவு ஒரு புலனைச் சார்ந்து நில்லாது ஐம்புலன்களிலும் கூடிநின்று ஆற்றின் மேற் புணையென மக்களை வலித்துச் செல்கின்றது.

என்றே மகிழ்நனார் ஆய்ந்து மணத்தைப் பற்றி எழுதினார். (செந்தமிழ்ச் செல்வி 5. 223-4) இத்தகும் ஆய்வின் ஓட்டம் உள்ளிருந்து ஊற்றாய்க் கிளர வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

அதனை என்னே! என்னே! என வியந்து நின்றாரோ?

அதனால்,

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள" (1101)

என்றாரோ ?

வள்ளுவக் கிழவர் கண்டாரோ!

(1)

கடைக்குச் சென்றான் ஒருவன்; சிறுவன்,

சென்ற வழியில் சண்டை;

இரு பெருங்கும்பல், அடி – தடி – முட்டல் – மோதல் – குத்தல் – கொலை!

காவல் படை கடிதில் வந்தது.

கண்ணீர்ப்புகை, துமுக்கிச் சூடு (துமுக்கி – துப்பாக்கி).

வேடிக்கை போலப் பார்த்தான் சிறுவன்!

விளக்கின் ஒளியில் மயங்கிய விட்டில் ஆனான்.

வாங்கப் போன பொருளை வாங்கு முன்,

காவலர் துமுக்கிக் குண்டை வாங்கினான்!

சீறிப் பாய்ந்து சிதறி வந்து தெறித்த குண்டு சிறுவன் மார்பைத் துளைத்து, நுரையீரற் கீழே இறங்கி, வயிற்று மேற்கூட்டை

(உதரவிதானம்)க் கிழித்து, முதுகு வழியே வெளியே போனது ! குண்டு போனால் என்ன ஆகும்?

குருதி எல்லாம் கொட்டு கொட்டெனக் கொட்டிப் போனது! உயிர் தங்க வேண்டும் என்றால், அறுவை செய்ய வேண்டும். அறுவை செய்ய வேண்டும் என்றால், ஆருயிர்க் குருதி வேண்டும்!

அக்குருதிதானும் அவன்றன் இனத்தொடும் இயைய வேண்டும்!

சிறுவன் செய்தி அறிந்த சிறிது பொழுதில், உருகும் உளாங்கள் ஓடி வந்தன!

உயிர்க்கு உறுதியாம் குருதியை உவந்து வழாங்கின!

குலமும் இல்லை; குடியும் இல்லை ;

சாதியும் இல்லை ; சமயமும் இல்லை ;

மொழியும் இல்லை : எதுவும் இல்லை –

இருந்ததெல்லாம் ஒரோ ஓர் இரக்கம் – உருக்கம்!

ஆறு புட்டி ஏற்றப்பட்டது!

அறுவை நன்றாய்ச் செய்யவும் பட்டது!

போகும் உயிரை நிறுத்தவும் பட்டது!

அழிவில் மோதிய கூட்டமும் மாந்தரே!

ஆருயிர் தரற்கு மோதிய கூட்டமும் மாந்தரே!

இருபாற் கூட்ட இயலும் தனித்தனி விளாங்கின!

இத்தகு நிலையை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

‘என்னே என்னே” என்று இரங்கியும் ஏத்தியும் நின்றாரோ?

அதனால்,

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு” (72)

என்றாரோ ?

19-12-91 தினப்புரட்சி நாளிதழ் செய்தியை உட்கொண்டு வெளிப்பட்டது இது.

(2)

கணவன் இல்லை.

கைம்மை வாழ்வு.

ஆனால், ஆறு குழந்தைகளுக்குத் தாய்!

அவளே, குடும்பத்தின் காவல்!

அவளே, குடும்பத்தின் வருவாயும் வாழ்வும்!

நொந்தும் வெந்தும் வாழ்ந்த அவளுக்கு வந்தது சிறுநீரக நோய்!

ஒன்றுக்கு இரண்டு – சிறுநீரகமும் செயல்படவில்லை!

அடுத்து உதவுவார் ஒருவரும் இல்லை.

கொடுத்து வாங்கும் வாய்ப்பும் இல்லை.

என்ன செய்வாள் ஏழைத் தாய்?

வாழ வாய்ப்போ இல்லை!

வாழ வாய்த்தால், குழந்தைகளை வாழ வைக்கலாம்! எவரோ தூண்ட ஏதோ ஓர் இதழில் அறிக்கை விடுத்தனள்; குருதியின் இனம் 'பி +'; "ஆறு குழந்தையர் வாழ்வை எண்ணி, அருளால் சிறுநீரகம் அளிப்பார் உண்டோ? என்றது அறிக்கை.

அறிக்கை கிளர்ந்தது தில்லியில் இருந்து.

அறிக்கைப் பயன் கிளர்ந்தது பம்பாயில் இருந்து.

வேலை தேடும் இளைஞர்.

வேறு வகையும் இல்லா இளைஞர்.

"அறுவரைக் காக்க, அன்னையைக் காப்பேன்;

என்னைப் பெற்றவர் என்றால் என்ன?

அவர்களைப் பெற்றவர் என்றால் என்ன?

தாய்க்கு உதவுதல் பேறெனத் தாவினார்.

மருத்துவமனையை நண்ணினார்;

உடலாய்வு முடிந்தது;

(2)

கணவன் இல்லை.

கைம்மை வாழ்வு.

ஆனால், ஆறு குழந்தைகளுக்குத் தாய்!

அவளே, குடும்பத்தின் காவல்!

அவளே, குடும்பத்தின் வருவாயும் வாழ்வும்!

நொந்தும் வெந்தும் வாழ்ந்த அவளுக்கு வந்தது சிறுநீரக நோய்!

ஒன்றுக்கு இரண்டு – சிறுநீரகமும் செயல்படவில்லை!

அடுத்து உதவுவார் ஒருவரும் இல்லை.

கொடுத்து வாங்கும் வாய்ப்பும் இல்லை.

என்ன செய்வாள் ஏழைத் தாய்?

வாழ வாய்ப்போ இல்லை!

வாழ வாய்த்தால், குழந்தைகளை வாழ வைக்கலாம்! எவரோ தூண்ட ஏதோ ஓர் இதழில் அறிக்கை விடுத்தனள்; குருதியின் இனம் 'பி +'; "ஆறு குழந்தையர் வாழ்வை எண்ணி, அருளால் சிறுநீரகம் அளிப்பார் உண்டோ? என்றது அறிக்கை.

அறிக்கை கிளர்ந்தது தில்லியில் இருந்து.

அறிக்கைப் பயன் கிளர்ந்தது பம்பாயில் இருந்து.

வேலை தேடும் இளைஞர்.

வேறு வகையும் இல்லா இளைஞர்.

"அறுவரைக் காக்க, அன்னையைக் காப்பேன்;

என்னைப் பெற்றவர் என்றால் என்ன?

அவர்களைப் பெற்றவர் என்றால் என்ன?

தாய்க்கு உதவுதல் பேறெனத் தாவினார்.

மருத்துவமனையை நண்ணினார்;

உடலாய்வு முடிந்தது;

எளிய இடமா? உயர்ந்த கலைகளின் ஒரு மொத்த விளக்கமாக உயர்ந்து நிற்கும் பல்கலைக் கழகம்!

அழைத்தவர் தாமும் தெருப்போக்கியரா?

பல்கலைக் கழகக் காவல் கடமையர்!

உள்ளே போனவர். குப்பைக்குவியலில் குனிந்து பொறுக்கத் தலைப்பட்ட அளவில், தலையிலே பேரடி ஒன்றா இரண்டா? ஒருவரா இருவரா? அடிதாளாமல் அடியற்ற மரமாய்ச் செத்தேன் என விழுந்தான் ஒருவன்!

'செத்தான்' என்று போயினர், மற்றவர் தம்மைச் சாக அடிக்க!

செத்தவனாக வீழ்ந்தவன், சிறிது பொழுதில் மயக்கம் நீங்கி எழுந்தான்; மறைந்தான்; ஓடினான்.

காவல்துறையைக் கடிதில் அடைந்து, நடந்த கதையை நடுக்கொடும் உரைத்தான்!

மருத்துவக் கல்வி கற்பார் தமக்குக், காட்டும் பொருளாய்ச் செத்தார் தம்மை விலைக்கு வாங்குதல் வழக்கம்!

செத்த பிணத்தால் சேரும் பணமெனக் கண்டபின், சாக வைத்துப் பிணமாய்த் தந்து, பணமாய்ப் பெற்ற, சாவும் பிணங்களின் கதையாம் இதுவே!

ஏழை எளியவர் பசியர் பிணியர் தம்மை, ஆவலூட்டி அழைக்க! அடித்துக் கொன்று, பிணத்தைத் தந்து, பணத்தைப் பெற்றிட! இதுவே வாடிக்கையாம்!

இருபத்திரண்டு பிணங்கள் இப்படி வந்தனவாம்!

குழந்தையும் உண்டாம்! பெண்டும் உண்டாம்!

கொலம்பியா நாட்டுத் தலைநகரான பொகோடோவில் நிகழ்ந்தது இது!

நிகழ்ந்த இடமோ, பல்கலைக் கழக வளாகம் – பாரன் குவில்லாபிரி பல்கலைக் கழகப் பெயரதாம்!

காவல்காரன் கயமை மட்டுமா ஈது? பல்கலைக் கழகத் தலைமைக்குமே தெரியுமாம்;

உயிர் காக்கும் மருத்துவ ஆய்வை இப்படிப் பெற்றவர், பின்னே எப்படி இருப்பார்?

தேடி வந்த ஏழை நோயரை எல்லாம், உறுப்புறுப்பாக அறுத்தறுத்தெடுத்துச் செல்வர்க்குப் பொருத்திச் சேர்க்க மாட்டாரா செல்வம்?

சீ! சீ!

இப்படிக் காட்சியும் உலகில் நிகழும் என்று எண்ணி எண்ணி வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே கொடுமை என்னே கொடுமை என்று நொந்து நின்றாரோ ?

அதனால்,

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (241)

என்றாரோ?

செய்தி : தினமணி. 4-3-92,

(4)

காலில் கட்டி

ஆறாத் தொல்லை,

அறுவை மருத்துவம் செய்யப்பட்டது.

ஊன்றுகோல் உதவியால் நடக்கத் தொடங்கினார்.

மாடியில் இருந்து தவறி விழுந்து இடக்கை எலும்பு ஒடிந்தது.

மூன்று வாரங்கள் கிடக்கையில் கழிந்தன.

ஒடிவு தேறி, ஒருவழியாகக் கை கூடிற்று.

ஒடின சில வாரங்கள்.

மீண்டும் வீழ்ந்து கணைக்கால் எலும்பு ஒடிந்து போனது.

மரக்கறி உணவே கொள்ளும் அவரை மருத்துவர் கூடிப் பழித்தனர்.

உயிரினையத் தின்று உயிர் வாழ்வதைவிட உயிரையே விடுவேன் என்றார் அவர்.

“மரக்கறி உண்பார் நெடிது வாழார்” என்றனர் மருத்துவர். “புலாலுண்பாரில் என் அகவை உள்ளாரை அழைத்து வருக” என்றார் அவர்.

ஒரு நண்பர்க்கு எழுதினார் அஞ்சல்;

“என்னை ஒரு நாள் அடக்கம் செய்யக் கொண்டு போதல் உண்டேயன்றோ!

அற்றை நாளில் அழகு வண்டிகள் எவையும் தொடர்ந்து வருதல் வேண்டா.

ஆடும் மாடும் பன்றியும் கோழியும் மந்தை மந்தையாய் வரட்டும். துள்ளித் திரியும் மீன்காட்சிச் சாலை ஒன்றும் தொடர்ந்து வரட்டும்.

இந்த உயிரிகள் எல்லாம் கறுப்புடை அணியாமல் வெள்ளுடை அணிந்து விரும்பி வரட்டும்.

“எங்களைக் கொன்று தின்று, இன்னுயிர் வாழ்வதைக் காட்டிலும் என்னுயிர் இழக்கவும் துணிவேன் என்று வாழ்ந்தவன் இந்த மாந்தன்” என்று பாராட்டிக் கொண்டு வரட்டும் என்று எழுதினார்.

“மாந்தனைக் கொல்லும் கொலையைப் போன்றதே வேட்டைக் கொலையும்” என்றார்.

“இன்னும் சொன்னால் வளர்ந்தவன் ஒருவனைக்கொல்வதைக் காட்டிலும் குழந்தையைக் கொல்லல் கொடுமையே அல்லவோ! அக் கொலை போல்வதே வேட்டைக் கொலை” என்றும் கூறினார்.

தமிழக மண்ணில் பிறந்தவர் அல்லர்!

உலகப் பரப்பின் ஒரு பெரும் பகுதியைத் தனக்குள் கொண்டு ஆட்சி நடத்திய இங்கிலாந்து மண்ணில் தோன்றியவர். தொண்ணூறுக்கு மேலும் வாழ்ந்தவர். அறிஞர் பெர்னாட்சா அவர்.

இத்தகு தெய்வ அருள்நெறிச் செல்வர் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

அதனால்,

"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா
உயிரும்கை கூப்பித் தொழும்"

என்றாரோ?

(5)

சொத்துத் தகராறு ஒன்று.

எதிரிட்டு இருவர், இல்லாக் கால் தகராறு உண்டோ?

ஒருவர் முந்தி வழக்குத் தொடுத்தார்;

அதனை மறுத்துத் தம்பால் ஆவணம் உண்மை காட்டினார் ஒருவர்.

உரிய நிலத்தை நேரில் கண்டு, ஊரார் சான்றைக் கேட்டு, உண்மை அறியத் தீர்ப்புத் தருதற்கு உரிய ஆட்சியர் சென்றார்.

இடத்தைக் கண்டார்.

இடத்துக்குரிமை தத்தமக் கென்று நின்றவர் தம்மை உசாவினார்.

ஊரவர் சான்றுகள் திரட்டினார்.

ஆவணச் சான்றையும் ஆய்ந்தார்.

ஆய்வின் இடையே ஒரு மின்னல்.

ஆவணம் எழுதியவர் பெயரை அறிந்தார்.

அவர் தாம் இருக்கும் ஊரையும் அறிந்தார்.

அள்ளூர் என்பதைக் கேட்டார்.

வழக்கை மறுநாள் ஆய்வுக்குத் தள்ளி வைத்தார்.

வந்த குதிரையில் வழக்கம் போல ஏறி அள்ளூர் சென்றார்.

அள்ளூர் சிற்றூர்.

அவ்வூர்க் குடிசையுள் ஒன்று.

அதன் முன் நின்றது குதிரை.

குதிரையில் இருந்து இறங்கினார் ஆட்சி அலுவலர்.

'ஐயா" என்றார்.

'ஆரது' என்றதும் அந்தக் குரலில் தம்மை இழந்து தாவிச் சென்றார்.

மின்னெனச் சென்று, முன்னர் எய்தி, நெடுஞ்சாண் கிடையாய் வீழ்ந்து வணங்கினார்.

திகைத்துப் போன முதியவர் திடுமென எழுந்தார்.

பற்றிப் பிடித்துப், பரிவோடு தூக்கிப், பார்த்ததும் வியப்பொடு, 'பட்டாபி' என்றார்.

"ஆமாம் ஐயா; உங்கள் பிள்ளை பட்டாபியே!

அலுவலாய் இங்கே வந்தேன். ஆவண எழுத்தில் தங்களைக் கண்டேன்.

காணத் துடித்துக் கடிதில் வந்தேன்.

தங்கள் தயையின்றானால் எளியேற் கிந்நிலை எய்தி இருக்குமோ? என்றார் பட்டாபி.

முதிய கிழவர் முத்துவீர உபாத்தியாயர், முதிர்ச்சி நீங்கி இளைய வீரராய் எழுச்சி கூர்ந்தார்.

கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கும், குனிந்து சோர்ந்து தொய்ந்த கிழவரை ஏறு நிலையில் எழுச்சியூட்டி நிமிர்த்தின!

என்னே பணிவு! என்னே நல்லுளம்! என்று வியந்தார் அந்தக் கிழவர் முத்துவீரிய இலக்கணம் இயற்றிய உறையூர்ப் புலவர் முத்துவீர உபாத்தியாயர்!

இத்தகு பணிவுக் காட்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து" (125)

என்றாரோ?

தந்தை புலவர் மீனாட்சி சுந்தரர் சொல்ல மைந்தர் பெரும் புலவர் தங்கவேலனார் சொல்லக் கேட்ட செய்தி இது.

(6)

குதிரையின் மேலே ஏறி வந்தான் ஒருவன்.

ஓட்டமானால் அப்படி ஓட்டம்!

அந்த ஓட்டத்தைத் தொடவும் முடியாமல் விடவும் முடியாமல் மற்றொரு குதிரையின் மேலே ஒருவனும் வந்தான்!

வழிநடை ஒருவன் குதிரையில் வருபவன் இவனெனக் கண்டான். வழியை விட்டு ஒதுங்கினான்.

தலையில் இருந்த தொப்பியைக் கழற்றி, பணிவாய்க் குனிந்து வணக்கம் செலுத்தினான்.

விரைந்த குதிரை அழுத்திய பிடியால் நிற்கத் திணறி நின்றது. குதிரையை விட்டுக் கீழே இறங்கினான் குதிரையன். தலைமேல் இருந்த தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு வணங்கினோன் குனிவிலும் குனிந்து வணங்கினான். குதிரை மேலேறிப் பறந்தான்; விரைந்தான்.

விரையும் போதே வினாவினான் உடனவன்;

“இப்படி இறங்கித் தொப்பியை எடுத்து இந்த ஏழையைக் குனிந்து வணங்க வேண்டுமா?”

வணங்கிய நல்லோன் சொன்னான்.

“நாட்டின் தலைவன் நயக்கும் பணிவிலும் தலைவன்;

இதனை நாட்டுதல் கடமை;

பணிவினால் இந்த ஏழை என்னை வெற்றி கொள்ள விட்டிட மாட்டேன்”

திகைத்துத் திணறித் திக்குமுக்காடினான்.

வினாவை எழுப்பி வாங்கிக் கொண்டவன்.

அந்தப் பணிவுச் செல்வன் அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்துக் கொண்டிருந்தும் அன்பு வழிக்கே அன்றி அயல் வழிக்குப் பயன் படுத்தா அண்ணல் ஆபிரகாம்!

அமெரிக்க நாட்டுத் தலைவன்!

இத்தகு காட்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

அதனால்,

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" (978)

என்றாரோ?

(7)

'பெட்டியடிப் பையன்' அவர்

காசுப் பெட்டிப் பக்கத்தில் இருத்தல், ஏவிய பணியை ஏனென்று கேளாமல் செய்தல்; இப்பணி அவருக்கு;

கடமை தவறாக் கருத்து மிக்கவன்.

கடைப்பணி எனினும் தலைப்பணியாக வாய்மைக்கு இடந்தந்தவர்.

"பொய் கூறுபவன் உண்பது, சோறு அன்று வேறு" என்பது அவர் வீட்டுப்பாடம்!

கடை முதலாளி உள்ளே இருந்தார்.

அவரைத் தேடி ஒருவர் வந்தார்.

கடையின் உட்புறம் வீடு.

வீட்டுள் சென்று செய்தியுரைத்தார் பையன்.

வந்தவர் யாரெனக் கேட்டு 'இல்லை' என்று சொல்லச் சொன்னார் 'கடையர்,'

'உள்ளே இருக்க இல்லை என்று உரைக்க மாட்டேன்' என்றார் பையன்.

கடையர் சீற்றம் தலைக்கு ஏறியது.

காட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளலாம் என்றே அமைந்தார்.

முறை மன்றத்தில் இருந்து வழக்கொன்றுக்கு முன்னறிவிப்பு வந்தது.

அதனைக் கொண்டு வந்தவர் முதலாளி உள்ளாரா என்று கேட்டார்.

'பார்த்துச் சொல்கிறேன்" என்று போனார் பையன்.

இருப்பதும் இல்லாததும் அறியார் ஆகலின் அறியப் போனார். உள்ளே போனதும் உங்களை 'அமீனா' தேடி வந்துளார் என்றார்.

இல்லை என்று சொல்லிப் போடு' என்றார் உள்ளே இருந்தவர்!

'இருக்கும் போது இல்லை என்று சொல்ல மாட்டேன்' என்றார் பையன்.

இரண்டாம் நிகழ்ச்சி ஆதலால் 'இரு இரு' என்று கறுவிக் கொண்டார்.

கணக்கரை அழைத்து 'இல்லை' என்று சொல்லச் சொன்னார். வந்த ஆள் போனதும் வந்தது சீற்றம்; பொங்கி எழுந்தார் பெரியவர்.

"பொய் சொல்ல மாட்டாயோ நீ; எங்கும் போய்த் தொலை" என்றார்.

"ஊர்க்கே போகிறேன்" என்று நாடு கடந்து தம் நாட்டுக் கோட்டைக்கே வந்தார்!

பண்டித மணியிடம் பைந்தமிழ் கற்றார்.

அண்ணாமலையில் புலமை யுற்றார்;

அங்கேயே பணியிலும் அமர்ந்தார்.

காரைக்குடியில் புலமை விரித்தார்

முனைவர் பட்டமும் முயன்று பெற்றார்

கல்லூரித் தலைமையும் உற்றார்

அண்ணாமலையில் துறைத்தலைமை ஏய்ந்தார்.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தாகவும் வேய்ந்தார்!

தமிழ்க்காதல், வள்ளுவம், காப்பியப் பார்வை என்றே என்றே அன்னைக்கு அணிபல பூட்டினார்!

தமிழ்வழிக் கல்வி தழைக்கத் தம்மைத் தொண்டிற் பதித்தார்! பொய்யா நோன்பைப் பையல் நிலையிலேயே பசையெனப் பற்றிய வசையிலா இசையோர், பெயரை இயம்பவோ வேண்டும்?

மூதறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கர் அவரே!

அன்னோர் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே! என்னே! என்று தம்மை மறந்து நின்றாரோ?

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (300)

என்றாரோ?.

(8)

"சுமக்கமாட்டாச் சுவடிக் கட்டுடன் எங்கள் அகத்திற் கொருவர் வந்துளார்!

"சுவடிக் கட்டோடா? சுமக்க மாட்டா அளவிலா?

ஆமாம்! அவ்வளவு சுவடியும் அருமையான பழைய சுவடிகள் அப்படியா! கல்லூரி வேளையாயிற்றே! அவரைப் பார்க்க வேண்டுமே!

"வேண்டா வேண்டா; நீங்கள் பார்க்கவே வேண்டா;

பார்க்க வந்தால் ஓடிப்போவார்;

எவர் என்பதைச் சொல்லவும் இல்லை;

ஏன் என்றும் சொல்லவும் இல்லை!

எவரைப் பார்க்கவும் ஒப்பவும் இல்லை;

சுவடியைத் தக்க இடத்தில் சேர்க்க வேண்டும் என்றே உங்களை நாடி வந்துளார்!

வறியர் போலும்! தொகைமிகக் கேட்பரோ?

"தொகையைக் குறித்து வரவே இல்லையாம் உரிய இடத்தில் சேர்க்க வேண்டும் என்றே வந்தாராம்!

"கல்லூரி முடியும் வரை இருப்பாரா?

"எங்கள் அகத்தில் இருக்க வைத்துளேன். சுவடியை எடுத்துச் சேர்த்த பின்னரே போவார்

கல்லூரி முடிந்தது.

மாணவர் சுவடிச் சுமையைச் சுக்கமாட்டா அளவில் கொணர்ந்தார்.

"இன்னும் உள்ளது" என்றார்

"இன்னுமா" என்றார் சுவடி கண்டவர்.

முச்சுமை சுமந்தார் இளைஞர்.

“இச்சுவடி தந்தார்க்கு, எதுவும் விரும்பார்க்கு நன்றியாவது நான் சொல்ல வேண்டுமே”என்று நடந்தார் ஆசிரியர்.

என்ன விந்தை!

சுவடிக் குரியவர் இருந்த வீட்டில் இல்லை.

பேரும் சொன்னார் அல்லர்;

ஊரும் சொன்னார் அல்லர்.

முகமும் கருதார்; அகமும் கருதார்!

கடமையை முடித்தார்;

நடையைக் கட்டினார்!

சுவடி பெற்றவர் சொல்லிக்கொண்டார்;

“ஒற்றை யேட்டுக்கு என்னென்ன பாடுபட்டுளேன்;

நூற்றுக் கணக்கில் ஏடு;

தேடிவந்து நின்றதே வீட்டில்!

என்ன உள்ளம்! என்ன பெருமிதம்”

என்றே என்றே வியந்தார்.

வியந்தவர் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதர்!

ஏடு சுமந்து தந்த மாணவர் சாம்பசிவம் என்பார்.

நிகழ்ந்த இடமோ குடந்தை.

நிகழ்ந்த நாளோ 2-5-1900.

இல்லம் ஏலம் போடும் நிலைக்கு ஆட்பட்ட உடனே “இந்த ஏடும் ஏலம் போய் விடக் கூடாது”

என்று, ஓடிவந்து உதவிய வள்ளல் பெயரை எவரும் அறியார்!

இத்தகு வள்ளலை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று போற்றுதலாகி நின்றாரோ?

அதனால்,

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு"

என்றாரோ ?

நல்லுரைக் கோவை உ. வே சா. பக், 111; 119

(9)

பலகணி ஓரம் குப்பைத் தொட்டி!

காற்றெலாம் நாற்றக் காற்று!

போதாக் குறைக்குப் பக்கத்து வீட்டார் எட்ட நின்றே குப்பையை வீசுதல்!

தொட்டிக்கு உள்ளும் புறம்பும் குப்பைக் காடு!

தொட்டிப் பக்கம், குழந்தைகளை 'வெளியே' விடுதல்!

நாற்றம் தாங்காமல் நல்ல வகையில் சொல்லிப் பார்த்தார்!

'நமக்குத் தானே நலக்கேடு என்றார்.

"உம் வீட்டிலா கொட்டினோம்;

உம் தொட்டியிலா கொட்டினோம்;

ளங்கள் பக்கம் எதுவும் செய்வோம்; உம் வேலையைப் பாரும்" என்றனர்.

மூக்கைப் பொத்திய அவர், வாயையும் மூடிக்கொண்டார்.

குப்பை கொட்டிப் போன பின்னரும், குழந்தைகள் வெளிக்குப் போன பின்னரும், அள்ளியும் துடைத்தும் தொட்டியில் போட்டார்!

ஒரு நாள் இரு நாள்கள் அல்ல!

பல நாள்கள் பல வேளைகள்!

பேசாப் பெருஞ்செயல் பெரிய வேலை செய்தது. கரையா மனத்தைக் கரைத்தது!

நல்ல செய்கை நாண வைத்தது : தொட்டிக்குள் குப்பை போனது!

குழந்தைகள் 'வெளி' க்குப் போக 'உள்ளே' போயினர்!

வன்மை, மென்மைக்கு நாணித் தோற்றது !

வள்ளுவக் கிழவர் இப்படி ஒருவரைக் கண்டாரோ?

என்னே! என்னே! என்று தம்மை மறந்து நின்றாரோ?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நான
நன்னயம் செய்து விடல்" (314)

என்றாரோ ?

திரு. பெ. சீனிவாசன் என்பாரின் எனது வாழ்க்கை வரலாறு என்பதில் கண்ட செய்தி. (4.22 - 423)

(10)

கால் பழுது பட்டான் அவன்.

வயிற்றைக் கழுவ இரவல் எடுக்கும் நோக்கன் அல்லன் அவன்,

வாழத் துடித்தான் வாழ்வுக்காக உழைக்கத் துடித்தான். அவன் துடிப்பு அரிமாக் கழக அமைப்பு ஒன்றற்கு எட்டியது. அரிமாக் குழும்பு அவனுக்குச் செயற்கைக் கால் பொருத்தும் செலவை ஏற்றுச் செய்வன செய்து முடித்தது

புதிய ஆள் ஆனான்!

போன இழப்பைத் திரும்பப் பெற்ற பூரிப்பில் கிளர்ந்தான்.

தொழிலில் துலங்கும் போதோர் அறிவிப்பு; ஓர் அரிமா அமைப்பின் அறிவிப்பு;

"சிறுநீரகம் இழந்தார் ஒருவர்க்குச் சிறுநீரகம் உதவுவார் வேண்டும்;

உதவுவார்க்கு உரிய அளவில் தொகையும் வழங்கும்"

செயற்கைக் காலன் ஓடி வந்தான்.

சிறுநீரகம் தருவதற்கு இசைந்து நின்றான்.

பொருந்தியும் இருந்தது; பொருத்தவும் பட்டது.

அறுவை தேறி விடைபெறும் பொழுது!

"எவ்வளவு தொகை வேண்டும்? என்றோர் வினா,

"நல்லதோர் பெருநகை! அதன் விடை,

"தொகை வேண்டுவது இல்லை!

கிடைத்த வாய்ப்புக்கே நன்றி!

கால் உதவியது அரிமாக் குழும்பு !

செய்யாமல் செய்த உதவி அது.

அதற்கு நான் செய்ததோ, நன்றியறிதல்!

வாங்கிய கொடையை மீளக் கொடுக்க வாய்ப்பு வந்ததே;

அதற்கு நன்றி என்றான் ஊனமில்லா முழுமையன்!

கூப்பியகையொடு கொள்கைத் துடிப்பொடு கிளர்ந்து சென்றான்,

செல்லும் இடத்திற்கு!

இத்தகு மேதகைக் காட்சி ஒன்றனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

அதனால்,

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு" (997)

என்றாரோ ?

செய்தி - தினமலர் 26-1-92 .

அரிமா ஆளுநர் இரகுநாதர் - மயிலாடுதுறைப் பொழிவு

(11)

அவளுக்குக் கைகள் இரண்டுமே இல்லை.

ஆம்! தோள் மூட்டுக்குக் கீழே அறவே இல்லை,

அவளுக்கு அகவை பதினாறு இருக்கும்.

கால்களே கைகளாய் ஆகிவிடுமோ?

மண்ணெண்ணெய் அடுப்பை எடுத்தாள்.

மூடியைத் திறந்தாள்.

புட்டியில் இருந்து எண்ணெய் விட்டாள்.

மூடியைத் திருகினாள்.

திரியைத் திருகிக் கருக்கைத் தட்டினாள்,

தீப்பெட்டியை எடுத்தாள்.

ஒற்றைக் காலில் பெட்டி,

ஒற்றைக் காலில் குச்சி.

குச்சியை உரசித் திரியை மூட்டினாள்,

எரியும் அடுப்பு மேல், சட்டியை வைத்தாள்.

குவளையில் இருந்த பாலை எடுத்துச் சட்டியில் ஊற்றினாள்.

மூடியை எடுத்துச் சட்டியை மூடினாள்.

சுட்ட பாலை எடுத்து, வட்டையில் விட்டாள்.

வட்டைக்கும் குவளைக்கும், மாற்றி, மாற்றி ஆற்றினாள்.

ஆறிய பதத்தில் பாலைத் தன் வாயில் ஊற்றினாள் !

– வந்த பணியை மறந்தே நின்றேன்!

எடுத்தாள் ஊசியை பெட்டியில் இருந்து;

எடுத்தாள் நூலை;கண்டில் இருந்து;

எடுத்தாள் துணியை பையில் இருந்து.

மூன்றையும் கொண்டு முனைந்தாள் பணியில்.

காலாம் கையால், நூலை முறுக்கினாள்.

மற்றொரு காலாம் கையால், ஊசியை எடுத்தாள்.

நூலை ஊசித் துளையில் நுழைத்தே உருவினாள்.

வேண்டும் அளவில் நூலை அறுத்தாள்.

தையல் அளவாய் நூலைக் கொண்டாள்.

சீலையை எடுத்துப் பிடித்துக் கொண்டாள்,

ஒரு கால் விரல்களின் ஊடே.

ஊசியை எடுத்துப் பிடித்துக் கொண்டாள்,

ஒருகால் விரல்களின் ஊடே.

ஒழுங்காய்த் தைத்தாள் தையல்!

கைகள் இருந்தும் கண்கள் இருந்தும் ஊசித் துளைக்குள் நூலை நுழைக்க அப்பப்பா நாலு பக்கம் எழுதி விடலாம்! இவளுக்கு என்ன ஆற்றல்! என்ன தேர்ச்சி! என்னையே மறந்து நின்றேன்!

கண்ணாடி எடுத்தாள். சீப்பும் எடுத்தாள்.

கட்டியிருந்த தலையைப் பிரித்தாள்.

சீவிச் சீவி வகிடு எடுத்தாள்.

தழையத் தழையப் பின்னல் முடித்தாள்.

கொண்டை ஊசியை இங்கும் அங்கும் குத்திக் கொண்டாள்.

நறுமணப் பொடியை நலுங்காதள்ளி நயமாய்ப் பூசினாள்.

கொத்துச் சரத்தை எடுத்துக் கூந்தலில் சூடிக் குலுங்கி நகைத்தாள்!

பொட்டுப் புட்டியை எடுத்துக் கொண்டு தொட்டுத் துலங்க நெற்றியில் இட்டாள்! ஒப்பனை முடிந்தது ஓ! ஓ!

என்ற அளவில் இருந்தனள் இல்லை!

காற்கை தூக்கிக் கனிந்த நகையால்

கவின்மிகு வணக்கம் செய்தாள்!

இப்படி ஒருத்தியை வள்ளுவக்கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ!

அதனால்,

> "ஊறொராஅல் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
> ஆறென்ப ஆய்ந்தவர் கோள்" (662)

என்றாரோ?

திருப்பரங்குன்றத்தில் கண்ணேரில் கண்ட காட்சி இது.

(12)

"ஆடற் கலைக்கே அருங்கொடையாக வாய்த்தவள் இவள்" என அரங்கேற்றம் ஆயது.

பரிசுகள் குவிந்தன; பாராட்டுகள் நிறைந்தன.

பம்பாயில் இருந்து சென்னைக்கு வந்தனர்.

சென்னையில் இருந்து திருச்சி,

வயலூர் எய்தினர். வயலூர் முருகன் அவர்கள் வழிபடு தெய்வமாம்!

வழிபாடு முடித்துச் சமயபுரம் சார்ந்து

வடக்கே சாலையில் ஓடியது வண்டி!

எதிரே வந்த வண்டி தூக்கி எறிந்தது.

விழுந்தாள் ஆடல் செல்வி, முட்டி மோதி!

எழுந்தாள் அல்லள், காலோ ஒடிவு!

திருச்சி சென்றனர் மருத்துவம் புரிய,

முதலுதவி முடித்துச் சென்னை விசயா சேர்ந்தனர்.

என்ன ஆயினும் என்ன?

முட்டிற்குக் கீழே காலை எடுத்தே முடிந்தது!

செயற்கைக் காலுக்குச் செயப்பூர் சென்றனர்.

பொருத்தலும் பொருந்தலும் இயல்பாகிட வேண்டுமே!

பிள்ளை தூங்கினாள்!

பெற்றோர் ஏங்கினர்!

“பரிவு காட்டிப் பாழ்படுத்தாதீர்” என்றார் மருத்துவர்.

காலும் கூடியது; முழுதாய் நடந்தாள்,

நடக்கப் பிறந்த பிறப்பா என் பிறப்பு?

ஆடப்பிறந்த பிறப்பு அடங்கிப் போக ஆகவே ஆகாது!

ஆடல்! ஆடல்! ஆடியே தீர்வேன்!

அயர்ந்தனர் பெற்றோர்!

குருதி சொட்டும் ; சொட்டச் சொட்டச்

சோர்தல் இன்றிப் பயின்றாள்!

எந்த அரங்கில் அரங்கேறினளோ,

அந்த அரங்கில் மீண்டும் அரங்கேற்றம்;

ஆண்டுகள் பதின்மூன்று இடைவெளி!

அப்பா பயிற்சி, பயிற்சி!

காலை இழந்தும் கலைமயில் ஆட்டமா?

முன்னினும் கூட்டம் மூன்று மடங்கு!

அவையே அதிர்ந்தது!

தந்தை, தாம் தரு மகளின் காலைத்தொட்டு வணங்கினார்!

சிற்பி வடித்த சிலைக்குச் சிற்பியே வணக்கம் செய்தமை ஈது!

காலை இழந்தவள் ஒரு கல்லைத் தாண்டுகிறாள்

செய்தித்தாள் செய்த சிறப்பு ஈது!

நன்கொடைத் தொகையோ ஐந்திலக்கம்

எதிர்பாராத ஓர் அறிவிப்பு;

ஆடிய அவளே அறிவித்தாள்;

“இத்தொகை அனைத்தும் வைப்பில் வைக்கப்படும்

“வட்டித் தொகையால் ஆண்டுதோறும் வாய்த்த அளவில்

வாய்ப்பில்லோர்க்கு இலவயமாகக் கால் வழங்கற்கு ஆகும்!”

வியப்பாய் வியந்தது கூட்டம்!

திரைப்படம் தேடி வந்தது.

“ஆட வேண்டா; ஆடல்போல் காட்டின் போதும்” என்றது!

இல்லை! இல்லை! பொய்ம்மைக் காட்சி என்ன,

பொம்மைக் காட்சி ! மெய்யாய் ஆடுவேன்” என்றாள்.

‘மயூரி’ என்பது அப்படம் !

அவ்வாடல் நங்கை சுதா சந்திரன்!

இப்படி ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே! என்னே! என்று வியந்து நின்றாரோ?

"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்" (623)

என்றாரோ?

(13)

"காது கேட்கவில்லையா? கவலை விடுக" என்றொரு
விளம்பரங் கண்டார்.

கேளாக் காது கேட்பது போலக் களிப்புற்றார்.

விளம்பரம் தந்த முகவரி இடத்தை, விளம்பிக் கேட்டு விரைந்தார்.

கேளாக் காது கேட்கு மென்ற கிளர்ச்சி இவர்க்கு மட்டுமா?

கூடியிருந்த கூட்டம் கேட்டுக் கொள் என்று நின்றது.

வரிசைப் படியே வருகென அழைத்தனர்.

கையின் அழைப்புக் கணத்தில் போய்விடும்!

வாயின் அழைப்பே நொடியில் வாய்த்துவிடும் என்றும்,

ஆர்வமுந்த அவ்வவர் வரிசையில் இருந்தனர்.

அழைக்க அழைக்கச் சென்றனர்.

முன்னே சொல்லிய முதியரும், முறையில் சென்றார்.

ஒலி வாங்கி ஓரிடம்!

ஒலிபெருக்கி ஓரிடம்!

ஒலிபெருக்கி உள்ள இடத்தில் இருந்த இருக்கையில் இருக்கச் செய்தனர்.

ஒலிபெருக்கிவாயின் பக்கல் காதை வைத்துக் கேட்கச் சொல்லினர்.

சொல்லிய தொன்றும் கேட்க வில்லை!

கத்திய தொன்றும் எட்டவில்லை!

கடைசி முயற்சி!

ஈரடிவட்ட வெண்கல மணியில் சுத்தியல் கொண்டு, எட்டடி போட்டும் எட்டவில்லை!

'கேட்டதா ஒலி' என்றனர், கையைக் காட்டி!

‘இல்லவே இல்லை என்றார் வாயால்

“காதுகேட்க வில்லையா; கவலை விடுக!

கேட்கவே கேட்காது” என்று கூறிவிட்டனர்.

காது கேளாப் பெரியவர் எத்தகு முயற்சியர்!

எழுத்துக் கடமையே பழுத்ததவமாய்க் கொண்ட உழைப்பின் முனைவர்!

அவர் எழுதிக் குவித்த நூல்கள் ஒருபது இருபதா? இருநூற்றுக்கு மேலே

உரையா, கதையா, வரலாறா, தொகுப்பா, சமயமா எல்லாம் எழுதித் தள்ளினார்!

புலவர் வரிசைமட்டும் முப்பதுக்கு மேலே!

கழகப் புலவர் கருப்பக் கிளர் சு. அ. இராமசாமி என்பார் அவர் . கழகத்தால் அவரும், அவரால் கழகமும் மாறி மாறிப் பெற்ற பேறுகள் தமிழ்ப் பேறுகள் ஆயின.

இத்தகும் வினைத் திறத் தொருவரை

வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே உழைப்பு! என்னே உழைப்பு !

இடரை எண்ணா உழைப்பு என்று வியந்து நின்றாரோ?

அதனால்

“மடுத்தவாய் எல்லாம் பகடன் னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து” (624)

என்றாரோ ?

(14)

இரண்டரை அகவைச் சிறுமி அவள்.

தந்தை பேராசிரியர்.

தாயும் ஆசிரியர்,

கதை கதையாக நாளும் கேட்பாள்.

தடையின்றிப் பெற்றோர் சொல்வர்.

கேட்டதை மறத்தல் இல்லை; எவ்வளவு நாள்கள் ஆயினும்;

எத்தனை செய்திகள் எனினும்!

விந்தையும் வியப்பும் பெற்றோர்க்கு.

மகளை நினைத்துப் பூரிப்பு.

பெருங்கதை ஆகிய இராம காதையைத்

தொடக்க முதலே உரைத்தனர்.

காதை உறுப்பினர் இருநூற்றுவர்க்கும் மேலே.

அத்தனை பேரையும் நினைவில் கொண்டாள்.

ஒருவர்க் கொருவர் உள்ள தொடர்பையும்

நினைவில் கொண்டாள்

ஒன்று என்ன, இரண்டு என்ன, ஐந்நூற்றுக்கு

மேலும் இராமாயண வினாக்களைக் கேட்க,

உடனுக்குடன் மறுமொழி உரைத்தாள்.

ஐந்து அகவை எட்டும்போது பாடலையும் படித்தாள்.

அவள் வினாவும் வினாவுக்கு விடை தரவே அறிவறிதந்தை கற்றார்; மேலும் மேலும் கற்றார்.

ஒருமுறை கேட்ட செய்தியை மறவாமை போலவே

ஒருமுறை படித்த பாடலையும் மறவாத் திறமை அமைந்து கிடந்தது.

எண்ணிலாப் பாடல்கள் எண்ணக் களஞ்சியம் ஏறின.

பாட்டும் பொருளும் பயில விளங்கின.

தமிழ்நாடு இந்திய நாடெனும் எல்லை தாண்டி

சிங்கை மலேசியா நாடும் அறிய – அவையோர்

வியக்க அறுபது நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

உருவும் அகவையும் – உரையும் பாட்டும் வினாவும் விடையும்.

கண்டோர் கேட்டோர் தமக்குக் கழிபேருவகை யாயின!

இத்தனை நினைவா இந்த அகவையில்!

பெறலரும் நினைவின் பேறுறு குழந்தையைப்

பெற்றவர் பெற்ற பேறோ பெரிது!

செல்வச்சிறுமி ஆதிரை. அருமைத் தந்தை கண்ணப்பர்.

அன்பின் அன்னை அபர்ணா.

இருப்பிடம் சென்னை.

இத்தகு நினைவுச் செல்வியை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்றாரோ ?

தினமலர் : ஞாயிறு மலர் 8-12-91

(15)

பள்ளியில் படிக்கும் சிறுவன் தான் அவன்.

வீட்டில் இல்லை; வெளியில் இல்லை;

பள்ளியில் இல்லை; பார்த்துத் தேட எங்கும் இல்லை!

ஒரு நாள் – இரு நாள்கள் ஓடி விட்டன.

மூன்றாம் நாளும் காணவில்லை.

முட்டி மோதினர் பெற்றோர்.

பிள்ளையைத் தேடி அலைந்தவர் உள்ளத்தில் ஒருபொரி!

விறகு போடும் இடத்தைத் தேடாது விட்டு விட்டோமே!

இருண்ட அறையுள் மறைந்து இருந்தால்!

விளக்கை ஏற்றி அடியடியாக எட்டு வைத்து உள்ளேபோயினர். பழைய பொருள்களும் விறகும் பிறவும் போட்டு வைக்கும் அவ்வறைக்குள்ளே, முடங்கிக் கிடந்தான் சிறுவன்,

ஆள்வரவு கண்டு விழித்தான்.

எழுந்தான் அல்லன்.

எழும்ப வேண்டினர்.

“எழுப்பாதீர்கள்; இன்னும் கொஞ்சம் பொறுங்கள்;

குஞ்சு பொரித்து விடுவேன் என்றான்.

“குஞ்சு பொரிக்கவா என்ன உளறுகிறாய்” என்று

கையைப் பிடித்துத் தூக்கினர்.

அடிவயிற்றோடு பறவை முட்டையை வைத்துக் காலை

அணைத்துக் கிடந்த சிறுவனைக் கையால்

அணைத்துத் தூக்கினர்.

“அடையில் கிடக்கும் பறவை குஞ்சைப் பொரிக்கிறது.

அதனைப் போல, அடையில் கிடந்து வெப்பம் தந்தால்

குஞ்சு பொரிக்கத்தானே செய்யும் என்றான்.

நகைப்பாய் நகைத்தனர் எழுப்பினோர்.

ஆனால் இன்று என்ன ஆனது?

அவன் ஆய்வு வழித்தடம், நகைத்தவர் தம்மை மட்டுமா?

நானிலம் நகைக்க நடைமுறையாகி விட்டது!

குஞ்சு பொரிக்கும் வெப்பப் பொறிகள்,

முட்டையைக் குஞ்சாகப் பொரித்துத் தருதலை

நாமறிகின்றோமே!

இந்த இளைஞன் இருநூற்றுக்கு மேலும் அறிவியல் கருவிகள்

கண்ட விந்தை அறிவினன், தாமசு ஆல்வா எடிசன்!

இப்படி முயற்சியன் ஒருவனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

“அரியஎன் றாகாத தில்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்” (537)

என்றாரோ!

பொச்சாவாமை–மறதி இல்லாமை, கடமையில் சோராமை.

(16)

எவ்வளவு சின்னஞ்சிறு குழந்தை ஈது.

கைச்சாண் அளவு தான் உயரம்.

கையின் அளவு கனமும் இல்லை.

காலும் கையும் தலையும் உடலும்,

தூக்கி எடுக்கச் சிறிய பொம்மை!

இந்தக் குழந்தையைக் கண்ணாடிப் புட்டிக்குள்ளே

போட்டு வைக்கலாம்!

இப்படிப் பேசப் பிறந்த குழந்தை!

மெலிந்த குழந்தைக்கு, மெலிவிலா அறிவு.

எதனை எனினும் துருவித் துருவிப் பார்க்கும்.

எண்ணி எண்ணிப், புதிது புதிதாய்ச் சொல்லும்,

பள்ளிக் கல்வியில் பளிச்சிடு திறமை –

பள்ளி மாணவருள்ளேயே மெலிந்த உருவம்!

“இந்த உருவத்தினுள் இவ்வளவு புலமையா” எனப்

பெற்றோர் வியந்தனர்; பிறரும் வியந்தனர்.

ஒருநாள் கனி மரத்தின் கீழே அமர்ந்திருந்தான்;

காம்பு விட்டுக் கனியொன்று வீழ்ந்தது.

கனி கீழே வீழ்தல் என்ன உலகம் காணாப் புதுமையா?

அன்றுதான் விழுந்ததா ? அவன் முன்தான் விழுந்ததா?

என்றும் எங்கும் உள்ள நிகழ்ச்சியே எனினும்,

அன்று அவனுக்கொரு விந்தை ஆயிற்று!

வீழ்ந்த கனி மேலே போகவில்லை, பக்கங்களிலும்

போகவில்லை, கீழே வீழ்ந்தது ஏன்?” என எண்ணினான்.

“கீழே விழாமல் என்ன செய்யும்? கிறுக்குத்தனமிது”

என்று தோன்றலாம்!

அவனோ எண்ணினான்! ஆழமாய் எண்ணினான்.

புவியின் ஈர்ப்பால், பொருள்கள் மேலேயிருந்து

கீழே வீழ்கின்றன என்று கண்டான்.

கண்டதை மேலும் மேலும் ஆய்ந்தான்.

புவியீர்ப் பாற்றலை உலகம் அறியச் செய்தான்.

புவி தோன்றிய நாள் தொட்டே இருக்கும்ஆற்றல்

எனினும் புலப்படக் காட்டிக் கொள்கையாய்த்

தந்தவன் அவனே!

அதன் பயன் என்ன செய்தது?

ஈர்ப்பின் ஆற்றல் கடந்த எல்லையும் உண்டு.

எல்லை கடந்து போனபொருள் மற்றோர் அண்டத்து

ஈர்ப்பினால் அதனை அடையும்.

ஈர்ப்பின் எல்லை கடக்க ஏவின், ஏவுதல் இன்றியே

இழுத்துக் கொள்ளும் அண்டம் உண்டு.

அண்டமும் அண்டமும் மோதா நிலையில்,

கோளும் கோளும் முட்டா நிலையில், இருப்பதெல்லாம்

ஈர்ப்பின் ஆற்றல் கொடையே!

என்பதை யெல்லாம் உலகம் காணச் செய்தான்!

உருவச் சிறுமை என்ன ஆனது?

ஒள்ளிய அறிவுப் பெருமை என்ன ஆனது?

வியத்தகும் இந்த ஒள்ளிய ஒல்லியன் ஐசக்குநியூட்டன்!

இத்தகும் ஒருவனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ? என்னே உருவம்? என்னே அறிவு!

என்றே வியந்து நின்றாரோ?

> "உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
> அச்சாணி அன்னார் உடைத்து" (667)

என்றாரோ ?

(17)

பத்தே மாதக் குழந்தை.

பொம்மைகள் வைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

பரண் மேல் இருந்த வேட்டைத் துப்பாக்கியை எடுத்துக் கீழே வைத்து விட்டுப் பரணையில் கிடந்த ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார் வீட்டுக்காரர்.

பக்கத்து வீட்டுச் சிறுவன் கண்ணில், துப்பாக்கி விந்தையாயது. விளையாட்டாக எடுத்தான்,

தள்ளு குதிரையில் கைவிரல் பட்டது

என்றோ போட்டு வைத்து, எடுக்காதிருந்த குண்டு,

வெளிபட்டுச் சீறிச் சென்றது. சென்றது.

பொம்மைக் குழந்தையின் பிடரியில் பட்டு மூளையுள் புகுந்தது. எண்ணியா எதுவும் நடந்தது?

எண்ணி ஏதாவது செய்யாவிட்டால் என்ன ஆவது?

‘என்ன ஆகுமோ?’ என்று குழந்தையை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு எய்தினர்.

படங்கள் படங்கள் அத்தனை படங்கள்!

ஆய்வு! ஆய்வு! அத்தனை ஆய்வு!

“எடுக்காவிட்டால் குழந்தை தப்பாது!

எடுக்கும் போதே, குழந்தை தப்பாதே!

எதுவும் நடக்கும் எந்தப் பொழுதும்!

இருக்கும் வகையிலே காப்பதற் கெண்ணலே நல்லது.”

மருத்துவர் பலர்! அவர் முடிபுகளும் பல.

மூன்று நாளாய் ஒரு முடியும் இல்லை.

“முற்றிவிட்டால் முடியாது ஒன்றும்”

– துணிந்தார் ஒருவர்.

"அறுத்து எடுத்து அகற்றுதலே ஆருயிர் காக்கும் வழி" என்றார்.

பலரும், "ஆகும் செயலன்று" என்றே இறுதி வரை கூறினர்.

"எண்ணிய படியே இனிதில் முடியும்; துணிந்து செய்தலே

என் கடன்" என்று உறுதியானார் துணிவர்.

"அறுவை நிகழ்ந்தது

"மூளைப் பகுதி சிறிதே சிதையினும், கால்கை இயக்கம்

இல்லாமல் ஒழியும்

பேசா நிலையும் ஆகும்;

குண்டு எடுத்தல் ஒருபணி; எடுத்தல் முயற்சியால்

பின் விளைவு ஏற்படாது காத்தல் பெரும்பணி"

பற்பல நெருக்கடி ஒரே பொழுதில்,

அறிவு – தெளிவு – துணிவு!

அறுவை இனிதின் நிகழ்ந்தது.

எச்சிறு குறையும் இன்றிக் குழந்தை நிலைமை

தேறுதல் ஆயது?

நம்பிக்கை இல்லா திருந்த மருத்துவர் தாமா,

நம்பிக்கை கொண்டு துணையாய் நின்றவர் தாமும்

கையில் கருவி கொண்டு துணிந்து கடமை செய்தவர்

தாமும் – அனைவரும் வியப்பக் குழந்தை, நலத்தொடு பழைய

படியே மழலைத் தேனில் பெற்றோரை நனைத்த பேறு

வியப்பின் கொள்ளையாய் அமைந்தது.

அந்த மருத்துவப் பெருந்தகை **கசேந்திரனார்** என்பார்

மதுரை வாழ்வினர்.

"ஊழிற் பெருவலியாவுள" என்பது நேர்ந்த நேர்ச்சி.

"ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்பது மருத்துவர் தேர்ச்சி.

இத்தகு காட்சியும் நேர்ச்சியும் வள்ளுவக் கிழவர் கண்டாரோ ?

ஊழின் வெற்றியும் முயற்சியின் வெற்றியும்

மோதி முன்வர என்னே என்னே என்று திகைப்புற நின்றாரோ?

அதனால்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தாம்முந் துறும்" (380)

என்றும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" (620)

என்றும் உரைத்தாரோ ?

செய்தி : தினமலர் 12 - 1 -92

(18)

எழுந்தார் ஒரு பெண்மணி!

உறக்க மயக்கம்!

சோம்பல் முறிக்கத் தூக்கினார் கைகளை;

தூக்கிய கைகளுள் ஒன்று இறங்கவே இல்லை!

மூட்டு விலகி, உயர்த்திய நிலையிலே இருந்து

இறங்குதல் இன்றி நின்றது!

'ஓ' வென இரைந்தார்!

மூட்டைச் சேர்க்க முயன்றார் பெரிதும்!

கண்ட வலியன்றிக், கொண்டபயன் இல்லை!

கதறிக் கதறிக் கண்ணீர் வடித்தார்!

கணவர் கலங்கினார்!

உதவ ஓடினார்!

கையைத் தொடவே விட்டிலர் அவரை!

வாராக் கையின் வலியோ உயர்ந்தது!

வழிய வழியக் கதறினார்!

கலங்கிய கணவர் கடிதில் ஓடி,

மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தார்.
வந்த மருத்துவர் நிலைமையைக் கண்டார்;

நிகழ்ந்தது கேட்டார்.

அவரையும் தீண்ட விட்டார் அல்லர்!

தனியறை ஒன்றில் அவரை நிற்க ஏவினார்.

அவரின் முன்னர், அவர்தம் கணவரை

நாற்காலியிட்டு அமரச் செய்தார்.

கதவை மூடினார்.

இயல்பாய் இருந்த கையைப் பற்றி, நாடிபார்த்தார்.

நாடிபார்த்த கையை, நன்றாய் இறுக்கி

நழுவாதிருக்க, வைத்துக் கொண்டார் ஒருகையால்!

மற்றொரு கையால், சீலையைப் பற்றிச் சட்டென இழுத்தார்!

அம்மவோ! என்னே வியப்பு!

இறங்காக் கையும் நொடியில் இறங்கி

மின்னற் கீற்றாய் வளைந்து

இழுபடு சீலையை இறுகப் பற்றிக் கொண்டது!

விலகிய மூட்டும் – விலகும் சீலையை விலக விடாமல்

பற்றும் விந்தை என்னையோ என்னை!

மானக் கொள்கலம் ஈதென உணர்ந்த மருத்துவ மாமணி

விந்தை வினைத்திறம் என்னையோ என்னை!

இந்த மருத்துவர் அரங்கர் (அரங்கச்சாரியார்) என்பார்.

வள்ளுவக் கிழவர் இப்படித் திறத்தைக்

கருத்துக் காட்சியாய்க் கண்டாரோ?

என்னே என்னே என்று துடிப்பொடு நின்றாரோ?

அதனால்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (788)

என்றாரோ ?

(19)

செயல்படவில்லை தந்தையின் சிறுநீரகம்;

"நீரை மாற்றும் மாற்றில், நீடித்தல் இயலாது; மாற்றுச்
சிறுநீரகம் பொருத்தினால் அன்றிப் பிழைத்தற் கியலாது"

என்றார் மருத்துவர்

"நான் தருவேன் பொருந்தும் என்றால்" என்றான் மைந்தன்.

"நானே தருவேன் பொருந்தும் என்றால்" என்றாள் நன்மகள்.

"நானும் தரவா மாட்டேன் பொருந்தும் என்றால்"

–என்றாள் வந்த மருமகள்.

"தாயார் மட்டும் ஒன்றும் சொல்லா திருந்தாள்."

"தாயார் என்ன கவலையற்றுள்ளார்"

–என்றே மூவரும் எண்ணினர்.

"மருத்துவமனையில் அப்பா உழலுதல்
அறிந்துமேன் அசையாதுள்ளார்!
கல்லா இரும்பா இவர் மனம்

–என்றே தமக்குள் எண்ணினர்.–

மகனும் மகளும் மருகியும் மருத்துவ ஆய்வில் புகுந்தனர்.

எவர்தம் சிறுநீரகமும் பொருந்திய தில்லை!

என்ன செய்வர்?

அன்னையை எண்ணினர்!

அவரோ வாயைத் திறந்திலர்.

நடப்பது போல நடக்கட்டும்; நானென்ன சொல்வேன்?"

என்றார் அன்னை!

"சே சே அன்னையா இவள்? கொண்ட கணவனுக்கும்

உதவாள் மனைவியா ?

-உள்ளம் வெதும்பினர் மூவரும்,

நண்பன் ஒருவன் நண்ணினான்;

"நானென் சிறுநீரகம் பொருந்தின் தருவேன்" என்றான்.

"நன்றி'யென் றழைத்து மருத்துவ ஆய்வுக்குச் சென்றனர்.

பொருந்தி நின்றது அது

பூரிப் படைந்தனர் அனைவரும்.

பொருந்திய நாளில் பொருத்தி விட்டனர்.

அதற்கும் கூட அன்னை வந்திலர்!

"என்ன கொடுமை; இவர்தம் முகத்து விழித்தலும்

இழிவே" என்று வெறுத்தனர்.

செய்தி வந்தது வீட்டுக்கு அருகே வாழ்பவர் வழியே!

"அம்மா இறந்து போனார்"

தந்தைக்குச் சொல்லாமல் மக்களும் மருகியும் வீட்டுக் கோடினர்.

என்ன செய்வது?

அடக்கம் செய்தனர்!

அடக்கம் செய்த பின்னரும் அகத்தே வெப்பம் இருக்கவே

செய்தது?

"இந்த அன்னை இரக்கம் இல்லாதவள்!

தந்தைக் கிதனை எப்படி உரைப்பது?

எத்தனை நாள் தான் மறைப்பது?"

மருத்துவர் குறித்த பொழுதில், நிகழ்ந்ததைத் தந்தைக்கு

உரைத்தனர்.

உரைத்த அளவொடும் நிறுத்தினர் அல்லர்,

உளத்தின் கொதிப்பையும் கூடவே உரைத்தனர்!

தந்தை விம்மினார்! கண்ணீர் வடித்தார்!

“தாயைப் பழியீர்! தாயைப் பழியீர்!

தவறே அறியாத் தெய்வம் அவளே!

பழியேன் பட்ட கடனைத் தீர்க்க வழியற்று நின்றேன்.

குடற் புண்ணுக்கு அறுவை செய்யும் நெருக்கடி நிலையை,

நேர்ந்த நலமாய்ப் பயன்படுத்திக்கொண்டு, அவளே அறியா வகையில் சிறுநீரகத்தை எடுத்து இலக்கமாக்கி, இழிவைத் தீர்த்த இழிஞன் யானே!

இதனை வெளிப்படச் சொன்னால்,

என்பழிச் செயல் பளிச்சிடுமெனக் காத்த கற்பினள் அன்னாள்!

மருத்துவ ஆய்வுக்கு அவளிங் கெய்தின் மறைத்தது

வெளிப்பாடாமே! மணந்தவன் மானம் அழிந்துபோமே!

என்பதால் ஒடுக்கி ஒடுக்கி ஒடுங்கியே போனாள்!

என் புகழ் காக்கத் தன்னையே ஒடுக்கிய உயர்ந்தவள்

அவளை, ஒருபழி சொல்லேல் என்றார் உணர்ந்த தந்தை!

“என்னே எங்கள் சிறுமை; உருகும் தாயைப் பெருகப்

பழித்தோமே! என்றே உருகினர்.

இத்தகு தெய்வத் துணையின் குடிப்புகழ் காக்கும் மாட்சியை

வள்ளுவக்கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

அதனால்,

> “தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்” (56)

என்றாரோ?

2-1-92 குமுதம் : அம்மாவா இவள் சே எத்தனை பெரிய கல்நெஞ்சக்காரி (சரோசு) என்பதன் கருத்தைக்கொண்டது.

(20)

ஆற்று மணலில் வண்டி ஓடுமா?

கடற்கரை ஓரம் பரவிக் குவிந்த மணல் வெளியிலே மிதிவண்டி ஓட்ட இயலுமா?

பாலைவனத்தின் மணற்பெரும் பரப்பில் ஒருவர் இருவர் அல்லர்.

அறுவர் துள்ளுந்து ஓட்டிக் கடந்து வென்றுளர்!

பாலைவனம் என்ன சிறிய பாலைவனமா?

உலகப் பெரும் பாலைவனம்–ஆம்! சகாராப் பாலைவனம்?

ஒருகல் தொலைவா– இருகல் தொலைவா?

6000 கல் தொலைவு.

மொராக்கோ, அல்சீரியா, நைகர், நைசீரியா ஆகிய நான்கு நாடுகள் அடங்கிய பகுதியைக் கடக்க வேண்டும்.

பகலிலே கடுவெயில்!

இரவிலே கடுங்குளிர்!

ஒன்றற் கொன்று நேர்எதிரிடை!

கொள்ளைக் கூட்டம் சூழ்ந்து வளைத்துச் சூறையிட்டதும் உண்டு.

செல்லும் வழிதவறிச் சென்ற நிலையும் உண்டு

சொல்லி வழிகாட்டும் ஆளும் இல்லா அயர்வும் உண்டு!

மொழியோ பிரெஞ்சு மட்டுமே ஆங்கு வழங்கு மொழி!

நல்லவேளை பிரெஞ்சு மொழி அறிந்தார் ஒருவர் இருந்தார்.

வண்டி பழுதாதலுக்குக் கேட்க வேண்டுமா?

அதனைச் சீர் செய்ய வல்லார், ஒருவரும் இடம் பெற்றிருந்தார்.

1991 திசம்பர் 19–இல் புறப்பட்ட செலவு

1992 சனவரி 9–இல் நிறைந்தது.

கலந்துகொண்டோர் இந்திய வான்படை அலுவலர்

கோ கா ராகுல்ராவ், ரோலண்டு திசவுசா; நெவிலி தருகன் வாலா,

சி. கே. சின்னப்பா, திலீப்ராம், பரூக்சைக்

என்பார் அவர்கள் அனைவரும் இந்திய நாட்டினர்.

பனிமலை ஏற்றம் அரும்பெரும் முயற்சி என்றால்

பாலைவனச் செலவும் அத்தகு முயற்சியே யன்றோ!

அயரா முயற்சியால் அரும்பாலை கடந்து வாகை சூடிய இத்தகு

வீரரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து வாழ்த்தி நின்றாரோ?

அதனால்,

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (61)

என்றாரோ ?

செய்தி : தினகரன் : 12-2-92

(21)

காவல் துறையின் உளவுப் பிரிவில் கடமை;

கன்னித் தமிழ்த் தொண்டில் ஈடுபாடு;

கடமையும் தொண்டும் தொடர்ந்தன;

பின்னர்த் தொண்டே கடமையாயிற்று.

ஆங்கிலர் இயற்றிய மருத்துவ நூல்களை ஆய்ந்தார்.

மருத்துவ அகர முதலிகளையும் ஆய்ந்தார்.

தமிழுக்கும் அவ்வாறு அகர முதலி தொகுக்க முனைந்தார்.

வேதியியலும் செடிகொடி இயலும் மருத்துவ இயலும் அரிதில்

அரிதாய் ஆய்ந்தார்.

அகர முறையில் சொற்களை அடைவு செய்து தமிழ் ஆங்கில

இருமொழி அகரமுதலி அமைத்தார்.

அ–ஔ ஒரு தொகுதி.

க–கௌ–ஒரு தொகுதி.

பக்க அளவோ 1752

அச்சிடத் தொகையோ இல்லை.

அச்சிடாதிருக்க மனமோ இல்லை. என் செய்வார்?

தமக்கென இருந்த நன்செய் இரண்டு வேலி!

இரண்டு வேலியும் விற்றார்!

அச்சு வேலையைத் தொடர்ந்தார்.

அதுவும் போதாமை என்றால், என்னே செய்வது ?

சென்னை அரசு உதவ வந்தது.

இருந்து பணிசெய்ய இல்லமும் உதவியும் செய்தது.

மூன்றாம் தொகுதி மும்முரமாக வேலை நடந்தது.

அச்சும் நடந்தது

முடியுமுன்னே முடிந்து போனார்!

உதவிய அரசு ஒதுங்கிக் கொள்ளுமா!

அச்சிட்ட படிவமெல்லாம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

கள்ளிப்பெட்டியில் அடங்கி ஓர் அறையில் கிடந்தன.

அரசு மறந்தது; ஆரும் நினைத்திலர்;

நினைக்க ஒருவர் வாய்த்தார்; முயன்றார்; கண்டார்;

கண்ணீர் வழியக் கரைந்தார். அந்தோ!

தூசு தும்பு, ஒட்டடை பாச்சை பூச்சி அப்பிக்கிடந்தன!

அரித்தும் அழிந்தும் போனவை மிகப்பல.

எஞ்சிய பகுதி திருமுறை கண்ட காட்சி போல் தெரிந்தது.

தட்டிக் கொட்டி எடுத்துப்பார்த்திட, மூன்று தொகுதிகள்

2174 பக்கம்; சில நூல்கள் கிட்டின!

அகராதி மணக்கச் சந்தனக் கட்டையாய்த் தம்மை

அரைத்துக் கொண்டவர் தி. வி. சாம்பசிவனார்

அவரூர் அறியச் சான்றெதும் இல்லை!

ஆனால் தி. வி. அண்ணாமலை என்பார் சான்றிதழ்

ஒன்று ஆங்குக் கிடைத்தது.

'தி. வி.' ஒன்று படல் உரிமை சொன்னது.

தஞ்சை, அம்மாப்பேட்டை அவரூர் எனக் காட்டி

நின்றது சான்றிதழ்!

திருமுறை கண்ட சோழன் போலத் தேடிக்கண்ட திருவினர்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் வ. சுப்பையா!

அவர்தம் தேடல் தானே,

சாம்பசிவனார் ஒப்புரவாண்மை தமிழுலகு அறியத்தந்தது!

சாம்பசிவனார் போல, வாழ்வுத்துணையாய் இருந்த

வயலை விற்றும், தாய்த்தமிழ்த் தொண்டுக் குதவிய ஒருவரை

வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே பெருந்தகை!

என்னே பெருந்தகை?

என்றே வியந்து நின்றாரோ?

அதனால்,

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்" (218)

என்றாரோ ?

(22)

சீற்ற மிக்கு வந்தார் ஒருவர். கம்பளி ஆடைக் கடைக்குள் புகுந்தார்.

"கடனெதும் தரவேண்டியில்லை. கடனுளதாகக் கடிதம்

வந்தது" என்றார்.

பொறுமையாகக் கேட்டார் உரிமையர்.

மறுத்துப் பேசத்துடித்தும், அடக்கி யிருந்தார்.

சொல்வதை எல்லாம் சொல்லித் தீர்த்தார் வந்தவர்.

"தேடிவந்தமை எம்பேறு; சொல்வதில் தங்களுக்குள்ள

ஆர்வத்தினும் கேட்கும் ஆர்வம் மிக்குளேன்" என்றார்.

கடன் தரவேண்டும் என்பதைத் திட்டமாக அறிந்தும்
அழுத்தினார் அல்லர். எங்களுக்குப் பலர் கணக்கு;
தங்களுக்குத் தங்கள் கணக்கே. ஆதலால் தாங்கள் சொல்வதே
சரியாய் இருக்கும் என்றார்.
"ஆயினும், உங்கள் கடையில் ஒன்றும் வாங்கேன்" என்று
பொரிந்தார் வந்தவர்.
"இன்ன இன்ன கடைகளில் தரமாய்ப் பொருள்கள் கிடைக்கும்"
என்று பட்டியல் தந்தார் கடை உரிமையர்.
அமைதியானார் வந்தவர்.
'விருந்துணலாமே' என்று விரும்பி அழைத்தார் உரிமையர்.
ஏற்றுக்கொண்டு விருந்தும் உண்டார்.
திரும்பும் போது எண்ணியதன் மேலும் பெரும் பொருட்
கட்டளை தந்தார்
மறுநாள் கணக்குக் குறிப்பைப் புரட்டிப் பார்க்கக் கடன்
தொகைக் கணக்கும் இருந்தது.
விதிர்விதிர்த்துப் போனார்.
விடாப்பிடியாகத் தரவேண்டியதில்லை என்று தாம்
மறுத்ததையும், அவர் அதனை ஏற்று மதித்துப் போற்றிய
உயர்வையும் நினைத்தார் சினத்தர்.
கடனை உடனே அனுப்பி, நிகழ்ந்ததற்கு இரங்கி எழுதினார்.
வணிக வாடிக்கை அன்பு நண்பாய்ச் சிறந்தது.
தமக்குப் பிறந்த குழந்தைக்குக் கடையின் உரிமையாளர்
பெயரைச் சூட்டிப் பெரிது போற்றினார்.
வாணாள் அளவும் வாடிக்கை விடாத தொடர்பினர் ஆனார்.
கடையின் உரிமையர் கடுத்தோ கடித்தோ மறுத்தோ மாற்றியோ
பேசியிருப்பின் 'எதிர் எதிர்' நின்றார் இணைவுறும்
நன்மை எய்தி இருக்குமோ?

கடையின் உரிமையர் டெட் மார்.

கடனை மறுத்தவர் அவர்தாம் வாடிக்கையாளரானாரே! அவர்

பெயரை உரிமையாளர் உலகறியச் சொல்லுதல் ஆவரோ?

இத்தகு சீறாச் சீர்த்தியை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்து நின்றாரோ?

அதனால்,

"உள்ளிய வெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்

உள்ளான் வெகுளி எனின்" (309)

என்றாரோ?

வாழ்க்கையில் வெற்றி பக் 165-166

(23)

உருக்குத் தொழிலில் இருவர் இருந்தனர்.

இருவருக்குள்ளும் கடிய போட்டி:

ஒருவருக் கொருவர் குறையா அளவில் இழப்பு;

போட்டி வணிகம், மூடும் அளவில் முட்டுற்று நின்றது.

ஒருவர் எண்ணினார்.

"இழப்பை ஒழிக்கவும், முட்டுற்று நிற்பதை முடுக்கிவிடவும்

வழிவகை காண்பேன். எதிராய் இருந்தவர்.

எதிர்பாரா நிலையில் எதிரே நின்றார்.

"நமது போட்டியால் நம்மிருவர்க்குமே இழப்பு!

நாமிருபேரும் இணைந்து செய்யின் என்ன? என்றார்.

"இணைந்து செய்யின், அதற்கு எப்பெயர் இடுவது?"

"எப்பெயர் இடுவது என்பது என்ன?

தங்கள் குழும்புப் பெயரே பெயர்" என்றார்.

"அப்படியானால் பேசலாமே" என்றார்!

இருவரும்பேசி இணைந்து நடத்தினர்.

இழப்பு மாறி வருவாய் பெருவாய் ஆயது!

கோடி கோடி தாலர் தேடிக் கொள்ளை கொள்ளை

யாய்க் குவித்தனர்.

தம்பெருமை கருதாது, தம்பெயர் கருதாது விட்டுக் கொடுத்து

வீழ்ச்சியை எழுச்சியாய் ஆக்கியவர்.

ஆண்டுரு கார்னிசி!

அதற்கு ஒத்துப் போனவர் புல்மென் என்பார்!

அமெரிக்க நாட்டின் தொழில் தோன்றல்கள் இவர்கள்!

கார்னிசி போலும் ஒருவரை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

அரும்பெரும் தகைமை ஈதென வியந்து நின்றாரோ?

அதனால்,

"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து

மாணாத செய்வான் பகை" (867)

என்றாரோ?

வாழ்க்கையில் வெற்றி பக். 180-61.

(24)

காட்டு வழியிலோர் வீடு.

ஆம், ஒற்றை வீடு!

கணவன் மனைவி கைக்குழந்தை என்னும் மூவர் குடும்பம், கணவன் வெளியூர் போனமை அறிந்தான், ஒரு கள்வன், மூவரைத் துணையாய்க் கூட்டி வெவ்வேறிடங்களில் திருடி அங்கே வந்தான்.

தட்டினான் கதவை.

திறந்தாள்; பார்த்தாள் திடுக்கென்றாயது,

"பசியாய் இருக்கிறது; ஆக்கு சோறு" என்றனர்.

ஆக்காதிருக்க ஆகுமா?

ஒரு பெண்; நான்கு முரடர்,

ஆக்கினாள்; படைத்தாள்!

தொட்டிலில் குழந்தை!

கட்டிலில் திருடர் கருத்து!

தொட்டில் குழந்தையின் தொடையில் கிள்ளினாள்.

'வீர் வீர்' என்றே இரைந்தது.

இரைச்சல் பொறாமல் "அமர்த்து குழந்தையை" என்றான்,

அவருளும் இருந்த ஓர் இளகன்,

மேலும் கிள்ளினாள்!

"வீர் வீர்" "வீர் வீர்"

கத்தித் தொலைக்கிறது; வெளியே போ" என்றனர்!

வெளியே வந்தவள், மண்ணெண்ணெய்ப் புட்டியும்,

தீப்பெட்டியுமாக வந்தாள்!

கதவைப் பூட்டினாள்!

தெளித்தாள் எண்ணெய்!

உரசினாள் குச்சியை!

கூரை பற்றி எரிந்தது!

ஓட்டம் பிடித்தாள் காட்டு வழியில்!

அடுத்துள ஊரை நெருங்கினாள்;

காவல் நிலையம் கடிதில் புகுந்தாள்!

நிகழ்ந்ததை உரைத்தாள். காவல் படைஞர் சூழுமுன்,

சூழ்ந்த எரியில் கரிந்தே போயினர்!

பெண்மையின் வீறு ஊரூர்க்குப் பேச்சாய்க் கிடந்தது!

தன்னந் தனிமையில் தன்னை இழக்கத் துணியாத்

துணிவு என்னே துணிவு!

ஒருத்தியின் உள்ள உறுதி, கொள்ளைப் பகையை

ஒழித்தே விட்டது!

இத்தகு துணிவுக் காட்சியை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று வியந்துபோய் நின்றோரோ?

"உடைய ரெனப்படுவது ஊக்கம் , அஃதிலார்
உடையது உடையரோ மற்று?" (591)

என்றாரோ!

திருவில்லிபுத்தூர்ப் பக்கல் நிகழ்ந்த நிகழ்ச்சி ஈது.

(25)

மாடு பிடிக்கத் தரகனை நாடிச் சென்றான் ஒருவன்.
தரகன் வீடு, தனியொரு வீடு.
தோட்டத்தின் ஊடே இருந்தது அது.
மாடு பிடிக்க வந்தவன் மடியில் பணத்தொடு வந்தான்.
பெட்டியில் வைக்க நம்பித் தந்தான்.
முன்னும் பின்னும் மாடு பிடிக்கக் கொடுக்கத் தொடர்பு!
தொடர்பு கருதிவந்தான், தொல்லையையா கருதுவான்?

வீட்டுக்காரன் உள்ளம் தரகின் அளவில் அமைய வில்லை!
தந்த தொகையெலாம் தனக்கே கொள்ள நினைத்தான்.
காட்டிக் கொள்ளாமல் கலகலப்பாகப் பேசினான்
விருந்து சிறப்பாய்ச் செய்தான்.
கட்டில் போட்டுப் படுக்கவும் வைத்தான்.
வெளியே போவது போலப் போனான்.
போவது சொல்லாமல் போதலை நினைத்துக் கட்டிலில்
கிடந்தவன், கண்ணுறங்கா திருந்தான்.
சென்ற சிறிது பொழுதில் சிலரொடு வந்தான் தரகன்.
வாயிலுக்கு முன்னேநின்று, கட்டிலைக் காட்டிக்
கடிதில் மறைந்தான்.

வந்தவர் கையில் மண்வெட்டி–அரிவாள்–கோடரி–கூடை.
படுத்துக் கிடந்தவன் பார்வையில் ஆள்கள் மறைந்ததும்
மெல்லெனக் கிளர்ந்து வீட்டு முற்றத்து மரத்தின்
மேலே ஏறி மறைந்து கொண்டான்.

ஆழக்குழியாய் ஆள்கள் தோண்டிக் கொண்டிருந்தனர்.
வீட்டுத் திண்ணையில் வெறுமையாய்க் கிடந்த கட்டிலில்,
நேராங் கழித்து வந்த ஒருவன் உறக்க அயர்வில் படுத்தான்;
உறங்கிப் போனான்.
குழியைத் தோண்டியவர் வேலையை முடித்துச் சொன்னபடியே
கட்டிலில் கிடந்தவன் கழுத்தை ஒடித்துக் குழிக்குள் வைத்து
மூடிப்போயினர்!

மரத்தின் மேலே ஏறி இருந்தவன் விடியும் பொழுதுக்கு
முன்னே இறங்கி, விரைந்தே ஓடினான்.
காவல் படையை அழைத்துக் கொண்டு வந்தான்.
வந்த வணிகனைக் கண்டதும் திகைத்தான் தரகன்.
செத்தவன் எப்படி வந்தான்?
படத்திற்குப் போன மகனேன் இன்னும் வந்திலன்?
திகைக்கு முன்னே, வீட்டுக் காவல் ஆயது;
தோண்டி மூடிய குழியைத் தோண்டி எடுத்தனர்!
படத்திற்குப் போனவன், கிடைத்தான் அங்கே?
நினைத்தது என்ன? செய்தது என்ன? நிகழ்ந்தது என்ன?
இத்தகு கொடுமைக் கொலைஞனை வள்ளுவக் கிழவர்
கண்டாரோ?
என்னே என்னே என்று நொந்தாரோ ?

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (319)

என்றாரோ ?

நிகழ்ந்த நிகழ்வு – செவிவழிச் செய்தி.

(26)

கொண்டவன் மேலே கொண்டனள் சீற்றம்
சீற்றம் பெருகிப் பெருகி வளர்ந்தது.
சீரிய வேளை பார்த்து நின்றாள்.
கடிய உழைப்பும் கொடிய பசியும் கலந்து கொள்ளக் களைப்புடன் வந்தான் கணவன்.
கால் கை கழுவி, வைத்த உணவை, வயிறார உண்டான்.
உண்ட மயக்கம், உடனே சாய ஏவிற்று.
உறக்கம், உறக்கம் குறட்டை உறக்கம்!
உரிய பொழுது ஈதென உணர்ந்தாள்,

உள்ளே எரிந்து கொண்டிருந்த மனைவி;

எடுத்தாள் மண்ணெண்ணெய்;

எடுத்தாள் தீப்பெட்டி,

கணவன் மேலே பன்னீராகப் பரவத் தெளித்தாள்;

குச்சியைக் கொழுத்திக் குறட்டைக்கூடே வைத்தாள்;

பற்றிய தீ சுற்றி எரித்தது!

எரிந்தவன் முழுதாய்க் கரியுமுன்னே, எழுந்து விட்டான்!

கரியாதெழுந்த கணவனைக் கண்டு, உள்ளே கரிந்து போனாள் மனைவி!

மருத்துவமனையில் சேர்ந்த கணவன் மனையாள் செய்த

செய்கையைப் பொறுத்துக்கொண்டு, மறைத்தே போட்டான்!

“சமையல் செய்தேன்; எழுந்த தீயால் எண்ணெய் எரிந்து

என்னையும் எரித்து இந்நிலை செய்தது” என்றான்.

குற்றம் செய்தாள் இவளெனக் குணத்தால் காட்டிக் கொடாத கணவன், குணத்தை நினைத்து உருகினாள்!

குற்ற நெஞ்சம் குத்திக் குத்திக் குமைத்தது.

வாழவைக்கும் வஞ்சமிலான் வாழ்வை, அழிக்கத் துணிந்த,

என் வாழ்வென்ன வாழ்வோ?

இருக்கவோ வேண்டும் இன்னும்?

இனியனைப் பார்க்கவோ வேண்டும் இன்னும்?

நலமுற்று நண்ணுமுன், நாணப்பிறவியாம் நானிவண்

இருக்கமாட்டேன்!

‘அவன் வருமுன்னே, ஆவியை விடுவேன்,’ என்றனள்;

எண்ணினாள்;

எடுத்தாள் மீண்டும் எண்ணெயை!

எடுத்தாள் மீண்டும் தீயை!

எண்ணெயில் குளித்து எரியில் குளித்துக் கரிந்தே போனாள்!

கணவனா எரித்தான்?

காவல் துறையா கொன்றது?

ஊரவர்தாமோ ஒழித்தனர்?

உயிரோடு ஒழியச் செய்தவர் எவரே?

உய்யா தொழியச் செய்தது உள்ளமே யன்றோ!

இப்படி ஒரு நிகழ்ச்சியை வள்ளுவக்கிழவர் கண்டாரோ?

என்னே என்னே என்று இரங்கி நின்றாரோ ?

"செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்" (313)

என்றாரோ ? –

தினமணி 26-12-91 செய்தி.

(27)

"கையூட் டொழிப்புக் காவற்படை அதிரடி நடவடிக்கை"

என்பது செய்தி (தஞ்சை 19-4-91 தினமலர்)

கையூட்டொழிப்புக் காவலர் எவர்மேல் நடவடிக்கை எடுத்தனர்?

மதுவொழிப்புக் காவலர் மேல், நடவடிக்கை எடுத்தனர்.

ஒருவர் இருவர் அல்லர்; நால்வர் கூட்டுக் கொள்ளை;

அவர்கள் பெற்ற கையூட்டுத்தொகை இருபத்தேழாயிரம்,

குடியைக் கெடுக்கும் குடியை ஒழிக்க உறுதிபூண்டு,

அவ்வொழிப்புக் கெனவே சம்பளம் பெற்றுவரும்

காவல் கடமையர் இக்கயமையில் இறங்கினர் என்றால் இது

வேலியே பயிரை மேய்ந்த விளக்கம் தானே?

எதற்காகக் கையூட்டுத் தந்தனர்?

மதுவொழிப்பை ஒழிக்க வேண்டும் என்பதற்கு!

கண்டும் காணாமல் இருக்கவேண்டும்

காட்டிக் கொடுப்பார் இருப்பினும், அதனைக் காணாமல்

காவலாக இருக்க வேண்டும்;

கடமையை ஒழித்துக் கயமைக்குத் துணைபோய இவர்கள்

ஏசுத்துள்ள ஒழிப்பு, ஒன்று மட்டுமா?

மதுவொழிப்பை ஒழித்த ஒன்றுதானே வெளிப்படுகின்றது!

'கடமையில் தவறேன்' என்று பணியில் சேரத் தந்த உறுதியை ஒழித்தார்.

தக்கார் இவரெனத் தேர்ந்தவர் நம்பிக்கையை ஒழித்தார்.

இவர்தம் வேலையை உறுதிப்படுத்தலாம் என்றவர் எழுத்தை ஒழித்தார்.

எண்ணிலாக் குடும்பங்களின் அமைதியை ஒழித்தார்.

சட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை உருவாக்கி நாட்டு வருவாயை ஒழித்தார்.

அறத்தையும் ஆக்கத்தையும் ஒழுங்கே யழித்தார்.

பிடிபட்ட பின்னே, மானம், மதிப்பு, மனைவி, மக்கள் என்னும்

எல்லாவற்றையும் அழித்தாரா இல்லையா இவ்வழிவாளர்.

இத்தகும் அழிகேடர் செயலை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

இப்படிக் கீழ்மையில் இறங்கினரே என்னே என்னே என்று

வருந்தி நின்றாரோ?

அதனால்,

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்" (658)

என்றாரோ?

(28)

வீடு இருந்தது; வீட்டின் உரிமையும் அவர்க்கே இருந்தது.

துறவு விருப்பராய்த் துறவு மடம் ஒன்றைச் சார்ந்தார்.

இருந்த வீட்டை நண்பர் ஒருவர் பொறுப்பில் விடுத்துத் தக்க வகையில் வாடகைக்கு விடுதற்கு ஏற்பாடு செய்தார். மாத வாடகை பேசினார்!

வாடகை போல இருபது மடங்கு முன்பணம் வாங்கினார். மேலும் அதைப்போல் இரு மடங்கு பெற்றார்; தாமே தமதாய் எழுதியும் தந்தார்.

வாடகைக்கு விட்டதோ, முன்பணம் பெற்றதோ மேலும் கொண்டதோ துறவு நண்பர்க்கு உரைத்தார் அல்லர்! அவர்தாம் துறவர் அல்லரோ? அவர்க்கேன், இத்தகு தொல்லை!

வீட்டைக் கருதித் துறவு சென்றவர் வீட்டைப் பற்றிய செய்தியை அறிவதற்கு ஒருநாள் ஆவலுற்றார்.

மலையடி நீங்கி மாநகர் உற்றார்.

வீட்டைப் பார்த்தார்!

உள்ளம் வெடித்துப்பேனார்!

வீடே உருவம் மாறி விளம்பரப் பலகையும் விளக்கும் கொண்டு,

'வா' வென நகைத்தன! செல்வர் ஒருவர் கடையிது வென்னும் செழிப்பம் காட்டின!

எதுவும் சொல்லாமல் என்ன நடந்தது?

தோலிருக்கச் சுளை விழுங்கிய தாகிவிட்டதோ!

நண்பரைக் காணலாம் என்று போனார்!

புதியவர் வந்ததும் புண்பட்டுச் சொன்னதும் ஏமாந்து போனோம் நாமும்

என்னும் புளியைக் கரைத்து விட்டது

துறவரோடு உறவராகித் தேடிச் சென்றார்!

காணவா முடியும்?

காணவில்லையே என்று விடவும் முடியுமா?

காசு போயிற்றே! கொஞ்சமா நாற்பதாயிரம் அல்லவோ கையை விட்டுப் போய்விட்டது!

காவல் துறைக்குச் சென்று வழக்குப் பதிந்தனர்!

மேற் செலவு இன்றி எதுவும் நடக்குமா?

இழப்புக்கு மேல் இழப்பே ஆயினும் விடவா முடியும்?

ஏமாற்றிய நண்பர் சிறையில் உள்ளார்!

வழக்கோ முறைமன்றில் உள்ளது!

துறவரும் வணிகரும் என்ன ஆமோ என்னும் சிக்கலில் உள்ளனர்!

எத்தகைய நட்பு! ஆ! ஆ!

இத்தகு வஞ்ச நட்பையும், அந்நட்பின் கேட்டையும் அன்றே வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே கொடுமை என்றே வருந்தி நின்றாரோ?

அதனால்,

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்டாள் பவர்க்கு" (791)

என்றாரோ?

(வீடில்லை என்பதற்குத் துன்பத்தில் இருந்து விடுதலை என்னும் பொருள்தானா உண்டு? இந்த நட்பால் 'வீடும் இல்லை' என்பதும் தெளிவாகி விட்டது அல்லவோ!) செய்தி : 12-1-92 தினமலர்.

(29)

மாட்டு வண்டிக்காரன் ஒருவன்.

அவனுக்குச் சிறிதே நிலமும் ஒருவீடும்.

வாடகைக்காக மாட்டுவண்டி யோட்டுவான்.

நாட்டில் மழையில்லை.

காட்டில் விளைவில்லை.

வீட்டில் புகையில்லை.

தின்னும் வறுமை,

வாடகை வேலையும் இல்லை.

ஒருநாள் வாடகை வாய்த்தது.

வண்டியோடு போனான்;

ஆற்றுப் பாலத்தில் மாடுகள் வெருண்டன;

வண்டியும் மாடுமாய் ஆற்றுப் பாலத்தில் இருந்து வீழ்ந்தான்.

மாடுகள் போயின;

வண்டியும் போயது;

அரைகுறை உயிராய்க், காலும் கையும் ஒடிந்து தப்பினான்.

புகையா வீட்டில் ஒரு நாள் புகை!

எரிந்தே போனது.

எல்லாம் போனது.

மனைவி ஒருத்தி.

எட்டு வயதில் ஒரு மகன்.

ஒரு வய்தில் ஒரு பிள்ளை.

நால்வர் குடும்பத்தில் இவ்வளவு முட்டடி!

கணியன் ஒருவனைக் கருதிச் சென்றான்.

“தொட்டது துலங்காது;

எடுத்தது விளங்காது;

ஏழரை யாண்டுச் சனி;

இளைய பிள்ளை பிறந்தான்;

இத்தனை யாயது;

என்று சாவானோ, அன்றே உனக்கு விடிவு;

என்றான் கணியன்

வேளை பார்த்தான் வேதனைக்காரன்.

தாயும் மூத்த பிள்ளையும் இல்லா வேளை,

இளைய சேயின் கழுத்தை முறித்தான்.

செத்தது குழந்தை,

தந்தைதான் கொன்றான்” என்பதற்குச் சான்று தாயும் மூத்த சேயும்.

நிகழ்ந்த உண்மையை நிகழ்ந்தவாறே கூறினான் தந்தை.

செய்த குற்றவாளி வாணாள் தண்டனை பெற்றான்

செய்யத் தூண்டிய குற்றவாளி என்ன ஆனான்?

அவனுக்கென்ன, இன்னோர் மூடன் முழுவடிவாகப் புழுவாகத்

துடித்து வருவான்!

பொய்மூட்டையை அவிழ்த்து விடுவான்! பொழுதும் போகும்!

பொருளும் ஆகும்!

கண்மூடித் தனத்தை வளர்க்கும் கயவன் குற்றக் கூண்டில்

ஏற்றப்படா வரைக்கும், குற்றம் எப்படிக் குறையும்?

கற்றவர் என்பார் பெருக்கும் கண்மூடித்தனத்துக்குக் கணக்கு வழக்குண்டா?

அதற்குள்ள வரவேற்பென்ன? வாழ்த்தும் என்ன?

கண்மூடித்தனத்தை வளர்க்கும் கயவன் உரையை

மெய்யாய்க் கொண்டு கயமை புரிந்த இன்னவன் போலும்

ஒருவனை வள்ளுவக் கிழவர் கண்டாரோ?

என்னே இழிமை! என்னே கொடுமை! என ஏங்கி நின்றாரோ?

அதனால்,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" (358)

என்றாரோ?

சான்று "எனது வாழ்க்கை வரலாறு" திரு. பெ. சீனிவாசன் பக் 321-325

(30)

19 வயதுப் பெண் செத்துவிட்டாள் என்று உறுதி செய்து மருத்துவமனையின் பிணக்கிடங்குள்ளே வைக்கப்பட்டாள். பிணத்தைத்தேடி ஓர் உயிர்ப்பிணம் நடையிட்டது!

புத்தம் புதிதாய் வந்து சேர்ந்த அந்தச் செத்த பிணத்தைச் சாவாப் பிணம் தேடிக் கண்டது.

நாற்றம் இல்லை; நல்லதோற்றம்; இனிய உடற்கட்டு;

"இந்த வாய்ப்பை இழக்கலாமா?" என எண்ணியது

பிணத்தைக் கண்ட உயிர்ப் பிணம்!

பிணத்தை வாகாய் வைத்துப் புணர்ந்தது!

புணரும் போதில் விந்தை ஒன்று நிகழ்ந்தது.

செத்த பிணத்தின் கண்கள் திறந்தன; கதுமென எழுந்து அலறியடித்து ஓட்டமெடுத்தது சாவாப்பிணம்!

விழித்துக் கொண்ட செத்துபிணமும் வெளியே சென்று வீட்டை அடைந்தது.

செத்தவள் பிழைத்ததை எண்ணிப் பெற்றவரும் பிறரும் – அப்பிணம் பிழைத்துவந்த பெருமையில்–பிழையைப் பற்றி எண்ணவே இல்லை! பிழைக்கச் செய்த அப்பெருமகன் நன்றே வாழ்கெனத் தன்னை மறந்த குடியில் இருந்த தந்தை, வாழ்த்தினான். தாயோ, இன்பக் கண்ணீர் கொட்டினாள்.

இறந்த மகள் பிழைத்து வந்தாள் அல்லளோ!

இந்தச் செய்தி (உ) ருமேனிய நாட்டில் புகாரெட்டு நகரில் நிகழ்ந்ததாம்!

முன்னும் இப்படி வெறியால் நிகழ்ந்த கொடுமையை வள்ளுவக்

கிழவர் கண்டவர் வழியே கேட்டும் இருப்பாரோ? என்னே கயமை என்னே கயமை என்று அருவறுத்து நின்றும் இருப்பாரோ ?

அதனால், –

“பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று”

என்றுமிருப்பாரோ ? (913)

செய்தி 2-2-92 தினமலர்.

31. நட்பின் வலிமை

நட்பின் வலிமையைக் கண்டு மருத்துவ உலகம் திகைத்து நின்றது. இரண்டு வாரங்களாகக் கோமாவில் அசைவற்றுக் கிடந்த சிறுவனை, அவனது நண்பன் மிக எளிதாக எழுப்பி சரிசெய்துவிட்டான்.

இது பற்றிய விளக்கம் வருமாறு :

அலிசுடா பானோன் எனும் அகவை எட்டுடைய சிறுவன் கடும் கோமா நோயில் வீழ்ந்தான். அவன் உடலில் உயிர் மட்டுமே இருந்தது. உணர்வுகள் ஏதும் இல்லை.

இரண்டு வாரம் மருத்துவர்கள் கடுமையாகப் போராடினார்கள், ஏதேதோ மருத்துவம் செய்து பார்த்தார்கள். பயன் ஏதும் ஏற்படவில்லை. ஒரு நேர்ச்சியின் (விபத்து) காரணமாக இப்படிக் கடும் கோமாவில் அலிசுடா வீழ்ந்தான்.

அலிசுடாவைப் பார்ப்பதற்கு, அவன் நண்பன் மார்க்மேக்லின் (அகவை - 10) வந்தான். தனது நண்பனின் காது அருகே சென்று, அலோ, நண்பா எப்படி இருக்கிறாய்? எப்போது விளையாடலாம்? எப்போது வீட்டிற்கு வருவாய்? என்று பாசத்துடன் கேட்டான்.

அவ்வளவுதான், கோமாவில் கிடந்த அலிசுடா பளிச்சென்று விழித்துக்கொண்டான். படுக்கையை விட்டும் எழுந்தான்; மருத்துவ மனையிலிருந்து நடந்தான். கோமா நிலையிலிருந்தவன் எழுந்து நடந்ததைப் பார்த்த மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்தனர்; அப்படி திகைத்துப் போனார்கள்.

இதைப்பற்றி அலிசுடாவின் தாய், தெனிசுபோனோன், (அகவை 38) கூறுகையில், இது ஒரு பெரிய வியப்பாகும். நம்பமுடியாத ஒன்றாகும். நான் மார்க்கை அணைத்துக் கொண்டேன். அவனால் என்மகன் காப்பாற்றப்பட்டான். இனி அவன்தான் என் தெய்வம் என்று அந்தத் தாய் உணர்ச்சி மேலிட்டால் கூறினார்.

மேற்கண்ட செய்தி தீக்கதிர் நாளிதழில் 7.4.2000 அன்று அதிசயம் ஏற்படுத்திய நட்பின் வலிமை என்னும் தலைப்பில் வந்துள்ளது.

உணர்ச்சி தான் நட்பு. அது உயிரையும் காக்கும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. வள்ளுவப் பேராசான்,

"புணர்ச்சி பழகுதல வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

எனக் கூறியது கற்பனை அன்று ; உண்மை வாழ்க்கையின் ஒளிப்படம் இன்றைக்கு இலண்டனில் வாழும் நண்பர்கள் அலிசுடா பானோனும் மார்க் மேக்கலினும் இந்தக் குறளுக்கு வாழும் இலக்கியமாய் திகழ்கிறார்கள்.

"ஆடு துறையில் அடுபுலியும் புல்வாயும்
கூட நீர் ஊட்டிய கொற்றவன்"

என்று மூவருலா இசைக்கின்றது.

"ஒரு நீர்த்துறையில் அச்சமற்று, புலியும் புல்வாயாம் மானும் நீருண்டனவாம்" என மாந்தாதா என்பான் செங்கோல் சிறப்பைச் சொல்கிறது.

இடியும் சூரும் அரவும் கொடுமை புரியாச் செங்கோல் தென்னவர் நாடு என்கிறது சிலம்பு.

போர்த்தி மந்து என்னும் ஒரு பகுதியில் தாயில்லாத பூனைக்குட்டிக்கு பாமரேனியன் நாய் ஒன்று தானே தாயாகிப்பாலூட்டும் படம் ஒன்று என் பழஞ்செய்திக் கோப்பில் இருந்தது வியப்புற்றேன்!

வாடிய பயிரைக் கண்டும், ஆடிய முல்லை மயில் கண்டும் வாடிய வண்மையரை அறியும் நாம், ஐயறிவுயிர்களும் அருள் சுரப்பது கண்டு வியவாமல் முடியாது.

"அருள் என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

இங்கே : அன்பு – பூனை ; அருள் பால் சுரக்கும் பாமரின் ; செவிலி – பால்.

❖❖❖

32. பூனைக்குத் தாய் நாய்



அன்பு என்றால் என்ன? என்பதை மனித குலத்துக்கு நினைவூட்டும் வகையில் போர்த்திமந்து பகுதியில் தாயில்லாத பூனைக்குட்டிக்கு தானே தாயாகி பால் கொடுத்துவரும் பாமரேனியன் வகை நாய்.

21. வளர்புகழ் வள்ளுவம்

உலகநூல்

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப் பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு – உலகுக்குப் – பொது.

திருக்குறளில் எழுவாய் முதல் இறுவாய்வரை **உலகு** என்னுஞ் சொல்லும் பொதுமைப் பொருள் உணர்த்தும் சொற்களும் சொற்றெடர்களும் தக்க இடங்களில் திகழ்கின்றன. இன்னோரன்ன குறிப்புக்கள், திருக்குறள் **உலகநூல்** என்பதை வலியுறுத்துவன.

–திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.
(திரு. வி. க. முகவுரை பக. 4)

உலகநூல்

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்னை? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.

திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் உலகம் இருத்தல் நன்கு புலனாகும். ***திருவள்ளுவர் உலகையே குறளாக எழுதினர். உலகின் எழுத்தோவியம் திருக்குறள்*** என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கு என்றே பயின்றார் உலகுக்கு என்றே வாழ்ந்தார்; அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகம் ஆயினார், **உலகம் அவராயிற்று;** இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவை யூட்டும்? அஃது உலக நினைவை யூட்டுதல் இயல்பே. ஆகவே திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பு ஒன்றும் இல்லை என்க.

–திருக்குறள் விரிவுரை–பாயிரம்
(தோற்றுவாய் 1–2)

திருக்குறளின் உயிர்ப்பு

திருக்குறளின் உள்ளக் கிடக்கையைப் பலபடக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது ***'உலகம் ஒருகுலம்'*** என்பது. உலகம் ஒருகுலம் என்பது பழந்தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த ஒரு பெருங்குறிக்கோள். அக்குறிக்கோள் திருவள்ளுவருள் படிந்து நின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பேரறிஞர் பலரிடம் புகுந்து புகுந்து பல மொழிகளில் சிறப்புற்றது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்துப் பெருகிப் பெருகி இந் நாளில் விஞ்ஞானத்தில் விராவி மார்க்கியமாகவும் தெய்விகத்திற் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. **விஞ்ஞான மார்க்கியமும் தெய்வீகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக் கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.** இதை உணர்ந்து தொண்டாற்ற நம் நாடு முற்பட்டால் உலகம் நலம் பெறும்.

–திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் பக். 5.6.

திருக்குறட் காதல்

திருவள்ளுவர் அருளிய திருக்குறள் என்னும் தெய்வ மறையினிடத்தில் எனக்குத் **தணியாக் காதல்** உண்டு. காரணம் பலப்பல. **சில** வருமாறு :

திருவள்ளுவர் முப்பால் கூறி வீட்டுப்பால் விடுத்தது; அறப்பேற்றுக்கு இல்வாழ்க்கையைக் குறித்தது; பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளைக் கடிந்தது; மனமாசு அகற்றலே துறவென்று இயற்கை நுட்பத்தை விளக்கியது; இயற்கைப் பொது நெறியை அறிவுறுத்தியது; இன்ன பிற.

–திருக்குறள் விரிவுரை–பாயிரம்
(அணிந்துரை பக்கம் 5-6)

தொல்லைக்கு மருந்து

தொல்லை நோய்க்கு மருந்துண்டோ? மருத்துவர் என்ன விடை இறுப்பரோ அறிகிலேன். எனக்கொரு மருந்து துணை செய்து வருகிறது.

அஃதென்ன? அஃது எனது தாய்மொழி; அமிழ்தினும் இனிய தாய்மொழி. என்போன்றேர்க்கென்று தமிழ்க் கலைகள் தோன்றினவோ என்று யான் அடிக்கடி நினைப்பதும் உண்டு.

தொல்காப்பியனார், நக்கீரர், நல்லந்துவனார், திருவள்ளுவனார், இளங்கோ, சாத்தனார், திருத்தக்க தேவர், மாணிக்கவாசகனார், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்துவர் யான் நூல் எழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின்றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

இப் பாக்களின் சொல்லிலும் பொருளிலும் இரண்டுங் கலந்த ஒருமையிலும் ஒன்றித் திளைக்கும் மனம் எந்நிலை எய்தும்? அம் மனத்தைத் தொல்லை நோய் உறுத்துங்கொல்?

-திருக்குறள் விரிவுரை-பாயிரம்
(அணிந்துரை, பகி. 8-9)

எது திருக்குறள்?

செயலுக்கு வரும் அறங்கரைவது **திருக்குறள்;**
மக்கள் வாழ வழிவகுப்பது **திருக்குறள்:**
பலநிலையறம் தழுவியது **திருக்குறள்;**
எந்நிலைய மாந்தரையும் முன்னேற்றுவது **திருக்குறள்:**
உலகுஒட்டும் நெறி காட்டுவது **திருக்குறள்;**
ஒருவன் வாழ்க்கை அவனைப் பொறுத்தது என்ற
உண்மை அறைவது **திருக்குறள்;**

-வள்ளுவம் பக். 354.

திருக்குறளைக் கற்பவர் நோக்கம்

திருக்குறளைப் பலர் **பலவகை நோக்கோடு கற்பர்.**

அரசியல் அறிவுபெறக் கற்போர் சிலர்;

அறநெறி உணரக் கற்போர் சிலர்; இன்பக் கற்பனைகளில் மகிழக் கற்போர் சிலர்;

தமிழ்மொழியின் வளம் காணக் கற்போர் சிலர்;

திருவள்ளுவரின் அனுபவச் செல்வத்தை நுகரக் கற்போர் சிலர்;

பழந்தமிழரின் நாகரிகக் கொள்கைகளைத் தெளியக் கற்பவர் சிலர்:

வாழ்வாங்கு வாழும் நெறியை அறியக் கற்பவர் சிலர்:

சொல்திறன் நாடிக் கற்பவர் சிலர்;

பாநலன் போற்றிக் கற்பவர் சிலர்;

தாம் சொல்வன செய்வன யாவற்றிற்கும் சான்றுகள் காட்டக் கற்பவர் சிலர்:

பிற நூல்களில் இருந்து கடன் வாங்கிய கருத்துக்களே இந் நூலில் உள்ளன என்று நிறுவ முயன்று கற்பவர் சிலர்:

இவ்வாறே வேறு பிற நோக்கம் கொண்டும் திருக்குறளைக் கற்பர்.

–முதற்குறள் உவமை முன்னுரை

(மு. வ.) பக் 9–10

திருக்குறள்

திருச்சிற்றம்பலக் கோவையார்க்கு உரைகண்ட பேராசிரியர் ‘**திரு** – என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்; என்றது அழகு’ என உரைத்தார். **குறள்** என்பது ஒருவகைப் பாவிற்கு அமைந்த காரணப் பெயர். எனவே **திருக்குறள்** என்னும் சொற்றொடர், ‘கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய அழகினையுடைய குறட்பா’ எனப் பொருள்படும்.

–திருக்குறள்–அறம்–தண்டபாணி விருத்தியுரை.

(முன்னுரை பக். 11)

குறள் என்பது காரணப் பெயராமாறு யாதோ எனின், குறுகிய அளவுடையது ஆதலின் குறளெனப்பட்டது என்க. மக்களுள் தீரக் குறியானைக் குறளன் என்ப. அவ்வாறே பாக்களுள் மிகக் குறுகியது குறள் எனப்படும்.

(மே முன்னுரை. பக். 12, 13)

தமிழர் வாழ்வே திருக்குறள்

திருக்குறள் ஒரு தனித்தமிழ் நூலாகும்; திருக்குறள் அயற் கொள்கை எதிர்ப்பு நூலேயன்றி எந்த ஓர் அயற்கொள்கையையும் உடன்பட்டுக் கூறும் நூல் அன்று. **'தமிழர் வாழ்வே திருக்குறள். திருக்குறளே தமிழர் வாழ்வு'** என்னும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினையுடைய நூல் திருக்குறள்,

திருக்குறள் உள்ளதை உள்ள படியே உயரிய முறையில் எடுத்துரைக்கும் உண்மை நூல் தமிழர் வாழ்வின் படப்பிடிப்பு! பழந்தமிழர் நாகரிக நல்வாழ்வை அப்படியே நமக்குக் காட்டும் களங்கமற்ற காலக்கண்ணாடி. தொன்மையும் எதிர்மையும் ஒருங்கொப்பக்காட்டும் தொலை நோக்காடி! தமிழ் மக்களின் வாழ்க்கைச் சட்டம் தமிழ் மக்களுக்கு வள்ளுவர் வகுத்தமைத்து வைத்த பாதுகாப்புப் படை ஏன்? தமிழருக்கு மட்டுமன்றிக் குறள் உலகப் பொது நூல்! மக்கட் பண்பாட்டுச் சரக்கறை எக்காலத்துக்கும் உரிய நூல்! இறவா நூல்! காலங்கடந்த நூல்! கன்னித் தமிழ் நூல்! எனல் மிகையாகாது.

தமிழ் மக்கள் செய்வன, தவிர்வன வாகிய ஒழுக்க முறைகளை வகுத்துக் காட்டுவதால் திருக்குறள் ஓர் ஒப்பற்ற இலக்கியமே யன்றி இலக்கண நூலுமாகும்.

-திருவள்ளுவர் செய்த திருக்குறள்

(முகவுரை பக். 24-25)

திருக்குறள் செந்தமிழ் நூல்

முதற்பா அகரத்தில் தொடங்கி இறுதிப்பா னகரத்தில் முடிந்தமை, இது **செந்தமிழ் நூல்** என்பதற்கோர் அறிகுறிபோல்வ தாம் என்க.

வாழ்க்கை நெறி இனைத்தென முற்ற முடிய விளக்கும் நூல்.

இஃதென்பதும் அறிவுறுத்த இந் நூலின் முதற்பா,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனவும், இறுதிப்பா,

'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்'

எனவும் நிற்றல் காண்க. என்னை?

அவ்விரு குறள்களையும் இணங்கி நோக்குழி உயிர்களுக்கு முதல்வன் இறைவன் என்பதும், உயிர்கள் அவ் விறைவன் அடியைச் சாராது சிறிது பிணங்கி ஐம்புல இன்பங்களைத் துய்த்தலே வாழ்க்கை என்பதும், அதுவே சிற்றின்பமாம் என்பதும் பின்னர் அவ்வுயிர்கள் அவ்வைம்புல இன்ப நுகர்ச்சியைத் துறந்து இறைவன் திருவடியிற் கூடி ஒன்று கலப்பதே வீடுபேறாம் என்பதும் அதுவே பேரின்பமாம் என்பதும் உணரக் கிடத்தலின்

-திருக்குறள் அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை
முன்னுரை பக். 16-17)

சிதைவிலாத சீரியநூல்

நம் ஆசிரியர் எடுத்தாளும் சொற்கள் அழகு வாய்ந்தன; இனிய ஓசை யுடையன; பொருட் செறிவுடையன; நவின்றார்க்கு இனிமை பயப்பன: குறுகிய உருவத்தன; அத்தகைய சொற்களைத் தொகுத்துத் திருவள்ளுவர் குறள் வெண்பாக்கள் பாடுகின்றார், ஆகலின் அவை மிக அழகுடையனவாய் விளங்குகின்றன. ஒரு குறளில் வரும் ஒரு சொல்லையேனும், அக் குறளின் பொருள் அழகையும் சொல் இன்பத்தையும் சிதைக்காது அதன் இடத்தை விட்டுப் பெயர்க்கவோ அகற்றவோ அதற்குப் பதிலாக வேறொரு சொல்லைப் பெய்துரைக்கவோ யார்க்கும் முடியாது. ஆதலால் **திரிபின்றியும் சிதைவின்றியும் விளங்கும் உலக நூல்களில் திருக்குறள் தலைநின்றது.**

-திருக்குறள் கட்டுரைகள் பக். 34

வாழ்வுப் பயன்

திருவள்ளுவர் உலகம் முழுமைக்கும் உரிமை பூண்டவர்; அவர் நூல், இடத்தாலும் காலத்தாலும் கட்டுப்படுவது அன்றி எல்லா இடங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் உரியதாக விளங்குவது. தமிழகம் அவரை ஈன்றதும், தமிழிலே அவர்தம் நூலை யாத்ததும், நம் அருந்தமிழ் அன்னையின் தவப்பயன், அவரால் நம் நாடும் மொழியும் பொலிவடைகின்றன. படைப்புக் காலம் முதல் எல்லாக் காலத்திற்கும் நிலைத்து நிற்கும் மானிடப் பண்பின் உயிர்நிலையை அவர் நன்கு துருவி ஆராய்ந்து கண்டு கொண்டார். அதன் ஆற்றலையும் அவர் நன்கு அறிந்தார். **மானிட வாழ்க்கையின்** பயன் இன்ன தென்பதும் அவருக்கு அறுதியாகத் தென்பட்டது. அப் பயனை அடைய மானிடன் தன்முன் நிறுத்திக்கொள்ள வேண்டிய குறிக்கோள்களையும் அவர் விளக்கமாக வகைப்படுத்திக் கொண்டார். பிரபஞ்சத்தின் ஒற்றுமைத் தன்மையையும் இம்மை மறுமைகளின் ஒருமைத் தன்மையையும் அவர் நன்குணர்ந்து, ஆன்மா பேரறிவு பெற்று நல்வழியில் நின்று அதன் குறிக்கோளை அடைவதற்கு அது பின்பற்ற வேண்டிய முறைகளை வகுத்துக் காட்டியும், அதற்கு நேரக்கூடிய தடைகளைச் சுட்டியும் தக்க **காரணங்களைக் காட்டி உலக உபகாரமாக ஆசிரியர் தம் நூலை அளித்துள்ளார்.**

–திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும்
பதிப்புரை பக் 5.

பொருட் பெரும்பயன்

சொல்லின்பம் ஒன்றே கருதி ஒரோவழிச் செய்யுள் செய்தல் பிறர்க்காயின் ஒவ்வும். தெய்வப் புலவராய நம் முதற்பாவலர்க்கு ஒவ்வாது. என்ன?

பிறர் பலர் செய்த 'சொல்லாற் பரந்தவர்ப்' போலாது எந்தம் வள்ளுவனார் சுருங்கிய சொல்லால் தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட–பனையளவு காட்டும் படித்ததாகச் செய்யுள் செய்தமை புலவர் பலர்க்கும் ஒப்ப முடிந்த தாகலின் என்பது. அல்லதூஉம், அரும்பயன்

ஆயும் அறிவினராய அவர் **'பெரும்பயன் இலாத சொல்லுவரோ?'** என்பது. அஃதொக்கும்; புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம் (பழமொழி. 7) என்பவாதலால், அரும்பயன் ஆயும் அறிவினாரது சொல்லில் பெரும்பயன் கொள்ளுதல் அரும்பயன் ஆயும் அறிவினார்க்கே ஆமென்பது பெறுதலின் ஆசிரியர் கூறிய இச் செய்யுளில் பெரும்பயன் கொள்ளுதல் அவர்க்கே இயலும்.

–திருக்குறள் அறம்–விரிவுரை பக். 158.

ஓவியம் தீட்டுதலில் துறைபோய ஒரு பெரும் புலவன் காண்போர் கண்ணும் மனமும் கவரப்படுமாறும் தான் கருதிய பொருள் அவர் தமக்கு இனிது விளங்கி வனப்பாற் பொலிந்து காட்டுமாறும், யாண்டு யாண்டு எவ்வெவ் வண்ணங்களை எவ்வெவ்வாற்றான் தீட்டுதல் வேண்டுமென்பது இனிதுணர்ந்து ஆண்டாண்டு அவ்வவ் வண்ணங்களான் தனது துகிலிகை கொண்டு தொட்டு விடுத்தும், துலங்க நீவியும், புலவணி புனைந்தும் பொறித்து முடித்தல்போல் நம் புலவர் திலகர் ஆண்டாண்டு வேண்டப்படும் **அவ்வச் சொற்களைத் தம் மதிநுட்பத்தால் திறம்படப் பெய்தமைத்து அரும்பொருள் புலப்படுக்கின்றார்** எனின், அவர் தமக்குச் செந்தமிழ்ச் சொற்கள் எவ்வாறு அடித்தொண்டு புரிந்தன என்பதை நினைந்து நினைந்து மகிழ்மின்கள்.

–பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்
திருவள்ளுவர் நினேவுமலர் பக். 76

பொருள் பொதி சொற்கள்

திருவள்ளுவர் நூல், குறள்வெண்பாக்களால் ஆக்கப்பட்டது. ஒவ்வொரு குறளிலும் ஒவ்வொரு கடலுண்டு என்று கூறல் மிகை யாகாது. ஒவ்வொரு பாவில் ஒவ்வொரு காலைப் புகுத்த வந்தவர் வெறும் இசை நிரப்புதற் பொருட்டு வெற்றொலியையும் வெற்றெழுத்தையும், வெற்றுச் சொல்லையும் பெய்வரோ ஒரு போதும் பெய்யார். அவர்தம் வாய்மையினின்றும் பிறந்துள்ள **ஒவ்வோர் ஒலியும், ஒவ்வோர்**

எழுத்தும், ஒவ்வொரு சொல்லும் பொருளுடையன வாகவே இருக்கும். அவற்றை வெறும் இலக்கிய இலக்கணக் கண்கொண்டு பார்த்தல் மட்டும் போதாது. இயற்கைக் கண் கொண்டும் அவற்றை உற்று நோக்கல் வேண்டும். இயற்கை நோக்குக்கு நுண்பொருள் புலனாகும். அளபெடை அசைநிலை என்று பிறரால் கூறப்படுவனவெல்லாம் திருவள்ளுவர் மொழியில் பொருளுடையனவாகவே திகழும்.

–திருக்குறள் விரிவுரை டாயிரம் பக். 101,

சொற்றிறம்

ஒப்புயர்வற்ற புலமைத் திறத்தாலே நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாகப் பொருட்பேறு கருதியல்லது சொற்களைத் தொடுத்தல் செய்யா மாட்சி, இத் திருக்குறளிற் போல அத்துணைச் சிறப்பிற்றாகப் பிற நூல்களில் காண்டல் அரிதென்பது அறிவான் ஆன்ற புலவர் பெருமக்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்த துணிபே! அன்றோ! அங்ஙனம் பொருட்பேறு சிறக்கச் சொற்களைத் தொகுக்குந் திறன் அச் சொற்களின் பிறப்பும் வளர்ப்பும் இயலும் செயலும் பிறவும் அறிந்து அவற்றை ஆளுமாற்றானே கைவருவது ஒன்று என்பதும் ஊகத்துக்கு இயைந்ததேயாம். ஆகலின் ஆசிரியர் கூறிய **சொற்றொடரெல்லாம் மொழியியல் கண்டறிந்து தொடுக்கப் பட்டனவே** யாதல் செல்லும், செல்லா தென்பர் ஒரு சிலர். என்னை?

ஆசிரியர் புலமைத் திறத்தை மறுக்கின்றிலம், மற்று, அவர் பன்னூறாண்டுகட்கு முற்பட்ட காலத்தவராதலின், மேற்றிசை மதிவாணர் இற்றை நாள் செய்து போதரும் மொழியியல் ஆராய்ச்சியினை ஆசிரியரேயாகப் பிறரேயாக அற்றை நாளிலே அறிந்து கையாண்டார் என்றல் பற்றுள்ளங் காரணமாகப் பிறந்த உயர்வு நவிற்சியேயாம். அன்றி நடுநிலை கோடா மெய்யுரை யாமோ? என்பது அவர் கடா. அதற்கு விடை:

மொழியியல் ஆராய்ச்சியினை விரித்து விளக்கும் நூல்கள் இக் காலத்தில் போல முற்காலத்தில் தோன்றில என்பதே கொண்டு பண்டைத் தண்டமிழ்ப் புலவோர் மொழிப்பொருட் காரணம் ஆராய்ந்திலர், அவ்

ஆராய்ச்சி முறைதானும் இனைத்தென அறிந்திலர் என்றல் ஒவ்வாது. நாயனார் காலத்துக்கு மிக முற்பட்ட காலத்தினராய தொல்காப்பியனாரே 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (தொல், சொல். உரி. 98) எனச் சூத்திரஞ் செய்தலின், மொழிப் பொருட் காரணம் ஆயுமாறு ஒன்றுண்டு என்பதை அவர் அறிந்து உடம்பட்டார் ஆகற்பாலர் அல்லரோ? அஃதன்றியும் நாயனார் தாமே 'சொல்வன்மை' என ஓர் அதிகாரம் வகுத்து, ஆண்டுத் "திறனறிந்து சொல்லுக சொல்லை" (644) என ஆணை தருதலின், சொற்றிறம் நுனித்தறிந்து கூறியவரே யாவர் தாமும் என்பது துணியப்படும். "நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர், பயனில சொல்லாமை நன்று" (197) என்ற ஆசிரியரோ பா நிரப்புதல் வேண்டி வேண்டாச் சொற் பெய்து கூறுவர்? கூறார்,

–திருக்குறள்–அறம்–விருத்தியுரை.

(பக். 13–14)

நுண்ணணுப் பெருக்க நோக்கு

தமிழ்த் தாயின் இனிய உயிர்நிலையான திருக்குறளை அருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்தியவர். அவர் இயற்கையில் காணப்படும் இருதிணைப் பொருள்களையும் தம் புலமைக் கண் கொண்டு நோக்கி, நிலையியற் பொருள்கள் மூலமும் இயங்கியற் பொருள்கள் மூலமும் தாம் உணர்ந்த உண்மைகளை, மனித சமுதாயம் மனிதத் தன்மையுடன் வாழத் தமது நூலில் ஆங்காங்குக் குறித்துச் செல்கின்றார்,

நிலையியற் பொருள்களைக் கொண்டு அவர் காட்டும் உண்மைகள் பலப்பல. அஃதொப்பவே ஓரறிவுயிர் முதல் ஆறறி வுயிர் ஈறாகவுள்ள, இயங்கியற் பொருள்கள் மூலம் அவர் விளக்கும் கருத்துக்கள் மிகப்பல. நிற்பன, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நடப்பனவாகிய எல்லா உயிர்ப் பொருள்களும் அவர் கையில் ஒழுக்கத்தை உணர்த்தும் கருவிகளாக விளங்குகின்றன.

இயற்கையோடு வாழ்ந்து ஆய்வுக்கண் கொண்டு நோக்கி ஒவ்வோர் உயிர்ப் பொருளின் தன்மையையும் உணர்ந்து அத் தன்மையறிவைப் பூதக் கண்ணாடியாக்கி, அவற்றின் மூலம் **நுண்ணணுப்போன்ற உண்மைகளே எல்லோரும் பெரிதாகக் கண்டு உணருமாறு காட்டுதல் அவர் புலனெறி வழக்கு.** மிகச் சிறு நிகழ்ச்சிகளில் வைத்துப் பெரும்பேருண்மைகளைக் காட்டும் ஆசிரியர்க்கு உயிர்ப் பொருள்களில் வைத்து உண்மைகளை விளக்குதல் எளிதுதான்!

–வள்ளுவர் கண்ட உயிரினங்கள். பக் 1 - 2.

வள்ளுவச் சிற்பி

ஒரு சிற்பி உருவற்ற கல்லையோ உலோகத்தையோ எடுத்து அதன் நாற் பக்கங்களிலும் அடித்து மனித உருவைப் படைக்கிறான், அவன் சில சமயங்களில் அதைச் சம்மட்டி கொண்டு அடிக்கிறான். சில சமயங்களில் சிற்றுளியால் செதுக்குகிறான். அதுபோல வள்ளுவர் மனித உள்ளத்தின் நூற்றுமுப்பத்து மூன்று பக்கங்களிலும் சில சமயங்களில் வன்மையாகக் கண்டித்தும் சில சமயங்களில் நுண்மையாக உணர்த்தியும் பண்பட்ட மனித உள்ள மாக உருவாக்க முயல்கிறார்,

–ம. தி. க வெள்ளிவிழா மலர் பக். 125

கொ.நீ.சிங்காரவேலு

வள்ளுவர் தனிப்பொது நெஞ்சம்

வள்ளுவர் **தனிப்பொது நெஞ்சம்** யாது? **செயல், செயல், செயல்**! சொல்வது செயலுக்கு வரவேண்டும். செயலுக்கு வருமாறு சொல்ல வேண்டும் என்னும் ஓர் அடிப்படைக் கருத்தினைத் தம் நெஞ்சில் நீள இருத்திக் கொண்டே குறள் எழுதியவர் வள்ளுவர். செயல் அடிப்படையை யாண்டும் மறவா உளத்தினர். அப் பெருமகன். ஆதலால் **செயலே வள்ளுவம்** எனச் செய்க.

வள்ளுவர் செயல் நெஞ்சத்தினர் என்றேன். அதனைத் திருக்குறளின் தொடக்கமே பறைசாற்றும். அகர முதல எழுத் தெல்லாம் என்னும் முதற் குறளால் ஓர் இறையுண்மை காட்டுகிறார், உண்மை சுட்டியவர் அதனை அடுத்து இறைவன் பண்புகளை விரிப்பார் என வன்றோ நாம் எதிர்பார்ப்போம். அங்ஙன் அவர் செய்திற்றிலர்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅர் எனின்"

என்பது இறையுண்மைக்கு அடுத்த குறள். நூலின் இரண்டாங் குறளாக இதனை வைப்பானேன்? திருக்குறளைக் கற்கத் தொடங்கும் போதே, வாலறிவனைத் தொழுக என்று வழிப் படுத்துவர். தூய அறிவுத் தொழுகை இன்றித் தங்குறள் முழுதும் கற்றாலும் அறிவறிந்த மக்கட் பிறப்பிற்குப் பயனின்று என்னும் துணிபினராய், கற்றதனால் ஆய பயனென்கொல் என வினவி விடுப்பர். இதனால் குறள் கற்பான் விழைவாரை ஒரு நோக்கப் படுத்தும் வள்ளுவர் செயல் நோக்கம் முதற்கண்ணேயே தெளிவாதல் காண்க.

–வள்ளுவம் பக். 38 - 24

வள்ளுவர் அருள் உள்ளம்

தீமைகளைக் காணும்போது வள்ளுவர் உள்ளம் குமுறுகின்றது. அவர் மனம் வேதனையடைகின்றது. பொறுமை இழக்கிறார், தீமை செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறார், தீமை செய்யும் மக்களைக் கடுஞ் சொற்களால் திட்டுகின்றார், திருவள்ளுவர் ஏன் இவ்வளவு ஆத்திரப் படுகின்றார் என்று நாம் எண்ணும்படி சில குறட்பாக்கள் அமைந்திருக்கின்றன. அறிவின்றி அடாத காரியங்களைச் செய்கின்றவர்களை அதட்டி நிறுத்தினால்தான் அவர்கள் அடங்குவார்கள். இந்த உண்மையை எண்ணித்தான் வள்ளுவர் சில பாடல்களை வசை கூறும் முறையிலே அமைத்திருக்கிறார், இது **அவருடைய கருணை உள்ளத்தையே காட்டுவதாகும்.**

– வள்ளுவர் வாழ்ந்த தமிழகம். பக். 68

வள்ளுவர் நீதி கூறுமுறை

வள்ளுவர் நீதிகளை அல்லது குறிக்கோள்களை மாத்திரம் கூறிச் செல்லவில்லை. அக் குறிக்கோள்கள் செயல்படும் போதும் எவ்வாறு மாறுதல்கள் அடைகின்றன என்பதையும் கூறுகிறார், வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு நீதிகள் எவ்வாறு மாறுபடுகின்றன என்பனவற்றை ஆங்காங்குக் குறிப்பிடுகின்றார், இதுதான் திருக்குறளின் **தனிப்பெருமை,**

ஒரு நீதியைக் கூறும்போது உடனே அந் நீதியின் விதி விலக்கையும் கூறிச் செல்கிறார், அல்லது அதன் விதிவிலக்கை மற்றோர் இடத்தில் கூறுகிறார், ஒரு கருத்துக்கு முரண்பட்ட கருத்து மற்றோர் இடத்தில் இருப்பதுபோலத் தோன்றும். இதன் காரணம் ***ஒரு சூழ்நிலையில் ஒரு மனிதனுக்குச் சொன்ன அறிவுரை மற்றொரு சூழ்நிலையில் மற்றொரு மனிதனுக்கு அல்லது இந்த மனிதனுக்கே பொருந்தாது என்பதுதான்.*** ஒரே நோயால் பீடிக்கப்பட்ட இரு நோயாளிகளின் தேகநிலைகளை அறிந்த மருத்துவன் ஒரே சூரணத்தை ஒருவனுக்கு நெய்யில் கலந்தும் மற்றொருவனுக்குத் தேனில் கலந்தும் கொடுக்கிறான்! (அதுபோல்).

–ம. தி. க. வெள்ளிவிழா மலர் பக். 126

(கொ.நீ. சிங்காரவேலு)

பிறரிற் பெருமையர்

மலைமேல் செய்த இதோப தேசத்தில் "மனிதர் செய்யும் தீமையை நீங்கள் மன்னிப்பீராயின் பகவான் உங்களையும் மன்னிப்பார்" என்றுரைத்தார் **ஏசுநாதர். பேகன்** என்னும் ஆங்கில ஆசிரியர் "பழிக்குப் பழி தீர்த்துக் கொள்பவன் பகைவனோடு ஒத்தவன்; அதைப் பாராட்டாமல் மன்னிப்பாராயின் அவனினும் உயர்ந்தவன் ஆவான். ஏனெனில் மன்னிப்பது இராசகுணம் ஆகின்றது எனக் கூறியிருக்கின்றனர். **சாலமன்** என்பவர் தமது மூதுரைகளில், ஒருவன் செய்த குற்றத்தை மன்னிப்பதே ஒருவனுக்குப் பெருமை யாம்" என்றனர்.

ஆனால் நம் **வள்ளுவனார்** "பிறர் செய்யும் தீமையை மன்னிக்கும்படி சொல்லாமல் அதனை அப்பொழுதே மறந்துவிடுக என்றனர்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யுமாறு வற்புறுத்தற்கண் **எல்லாரும் ஓர் ஆறுபட்டு ஒப்பவர் ஆயினும் தீமையை மறந்துவிடுக என்னும் இடத்தில் ஏனையரிற் சீரியர் ஆயினார் நம் வள்ளுவனாரே.**

-திருவள்ளுவர் பக். 32-33.

வான்மணி

திருக்குறள் தமிழ்மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. **உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை.** உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப் பெரிய பொதுமறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது பழந்தமிழர் கொள்கை, இக் கொள்கை திருக்குறளாகப் பொலிவுற்றது.

மன்பதைக்கென ஒரு பொதுமறையை அருளிய திருவள்ளுவரைத் **தமிழ்மணி** என்று மட்டும் வழுத்தாது உலகுக்கு ஒளி வழங்கத் தமிழ் நாடளித்த 'வான்மணி' என்று வழுத்துவோமாக.

-திரு. வி. க.

-திருவள்ளுவர் நினைவு மலர் பக். 69

உவமை நலம்

ஆயிரம் அடி ஆழத்திலுள்ள நுணுக்கமும் பெருக்கமுமான பொருள்களை அவர் (திருவள்ளுவர்) உலகவர் எப்படி உணர்ந்து கொள்ளக்கூடும்; அவர்கள் அறிவுக்கண் பொருள்களை ஊடுருவிச் செல்லும் மின்னொளிக் கண்ணா? என்று திருவுள்ளத்தில் எண்ணினார், ஒளிக் கண்ணாடிகள் சிலவற்றை அந்தந்த இடங்களுக்கு ஏற்பப் பொருத்தி வைத்தார்; **அக் கண்ணாடிகளே உவமைகள்.**

உவமைகள் பொருள்திறனை அறிந்து தெளிந்து பட்டறிவிற் கொண்டுவர உதவியாக இருக்கும் என்பது அவன் எதிர்நோக்கு கல்வி இல்லாதவனுக்குக் கண்ணாடி போட்டால் படிக்க வருமா? வள்ளுவர் உவமைக் கண்ணாடி உதவியும் உற்று நோக்கி உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ள உலகவரால் முடியவில்லை. சிலர் அடங்கி ஒடுங்கி ஒழுக்கமுடன் உவமைக் கண்ணாடியின் உதவிகொண்டு உரைகளை எழுதியும் ஐயத்திரை மையத்தில் மறைத்தது.

ஒரு சிலர் வரம்புக்கு உட்படாத வழி வழியாக வாராத கண்ட கண்ட கருத்துக்களையெல்லாம் இதுவே குறட்கருத்து என்று இயம்பவும் தொடங்கினர். வள்ளுவர் பெருந்தகை "மெய்யறிவினர்க்கு உண்மை விளங்காமல் போகாது; உவமை நலம் உண்மைப் பொருளை உணர்த்தாமல் இராது; உணர்பவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். காணாதாற் காட்டுவான் தான் காணான் என்று நாமே சொல்லி வைத்திருக்கிறோம்; நடப்பது நடக்கும் என்று அமைந்தார்.

-முதற்குறள் உவமை;
தகுதி நயத்தல் (பக். 17).

திருக்குறள் ஒரு நீரோடை

திருக்குறள் ஒரு தெளிந்த நீரோடை அதன் உண்மையான ஆழம் ஆயிரம் அடியும் அதற்கு மேலும். அது அதனை இரண்டடியாகக் காட்டி ஏமாற்றுகிறது.

அடித் தளத்தில் பொன்னும் மணியும் முத்தும் பவழமும் பிறவும் நிரம்பக் கிடந்து மிளிர்கின்றன. இடையிலே வேறு சில பொருள்களும் மிதக்கின்றன. கோடையில் சூரிய ஒளி அடித்தளம் மட்டும் ஊடுருவிப் பாய்கிறது. அடியிலுள்ள பொன்னும் மணியும் பளபளவென்று மின்னுகின்றன. இடையில் மிதக்கின்ற சிப்பிகளும் கிளிஞ்சில் ஓடுகளும் மின்னுகின்றன.

உற்று நோக்குபவர்கள் இரண்டடி ஆழந்தானே என்று கையை நீட்டுகின்றார்கள். கை குட்டையானது, ஓடையின் அடித்தளம் எட்டவில்லை,

துழாவுகிறார்கள். ஏதோ தட்டுப்படுகிறது. அதுதான் அடியிலுள்ள பொன்னும் மணியும் என்று எடுத்துப் பார்க்கிறார்கள். தாம் முயன்று எடுத்த பொருள் அல்லவா! தன் முயற்சியில் உள்ள மதிப்பு கிடைத்த பொருள் பொன்னா மணியா சிப்பியா கிளிஞ்சிலா என்று ஆராய வொட்டாமல் கிடைத்த பொருளிலேயே உயர்ந்த எண்ணத்தை உண்டாக்குகிறது; மதிப்பை உயர்த்துகிறது; அப்படியே பதிய வைக்கச் செய்கிறது.

கை நீளமானவர் சில பேர், மிடுக்கோடு முக்குளி போட்டு மூழ்கி மூழ்கித் துழாவினர். மண்ணை எடுத்து வந்தவர் சிலர்; பொன்னை எடுத்து வந்தவர் சிலர்: மணியை எடுத்து மகிழ்ந்தவர் சிலர்; இவ்வண்ணம் குறளோடையின் அடித் தளத்தில் உள்ள அரும்பெறற் பொருள்களைத் தருமர், மணக்குடவர் முதலிய நீர் மூழ்கிகள் அடித்தளம் வரையிற் சென்று அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வந்து பரப்பி, அதன் அருமையை எடுத்துக்காட்டினர்.

-முதற்குறள் உவமை,
தகுதி வியத்தல் (ச. தண்டபாணி தேசிகர்) பக். 16

தீந்தமிழ்ச் சாற்றுக்கூட்டி

தீங்கனியாகிய ஒரு மாம்பழத்தைப் பிழிந்தால் எவ்வளவு சாறு தேறும்? தேறும் சிறு அளவிற்றாய சாற்றினைச் சுண்டக் காய்ச்சிக் கற்கண்டு சேர்த்துத் துண்டாக்கினாலொக்க, திரண்ட காப்பியங்களை யெல்லாம் பிழிந்து வடித்துக் காய்ச்சித் திரட்டிய **தீந்தமிழ்ச் சாற்றுக் கட்டியே திருக்குறன்.**

-அறிவுரைக் கோவை பக். 90.

அறுசுவை உண்டி

உலகியல் இனிது நடைபெறுதற்கு இன்றியமையாத நால் நிலைமையும், இல்லறமும் துறவறமும் அரசியலும் கணவன் மனைவியர் காம இன்பமும் பற்றி உண்மையாகவும்

நடுநிலைமையாகவும் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த வகையிலும் தலைசிறந்த பாவாலும் சிறந்த சொற்களாலும் இலக்கண வழுவின்றி இருவகை அணிகளுடன் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல் திருக்குறள் ஒன்றே. இருமைக்கும் உதவும் விழுமிய பொருளை அணிமிக்க குறள் வெண்பாவாற் பாடியிருப்பது பன்மணி பதித்த ஓவிய வேலைப் பாட்டுப் பொற்கலத்தில் அரசர்க்குரிய அறுசுவை யுண்டியைப் படைத்தாற் போலும். குறள் வெண்பாவால் ஆனதினாலும், வீடுபேற்று வழியைக் கூறி மறைத் தன்மை பெற்றதினாலும் திருக்குறள் என அடையடுத்த ஆகுபெயர் பெற்றது.

–திருக்குறள் மரபுரை. முன்னுரை, 18

திருக்குறள் ஒரு கடல்

திருக்குறள் ஒரு கடல், அதில் மறைந்து கிடக்கும் புதை பொருள்கள் விலையுயர்ந்த முத்துகள் ஆகும். முத்துக்குளிக்கும் மக்கள் தங்கள் மூச்சு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளிக் கொள்வதைப் போல, குறளில் முழுகும் மக்களும் தங்கள் அறிவு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளிக் கொள்வ துண்டு.

–திருக்குறள் கட்டுரைகள்–பக், 10.
(திருக்குறளில் புதைபொருள்கள்)

திருக்குறள் - பொதுவீடு

தந்தையின் ஒரு தனி வீடு மக்கள் நால்வர்க்குப் பிரிவுபடுகின்றது. ஒரு மகனைப் பார்த்து 'இஃது யார்வீடு' என்றால், **'எங்கள் பொதுவீடு'** என்பான். பின்னும் அவனை, இவ் வீட்டகத்து உள் பகுதி யாது? என வினவினால், தன் வாழ்க்கைக்கு உரிய தனிஇடத்தைச் சுட்டுவான். அத் தனியிடமே அவன் செய்கைக்கு நிலைக்களமாவது, அனைத்து நிலையினரையும் உட்கொண்ட பல நிலைக் குறள்களின் தொகுதி ஆதலால், திருக்குறள் பொதுநூல்

எனப்படும். பொதுநூல் என்ற பெயரினுங் காட்டில் தொகைநூல் என்பதுவே உண்மை. திருக்குறள் பொதுவீடே ஒழியப் பொது மடம் அன்று என உணர்க.

–வள்ளுவம் பக். 61.

திருக்குறட்சந்தை

திருக்குறள் என் கருத்தில் **ஒரு பெருஞ்சந்தை**. நடப்புச் சந்தையில் பல இனச் சரக்குகளும் ஓரினத்துள்ளே பலவகைப் பொருள்களும் உள. **திருக்குறள் சந்தைக்கண்** அதிகாரங்கள் பலவினச் சரக்குகளாம். ஓரதிகாரத்துக் குறள்கள் ஓரினச் சரக்கின் பல்வகை யாம். சந்தையில் உள்ள எல்லாப் பொருள்களும் விற்றற்கு உரியன என்றாலும் அனைத்தினையும் ஒருவரே வாங்கிக் கொள்ளல் இல்லை. கைப்பொருளுக்கேற்ப, நாட்செலவிற்கேற்ப ஒவ்வொருவரும் வெவ்வேறு தரத்தில் பண்டங்களை வாங்கிக் கொள்ளுகிறோம். நம் உள்ளாங்கசிய, நாட்டின் கேடு புலப்பட, பழம் என்ற பெயரோடு அழுகி ஒதுக்கியவற்றையும் காய்கறி என்ற பெயரினவாய்த் தோல் திரைந்து நீர் சுருங்கியவற்றையும், மளிகை என்னும் பெயரால் கல்லும் மண்ணும் குப்பையொடு கலந்தவற்றையும் மக்கள் என்பார், என் செய்வது, தம் வறுமைநிலை காரணமாய்க் காசு கொடுத்து வாங்கக் காண்கின்றோம். விற்றற்கு வந்த சந்தைப் பொருள்களை ஒருவர் அல்லர்; பற்பலர் பலப்பல நிலையில் வாங்கிக் கொள்வதால் எல்லாம் விற்பனையாகி விடுகின்றன.

திருக்குறட் சந்தைப் பொருள்கள் எல்லாம் செய்வதற்கு உரியனவே; என்றாலும் அனைத்துக் குறள்களும் ஒருவர் வாழ்க்கையில் ஒரு நிலைக்கண் மேற்கொள்ளுதற்கில்லை. என் மனத் திட்பம், அறிவு வளர்ச்சி நிலைகளுக்கு ஒப்பவும், என்வாழ்வு ஏற்கும் பிற ஆற்றற்குத் தகவும் 'அளவறிந்து உண்க' என்றபடி யான் செய்தற்குரிய குறள்களையே வள்ளுவர் சந்தையில் எடுத்துக் கொள்வேன். நும் மன அறிவு நிலைகளுக்கு ஒப்ப யான் தேர்ந்து கொண்ட குறள்களையோ இவற்றேடு வேறு பலவற்றையோ நீவிரும் எடுத்துக்கொள்வீர். இங்கன் அவரவர்

உண்டற்கு உரிய ஊண் அளவுபோல் செய்தற்குரிய குறள்களையே ஒருவர் அல்லர் பற்பலர் பலப்பல வாழ்க்கை நிலைகளில் மேற்கொள்வதால் எல்லாக் குறள்களும் பல்லோர் வாழ்க்கைத் தொகுதியில் செயலாகி அமைகின்றன.

சந்தைக்கண் வணிகர் பலர் உளர். காசுக்குச் சரக்கு விற்பர். அவர் சரக்குக் குவியல் நாம் வாங்குதொறும் குறைவு படுவது; முந்திக்கொள்ளாவிடின் பெருங்காசுக்கும் சிலசரக்கு கிடைப்பது அரிதாய் ஒழியும். இக் **குறைகள் அற்றது திருக்குறட் சந்தை.**

வள்ளுவர் ஒரு வணிகர். வணிகர் மட்டுமல்லர்; மருந்துந்தானே செய்து மருத்துவமும் உடன் செய்யும் தமிழ் மருத்துவன்போல், குறளும் தானே விளைத்துக் கொடுப்பதனையும் நேரடியாகச் செய்யும் வணிக உழவர். இவ்வுழவரும் தம் குறட் சரக்குகளுக்கு அணித்து இருக்கமாட்டார். ஒருவன் அளந்து கொடுக்க ஒருவன் வாங்கும் விற்பனைப் பண்டம் போலாது குடங்கொண்டு முகக்கும் ***குளத்து நீர்*** போலவும், விழைந்தாங்கு எடுத்துக்கொள்ளும் ***மேலைநாட்டு விருந்து*** போலவும், தடையின்றி அவரவர் தாமே கொள்ளக் கிடப்பது குறட்பண்டம். காசில்லை, கடனில்லை, வணிகனில்லை என்று குறள்களை மனத்து நிரப்பிக் கொண்டாலோ வாழ்வு செரிக்காது.

எப்போதும் கொள்ளக் கிடப்பதுதானே என்று நிலைக்குக் குறையக் கொண்டாலோ வாழ்வு பட்டினிப்படும். குடும்பப் பொருளைக் குழந்தை கொள்ளுமாப் போல் மிகுத்தும் குறைத்தும் குறள்களைக்கொள்வதில் ஓர் மனக்குற்றம் இல் எனினும் அளவறியா வாழ்க்கை அறிவுக்குற்றம் உடைத்துக்காண். அக்குற்றம் மனக் குற்றத்திற்கு அடிப்படைகாண். மிகினும் குறையினும் நோய் செய்யும் (941) என்றபடி அவரவர் வயிற்றுப் பதம்போல் வாழ்வுப் பதம் நாடி, செரித்துப் பசிக்கும் நிலைக்கேற்ற செயற்குறள்களையே மிகுதியும் எண்ணவேண்டும். **உரைகல் போலக் குறளொடு செயலை உராயவேண்டும்.** அந்நிலையிற்றான் வாழ்வு ஒளிபெறும்.

–வள்ளுவம் பக், 61,63.

வள்ளுவம் உயிர் மருந்துக்கடை

உடல் அறிஞராகிய **மருத்துவன்** யாது செய்கின்றான்? மக்கள் உடலையும் உடலொன்றின் பல்வேறு அகப்புறக் கூறுகளையும் நிலக்களமாகக் கொள்கிறான் உடம்பின் நல்லதீய வளர்ச்சிகளை நோயாளிதோறும் நுணுகி ஆய்கிறான்; அவ் வளர்ச்சிகளுக்கு அவரவர் உணவுகளையும் செயல்களையும் சூழ்நிலைகளையும் வினவி அறிகிறான்; பசியையும் உறக்கத்தையும் செரிமானத்தையும் தனித் தனி ஆளின் உடற்கூற்றிற்கு ஏற்பட்ட நோய்க்கு ஏற்ப, உணவு மாற்றமோ சூழ்நிலை மாற்றமோ, பிற மருந்தோ விதிக்கிறான், உடல் நலம் தருகிறான். யார்க்கும் மருத்துவம் செய்யும் இவ்வுடலறிஞனைச் சாதி, சமய, மொழி, நாட்டுப் பொதுமையன் எனக் கூறுவார் உளரோ? அன்னோன் மருத்துவத்திற்குப் பொதுமை நிலக்களம் என்று புகல்வார் உளரோ? சாதி சமய எண்ணம் இன்றியே, அவற்றை எண்ணுவதும் வேண்டாமலே உடலறிஞன் ஆள் தோறும் கைந்நாடி பார்த்து மருந்தளித்து உடல்நலம் செய்யுமாப் போலே, உள்ளத்தறிஞராகிய வள்ளுவரும் ஆள்தோறும் மனநாடி பார்த்து நிலைக்கேற்ற அறங்கூறி அகத்தூய்மை செய்பவர். அத் தூய்மை பெருக்கும் நல்லெண்ணங்களையும் கெடுக்கும் தீய எண்ணங்களையும் மக்கள்மாட்டு ஆய்பவர் எந்நிலையினர்க்கு எவ்வறங் கூறினால், தூய்மை பெருகும்; மாசு அகலும் எனத் தனித்தனி நிலைகளை நுணுகுபவர். திருக்குறள் **ஒரு மருந்துக் கடை** அவரவர் அவரவர் நோய்க்கு ஏற்ப உரிய மருந்துகள் கடையில் உளவாதல் போல, திருக்குறளகத்தும் நம் வாழ்விற்கு ஏற்ப உரிய அறங்கள் உண்டு. ஆயின், ஒரு பெருவேறுபாடு: நம் உடல் நிலையை மருத்துவத்தினால் அறிந்து மருந்தினை அவன்பாலோ பிறர்பாலோ வாங்குகிறோம். திருக்குறளோ, வள்ளுவர் தாமே செய்து வைத்துச்சென்ற **உயிர் மருந்துக்கடை** ஆதலின், நம் வாழ் நிலையை நாமே நாடி நிலைக்கேற்ற அறத்தினையும் நாமே கண்டு கொள்ளல் வேண்டும். **ஈண்டுப் பொறுப்பும் எடுப்பும் நம்மேலன. தீதும் நன்றும் நம் எடுப்பிற்கு ஏற்ப வருவன.**

–வள்ளுவம் பக். 43-44

திருக்குறள் காட்சிப்பொருளன்று

திருக்குறள் **கண்காட்சிச் சாலையோ** எனின் அற்றன்று; நிலத்துட் கிடந்த நாணயம், புழங்கிய மட்பாண்டம், எலும்புக்கூடு, உடல்புதைதாழி, ஒருகால் மறஞ்சான்ற வில் வாள் வேல், அணி சான்ற கலன் என்று இனைய பொருள்கள் ஒருங்கு காணப்படும் இடம் ஒரு கண்காட்சிச்சாலை, அச் சாலை காண்பார் வரலாற்றறிவு பெறுவர். பழம் பெருமை அறிவர். அச்சாலைப் பொருள்கள் காண்பார்தம் நாள்வாழ்விற்குப் பயன்படா. ***ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய பழம்பெருமை விரித்தற்கும், பண்டையோர் உயர் நிலை அறிவித்தற்கும் எழுந்ததன்று திருக்குறள்.*** நம் திருக்குறட் பற்றை நாமே ஒருகால் தனித்து இருந்து நினைந்து பார்ப்பின் நாளைச் சாக இருக்கும் கிழவனுக்குக் கொடுக்கும் மதிப்பளவே திருக்குறளுக்கும் கொடுக்கிறோம் என்பது தோன்றும். பாடஞ் செய்யப்பட்ட உயிர்ப் பொருள் போலத் திருக்குறளை வைத்திருக்கிறோம் என்று தோன்றும்.

வள்ளுவம் பக், 61

திருக்குறட் சுரங்கம்

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக்கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே மிகச் சிலவே; இவ்வேளையில் திரண்டு வரும் புது உலகமும் **இனித் திரளப் போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடைக்கின்றன. திருக் குறட் சுரங்கம் வற்றாது.**

–திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (பக். 9.10)

மணிவிளக்கு

நாயனார் அருளிச் செய்த திருக்குறள் **'இரத்தின தீபம்'** போல்வது அதன் ஒளி என்றும் நின்று நிலவுவது. ஒவ்வொரு குறளும்

ஒவ்வொரு மாணிக்கம் எனலாம். அவை ஒவ்வொன்றும் விலைமதிக்கலாகாதவை.

உணவுப் பொருள்களுக்குச் சுவையூட்டுவது போலவும் நுகர் பொருள்களுக்கு மணமூட்டுவது போலவும் புலவர் திருக்குறளைக் கொண்டு தம் நூல்களுக்குச் சுவையும் மணமும் ஊட்டுவர். வெற்றெனத் தொடுக்கும் தம் பாடல்களுக்குத் திருக்குறள் அணி பூட்டுவர்.

–மணி திருநாவுக்கரசு முதலியார்
திருவள்ளுவர் நினைவுமலர் பக். 68

ஒளி நூல்

வள்ளுவருக்குப் பின் பல நூற்றாண்டுகளாக மக்கள் விருத்தி அடைந்து மனித உள்ளத்தின் தன்மையையும் அது தொழிற்படும் பான்மையையும் மேன்மேலும் உணர உணர அப் பழங்காலத்துத் தமிழ்ப் பெருமகன் தன் ஆழ்ந்த **உளத்தொளியில்** ஐயமறக் கண்டறிந்த சிறந்த உளதத்துவ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பயன் பெற்று உய்யுமாறு குறள் என்னும் குன்றப் **புகழ்படைத்த கோதிலா நூலை** ஆக்கினன் என்பது நன்கு புலனாகும்.

–திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு
ஆராய்ச்சியுரை, பக். 19

ஒற்றைத் தனியாழிப் பாரி

அறம் என்னும் சொல் அறு என்னும் முதனிலை அடியாகப் பிறந்து தீவினையை அறுப்பதெனப் பொருள்படும். அம் மூலப்பொருளை உட்கொண்டே ஆசிரியர் ஈண்டு 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றார், அறியாமையால் விளைவது தீவினை. அறியாமையாவது இருள். அவ் விருளை அகற்றுவதே அறத்தின் பயன். அறஞ்செய்ய இருள் அகலும். இருள் அகல மெய்ப்பொருள் தோன்றும், மெய்ப்பொருள் தோன்ற, பொய்ப் பொருள்கள்பால் வைத்த பற்று அறும்.

பற்றறப் பேரின்ப வீடெய்தும். இவ்வாறன்றி மனம் வேறு செயல் வேறாகச் செய்யும் அறவினை உள்ளத்தைப் பற்றுதல் இன்றாகவே ஆண்டுள்ள இருள் அகலுமாறின்றி மேன்மேல் வளர்ந்து ஆன்மாவைக் கவர்ந்து மெய்ப்பொருள் உணர்ச்சியாற் பேரின்ப வீடெய்த ஒட்டாமல் தடை செய்துகொண்டே இருக்கும். இருக்கவே, அறம் எனச் செய்தவை யெல்லாம் வெறும் ஆரவார நீர்மையவாய்ப் பயனிலவாம். ஆதலான், "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்தே அறன்" என்றார்,

மாசிலனாதல் அறத்திற்குக் காரணமோ, அறம் மாசிலனாதற்குக் காரணமோ என்னின் இரண்டும் ஒன்றற்கு ஒன்று காரணமாய் ஒளியும் இருள் நீக்கமும் போல உடனிகழ்வனவாய் வேறுபாடின்றித் தோன்று மென்க.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் மக்கள் உய்யத் திருவாய் மலர்ந்தருளிய இத் தமிழ் மறை உலகிருள் அகற்ற வந்த ஒற்றைத் தனியாழிப் பரிதி என்னின், இக் குறட்பா அவ் வாழியின் அச்சாணி எனத் தக்க அருமையுடைத்தாதல் கண்டு உணர்ந்து உளங்கொளற்பாற்று.

– திருக்குறள் விரிவுரை, பக். 33.

நாளெல்லாம் கண்ட நல்லெண்ணத் தொகுதி

திருக்குறள் ஒரு நன்மகனார் தம் வாழ்நாள் முழுவதும் ஆய்ந்து கண்ட எண்ணத் தொகுதி; பலர் வாழ்க்கையொடு உராய்ந்து சீர் தூக்கித் துணிந்து நிறுத்திய உண்மைத் தொகுதி; மக்கள் என ஓரினம் உளநாள் வரையும் கற்று ஒழுகத்தகும் அறிவுத் தொகுதி. எண்ணம் ஊற்றெடுக்கும் சில நூல்களையேனும் கற்பதால் நம் வாழ்வுக்கு நிலையும், நினைவிற்குத் திட்பமும் பிறக்கும். அன்ன நூல்களுள் தலையாயது திருக்குறள் என அறிக.

–வள்ளுவம் பக். 160

அவரவர் நிலையுயர்த்தும் அறிவுச் சுவடி

நீரற்ற கடல்போல் அஞ்சத்தகும் ஆழ்ந்த தாழ்நிலையுடையார்க்கும் நிலையுயர்த்தும் வழிகாட்டி திருக்குறள் அல்லது பிறிதில்லை.

இமயமலைமேல் நிற்கும் ஞாயிறு போல உயர்ந்து ஒளிரும் வாழ்க்கை நிலையுடையார்க்கும் நிலை தாழாது உயர்த்தும் அறிவுச் சுவடி திருக்குறளல்லது பிறிதில்லை காண்.

–வள்ளுவம் பக் 56.

இக்திய வழிகாட்டி

தனியறம் அரசறம் என்பவற்றை உணர்த்தவல்ல ஓர் **இந்திய நூல் திருக்குறள்.** ஒன்றாக நல்லது கொல்லாமை என்று உலகறம் மொழிந்த வள்ளுவரே படைமாட்சியும் படைச் செருக்கும் மொழிகின்றார், நாட்டின் செல்வத்துள் படையே தலைச் செல்வம் என்று வலியுறுத்துகின்றார், அரசின் முதலுடைமை படையே என்று கண்டார் வள்ளுவர். தாம் கண்டவாறே கற்பவர்க்கு உணர்த்தவும் துடித்தார். பொருட்பால் எழுபது அதிகாரம், எழுநூறு குறள்கள் கொண்டது. இறைமாட்சி என்பது முதலாவது அதிகாரம். அவ் வதிகாரத்தின் முதற்குறளாவது :

“படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு”

இக் குறளில் முதலடிக்கண் முதலாவது இருக்கும் முதலைச் சொல் படை என்பது. படை என்னும் ஆற்றலுடைய சொல்லை முதலாவதாக வைத்துப் பொருட்பாலேயே தொடங்கியுள்ளார் வள்ளுவர். படையின் இன்றியமையாமையை இதனைவிட வேறு வகையால் உணர்த்த முடியுமா?

வள்ளுவரை உலகிற்கு வழங்கிய தமிழிந்தியா தன் வள்ளுவ மகனின் அருமையை அறியவில்லை. இனியேனும் வள்ளுவ நம்பி இந்திய வழிகாட்டியாகுக. வழிகாட்டி எனத் தலைவர்கள் வணங்கி ஒழுகுக.

–டாக்டர் வ. சுப. மாணிக்கனார்

திருவள்ளுவர் கினைவு மலர், பகி. 21.

உலகிடைக் காண இயலா உயர் இலக்கியம்

வள்ளுவர் தம் குறளில் எளிய உயரிய வாழ்க்கையை முயற்சி யின்றிச் சிந்தித்துள்ளார். மனிதன் தனக்குத் தானே செய்து கொள்ளவேண்டிய கடமைகள், உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள் முதலிய பல தரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன; அறிவுக்குப் பொருந்துவன: உயரிய அறிவு நிறை முதுமொழிகளே உலக இலக்கியங்கள் எவற்றினும் காண இயலாது.

–ஆல்பர்ட் சுவைட்சர்.

திருக்குறள் ஒரு - தனிஞானநூல்

ஞான நூல்கள் பலவற்றுள் சொல்லப்பெறாத உண்மைகள் திருக்குறளிற் காணப்படும். ஞானநூல்களில் சுற்றி வளைத்தும் இலைமறை காயாகவும் கூறப்படும் உண்மைகள் திருக்குறளில் நேரிடையாகவும் வெளிப்படையாகவும் அழுத்தம் திருத்தமாகவும் கூறப்படும். திருக்குறள் ஞானச் சிறப்பில் திருமந்திரம் திருவாசகம் முதலியவற்றை ஒப்பது. பதினாயிரம் பகவத்கீதையிலும் உயர்ந்தது. திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவா வறுத்தல், தவம், நிலையாமை ஆகிய அதிகாரங்களிற் காணப்படும் கருத்துகள் ஞானநூல் உணர்வுடையாரை இறும்பூ தெய்தச் செய்வன.

–இராமலிங்கரும் தமிழும் பக், 54

மாறா உண்மைகள்

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர், அவர் இன்றுள்ள வாழ்க்கையை எவ்வாறு விளக்க முடியும் என்று வினவலாம். **காலம் மாறினாலும் உண்மைகள் மாறுவதில்லை. காலத்தின் மாறுதல்கள் உடையின் மாறுதல்களைப் போன்றவை. அடிப்படை உண்மைகள் உயிர் போன்றவை.** திருவள்ளுவர், வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு

எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்தவரும் அவற்றைப் போற்ற முடிகின்றது. அவ்வாறு போற்றும்போது தம்தம் காலத்திற்கு ஏற்றவாறு அவற்றை உணர்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழும் நாமும் அவ்வாறு நம் வாழ்க்கை அமைப்புக்கு ஏற்றவாறு திருவள்ளுவரைக் கற்று உண்மைகளை உணர முடியும்.

–திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
முன்னுரை, பக் 21, 22

திருக்குறள் - அன்புநெறி

திருவள்ளுவர் அன்புநெறியையும் அறிவு நெறியையும் ஒப்ப உணர்த்தும் கடப்பாடு உடையவர். அங்ஙனமாக அறிவு நெறியை மட்டும் அவர் வீடுபேற்றிற்கு உரிய வழியாக உணர்த்தியுள்ளார் என்று கொள்வது பொருந்தாது.

சங்ககாலச் சான்றோரும் அவர்க்கு முற்பட்ட தொல்காப்பியரும் அன்பின் ஐந்திணை எனப் பாராட்டும் இல்வாழ்க்கைக்குப் பெருமதிப்புத் தந்து இல்லற வியலென ஓரியல் தனியே வகுத்து அதில் அவர் மனைவி மக்கள் அயலாரிடத்து அன்புசெய்து பழகி வாழவேண்டும் என்று வற்புறுத்துவதுடன் அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என இல்வாழ்க்கையைப் பிரித்துச் சிறப்பித்துக் கூறியிருக்கக் கண்டும், கடவுள் நெறியாகிய அன்புநெறியை அவர் உணர்த்தவில்லை என்று கருதுவது பொருந்தவே பொருந்தாது. கூர்ந்து நோக்குவோமானால் அன்புநெறி அறிவுநெறி இரண்டையும் உணர்த்தி, அறிவு நெறிக்கு அன்புநெறி இன்றியமையாத அடிப்படை ஆவதாம் என்பதையும், அதுவே சிறந்ததாம் என்பதையும் அந் நெறியைத் தழுவுதல் இன்றிய அறிவு நெறிச் செலவு பயன் தராது என்பதையும் அவர் வற்புறுத்தி இருத்தலை நாம் உணரலாம்.

–அன்பு நெறியே தமிழர் நெறி, பக். 199.200.

பெரும்பயன்நூல்

திருக்குறளை நன்றாய்க் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியது இல்லை என்பது என் துணிவு, மகா மேதாவி **மெக்காலே**

பிரபுவின் புத்தகக் களஞ்சியம் முழுவதையும்விட இவ்வற்புத நூலொன்று மட்டும் சாலச் சிறந்தது என்றும் மனித இனத்திற்கு அதிக நன்மை பயக்கக் கூடியது என்றும் எண்ணுகிறேன்.

–எஸ். எம். மிக்கேல்

திருவள்ளுவர் நினைவுமலர் பக். 82-83

வாழுநம் என்பார் வள்ளுவ வாழ்வினரே

திருக்குறள் அறத்தினை உணரத் தலைப்படுவோர்க்கு ஒரு **பேரற நூல்;** அரசியல் அறிய விரும்புவோர்க்கு ஓர் **அரசியல் நூல்;** ஞானத்தை விரும்புவோர்க்கு ஒரு **ஞான நூல்;** கவிச் சுவை விரும்பு வோர்க்கு ஒரு **காவியம்;** பேரின்பம் விரும்புவோர்க்கு ஒரு **பேரின்ப நூல்;** வாழ்க்கை நெறியறிய விரும்புவோர்க்கு ஒரு **வாழ்க்கை வழி காட்டி நூல்;** அந் நூலைப் பயில்வார் பெரும் புலமையும் ஒட்பமும் பெறுவர். அதன் நெறியின்கண் வாழ்பவரே வாழுநம் என்னும் செருக்குடன் வாழ்ந்து இம்மையில் இன்புற்றுப் பின் வீடுபேறு அடைவர்.

–திருக்குறள் கட்டுரைகள், பக் 43

ஆலமர் வித்தின் அருங்குறள்

அணுவுக்கு அணுவாகவும் அண்டத்துக்கு அண்டமாகவும் கடவுள் விளங்குகிறார் என்பர். நுணுக நுணுக நுண்ணறிவிற்கு விருந்தாகியும் உள்ள திருக்குறளை ஆலமர் வித்தின் அருங்குறள் என்றார் கம்பர் பெருமான்.

–திருக்குறள் கட்டுரைகள், பக். 188.

முப்பால் முறைவைப்பு

ஆசிரியர் **அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால்** என்னும் மூன்றுறுப்பு அடங்கிய பிண்டமாக இந் நூல் இயற்றுதற்குத் தொடங்கி அம் முறையே அவற்றை நிறுத்துக் கூறியதென்னை எனின் மக்கட் சிற்றுயிர்க்கு நற்றுணையாவது அறத்தின் வேறின்மையின் அவ் அறத்தினையே விதந்துரைத்தற்குத் தம் திருவுளம் அமர்ந்த குறிப்புத் தோன்றவும் இது முழுவதூஉம் அற நூலே என்பது யார்க்கும்

பொள்ளெனப் புலப்படவும் அறத்துப் பாலை முதற்கண் நிறுத்துவாராயினர். இனி அவ்விருவகை அறனும் நிலைபெறுதற்கு ஓர் இன்றியமையாக் கருவிப் பொருளாய் வருதல் பற்றிப் பொருட்பாலே அதன்பின் நிறுத்தினார், இனி, அறத்தான் வருவதே இன்பம் என்பவாகலின் அறத்தின் பின் நிறுத்தற் பயத்ததாம் இன்பம், பொருள் இல்வழித் தோன்றுதல் அருமை பற்றி அக் கருவியின் வழிவைத்து ஓதினார் என்க.

இவ்வாறு காரண காரிய இயைபுடைய அறம் இன்பம் என்னும் இரண்டனையும் பயத்தற் கருவியாய் அவற்றின் வேறாதல் இனிது விளங்கற்பொருட்டுக் காரணமாம் பொருளை இடையிட்டு மொழிந்தமையின் ஆசிரியர் பொருளின் மாட்சி நன்கு விளக்கி யருளினார் என்க.

–திருக்குறளாராய்ச்சி, பக். 43–44.

திருவள்ளுவர் நெறி

வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினார் பலர். அவருள் குறிக்கத்தக்க பண்டைச் சான்றோர் **ஆதிமனு, அரிஸ்டாட்டல், திருவள்ளுவர் முதலியோர்.**

ஆதிமனு நெறி செவ்வனே செழித்து வந்தது. இடை நாளில் மனு என்ற பெயரால் தோன்றிய சிலர் பழைய செந்நெறிக்குக் கேடு சூழ்ந்தனர். அவரால் பிறப்பில் உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. அவை தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு **ஆதிமனு** நெறி குலைந்தது. அரிஸ்டாட்டல் வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலை முதலிய கொடுமைகள் மலியலாயின. இம் மலிவால் அரிஸ்டாட்டல் வழி இரத்த ஆறாகியது.

திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறத்தில் மாசு படிதல் அரிதன்றோ? அதனால் திருவள்ளுவர் நெறி சிதைவுபடவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.

–திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் பக். 8.

அறநூல்

திருவள்ளுவர் அறத்தை அறிவுறுத்தவே திருக்குறளை யாத்தனர் என்பது அவர்தம் மொழிகளை ஆராய்வோர்க்கு நன்கு விளங்கும். பொருளும் இன்பமும் திருவள்ளுவரால் ஏன் அருளிச் செய்யப்பட்டன என்னும் ஐயம் இங்கே சிலரிடை நிகழலாம். **அறத்தின் ஆக்கத்துக்குப் பொருளும் இன்பமும் இன்றியமையாதன** ஆதலால் திருவள்ளுவர் அறத்தோடு பொருளையும் இன்பத்தையும் சேர்த்து அருளலாயினர் என்று சொல்லலாம்.

அறம் தனித்தும் பொருளிலும் இன்பத்திலும் விரவியும் இயங்கும் தன்மை வாய்ந்தது. அறமற்ற பொருள் பொருளாகாது. இன்பமும் இன்பமாகாது. பொருளுக்கும் இன்பத்துக்கும் அறக்கலப்புத் தேவை. அறத்தில் நின்று, அறவழியில் பொருளீட்டி அறவழியில் இன்பம் நுகர்வோர் அறநிலை எய்தல் ஒருதலை குறிக்கோள் அறநிலை என்று வாழ்க்கையை நடாத்த வேண்டுவது மக்கள் கடமை.

திருவள்ளுவரால் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றும் தனித்தனியே ஓதப்பட்டன. அம் மூன்றையும் ஆராய்ச்சிக் கண் கொண்டு ஒருங்கே நோக்கினல், அவைகளில் எல்லாம் அறமணமே கமழ்தலை உணர்தல் கூடும். ஆகவே, திருவள்ளுவர் நூலை என்னென்று கூறலாம்? அதை அறநூல் என்று கூறுதல் மிகை யாகாது.

-திருக்குறள் விரிவுரை

(அறத்துப்பால், இல்வாழ்க்கை) முன்னுரை பக் 5-6.

வள்ளுவர் அரசியல்

திருக்குறள், அரசன் தன் ஆடை அணி இருக்கைகளையோ அவன் நுகரும் புறப்பொருள்களையோ கூறவில்லை. அமைச்சன் தூதன் படைத்தலைவன் புறத்துறுப்புக்களையோ போர்க் கருவிகளையோ எண்ணவில்லை. காலந்தொறும் வேறுபடும் ஆடம்பரங்களையோ நாட்கரணங்களையோ குறிக்கவில்லை. இவ்வெல்லாம் எழுதியிருப்பரேல் வள்ளுவரின் அரசியல் வழக்கு

ஒழிந்துபோம். வீட்டுக்குக் கல்லும் மண்ணும் வேண்டும் என்று கூறாமல், காற்றோட்டமும் ஒளியோட்டமும் வேண்டும் என்று கூறுமாப்போலே, வள்ளுவர் அரசியற்கு என்றும் இன்றியமையாச் சிறப்பியல்புகளையே பொறுக்கி யுரைத்தனர். நல்லடிப்படைகளையும் அரசழிக்கும் தீயவற்றையும் விதந்து ஓதினர்.

–வள்ளுவம் பக் 234,

வள்ளுவர் வகுத்த புதுவழி

மருதத் திணையைச் சங்க நூலாகிய அகநானூறு முதலியவை கூறும் முறை வேறு; **திருவள்ளுவரின் நூல் கூறும் முறை வேறு.** திருவள்ளுவர் கூறும் மருதத்தில் பரத்தை என ஒருத்தி இல்லை. தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும் இல்லை. மற்ற நூல்களில் பரத்தையும் உண்டு பரத்தையொடு தலைவன் களிப்பதும் உண்டு. பொருள் காரணமாக மகளிர் சிலர் ஒழுக்கத்தை விற்பதும் கூடாது. ஒழுக்கமற்ற அந்த மகளிரை ஆடவர் நாடுவதும் கூடாது என்று பொருட்பாலில் வன்மையாகக் கடிந்தவர் திருவள்ளுவர்; வரைவின் மகளிர் என்ற அதிகாரம் திருவள்ளுவரின் சீர்திருத்தத்தை விளக்குவது. அக்காலத்து நூல்களில் எல்லாம் இடம் பெற்று வந்த பரத்தையர்க்குத் திருக்குறளில் நல்ல இடம் இல்லை. வேண்டா என்று கடியப்படும் இடமே கிடைத்தது. ஆகலின் திருவள்ளுவர் மருதத் திணைக்கு முன்னோர் வகுத்தோதிய இலக்கணத்தையும் புறக்கணித்துப் பரத்தையர்க்குக் காமத்துப் பாலில் இடம் இல்லாமல் செய்தார். நூலோர் மரபையே கடந்து புதுவழி வகுத்தார்.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
பக், 59 - 60,

காமத்துப்பால் அமைப்பு

காமத்துப்பால் கூறுவார் குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்னும் ஐந்திணையும் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

பாலை எனவும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும் நெய்தல் எனவும் ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம் எனவும் ஒரோவொரு நிலம் ஐந்ததிகாரமாக இருபத்தைந்து அதிகாரத்திற் கூறினார்.

–மணக்குடவர்,

குறள் வெண்பாவின் நுட்பம்

தமிழ்மொழியில் மிகச் சுருங்கிய வெண்பா யாப்பிற்குக் குறள் என்று பெயர். இஃது எழுசீரான் வரும் குறள் வெண்பாவினை ஆசிரியர் தொல்காப்பியனார் **குறுவெண்பாட்டு** என்பர். தமிழில் இதனினும் சிறிய யாப்புக் காணப்படுவது இல்லை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் தம் கருத்தினை விளக்குதற்கு மிகச் சுருங்கிய இவ் வெண்பா யாப்பினைத் தெரிந்தெடுத்தவாறு என்னை எனின் மக்கள் உயிர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் உறுதிப் பொருள்களைத் தம் கூரிய அறிவினான் நன்கு ஆய்ந்து, அவைதம்மை அவர் அறிவிற் பதியச் சுருக்க வகையான் விளக்குதற் பொருட்டு ஆசிரியர் இதனையே எடுத்துக் கொள்வார் ஆயினர். நுண்ணிய பொருள் ஒன்றை ஒருவற்கு விளக்கலுறின், அதனைக் கேட்போன் உணர்வு சலியாவண்ணம் நன்கெடுத்துப் புகட்டுதல்வேண்டும். அவ்வாறன்றிக் கேட்போன் உணர்வு இளைப்புற்று ஒழிய வாளாது விரித்துச் சொல்லப்படுமாயின் அப்பொருள் எத்துணை நுண்ணிதாயினும் அஃது அவன் உள்ளத்தின்கண் அழுந்தமாட்டாதாய்ப்போம். மக்கள் உயிர்க்கு வேண்டப்படும் பொருள் துறைகள் எல்லாம் விரித்துரைப்போம் எனப் புகுந்த வடமொழி மிருதி நூல்கள் வரம்பின்றி...விரிந்தமை யாற்றான் பயன்படுதல் இன்றி வழக்கு வீழ்ந்து ஒழிந்தன. உயிர்க்கு உறுதிப்பொருள் நாடி அவற்றையெல்லாம் தொகுத்து உரைக்க ஒருப்பட்ட திருவள்ளுவனார் இந் நுட்பம் தேர்ந்து தாம் கருதிய பொருளைக் கருதியவாறே தெரித்தற்குச் சிறந்த கருவியாக இக் குறள் வெண்பாவினால் நூல் இயற்றுவாராயினர்.

–திருக்குறளாராய்ச்சி பக். 1-2.

திருக்குறளின் யாப்பு நலம்

நாலடியாரிற் செய்யுள் வாயகன்ற பொன் வள்ளத்தில் நிரப்பிய பனிநீர் போல்வதாம்; மற்று (இத்) திருக்குறட் பாவோ மாணிக்கச் செப்பினும் பொதிந்திட்ட நானம் போல்வதாம்.

மாணிக்கச் செப்பு விலையேறப் பெறுதலுடன் செய்தமைத்தற்கும் அருமையுடைத்து. ஆம். பொற்கிண்ணம் விலை குறையப் பெறுவதுடன் செய்தமைப்பதற்கும் எளிதின் நெகிழ்தலுடைத்தாம்.

நாலடியார் செய்யுள் இயற்கைக் குணம் சிறிதாதலுடன் புலவனாற் பாடுதற்கும் எண்மையுடைத்தாம். திருக்குறு வெண் பாட்டோ குணம் பெரிதாதலுடன் அமைத்தற்கும் அருமையுடைத்தாம். இனி அப் பொன் வள்ளத்தில் நிறைந்த பனிநீர் நெகிழ்ந்த உருவின் விரைந்தழியும் மணமுடைமைபோல், நாலடியாரிற் செய் யுட்பொருளும் கேட்கும் பருப்பொருள் அறிவினார்க்குச் சில கணங்கள் மாத்திரையே மகிழ்ச்சி பயந்து பின் அவருள்ளத்தே நிலை பேறின்றி ஒழியும்.

மாணிக்கச் செப்பினுட் செறித்து வைத்த நானம் கட்டுருவினால் நிலைபெறக் கமழும் நறுமணம் உடைமை போலத் திருக்குறள் பொருளும் கேட்கும் நுண்ணுணர்வினார்க்கு நினைத்தொறும் உரைத்தொறும் மகிழ்ச்சி பயந்து அவருள்ளத்தே ஆழ்ந்து நிலைபெறுவதாம் என்க.

இதனால், நாலடியார் முதலான நூல் யாப்புகள் பொது அறிவினார்க்கு அறிவுறுத்தும் பொருட்டுப் புனைந்துரை வகையாற் சொற் பொருள் நெகிழ்ந்து ஒழுகும் முறைபற்றிச் செய்யப்பட்டனவாம் என்பதூஉம் திருக்குறள் யாப்பு நுண்ணுணர்வினார் பொருட்டுச் சொற் சுருக்கமும் பொருட் செறிவும் பொதுள இறுகிய நுண் நிலையால் அமைக்கப்படும் நெறி தழுவி வந்ததாம் என்பதூஉம் நன்கு அறியப்படும் என்க.

–திருக்குறளாராய்ச்சி பக். 6 – 7.

திருக்குறளில் கவியின்பம்

ஆங்கிலத்தில் இந்நூலை (திருக்குறளை) மொழிபெயர்த்த மேல் நாட்டு அறிஞர்களும் இந்நாட்டு அறிஞர்களும் இந்த இயல்பை (கவியின்ப இயல்பை)ச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

சார்லஸ் இ. கவர் என்பவர், 'குறள் ஓர் இலக்கியக் கருவூலம், **கவிதைக் குரல்** என்பதில் ஐயமே இல்லை. கிரேக்கர்களுக்கு ஹோமரது காவியம் எத்தகையதோ அவ்வாறு சொற்சிறப்பும் நீதிச் சிறப்பும் மிகச் சிறந்த முறையில் அமைந்தது என்று எழுதுகிறார், **எம். ஏரியல்** என்பவர், குறள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பு. மனித சிந்தனையின் தூய வெளியீடு என்கிறார், அதனுடைய உளம்கவர் பண்பை எந்த மொழிபெயர்ப்பும் கொள்ள இயலாது. அது **'வெள்ளித் தட்டில் வைத்த தங்கக் கனி'** என்கிறார் **டாக்டர் கிரௌல்** என்னும் அறிஞர். குறள் இவ்வளவு வியாபகமாக இருப்பதற்கு மிகுதியான காரணம் அது அற்புதமான கவியுருவில் அமைந்திருப்பதுதான் என்பது **ஜி.யு.போப்பின்** கருத்து. இலக்கிய வளாகத்தில் நீதிச் செய்யுளைச் சேர்த்துக்கொள்வதற்குக் கலைஞர்கள் ஒப்புவதில்லை. ஆனால் வேலைப்பாட்டின் சிறப்புக் கவிதைக் கனலின் ஒளியினால் அங்கங்கே நீதி யுபதேசத்தை ஒளிரச் செய்யும் தகைமையும் இருக்குமாயின் எந்த நீதிச் செய்யுளையும் உண்மையான கவிதையாக ஏற்றுக்கொள்வது முறையாகும் என்றால் திருக்குறள் அத்தகைய கவிதையாகும் என்று **பி. டி. சீனிவாசையங்கார்** எழுதினார், **வ.வே.சு.ஐயர்** தம்முடைய குறள் மொழி பெயர்ப்பு முகவுரையில் எழுதியுள்ளவை மிகமிக நன்றாக இந்தக் கருத்தை வெளியிடுகின்றன; மனிதனால் என்றும் வெளியிடப் படாத மிக ஆழமான கருத்துக்களைச் சுருக்கி இந்த ஆசிரியர் ஏழே சீர்களில் அமைத்திருக்கிறார், இந்தச் சிறிய இன்னிசைக் கருவியை அவர் சிறந்த இசை வல்லுநனைப் போல எவ்வளவு அழகாக வாசித்திருக்கிறார்! ஒளிவிடும் சாதுரியம், நகைச்சுவை, அழுத்தமாகச் சொல்லுதல், கற்பனை, முரண்பாட்டு நயம், வினவுதல், ஓவியம் போன்ற உவமைகள் இப்படிக் கருவிலே திருவுடைய கலைஞன் ஆளும் ஆயிரம் உத்திகளில் ஒன்றையும் அவர் இந்த முழுமையான கலைப்படைப்பில் ஆளாமல் விட்டு விடவில்லை என்று அவர் கூறுவது எவ்வளவு பொருத்தமான விமரிசனம்

-திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு.
ஆராய்ச்சியுரை, பக். 85-86.

குறட்பாவின் எழுத்து அளவு

ஒரு குறட்பாவுக்கு உரிய எழுத்துக்கள் எவ்வாற்றானும் **ஒன்றொழிந்த முப்பதின் ஏறுமாறு இல்லை** என்பது காணப்படும். படவே, முப்பதுக் குட்பட்ட எழுத்துக்களில் ஓர் அரிய பொருளை நாட்டி, **அசையும் சீரும் இசையும் இயன்ற பங்காக நோக்குப்படச் செய்த ஆசிரியரது தெய்வப் புலமையும் அவர் ஆக்கிய நூலின் ஒப்பில் பெருமையும் கூற வேண்டுமோ?**

–திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை.
(முன்னுரை. பக். 14)

குறட்பாவின் இசை இடர்ப்பாடு

உணர்ச்சியைத் தாங்கிவரும் கவிதைக்கு மிகவும் இடைஞ்சலான வடிவம் ஒன்று உண்டு என்றால் அதுதான் வெண்பா வடிவம். கவிஞன் விருப்பம்போல் வளைந்து கொடுக்கும் ஆற்றல் இல்லாமல் மிகுதியான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரும் இயல்புடையது வெண்பா. நான்கு அடிகளும் பதினைந்து சீர்களும் பெற்ற வெண்பாவே கடினமான வடிவுடையது என்றால் ஒன்றே முக்கால் அடியையும் ஏழு சீர்களையும் கொண்டு வரும் குறள் வெண்பாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்தப் பெரிய இடுக்கணையும் மீறிக் குறள் சிறந்த கவிதைகளைத் தன்னகத்தே பெற்றிருப்பின் இது கவிஞனின் சிறப்பைப் பன்மடங்கு நமக்கு எடுத்துக் கட்டுவதாகும்.

–திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு.
ஆராய்ச்சியுரை பக். 148.

நாடகக் காவியம்

காமத்துப் பாலில் திருவள்ளுவர் பாக்களைத் தாம் கூறும் சொற்களால் அமைக்காமல், காதலர் இருவர் கூறும் கூற்றுக்களாகவே அமைத்துள்ளார். திருவள்ளுவர் காதல் நாடகக் களம் அமைத்து அங்குக் காதலன், காதலி, தோழி ஆகிய மூவரையும் பேசவிட்டு அவர்களைப் பேசவைக்கும் கலைஞராக விளங்குகின்றார், கற்பவர் நேரே அறவுரையோ, அறிவுரையோ பெறும் வாய்ப்பு இல்லாமல் நாடக

மண்டபத்தில் அமர்ந்து ஒன்றன்பின் ஒன்றாகப் பல காட்சிகளைக் காணும் மக்களாக விளங்க நேர்கின்றது. சுருங்கக் கூறின் காமத்துப்பால் அறநூல் அல்லது அறிவு நூல் போன்றது அன்று, காவியம் போன்றது. காமத்துப்பாலைத் தனியே ஒரு நாடகக் காவியம் எனக் குறிப்பிடலாம்.

– திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு.
ஆராய்ச்சியுரை பக். 152.

வாயுறை வாழ்த்து

வாய்–வாய்மொழி, உறை–மருந்து; எனவே வாயுறை என்பது சொல்லாகிய மருந்து எனப் பொருள் பட்டுப் பண்புத் தொகை யாகவும், வாயின்கண் தோன்றிய மருந்து என விரிந்து ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ள இடம் தருவதொன்று. இந்த இலக்கணத்தோடு பொருந்தியிருத்தலை அறிந்துதான் **திருக்குறளுக்கு வாயுறை வாழ்த்து** என்னும் பெயரை இளவேட்டனர் என்னும் புலவர் வழங்கியிருக்க வேண்டும்.

–கட்டுரைப் பொழில்.
(வாயுறை வாழ்த்து பக் 2)

பொய்யா மொழி

பொய்யாமொழி என்பது பொய்யாத மொழி என விரிக்கப்பட்டு முக்காலத்திலும் பொய்படாத மொழி என்னும் பொருள் தருவ தாகும்.

பொய்யாத மொழி என விரிதலால் அஃது ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத் தொடர் என்னும் பெயர் பெறும். பொய் என்ற சொல் வழக்கத்தில் மிகமிகப் பயின்று வருவதாயினும் அதன் பொருளை நம்மில் பெரும்பாலோர் உணருவது இல்லை.

'நடவாததைச் சொல்வது பொய்' என்ப. பொய் தவறான பொருளைத் தந்துகொண்டிருக்கிறது. மெய் என்ற சொல்லும் அங்ஙனமே நடந்ததைச் சொல்லுதல் எனப் பொருள் கொள்ளப்படுதலால் தவறுடையதாகிறது. இக் குற்றம் அச் சொற்களைச் சார்ந்ததன்று. நெடுங்காலமாக நம் தாய்மொழியில் பற்றுக்குறைந்து பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்காமல் புறக் கணித்து வந்த நமது குற்றமே ஆகும்.

பொய் என்ற சொல் **'உள்ளீடு இல்லாமை'** என்ற பொருளையுடையது.

பொய்க்கால் குதிரை முதலிய உலக வழக்குச் சொற்கள் இப் பொருளையே உணர்த்தி வருதல் காண்க. உள்ளீடு என்பது சத்து. நெல்லுக்கு உள்ளீடு அரிசி, அஃதின்றேல் அதற்குப் 'பதர்' என்னும் பெயர் கொடுக்கப்படும். நெல்லுக்கு அரிசி உள்ளீடு ஆதல் போல மக்கள் **சொல்லுக்கு உள்ளீடு பிற உயிருக்கு நலம் செய்வது.** அவ் வுள்ளீடில்லாத அதாவது பயனில்லாத சொற்களைப் பேசுகின்றவர் மக்களுக்குள்ளே பதராவர் என்பது பொய்யாமொழி யாரின் மெய்யான கருத்து என்பதை,

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்ற திருக்குறளால் அறிக.

பயனற்ற அதாவது பிற உயிருக்கு நலந்தருதலாகிய உள்ளீடு இல்லாத சொற்களைச் சொல்கின்றவன் மட்டும் அன்றி, அவற்றைப் பாராட்டிப் பேசுகின்றவனும் பதர்தான் என்று இக் குறளுக்குப் பொருள்காணின் அதிலே தவறொன்றும் இல்லையல்லவா!

–கட்டுரைப் பொழில் (பொய்யாமொழி 183–184)

முப்பாற் பயனே வீடு

பொருள் இன்பம் அறம் ஆகிய மூன்றையும் கொண்டு முப்பாலை வழங்கி மக்களுடைய மனத்திலே தோன்றக்கூடிய வகையிலே திருக்குறளை அவர்கள் இயற்றித் தந்தார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் இயற்றித் தந்த காரணத்தினாலே வீடு என்ற தனியான ஒரு பேற்றினை அவர்கள் குறிப்பிடவில்லை என்று சிலரும், அவர்கள் வீட்டினை மனத்திலே கருதித்தான் இவற்றை இயற்றித் தந்தார்கள் என்று வேறு சிலரும் வாதிப்பதை இன்றும் நாம் காணலாம். ஆனால் **வள்ளுவர் ஒரு தனிவீட்டைக் கருதினவர் அல்லர். ஆனால் இவையெல்லாம் நிறைவேறுமானால் அதுவே வீட்டின்பம் என்று கருதியவர் அவர்.**

வெற்றிலை பாக்குப் போடுகிறவர்கள் அதனால் பெறுகிற இன்பத்தைப்போல் **வாழ்க்கையை ஒழுங்காக நடத்துகிறவர்கள் பெறுகிற இன்பம் இருக்கிறதே. அதுவேதான் வீட்டு இன்பம்.** வெற்றிலை பாக்குப் போடுகிறவர்கள் போட்டதற்குப் பின்னாலே சிவப்பு என்ற ஒரு நிறத்தை வாயிலே தடவிக் கொள்வது இல்லை. அதைப்போல் வாழவேண்டிய முறையறிந்து வாழ்ந்தவர்கள் அந்த வீட்டைத் தனியாகத் தேடிச் செல்வதில்லை. அதனுடைய பலனே அது.

–பேராசிரியர் க. அன்பழகன்

திருவள்ளுவர் கினைவுமலர் பக். 56.

வள்ளுவத்தை வாரிக்கொள்ளுதல்

தமிழுக்குக் கதியாவார் இருவர் எனச் சில புலவர் புகல்வதுண்டு. கதி என்பதில் கஃகானைக் கம்பநாட்டாழ்வாருக்கும், திஃகானைத் திருவள்ளுவருக்கும் ஞாபக சூத்திரமாகக் கொள்ளல் வேண்டும். கம்பர் தமது இராமாயணம் அரங்கேற்றுகையில் முற்பட்ட சிறந்த நூல் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அகப்பை அள்ளிக் கொண்டதாகக் கூறினார் என்று ஆசிரியப் பரம்பரையில் நாம் கேட்டுவருகிறோம். பழைய நூல்களிற் பயிற்சி மிக்கவர்கள் இதன் உண்மையை நன்குணர்வர். **திருவள்ளுவருக்குப் பிற்பட்டவர்களுள் திருக்குறளில் ஓர் அகப்பை ஆயினும் அள்ளிக் கொள்ளாத சிறந்த பாவலர் ஒருவருமிலர்** என்பதும் நாம் நன்கறிவோம். கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே என வாகீசரே ஓர் அகப்பை அள்ளிக்கொண்டார் என்றால் வேறு கூறவேண்டா.

–திருவள்ளுவர் பக். 7–8–

உப்பில்லா உணவு

திருக்குறள் கலக்காத எழுத்தும் சுவையற்றவை என்று கருதப்படுகின்றன. அவை எவ்வளவு இனிமையாக இருந்தாலும் சர்க்கரை கலக்காத பால் அல்லது உப்பில்லாமல் சமைத்த உணவு என்றுதான் எண்ணப்படுகின்றன.

–வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் பக். 20–21.

வள்ளுவப் பயனடைய வழி

கதை படிக்கிறவர்களையும், பத்திரிகை படிக்கிறவர்களையும் 'இங்கே வாருங்கள்; திருக்குறளைப் படியுங்கள்' என்று சொன்னால் அவர்கள் வரமாட்டார்கள். 'திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுத் தூரத்தில் இருப்பவர் என்று அஞ்சுவார்கள். அவர்களை வசப்படுத்த ஒன்று செய்யவேண்டும். திருவள்ளுவரை அவர்களுக்கு அருகில் அழைத்துச் செல்லவேண்டும் திருக்குறட்கருத்துகளை அவர்களுக்கு விளங்கும் உருவத்தில் எடுத்துக்காட்டி, எப்படித் திருவள்ளுவர் இன்றும் நமக்குத் தோழராக, நம் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காட்டும் வழிகாட்டியாக, சிந்தனைச் செல்வத்தை வழங்கும் சிந்தனையாளராக என்றும் மாறாத உண்மைகளை உரைக்கும் ஞான வள்ளலாக இருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். அப்போது திருவள்ளுவர் வாய்மொழியினால் தமிழுலகம் பயனை அடையத் தொடங்கும்.

–திருக்குறள் கட்டுரைகள் முன்னுரை, பக். 5-6

வாழ்வாங்கு வாழ எழுதிய நூல்

வள்ளுவர் பிறந்த நாடு இது. வள்ளுவரைப் போற்றுகிறோம். வழிபடுகிறோம். ஆனால் அவர் மனம் குளிருமா? ஒரு பழமொழி ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி இதுதான் அது. இதைக் கேட்கும் போதெல்லாம் ஏனோ ஒரு வெறுப்புணர்ச்சி தோன்றுகிறது. ஏன் என்று எண்ணிப் பார்த்தேன். இங்கே இரண்டு என்றால் இரண்டடி உள்ள குறள். நாம் பேசும் பேச்சுக்கு எடுத்துக்காட்டாகப் பயன்படவா திருக் குறள் எழுதினார் திருவள்ளுவர்? வாழ்வாங்கு வாழ்தல் என்று பேசுகிறார் அவர். வாழ்வாங்கு வாழ்ந்த அவர் நாம் எல்லாம் வாழ் வாங்கு வாழவே அதனை எழுதினார். வாழ்வுக்குத் துணை ஆகாமல் சொல்லுக்கு மட்டுமா துணை? யாருக்கு வேண்டும் இந்தப் பேச்சு.

–ம தி. க. வெள்ளிவிழா மலர் பக். 43.
தெ பொ. மீனுட்சிசுந்தரனார்.

தமிழர் கடமை

வள்ளுவரை ஈன்ற தாய் வயிற்றுப் பிறந்தும், வள்ளுவரோடு உடன் பிறப்பு எடுத்தும், மொழிபெயர்ப்புத் திருக்குறளைக் கற்பரேல், அவர் செயல் ஏனைத் தமிழர்க் கெல்லாம் நாணுடைத்து. பொய்யாத் தமிழன் கண்ட பொய்யில் திருக்குறளைத் தமிழனாய்ப் பிறந்தான் தமிழிற் கல்லாது, அங்ஙன் கற்றுப் பிறநாட்டார் வரைந்த மொழிமாற்றுத் திருக்குறளைக் கற்பானேல் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும் (958) என்றாங்கு தமிழ்க் குடியிழுக்கம் கூறுவதிற் குற்றம் என்னோ?

திருக்குறள் கருத்து வகையால் உலக மக்கட்கு எல்லாம் உரியது எனினும், மொழி காரணமாய் நமக்கு உறவுடையது; ஆதலின், அதனை உள்ளவாறு நாம் உணர்தலும், உணர்ந்தவாறு மொழிபெயர்த்து உலகிடைப் பரப்பலும் நம் கடன். **ஞாலத்திருக் குறளை உரிய தமிழ் வாயிலாய்க் கற்க முயலுமின்! முயலுமின்!** என்ற உணர்ச்சியைப் பிறமொழி மாந்தர்க்கு ஊட்டலும் நம் பொறுப்பு.

–வள்ளுவம் பக். 262 - 8.

வள்ளுவத் தொண்டு

திருக்குறள் நண்பர்களே! உருவப் படத்தை நெய்யூர்தி மேலும், யானைமீதும் வைத்துப் பூமாரி பெய்து மின்விளக்குப் பந்தல் இட்டு, நாடு வலம் வந்து குறட் சுவடிகளை வானவூர்தி வழித் தூற்றினாலும், **இப்பரப் பறைவால் செயல் மக்கள்மாட்டு அமையாது.** கூத்துத்தாள் வாங்கும் குழந்தை உணர்ச்சியே அவர்கட்குத் தோன்றும். மக்கட் கெல்லாம் கல்வி வேண்டும்; கேள்வி வேண்டும்; முயற்சி வேண்டும் என்பது வள்ளுவம். இக் கோட்பாடு செயற்படுதற்கு உரிய வழிதுறைகளை அன்பர் ஆகிய நாம் பற்றல் வேண்டும். **கல்வி வேண்டும் வள்ளுவர் பெயரால் தெருத்தோறும் பள்ளி அமைக. ஊர்தோறும் பெரும் பள்ளிகள் நிறுவுக நூல்நிலையம் படிப்பகங்கள் பெருக்குக. கேள்வி வேண்டும் வள்ளுவர் பெயரால் கேள்விக் கூடங்கள் கட்டுக. முயற்சி வேண்டும் வள்ளுவர் பெயரால்**

தொழிற் களங்கள், உழைப்புச் சாலைகள், உழவுப் பண்ணைகள் தொடங்குக. ஈகை வேண்டும் வள்ளுவர் பெயரால் ஏழையில்லங்கள் குழந்தை விடுதிகள் பேணுக மடி மகனும் பசி மகனும் மட மகனும் இல்லை எனும்படி பள்ளியில் தெருவும், தொழிலில் ஊரும் இல்லை எனும்படி, வள்ளுவர்க்குத் தொண்டு செய்க. ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் என்னும் பேதைக் குற்றத்துக்கு ஆளாகாதவாறு இவ்வெல்லாம் முதற்கண் தத்தம் ஊரிலேயே ஆற்றுவார் ஆற்றுக, செல்வ மிகுதியிருப்பின், பிறவூர்களுக்கும் தொண்டினைப் பரப்புக. கோடிச் செல்வம் குவியின் வள்ளுவர் பல்வகைக் கல்லூரிகளும் வள்ளுவர் பல்கலைக் கழகமும் நிறுவ முயல்க.

–வள்ளுவம் 11–112.

திருக்குறளை நேரே படித்தல்

திருக்குறளைப் பற்றிச் சில செம்மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆர்வமேயாகும்.

–காந்தியடிகள்

திருக்குறளுக்குப் புத்துரை

எழுத்தெழுத்தாக அசை அசையாகக் குறளை உரைசெய்தும் பின்னர் அனைத்தையும் ஒப்பு நோக்கியும் ஒருரை செய்யவேண்டும். இம்முறையில் திரு. வி. க.பாயிரம் முதல்பத்து அதிகாரங்கட்கு மட்டில் 1000 பக்கத்திற்கு மேலும் விரிவுரைகண்டார். அவரைப் பின் பற்றிக் குறள் முழுவதற்கும் 4000, 5000 பக்கங்களில் ஒரு பேருரை கண்டால் நாட்டிற்கு நற்பயன் உண்டாகும்.

–திருக்குறள் நயவுரை (முன்னுரை பக். 2)

திருவள்ளுவ மாலையில் தேர்ந்தவை

புலவர்

புலவர் எனப் புகலப் பெறுவார் வள்ளுவர் ஒருவரே.

–மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

பா

பா என்பது வள்ளுவர் வெண்பாவே,

– கவிசாகரப் பெருந்தேவனார்

முப்பால் மொழி

எப்பாவலரும் தப்பாமல் ஏற்றுக்கொள்ளும் மொழி ஒன்றே; அது வள்ளுவர்தம் முப்பால்மொழியே.

– கல்லாடனார்

ஒப்பிலா முப்பால்

முன்னோர் முதுமொழிகள், முப்பாற்கு ஒவ்வா.

– கோவூர் கிழார்,

முப்பால் இன்பம்

வள்ளுவர் உரைத்த முப்பால் மொழி இன்பத்தில் 'மூழ்குவார், அப்பால் ஒருபாவை ஆராய விரும்பார்.

– நாகன்தேவனார்

புலமைக்கு அளவுகோல்

திருக்குறளைத் தெளியக் கற்றவர்க்கு வேறொருநூல் கற்க வேண்டுவது இன்று. புலமைக்கு அளவுகோல் திருக்குறள் கற்பதே.

– நத்தத்தனார்

உள்ளுவார் உள்ளுவன

வள்ளுவர் வாய்மொழியில், உள்ளுவார் உள்ளும் பொருளெல்லாம் உண்டு.

–செல்லூர் கொடுஞ் செங்கண்ணனார்

சொல்லுதல் வல்லார்

சுருங்கிய சொல்லால் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லார் வள்ளுவர் அல்லால் பிறர் அல்லர்.

– அரிசில் கிழார்

ஈரடியால் அளந்தார்

உலகத்தார் உள்ளத்தில் உள்ளவற்றை எல்லாம் வள்ளுவர் ஈரடியால் அளந்தமை அருமையே காண்.

–பரணர்

அறிவுச்சுரப்பி

புலமையாளர் ஆயும்தோறும் அறிவு சுரக்குநூல் திருக்குறளே.

–உருத்திரன் கண்ணனார்

இனிமை

இனிய திருக்குறள், சிந்திப்பார் சிந்தைக்கு இனியது; கேட்பார் செவிக்கு இனியது; சொல்வார் வாய்க்கு இனியது; வருத்த வந்த வல்வினைக்கு நன்மருந்து.

–கவுணியனார்

பொய்யும் மெய்யும்

வள்ளுவர் வாய்மொழியால், பொய் பொய்யாகவும், மெய் மெய்யாகவும் விளங்கின.

–தேனீக்குடிக் கீரனார்

எளிமையும் அருமையும்

வள்ளுவர் வாய்மொழி ஓதற்கு எளிது; உணர்தற்கு அரிது; மறையென்னும் மாண்பினது ; நினைதோறும் நினைதோறும் நெஞ்சம் உருக்குவது.

–மாங்குடி மருதனார்

பணித்துளிமேல் பனைமரம்

சிறியதொரு புல்லின் நுனியில் தினையின் அளவினும் சிறிதாக உள்ள பனித்துளி, நெடிய பனைமரத்தையும் தன்னிடத்துத் தெளிவாகக் காட்டும். அதுபோல் குறட்பாவும் மிக விரிந்த பொருளைத் தன்னிடத்துக் கொண்டுள்ளது.

–கபிலர்

வள்ளுவ விளக்கு

உலகோர் உள்ளிருள் நீக்கும் விளக்கு திருக்குறளே. அறத்துப்பால் அகல்; பொருட்பால் திரி; இன்பத்துப்பால் நெய்; செஞ்சொல்தீ; குறட்பா தண்டு; விளக்கு ஏற்றியவர் வள்ளுவர்.

–நப்பாலத்தனார்

கதிரும் குறளும்

செங்கதிரும் திருக்குறளும் ஒப்பானவை; செங்கதிர் உலகிருள் நீக்கும்; தாமரை மலரை மலர்த்தும்; திருக்குறள், உலகோர் உள்ளிருள் நீக்கும் உள்ளத்தாமரை மலரை மலர்த்தும்.

–குலபதிநாயனார்

கடுகு

ஏழு கடல்நீரைத் தன்னுள் அடக்கிக்கொண்டு இருக்கும் சிறு கடுகு போன்றது ஏழுசீர்க்குறட்பா,

–இடைக்காடனார்

அணு

ஏழுகடல் நீரைத் தன்னுள் அடக்கிக்கொண்டு இருக்கும் அணு அனையது எழுசீர்க்குறட்பா,

–ஔவையார்

2. அயல்நாட்டினர் வழங்கிய அருங்குறிப்புகள்

எவன் தமிழ் கற்றவன்?

தமிழ் இலக்கியங்களின் தலைமணியாக விளங்குவது திருக்குறளே அதனை ஓதி உணர்ந்தவனை அன்றி மற்றையோன் தமிழ் கற்றவன் என்னும் தகுதிக்கு உரியவன் அல்லன்.

–பிரடெரிக்கு பின்காட்டு,

பிறந்த நாட்டுக்குப் பெருமை

திருக்குறள் சீரிய செந்தமிழ் நூல். அதன் தனித் தன்மைக்கு மற்றெந்தத் தமிழ் நூலும் அடுத்து வைத்தற்கும் தக்கது அன்று.

சீரிய திருக்குறளையும் அதனை இயற்றிய சிறந்த பெருமகனாரையும் பெற்றெடுத்த ஒரு புகழ்வாய்ந்த நாடு, புறக்கணித்து ஒதுக்கத்தக்க ஒரு நாடாக இருத்தற்கு இயலாது.

வள்ளுவப் பெருமகளுர் வழங்கும் அறநெறிக் கூறுகள், ஒழுக்கத்தின் விளை நிலமாய் விளங்கும் ஒரு நாட்டில் அன்றி அரும்ப இயலாது.

–முனைவர் இலாசரசு,

காண்டற்கரிய கவின் நூல்

திருவள்ளுவர் தாம் சொல்ல விழைந்த அறக் கூறுகளைச் செவ்விய செய்யுள் நடையால் கூறியுள்ளதற்கு ஒப்பாகிய ஒரு **வளர்புகழ் வள்ளுவம்** நூலை, உலகில் மக்களால் பேசப் பெற்று வரும் வேறு எம் மொழியிலாயினும் காண்டற்கு இயலாது.

–பெர்சிவெல்,

அளப்பரும் வளப் பொருள்

தமிழர்களின் புகழ்மிக்க பண்பாட்டின் வளர்ச்சியாகத் திருக் குறள் உள்ளது. இவ்வுலகில் தமிழர்கள் மற்றது எதற்காகவும் தணிந்துவிட வேண்டியது இல்லை, திருக்குறள் மதிப்பிற்குரிய அளப்பரும் வளப்பெரும் பொருளாகும்.

–மைக்கேல்

தமிழர் உயிர்காடி

தமிழ் மக்களின் மனநிலை, ஒழுக்கத்தையே உயிர்நாடியாகக் கொண்டு நின்றது என்பது திருக்குறளால் தெள்ளிதின் விளங்கும்.

–சார்லசு,

இழக்க ஒண்ணா இலக்கியம்

தமிழர்களாகிய நாம் நம்முடைய பழந்தமிழ் நாகரிகத்தையெல்லாம் இழந்து வருவதாகப் பகிர்கிறோம். பொருநை, காவிரி முதலிய ஆறுகளையோ, திருக்கோயில்களையோ, அரண்மனைகளையோ, பிற வளங்களையோ இழக்க நேர்ந்தாலும் திருக்குறளை இழக்க மாட்டோம்.

–மைக்கேல்,

ஒப்பிலா ஒரு நூல்

தமிழகத்து அறவோர்களுள் திருவள்ளுவர் முதன்மையானவர். உறுதியாக, திருக்குறளுக்கு ஒப்பான ஒன்று, இந்திய மொழி நூல்களுள் எந்த ஒன்றும் இல்லை என்று பொதுவாக அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளது.

–மர்டாக்

ஒப்பும் உயர்வும்

திருக்குறள் நெறி மனுவின் நெறியைக் காட்டினும் மேம்பட்டது. அருளாளன் பிளேட்டோவின் படைப்புக்கு ஒப்பானது திருக்குறள்.

–எச்.பவர்

இணையிலா நூல்

மேற்கத்திய கிழக்கத்திய இலக்கியத் தொகுப்புகள் எவற்றிலும் (திருமறையும் ஓரிரு உயர் நூல்களும் தவிர) பழமைக்கும் புதுமைக்கும் எதிர்மைக்கும் இணையற்று விளங்குவது திருக்குறளாகும்.

–மைக்கேல்

வள்ளுவ வனப்பு

புத்தர் புகழ்வது போலவும் கீதை மொழிவது போலவும் உலகோர்க்குத் தொல்லையில் இருந்து விடுதலை பெற்ற உள்ளத் தையும், பற்றற்ற வாழ்வையும் வேண்டுகின்றது திருக்குறள், அவற்றைப் போலவே கொல்லாமை, இன்னா செய்யாமை என்பவற்றை விலக்க ஆணையிடுகிறது.

திருக்குறள் மானிடப் போக்கின் அறக்கோட்பாடுகளைச் செவ்வனே மதிப்பிடுகிறது. அகக் கோட்பாடுகளுடன் புறக்கோட்பாடுகளையும், அன்பு வழி வந்த இல்வாழ்வையும் அறுதியிட்டு உரைக்கின்றது.

–முனைவர் ஆல்பிரட்டு சுவைட்சர்.

கண்மூடித்தனம் கலவாதது

ஒரு பிரிவினர்க்கே உரிய கோட்பாடுகளைக் கொள்ளாது விலக்கி, உலக மக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்தும் உண்மைகளையே தெரிந்தெடுத்துத் திருவள்ளுவர் மொழிந்துள்ளார். இவ் விரிந்த உணர்வால் மற்றை மனு முதலிய நூல்களில் கூறப்பெறும் கண்மூடித்தனம் எதுவும் இன்றி நூல் மேலோங்கித் திகழ்கின்றது.

–அறிஞர் துரு.

வானும் முகிலும்

மனு நூல் திருக்குறளுக்கு நானூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டதே ஆனால், இவற்றுக்குள் உள்ள வேறுபாடு என்னவெனில், ஒருமைப்பட்ட மனுநெறி, பிராமணச் செல்வாக்கால் உலகும் வாழ்வும் எதிரானது என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. திருக்குறளில் உலகு வாழ்வு இவற்றின் வேறுபாடு தொலைவிலுள்ள வானும் முகிலும் போல ஒன்றுபட்டுள்ளது.

–முனைவர் ஆல்பிரட்டு சுவைட்சர்.

கோமரும் தாங்தேயும்

குறளறம் யூதர்களின் 'பத்துக் கட்டளை' களுக்கு ஒப்பானவை. அதன் மொழிநடை இலக்கிய மேதகைமைக்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றது.

கிரேக்க நாட்டவரிடம் கோமர் பெருமகனார்க்கு எத்துணைச் சிறப்புண்டோ, அத்துணைச் சிறப்பு: தமிழ் நாட்டவரிடம் வள்ளுவப் பெருமகனார்க்கு உண்டு. அன்றியும் கவிஞர் 'தாந்தே' யின் நூல் இத்தாலி மொழிக்குப் பெருமையளிப்பதற்கு ஒப்பாகத் திருக்குறள் தமிழ் மொழிக்குப் பெருமையளிக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

–அறிஞர் கோவர்.

வள்ளுவர் மேம்பாடு

சர். ஏ. **கிராண்டு** என்பார், "பணிவுடைமை, கற்புடைமை, பொறையுடைமை என்பவை அறிஞர் அரிட்டாட்டிலால் விரித்துரைக்கப் பெறவில்லை என்றார், ஆனால், இம் மூன்று பண்புகளும் திருவள்ளுவராகிய அறவோரால் ஒவ்வோர் இடத்தும் தம் நூலில் மிக அழுத்தமாக உணர்த்தப் பெற்றுள்ளது.

–முனைவர் போப்

தனித்தியங்கும் தகவு

திருக்குறள் அமைப்பு வகையாலும் பா வகையாலும் வட மொழித் தொடர்பு சிறிதும் இல்லாமல் தனித்தியங்கும் தனிப் பெருமையுடையது.

–இராபர்ட்டு கால்டுவெல்,

பளிக்குக் கல் பரப்பு

திருக்குறள் மேலும் விரித்துரைக்க இயலாத சீரிய கட்டுத் திட்ட அமைப்பு உடையது. அது சீரிய பளிக்குக் கல்பரப்பு. அதன் ஒரு சிறு கல்லின் அமைப்பிலோ வடிவிலோ வண்ணத்திலோ சிறியதொரு மாற்றம் செய்தாலும் அப் பரப்பின் முழுதுறும் அழகும் பழுதுறும்.

–முனைவர் இலாசரசு,

வெள்ளிப் பேழையில் வைக்கப்பெற்ற பொற்கனி

திருக்குறள் வழங்கும் செவ்விய இன்பம் இத்தகையது என்று எந்த மொழி பெயர்ப்பாலும் ஒரு சிறிதாயினும் கொடுக்க இயலாது. திருக்குறள் உண்மையாகவே வெள்ளியால் செய்யப்பெற்ற எழிற் பேழையில் இட்டுவைக்கப் பெற்ற பொன் ஆப்பிள் பழம் போன்றது ஆகும்.

–முனைவர் கிரௌல்.

22. புகழ் நூல்

திருவள்ளுவர் வரலாறு

திருவள்ளுவர் ஒப்பற்ற ஓர் உலகம்; அவர், வாழும் உலகத்தைத் தம்முள் கொண்டு, அவ்வுலகுக்காகத் தம் வாழ்வை ஒப்படைத்து, ஒப்பற்ற ஒரு நூலை ஆக்கிய பெருமகனார்.

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியவர்; தமிழகத்தில் வாழ்ந்தவர்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", "ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்", "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்னும் இத்தகைய பெருநெறி பற்றியவர். இறைமை முதல் எல்லாம் எல்லாம் பொதுமைக் கண் கொண்டு நோக்கியவர்; மாந்தரைத் தெய்வ நிலைக்கு ஏற்றும் மாணெறி படைத்த தெய்வர்.

திருவள்ளுவர் பன்மொழிப் புலமையர்; தம் காலத்து வழங்கிய நூற் பரப்புகளையெல்லாம் கண்டவர்; உலகியல், உயிரியல், உணர்வியல், உடலியல், குடியியல், படையியல், பொருளியல், தொழிலியல், அரசியல், மருத்துவ இயல், அருளியல், மெய்யியல் முதலாம் பல்வகை இயல்களில் திறமான புலமையுற்றவர்.

திருவள்ளுவர் இயற்கை இன்ப இல்வாழ்வை ஏற்று, அறவழி நின்று, பொருளீட்டி, இன்பந் துய்த்து, அறிவறிந்த நன்மக்களைப் பெற்று, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, குடும்பக் கடமையும் நாட்டுக் கடமையும் நானிலக் கடமையும் சீருறச் செய்து சிறந்த செவ்வியர்.

சான்றோர்க்கு எந்நாடும் தம் நாடே என்றும், எவ்வூரும் தம் ஊரே என்றும், அறிவறிந்த நன்மக்கட்பேறு தம் பெற்றோரினும் இப்பேருலகுக்குப் பெருநலம் செய்யுமென்றும் உலகளாவிய பெருநெறி காட்டியவர்.

பெருமூதாளராக இலங்கிய நிலையில் தம் உண்மையறிவும் படிப்பறிவும் பட்டறிவும் மெய்யுணர்வுமாகிய எல்லாம் உலகை

உய்விக்குமென்னும் அருளுள்ளத்தால் திருக்குறளை உலகுக்குத் தந்து தெய்வமாப் புகழ் எய்திய இறைமையர்.

இவை வள்ளுவ வழிக் கண்டவை.

திருவள்ளுவர் ஆண்டும் நாளும்

கி.பி. 1966 சுறவ (தை)த் திங்கள் ஐந்தாம் நாள் (18-01-1935) திருவள்ளுவர் திருநாள் கழகத்தினர் நடத்திய திருவிழாவில் தலைமை பூண்டருளிய மறைமலை அடிகள், "கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்" என்று அறிவித்துத் திருவள்ளுவர் ஆண்டைத் தொடங்கி வைத்தார். "திருவள்ளுவர் ஆண்டைக் கிறித்து ஆண்டுடன் 31 ஆண்டைக் கூட்டிக் கணக்கிட வேண்டும்" என்பது அடிகள் குறிப்பு. அதனை அறிஞர் அவை ஏற்றுக் கொண்டது. அன்று தொட்டு அறிஞர்களால் அவ்வாண்டு நடைமுறைப் படுத்தப்படலாயிற்று.

– திருவள்ளுவர் நினைவு மலர், பக்.117

1969 – இல் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின் பொங்கலுக்கு அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டு அரசு விடுமுறை அளிப்பது என்றும் 1-1-1970 முதல் இது நடைமுறைக்கு வருமென்றும் ஆணை இட்டார்.

சுறவ (தை)த் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாள் என்று அரசு 1974 முதல் கொண்டாடி வருகின்றது.

திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தமிழ்நாட்டு அரசு ஏற்று 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

திருவள்ளுவரைக் குறிக்கும் பிற பெயர்கள்

செந்நாப் புலவர்

செந்நாப் போதார்

திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்

தெய்வத் திருவள்ளுவர்

தெய்வப் புலமைத் திருவள்ளுவர்

தெய்வப் புலவர்

தேவர்

தேவர் திருவள்ளுவர்

தேவிற் சிறந்த திருவள்ளுவர்

நாயனார்

புலவர்

பெருநாவலர்

பொய்யா மொழியார்

பொய்யில் புலவர்

மாதானுபங்கியார்

முதற் பாவலர்

வள்ளுவ தேவன்

வள்ளுவர்

வாலறிவன்

திருக்குறளைக் குறிக்கும் பிற பெயர்கள்

அறம்

இரண்டு

உத்தரவேதம்

எழுதுண்டமறை

குறள்

தமிழ்மறை

திருவள்ளுவப் பயன்

திருவள்ளுவர்

தெய்வ நூல்

தெய்வ மாமறை

நம் மறை

பழமொழி

பால்முறை

புகழ்ச்சி நூல்

பொதுமறை

பொய்யா மொழி

பொருளுரை

முதுநெறி

முதுமொழி

முப்பால்

முப்பொருள்

மெய் வைத்த சொல்

வள்ளுவ தேவன் வசனம்

வள்ளுவம்

வள்ளுவ மாலை

வள்ளுவர்

வள்ளுவர் வாய்மொழி

வள்ளுவர் வைப்பு

வள்ளுவன் வாய்ச் சொல்

வாய்மை

வாயுறை வாழ்த்து

திருக்குறளைத் தம்மில் ஒரு பகுதியாக வைத்துப் போற்றும் விளக்க நூல்கள்

இரங்கேச வெண்பா

சிவசிவ வெண்பா

சினேந்திர வெண்பா

சோமேசர் முதுமொழி வெண்பா

திருக்குறள் குமரேச வெண்பா

திருக்குறள் விளக்க வெண்பா

திருத்தொண்டர் வெண்பா

திருப் புல்லாணி மாலை

திருமலை வெண்பா

தினகர வெண்பா

பழைய விருத்த நூல்

முதுமொழி மேல் வைப்பு

முருகேசர் முதுநெறி வெண்பா

வடமலை வெண்பா

வள்ளுவர் நேரிசை

புகழ் மாலை

(திருவள்ளுவ மாலைத் தொகுப்பு)

என்றும் புலராது யாணர்நாள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையது. - இறையனார்

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால். - கபிலர்

வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவ வெல் லாம்அளந்தார் ஓர்ந்து. - பரணர்

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் – ஏனோருக்(கு)
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉல கென்னாற்றும் மற்று. - நக்கீரர்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் – சுருங்கிய

சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால். - அரிசில் கிழார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். - நத்தத்தனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்–தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. - மாங்குடி மருதனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உளதிதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் – சொல்லால்
பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. - மதுரைத் தமிழாகனார்

அறந்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல் தீத் தண்டு – குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு. - நப்பாலத்தனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே – முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. - தேனீக்குடிக் கீரனார்

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்–மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம் வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு. - கொடிஞாழல் மாணிபூதனார்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து-முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. - கவுணியனார்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - இடைக்காடர்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - ஔவையார்

இடைக்கால - பிற்காலப் புலவர்கள்
இயம்புவன - பாடல்

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன். - கல்லாடனார்

என்னடிகள் வெண்குறள் நேர் அடியிரண்டும்
என்றலையில் இருத்தும் இறை. - சிவப்பிரகாசர்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகு கருதியும். - பாரதியார்

வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி. - பேராசிரியர் பெ.சுந்தரனார்

வள்ளுவர் தந்த திருமறையைத் – தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே – என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன் – வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது.

- கவிமணி

வானுக்குச் செங்கதிர் ஒன்று – புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்றுண்டுநல்ல
மானத்தைக் காத்துவாழ என்றுமிந்த
வையத்துக் கொன்று திருக்குறள்.

- பாவேந்தர்

உரைநடை

வள்ளுவர் தம் குறளில் எளிய உயரிய வாழ்க்கையை இயல்பாகச் சிந்தித்துள்ளார். மாந்தன் தனக்குத்தானே செய்து கொள்ள வேண்டிய கடமைகள் உலகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் முதலிய பலதரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன; அறிவுக்குப் பொருந்துவன. இத்தகைய உயரிய அறிவு நிறை முதுமொழிகளை உலக இலக்கியங்கள் எவற்றினும் காண இயலாது.

- ஆல்பர்ட்டு சுவைட்சர்

திருக்குறளை நன்றாய்க் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியது இல்லை என்பது என் துணிவு. பேரறிஞர் மெக்காலே பிரபுவின் புத்தகக் களஞ்சியம் முழுவதையும் விட இவ்வியப்புக்குரிய நூல் ஒன்று மட்டும் சாலச் சிறந்தது என்றும், மாந்தர் இனத்திற்கு மிக நன்மை பயக்கக் கூடியது என்றும் எண்ணுகின்றேன்.

- எம்.எசு.மைக்கேல்

ஒரு பிரிவினர்க்கே உரிய கோட்பாடுகளைக் கொள்ளாது விலக்கி, உலகமக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்தும் உண்மைகளையே தெரிந்தெடுத்துத் திருவள்ளுவர் மொழிந்துள்ளார். இவ்விரிந்த உணர்வால் மற்றை மனு முதலிய நூல்களில் கூறப்பெறும் கண்மூடித்தனம் எதுவும் இன்றி நூல் மேலோங்கித் திகழ்கின்றது.

- அறிஞர் துறு

இன்பத்துப்பாலை அனைவரும் குற்றமற்ற முறையில் படித்து இன்புறுமாறு எழுதப்பட்டிருத்தல் பாராட்டத்தக்கது.

- போப் ஐயர்

திருக்குறள் அமைப்பு வகையாலும் பாவகையாலும் வடமொழித் தொடர்பு சிறிதும் இல்லாமல் தனித்தியங்கும் தனிப் பெருமையுடையது.

- இராபர்ட்டு கால்டுவெல்

ஒருநாள் வழக்கப்படி திருக்குறள் படித்த போது 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்' எனக் குறள் ஒன்று தென்பட்டது. அதைப் பார்த்துத் தமிழர்கள் திருக்குறளைப் படித்துச் சுவைப்பது போல் உருசியக்காரர்களும் படித்துச் சுவைக்குமாறு ஏற்பாடு செய்யலாமா என்று நினைத்துக் கொண்டேன்.

- எம். அந்திரோனவ்

திருக்குறளை ஓதி உணர்ந்தால் அல்லது எவனும் தமிழறிந்தவன் என்று கூறிக்கொள்ள முடியாது.

- பிரடெரிக்கு பின்காட்டு

வள்ளுவத்தின் வான் புகழ்

தால்சுதாய் 1906-இல் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார். அதில் திருக்குறளை 'இந்துக்களின் குறள்' என்கிறார். அதில் தம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவை இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் ஆகும். குறட்பாக்களைக் குறிப்பிடுவதுடன் விளக்கவுரையும் வரைகின்றார். இக்குறட்பாக்கள் தால்சுதாயின் இன்னா செய்யாமை (அகிம்சை)க் கொள்கையை உருவாக்க உதவியுள்ளன. அறநெறியில் போராடுவதைப் பற்றிய அவருடைய சிந்தனைக்கு உரமாக அமைந்தன. தால்சுதாயின் இக்கடிதத்தினால்தான் காந்தியடிகள் திருக்குறளை அறிந்து கொண்டு, ஏரியல் என்பார் மொழி பெயர்த்த பிரெஞ்சு மொழி பெயர்ப்பு நூலைப் படித்து அதன் சிறப்புணர்ந்தார்.

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - 339

என்னும் குறளைக் காட்டி "இதைவிடத் தெளிவாக இறப்பைப் பற்றிக் கூற இயலுமா?" என வினாவுகிறார்.

இங்கர்சால் என்னும் பகுத்தறிவாளர் திருக்குறளிடத்துப் பேரீடுபாடு கொண்டு இருந்தார். திருவள்ளுவருடைய கட்டற்ற சிந்தனைப் போக்கும், அறிவை முதன்மையாகப் போற்றும் பண்பும் இங்கர்சாலின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

"அறிவு அற்றம் காக்கும் கருவி" - 421

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு." - 355

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பெருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." - 423

என்னும் குறட்பாக்களை இங்கர்சால் அடிக்கடி மேற்கோளாகக் காட்டி எழுதியும் பேசியும் வந்துள்ளார்.

- சான்றோர் கண்ட திருவள்ளுவர் 328

"இருநோக் கிவளுநுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து"

என்னும் பாடலைச் செருமானிய அறிஞர் கால் கிரௌல் என்பவர் அறிந்தார். அதன் பொருள் ஆழத்திலும் கலை அழகிலும் ஈடுபட்டுத் திருக்குறளை முழுமையாகக் கற்றார். பின்னர் 1754இல் செருமானிய மொழியிலும் 1856 இல் இலத்தீன் மொழியிலும் திருக்குறளை மொழி பெயர்த்தார்.

♦✦♦

உருசிய நாட்டுக் கிரெம்ளின் மாளிகையில் அமைந்துள்ள அணுத்துளையாச் சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள அருநூல்களுள் ஒன்று திருக்குறள் ஆகும்.

♦✦♦

விக்டோரியாப் பேரரசியார் தம் மறை நூலைப் போலப் போற்றி வைத்திருந்த நூல் திருக்குறள். காலையில் கண் விழித்ததும் கற்கும் நூலாகத் திருக்குறளைக் கொண்டு இருந்தார் என்பது அவரது பெருநிலைச் சான்றாவதுடன் திருக்குறளின் பெருமைச் சான்றுமாகும்.

❖✦❖

இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் விவிலியத்துடன் வைத்துப் போற்றப்படும் திருநூல் திருக்குறள் ஆகும் என்பர்.

❖✦❖

திருக்குறளால் தோன்றிய நூலகம்

தஞ்சைப் பகுதியை ஆட்சி செய்த சரபோசி மன்னர் ஒரு முறை காசிக்குச் சென்றார். அப்படியே கல்கத்தாவில் இருந்த அரசப் பேராளரைக் கண்டு மகிழ்ந்தார். அரசப் பேராளர் திருக்குறளை ஆங்கில மொழி பெயர்ப்பு வழியாகக் கற்றிருந்தவர். அதனால் தமிழ்ப் பகுதியில் ஆட்சி நடத்தும் சரபோசியின் வழியே திருக்குறளைப் பற்றி அறிய விரும்பினார். அதுவரை அதைப் பற்றி அறியாதிருந்த சரபோசி, "நான் ஊர் போய்ச் சேர்ந்ததும் அப்புத்தகத்தை அனுப்பி வைக்கிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார். அதன் பின்னரே தமிழ்ச் சுவடிகளைத் தொகுக்கத் தொடங்கினார். 'சரசுவதி மால்' என்னும் கலைக் கருவூலம் தோன்றுவதற்கு மூலமாக இருந்தது இத்தூண்டலேயாகும்.

❖❖❖

23. தொண்டின் துலக்கம்

தொண்டு தொண்டுக்கே என்று செய்தால்,

கட்டாயம் ஊருக்கும் உலகுக்கும் துலக்கமாகி விடும்.

புகை புகாத இடத்தும் புலமை புகும் என்பர்.

புகழும் அத்தகையதே.

தொண்டு செய்வார் பரப்ப வேண்டுவது இல்லை.

அத் தொண்டு எவர்க்குச் செய்யப்பட்டதோ அவருக்கும், அதனை நேரில் கண்டும், கண்டோர் வழி அறிந்தும் கொண்டவர் அத் தொண்டின் பரப்பாளி ஆகி விடுகின்றனர்.

ஒரு தொண்டு மெய்யாகவும் மேன்மையதாகவும் இருந்தால் தாழம் பூவோ, பலாப்பழமோ மூடி வைக்கப் பட்டிருந்தாலும் மணம்பரப்பத் தவறாமை போல் தொண்டை உணர்ந்தார் தொண்டு பரப்புநர் ஆகிவிடுவர்.

ஒரு திருமண விழாவுக்கு வருவார் எவ்வெவ்வூரிலிருந்து வருகின்றனர். அவர்கள் உள்ளம் கவர்ந்தால் திருமண நிகழ்வை அவர்களே மண முரசங்களாகப் பரப்பி விடுகின்றனர் அல்லவா ! இதை எழுதும் இந்நாள் (28.09.2017) வரை 4599 திருமணங்கள் நடத்தி வைக்கவும், பல இடங்களிலும், சில நாடுகளிலும் திருமணப் பயிற்சி தரவும் வாய்த்திருக்கிறது என்றால் கண்டவர்தம் தண்டறைதல் வினைவு தானே அது. மதுரை வாழ்வனாக இருந்த யான் காவிரிக் கரை வாழ்வனாக இருபது ஆண்டுகள் வாழ்ந்தது திருவள்ளுவர் தவச்சாலை அமைத்தும், பல்வேறு ஊர்களில் தொடர் பொழிவு செய்ததும் திருமணவிழா மணிவிழா முதலியவை நடத்தியதும் பெருவிளம்பரக் கருவியாம் செய்தித்தாள் ஊடகத்தால் எப்படி எப்படி யெல்லாம் பரவியது.

✦✦✦

மக்கள் குரல் – சென்னை – 31.05.1994–இல்,

" இளங்குமரன் " என்ற பெயரில்

இதோ அந்தச் சங்கப் புலவர் திருச்சி அருகே காவிரிக் கரையில் அமைத்து வரும் திருவள்ளுவர் தவச்சாலை என விரிவாக மூன்று பக்கங்களில் செய்தி ஆசிரியர் சி.கே.சாமி அவர்களால் எழுதப்பட்டது.

தினகரன் வெள்ளி மலர் பூவையர் பூங்கா என்னும் பகுதியில் **09.09.1994இல், தமிழ்த்தவம் புரியும் இளங்குமரனார்** என்னும் தலைப்பில் இரண்டு பக்கம் அளவு எழுதியது.

" வள்ளுவனுக்கு ஒரு தவச்சாலை "

" ஒரு தமிழ்க் களஞ்சியத்தைக் கண்டேன் "

" தமிழுக்கு ஓர் ஆலயம் அமைத்த இளங்குமரனார் "

" தமிழ்த் தவம் செய்யும் இளங்குமரனார் "

இன்னவாறு தினமணி, தினமலர், கதிரவன், ஏற்றம் எனப்பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் செய்திகள் வெளிப்பட்டன. கல்கி இதழிலும், கிழக்குவாசல் இதழிலும் வெளிவந்த செய்திகள் விரிவுமிக்கன. **திருக்குறள் போற்றி, திருக்குறள் வாழ்வியல் உரை என்பவை** நாடு கடந்து பரவின. வாழ்வியல் படம் என்றால் இப்படி அமைய வேண்டும் என்று வாழ்வியல் படங்கள் பல எடுத்த அமெரிக்க நாட்டு அன்பர் பாராட்டுமாறு நெய்வேலி மர் அ.செந்தில், ஓவியர் திரு.செல்வம் அவர்கள் எடுத்த என் ஆவணப் படம் பெரும் பரப்புதலாயிற்று.

இணையம் இந்நாள் **இணையற்ற** பரப்பகம், அதில் என்னைப் பற்றியும் தவச்சாலை பற்றியும் விரிய இணைத்த ஆளுமையர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் திருநிறை **கல்பனா சேக்கிழார்** அவர்கள் முதன்முதலாகப் பதிவு

செய்தனர். அதன் பின் பல்லபலரால் அரிய பல செய்திகளும் இணையத்தில் பெருகின.

பேரன்பர் **மாரியப்பர், சிவனார்** தொடர்பால் மலையகப் பெரும்பரப்புதலும், திருத்தகு கோவலங்கண்ணனாரால் சிங்கைப் பரப்புதலும் மருத்துவத் தோன்றல் பிரபாகரரால் அமெரிக்கப் பரப்புதலும், கானாடுகாத்தான் இராம்மோகன் அவர்களால் தமிழுலகப் பெரும் பரப்புதலும் உண்டாயின !

களங்கமிலாத் தொண்டு கடலென –

மாகடலென விரிவுறும் என்பது திண்ணமாம்.

❖❖❖

மார்ச்சு 01, 2009

“நுங்கள் பாரியைப் பார்த்தேன். முற்றும் சரிதான் என் அணுக்கராக நீங்கள் இருந்தால் என்னைப் போலவே சொற் பிறப்பு அமைப்பீர்கள்” எனத் தேவநேயப்பாவாணரால் பாரி என்னும் ஆய்வுக் கட்டுரைக்காகப் பாராட்டப் பெற்றவர். அண்மையில் திருச்சி பாவேந்தர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பொன்னவைக்கோ அவர்களால் மதிப்புறு முது முனைவர் பட்டமும், மதுரைப் பல்கலைக் கழகத்தால் பேரவைச் செம்மல் என்ற பட்டமும் வழங்கப் பெற்று தேவநேயப்பாவாணர் வழி நின்று நீடு தோன்றும் இனியராய்த் தனித்தமிழ்க் காவலராய் வாழ்பவர் புலவர் இரா. இளங்குமரனார். 80 வயதைக் கடந்த நிலையிலும் ஓய்வு இல்லாமல் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் தம்முடைய பங்களிப்பை நிகழ்த்திக்கொண்டேயிருக்கிறார்.

500-க்கு மேற்பட்ட நூல்களைத் தமிழுலகுக்கு வழங்கிச்சிறப்புச் செய்துள்ள பெருமகனாரின் பெருமையையும் நுண்ணிய அறிவு நுட்பத்தையும் இனங்கண்டு கொண்ட பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பொன்னவைக்கோ அவர்கள் செம்மொழி அந்தணர் இளங்குமரனாரைக் கலைச்சொல்லாய்விற்கும் சொல்லாய்விற்கும் பயன்படுத்திக் கொள்ள இசைந்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தின் வடக்கு எல்லையும். முகவை மாவட்டத்தின் தெற்கு எல்லையும் சந்திக்கக் கூடிய இடத்தில் உள்ள வாழவந்தாள்புரம் என்னும் ஊரில் ஐயள் வாழவந்தாள், ஐயன் இராமு என்னும் இணையருக்கு மகவாய் 30-1-1930-இல் பிறந்தார். சிறுவயது முதற்கொண்டே எண்ணிய செயலை முடிப்பவராய் நல்லனவே எண்ணுபவராய் திண்ணிய நெஞ்சராய் தெளிந்த நல்லறிவினராய் வாழ்ந்து வரும் பண்பாளர்

மருத்துவப் பணி என்பது உடல்நலப்பணி. ஆசிரியப் பணி என்பது உளநலப் பணி. ஆதலால் ஒன்றற்கு ஒன்று குறையாதது. உயிரோடு விளையாடும் செயலாற்றும் செயற்படுத்தும் உயிர்க்கலைகள் என்பதை உணர்ந்து 8-4-1946-ஆம் முதல் ஆசிரியப்பணியினை ஏற்று, நல் மாணாக்கர்களை உருவாக்குவதே தம்முடைய நோக்கமாகக் கொண்டு பணியாற்றினார். அப்பணியினைப் பாராட்டி நல்லாசிரியர் விருது 26.07.1978-ஆம் ஆண்டு அவரைத் தேடி வந்தது. அதன் தொடர்ச்சியாக,

சைவசித்தாந்த நூற்பதிப்புக் நூற்பதிப்புக் கழகத்தின் வழி பல்வேறு அரிய நூல்களை ஆக்கியும் புதுக்கியும் வெளியிட்டு அப்பதிப்பகத்திற்கு உறுதுணையாக இருந்ததால் 4-1-1978-ஆம் ஆண்டு மறைமலையடிகள் நூலக இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் கழக இலக்கியச் செம்மல் என்னும் விருதினை வழங்கிப் பாராட்டியது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 16-12-1978-இல் பாண்டித் துரையார் பைந்தமிழ்ப் பேரவை இலக்கியச் செம்மல் என்னும் விருதினை வழங்கிச் சிறப்பித்தது. 11-6-88-இல் திண்டுக்கல் சின்னாளப்பட்டி சன்மார்க்க சபையினர் வள்ளுவர் வள்ளலார் ஆய்வினைப் பாராட்டி தமிழ்ச்சித்தர் என்னும் விருதினை வழங்கியது.13.08.1991-இல் தமிழ்க்கடல் என்னும் விருதும்.01.09.1994-இல் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் திரு.வி.க.விருதும், 15.1.1995-இல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தால் திருக்குறள் செம்மல் என்னும் விருதும்.28.11.1996-இல் திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் சார்பில் மீனாட்சி சுந்தரனார் விருதும், திருச்சிராப்பள்ளி திருக்குறள் பேரவையின் சார்பாக 21.1.1995- இல் குறள் ஞாயிறு விருதும், மதுரை புரட்சிக் கவிஞர் மன்றம் சார்பில் 21.06.97-இல் பெரியார் விருதும், 1.2.1999-இல் தென்னிலை விருதும், தஞ்சையில் நிகழ்ந்த தமிழகப் பெருவிழாவில் 25.4.1999-இல் மொழிப்போர் மறவர் என்னும் விருதும், 4.5.1999-இல் திருக்கோவிலூர் கபிலர் விழாவில் கபிலவாணர் விருதும், 14.5.2000-இல் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளையின் சார்பில்

திருக்குறள் விருதும், சென்னை கம்பன் கழகம் 8.8.2000-இல் கம்பர் விருதும், 1,2.11.2001-இல் நாமக்கல்லில் நடைபெற்ற தமிழகப் பெருவிழாவில் தமிழ்ச் சான்றோர் விருதும், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் மதுரைக் கிளையின் சார்பில் 5.5.2002-இல் திருக்குறள் சான்றோர் விருதும், பதிப்புச் செம்மல் மெய்யப்பனார் எழுபதாவது ஆண்டு விழாவில் 27.6.2003-இல் தமிழியக்கச் செம்மல் என்ற விருதும், புதுவை பண்டுவர் மகிழ்கோ அவர்களால் பண்டுவர் என்ற விருதும், திருவாவடுதுறைத் திருமடம் 8.3.2004-இல் திருக்குறள் செம்மல் என்ற விருதும், 21.7.2002-இல் உலகப் பெருந்தமிழர் என்னும் விருதும், எனப் பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் பெருமகனார் முதுமுனைவர் இரா. இளங்குமரனார்.

இப்பெருமகனாருடன் பழகும் வாய்ப்பினைக் கடந்த நான்காண்டுக்கு முன் பெற்றேன். அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல் என்னும் வள்ளுவ மொழிக்கேற்ப அவரைச் சிக்கெனப் பிடித்துள்ளேன். அவர்களுடன் பழகிய நாள்முதல் நான் அறிந்தவரை ஓய்வு என்பதே இல்லாமல் உழைத்துக் கொண்டே இருக்கும் பெருமகனார். ஈத்துவக்கும் இன்பமுடையராய்த் திருச்சிக்கருகே அல்லூர் என்னும் ஊரில் தவச்சாலை நிறுவி ஆயிரக்கணக்கான நூல்களைத் தொகுத்து ஆய்வாளர்கள் பயன்கொள்ளும் வகையில் சிறந்த நூலகத்தை அமைத்துத் தமிழுலகுக்கு அறிவு ஈகையராய்த் திகழ்கின்றார்.

('அறிஞர்கள்' என்றும் தலைப்பில் திருநிறை கல்பனா சேக்கிழார் அவர்கள் வலைத்தளத்தில் எழுதியது.)

❖ ❖ ❖

நிறைவு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு! பாரதியார்

தெள்ளு தமிழ்நடை
சின்னஞ் சிறிய இரண்டடிகள்
அள்ளு தொறுஞ்சுவை
உள்ளந்தொறும் உணர்வாகும் வண்ணம்
கொள்ளும் அறம்பொருள்
இன்பம் அனைத்தும் கொடுத்த திரு
வள்ளுவனைப் பெற்ற
தாற்பெற்றதே புகழ் வையகமே

– பாவேந்தர்

வள்ளுவம் பரவவேண்டும்
வாழ்வியல் துலங்க வேண்டும்
உள்ளுவ துயர்வு வேண்டும்
உரையெலாம் செயலில் வேண்டும்
எள்ளுவ தவிர்க்க வேண்டும்
ஏதிலார்ப் பொறுக்க வேண்டும்
கொள்ளுவ தறமாய் வேண்டும்
கொடைவளம் வேண்டும் வேண்டும்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

வாழிய வாலறிவன் குறள்நெறிக் கழகம்!

வணக்கம்!

❖❖❖

Print@ The Printing House, Try-23. Ph:2420121

நெய்வேலி வாலறிவன் குறள்நெறிக் கழகத்தில் **ஒரு புல்** வெளியீட்டின் போது. நூல் வெளியீடுபவர் : மரு. சேக்கிழார், முனைவர் கல்பனாசேக்கிழார். நூலைப் பெறுபவர் : தமிழாசிரியை அ. சுமதி.